மூலநூல் :

# THE STORY OF REDEMPTION

ELLEN G. WHITE

தமிழில் :

# மீட்பின் வரலாறு!

எலன் ஜி. உவைட் அம்மையார்

| | | |
|---|---|---|
| Title | : | Meetpin Varalaaru |
| Subject | : | The Story of Redemption |
| Language | : | Tamil (from English) |
| Author | : | Mrs. Ellen G. White |
| Edition | : | First, 2000 Copies;<br>November 26, 2000 |
| Paper | : | |
| Pages | : | 10+502 = 512 |
| Published by | : | Remnant Ministries |
| Type Setting&<br>Laser Printing | : | Vishnav Computers. |
| Printed at | : | Thomson Graphic & Co.<br>Hosur, India. |

# மீட்பின் வரலாறு!

## எலன் ஜி. உவைட்

தமிழாக்கம் :

**திரு.கே. ஆர். பீட்டர் சைமன்**

(ஜெய விலாஸ் மோட்டார் சர்விஸ் லிமிடெட், மதுரை)

***Translated by :***

**Elder K.R. Peter Simon**

(Sri Jaya Vilas Motor Service Ltd., Madurai).

பதிப்பாசிரியர் :

**போதகர் இரா. அல்பர்ட் சகரியா**

ஓசூர் எஸ்.டி.ஏ.தமிழ் சபை,

ஓசூர் - 635 110, (T.N.) P.B. 2 (HCF)

**Pastor R. Albert Zechariah**

Hosur SDA Tamil Church, P.B. 2 (HCF)

Hosur - 635 110, T.N., India.

# நூலாசிரியரைப்பற்றி...!

## அன்பான சகோதர—சகோதரிகளே!

இறையருளால் எலன் ஜி. உவைட் அம்மையார் அவர்கள் 2000 பரம தரிசனங்களைக் காணுகின்ற பேறினைப் பெற்றார்கள்; அதுமாத்திரமல்ல, தான் கண்ட தரிசனங்களை அவ்வப்போது எழுதியும் வெளியிட்டார்கள்.

அம்மையார் அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 26; விசுவாசிகளுக்கும் உடன் ஊழியர்களுக்கும் சபைத்தலைவர்களுக்குமாக எழுதிய கடிதங்களின் எண்ணிக்கையோ கணக்கிடமுடியாது. ஏராளமானது! மேலும் ரிவ்யூ அன்ட் ஹெரால்ட், சைன்ஸ் ஆப் தி டைம்ஸ் போன்ற இதழ்களில் சத்தியத்தை விளக்கிட அம்மையார் எழுதிய கட்டுரைகளின் எண்ணிக்கை 5000–த்திற்கும் அதிகம்; அம்மையார் எழுதிய அனைத்தும் பல தொகுதிகளாக—கோடிக்கணக்கில்—பல மொழிகளில் கடந்த 150 ஆண்டுகளாக வெளியிடப்பட்டுக்கொண்டிருக்கிறது! ஏறத்தாழ எழுபது ஆண்டுகளாக ஆண்டவரால் பயன்படுத்தப்பட்ட எழுததாணியாக இருந்தார்கள். அம்மையார் எழுதிய புத்தகங்கள் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலுங்கூட பாடப்புத்தகங்களாக்கப்பட்டு, சபைக்கும் சமுதாயத்திற்கும், வாழ்வாங்கு வாழ வழிகாட்டி, நித்தியத்திற்குரிய சத்தியத்தையும் வழங்கிவருகிறது; விஞ்ஞானிகளுக்கும் அம்மையார் ஒரு விந்தையாக விளங்கினார்கள். மூனறாவது வகுப்புவரை படித்தவர்கள் தான் என்றாலும் இறையருள் கைவரப்பெற்ற தன்னார்வ உழைப்பினாலும், பன்முகத்திறமையினாலும், இன்முகம் காட்டி, இறைப்பணியாற்றி, பெற்றோர்களுக்கு அன்பான மகளாகவும், கணவருக்கு அருமையான மனைவியாகவும், பிள்ளைகளுக்கு பண்பான தாயாகவும், சமுதாயத்திற்குச் சாட்சியாகவும் சபைக்கு வழிகாட்டியாகவும், ஆண்டவரால் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதிரிசியாகவும் வாழ்ந்து நித்திரைக்குச் சென்றிருக்கிறார்கள்; ஆவியானவரது ஏவுதலால், அவர் நமக்கு விட்டுச்சென்ற அவரது எழுத்துக்கள் நூல்வடிவம் பெற்று தொடர்ந்து பேசுகிறது—பேசிக்கொண்டேயிருக்கிறது! படிப்போம்!

பயன்பெறுவோம்! பண்படுவோம்! பரமனருள் பெற்றிடுவோம்!

இறையருளைப் பெற்றவரே — எழுதிக் குவித்தவரே!
கரையற்ற இறையன்பைக் — காட்டிச் சென்றவரே!

மறையருளை உலகினுக்கு — மாற்றாமல் தந்தவரே!
நிறைவாழ்வு வாழ்ந்தவரே — நீடுபுகழ் பெற்றவரே!

குறையுடலில் கொண்டவரே — கோமகனைக் கண்டவரே!
தரையுலகில் வாழ்ந்தவரே — நண்ணிலவாய்த் திகழ்ந்தவரே!

இறையவனார் எழுதுகோலே — எலன் உவைட் அம்மையாரே!

—அசரா

# பதிப்பாசிரியர் பக்கம் ... !

"மீட்பின் வரலாறு" என்ற பெயரில் உங்களிடம் வந்திருக்கும் இந்த நூல் ஒரு தொகுப்பு நூல்!

"The Story of Redemption" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்நூலின் 49 அதிகாரங்கள் "Spirit of Prophecy" என்ற பெயரில் வெளிவந்துள்ள தொகுதிகள் 1,3,4 ஆகியவற்றிலிருந்தும், 18 அதிகாரங்கள் "Early Writings" என்ற நூலிலிருந்தும் எடுக்கப்பட்டு, தமிழில் : "மீட்பின் வரலாறு" என்ற பெயரில் ஒரே நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

மாபெரும் ஆன்மீகப் போராட்டம் பெளியிடுவதற்கு கிடைத்த அளவிற்கு பொருளாதார வசதி கிடைக்காத காரணத்தினால், இரண்டாயிரம் பிரதிகள் மட்டுமே, வெளியிடப்பட்டுள்ளது.

திருமதி. எலன் உவைட் அம்மையாருடைய "Acts of Apostles" என்ற புத்தகம் எமது மூன்றாவது தமிழ் வெளியீடாக இன்னும் சில மாதங்களில் வெளிவரவிருக்கிறது.

இந்தப் பணி வளர உங்களது ஜெபங்களாலும் பொருளுதவி யினாலும் தோள்கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியவர் கே. ஆர். பீட்டர் சைமன் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட அம்மையாரின் நூல்கள், அநேகர் சத்தியத்தை அறிந்துகொள்ளவும்—நித்தியப் பாதையில் நடக்கவும் வழிநடத்துகிறது என்றால் அது உண்மையே; வெறும் புகழ்ச்சியல்ல!

2000–வது ஆண்டு நவம்பர் திங்கள் 29–ம் நாள் அம்மையார் எலன் ஜி. உவைட் அவர்களின் பிறந்தநாள்! அன்றையத் தினத்திலே இந்த நூல் வெளியிடப்படுகிறது. எனது இறைப்பணி ஊழியத்தில் எனக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து உற்சாகமூட்டிய தேவ ஊழியர் முனைவர் ஜான் வில்மாட் அவர்கள் இந்த நூலை புனா வாழ் தமிழ் அட்வெந்து சபையார்களின் கூட்டத்தில் வெளியிட இசைந்தமைக்காக நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தப்பணி தொடர—அம்மையாரின் நூல்கள் அனைத்தும் தமிழில் வெளிவர, உங்களுடைய ஜெபமும் ஆதரவும் அவசியப்படுகிறது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக; ஆமென்.

இறைப்பணியில் என்றும்,
பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா,
ஓசூர் தமிழ்சபை, P.B. 2 (HCF),
ஓசூர், தமிழ்நாடு – 6350110.

# பொருளடக்கம்


| அதிகாரம் எண் : | | பக்கம் எண் : |
|---|---|---|
| 1. | சாத்தானின் வீழ்ச்சி! | 1–8 |
| 2. | இறைவன் படைத்த உலகம்! | 9–12 |
| 3. | கலகத்தின் விளைவுகள்! | 13–22 |
| 4. | சோதனையும்—விழுகையும்! | 23–34 |
| 5. | இரட்சிப்பின் திட்டம்! | 35–44 |
| 6. | ஆண்டவர் அங்கிகரித்த காணிக்கை! | 45–50 |
| 7. | சேத்தும்—ஏனோக்கும்! | 51–56 |
| 8. | ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்ட இந்த உலகம்! | 57–68 |
| 9. | பாபேல் கோபரம்! | 69–72 |
| 10. | ஆண்டவரை விசுவாசித்த ஆபிரகாம்! | 73–82 |
| 11. | ஈசாக்கின் திருமணம்! | 83–86 |
| 12. | ஏசா—யாக்கோபு! | 87–94 |
| 13. | யாக்கோபும் தேவதூதனும்! | 95–102 |
| 14. | இஸ்ரவேல் ஜனங்கள்! | 103–116 |
| 15. | தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தப்பட்டது! | 117–124 |
| 16. | எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை! | 125–132 |
| 17. | இஸ்ரவேலரின் பயணங்கள்! | 133–144 |
| 18. | பரமன் தந்த பத்துக்கட்டளைகள்! | 145–158 |
| 19. | ஆசரிப்புக் கூடாரம்! | 159–166 |
| 20. | வேவுகாரர்களும் அவர்களது செய்தியும்! | 167–174 |
| 21. | மோசேயின் பாவம்! | 175–180 |
| 22. | மோசேயின் மரணம்! | 181–186 |
| 23. | கானான் தேசத்திற்குள் பிரவேசித்தல்! | 187–194 |

# பொருளடக்கம்

| அதிகாரம் எண் : | | பக்கம் எண் : |
|---|---|---|
| 24. | தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி! | 195–208 |
| 25. | கிறிஸ்துவின் முதலாம் வருகை! | 209–216 |
| 26. | கிறிஸ்துவின் ஊழியம்! | 217–222 |
| 27. | இயேசு காட்டிக்கொடுக்கப்படுதல்! | 223–228 |
| 28. | இயேசுவைப்பற்றிய நியாயவிசாரணை! | 229–236 |
| 29. | உலக இரட்சகர் இயேசுவின் தியாகபலி! | 237–246 |
| 30. | இயேசு உயிர்த்தெழுந்தல்! | 247–256 |
| 31. | இயேசு பரமேறுதல்! | 257–258 |
| 32. | பெந்தெகொஸ்தே! | 259–266 |
| 33. | முடவனைச் சுகப்படுத்துதல்! | 267–272 |
| 34. | வீழ்ச்சியடையாத விசுவாசம்! | 273–278 |
| 35. | சுவிசேஷ ஒழுங்கு! | 279–282 |
| 36. | ஸ்தேவானின் மரணம்! | 283–288 |
| 37. | சவுலின் மனமாற்றம்! | 289–296 |
| 38. | பவுலின் ஆரம்பகால ஊழியங்கள்! | 297–302 |
| 39. | பேதுருவின் ஊழியம்! | 303–314 |
| 40. | சிறைச்சாலை என்னசெய்யும்? | 315–324 |
| 41. | எல்லைகளுக்கும் அப்பால்! | 325–334 |
| 42. | பவுலின் ஊழிய வருடங்கள்! | 335–340 |
| 43. | இரத்த சாட்சிகளான இருவர்! பவுல்—பேதுரு! | 341–346 |
| 44. | பெரும் மருள விழுகை! | 347–352 |
| 45. | அக்கிரமத்தின் இரகசியம்! | 353–362 |
| 46. | ஆரம்பகாலச் சீர்திருத்தவாதிகள்! | 363–368 |

| அதிகாரம் எண் : | பொருளடக்கம் | பக்கம் எண் : |
|---|---|---|
| 47. | போப்புவை எதிர்த்து புரட்சிசெய்த கத்தோலிக்க மதகுரு! | 369–374 |
| 48. | சீர்திருத்தத்தின் முன்னேற்றம்! | 375–382 |
| 49. | முன்னேறத் தவறியதின் தோலிவி! | 383–386 |
| 50. | முதலாம் தூதனின் தூது! | 387–394 |
| 51. | இரண்டாம் தூதனின் தூது! | 395–400 |
| 52. | நடுராத்திரியின் சத்தம்! | 401–406 |
| 53. | பரிசுத்தஸ்தலம்! | 407–410 |
| 54. | மூன்றாம் தூதனின் தூது! | 411–416 |
| 55. | ஒரு உறுதியான மேடை! | 417–420 |
| 56. | சாத்தானின் தந்திரங்கள்! | 421–426 |
| 57. | ஆவி மார்க்கம்! | 427–434 |
| 58. | உரத்த சத்தம்! | 435–438 |
| 59. | தவணையின் காலத்தின் முடிவு! | 439–442 |
| 60. | யாக்கோபின் இக்கட்டுக்காலம்! | 443–446 |
| 61. | பரிசுத்தவான்களின் விடுதலை! | 447–450 |
| 62. | பரிசுத்தவான்களுக்குப் பரிசு! | 451–452 |
| 63. | ஆயிரம் வருட ஆளுகை! | 453–456 |
| 64. | இரண்டாம் உயிர்த்தெழுதல்! | 457–460 |
| 65. | கிறிஸ்து முடிசூட்டப்படுதல்! | 461–466 |
| 66. | இரண்டாம் மரணம்! | 467–470 |
| 67. | புதிய பூமி! | 471–474 |

## மீட்பின் வரலாறுகுறித்த
## எலன் ஜி. உவைட் அம்மையாரின் கருத்துக்கள்!

- ஒரே ஒரு நபர் மட்டுமே இந்த உலகத்தில் பாவியாக இருப்பாரானால்கூட அந்த நபருக்காக இயேசு பெருமான் கல்வாரியில் மரித்திருப்பார்!

- மீட்கப்பட்ட ஒரு நபரின் மதிப்பை நித்தியத்தில் மட்டுமே அளவிடமுடியும்!

- தாழ்மையான விசுவாசத்துடன் உங்களை இயேசுவிடம் ஒப்படைப்பீர்களானால், உலக வல்லமைகள் அனைத்தையும் பயன்படுத்தினால்கூட சாத்தானால் உங்களை இயேசுவின் கரங்களிலிருந்து பிடுங்கிக்கொள்ளமுடியாது!

- ஒரு நபரின் மதிப்பு என்ன என்பதை கல்வாரியில் மரித்த இயேசுவின் சிலுவை மட்டுமே கணக்கிடக்கூடும்!

- ஒரு ஆத்துமாவின் (நபரின்) மதிப்பு இந்த உலகத்தின் செல்வங்கள் அனைத்தையும்விட மேலானது!

- மீட்பின் இரகசியத்தை அறிந்துகொள்ள தேவதூதர்களும் வாஞ்சையுடனிருக்கிறார்கள்!

- அண்டசராசரங்களிலுள்ள அனைத்து உலகங்களும் இந்த உலகத்தை மிகவும் அதிகமாக மதித்து மேன்மைப்படுத்தவிருக்கிறது—காரணம்? இது பாவத்திலிருந்து மீட்கப்பட்ட உலகம்!

- மீட்கப்பட்டவர்கள் பாவஞ்செய்யாத தூதர்களைவிட மேலான நிலையில் சிறந்திருப்பார்கள்!

- மீட்கப்பட்ட மக்கள், ஏனைய உலகிலுள்ளவர்களையும் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெறுவார்கள்!

**மேசியா இயேசு நாயனார்**
**நம்மை**
**மீட்கவே நரன் ஆயினார்!**

# 1

# சாத்தானின் வீழ்ச்சி!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 13–19)**
**திருவசன ஆதாரம் : ஏசாயா 14:11-15**

பரலோகத்திலிருந்த லூசிபர், தனது விழுகைக்குமுன், தேவகுமாரனுக்கு அடுத்தவனாக மிகவும் உன்னதமான, உயர்த்தப்பட்ட தூதனாக இருந்தான். தேவதூதர்களைப்போலவே அவனது முகமும் அமைதியாகவும் மகிழ்ச்சியை வெளிக்காட்டுவதாகவும் இருந்தது. அவனது முன்நெற்றி உயர்ந்து அகலமானதாக மிகுந்த அறிவை எடுத்துக்காட்டியது. அவனது வடிவம் பூரணமானதாக இருந்தது. அவனது தன்மை மேன்மைமிக்கதாகவும் மகத்துவமுள்ளதாகவும் இருந்தது. சிறப்பான ஒரு ஒளி அவனது முகத்திலிருந்து பிரகாசித்தது. அது மற்ற தூதர்களைச் சூழ்ந்திருந்த ஒளியைக்காட்டிலும் அதிக பிரகாசமாகவும் அழகானதாகவும் இருந்தது. இருந்தபோதிலும், தேவ குமாரனாகிய கிறிஸ்து, தூதர்களின் சேனை அனைத்திற்கும் மேலானவராக இருந்தார். தூதர்கள் படைக்கப்படுவதற்குமுன் அவர் பிதாவுடன் ஒருவராக இருந்தார். லூசிபர் கிறிஸ்துவின்மீது பொறாமை கொண்டான். காலப்போக்கில் கிறிஸ்து ஒருவருக்குமட்டுமே உரியதாக இருந்த ஆளுகையை தனக்கு உரியது என்று எண்ணிக்கொண்டான். (1)

அனைத்து தூதர்களின் முன்பாகவும் தமது குமாரன்மேல் சிறப்பான மேன்மையை வைப்பதற்காக பரலோக சேனையை பெரும்சிருஷ்டிகர் கூட்டினார். சிங்காசனத்தில் பிதாவோடுகூட குமாரன் அமர்ந்திருக்க, பரலோகத்தின் பரிசுத்த தூதர்களின் சேனை அவர்களைச் சுற்றிலும் கூட்டப்பட்டது. பின்னர், பிதாவானவர், தம்மால், தமது குமாரனாகிய கிறிஸ்து, தமக்குச் சமமாக இருக்கும்படி நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். அதினால் எங்கெங்கே தமது குமாரனுடைய பிரசன்னம் இருக்குமோ, அங்கெல்லாம் அது தமது சொந்த பிரசன்னம்போன்றது எனவும், குமாரனுடைய வார்த்தை பிதாவினுடைய வார்த்தையைப் போலவே உடனடியாக

கீழ்ப்படியப்படவேண்டும் எனவும், பரலோக சேனையை ஆட்சிசெய்யும்படியான அதிகாரத்தை தாம் தமது குமாரன்மேல் வைத்திருக்கிறதாகவும் அறிவித்தார். மிகவும் குறிப்பாக, எதிர்பார்க்கப்பட்டிருந்த பூமியின் படைப்பிலும், அதில் வாழக்கூடிய உயிரினங்களின் படைப்பிலும், குமாரன் தம்மோடிணைந்து செயலாற்றவேண்டியிருப்பதாக அறிவித்தார். அவருடைய குமாரன் தமது சித்தத்தையும் நோக்கத்தையும் செயல்படுத்துவாரேயொழிய தாமாக எதையும் செய்யமாட்டார் என்றும், பிதாவின் சித்தம் அவரிடத்தில் நிறைவேறும் என்றும் சொன்னார். (2)

லூசிபர் இயேசு கிறிஸ்துவின் மேல் பொறாமையும் விரோதமும் கொண்டிருந்தான். என்றபோதும், எல்லா தூதர்களும் இயேசுவின் மேன்மையையும், உயர்ந்த அதிகாரத்தையும் ஆளுகையையும் ஒப்புக்கொள்ளும்வண்ணமாக அவர்முன் பணிந்தபோது, அவனும் அவர்களோடு பணிந்தான்; ஆனால் அவனுடைய இருதயம் பகையினாலும் வெறுப்பினாலும் நிறைந்திருந்தது. லூசிபர் தேவனுடைய திட்டங்களைக்குறித்து அறியாதிருந்தபோது, கிறிஸ்து அவைகளைக் குறித்த தேவனுடைய விசேஷ ஆலோசனைகளுக்கு அழைக்கப்பட்டார். தேவனுடைய நோக்கங்கள் அவனுக்குப் புரியவில்லை; அவைகளை அறிந்துகொள்ளவும் அவனுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. ஆனால் கிறிஸ்து பரலோகத்தின் அங்கீகரிக்கப்பட்ட சர்வாதிகாரியாக இருந்தார். அவருடைய வல்லமையும் அதிகாரமும் தேவனுடையதைப்போலவே இருந்தது. லூசிபர், தான், தான்தான் தூதர்களின் மத்தியிலே பிரியமானவன் என்று எண்ணியிருந்தான். அவன் மிகவும் உயர்த்தப்பட்டிருந்தான். ஆனால் இது அவனை உண்டாக்கினவருக்கு துதியையும் நன்றியையும் அவனிடத்தில் உண்டாக்கவில்லை. தேவனுடைய உயரத்திற்குதானே உயரும்படி ஆசைப்பட்டான். தன்னுடைய மேன்மைகளிலே பெருமைப்பட்டுக்கொண்டான். தூதர்களால் கனப்படுத்தப்படுகிறான் என்பது அவனுக்குத் தெரியும். செய்யும்படி அவனுக்கு விசேஷமான பணி இருந்தது. உன்னதமான சிருஷ்டிகருக்கு அருகில் இருந்தான். நித்தியதேவனைச் சூழ்ந்திருந்த முடிவில்லாத மகிமையான ஒளிக்கதிர்கள் அவன்மீது விசேஷமாக பிரகாசித்தது. தூதர்கள் தன்னுடைய கட்டளைக்கு எத்தனை இன்பமான ஆயத்தத்தோடு கீழ்ப்படிகிறார்கள்! அவனுடைய உடை வெளிச்சமாகவும் அழகாகவும் இல்லையா? ஏன் கிறிஸ்து அவனுக்கு மேலாக இவ்வாறு கனப்படுத்தப்படவேண்டும்? என்று யோசித்தான். (3)

இயேசு கிறிஸ்துவின்மேல் பொறாமையும் அதிருப்தியும் அடைந்தவனாக பிதாவின் சமூகத்தை உடனடியாக விட்டுச்சென்றான். தன் உண்மையான

நோக்கத்தை மறைத்து, தூதர் சேனையை கூட்டினான். தனது கருத்தை—தன்னை அறிமுகப்படுத்தினான். தேவன் தன்னை விலக்கி இயேசுவிற்கு கொடுத்த முக்கியத்துவத்தை தனக்கு இழைக்கப்பட்ட தீங்கென்று இணைத்துக் கூறினான். அப்போதிருந்து, தூதர்கள் அனுபவித்த இனிமையான சுதந்திரமெல்லாம் முடிவிற்கு வந்துவிட்டதாகவும், அவர்களுக்குமேல் ஒரு ஆட்சியாளர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அவருக்கு அடிமைத்தனத்திற்கு ஒப்பான மரியாதையை நாம் கொடுக்கவேண்டுமா? என்றும் சொன்னான். தன்னுடைய மற்றும் அவர்களுடைய உரிமைகளின்மேல் வந்திருக்கிற இந்த எதிர்ப்புக்கு தான் அடிபணியப்போவதில்லை என்பதையும், மீண்டும் ஒருபோதும் தான் கிறிஸ்துவுக்கு பணியப்போவதில்லை என்பதையும், தன்மேல் வைக்கப்படவேண்டிய கனத்தை தானே எடுத்துக்கொண்டு, தன்னைப் பின்பற்றி தன்னுடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுக்கிற அனைவருக்கும் தான் அதிபதியாக இருக்கப்போவதையும் உறுதிப்படுத்தவே அவர்களை ஒன்றாக அழைத்ததாகவும் அறிவித்தான். (4)

தூதர்கள் மத்தியிலே சண்டை உண்டாயிற்று. லூசிபரும் அவனது அனுதாபிகளும் தேவனுடைய அரசாங்கத்தை மாற்றி அமைக்கப் போராடினார்கள். பிதாவின் ஆராயமுடியாத ஞானத்திற்குள் பார்க்கமுடியாததாலும், அவர் தமது குமாரனை உயர்த்தி, எல்லையில்லாத வல்லமையையும் அதிகாரத்தையும் அவர்மேல் வைத்ததிலுள்ள அவருடைய நோக்கத்தை அறிந்துகொள்ள முடியாததாலும், அவர்கள் அதிருப்தியும் துக்கமும் கொண்டனர். குமாரனுடைய அதிகாரத்திற்கு எதிராகக் கலகம்பண்ணினார்கள். (5)

உண்மையும் பக்தியுமான தூதர்கள், வல்லமையான, கலகம் செய்த தூதனை சிருஷ்டிகருடைய சித்தத்திற்கு திருப்பிக் கொண்டுவரும்படி தேடினர். கிறிஸ்துவிற்கு கனம் கொடுத்த பிதாவினுடைய செயல் நீதியானதே என்றும், தமது குமாரனை பிதா கனப்படுத்தினதற்கு முன்பு அவனுக்கு இருந்ததைவிட, இப்பொழுது எள்ளளவும் அவன் மதிப்பு குறையவில்லை என்றும் தீர்க்கமாகக் கூறி, லூசிபரை சமாதானப்படுத்த முயன்றனர். கிறிஸ்து தேவனுடைய குமாரன்தானென்றும், தூதர்கள் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னமே அவர் தேவனோடு இருந்தவரென்றும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருந்தவரென்றும், இதற்குமுன் அவருடைய சாந்தமான அன்பான அதிகாரம் கேள்விக்கு உள்ளாக்கப்படவில்லையென்றும், பரலோக சேனைகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய கட்டளைகள்தவிர வேறு கட்டளைகளை இதுவரை அவர் கொடுத்ததில்லை என்றும் தெளிவாக முன்வைத்தனர். பிதாவிடமிருந்து கிறிஸ்து தூதர்களின் முன்பாக விசேஷ

கனத்தைப்பெற்றுக்கொண்டது,—இதற்குமுன் லூசிபர் பெற்றிருந்த கனத்தை எவ்விதத்திலும் குறைக்கவில்லை என்று உறுதியாகக் கூறினர். அவன் தனது பொல்லாத திட்டத்தை கைவிட்டு, தங்களுடைய சிருஷ்டிகருக்கு ஒப்புக்கொடுக்கும்படி அவனை கொண்டுவர ஊக்கமாக வகைதேடினர். ஏனெனில் இதற்குமுன் சமாதானமும் இணக்கமும் இருந்தது. இந்த பிரிவினையும் கலகம்செய்யும் குரலும் எப்படிப்பட்ட நிலையைக் கொண்டுவரும்? (6)

லூசிபர் செவிசாய்க்க மறுத்துவிட்டான். பின்னர் உண்மையான தூதர்களை அடிமைகளென்று அறிவித்து, அவர்களைவிட்டுத் திரும்பினான். கலகத்தைத் தூண்டிவிடுவதில் லூசிபர் வெற்றிபெறுவதைக்கண்டு விசுவாசமான தூதர்கள் வியப்படைந்தனர். அனைத்தும் சுதந்திரமான, புதிய, மேன்மையான ஒரு அரசாங்கத்தை அளிப்பதாக அவன் அவர்களுக்கு வாக்குக்கொடுத்தான். அதிக எண்ணிக்கையிலான தூதர்கள் அவனை தங்களது தலைவனாகவும் அதிபதியாகவும் ஏற்றுக்கொள்ளும் தங்களுடைய நோக்கத்தை வெளிக்காட்டினர். தனது முயற்சிகள் வெற்றிபெறுவதை அவன் கண்டபோது, அனைத்துத் தூதர்களையும் தனதுபக்கம் இழுக்கவேண்டியதிருப்பதாகவும், அவன் தேவனுக்குச் சமமாக ஆவானென்றும், அவனது அதிகாரத்தொனி பரலோக சேனை முழுவதையும் நடத்தும் என்று தன்னைத்தானே புகழ்ந்துகொண்டான். உண்மையாக இருந்த தூதர்கள் மீண்டும் அவனை எச்சரித்து, இதிலே தொடருவானானால் அதன் விளைவு எப்படியிருக்கமுடியும் என்பதைக்குறித்தும், தூதர்களை உண்டாக்கக்கூடியவரால் தம்முடைய வல்லமையினாலே அவர்களுடைய அதிகாரமனைத்தையும் கவிழ்த்துப்போடமுடியும் என்பதைக்குறித்தும், அவர்களுடைய பயங்கரமான துணிச்சலான கலகம் குறிப்பிடத்தகுந்த விதத்திலே தண்டிக்கப்படக்கூடும் என்பதைக்குறித்தும் உறுதிபடக்கூறினர். ஒரு தூதன் தேவனுக்குச் சமமான அவருடைய கட்டளைகளை எதிர்க்கலாமா என்பதை யோசித்துப் பார்க்கும்படிக்கும் கூறினர். கலகஞ்செய்தவர்கள் தங்கள் காதுகளை லூசிபருடைய வஞ்சகமான காரணங்களுக்கு மூடிக்கொள்ளவும், அதினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தேவனிடம் சென்று, அவருடைய அதிகாரத்தை கேள்விக்கிடமாக்கினதற்காகவே, தங்கள் தவறை அறிக்கையிடும்படிக்கும் ஆலோசனை கூறினர். (7)

லூசிபரின் அனுதாபிகளில் அநேகர் தங்களுடைய அதிருப்தியைக்குறித்து மனம்வருந்தி, மீண்டும் பிதாவினுடைய மற்றும் குமாரனுடைய நம்பிக்கையைப் பெறும்படிக்கு, விசுவாசமான தூதர்களின் ஆலோசனைகளுக்குச் செவிமடுக்க விரும்பினர். அப்போது இந்த

வல்லமையான கலகக்காரன், தான் தேவனுடைய கட்டளைகளோடு பழக்கப்பட்டவன் என்றும், அடிமையாக இருக்கும்படி ஒப்படைத்தால் தனது மதிப்பு தன்னிடமிருந்து எடுக்கப்படும் என்றும் அறிவித்தான். இனி ஒருபோதும் அவனது உன்னதமான பணியில் அமர்த்தப்படமாட்டான் என்றும், மேலும் அவனும் அவனோடு இருந்தவர்களும் திரும்பக்கூடாத தூரத்திற்குச் சென்றுவிட்டதாகவும், தேவனுடைய குமானுக்கு அடிமைப்பட தன்னால் முடியாது என்றும், அதினால் விளைவுகளைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகவும், தேவன் மன்னிக்கமாட்டார் என்றும், ஆதலால் அவர்கள் தங்களுடைய சுதந்தரத்தை நிலைப்படுத்திக்கொண்டு, தங்களுக்கு வலிய கொடுக்கப்படாத தங்களுடைய நிலையையும் அதிகாரத்தையும் பலவந்தத்தினால் பெறவேண்டும் என்றும் அறிவித்தான். (இப்படியாகத்தான் விடிவெள்ளி நட்சத்திரமாயிருந்த லூசிபர், தேவனுடைய மகிமையில் பங்கு கொண்டவன் சிங்காசனத்தின் ஊழியன், மீறுதலினாலே “எதிராளியாக”— சாத்தானாக மாறினான். (முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், பக். 40) (8)

தூதர்களின் மத்தியிலே நடக்கிறதை உண்மையான தூதர்கள் தேவ குமாரனிடம் விரைந்து சென்று தெரியப்படுத்தினர். விசுவாசமிக்க தூதர்களின் நன்மைக்காக, சாத்தான் தன்மீது எடுத்துக்கொண்ட இந்த அதிகாரத்தை எவ்விதமாக என்றைக்குமாக முடிவுக்குக் கொண்டுவருவது என்பதைப்பற்றி, பிதாவானவர் தமது குமாரனோடு ஆலோசித்துக்கொண்டிருப்பதைக் கண்டனர். மகாதேவன், இந்த பிரதான வஞ்சகனை பரலோகத்திலிருந்து தள்ளிவிட்டிருக்கலாம். ஆனால் அது அவருடைய நோக்கமல்ல. தமது சொந்த குமாரனுடைய மற்றும் விசுவாசமான தூதர்களுடைய வல்லமையையும் பெலத்தையும் அளவிடும்படி இந்த கலகக்காரனுக்கு இணையாக ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க அவர் தீர்மானித்தார். இந்த யுத்தத்தில் ஒவ்வொரு தூதனும் அனைவருக்கும் தெரியும்படி, தனது பக்கத்தைத் தெரிந்து கொள்ளலாம்; சாத்தானோடு இந்தக் கலகத்தில் சேர்ந்துகொண்ட எவரையும் பரலோகத்தில் நிலைத்திருக்க அனுமதிப்பது பாதுகாப்பில்லை. தேவனுடைய மாறாத கட்டளைகளுக்கு எதிராகக் கலகஞ்செய்வதை இவர்கள் கற்றுக்கொண்டார்கள். இது குணப்படமுடியாத ஒன்று. தேவன் இந்த பிரதான வஞ்சகனை தண்டிக்கும்படி தமது வல்லமையை உபயோகித்தால், இதில் பாதிக்கப்படாத தூதர்களை வெளிக்காட்டமுடியாது. எனவே தேவன் வேறு வழியை எடுத்துக்கொண்டார். பரலோக சேனை அனைத்திற்கும் அவர் தமது நீதியையும் நியாயத்தையும் குறிப்பாக வெளிக்காட்டுவார். (9)

## பரலோகத்தில் யுத்தம்!

தேவ அரசாங்கத்திற்கு எதிராகக் கலகம்செய்வது மிகப்பெரிய குற்றமாக இருந்தது. பரலோகம் முழுவதும் அசைக்கப்படுவதுபோலக்

காணப்பட்டது. தூதர்களின் அணிகள் ஒவ்வொன்றும் தலைமையான ஒரு தூதனால் நடத்தப்பட்டு, இரு அணிகளாக நின்றன. லூசிபர் தானே எல்லாவற்றிற்கும் மேலான உயர்ந்தவனாக இருக்கவேண்டும் என்ற ஆசையினால், பரலோக சேனையின் பெரும்தலைவரான தேவகுமாரனுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய மறுத்து, தேவ அரசாங்கத்திற்கு எதிராக—அவரது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராகப் போர் செய்துகொண்டிருந்தான். (10)

ஒவ்வொரு தேவ தூதனுடைய காரியத்தைப்பற்றியும் தீர்மானம் செய்வதற்கென்று பரலோக சேனைகளனைத்தும் பிதாவின் முன்பாக வரவழைக்கப்பட்டன. (11)

கிறிஸ்துவைத் தன்னைவிட மேலான நிலையில் உயர்த்துவதில் தனக்குத் திருப்தியில்லை என்பதை சாத்தான் வெட்கமற்றவிதத்தில் அறியச்செய்தான். அவன் பிதாவின்முன்பாக அகந்தையுடன் நின்று, தான் தேவனுக்குச் சமமாக்கப்படவேண்டுமென்றும், அவரது ஆலோசனைகள் அனைத்திலும் தன்னையும் கலந்தாலோசிக்கவேண்டுமென்றும், அவரது நோக்கங்கள் அனைத்தும் அவனுக்கு அறிவிக்கப்பட்டாக வேண்டும் என்றும் வற்புறுத்தினான். பிதாவோ, தனது இரகசியமான நோக்கங்கள் அனைத்தையும் அவர் தமது குமாரன் ஒருவருக்கு மட்டுமே வெளிப்படுத்துவார் என்றும், பரலோகக் குடும்பம் முழுவதும்—சாத்தானுங்கூட கேள்விக்கு இடமின்றி அவருக்கு மிகச் சரியாகக் கீழ்ப்படிய வேண்டுமென்றும் அறிவித்தார். சாத்தான் பரலோகத்தில் தங்கியிருப்பதற்கு தான் தகுதியற்றவன் என்பதை மெய்ப்பித்துவிட்டான் என்றார். அப்பொழுது சாத்தான் வெற்றிச் சிரிப்புடன் ஏறத்தாழ பரலோக தேவதூதர்களின் பாதியான கூட்டத்தினர் தனது அனுதாபிகளானதைச் சுட்டிக்காட்டி, "இவர்கள் என்னுடன் இருக்கின்றனர். இவர்களையும் பரலோகத்திலிருந்து வெளியேற்றிவிட்டு, பரலோகத்தில் வெற்றிடத்தை உண்டுபண்ணுவீரோ?" என்றான். அதன்பின் கிறிஸ்துவின் அதிகாரத்தைத் தடுத்து, பரலோகத்தில் தனக்குள்ள இடத்தை பலாத்காரத்தினாலும் பலத்திற்கெதிரான பலத்தினாலும் தற்காத்துக்கொள்ள ஆயத்தமாக இருப்பதாகவும் அவன் அறிவித்தான்! சாத்தானின் பெருமையையும் வெற்றிச் சிரிப்பையும் கண்ட நல்ல தூதர்கள் அழுதனர்.(12)

கலகக்காரன் இனிப் பரலோகத்தில் இருக்கக்கூடாது என்று தேவன் அறிவித்தார். பரலோகத்தின் மேலான நுண்ணறிவாளர்களின் உன்னதமான தன்மையும் மகிழ்ச்சியும் அவர்கள் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகின்ற நிபந்தனைக்கு உட்பட்டதாக இருந்தது. ஆனால் அவருடைய பிரமாணத்தை மீறத்துணிபவரைக் காப்பாற்ற எந்தவிதமான

ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. சாத்தான் கலகஞ்செய்வதில் துணிந்து, சிருஷ்டிகரின் பிரமாணத்தை அவமதிப்பதை வெளிக்காட்டினான். எப்போதுமே சரியாக நடந்துகொள்ளக்கூடிய மேலான சித்தத்தை தூதர்கள் கொண்டிருக்கின்றனர். ஆனால் பிரமாணம் அவர்களது சுதந்திரத்திற்கு இடையூறாக இருக்கிறது. எனவே அதனை நீக்கிவிடுவதுதான் அவனது ஒரே பெரிய நோக்கமாக இருக்கிறது என்றான். தூதர்களுடைய நிலைமையில் முன்னேற்றம் உண்டாக்கப்படவேண்டியது அவசியம் என்று அவன் எண்ணினான். பிரமாணங்களை உண்டுபண்ணி, அவைகள்—தமக்குச் சமமாக உயர்த்தின தேவனுடைய மனம் அப்படி நினைக்கவில்லை. தூதர் சேனைகளின் மகிழ்ச்சி, பிரமாணத்திற்குப் பூரணமாகக் கீழ்ப்படிவதில்தான் அடங்கியிருக்கிறது. ஒவ்வொருவனுக்கும் கொடுக்கப்பட்டிருந்த சிறப்பான பணி இருந்தது. சாத்தான் கலகம் செய்கின்றவரைக்கும், பரலோகத்தில் பூரணமான ஒழுக்கமும் இசைவான செயலும் இருந்தது. (13)

அதன்பின் பரலோகத்தில் யுத்தம் உண்டாயிற்று. தேவ குமாரனும் பரலோகத்தின் இளவரசருமாக இருந்தவரும் அவருக்கு பக்திவிசுவாசமிக்கவர்களாக இருந்த தூதர்களும், தலைமைக் கலகக்காரனுடனும் அவனுடன் சோர்ந்தவர்களுடனும் யுத்தம்செய்தனர். தேவகுமாரனும் அவருக்கு உண்மையாயிருந்த தூதர்களும் வெற்றி அடைந்தனர். சாத்தானும் அவனது அனுதாபிகளும் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். பரலோக சேனைகள் அனைத்தும் நீதியின் தேவனை ஏற்றுக்கொண்டு அவரைப் புகழ்ந்தனர். கலகத்தின் எந்த அடையாளமும் பரலோகத்தில் காணப்படவில்லை. இதற்கு முன்னிருந்ததுபோல, சகலமும் சமாதானமிக்கதாகவும், இசைவுள்ளதுமாக ஆயின. மகிழ்ச்சியிலும் பேரின்பத்திலுமிருந்த தங்களுடைய தோழர்களின் முடிவை எண்ணி, பரலோகத்திலிருந்த தூதர்கள் துக்கமடைந்தனர். பரலோகத்தில் ஏற்பட்ட— அவர்களைப்பற்றிய இழப்பு உணரப்பட்டது. (வெளி. 12:7–10). (14)

பூமியில் மனிதனைக் கூடிவாழச்செய்யும் தமது நோக்கத்தை நடைமுறைப்படுத்த பிதாவானவர் குமாரனுடன் உடனே கலந்தாலோசித்தார். மனிதன் நித்தியகாலமாகப் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்குமுன், அவனது பக்திவிசுவாசத்தைச் சோதிப்பதற்காக, அவனைத் தவணையின் காலத்திற்குள் வைத்திடப் பிதா விரும்பினார். மெய்ப்பிப்பதற்குப் பொருத்தமான நிலையில் மனிதனை வைத்து, அவன் அந்த சோதனையில் வெற்றியடைந்தால், காலப்போக்கில் தூதர்களுக்குச் சமமாக்கப்படுவான். அவன் தேவனுடைய ஆதரவைப் பெற்று, தூதர்களுடன் உரையாடவேண்டியவனாக இருந்தான். அவர்களும் அவனுடன் இடைப்படவேண்டியதாக இருந்தது.

கீழ்ப்படியாமையின் வல்லமைக்கும் அப்பால் அவர்களை விட்டுவைப்பது சரியல்ல என்பதை அவர் கண்டார். (15)

**வாசிப்பவர்களின் பார்வைக்கு:**

லூசிபர் என்ற சாத்தானின் பெயர் தமிழ் வேதாகமத்தில் கொடுக்கப்படவில்லை. ஆங்கில வேதாகமத்தில் ஏசாயா 14:12–ல் கொடுக்கப்பட்டுளளது.

**ஆங்கில வசனம்:**

**How art thou fallen from heaven, O Lucifer, son of the morning! how art thou cut down to the ground, which didst weaken the nations! – Isa 14:12.** ★

# 2

# இறைவன் படைத்த உலகம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 20–23)**
**திருவசன ஆதாரம்: ஆதியாகமம் 1**

பிதாவும் குமாரனும் கலந்தாலோசித்திருந்த—இந்த உலகத்தைப் படைக்கவேண்டும் என்கிற வல்லமையும் ஆச்சரியமுமான செயலில் இப்போது ஈடுபட்டனர். இந்த பூமி மேன்மையான அழகுடையதாக சிருஷ்டிகரின் கரத்திலிருந்து வந்தது. அதிலே மலைகளும் குன்றுகளும் சமவெளிகளும் இருந்தன. அவைகளிடையே ஆறுகளும் நீர்நிலைகளும் இருந்தன. இந்த பூமி ஒரே சமவெளியாக இருக்கவில்லை. ஒரேவிதமான அந்தக் காட்சியை வேறுபடுத்தும் வகையில் உயர்வும் தாழ்வுமிக்க மலைகளும் குன்றுகளும் இருந்தன. அவை இப்பொழுது காணப்படுகின்ற மாதிரி, உருக்குலைந்திருக்கவில்லை. சீரான வடிவமைப்புக்களை உடையனவாக இருந்தன. உயர்ந்த வெற்றுப்பாறைகள் ஒருபோதும் காணப்படவில்லை. அவை பூமியின் எலும்புகளாக பூமிக்குள்ளிருந்தன. தண்ணீர்கள் எங்கும் சீராகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. குன்றுகளும் மலைகளும் அழகிய சமவெளிகளும் இப்போதுள்ள மரங்களைவிட மிக உயர்ந்த, கம்பீரமாகத் திகழ்ந்த வகைவகையான மரங்களினாலும் செடிகளினாலும் மலர்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆகாயம் தூய்மையும் நலமும் உடையதாக இருந்தது. பூமி அழகிய அரண்மனையைப்போல காணப்பட்டிருந்தது. ஆச்சரியமானதும் அழகியதுமான தேவனுடைய வேலைப்பாட்டினைக்கண்டு தூதர்கள் மிகவும் மகிழ்ந்தனர். (1)

பூமியும் அதின்மேல் விலங்கினங்களும் படைக்கப்பட்டபின், பிதாவும் குமாரனும் சாத்தானின் விழுகைக்கு முன்னதாகத் திட்டம் செய்திருந்தபடி, அவர்களுடைய சாயலில் மனிதனைப் படைக்கும் தங்களது நோக்கங்களை செயல்படுத்தினர். பூமியைப் படைப்பதிலும், அதின்மீதுள்ள உயிரினங்களைப் படைப்பதிலும் அவர்கள் இருவருமே சேர்ந்து செயலாற்றினர். அப்பொழுது தேவன் அவரது குமாரனை நோக்கி: “நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக” என்றார். தமது சிருஷ்டிகரின்

கரத்திலிருந்து ஆதாம் தோன்றினபோது, அவன் மேன்மைமிக்க உயரமுள்ளவனாகவும் சீரானவனாகவும் இருந்தான். இன்று உலகில் வாழும் மனிதர்களைவிட, அவன் இருமடங்கு உயரமுள்ளவனாகவும் அதற்கேற்ற உருவம் உடையவனாகவும் இருந்தான். அவனது அங்க அமைப்புகள் பூரணமானவையாகவும் அழகானவையாகவும் இருந்தன. அவனது நிறம் வெள்ளையாகவோ அல்லது கருப்பாகவோ இராமல், செம்பின் நிறமாக இருந்தது. பூரணமான ஆரோக்கியத்துடன் அது ஒளிவீசிக்கொண்டு இருந்தது. ஏவாள் ஆதாமுக்குச் சமமான உயரமுடையவளாக இருக்கவில்லை. அவளது தலை, அவனது தோளுக்குமேலாகச் சற்று உயர்ந்திருந்தது. அவளும் மேன்மைமிக்கவளாகவும் எழில்மிகுந்த தோற்றம் உள்ளவளாகவும் இருந்தாள். (2)

பாவமற்ற அந்த இருவரும் செயற்கையான உடைகள் எதுவும் இல்லாதிருந்தனர். தூதர்கள் அணிந்திருந்ததுபோன்ற ஒளியினாலும் மகிமையினாலும் மூடப்பட்டிருந்தனர். அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தபோது, அந்த ஒளிவட்டம் அவர்களைச் சூழ்ந்திருந்தது. தேவன் படைத்திருந்த அனைத்தும் பூரணமும் அழகும் உடையதாக இருந்திருந்தபோதிலும், ஆதாமும் ஏவாளும் மகிழ்ச்சியாக வாழ்வதற்குப் பற்றாக்குறையாக எதுவும் இல்லாதிருந்தபோதிலும், அவர்கள்மீது அவர் வைத்திருந்த பெரும் அன்பை வெளிக்காட்டுவதற்காக, அவர்களுக்காக ஒரு தோட்டத்தை அவர் நாட்டியிருந்தார். அவர்களுடைய நேரத்தின் ஒரு பகுதி, அந்தத் தோட்டத்தைப் பண்படுத்துவதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. மற்றொரு பகுதி தேவதூதர்களைச் சந்திக்கவும் அவர்கள் தரும் போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கென்றும் மகிழ்ச்சிமிக்க தியானம்செய்வதற்கென்றும் ஏற்படுத்தப்பட்டிருந்தது, அவர்களது வேலை, களைப்பூட்டுவதாக இராமல், மகிழ்ச்சிமிக்கதாகவும் உடல்நலம் பேணுவதற்கேற்றதாகவும் இருந்தது. அழகிய இந்தத் தோட்டம் அவர்களுடைய வீடாக இருக்கவேண்டியதாக இருந்தது. (3)

அழகிற்காகவும் பயன்தருவதற்கென்றும் பலவிதமான மரங்களை இந்தத்தோட்டத்தில் கர்த்தர் நாட்டியிருந்தார். மிகுந்த சுவையும் வாசனையும் கண்களுக்கு இனிமையும் சுவைமிக்கதுமான கனிகளை உடைய மரங்களையும் அந்த அழகிய தம்பதிக்கு உணவாக இருக்கும்விதத்தில் தேவன் வடிவமைத்திருந்தார். மனிதனின் விழுகைக்குப்பின் இன்றுவரை கண்டிராத மிக உயரமான அழகிய திராட்சைக்கொடிகள் அவைகளின் கனிகளுடன் இருந்தன. அந்தப் பழங்கள் மிகப்பெரியதாகவும் பலவிதமான நிறங்களை உடையதாகவும் இருந்தன. சில ஏறத்தாழ கருமையாகவும், சில

ஊதா நிறமாகவும், சில சிவப்பு நிறமாகவும், லேசான பச்சை நிறமாகவும் இருந்தன. இந்த அழகும் செழுமையுமிக்க கனிகளின் வளர்ச்சியுடன் அவைகளின் கிளைகளில் இருந்த கனிகள் திராட்சைப்பழங்கள் என்னப்பட்டன. அவை தரையின்மீது படர்ந்திருக்கவில்லை. அவை கவைகளினால் தாங்கப்படாமலிருந்தபோதும், அந்தக் கனியின் பாரம் அவைகளைக் கீழே இழுத்தன. அந்தக் கிளைகளுக்கான தாங்கல்களை அமைத்து, நிழலுண்டாக்கி, சீர்படுத்தி, இயற்கையின் அழகான மரங்களையும் வாசனைமிக்க பழங்களால் நிறைந்த பசுமையான செடிகளையும்—குடியிருப்புகளாக அமைப்பது ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுக்கப்பட்டிருந்த மகிழ்ச்சியான வேலையாக இருந்தது. (4)

அழகிய படரும் செடிகளினாலும் கொடிகளினாலும் பூமி போர்த்தப்பட்டு இருந்தபோது, எண்ணிலடங்காக வெவ்வேறு வண்ணங்களுடன் புலன்களைக் கவரும் வெவ்வேறு வாசனைகளையுடைய மலர்ச்செடிகளினால் சொல்லிமுடியாத விதத்தில், மனிதனின் கற்பனைக்கும் எட்டாத விதத்தில் பூமி அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அழகும் சுவையும்மிக்க விதத்தில் ஒவ்வொன்றும் வடிவமைக்கப்பட்டிருந்தன. தோட்டத்தின் நடுவில் ஜீவவிருட்சம் நின்றிருந்தது. அதின் மகிமை மற்ற மரங்களையெல்லாம் மேற்கொண்டிருந்தது. அதின் கனிகள் பொன்னும் வெள்ளியும் கலந்த ஆப்பிள் பழங்களைப்போலத் தோற்றமளித்தன. அவை நித்திய ஜீவனைத் தரும் வல்லமையை உடையனவாக இருந்தன. அதின் இலைகளில் குணமளிக்கும் மூலக்கூறுகள் இருந்தன. (5)

அந்தத் தம்பதியர் ஏதேனில் மிகுந்த மனமகிழ்ச்சியுடையவர்களாக இருந்தனர். உயிரினங்கள் ஒவ்வொன்றின்மீதும் எல்லையில்லாத கட்டுப்பாட்டை உடையவர்களாக இருந்தனர். அவர்களைச் சுற்றி சிங்கமும் ஆட்டுக்குட்டியும் சமாதானத்துடனும் தீங்குசெய்யாமலும் ஒருமித்து விளையாடியிருந்தன. அல்லது அவர்களது காலடிகளில் அவை உறங்கின. பலவிதமான வண்ணங்களை உடைய அழகிய பறவைகள் மரங்கள் மலர்களுக்கும் இடையில் ஆதாமும் ஏவாளும் அமர்ந்திருந்து தேவனைத் துதித்து, தங்களின் இனிய குரல்களினால் பாடிக்கொண்டிருந்தனர். அந்த கீதங்கள் தேவனுக்கு மகிமையாக எங்கும் எதிரொலித்தன. (6)

ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய ஏதேன் வீட்டின் அழகில் மயங்கியிருந்தனர். தங்களைச்சூழ இருந்த பல வண்ணமிக்க பறவைகள் பாடிக்கொண்டும், பல வண்ணங்களுடன் பறந்துகொண்டுமிருந்தபோது, அவர்கள் மிகவும் மகிழ்ந்தனர். பரிசுத்தமிக்க அந்தத் தம்பதிகள் அந்தப் பறவைகளுடன்சேர்ந்து, தங்களது இனிய குரல்களினால், தங்கள்மீது

காட்டப்பட்டிருந்த அன்பின் அடையாளத்திற்காக, பிதாவுக்கும் அவருக்கு அருமையான குமாரனுக்கும் அன்புடன் பாடினர். படைப்பின் இசையிலும் ஒழுங்கிலும் உண்டாயிருந்த முடிவில்லாத ஞானத்தையும் அறிவையும் அவர்கள் புரிந்துகொண்டிருந்தனர். அவர்களுடைய ஏதேன் வீட்டில் அவர்கள் தொடர்ச்சியாகக் கண்டுபிடித்த சில புதிய அழகுகளும் அதிகப்படியான மகிமையும் அவர்களுடைய இருதயங்களை ஆழ்ந்த அன்பினால் நிரப்பி, அவர்களுடைய உதடுகளிலிருந்து, நன்றி உணர்வையும் பக்தியையும் அவர்களுடைய சிருஷ்டிகருக்குக் கொண்டுவந்தன. (7) ★

# 3

# கலகத்தின் விளைவுகள்!

**(மூலநூல் : The Story of Rdedmption, பக்கம்: 24–31)**
**திருவசன ஆதாரம்: வெளிப்படுத்தல் 12:10–12**

தோட்டத்திற்கு நடுவில்—ஜீவவிருட்சத்திற்கு அருகில், நன்மைதீமை அறியத்தக்க விருட்சம் நின்றிருந்தது. ஆதாம் ஏவாளின் கீழ்ப்படிதல், விசுவாசம், தேவனின்மீதுள்ள அன்பு ஆகியவைகளின்— அடையாளமாக இருக்கும்படி சிறப்பான விதத்தில் இந்த மரம் தேவனால் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த மரத்தைப்பற்றி, சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் தொடவும்கூடாது என்று நமது முதல்பெற்றோருக்குக் கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். அந்தத் தோட்டத்திலிருந்த மரங்களில் அந்த ஒரு மரத்தின் கனியைத் தவிர, மற்ற மரங்களின் கனிகளை அவர்கள் தாராளமாகப் புசிக்கலாம். ஆனால் அந்த மரத்தின் கனியைப் புசிக்கும் நாளிலே, அவர்கள் நிச்சயமாகவே சாவார்கள் என்றும் அவர் கூறியிருந்தார். (1)

ஆதாமும் ஏவாளும் அந்த அழகிய தோட்டத்தில் வைக்கப்பட்டபோது, அவர்கள் விரும்பும் அவர்களுடைய மகிழ்ச்சிக்கான அனைத்தும் அதில் இருந்தன. ஆனால் அவர்கள் நித்தியகாலத்திற்கும் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்குமுன், அவர்களுடைய பக்தி விசுவாசத்தைச் சோதிக்கவேண்டுமென்று தமது சர்வ ஞானமிக்க ஏற்பாட்டை நியமித்திருந்தார். அவருடைய ஆதரவைப் பெறவேண்டியவர்களாக அவர்கள் இருந்தனர். அவர் அவர்களுடனும், அவர்கள் அவருடனும் உரையாடவேண்டியவர்களாக இருந்தனர். இருந்தபோதிலும், அவர் தீமையை அவர்களுக்கு எட்டாத இடத்தில் வைக்கவில்லை. அவர்களைச் சோதிப்பதற்கு சாத்தான் அனுமதிக்கப்பட்டிருந்தான். அந்தச் சோதனையை அவர்கள் தாங்கி இருந்தார்களானால், தேவனுடனும் பரலோக தூதர்களுடனும் தொடர்ச்சியான ஆதரவை உடையவர்களாக இருந்திருப்பார்கள். (2)

தனது புதிய நிலையில் சாத்தான் வியப்புடன் நின்றிருந்தான். அவனது மகிழ்ச்சி அவனைவிட்டு நீங்கியிருந்தது. எந்த தூதர்களுடன் ஒரு காலத்தில்

அவன் மகிழ்ச்சிமிக்கவனாக இருந்திருந்தானோ, அவர்கள் இப்பொழுது பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். இவர்களின்மீது அவன் தன் பார்வையைச் செலுத்தினான். அவர்களது விழுகைக்குமுன், அவர்களது பேரின்பதின் பரிபூரணத்தின்மீது, அதிருப்தியின் ஒரு நிழல் படிந்து, அதனைக் கலைத்திருக்கவில்லை. இப்பொழுதோ அனைத்தும் மாறிவிட்டதுபோல் காணப்படுகிறது. சிருஷ்டிகரின் ரூபத்தைப் பிரதிபலித்திருந்த அவர்களது முகங்கள், இப்பொழுது துயரமிக்கதாகவும் நம்பிக்கையற்றதாகவுமாயின. சண்டை, அதிருப்தி, கசப்புமிக்க எதிர்க்குற்றச்சாட்டுகள் ஆகியவை அவர்களுக்கு இடையில் இருந்தன. அவர்களுடைய கலகத்திற்கு முன்பு இந்தக் காரியங்கள் பரலோகத்தில் அறியப்படாதவைகளாக இருந்தன! தன்னுடைய கலகத்தின் பயங்கரமான பலன்களை, சாத்தான்—இப்பொழுது கண்டான். எதிர்காலத்தைச் சந்திப்பதைப்பற்றியும், தனது செயல்களின் முடிவைப்பற்றியும் எண்ணிப்பார்த்தபோது, அவன் மிகவும் பயந்து நடுங்கினான். (3)

தேவனுக்கும் அவருடைய அருமையான குமாரனுக்கும் மகிழ்ச்சிகரமான பாடல்களினால் துதிசெலுத்துகின்ற மகிழ்ச்சிமிக்க நேரம் வந்தது. பரலோகப்பாடல் குழுவினைச் சாத்தான் தலைமைதாங்கி நடத்தியிருந்தான். பாடலின் முதல்வரியை அவன் தொடங்கியிருந்தான். அதைத்தொடர்ந்து, தூதர்களின் சேனைகள் முழுவதும் அவனுடன் ஒன்றுசேர, தேவனுக்கும் அவரது நேசகுமாரனுக்கும கனத்தை உண்டுபண்ணக்கூடிய இனிய இசை பரலோகம் முழுவதிலும் நிறைந்திருந்தது. இப்பொழுது இனிமையான இசைக்குப்பதிலாக, கலகத்தின் பெரும் தலைவனாக இருந்தவனின் செவிகளில் அதிருப்தியும் கோபமிக்க வார்த்தைகளும் விழுகின்றன. அவன் எங்கே? இவையெல்லாம் ஒரு பயங்கரமான கனவல்லவா? அவன் பரலோகத்திற்கு வெளியில் தள்ளப்பட்டுவிட்டானா? அவனை மீண்டும் உள்ளே அனுமதிப்பதற்குப் பரலோகத்தின் கதவுகள் இனி ஒருபோதும் திறக்காதா? தொழுகையின் நேரம் நெருங்கவே, ஒளியும் பரிசுத்தமுமிக்க தூதர்கள் பிதாவுக்கு முன்பாகக் குனிந்து வணங்குகின்றனர். பரலோக இசையில் இனி அவன் ஒருபோதும் கலந்துகொள்ளமாட்டான். நித்தியவாசியான தேவனுடைய சமுகத்தில் பக்தியுடனும் பரிசுத்தமான பயத்துடனும் இனி ஒருபோதும் அவன் பணியமாட்டான். (4)

தூய்மையானவனாக—பக்திவிசுவாசமுள்ளவனாக—உண்மையுள்ளவனாக—முன்பு இருந்ததைப்போல மறுபடியும் ஆகமுடியுமானால், அதற்காக தனது அதிகாரத்தைப்பற்றிய உரிமைபாராட்டுதலை மகிழ்ச்சியுடன் விட்டுக்கொடுப்பான். ஆனால் மீட்கப்படமுடியாத அளவிற்கு தனது

துணிகரமான கலகத்தினால் அவன் விழுந்துபோயிருந்தான்! அதுமட்டுமல்ல, இன்னும் மேலான நன்மைகளை—மிகவும் மேலான மகிமையையும் சுதந்திரத்தையும் அடைந்துகொள்ளமுடியும் என்ற எண்ணத்தை முன்வைத்து, அவர்களது இதயங்களில் இந்த எண்ணங்களைப் பதியச்செய்கின்றவரை பரலோகத்தின் சித்தத்தைப்பற்றி கேள்வி கேட்கவோ அல்லது தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவோ ஒருபோதும் மறுக்காத தூதர்களையும்—கலகஞ்செய்ய நடத்தினான். அவர்களை வஞ்சிப்பதற்கு அவன் பயன்படுத்திய தந்திரமாக இது இருந்தது.—விடுதலை பெறமுடியாத ஒரு பொறுப்பு இப்பொழுது அவன்மீதுள்ளது. (5)

ஏமாந்துபோன நம்பிக்கைகளால் இந்த ஆவிகள் கலங்கின. மேலான நன்மைக்குப்பதிலாக, கீழ்ப்படியாமைக்கும் தேவப்பிரமாணத்தை அவமதித்ததற்குமான, துயரமிக்க பலன்களை அனுபவிக்கின்றனர். இயேசுவின் மேன்மையான ஆளுகையில், இவர்கள் இனி ஒருபோதும் இணக்கமானவர்களாக இருக்கமாட்டார்கள். மகிழ்ச்சியான கீழ்ப்படிதலோடும் பயபக்தியான மரியாதையோடும் அவரிடம் திரும்பிவருவதற்கு ஏதுவாக அவருடைய சமுகம், அவர்களுடைய ஆவிகளில் உண்டாக்கியிருந்த ஆர்வமிக்க அன்பு, சமாதானம் மகிழ்ச்சி ஆகியவைகளால் அவர்களுடைய மனங்கள் இனி ஒருபோதும் தூண்டப்படாது. (6)

### சாத்தான் மீண்டும் ஆதிமேன்மையை தேடுதல்!

தனது செயலைப்பார்த்தபோது, சாத்தான் நடுங்கினான்! அவன் தனியாக இருந்து, தனது கடந்தகால, நிகழ்கால, எதிர்காலத் திட்டங்களைப்பற்றித் சிந்தித்துக்கொண்டிருந்தான். ஒரு பெரும் புயலினால் அவனது பலமிக்க உடல் நடுங்கினது. பரலோகத்திலிருந்து ஒரு தூதன் அந்தவழியாகச் சென்றுகொண்டிருந்தான். அவனை அழைத்து, தனக்கு இயேசுவுடன் ஒரு நேர்முகச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்துதரும்படி கேட்டுக்கொண்டான். அவனுக்கு அது அனுமதிக்கப்பட்டது. அதன்பின் அவன் தேவ குமாரனிடம், தான் தேவனுக்கு எதிராகச் செய்த கலகத்திற்காக மனம் வருந்துவதாகவும், தேவனுடைய ஆதரவு தனக்குக் கிடைக்கவேண்டுமென்று விரும்புவதாகவும் கூறினான். இதற்கு முன்பாக தேவன் அவனை வைத்திருந்த அதே அந்தஸ்தில், அவரது ஞானமிக்க அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து, அதே பதவியில் மீண்டும் இருந்துகொள்ள விருப்பமுள்ளவனாக இருந்தான். சாத்தானுக்குண்டான அவலத்திற்காகக் கிறிஸ்து அழுதார்! ஆனால் தேவனுடைய எண்ணத்தின்படி அவன் ஒருபோதும் பரலோகத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டான் என்று கூறினார். பரலோகம்

ஆபத்திற்குள்ளாக்கப்படக்கூடாது. அவனைத் திரும்பவும் பரலோகத்தில் ஏற்றுக்கொண்டால், பரலோகம் முழுவதும் களங்கமடைந்துவிடும். ஏனெனில் பாவமும் கலகமும் அவனிடத்திலிருந்துதான் உற்பத்தியாயின. கலகத்தின் விதைகள் இன்னும் அவனுக்குள் இருந்தன. கலகம் செய்த அவனது போக்கிற்கு எவ்விதமான சந்தர்ப்பமும் இருக்கவில்லை. அவன் நம்பிக்கையற்றவிதத்தில் தன்னைத்தானே கெடுத்துக்கொண்டான். அவன் தன்னைமட்டும் கெடுத்துக்கொள்ளாமல், பரலோகத்தில்—மகிழ்ச்சிமிக்கவர்களாக இருந்திருக்கக்கூடிய தூதர்களின் சேனையையும் கெடுத்துப்போட்டான். தேவப்பிரமாணம் குற்றப்படுத்துமேயன்றி அதினால் மன்னிக்க இயலாது. (7)

தேவனுடைய நல்ல தன்மைகளுக்கு எதிராக நடந்துவிட்டோமே என்று அவன் தான் செய்த கலகத்திற்காக மனம் வருந்தவில்லை! அவமதிக்கப்பட்ட அவரது பிரமாணத்திற்கு மறுபடியும் மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிவதற்கு, விழுகைக்குப்பின் தேவன் மீதுள்ள அவனுடைய அன்பு அதிகரித்துவிட்டது என்பது ஒப்புக்கொள்ள முடியாததாக இருந்தது. பரலோகத்தின் இனிய ஒளியை இழந்துவிட்டதினாலுண்டாயிருக்கும் அவலநிலையை அவன் உணர்ந்தான். தன்னைத்தான் துன்புறுத்தின அவனது குற்ற உணர்வு, தான் எதிர்பார்த்த காரியம் நடக்காமல்போனதினால் உண்டான ஏமாற்றம் ஆகியவை அவனது வேதனைக்குக் காரணமாயின. பரலோகத்தில் சேனாதிபதியாக—கனப்படுத்தப்பட்டவனாக இருப்பதிலிருந்து, பரலோகத்திற்கு வெளியே சேனாதிபதியாக இருப்பது மிக அதிகமாக மாறுபட்டிருக்கிறது. பரலோகத்தில் கிடைத்திருந்த நன்மைகள் அனைத்தையும் இழந்தது அவனால் தாங்கிக்கொள்ள முடியாததாகக் காணப்பட்டது. அவைகளை மறுபடியும் ஆதாயப்படுத்திக்கொள்ள அவன் விரும்பினான். (8)

இந்த நிலையில் உண்டான மாற்றம், தேவன்மீதும் அவரது ஞானமும் நீதியுமிக்கதான பிரமாணத்தின்மீதும் உள்ள அன்பை அதிகரிக்கவில்லை. தேவனுடைய ஆதரவைப் பெறுவது முடியாதது என்றும், பரலோகத்திற்குள் அவன் அனுமதிக்கப்படும் வாய்ப்பு அவனுக்கு இல்லை என்பதையும், அவன் முற்றுமாக அறிந்து கொண்டபோது, தனது விரோத மனப்பான்மையை அதிகப்படியான வெறுப்புடனும் பயங்கரமான கோபாவேசத்துடனும் வெளிக்காட்டினான். (9)

இவ்விதமான தீர்மானமிக்க கலகம் செயலற்றதாக இருக்காது என்பதை தேவன் அறிந்திருந்தார். பரலோக தூதர்களை வேதனைப்படுத்தி அவருடைய அதிகாரத்தின்மீது அவமதிப்பை உண்டுபண்ணவும் அவன் உபாயங்களைக் கண்டுபிடித்துக்கொண்டே இருப்பான்; பரலோக வாசலுக்குள்

அவன் அனுமதிக்கப்படமாட்டான் என்பதினால், தூதர்கள் பரலோகத்திற்குள் செல்லும்போதும், அதைவிட்டு வெளியேவரும்போதும் அவர்களை இகழ்ந்து பேசுவதற்காக அவன் பரலோகத்தின் வாசலில் காத்திருப்பான்; ஆதாம் ஏவாள் ஆகியோரின் மகிழ்ச்சியைக்கெடுக்க அவன் வகைதேடுவான்; அவர்கள் கலகம்செய்தால் அது பரலோகத்தை வேதனைக்குள் ஆழ்த்தும் என்பதற்காக கலகம் செய்யும்படி அவர்களையும் தூண்டிவிடுவான். அவனது அடியார்கள் அவனைத் தேடியிருந்தனர். அவன் தனக்குத்தானே கீழ்ப்படியாமைமிக்க ஒரு பார்வையுடன் சிலிர்த்தெழுந்தான். ஆதாமையும் அவனது தோழியான ஏவாளையும் தேவனுடைய கரத்திலிருந்து பிடுங்கிக்கொள்ளும் தனது திட்டத்தை அவர்களிடம் கூறினான். ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாதவர்களாகும்படி ஏதாவது கபடத்தைத் தன்னால் செய்ய முடியுமானால், அவர்கள் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி ஏதாவதொரு ஏற்பாட்டை தேவன் செய்வார். அப்படிச்செய்யும்போது, அவனும் விழுந்துபோன மற்ற தூதர்களும் தேவனுடைய இரக்கத்தில் நியாயமான ஒரு நிலையை அடைவார்கள். இந்தத் திட்டம் தோல்வி அடைந்தால் ஆதாம் ஏவாளும் தங்களைப்போலவே தேவனுடைய கோபத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாகிவிடுவார்கள். அவர்களுடைய மீறுதல் அவர்களைக் கலகம் செய்யும் நிலைக்கும் கொண்டுவரும். அப்பொழுது ஆதாமுடனும் ஏவாளுடனும் சேர்ந்து ஏதேனைக் கைப்பற்றி அதனைத் தங்களுடைய வீடாக்கிக்கொள்ளமுடியும். தோட்டத்தின் நடுவில் உள்ள ஜீவவிருட்சத்திற்குச் செல்லும் மார்க்கத்தை அவர்களால் கண்டுகொள்ளக்கூடுமானால், அவர்களுடைய பலம் பரிசுத்த தூதர்களுடைய பலத்தைப் போலாகும். அப்பொழுது தேவனால்கூட அவர்களை வெளியேற்ற முடியாமலாகிவிடும் என்றான். (10)

## மனித குடும்பத்திற்கெதிரான சதி!

இவ்வாறாக, சாத்தான் தனது தீய தூதர்களுடன் ஒரு ஆலோசனையை நடத்தினான். ஆபத்தானதும் பயங்கரமானதுமான இந்த வேலையில் ஈடுபட—ஒற்றுமைப்பட அவர்கள் தயாராக இருக்கவில்லை. இந்த வேலையை நிறைவேற்றும் பொறுப்பை அவன் ஒருவரிடமும் ஒப்படைக்கமாட்டேன் என்று கூறினான். ஏனெனில் இப்படிப்பட்ட ஒரு முக்கியமான வேலையைச் செய்ய அவனுக்கு மட்டுமே ஞானம் உள்ளதாக அவன் எண்ணினான். இதனை நடைமுறைப்படுத்த திட்டம்தீட்டத் தான் செல்லும் நேரத்தில் இந்தக் காரியம்பற்றி அவர்களை ஆலோசிக்கும்படி கூறினான். இது ஒன்றுதான் அவர்களது கடைசி நம்பிக்கையாக இருக்கிறது என்றும் அவர்களுக்கு

உணர்த்திக்காட்ட வகைதேடினான். இதில் அவர்கள் தோற்றுப்போனால், பரலோகத்தைத் திரும்ப அடைந்து அதனைக் கட்டுப்படுத்தவோ அல்லது தேவனுடைய படைப்பின் ஏதாவதொரு பகுதியைக் கைப்பற்றிக்கொள்ளவோ கூடிய நல்ல வாய்ப்புகள்—அனைத்தும் நம்பிக்கை இல்லாததாகிவிடும். (11)

ஆதாமையும் ஏவாளையும் நிச்சயமாக வீழ்த்திடக்கூடிய திட்டங்களைத்தீட்ட சாத்தான் தனியாகச் சென்றான். அவனது நோக்கங்கள் தோற்கடிக்கப்பட்டுவிடும் என்ற பயம் அவனில் இருந்தது. தேவனுடைய பிரமாணத்தை மீறும்படி ஆதாமையும் ஏவாளையும் நடத்துவதில் அவன் வெற்றி அடைந்துவிட்டாலும், அதினால் அவர்களையும் மீறுதல்காரர்கள் ஆக்கிவிட்டாலும், அதினால் அவனுக்கு எந்தவிதமான நன்மையும் உண்டாகாது. அவனது காரியத்தில் எந்த முன்னேற்றமும் உண்டாகாது; அவனது குற்றம்தான் அதிகரிக்கும்; தான் அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பத்திற்குள்ளும் பாவத்திற்கான வருத்தத்திலும் பரிசுத்தமான அந்தத் தம்பதியரை மூழ்கச்செய்யவேண்டும் என்ற எண்ணமுண்டானபோது, அவன் நடுங்கினான். முடிவெடுக்கமுடியாத ஒரு நிலையில் அவன் இருப்பதுபோல் காணப்பட்டான். ஒரு சமயத்தில் உறுதியும் தீர்மானமும் உடையவனாகவும், அதன்பின் தயங்கித் தடுமாறுகிறவனாகவும் அவன் இருந்தான். அவனுடைய தூதர்கள் தங்களுடைய முடிவை அவனிடம் தெரிவிப்பதற்காக அவனைத் தேடிக்கொண்டிருந்தார்கள். சாத்தானின் திட்டங்களில் அவர்கள் அவனுடன் ஒன்றுபடுபவர்கள்; அவனுடன் சேர்ந்து பொறுப்பில் பங்குபெற்று விளைவுகளிலும் பங்குபெறுவார்கள். (12)

சாத்தான் அவனுடைய நம்பிக்கையின்மை, பலவீனம் ஆகிய உணர்வுகளைத் தூரமாக விட்டுவிட்டான். அவர்களது தலைவனாக பிதா, குமாரன் ஆகியோரின் அதிகாரத்தை மறுக்க, தனது வல்லமைக்குள் உள்ள அனைத்தையும்செய்ய, அவன் தன்னைத் தைரியப்படுத்திக்கொள்ள உறுதிபூண்டான். அவன் தனது திட்டங்களை அவர்களுக்கு விவரித்தான். அவன் ஆதாம் ஏவாளிடம் தைரியமாகச் சென்று, தேவனுடைய சொந்தக் குமாரனைப்பற்றிக் குறைகூறினால், அவர்கள் அவன் சொல்லுகிறதை வினாடி நேரங்கூட கவனிக்காது, அப்படிப்பட்ட தாக்குதலுக்கு ஆயத்தமாக இருப்பார்கள். இதுவரை மேலான அதிகாரத்தை உடைய ஒரு தூதனாக இருந்த தனது வல்லமையினால், அவர்களைப் பயப்படச்செய்ய வகைதேடினால், அவனால் ஒன்றையும் நிறைவேற்றமுடியாது. பலத்தினாலும் பலாத்காரத்தினாலும் எவைகளைச் சாதிக்கமுடியாதோ, அவைகளைத் தந்திரத்தினாலும் வஞ்சகத்தினாலும் சாதித்துக்கொள்ள அவன் முடிவுசெய்தான்! (13)

## ஆதாமும் ஏவாளும் எச்சரிக்கப்பட்டனர்!

அச்சுறுத்தியிருந்த தீமையைத் தவிர்க்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக தேவன் தூதர்களின் சேனையைக் கூட்டினார். எதிரியினால் ஆபத்திற்குள்ளாகும் அபாயத்தில் உள்ளனர் என்று ஆதாமையும் ஏவாளையும் எச்சரிப்பதற்காக, தூதர்கள் ஏதேன் தோட்டத்திற்குச் சென்றாக வேண்டும் என்று பரலோக ஆலோசனை மன்றத்தில் முடிவுசெய்யப்பட்டது. நமது முதல்பெற்றோர்களை சந்திப்பதற்கு இரண்டு தேவதூதர்கள் ஏதேனை நோக்கி விரைந்துசென்றனர். அவர்களுக்காக, அவர்களைச் சுற்றிலும் சிருஷ்டிகர் செய்துள்ள ஏராளமான வசதிகளுக்காவும் நன்மைகளுக்காகவும் முதலில் அவருக்கு நன்றியைத் தெரிவித்து, பரிசுத்தமிக்க அந்த இருவரும் களங்கமற்ற மகிழ்ச்சியுடன் அந்தத் தூதர்களை வரவேற்றனர். அழகாகவும் கவர்ச்சிமிக்கதாகவும் இருந்த ஒவ்வொன்றும், அவர்கள் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கென்றே ஏற்படுத்தப் பட்டிருந்தன. ஒவ்வொன்றும் அவர்களது தேவைக்கானவைகள்போல் காணப்பட்டன. தேவகுமாரனுடைய, பரலோக தூதர்களுடைய கூட்டுறவை அவர்கள் எல்லாவற்றிற்கும்மேலான ஆசீர்வாதமாகக் கருதினார்கள். ஏனெனில் அவர்கள் ஒவ்வொருமுறை வந்தபோதும் தங்களது ஏதேன் வீட்டில் இயற்கையின் அழகிலே தாங்கள் புதிதாகக் கண்டுபிடித்தவைகளைப்பற்றி அவர்களிடம் சொல்வதற்கும், மேலும் தாங்கள் அறிந்துகொள்ளாதிருந்த ஏராளமானவைகளைக்குறித்துக் கேட்பதற்கும் அநேகம் இருந்தன! (14)

அவர்கள் விரும்பியிருந்த தகவல்கள் அனைத்தையும் இனிமையாகவும் அன்பாகவும் அத்தூதர்கள் கூறினார்கள். சாத்தானின் கலகத்தையும், சோகமயமான அவனது விழுகையைப்பற்றிய வரலாற்றையும் அவர்கள் கூறியிருந்தார்கள். தேவனிடமுள்ள அவர்களது கீழ்ப்படிதல் அன்பு ஆகியவைகளின் அடையாளமாக தோட்டத்தின் மத்தியில் நன்மைதீமை அறியத்தக்க மரம் நடப்பட்டுள்ளது என்றும், பரிசுத்த தூதர்களின்மேலான நிலைமை காக்கப்படுவது அவர்களது கீழ்ப்படிதலைப் பொறுத்ததாக இருந்தது என்றும், ஆதாமும் ஏவாளும் அதைப்போன்ற நிலையில்தான் உள்ளனர் என்றும், அவர்கள் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால், சொல்லிமுடியாத ஆனந்தத்தில் இருக்கலாமென்றும், அல்லது அதற்குக் கீழ்ப்படியாவிட்டால் தங்களது மேலான நிலையை இழந்து, நம்பிக்கையில்லாத நிலைமைக்குள் மூழ்கிவிட நேரிடுமென்றும் அறிவித்தனர். (15)

தேவன் ஆதாமையும் ஏவாளையும் அவருக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்தமாட்டாரென்றும், அதாவது அவரது சித்தத்திற்கு எதிராகச் செல்லக்கூடிய வல்லமையை அவர்களைவிட்டு நீக்கமாட்டாரென்றும் அவர்கள் கூறினார்கள். கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமலிருத்தல் என்னும் தன்மையை உடைய சுதந்திரமானவர்களாக அவர்கள் உள்ளனர் என்றும் அவர்கள் கூறினார்கள். அவர்கள்மீது வைப்பதற்குத் தகுதியான ஒரு தடையை தேவன் கண்டிருக்கிறார்.

அதாவது அவர்கள் தேவனுடைய சித்தத்தை மீறினால், நிச்சயமாகவே சாவார்கள். பரலோகவாசிகளை ஆளுகைசெய்யும்படி கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக உன்னதமான பதவியில் வைக்கப்பட்டிருந்த ஒரு தூதன், பரலோகவாசிகளை ஆளுகை செய்வதற்கென்று அவர் ஏற்படுத்தியிருந்த பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டான் என்பதையும், அந்தக் கலகம் பரலோகத்தில் யுத்தத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகி, அதன் பலனாகக் கலகக்காரர்கள் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டியதாயிற்று என்பதையும், அவனுடன் சேர்ந்து மாபெரும் யேகோவாவின் அதிகாரத்தை எதிர்த்துக் கேள்விகேட்ட ஒவ்வொரு தூதனும் வெளியேற்றப்பட்டான் என்பதையும், விழுந்துபோன இந்த எதிரி, இப்பொழுது தேவனுடைய அவரது அருமையான குமாரனுடைய காரியத்தில் சம்பந்தப்பட்டுள்ள அனைவருக்கும் எதிரியாக இருக்கிறான் என்பதையும் கூறினர். (16)

அவர்களுக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணும் நோக்கத்தோடு— சாத்தான் இருக்கிறான் என்றும், விழுந்துபோன இந்த எதிரியுடன் அவர்கள் தொடர்புகொள்ள நேரிடலாம் என்றும், அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளுவது அவசியமாயிருக்கிறது என்றும் கூறினார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து இருக்கும்வரை, அவனால் அவர்களுக்கு உபத்திரவம் செய்யமுடியாது என்றும், ஏனெனில், அவசியமானால் எந்த விதத்திலும் அவர்களை அவன் உபத்திரவப்படுத்தாமலிருப்பதற்காக, அவர்களுடைய உதவிக்கென்று, பரலோகத்தில் உள்ள ஒவ்வொரு தூதர்களும் வருவார்கள் என்றும் சொன்னார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தால் அவர்களை எப்பொழுதும் வேதனைப்படுத்தவும் குழப்பவும் துன்பப்படுத்தவும் சாத்தான் வல்லமை கொண்டிருக்கிறான் என்றார்கள். சாத்தானின் முதல் உபாயத்திற்கு எதிராக உறுதியாக நிற்பார்களானால், பரலோகத்தின் தூதர்களைப்போல பாதுகாப்பானவர்களாக இருப்பார்கள் என்றும், அதற்கு மாறாக அவர்கள் சோதனைக்காரனுக்கு இணங்குவார்களானால், மேலான நிலைமையிலிருந்த தூதர்களை விட்டுவைக்காத அவன், அவர்களையும் விட்டுவைக்கமாட்டான் என்றும் கூறினார்கள். மேலும், தேவனுடைய பிரமாணங்கள் அவரைப்போலவே பரிசுத்தமானதால், பரலோகத்திலும் பூமியிலும் இருக்கிற அனைவரிடமிருந்தும் முழுமையான கீழ்ப்படிதலை தேவன் எதிர்பார்க்கிறார் என்றும், ஆகையால் மீறுதலின் பலனை அவர்கள் கண்டிப்பாக அனுபவிக்கவேண்டியதிருக்கும் என்றும் கூறினார்கள். (17)

விழுந்துபோன எதிரியுடன் ஏவாள் தொடர்புகொள்ளக்கூடிய சாத்தியங்கள் இருப்பதினால், அவள் தனது வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, கணவனைவிட்டுப் பிரிந்திருக்கக்கூடாது என்று அந்த தூதர்கள் எச்சரித்தனர். அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்தால், சேர்ந்து இருக்கும்போதுள்ளதைவிட பெரும் அபாயத்திற்கு உள்ளாவார்கள் என்றும்,

நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தைப்பற்றி தேவன் கொடுத்திருந்த கட்டளையை மிகக் கவனமாகப் பின்பற்றும்படியும், பூரணமான கீழ்ப்படிதலில் அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்களென்றும், அப்பொழுது விழுந்துபோன இந்த எதிரிக்கு அவர்களை வஞ்சிக்க வல்லமை இருக்காது என்றும் ஆதாமையும் ஏவாளையும் அந்த தூதர்கள் எச்சரித்தனர். மேலும், தொடர்ச்சியான சோதனையுடன் அந்த இருவரையும் தொடரும்படி தேவன் சாத்தானை அனுமதிக்கமாட்டார் என்றும், நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தினிடத்தில் மட்டுந்தான் அவனுக்கு ஆதாம் ஏவாளை ஏமாற்ற வழிகிடைக்கும் என்றும் கூறினார்கள். (18)

தேவனுடைய மிக முக்கியமான கற்பனையை நாங்கள் ஒருபோதும் மீறமாட்டோம் என்று ஆதாமும் ஏவாளும் உறுதியாகக் கூறினார்கள். ஏனெனில் அவரது சித்தத்தின்படிச்செய்வதே அவர்களது மேலான மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார்கள். ஆதாம் ஏவாளுடன் சேர்ந்து அந்தத் தூதர்கள் பரிசுத்தமான சூழலில் இனிமையாகப் பாட, பேரின்பத்தால் நிறைந்திருந்த ஏதேனிலிருந்த அவர்களது பாடல்கள் உயர எழும்பினபோது, பிதாவையும் குமாரனையும் அவர்கள் மகிழ்ச்சியுடன் துதித்து பாடுவதின் குரலை சாத்தான் கேட்டான். சாத்தான் அதைக் கேட்டபோது, அவனுடைய பொறாமை, வெறுப்பு, தீய எண்ணங்கள் ஆகியவை அதிகரித்தன. அவன் தனது கவலையை அவனது அடியார்களிடம் கூறி, ஆதாமையும் ஏவாளையும் கீழ்ப்படியாமைக்குள் விழும்படி ஏவிவிட்டு, அதனால் தேவ கோபத்தை அவர்கள்மீது உண்டுபண்ணி, அவர்களது துதியின் பாடலை, தங்களைப் படைத்தவருக்கு எதிரான வெறுப்பாக மாற்றும்படிக் கூறினான். (19) ★

# 4

# சோதனையும்—விழுகையும்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 32–41)**

**திருவசன ஆதாரம்: ஆதியாகமம் 3**

சாத்தான் ஒரு சர்ப்பத்தின் உருவை எடுத்துக்கொண்டு ஏதேனுக்குள் நுழைந்தான். சர்ப்பம் சிறகுகளை உடைய ஒரு அழகுள்ள பிராணியாக இருந்தது. அது ஆகாயத்தில் பறக்கும்போது, அதின் தோற்றம் புடமிடப்பட்ட பொன்னைப்போன்று ஒளிமிக்கதாகத் திகழ்ந்தது. அது தரையின்மீது செல்லாமல், இடத்திற்கு இடம் பறந்துசென்று, கனிகளைச் சாப்பிட்டிருந்தது. சாத்தான் அந்த சர்ப்பத்திற்குள் புகுந்து, நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தில் இடம்பிடித்துக்கொண்டு, அதின் கனியை தனது விருப்பம்போல் எந்தத் தடையுமின்றி சாப்பிட்டுக்கொண்டிருந்தான். (1)

ஏவாள் வேலையில் ஈடுபட்டிருந்தபோது முதலில் சுய நினைவின்றி (என்ன செய்கிறோம் என்கிற நினைவின்றி) அவளது கணவனைவிட்டுப் பிரிந்திருந்தாள். இந்த உண்மையை அவள் உணர்ந்தபோது, ஆபத்து இருக்கலாமென்று உணர்ந்தாள். எனினும் தனது கணவனுக்கு அருகில் இல்லாவிட்டாலுங்கூட, தான் பாதுகாப்பாக இருப்பதாக தனக்குள் எண்ணிக்கொண்டு, தீமை தன்னை அணுகினால் அதனை அறிந்துகொள்ளக்கூடிய ஞானத்தையும் அதனை மேற்கொள்ளக்கூடிய பலத்தையும் உடையவளாக இருப்பதாக எண்ணினாள். இவ்விதமாக நடந்துகொள்ளாமலிருக்கும்படி அந்த தேவதூதர்கள் அவளை எச்சரித்து இருந்தனர். ஏவாள் விலக்கப்பட்ட மரத்தின் கனியை ஆர்வத்துடன் பார்த்து, அதின் அழகை ரசித்து வியந்துகொண்டிருந்தாள். தேவன் தீர்மானமாக, அந்த மரத்தின் கனியைத் தொடவோ புசிக்கவோ வேண்டாம் என்று தடை செய்திருந்ததற்குக் காரணம் என்ன? என்று நினைக்கும்படி, அந்தக் கனி மிகவும் அழகானதாகக் காணப்பட்டது. அது இப்பொழுது சாத்தானுக்கு ஒரு வாய்ப்பானது. அவளுடைய எண்ணத்தை அறிந்தவனைப்போல் அவன் அவளிடம் பேசினான். நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ? என்றான். ஆச்சரியமடைந்தவளாக இருந்த ஏவாளை நோக்கி, இவ்விதமாக

இனிமையான மெல்லிய குரலில் கபடமிக்க வார்த்தைகளினால் அவன் தந்திரமாகப் பேசினான். ஒரு சர்ப்பம் பேசுவதைக் கேட்டு, அவள் திடுக்கிட்டாள். அவன் அவளுடைய அழகையும் அதிகமான சிறப்புகளையும் உயர்த்திப் பேசினான். அது ஏவாளுக்கு அதிருப்தியை உண்டுபண்ணவில்லை. அவள் மிகவும் ஆச்சரியப்பட்டாள். ஏனெனில் பேசும் வல்லமையை தேவன் சர்ப்பத்திற்குக் கொடுக்கவில்லை என்பதை அவள் அறிந்திருந்தாள். (2)

மேலும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆசை ஏவாளுக்கு எழும்பியது. அந்த இடத்திலிருந்து ஓடுவதற்குப்பதில், சர்ப்பம் பேசுவதை அவள் கவனித்திருந்தாள். சர்ப்பத்தை ஒரு ஆதாரமாக வைத்துப்பேசக்கூடிய விழுந்துபோன எதிரியாக அது இருக்கலாம் என்பது அவளது மனதில் தோன்றவில்லை. பேசியது சாத்தான்தான்—சர்ப்பம் அல்ல. ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். முகஸ்துதி செய்யப்பட்டாள். கவரப்பட்டாள். ஒரு தேவதூதனின் உருவத்தைப்போன்ற உருவம் உடையவனான ஒருவனை, ஒரு சேனைத்தலைவனைப்போன்ற உருவம் உடையவனான ஒருவனை அவள் சந்தித்திருந்தால் எச்சரிப்படைந்திருப்பாள். ஆனால் விநோதமான அந்தக்குரல், அந்நியமான ஒன்று தன்னிடம் தாராளமாகப் பேசுவதற்கான காரணம் என்ன என்பதை அவளது கணவனிடம் விசாரிப்பதற்காக அந்தக் குரல் அவளை விரட்டியிருக்கவேண்டும். ஆனால் அவள் சர்ப்பத்துடன் ஒரு விவாதத்தில் ஈடுபட்டிருந்தாள். நாங்கள் தோட்த்திலுள்ள சகல விருட்சங்களின் கனிகளையும் புசிக்கலாம்; ஆனால் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக்குறித்து, நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும்வேண்டாம் என்று தேவன் சொன்னார் என்று அவனது கேள்விக்கு அவள் பதில் அளித்தாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: **“நீங்கள் சாகவே சாவதில்லை”** என்றது. (3)

விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தால் இப்பொழுது உள்ளதைவிட மிகப் புதியதும் மேன்மையுமான அறிவை அவர்கள் அடைந்துகொள்ளுவார்கள் என்னும் எண்ணத்தை சாத்தான் அவர்களுக்குத் தெரிவித்தான். சர்வவல்லவரின் இரகசியங்களை அறிய மனிதர்களை நடத்தவும், தேவன் வெளிப்படுத்தியுள்ளவைகளில் திருப்தி இல்லாதவர்களாக இருக்கும்படிக்கும், தேவன் எவைகளைக் கட்டளையிட்டிருக்கிறாரோ அவைகளுக்குக் கீழ்ப்படிவதற்கு கவனமற்றவர்களாக்குவதற்கும், அவர்களது விழுகையின் காலத்திலிருந்து பெரும் வெற்றியுடன் அவன் நடத்தியிருந்த அவனது சிறப்பன வேலையாக அது இருக்கிறது. அவன் அவர்களை தேவனுடைய கற்பனைகளை மீறும்படி நடத்தி, அதன் பின்னர் அவர்கள் ஆச்சரியமான அறிவுக்களத்தில் நுழைந்துகொண்டிருப்பதாக நம்பும்படி அவர்களை அவன் நடத்துவான். (4)

இது முற்றிலுமாக வீழ்த்துகின்ற வியூகமாகவும், துன்பமிக்க வஞ்சகமாகவும் இருக்கிறது. தேவன் எவைகளை வெளிப்படுத்தி இருக்கிறாரோ அவைகளைப் புரிந்துகொள்ள அவர்கள் தவறிவிடுகின்றனர். அவரது தெளிவான கற்பனையை மதிக்காமல், தேவனை விட்டுவிட ஞானத்தை நாடுகின்றனர். அழிவுக்கு உரியவர்களிடமிருந்து எவைகளை மறைத்துவைப்பதில் அவர் மகிழ்ச்சி உள்ளவராக இருக்கிறாரோ, அவைகளைப் புரிந்துகொள்ள வகைதேடுகினறனர். முன்னேற்றம் என்று எண்ணப்படுகின்ற அவர்களது யோசனைகளில் அவர்கள் அகந்தையுள்ளவர்களாகி, தங்களது வீணான தத்துவங்களில் கவர்ச்சியுமடைகின்றனர். ஆனால் உண்மையான அறிவைக்குறித்தவகையில் நடுஇரவின் இருளில் அவர்கள் தடவித் திரிகின்றனர். அவர்கள் எப்போதும் கற்றுக்கொண்டிருந்தாலும், சத்தியத்தைப்பற்றிய அறிவினிடம் ஒருபோதும் வரமுடியாதவர்களாக உள்ளனர். (5)

பாவமற்ற இந்த தம்பதியர் தீமையைப்பற்றிய அறிவை உடையவர்களாக இருக்கக்கூடாது என்பது தேவனுடைய சித்தமாக இருக்கவில்லை. அவர் ஏராளமான நன்மைகளை அவர்களுக்குக்கொடுத்து தீமையை நிறுத்திவைத்திருந்தார். “நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மைதீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்” தேவன் அறிவார் என்று தேவனைப் பொய்யராக்கியபோதும் ஏவாள் சர்ப்பத்தின் வார்த்தை ஞானமிக்கது என்று எண்ணி, அதன் விசாலமான கருத்தை ஏற்றுக்கொண்டாள். தேவன், அவர்கள் தமக்குச் சமமான—மேலான அறிவுடையவர்களாக இருப்பதைத் தவிர்ப்பதற்காகவே, அவர்களை வஞ்சித்தார் என்றும் சாத்தான் அவர்களிடம் பொய்சொல்லி, தவறான விதத்தில் இழுத்துக்கொண்டான். நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள் என்று தேவன் கூறினார். நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவதில்லை என்று சர்ப்பம் கூறிற்று. (6)

அவள் அந்தக் கனியைப் புசித்தவுடனே அவளை தேவனுக்குச் சமமாக்கக்கூடிய ஒரு புதிதும் மேலானதுமான அறிவை அவள் அடைந்துகொள்ளுவாள் என்று சோதனைக்காரன் வாக்குறுதி செய்திருந்தான். அவனையே கவனிக்கும்படி அவளிடம் கூறினான். அவன் அந்த மரத்தின் கனியைத்தாராளமாகப்புசித்தான். அது கெடுதல் எதுவும் செய்யாமலிருப்பதுடன் சுவைமிக்கதாகவும் உற்சாகம் ஊட்டுவதாகவும் இருக்கக்கண்டான். அந்தக் கனியின் மூலக்கூறுகள் ஞானத்தையும் வல்லமையையும் தரக்கூடியவையாக இருப்பதினால்தான் அதனைத் தொடவும் ருசிக்கவும்வேண்டாம் என்று

தேவன் கூறினார்; ஏனெனில், அதின் ஆச்சரியமான தன்மைகளை அவர் அறிந்திருந்தார். அவர்களிடமிருந்து தடைசெய்யப்பட்ட கனியைப் புசித்ததின் காரணமாகத்தான் தனக்குப் பேசும் திறமை உண்டாயிற்று என்றும் அவன் கூறினான். தேவன் தாம் அறிவித்துள்ளபடி செய்யமாட்டாரென்றும், பெரிய நன்மையை அடைந்துகொள்ளுவதிலிருந்து அவர்களைத் தடுப்பதற்காக மட்டும்தான் அது அவர்களைப் பயமுறுத்துகின்ற ஒரு அச்சுறுத்தலாக இருந்தது என்றும் கூறினான். மேலும் அவர்களால் சாக முடியாது என்றும் அவன் கூறினான். நித்திய ஜீவனைத் தரவல்ல ஜீவவிருட்சத்தின் கனியை அவர்கள் புசித்திருக்கவில்லையா? புகழ்ச்சிமிக்கதும், மேலான மகிழ்ச்சியை உடையதுமான மேலான நிலைமையிலிருந்து தூரமாக வைத்து, தேவன் அவர்களை வஞ்சித்துக்கொண்டிருந்தார் என்றும் அவன் கூறினான். சோதனைக்காரன் அந்தக் கனியைப் பறித்து ஏவாளிடம் கொடுத்தான். அவள் அதைத் தனது கரத்தில் எடுத்துக்கொண்டாள். நீங்கள் சாகாதபடிக்கு அதைத் தொடவும்வேண்டாம் என்று நீ தடைசெய்யப்பட்டிருந்தாய் அல்லவா என்று கேட்டான். அந்தக் கனியைத் தொடுவதினாலும் கையாளுவதினாலும் உண்டாகக்கூடிய தீமை, மரணம் போன்ற உணர்வுகளைவிட, அதிகமான எதையும், அதைப் புசிப்பதினால் உணரப்போவதில்லை என்றும் அவளிடம் கூறினான். தேவனுடைய அதிருப்தியின் அடையாளத்தை அவள் உடனடியாக உணராததினால், தைரியமடைந்தாள். சோதனைக்காரனின் வார்த்தைகள் முற்றிலுமாக ஞானமானது என்றும், உண்மையே என்றும் அவள் எண்ணினாள். அதைப் புசித்து மகிழ்ச்சி அடைந்தாள். அது புசிப்பதற்கு மிகவும் சுவை உள்ளதாகக் காணப்பட, அந்தக் கனியின் ஆச்சரியமான பலன்கள் அவளுக்குள் கிரியை செய்வதை அவள் உணர்வதாகக் கற்பனை செய்துகொண்டாள். (7)

## ஏவாள் ஒரு சோதனைக்காரியாகிறாள்!

அதன்பின் அவள் தனக்கென்று அந்தக் கனியைப் பறித்துப் புசித்தாள். விலக்கப்பட்டிருந்த அந்தக் கனியின் உயர்த்தும் செல்வாக்கின் பலனால் அந்தக் கனி தன்னை எழுப்புவதுபோன்ற ஒரு உணர்வு ஏற்படுவதாக அவள் கற்பனைசெய்தாள். விலக்கப்பட்ட கனியைத் தன் கை நிறைய வைத்துக்கொண்டவளாக அவள் தனது கணவனைத் தேடினபோது, அவள் மாறுபட்ட இயற்கைக்கு விரோதமான ஒரு கிளர்ச்சியில் இருந்தாள். அந்த சர்ப்பத்தின் ஞானமிக்க வார்த்தைகளை அவள் அவனுக்கு விவரித்து, உடனே அவனை அந்த நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தினிடம் நடத்திச்செல்ல விரும்பினாள். அவள் அந்தக் கனியைப் புசித்ததையும்,

மரண உணர்வுகள் எதனையும் உணர்வதற்குப்பதிலாக, கிளர்ச்சியைத் தருகின்ற —மகிழ்ச்சியைத் தருகின்ற ஒரு செல்வாக்கை உணர்வதாகவும் அவனிடம் கூறினாள். ஏவாள் கீழ்ப்படியாதவளானவுடனே தனது கணவனின் விழுகைக்கும் ஒரு வல்லமைமிக்க கருவியாக மாறினாள். (8)

ஆதாமின் முகத்தில் சோகம் படர்வதை நான் கண்டேன். அவன் பயந்தவனைப்போலவும் ஆச்சரியமடைந்தவனைப்போலவும் காணப்பட்டான். அவனுடைய மனதிற்குள் ஒரு போராட்டம் நடைபெறுவதுபோல் காணப்பட்டது. எந்த ஒரு எதிரியைப்பற்றி அவர்கள் எச்சரிக்கப்பட்டிருந்தனரோ, அந்த எதிரி இவன்தான் என்று அவன் ஏவாளிடம் கூறினான். அப்படி இருக்குமானால் அவள் இறந்தாக வேண்டும். ஆனால் தீயபலன் எதையும் தான் உணரவில்லை என்று உறுதியாகக்கூறி, அதைவிட மகிழ்ச்சிமிக்க ஒரு உணர்வினை உணருவதாகவும்கூறி, அந்தக் கனியைப் புசிக்கும்படி அவனைக் கெஞ்சினாள். (9)

தங்களுடைய நேர்மை, அன்பு ஆகியவைகளுக்காக அவர்கள்மீது வைக்கப்பட்டிருந்த சோதனையான தடையைத் தனது தோழி மீறிவிட்டாள் என்பதை ஆதாம் நன்கு புரிந்துகொண்டான். அவள் சாகவே சாவதில்லை என்று சர்ப்பம் கூறினதை ஏவாள் எடுத்துக்கூறினாள். அதின் வார்த்தைகள் உண்மையானதாக இருக்கக்கூடும். ஏனெனில் தேவனின் அதிருப்தியை அவள் உணரவில்லை. அதற்குப்பதிலாக, அந்தத் தூதர்கள் உணர்ந்ததுபோல ஒரு இனிமையான அனுபவத்தை உணர்வதாகக் கூறினாள். (10)

அவனது பக்கத்திலிருந்து ஏவாள் விலகிச்சென்றுவிட்டதற்காக ஆதாம் வருந்தினான். ஆனாலும் அந்தக் காரியம் நடந்துவிட்டது! எந்த ஏவாளுடைய உறவை அவன் மிகவும் நேசித்தானோ, அவளை விட்டு அவன் பிரிந்தாக வேண்டும். இதனை அவனால் எப்படி சகித்துக்கொள்ளமுடியும்?—ஏவாளின்மீதான அவனது அன்பு பலமிக்கதாக இருந்தது. படுமோசமான நம்பிக்கையிழப்பினால் அவளுக்கு ஏற்படும் முடிவில் தானும் பங்குபெற அவன் தீர்மானம் செய்தான். ஏவாள் தன்னில் ஒரு பகுதி என்று அவன் காரணம் கண்டான். அவள் இறக்கவேண்டியது வந்தால், அவனும் அவளுடன் இறக்கவேண்டும். ஏனெனில் அவளைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இரக்கமும் அனுதாபமுமிக்க அவனது சிருஷ்டிகரின்மீது விசுவாசம் வைக்க அவன் தவறிவிட்டான். தன்னைப் பூமியின் தூளிலிருந்து எடுத்து, ஒரு அழகிய மனிதனாக உருவாக்கியவரால், அவளை அவனது துணைவியாக இருக்கும்படி சிருஷ்டித்தவரால் அவளுடைய இடத்தை நிரப்பமுடியும் என்று அவன் நினைக்கவில்லை. ஞானமிக்க இந்தச்

சர்ப்பத்தின் வார்த்தைகள் உண்மையானவையாக இருக்கக்கூடாதா? இந்தக் கீழ்ப்படியாமையின் செயலுக்குமுன்னதாக ஏவாள் எவ்விதமான வெளிப்படையான அழகுள்ளவளாக குற்றமற்றவளாக இருந்திருந்தாளோ, அதேவிதமாக அவன்முன் நின்றாள். அவள் தனது கீழ்ப்படியாமைக்குமுன் அவனிடம் காட்டியிருந்த அன்பைவிட இப்பொழுது புசித்த அந்தக் கனியின் பலனாக அவனிடம் அதிகமான அன்பை வெளிக்காட்டினாள். மரணத்தின் அடையாளத்தை அவன் அவளிடம் காணவில்லை. அந்தக் கனியின் மகிழ்ச்சிதரும் வல்லமையைப்பற்றி அவள் அவனிடம் கூறியிருந்தாள். அவள்மீது கொண்டிருந்த உறுதியான அன்பின் காரணமாக, பலன்களை எதிர்கொள்ள அவன் முடிவுசெய்தான். அந்தக் கனியை வேகமாக எடுத்து சாப்பிட்டான். ஏவாளைப்போலவே அவனும் அதன் தீய பலன்களை உடனடியாக உணராதிருந்தான். (11)

நன்மைக்கும் தீமைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை முடிவுசெய்யக்கூடிய தகுதியை உடையவளாக ஏவாள் ஆகிவிட்டதாக அவள் எண்ணிக்கொண்டாள். அறிவின் மேலான ஒரு நிலைக்குள் பிரவேசிக்கலாமென்ற முகஸ்துதிமிக்க நம்பிக்கையால், தனது நன்மையில் அதிகமான வாஞ்சையுள்ள விசேஷமான நண்பன் என்று தன்னை அவள் எண்ணும்படி சர்ப்பம் அவளை நடத்தினது. அவள் தனது கணவனைத் தேடியிருந்தால், சர்ப்பத்தின் வார்த்தைகளை அவர்கள் தங்களைப் படைத்தவரிடம் விவரித்திருந்தால், அவனுடைய சாமாத்தியமான சோதனை யிலிருந்து அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டிருப்பார்கள். நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை சோதித்திறியும்படி கர்த்தர் அனுமதித் திருக்கமாட்டார். ஏனெனில் அப்படிப்பட்ட நிலையில் தன்னை முகமூடியிட்டு மறைத்துக்கொண்டிருக்கும் சாத்தானிடம் அவர்கள் விட்டுவிடப்படாமல் இருந்திருப்பார்கள். அவர்கள் அந்தக் கனியைத் தொடாமல் இருந்திருந்தால் பாதுகாப்பாக இருப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். (12)

## மனிதனின் தேர்ந்துகொள்ளும் உரிமை!

நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தைப்பற்றிக் கர்த்தர் நமது முதல்பெற்றோர்களுக்குப் போதனை செய்திருந்தார். சாத்தானின் விழுகை சம்பந்தப்பட்ட காரியங்கள் அனைத்தும் அவர்களுக்கு முற்றிலுமாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவனது கருத்துக்களைக் கவனிப்பதில் உண்டாகக்கூடிய ஆபத்துக்கள்பற்றியும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும் வல்லமையை அவர்களிடமிருந்து நீக்கியிருக்கவில்லை. அவருடைய வார்த்தைகளின்மீது

நம்பிக்கை வைத்து, அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து உயிர்வாழ்தல் அல்லது சோதனைக்காரனை நம்பி கீழ்ப்படியாது இருந்து அழிந்துவிடுதல் ஆகிய இரண்டில் எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக்கொள்ளக்கூடிய சுதந்திரமான மனநிலை உடையவர்களாக அவர்களை விட்டிருந்தார். அவர்கள் இருவரும் புசித்தனர். அதன் பலனாக பாவத்தைப்பற்றிய அறிவு என்னும் பெரும் ஞானத்தையும் குற்ற உணர்வையும் அடைந்துகொண்டனர். அவர்களைச் சூழ்ந்திருந்த ஒளியின் ஆடை விரைவில் அவர்களைவிட்டு நீங்கிப்போயிற்று. ஒரு குற்ற உணர்வின் கீழும், தெய்வீக உடையின் இழப்பினாலும் ஒரு நடுக்கம் அவர்களைப் பற்றிக்கொண்டது. தங்களுடைய நிர்வாணமான உருவங்களை அவர்கள் மூடிமறைக்க முயன்றனர். (13)

நமது முதல்பெற்றோர்கள் ஒரு சர்ப்பம்தான் தங்களிடம் பேசினது என்பதாக அந்த வார்த்தைகளை எடுத்துக்கொண்டனர். அப்படியிருந்தபோதிலும் அவன் அவர்களுக்கு எதையும் அவனது அன்பின் அடையாளமாகக் கொடுக்கவில்லை. அவர்களது நன்மைக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் அவன் எதையும் செய்யவில்லை. தேவன் நன்மையாக இருக்கக்கூடிய அனைத்தையும், பார்வைக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய அனைத்தையும் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். கண்கள் கண்ட இடமெல்லாம் செழுமையும் அழகுமாக இருந்தது. அப்படியிருந்தும் அவர்களை தேவனைப்போல ஞானமுள்ளவர்களாக்கக்கூடிய ஏதோ ஒன்றினை அவர் தராமல் வைத்துக்கொண்டார் என்று நினைக்கும்படி ஏவாள் சர்ப்பத்தால் வஞ்சிக்கப்பட்டாள். தேவனை விசுவாசித்து, அவர்மீது நம்பிக்கை வைப்பதற்குப்பதிலாக, கீழ்த்தரமாக தேவனின் நன்மையின்மீது நம்பிக்கை இல்லாதவளாகி, சாத்தானின் வார்த்தைகளில் ஆனந்தம்கொண்டாள். (14)

மீறுதலுக்குப்பின், தான் மேலான ஒரு உயர்ந்த வாழ்வின் நிலைமைக்கு உயர்ந்துகொண்டிருப்பதாக ஆதாம் முதலில் கற்பனைசெய்துகொண்டான். ஆனால் விரைவில் அவனது மீறுதலின் எண்ணம் அவனை அச்சுறுத்தியது. இனிமையாக இருந்த காற்று, சமச்சீராக இருந்த பருவநிலை, இப்பொழுது அவர்களுக்குக் குளிரை உண்டுபண்ணுவதுபோல் காணப்பட்டது. குற்றமிக்க அந்த தம்பதியர் பாவத்தின் ஓர் உணர்வினை அடைந்தனர். எதிர்காலம்பற்றிய, தேவைகளைப்பற்றிய பயத்தின் உணர்வினை அவர்கள் அடைந்தனர். இனிமையான அன்பு, சமாதானம், மகிழ்ச்சி, திருப்திதரும் பேரின்பம் ஆகியவைகள் அவர்களைவிட்டு நீக்கப்பட்டுப்போனதுபோல் காணப்பட்டு, அந்த இடத்தில் அவர்கள் இதுவரை ஒருபோதும் அனுபவித்திராத ஏதோ ஒரு தேவை (இல்லாமை) வந்தது. அதற்குப்பின் அவர்கள் முதல்தடவையாக அவர்களுடைய கவனத்தை தங்கள் வெளிப்புறத்தின்மீது

திருப்பினர். பரலோகத் தூதர்களைப்போல ஒளியால் மூடப்பட்டிருந்தனர்; அவர்களை மூடியிருந்த ஒளி அவர்களைவிட்டுப் பிரிந்துசென்றது. அந்த ஒளியின்மையின் உணர்விலிருந்து விடுபடவும், நிர்வாணமாயிருக்கும் உணர்விலிருந்து விடுபடவும், தங்களை மூடிக்கொள்ள ஒரு பொருளைத்தேடி அவர்கள் கவனம் சென்றது. நிர்வாணிகளாக இருந்துகொண்டு எவ்விதமாக தேவனுடைய பார்வையையும் தேவதூதர்களையும் சந்திக்கமுடியும்? (15)

அவர்களுடைய குற்றம் இப்பொழுது உண்மையான வெளிச்சத்தில் அவர்களுக்குமுன் நிற்கிறது. தேவனுடைய முக்கியமான கற்பனையை மீறின ஒரு தெளிவான நிலையை உண்டுபண்ணுகிறது. ஏவாள் தன்னைவிட்டுப் பிரிந்துசென்று சர்ப்பத்தால் வஞ்சிக்கப்பட்ட அவனது தவறைப்பற்றி ஆதாம் அவளைக் குற்றப்படுத்துகிறான். அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதற்காக ஒவ்வொன்றையும் கொடுத்திருக்கும் தேவன், அவர்கள் பேரிலுள்ள தமது பெரிய அன்பின் காரணமாக, அவர்களது கீழ்ப்படியாமையை மன்னித்து ஆகவேண்டும் என்றும் அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய தண்டனை அவ்வளவு பயங்கரமானதாக இருக்கமுடியாதென்றும் அவர்கள் தங்களுக்குள் தீர்மானித்து, தங்களை ஆறுதல்படுத்திக்கொண்டனர். (16)

சாத்தான் தனது வெற்றியினால் வெற்றிச் சிரிப்புடன் சிரித்தான். தேவன்மீது அவநம்பிக்கை கொள்ளவும், அவரது ஞானத்தைப்பற்றிக் கேள்விகேட்கவும், தனது ஞானமான திட்டங்கள் அனைத்தையும் உள்ளே நுழைக்க வகைதேடவும் அவன் இப்பொழுது அந்த ஸ்திரீயை சோதித்திருந்தான். அவள்மூலமாக ஆதாமையும் கவிழ்த்து விழச்செய்தான். ஆதாம் ஏவாளின்மீது வைத்த அன்பின் நிமித்தம் தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படியாமல் அவளுடன் சேர்ந்து விழுந்தான். (17)

மனிதனுடைய விழுகையின் செய்தி பரலோகம் எங்கும் பரவியது. வீணை வாசிப்புகள் ஒவ்வொன்றும் நின்றுவிட்டன. தூதர்கள் தங்களுடைய வருத்தத்தின் காரணமாக தங்களுடைய கிரீடங்களைக் கீழே வைத்தனர். பரலோகம் முழுவதும் திகைப்பில் இருந்தது. தேவன் மனிதர்களுக்கென்று செய்திருந்த செழுமையான ஆசீர்வாதங்களுக்கு எதிராக, மனிதனின் கீழ்த்தரமான—நன்றிகெட்ட தன்மையை எண்ணி, தூதர்கள் வருந்தினார்கள். பாவஞ்செய்த அந்த இருவருக்கும் என்ன செய்யவேண்டும் என்று தீர்மானிப்பதற்காக ஒரு ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது. அவர்கள் தங்களுடைய கைகளை நீட்டி, ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்துப் புசித்து, பாவமான ஒரு நித்திய ஜீவனை உடையவர்களாக இருப்பார்களே என்று தூதர்கள் பயந்தார்கள். (18)

கர்த்தர் ஆதாமையும் ஏவாளையும் சந்தித்து, அவர்களது கீழ்ப்படியாமையின் பலனை அவர்கள் அறியும்படிச்செய்திட வந்தார். குற்றமில்லாதவர்களாகவும் பரிசுத்தமானவர்களாகவும் இருந்தபோது, மகத்துவமான தேவனுடைய அன்றாட வருகையின் சத்தத்தைக் கேட்டு அவரைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைந்திருந்த அவர்கள் இப்பொழுது தங்களை மறைத்துக்கொள்ள வகைதேடினர். (19)

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக்கூப்பிட்டு: "நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான். அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ" என்றார். அவருக்கு விளக்கம் அவசியம் என்பதற்காக இந்தக் கேள்வியைக் கேட்காமல், குற்றமற்ற இருவருக்கும் மன உணர்த்துதலை உண்டுபண்ணுவதற்காகவே அப்படிக் கேட்டார். வெட்கப்படுபவனாகவும் பயப்படுகிறவனாகவும் நீ எப்படி ஆனாய்? ஆதாம் தனது துணிகரமாக கீழ்ப்படியாமைக்காக வருந்தித் தனது பாவத்தை ஒப்புக்கொள்ளாமல், தேவன்மீதே அதனைத் திருப்பிவிடுவதற்காக– "என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்." (20)

## சாபம்!

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்" என்றார். நிலத்திலுள்ள மிருகங்களில் எல்லாம் சர்ப்பமானது உயர்த்தப்பட்டிருந்ததுபோல, அவைகள் அனைத்தையும் விட அது தாழ்த்தப்படவேண்டும். சாத்தான் செயல்படும்படியான ஒரு மையக்கருவியாக சர்ப்பம் இருந்ததினால் அது மனிதர்களால் வெறுக்கப் பட்டாக வேண்டும். பின்பு அவன் ஆதாமை நோக்கி: "நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்;

வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" என்றார். (21)

நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்ததின் காரணமாக கர்த்தர் பூமியை சபித்து, ஆதாமிடம் நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப்புசிப்பாய் என்றார். அவர் நன்மையைப் பங்கிட்டுக்கொடுத்து, தீமையை நிறுத்திவைத்திருந்தார். இப்பொழுது அவர்கள் தீமையைப் புசிப்பார்கள் என்று அறிவிக்கிறார். தங்களுடைய வாழ்நாட்கள் முழுவதிலும் தீமையுடன் அறிமுகமானவர்களாக இருந்தாக வேண்டும். (22)

அந்தக் காலத்திற்குப்பின் மனித இனம் சாத்தானின் சோதனைகளினால் துன்பப்படக்கூடியவையாக இருந்தாகவேண்டும். அவன் இதுவரை செய்திருந்த சந்தோஷமும் மகிழ்ச்சியுமிக்க வேலைக்குப்பதிலாக, தொடர்ச்சியான வேலையும் கவலையுமிக்க ஒரு வாழ்க்கை ஆதாமுக்கு ஏற்படுத்தப்பட்டது. ஏமாற்றம், துயரம், வேதனை, முடிவில் அழிவு ஆகியவைகளுக்கு அவர்கள் கீழ்ப்பட்டவர்களாகவேண்டும். அவர்கள் பூமியின் மண்ணினால் உருவாக்கப்பட்டிருந்தனர். அதே மண்ணுக்கு அவர்கள் திரும்பியாகவேண்டும். (23)

அவர்கள் தங்களுடைய ஏதேன் வீட்டை இழக்கவேண்டும் என்பது அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் சாத்தானின் வஞ்சகத்திற்கு இணங்கி, தேவன் பொய்சொல்லக்கூடியவர் என்னும் சாத்தானின் வார்த்தையை நம்பினார்கள். அவர்களுடைய மீறுதலின் காரணமாக அவர்களை சபிப்பதற்கு சாத்தானுக்கு இலகுவான வழியைத் திறந்திருந்தனர். அதனால் ஏதேன் தோட்டத்தில் இருப்பது அவர்களுக்குப் பாதுகாப்பானதல்ல. ஏனெனில் அவர்கள் பாவம்செய்த நிலையில் ஜீவ விருட்சத்திற்கான மார்க்கம் கிடைத்து, அதினால் அவர்கள் பாவமிக்க ஒரு நித்திய காலமான வாழ்க்கையை நடத்த நேரிடலாம். அனைத்தையும் அவர்கள் இழந்துவிட்டதை ஒப்புக்கொண்டபோதிலும் அங்கேயே தங்குவதற்கு அனுமதிக்கவேண்டும் என்று வேண்டினார்கள். எதிர்காலத்தில் அவர்கள் சற்றும் தவறாமல் தேவனுக்குக் கீழ்ப்படிவோம் என்று வாக்குக்கொடுத்தனர். களங்கமில்லாத நிலையிலிருந்த அவர்கள் குற்றத்திற்குள் விழுந்து, அவர்களது தோல்வியில், பலத்திற்குப்பதிலாக பலவீனத்தைத்தான் அடைந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டனர். அவர்கள் பரிசுத்தமும் மகிழ்ச்சியுமிக்க ஒரு நிலையில் இருந்தபோது தங்களது நேர்மையைக் காத்துக்கொள்ளவில்லை. குற்ற உணர்வை உடைய நிலையில் சத்தியமும் பக்திவிசுவாசமுமிக்கவர்களாக

இருப்பதற்கு அவர்கள் அதிகமான பலவீனமுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் மிகத் தெளிவான மனத்துயரத்தினாலும் பாவத்திற்கான மனவருந்துதலினாலும் நிறைந்திருந்தனர். பாவத்திற்கான தண்டனை மரணம் என்பதை இப்பொழுது அவர்கள் உணர்ந்துகொண்டனர். (24)

ஜீவவிருட்சத்திற்கான பாதையைப் பாதுகாப்பதற்காக உடனடியாக தூதர்கள் நியமிக்கப்பட்டனர். ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்களாகி, அவரது கோபத்தைப் பெற்றபின்பு, பாவமிக்க ஒரு நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கும்படி அதன்பின்–ஜீவவிருட்சத்தில் அவர்கள் பங்குபெறவேண்டும் என்பது சாத்தானது திட்டமிடப்பட்ட செயலாக இருந்தது. ஆகையால் ஜீவவிருட்சத்திற்குச் செல்லும் பாதையைத் தடைசெய்தவற்காக பரிசுத்த தூதர்கள் உடனடியாக அனுப்பப்பட்டனர். அந்த விருட்சத்தைச்சுற்றிலும் தூதர்கள் பிரசகாசிக்கிற சுடரொளிப்பட்டயம்போல் காட்சிதரும் ஒளிக்கதிர்களை வீசினார்கள். (25) ★

# 5

# இரட்சிப்பின் திட்டம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 42–51)**

**திருவசன ஆதாரம்: யோவான் 3:16**

மனிதன் இழக்கப்பட்டுப்போனான். துன்பம், நோய், மரணம் ஆகியவைகளால் உலகம் நிரப்பப்படும்படி மனிதர்கள் சாவுக்கேதுவானவர் களாகிவிட்டதையும் எதிராளியானவனிடமிருந்து தப்பிக்கும் வழிகள் இல்லை என்றும் காணப்பட்டபோது, துயரம் பரலோகத்தை நிரப்பியது. ஆதாமின் குடும்பம் முழுவதும் மரித்தாகவேண்டும்! (1)

நான் இயேசுவின் அழகிய முகத்தைக் கண்டேன். அவரது அழகிய முகத்தில் வருத்தமும் அனுதாபமும் வெளிக்காட்டப்படுவதையும் கண்டேன். விரைவில் பிதாவைச் சூழ்ந்திருந்த ஒளிக்குள் அவர் சமீபிப்பதை நான் கண்டேன். அவர் பிதாவுடன் நெருக்கமான உரையாடலில் ஈடுபட்டிருக்கிறார் என்று என்னுடன் வந்த தூதன் கூறினான். இயேசு பிதாவுடன் பேசிக்கொண்டிருந்தபோது, தூதர்களின் கவலை அதிகரிப்பதுபோல் காணப்பட்டது. பிதாவைச் சூழ்ந்திருந்த மகிமைமிக்க ஒளிக்குள் மூன்றுமுறை இயேசு மூடப்பட்டார். மூன்றாவது முறையாக அவர் பிதாவைவிட்டு வெளியே வந்தபோது, அவரைப் பார்க்க முடிந்தது. சகலவிதமான குழப்பங்களிலிருந்தும் சந்தேகங்களிலிருந்தும் விடுதலைபெற்றதாக அவரது முகம் அமைதியாக இருந்தது. வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாதவிதத்தில் அவரது முகம் அனுதாபத்தினாலும் அழகினாலும் பிரகாசித்துக்கொண்டிருந்தது. (2)

அதன்பின் இழந்துபோன மனிதனைத் தப்பிக்கச்செய்வதற்கு ஒரு வழி வகுக்கப்பட்டாகிவிட்டது என்று தூதர்களின் சேனைகளிடம் அவர் அறிவித்தார். மனிதன் மன்னிப்பைக் கண்டுகொள்ளும்படி மனிதனுடைய மரண தண்டனையை அவர்தாமே அவனுக்குப்பதிலாக ஏற்றுக்கொள்ளுவதாகவும், அவர் தமது பிதாவிடம் பரிந்துபேசிக்கொண்டிருந்ததாகவும் கூறினார். அவரது இரத்தத்தின் புண்ணியங்களின்மூலமாகவும், தேவப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதின்மூலமாகவும் அவர்கள் தேவனுடைய அனுகூலத்தைப்பெற்று, அழகிய தோட்டத்திற்குள் திரும்பவும் கொண்டுவரப்பட்டு, ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கலாம் என்றார். (3)

முதலில் தூதர்களால் மகிழ்ச்சியடைய முடியவில்லை. ஏனெனில் அவர்களது சேனாதிபதி அவர்களிடமிருந்து எதையும் மறைக்காமல் இரட்சிப்பின் திட்டத்தை அறிவித்தார். பிதாவின் கோபத்திற்கும் குற்றமிக்க மனிதனுக்கும் இடையில் அவர் நிற்பார் என்றும், அக்கிரமங்களையும் நிந்தையையும் அவர் சுமந்துகொள்ளுவார் என்றும், ஆனால் ஒரு சிலர் மட்டுமே அவரைத் தேவகுமாரனாக ஏற்றுக்கொள்ளுவார்கள் என்றும் கூறினார். கிட்டத்தட்ட அனைவரும் அவரை வெறுத்து நிராகரிப்பார்கள்; அவர் தமது பரலோக மகிமை அனைத்தையும் விட்டுவிடுவார்; பூமியில் ஒரு மனிதனாகத் தோன்றுவார். ஒரு மனிதனாகத் தம்மைத்தாமே தாழ்த்துவார். மனிதன் எப்படிப்பட்ட சோதனைகளுக்கு உட்படுவானோ அதுபோல அவரும் அவைகளுடன் அறிமுகமாவார். சோதிக்கப்படுகிறவர்களைக் காப்பது எப்படி என்பதற்காக இந்த அனுபவங்களையெல்லாம் அவர் அறிந்துகொள்ளுவார். இறுதியல் ஒரு ஆசாரியராக எவைகளையெல்லாம் நிறைவேற்றவேண்டுமோ, அவைகளை நிறைவேற்றுவார். துன்பப்படுத்தும்படி சாத்தானால் ஏவிவிடப்படும் துன்மார்க்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, கிட்டத்தட்ட சகலவிதமான கொடுமைகளையும் அனுபவிப்பார்; கொடுமையான மரணத்தை அனுபவிப்பார்; பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையில் ஒரு குற்றவாளியான பாவியைப்போல தொங்குவார்; தூதர்களால்கூட பார்க்கமுடியாத பயங்கரமான வேதனைகளை அனுபவிப்பார்; உடலை வருத்தும் வேதனைமட்டுமல்லாமல் உடல் வேதனைகளுடன் எந்தவிதத்திலும் ஒப்பிடமுடியாத மனவேதனையையும் சகிப்பார். உலக பாவங்களின் பாரமனைத்தும் அவர்மேல் இருக்கும். அவர் மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, வழிதப்பிப்போன பாவியான மனிதனுக்காகப் பரிந்துபேசுவதற்காக பிதாவின் சமுகத்தில் நிற்பார் என்று கூறினார். (4)

## இரட்சிப்பிற்கான ஒரே மார்க்கம்!

தூதர்கள் அவர்முன் சாஷ்டாங்கமாக விழுந்தனர். அவர்கள் தங்களுடைய ஜீவனைத்தர முன்வந்தனர். இயேசு தமது மரணத்தினால் அநேகரைக் காப்பார் என்றும், ஒரு தேவதூதனின் ஜீவனால் அந்தக் கடனைத் தீர்க்கமுடியாது என்றும் கூறினார். மனிதனுக்கான பலியாக, அவரது ஜீவன் மட்டும்தான் பிதாவினால் அங்கிகரிக்கப்படும். பலசமயங்களில் அவருடனிருந்து, அவரைப் பலப்படுத்தும் பணி அவர்களுக்கு உண்டு; விழுந்துபோன மனிதனின் தன்மையை அவர் எடுத்துக்கொள்ளும்போது, அவருடைய பலம் அவர்களுடைய பலத்துக்குச் சமமாகக்கூட இருக்காது. அவர்கள் அவருடைய அவமானத்திற்கும் பாடுகளுக்கும் சாட்சிகளாக

இருப்பார்கள்; அவரது பாடுகளுக்கும் மனிதர்களின் வெறுப்பிற்கும் அவர் உள்ளாகும் நேரத்தில், அவைகளுக்கு அவர்கள் சாட்சிகளாக இருக்கும்போது, ஆழ்ந்த உணர்வுகளினால் கலங்கி, அவர்மீதுள்ள அன்பின்மூலமாக, அவரைக்கொலைசெய்ய முயலுபவர்களிடமிருந்து அவர்கள் அவரைக் காத்து விடுதலைசெய்ய விரும்புவார்கள். ஆனால் அவர்கள் காணக்கூடிய எதிலும் எதையும் தடுப்பதற்காக அவர்கள் குறுக்கிடக்கூடாது. அவரது உயிர்த்தெழுதல் சமயத்தில் அவர்கள் செய்யவேண்டிய ஒரு பணி உண்டு. அதை அவர்கள் செய்யவேண்டும். இவ்விதமாக இரட்சிப்பின் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது; அவரது பிதாவானவர் இந்தத் திட்டத்தை ஒப்புக்கொண்டுவிட்டார் என்பதாகக் கூறினார். (5)

பரிசுத்தமான துயரத்துடன் இயேசு தூதர்களை ஆறுதல்படுத்தி, மகிழ்ச்சியடையச்செய்தார். எதிர்காலத்தில் எவர்களை அவர் மீட்க இருக்கின்றாரோ, அவர்கள் அவருடன் இருப்பார்கள். தமது மரணத்தின் மூலமாக அநேகரை அவர் மீட்டு, மரணத்திற்கு அதிகாரியானவனை அவர் அழித்துவிடுவார். வானத்தின் கீழெங்குமுள்ள சகல இராஜ்யங்களையும் அவைகளை ஆளுகைசெய்கின்ற வல்லமை அனைத்தையும் அவருடைய பிதா அவருக்குக் கொடுப்பார். அவைகளை அவர் சதாகாலத்திற்கும் ஆண்டுகொள்வார். பரலோகத்தில் உபத்திரவத்தை உண்டுபண்ணவோ அல்லது சுத்திகரிக்கப்பட்ட பூமியை உபத்திரவப்படுத்தவோ முடியாத விதத்தில் சாத்தானும் பாவிகளும் என்றென்றைக்குமாக அழிக்கப்படுவார்கள். (6)

தமது மரணத்தின் மூலமாக விழுந்துபோன மனிதன் மறுபடியும் உயர்த்தப்பட்டு, தேவனிடம் ஆதரவைக் கண்டு, பரலோக ஆனந்தத்தை அனுபவிக்கத்தக்கதாக, இயேசு செய்த ஏற்பாட்டை பிதாவானவர் ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சி அடைந்ததினால் இந்தக் காரியத்தில், பரலோகத்தின் தூதர்களனைவரையும் ஒருவருடன் ஒருவர் ஒப்புரவானவர்களாக இருக்கவேண்டும் என்று அவர் கட்டளையிட்டார். (7)

அதன்பின் வார்த்தைகளால் உணர்த்தமுடியாத மகிழ்ச்சி பரலோகத்தில் உண்டானது. தொடர்ந்து பரலோக சேனைகள் துதியையும் புகழ்ச்சியையும் செலுத்துகின்ற ஒரு பாடலைப்பாடின. தேவன் தமது அருமையான குமாரனை அவரது ஸ்தானத்தைவிட்டு கீழே இறங்கச்செய்து, கலகம்செய்யும் ஒரு இனத்திற்காக மரிக்கக் கொடுத்த கிருபைக்காக, ஒரு பாடலைப் பாடினார்கள். மற்றவர்களுக்கு ஜீவனைக் கொடுப்பதற்காக தமது பிதாவின் மடியைவிட்டுக் கீழிறங்கி, பாடுகள் நிறைந்த வாழ்க்கையையும் வேதனையையும் ஏற்று, கேவலமான மரணத்தை அனுபவிக்க இணங்கின

அவரது தற்தியாகத்திற்காகவும் சுயநலமற்ற தன்மைக்காகவும் தங்கள் சுரமண்டலங்களை மீட்டி இதுவரையிலும் பாடியிராத மேன்மையான குரலில் அவரைப்போற்றித் துதித்துப் பாடினார்கள். (8)

பிதாவானவர் ஒருபோராட்டமும் (மனப்போரும்) இல்லாமல் தமது அருமையான குமாரனை விட்டுக்கொடுத்தார் என்று நினைக்கிறீர்களா? அல்ல, அப்படியல்ல! குற்றமிக்க மனிதனை அழியும்படி விட்டுவிடுவதா அல்லது அவனுக்காக மரிப்பதற்காகத் தமது அருமையான குமாரனைக் கொடுப்பதா? என்னும் ஒரு போராட்டம் பரலோகத்தின் தேவனுக்குங்கூட உண்டாயிருந்தது. மனிதனின் இரட்சிப்பில் தூதர்கள் ஆர்வமிக்கவர்களாக இருந்தனர். அவர்களுக்குள் தனது மகிமையை விட்டுக்கொடுத்துவிட்டு அழிந்துகொண்டிருக்கும் மனிதனின் உயிரைக் காப்பதற்காகத் தங்கள் உயிரை கொடுக்க விரும்பினவர்கள் இருந்தனர். ஆனால் அதினால் எந்தவிதமான நன்மையும் உண்டாகாது. ஒரு தேவதூதனின் உயிரினால் மனிதனின் உயிரை மீட்டுக்கொள்ள முடியாத அளவிற்கு அவனது மீறுதல் அவ்வளவு பெரியதாக இருந்தது. தேவகுமாரனின் மரணம், பரிந்துபேசுதல் ஆகிய இரண்டையும் தவிர, வேறெதினாலும் அந்த கடனைச் செலுத்தி இழக்கப்பட்டுப்போன மனிதனை அவனது துயரத்திலிருந்தும் துன்பத்திலிருந்தும் நம்பிக்கையின்மையிலிருந்தும் காக்கமுடியாது என்று என்னுடன் வந்த தேவதூதன் கூறினான். (9)

தேவகுமாரனது பாடுகளில் அவரை திடப்படுத்தவும் ஆறுதல் படுத்தவும் பலப்படுத்தும் தைலத்துடன் மகிமையிலிருந்து கீழே இறங்கவும் மேலே ஏறவும்வேண்டும் என்னும் தேவதூதர்களுக்கான பணி அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. கிருபைக்குக் கீழ்ப்பட்டவர்களைச் சுற்றிலும் இருளின் தூதர்களும் சாத்தானும் சேர்ந்து தொடர்ச்சியாக ஊற்றக்கூடிய இருளை நீக்குவதும் அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டியதும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலையாக இருந்தது. இழந்துபோனவனாக அழிந்துகொண்டிருக்கும் மனிதனைக் காப்பாற்றுவதற்காகத் தம்முடைய பிரமாணத்தை மாற்றுவதோ அல்லது நீக்குவதோ தேவனால் இயலாத காரியமாக இருந்தது என்பதை நான் கண்டேன். எனவேதான் மனிதனின் மீறுதலுக்காகத் தமது குமாரனை மரிக்கும்படி அவர் அனுமதித்தார். (10)

மனிதனை விழும்படிச்செய்ததினால் தேவகுமாரனையும் அவரது மேலான அந்தஸ்திலிருந்து கீழே இழுக்க அவனால் முடிந்ததற்காக சாத்தான் தனது தூதர்களுடன் சேர்ந்து மீண்டும் மகிழ்ச்சி அடைந்தான். மனிதனின் விழுந்துபோன தன்மையை இயேசு எடுத்துக்கொள்ளும்போது,

தான் அவர்மீது வெற்றிகொண்டு, இரட்சிப்பின் திட்டம் நிறைவேறாதபடி அதற்கு இடையூறு செய்வேன் என்றும் அவன் தனது தீய தூதர்களிடம் கூறினான். (11)

ஒரு காலத்தில் மிகுந்த சந்தோஷமுடைய மேலான நிலைமையில் அவன் வைக்கப்பட்டிருந்தான் என்பது எனக்குக் காட்டப்பட்டது. இப்பொழுது இருக்கும் நிலையிலும் அரசனின் தோற்றத்தை உடையவானகவே அவன் இருக்கிறான். அவனது உருவம் இப்போதுங்கூட மேன்மைமிக்கதாகவே இருக்கிறது. ஏனெனில் அவன் விழுந்துபோன ஒரு தீய தூதனாக இருக்கிறான். ஆனால் அவனது முகத்தோற்றமோ கவலை நிறைந்ததாகவும், தொய்ந்துபோனதாகவும், மகிழ்ச்சியற்றதாகவும், விரோதம், வெறுப்பு, தீய செயல், ஏமாற்றுதல் இன்னும் தீயவைகளனைத்தையும் உடையதாகவும் உள்ளது. ஒரு காலத்தில் மிக மேன்மைமிக்கதாக இருந்த அந்தப் புருவத்தைக் குறிப்பாக நான் பார்த்தேன். அவனது நெற்றி அவனது கண்களில் தொடங்கி பின்னாகச் சரிந்திருந்தது. அவன் தீமை செய்வதற்கென்றே இவ்வளவு காலமாகத் தீர்மானமுடையவனாக இருந்தபடியால், நல்ல தன்மைகள் ஒவ்வொன்றும் கீழ்த்தரமானவைகளாக மாறியிருந்தன. தீய சுபாவங்கள் அனைத்தும் முன்னேறியிருந்தன. அவனது கண்கள் தந்திரமானவைகளாக இருந்தன. கபடத்துடன் நுழைந்து பார்க்கும் தன்மை உடையனவாக இருந்தன. அவனது உருவம் பெரிதாக இருந்தது. ஆனால் அவனது கைகளைச் சுற்றிலும் முகத்தைச் சுற்றிலும் சதைகள் தொளதொளவென்று தொங்கிக்கொண்டிருந்தன. நான் அவனைப் பார்த்தபோது, அவன் தனது நாடியை இடது கரத்தினால் தாங்கிக்கொண்டிருந்தான். ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதுபோல் காணப்பட்டான். அவனது முகத்தில் ஒரு புன்சிரிப்பு காணப்பட்டது. அது என்னை நடுங்கச்செய்தது. அது தீயதும் பேயின் குணத்தை உடையதாகவும் இருந்தது. அவன் தமது இரையைக் குறித்து நிச்சயமுள்ளவனாவதற்குச் சற்றுமுன் அவன் முகத்தில் அந்தப் புன்சிரிப்பு காணப்படுகிறது. அந்தச் சிரிப்பானது சகிக்கமுடியாத பயங்கரச் சிரிப்பாக மாறுகிறது! (12)

தேவனுடைய கற்பனையை மீறுகிறவரைக்கும் அழகும் மகிழ்ச்சியுமிக்க ஏதேன் தோட்டத்தில் மகிழ்ச்சியுடனிருந்த ஆதாமும் ஏவாளும் சொல்லிமுடியாத துயரத்துடனும் அவமானத்துடனும் அதனைவிட்டு வெளியேறினர். பருவ நிலையில் மாற்றமுண்டாயிற்று. மீறுதலுக்கு முன்னதாக இருந்ததைப்போல அது இருக்கவில்லை. அவர்கள் விட்டுவிடப்பட்டிருந்த குளிரிலும் வெப்பத்திலுமிருந்து அவர்களைக் காப்பதற்காக தேவன் அவர்களுக்குத் தோலுடைகளை அணிவித்தார். (13)

## தேவனுடைய மாறாத பிரமாணம்!

மனித இனம் முழுவதின்மேலும் தேவனுடைய கோபத்தைக் கொண்டுவந்த ஆதாம் ஏவாள் ஆகியோரின் கீழ்ப்படியாமையினால் உண்டான விழுகையின் காரணமாக பரலோகம் முழுவதும் துக்கம் கொண்டிடாடினது. அவர்கள் தேவனிடமுள்ள நேரடியான தொடர்பிலிருந்து துண்டிக்கப்பட்டவர்களாகி நம்பிக்கையில்லாத, துன்பத்திற்குள் மூழ்கி னார்கள். மனிதனுடைய தேவைகளைச் சந்திப்பதற்காக, தேவனுடைய பிரமாணம் மாற்றமுடியாததாக இருந்தது. ஏனெனில் தேவனின் ஏற்பாட்டில் அதன் வலிமையை அது ஒருபோதும் இழக்கமுடியாததாகவும் அல்லது அதின் உரிமையின் மிகச்சிறிய பகுதியையுங்கூட நீக்கமுடியாததாகவும் இருக்கவேண்டியதாக இருந்தது. (14)

அவர்கள் இருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பரிசுத்தமான மேன்மையை தொடர்ந்து காத்துக்கொள்ளமுடியாமல் போனாலும் தேவப்பிரமாணத்தை மீறினதால் அவர்களால் ஏதேன் வீட்டைக் காத்துக்கொள்ள முடியாமல்போனாலும் அவர்களது காரியம் முற்றிலுமாக நம்பிக்கை இல்லாததாக இல்லை என்பதை அவர்களுக்கு அறிவிப்பதற்கு தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்களுடைய நம்பிக்கையற்ற நிலையைக்கண்ட தேவகுமாரன் இரக்கத்தினால் அசைக்கப்பட்டு, அவர்கள்மீது சுமர இருந்த தண்டனையை அவர்தாமே ஏற்றுக்கொள்ள வலிய வந்து, மனிதன் உயிர்வாழ்வதற்காக அவர்களுக்காக மரிக்க முன்வந்து ஏற்படுத்தின பாவ நிவாரணத்தின்மீதுள்ள விசுவாசத்தினால் அவர்கள் உயிர்வாழும் ஏற்பாட்டைச்செய்தார். மனிதனின் பெரும் பாவத்தின் காரணமாக சாத்தானின் முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் அவர்கள் விட்டுவிடப்படக்கூடாது என்பதற்காக, கிறிஸ்துவின்மூலமாக ஒரு நம்பிக்கையின் கதவு திறக்கப்பட்டது. தேவகுமாரனின் புண்ணியங்களின்மீதுள்ள விசுவாசம், சாத்தானின் உபாயங்களைத் தடுக்குமளவுக்கு மனிதனை மிகவும் உயர்த்தும். தேவகுமாரனின் பாவ நிவாரணத்தின்மேலுள்ள விசுவாசத்தினால், மனம் வருந்துகின்ற ஒரு வாழ்க்கையினால், பிதாவின் பிரமாணத்தின் மீறினதிலிருந்து அவன் இரட்சிக்கப்படுவதற்காகவும், தேவனுடைய கற்பனையின்படி நடப்பதற்காக அவன் செய்யும் முயற்சி அங்கீகரிக்கப்படக்கூடிய நிலைக்கு அவன் உயர்த்தப்படுவதற்காகவும் தவணையின் காலம் அவனுக்கு அனுமதிக்கப்படும். (15)

அவர்கள் தேவனுடைய கற்பனையை மீறினார்கள் என்று அறிவிக்கப்பட்டபோது, அந்த இழப்பைப் பரிகரிப்பதற்காக கிறிஸ்து தமது விலைமதிப்பில்லாத ஜீவனையே தியாகபலியாகச் செலுத்த முன்வந்த

நேரத்தில் பரலோகத்தில் உண்டான துயரத்தை தூதர்கள் அவர்களிடம் கூறினார்கள். (16)

தேவப்பிரமாணம் எந்த அளவிற்கு உயர்ந்ததாகவும் பரிசுத்தமானதாகவும் இருக்கிறதென்பதையும், அவர்களுடைய மீறுதல்களிலிருந்து அவர்களையும் அவர்களது சந்ததியினரையும் காப்பதற்கு இவ்வளவு விலைமதிப்புமிக்க தியாகபலி அவசியமாக இருக்கிறது என்பதையும் ஆதாமும் ஏவாளும் உணர்ந்தபோது, அவர்கள் நாங்களே இறந்துபோகிறோம். இவ்வளவு பெரிய தியாகபலியை தேவனுடைய நேசகுமாரன் செலுத்துவதைவிட, எங்களையும் எங்கள் சந்ததியினரையும் எங்களது மீறுதலின் தண்டனையை அனுபவித்துக்கொள்ள விட்டுவிடுங்கள் என்று கெஞ்சினார்கள். ஆதாமின் மனவேதனை மிகவும் அதிகரித்தது. பயங்கரமான விளைவுகளை உண்டுபண்ணிவிடக்கூடிய அளவிற்கு அவனது பாவங்கள் மிகவும் பெரிய அளவிலானது என்பதை அவன் கண்டான். பரலோகத்தால் கனப்படுத்தப்படும் அதின் சேனைத்தலைவர், ஆதாம் குற்றமற்ற பரிசுத்த நிலையில் இருந்தபோது, அவனுடன் நடந்தும் பேசியும் இருந்தவர், தூதர்களால் கனப்படுத்தப்பட்டுத் தொழப்பட்டிருந்தவர், அவனது மீறுதலினால்அவரது உன்னதமான நிலையைவிட்டுக் கீழிறக்கப்பட்டு, மரிப்பதற்கென்று கொண்டுவரப்படவேண்டுமா? (17)

ஒரு தூதனின் ஜீவன் ஆதாமின் கடனைச் செலுத்தித்தீர்க்காது என்பது ஆதாமிற்கு அறிவிக்கப்பட்டது. யேகோவா தேவன் பரலோகத்திலும் பூமியிலும் எவ்விதமாகப் பரிசுத்தமுள்ளவராக இருக்கிறாரோ அதைப்போலவே அவரது பிரமாணமும் பரலோகத்திலும் பூமியிலும் பரிசுத்தமுள்ளதாக இருக்கிறது என்ற காரணத்தினால்தான் ஒரு தூதனுடைய ஜீவன் தேவனால் மீறுதலுக்கான தியாக பலியாக அங்கீகரிக்கப்பபடமுடியாமலிருக்கிறது. அவருடைய பரிசுத்த சிங்காசனத்தைச் சூழ்ந்திருக்கும் தூதர்களைவிட, அவரது பார்வையில் அவரது பிரமாணம் மிக முக்கியமானதாக இருக்கிறது. மனிதனின் விழுந்துபோன நிலைமையிலிருந்து அவனைக் காப்பதற்காக பிதாவினால் தமது பிரமாணத்தை நீக்கவோ அல்லது ஒரு பிரமாணத்திலுள்ள நிபந்தனையின் ஒரு பகுதியை மாற்றவோ இயலாது. ஆனால் பிதாவுடன் இணைந்திருந்து மனிதனைப் படைத்தவரால் தம்மை ஒரு தியாகபலியாகச் செலுத்தி, தேவ கோபத்தைச் சுமந்து , மனிதனுக்காக தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் ஒரு பாவ நிவாரணம் செய்யமுடிந்தது. ஆதாமின் மீறுதல் மரணத்தையும் துன்பங்களையும் கொண்டுவந்ததைப்போல, ஜீவனும் அழியாமையும் இயேசு கிறிஸ்துவின் தியாகபலியின் மூலமாக வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படும் என்று தூதன் ஆதாமிடம் தெரிவித்தான். (18)

## எதிர்காலம்பற்றிய ஒரு தொலைநோக்கு!

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள முக்கியமான சம்பவங்களான வெளியேற்றப்பட்டதுமுதல், ஜலப்பிரளயம், அதன்பின் கிறிஸ்து முதல் முறையாக உலகத்திற்கு வருதல், ஆதாமின்மீதும் அவனது பின்சந்ததியின்மீதும் உள்ள அவரது அன்பு, தேவகுமாரனைத் தாழ்த்தி மானுடத்தன்மையை எடுத்துக்கொள்ளச் செய்தது. இவ்வாறாகத் தமது தாழ்மையினால் தம்மை விசுவாசிக்கும் அனைவரும் உயர்த்தப்படுவார்கள். இந்த உலகம் முழுவதையும் இரட்சிப்பதற்கு அப்படிப்பட்ட தியாகபலி போதுமான விலைமதிப்புள்ளதாக இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட ஆச்சரியமான தியாகபலியின்மூலமாகக் கொண்டுவரப்பட்டுள்ள இரட்சிப்பை ஒரு சிலர் மட்டுமே தங்களுக்கென்று ஏற்றுக்கொள்ளுவார்கள். அவரது பெரும் இரட்சிப்பில் பங்குதாரர்களாவதற்கு தேவையான நிபந்தனைகளுக்கு அநேகர் இணங்கமாட்டார்கள் செலுத்தப்பட்டுள்ள தியாகபலியில் உள்ள புண்ணியங்களை விசுவாசித்து, அதனைச் சார்ந்திருக்கவும் மனந்திரும்பிக் கீழ்ப்படிவதைவிட, பாவத்தையும் பிரமாணத்தையும் மீறுவதையுமே அவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள். இந்த தியாகபலி அவ்வளவு முடிவில்லாத மேன்மையுள்ளதாக இருக்கிறது. ஒரு மனிதன் அதைப் பெற்றுக்கொள்ளுவதற்கு அது சுத்தமான பொன்னைப்போலவும் ஒப்பீரின் தங்கக்கட்டியைப்போலவும் இருக்கிறது. (19)

ஆதாம் பல தலைமுறைகளுக்கு உயிர்வாழ்ந்து, பெருகிவரும் பாவச்செயல்களையும் அருவருப்பான செயல்களையும் கண்டான். ஏனெனில் தேவப்பிரமாணத்தை மீறுகின்ற தன்னிலுள்ள பலத்த இயல்பால், மனிதன் ஆசைகளுக்கு–இணங்குகின்றவனாக இருக்கிறான். மனிதனின் தொடர்ச்சியான மீறுதல்களின் காரணமாக மனித இனத்தின்மீதும் விலங்கினங்களின்மீதும் தேவனுடைய சாபம் பாரமாகத் தங்கியிருப்பது அவனுக்குக் காட்டப்பட்டது. அக்கிரமங்களும் பலாத்காரங்களும் சீராக அதிகரிக்கும் என்று அவனுக்குக் காட்டப்பட்டது. இருந்தபோதிலும் இப்படிப்பட்ட மனித துன்பங்களுக்கும் ஆபத்துகளுக்கும் இடையில் நிகழ்ந்துகொண்டிருக்கும் சன்மார்க்கச் சீரழிவுக்கு மத்தியில் தேவனைப்பற்றிய அறிவைப் பாதுகாத்து வைத்திருந்து கறைபடாதவர்களாகச் சிலர் இருப்பார்கள். நியாயப்பிரமாணத்தை மீறுவது என்றால் என்ன என்பதைப்பற்றி ஆதாம் அறியும்படி உணர்த்தப்பட்டிருந்தான். மீறுதலின் காரணமாக உண்டாகக்கூடிய சன்மார்க்க மன—உடல் ரீதியான அழிவின் பலன் அவனுக்குக் காட்டப்பட்டிருந்தது. அதின் காரணமாக உலகம் முழுவதும் எல்லாவிதமான மானிட துயரங்களினாலும் நிரம்பியிருக்கும் என்பதும் அவனுக்குக் காட்டப்பட்டது. மனிதன் தேவனுடைய பிரமாணத்திலுள்ள நீதியை மீறுகிறான். அவ்விதமான அவனது சொந்தச்

செயலினால், அவனது வாழ்நாள் சுருங்கியிருந்தது. இறுதியில் அந்த இனம் பெருமளவுக்குச் சீர்குலைந்து, விலைமதிப்பு எதுவும் இல்லாத கீழ்த்தரமானதுபோல் காணப்பட்டது. மாம்சப்பிரகாரமான எண்ணங்களினால் பாவ நிவாரணத்தில் அடங்கியுள்ள மேன்மையையும், கல்வாரியின் தேவ இரகசியத்தையும், இரட்சிப்பின் திட்டத்தையும் போற்றுவதற்குப் பொதுவாக அவர்கள் தகுதியற்றவர்களாக இருந்தனர். என்றாலும், பலவீனத்தையும், நலிந்துபோன மனம், சன்மார்க்க நெறி , உடல் பெலம் ஆகியவைகளையுந் தாண்டி, பரலோகத்தைவிட்டுவந்த நோக்கத்துக்கு கிறிஸ்து உண்மையாயிருந்து, பெலவீனமான சீரழிந்துபோன மனிதகுலத்தின் சிறுத்துப்போனவர்களிடம் விருப்பம் காண்பித்து, அவரில் தங்களுடைய பலவீனத்தையும் குறைகளையும் மறைத்துக்கொள்ளும்படி அழைக்கிறார். அவரிடம் வருவார்களானால் அவர்களுடைய தேவைகளையெல்லாம் அவர் பூர்த்திசெய்வார். (20)

## தியாகபலி!

தேவன் கூறியிருந்தபடி ஆதாம் பாவ நிவாரண பலி செலுத்தினபோது, அது அவனுக்கு மிகவும் வேதனை தருகின்ற சடங்காக இருந்தது.– பாவ நிவாரண பலி செலுத்துவதற்காக, தேவன் ஒருவரால் மட்டுமே கொடுக்கக்கூடிய உயிரை எடுக்க அவன் தனது கரத்தை உயர்த்தியாக வேண்டும். அப்போதுதான் அவன் மரணத்தை முதலாவது பார்க்கிறான். இரத்தம் கொட்ட மரண வேதனையில் போராடிக்கொண்டிருந்த அந்த ஜீவனைப் பார்த்தபோது, அந்த பலி முன்குறித்த, மனிதனுக்குப்பதிலாக பலியாகவிருந்த தேவகுமாரனை அவன் விசுவாசத்தோடு பார்க்கவேண்டியவனாக இருந்தான். (21)

தேவனால் ஏற்படுத்தப்பட்டிருந்த சடங்காச்சார பலி, ஆதாமுக்கு அவனுடைய குற்றஉணர்வையும், மனம் வருந்தி அதை ஒப்புக்கொள்வதையும் தொடர்ந்து ஞாபகப்படுத்தியது. உயிரை எடுக்கின்ற இந்தச் செயல், தேவனுடைய அருமையான குமாரனுடைய மரணத்திற்குக் குறைவான எதினாலுமே பரிகரிக்க முடியாமலிருந்த ஆதாமின் மீறுதலைப்பற்றிய ஆழமான—முழுமையான—பாவஉணர்வை அவனுக்குள் கொண்டுவந்தது. குற்றவாளியைக் காப்பாற்றுவதற்காக அப்படிப்பட்ட ஒரு பரிகாரத்தைச் செய்யக்கூடிய நல்ல தன்மை, நிகரற்ற அன்பு ஆகியவைகளை அறிந்து அவன் வியப்படைந்தான். குற்றமில்லாத மிருகத்தை ஆதாம் கொன்றபோது, தானே தனது சொந்தக் கரத்தினால் தேவகுமாரனுடைய இரத்தத்தைச் சிந்துவதைப்போன்று உணர்ந்தான். (22)

அவன் தேவனுக்கு உண்மையானவனாக உறுதியாக நின்றிருந்தால்,

அவரது பிரமாணத்திற்கு உண்மையாக நின்றிருந்தால், மிருகமோ அல்லது மனிதனோ மரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டே இருந்திருக்காது. இருந்தபோதிலும், தேவனுடைய அருமையான குமாரனின் பூரணமான பலியின்வழியாக, கடுமையான இருண்ட எதிர்காலத்தை ஒளிப்படுத்தவும், எந்தவிதமான நம்பிக்கையும் இல்லாத பாழ்க்கடிப்பிலிருந்து நிவாரணம் தரவும் ஒரு நம்பிக்கையின் நட்சத்திரம் அதில் ஒளி வீசினது. (23)

ஆரம்ப காலத்தில் ஒவ்வொரு குடும்பத்தின் தலைவனும் வீட்டின் அதிபதியாகவும் ஆசாரியனாகவும் கருதப்பட்டிருந்தான். பின்னர் மனித இனம் பூமியின்மேல் பெருகினபோது, மக்களுக்காகப் பலிசெலுத்துகின்ற பக்திவிநயமான தொழுகை முறையை தேவனால் ஏற்படுத்தப்பட்டிருந்த மனிதர்கள் செய்திருந்தனர். பலி மிருகத்தின் இரத்தம் பாவிகளின் மனங்களில் தேவகுமாரனுடைய இரத்தத்துடன் சம்பந்தப்பட்டதாகக் காணப்படவேண்டியதாக இருந்தது. பாவத்தின் தண்டனை மரணம் என்பதற்கு பலிஉயிரின் மரணம் சாட்சியாக இருக்கவேண்டியதாக இருந்தது. பலி செலுத்தும் செயலினானல் பாவி தனது குற்றத்தை அறிக்கைசெய்து, பெரிதும் பூரணமானதுமான தேவகுமாரனின் பலியை எதிர்நோக்கி, அதின்மீதிருந்த விசுவாசத்தை வெளிக்காட்டினான். இதனை பலியிடப்பட்டிருந்த பலி மிருகம் முன்குறித்திருந்தது. தேவகுமாரனின் பாவநிவாரணம் இன்றி தேவனிடத்திலிருந்து மனிதனுக்கு இரட்சிப்பின் ஆசீர்வாதத்தின் தொடர்பு இருக்காது. தேவன் அவரது பிரமாணத்தின் மேன்மைக்காக வைராக்கியமுள்ளவராக இருக்கிறார். அந்தப் பிரமாணத்தை மீறினது தேவனுக்கும் மனிதனுக்குமிடையில் பயங்கரமான பிரிவினையை உண்டுபண்ணியது. ஆதாம் குற்றமற்றவனாக இருந்த நிலையில் அவனது சிருஷ்டிகருடன் அவனுக்கு சுதந்திரமும் மகிழ்ச்சியுமிக்க நேரடியான தொடர்பு அனுமதிக்கப்பட்டிருந்தது. அவனது மீறுதலுக்குப்பின், தேவன் மனிதனுடன் கிறிஸ்துவின் மூலமாகவும், தேவதூதர்களின் மூலமாகவும் தொடர்புகொள்ளுகிறார். (24) ★

6

# ஆண்டவர் அங்கீகரித்த காணிக்கை!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 52–56)**

**திருவசன ஆதாரம்: ஆதியாகமம் 4:1–15**

ஆதாமின் மகன்களாக இருந்த காயீனும் ஆபேலும் சுபாவத்தில் மாறுபட்டவர்களாக இருந்தனர். பாவத்தின் காரணமாக ஆதாம்மீது சாபம் கூறப்பட்டதினாலும் பூமி சபிக்கப்பட்டதினாலும் காயீன் கலகம் செய்யும் உணர்வுகளைப் பேணுபவனாக இருந்து, தேவனுக்கு எதிராக முறுமுறுத்தான். ஆபேல் கடவுளுக்குப் பயந்த மனிதனாக இருந்தான். மனித இனத்தின் இரட்சிப்பிற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த காரியங்களைப்பற்றி இந்த சகோதரர்கள் சோதிக்கப்பட்டிருந்தனர். தேவன்மீது அவர்களுக்கிருந்த பக்தியையும், வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ள இரட்சகரின்மீது அவர்களுக்கிருக்கும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் காட்டும்படி, ஆட்டு மந்தையிலிருந்த முதற்பிறப்பான ஒரு ஆட்டை கொன்று, அதின் இரத்தத்தை பக்திவிநயத்துடன் செலுத்தவேண்டுமென்று அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தார்கள். தங்களுடைய பாவத்தையும், மனிதனுக்கான பெரும் தியாக பலியாக வரவிருக்கும் மீட்பரையும் அவர்களது மனங்களில் எப்பொழுதும் வைத்திருக்க இந்த பலி வழிநடத்தியது. (1)

வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருக்கிற தியாகத்தைக்குறித்த முறுமுறுப் போடும் நம்பிக்கையின்மையோடும் காயீன் தனது காணிக்கையைக் கொண்டுவந்தான் தனது நிலத்தின் கனிகளுடன் சேர்த்து ஒரு ஆட்டுக்குட்டியையும் கொண்டுவந்து காணிக்கையாகச் செலுத்தும்படியான கீழ்ப்படிதலின் திட்டத்தைச் சரியாகப் பின்பற்ற அவனுக்கு விருப்பமில்லை. அவன் நிலத்தில் விளைந்த கனிகளைமட்டும் கொண்டுவந்தான்; தேவன் அறிவுறுத்தியிருந்ததை மதிக்கவில்லை. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பில்லை என்பதை தேவன் ஆதாமுக்கு அறிவித்திருந்தார். கனிகளிலுங்கூட சிறப்பானவைகளைக் கொண்டுவரக் காயீன் கவனமற்றவனாக இருந்தான். பலி செலுத்துவதற்காக இரத்தம் இல்லாமல் கர்த்தருடைய சமுகத்திற்கு வரவேண்டாம் என்று ஆபேல் அவனது சகோதரனுக்குச் சுட்டிக்காட்டியிருந்தான். காயீன் மூத்த மகனாக இருந்தபடியினால் தனது

இளைய சகோதரனின் சொல்லைக் கவனிக்காமலிருந்தான். அவனது ஆலோசனையை அவன் நிந்தித்தான். சடங்காச்சாரக் காணிக்கைகளைப்பற்றி சந்தேகமும் முறுமுறுப்பும் உள்ளவனாக இருந்து, தனது காணிக்கையைப் படைத்தான். அதினால் தேவன் அதனை அங்கிகரிக்கவில்லை! (2)

ஆபேல் தனது ஆட்டுமந்தையின் முதற்பலனில் தேவன் கட்டளையிட்டிருந்தபடி, நன்றாகக் கொழுத்த ஒரு ஆட்டைக் கொண்டுவந்தான். வரவிருக்கும் மேசியாவின்மீது முழுவிசுவாசமும் வைத்து, தாழ்மையான பக்தியுடன் தன் பலியைச் செலுத்தினான். தேவன் அவனது பலியை அங்கிகரித்தார். வானத்திலிருந்து அக்கினி இறங்கி ஆபேலின் காணிக்கையை பட்சித்துப்போட்டது. காயீனின் காணிக்கை அங்கிகரிக்கப்பட்டதற்கான அடையாளம் ஒன்றையும் அவன் காணவில்லை. அவன் கர்த்தருடனும் தனது சகோதரனுடனும் கோபமுள்ளவனாக இருக்கிறான். காயீனுடன் உரையாடுவதற்காக, ஒரு தூதனை அனுப்புமளவிற்கு தேவன் தம்மைத் தாழ்த்துகிறார்! (3)

அந்தத் தூதன் அவனது கோபத்திற்கான காரணத்தை விசாரித்து, அவன் நன்றாக நடந்து தேவன் கொடுத்திருந்த வழியைப் பின்பற்றினால், அவர் அவனை ஏற்றுக்கொண்டு, அவனது காணிக்கையை மதிப்பார். மாறாக, அவன் தேவனுடைய ஏற்பாடுகளுக்குத் தாழ்மையாகக் கீழ்ப்படியாமலும் அவரை நம்பாமலும் இருந்தால், அவரால் அவனது காணிக்கைகளை அங்கிகரிக்கமுடியாது என்று அறிவித்தான். மேலும், காயீன் செலுத்தின காணிக்கையை தேவன் அங்கிகரிக்காதது தேவனுடைய அநீதியோ பட்சபாதமோ அல்ல; மாறாக, அவனது சொந்தப் பாவமாகும்; தேவன் வெளிப்படையாகக் கொடுத்திருந்த கட்டளைக்கு அவன் கீழ்படியாமல் போனதே அவனுடைய காணிக்கையை தேவன் அங்கிகரிக்காததற்குக் காரணம் என்றும், அவன் நல்லவிதமாக நடந்தால், தேவனால் அங்கிகரிக்கப்படுவான் என்றும், அவன் மூத்தவனாக இருப்பதினால் அவனது சகோதரன் அவன் சொல்லுவதைக் கவனித்தாகவேண்டும் என்றும் கூறினான். (4)

இவ்விதமாக, விசுவாசத்துடன் போதிக்கப்பட்டபின்புங்கூட, காயீன் மனந்திரும்பவில்லை. அவனுடைய நம்பிக்கையின்மைக்காக தன்னைக் குற்றப்படுத்தி தன்னைத்தான் வெறுப்பதற்குப்பதிலாக, இன்னும் தேவனுடைய அநீதி, பட்சபாதம் ஆகியவைபற்றிக் குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கிறான். தனது பொறாமை வெறுப்பு ஆகியவைகளின் காரணமாக அவன் ஆபேலுடன் சண்டைபோட்டு அவனை நிந்திக்கிறான். ஆபேல் மிகவும் பணிவுடன் தனது சகோதரனின் தவறைச் சுட்டிக்காட்டி, தவறு அவனுக்குள்தான்

இருக்கிறது என்று காட்டுகிறான். ஆனால் ஆபேலை ஏற்றுக்கொண்டதின் அடையாளங்களை தேவன் வெளிக்காட்டின அந்த நேரத்திலிருந்து காயீன் அவனது சகோதரனை வெறுக்கிறான். அவனது சகோதரனான ஆபேல் காயீனின் கோபத்தை சமாதானப்படுத்த முயலுகிறான். தனது பெற்றோரை உடனடியாகக் கொன்றுவிடாமல் அவர்களது உயிர்களைக் காப்பாற்றியதில் உள்ள தேவனின் மன உருக்கத்தை எடுத்துரைக்கிறான். தேவன் காயீனை நேசிக்கிறார் என்பதை அவனிடம் கூறுகிறான். அப்படி இல்லாவிட்டால் குற்றமற்றவரும் பரிசுத்தருமான குமாரனை, மனிதன் கீழ்ப்படியாமையினால் தேவனுடைய கோபத்திற்கு ஆளாக இருந்தபோது, அவனுக்காக மரிக்கும்படி கொடுத்திருக்கமாட்டார் என்றான். (5)

## மரணத்தின் ஆரம்பங்கள்!

தேவனுடைய திட்டத்தை ஆபேல் நியாயப்படுத்தும்போது, காயீன் அவனை கொலைசெய்யுமளவிற்கு கோபம்கொண்டான். தேவன் காயீனிடம் அவனது சகோதரனான ஆபேலைப்பற்றி விசாரிக்கிறார். “அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ” என்று குற்ற உணர்வுடன் தவறான பதிலைக் கூறுகிறான். காயீனைப்பற்றியும் அவனுடைய பாவத்தைப்பற்றியும் அறிந்திருப்பதாக தேவன் கூறுகிறார். அவனது ஒவ்வொரு செயலையும் தேவன் அறிந்தவராக இருக்கிறார். அவனது இருதயத்தின் நினைவுகளையுங்கூட அறிந்திருக்கிறார் என்று கூறி, உன் சகோதரனுடைய இரத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது என்றார். இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன்கையிலே வாங்கிக்கொள்ள தன் வாயைத்திறந்த இந்தப் பூமியிலே நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போது அது தன் பலனை இனி உனக்குக் கொடாது. நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாய் இருப்பாய் என்றார். (6)

பூமிக்கு முதலாவது கொடுக்கப்பட்ட சாபம் மிக லேசானதாக உணரப்பட்டது. ஆனால் இப்பொழுது அதன்மீது இரண்டு சாபங்கள் தங்கிவிட்டன. விழுகைமுதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரைக்கும் மனிதர்களில் நீதிமான்கள்—துன்மார்க்கர், விசுவாசிகள் —அவிசுவாசிகள் என்னும் இரு கூட்டத்தினர் காணப்படுவார்கள் என்பதைக் காயீனும் ஆபேலும் குறித்துக்காட்டுகின்றனர். நீதிமான்கள் தங்களைவிட நல்லவர்களாக இருப்பதினால் துன்மார்க்கர் அவர்கள்மேல் பொறாமைகொண்டு அவர்களை வெறுப்பதை காயீன் தன் சகோதரனான ஆபேலைக் கொலைசெய்தது குறிக்கிறது. நீதிமான்களின் நற்செயல்கள் துன்மார்க்கரின் தீய செயல்களை–

குற்றப்படுத்துவதினால், துன்மார்க்கர் நீதிமான்களின்மீது பொறாமைகொண்டு, அவர்களை உபத்திரவப்படுத்தி, கொலைசெய்வார்கள். (7)

ஆதாமின் வாழ்க்கை துயரம் நிறைந்த ஒன்றாகவும், தாழ்மைமிக்க ஒன்றாகவும் தொடர்ச்சியான மன வருத்தத்தை உடையதாகவும் இருந்தது. கர்த்தரைப்பற்றி இருக்கவேண்டிய பயத்தைக்குறித்து அவன் தனது பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் போதனை செய்தபோது, அவனது பாவத்தினால் அவனது பின் சந்ததியினரின்மீது உண்டான துன்பங்களுக்காக அவர்கள் ஆதாமை நிந்தித்தார்கள். அழகிய ஏதேனிலிருந்து அவன் வெளியேறியபோது, மரித்தாகவேண்டும் என்ற எண்ணம் அவனைப் பயத்தில் திகிலடையச்செய்தது. அவன் மரணத்தை மிகப் பயங்கரமான அழிவு என்று நோக்கியிருந்தான். தனது சொந்தமகனான காயீன் ஆபேலைக் கொலைசெய்தபோது, மனித குடும்பத்தில் உண்டான பயங்கரமான தன்மைகளுடன் அவன் முதல்தடவையாக அறிமுகம் செய்யப்பட்டான். தனது மகன் ஆபேலை இழந்துவிட்டதற்காக, கொலைகாரனான காயீனைக்கண்டு, அவனை தேவன் சபித்ததை அறிந்து, ஆதாமின் இருதயம் துயரத்தால் பணிந்து குனிந்தது. அவன் தனது முதலாம் மீறுதலுக்காகத் தன்னை மிகவும் நொந்துகொண்டான். வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த தியாகபலியின் மூலமாக, அவன் தேவனிடம் பாவமன்னிப்பற்காகக் கெஞ்சினான். அவன் செய்த பாவத்திற்காக தேவகோபம் அவன்மீது மிக அதிகமாக உண்டானதை மிக ஆழமாக உணர்ந்தான். பூமியின் மனிதர்களை இறுதியில் ஒரு ஜலப்பிரளயத்தினால் அழிக்கும்படி தேவனுக்குக் கோபத்தை மூட்டின பொதுவான அழிவுக்குரிய தன்மைக்கு அவன் சாட்சியாக நின்றான். அவனைச் சிருஷ்டித்தவரால் அவன்மீது கூறப்பட்ட மரணத்தின் உணர்வு ஆரம்பத்தில் மிகப் பயங்கரமாக தோன்றினது. சில நூறு வருடங்கள் வாழ்ந்தபின், ஒரு துன்பம் நிறைந்த வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவருவது தேவனின் நியாயமும் இரக்கமுமாகக் காணப்பட்டது. (8)

மரங்களின் இலைகள் உதிருவதிலும், மலர்கள் வாடி விழுவதிலும் அழிகின்ற இயற்கையின் அடையாளங்களை அவன் சாட்சியாகக் கண்டபோது, இன்று மனிதர்கள் தங்களின் மரணத்திற்காகத் துக்கம் கொண்டாடுவதைவிடவும் அதிகமாக வருந்தினான்.—மலர்கள் மென்மையாகவும்—இளமையாகவும் இருந்ததால் விழுந்த அவைகள் அவனை வருத்தப்படுத்தினதைக் காட்டிலும் உயர்ந்த மேன்மையான வலிமையான மரங்கள் தங்கள் இலைகளை உதிர்த்து அவைகள் அழுகினபோது, மனிதனுக்கு விசேஷமான நன்மையைத் தரும்படி தேவன் உண்டாக்கின அழகான இயற்கையின் அழிவைக் கண்டபோது மிகவும் வருந்தினான். (9)

அவனுடைய பிள்ளைகளுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் ஒன்பதாவது தலைமுறைவரைக்கும் ஏதேன் வீட்டின் பூரணத்தையும் தன்னுடைய விழுகையையும் அதன் பயங்கரமான விளைவுகளையும், ஆபேலுடைய மரணத்தில் முடிந்த—தன்னுடைய குடும்பத்தில் வெடித்த போராட்டத்தையும்—விளக்கிக் கூறினான். தேவனுடைய சட்டங்களுக்கு கண்டிப்புடன் கீழ்ப்படியவேண்டியதன் அவசியத்தை அவனுக்கு போதிப்பதற்காக அவன் அனுபவித்த வேதனைகளையும் தொடர்புபடுத்திக் காண்பித்தான். பாவம் எந்த வடிவில் இருந்தாலும் அது தண்டிக்கப்படும் என்று அவர்களுக்கு அறிவித்தான். தம்மை நேசித்து, தமக்கு பயப்படுகிறவர்களிடம் கிருபையாக இருக்கிற தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். (10)

விழுகைக்குப்பின்பு தூதர்கள் ஆதாமுடன் தொடர்புகொண்டு, மீட்பின் திட்டத்தைப்பற்றியும், மனிதக்குலம் மீட்பிற்கு தூரத்திலில்லை என்பதைப்பற்றியும் தெரிவித்தார்கள். மேலும், தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவே பயப்படத்தக்க பிரிவு ஏற்பட்டபோதிலும் மனிதன் இரட்சிக்கப்படுவதற்கேதுவாக தமது பிரியமான குமாரனை கொடுப்பதின்வழியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; என்றாலும், ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஏற்பாட்டை விசுவாசித்து, தாழ்மையாக மனந்திரும்பவதில்தான் அவர்களுடைய ஒரே நம்பிக்கை இருக்கிறது; இப்படியாக கிறிஸ்துவை தங்களுடைய ஒரே இரட்சகராக ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைவரும் அவருடைய குமாரனின் தகுதியினாலே தேவனுடைய தயவுக்குள் கொண்டுவரப்படுவார்கள் என்றனர். (11) ★

# 7

# சேத்தும்—ஏனோக்கும்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 57–61)**

**திருவசன ஆதாரம்: ஆதியாகமம் 4:25–26; 5:3–8**

சேத் மேன்மையான சுபாவம் உடையவனாக இருந்து, சரியான காரியங்களைச் செய்வதில் ஆபேலின் இடத்தை நிரப்பியிருந்தான். இருந்தபோதிலும், அவன் பாவமிக்க காயீனைப்போலவே ஆதாமின் மகனாக இருந்து, ஆதாமின் சுபாவத்திலிருந்து காயீனின் இயல்பைவிட அதிகமான நல்ல தன்மைகளை பெறாதவனாக இருந்தான். அவன் பாவத்தில் பிறந்திருந்தான். எனினும் தனது தகப்பனாகிய—ஆதாமின் விசுவாசமான போதனைகளைப் பெற்றுக்கொண்டு, தேவனுடைய கிருபையினால் தேவ சித்தத்தைச் செயலாற்றுவதன்வழியாக தேவனைக் கனப்படுத்தினான். கறைபட்டுப்போயிருந்த காயீனின் பின்னடியார்களிடமிருந்து விலகி இருந்து, தேவனுக்குப் பயந்து கீழ்ப்படியும்படி பாவமுள்ள மனிதர்களின் மனங்களை அவரிடத்திற்குத் திருப்ப ஆபேல் உயிருடன் இருந்திருந்தால் எவ்விதமாக உழைத்திருந்திருப்பானோ, அதே விதமாக உழைத்தான். (1)

ஏனோக்கு ஒரு பரிசுத்தவான். அவன் ஏக சிந்தையுடையவனாக, தேவனுக்கு ஊழியஞ்செய்திருந்தான். மனித இனத்திலிருந்த கறையை உணர்ந்து, காயீனின் சந்ததியாரிடமிருந்து விலகியிருந்து, அவர்களது பெரும் துன்மார்க்கமான தன்மைகளுக்காக அவர்களைக் கடிந்துகொண்டிருந்தான். அக்காலத்தில், தேவனை ஏற்றுக்கொண்டு, அவருக்குப் பயந்து, அவரைத் தொழுதிருந்த மனிதர்கள் பூமியில் இருந்தனர். அப்படியிருந்தபோதிலும் நீதிமானாக இருந்த ஏனோக்கு தேவபக்தி இல்லாதவர்களிடம் அதிகரித்துவரும் துன்மார்க்கத்தினால் அதிகமான மனத்துயரடைந்து, அவர்களுடைய தேவபக்தியற்ற தன்மையினால், தான் பாதிக்கப்பட்டுவிடுவோமோ என்றும் தேவனுடைய உன்னத குணத்திற்கு தரவேண்டிய பயபக்தியோடு அவரைப் பார்க்க தன் நினைவுகள் தவறிவிடுமோ என்றும் பயந்து, அவர்களோடு தினமும் தொடர்புகொள்ளாதிருந்தான். தேவனுடைய அதிகாரத்தை அவர்கள் நாள்தோறும் காலின்கீழிட்டு மிதிப்பதைக் கண்டபோது, அவனது ஆத்துமா சோர்வடைந்தது. அவர்களைவிட்டுப் பிரிந்திருக்கத் தெரிந்துகொண்டான்.

அதிகமான நேரத்தை தனிமையில் செலவிட்டு, ஜெபத்திலும் தேவனுடைய தன்மையைப் பிரதிபலிப்பதிலும் அவன் செலவிட்டிருந்தான். தேவனுடைய சித்தத்தை செய்வதற்கேதுவாக, அதை பூரணமாக அறிந்துகொள்ளுவதற்காக, அவன் தேவ சமுகத்தில் காத்திருந்து ஜெபித்திருந்தான். தேவன் தமது தூதர்களின்மூலமாக ஏனோக்குடன் தொடர்புகொண்டு, தெய்வீகப் போதனைகளை அவனுக்கு வழங்கினார். மனிதனுடைய கலகத்தை அவர் எப்போதும் சகித்துக்கொள்ளமாட்டார் என்பதை அவன் அறியும்படிச்செய்து, பாவம் நிறைந்த மனித இனத்தை, பூமியின்மீது ஒரு ஜலப்பிரளயத்தை உண்டுபண்ணி அழிப்பதே அவரது நோக்கம் என்பதையும் அவன் அறியும்படிச்செய்தார். (2)

இந்த உலகத்தை ஜலப்பிரளயத்தினால் தேவன் அழிக்கும் வரையில், நமது முதல் பெற்றோர்கள் எங்கிருந்து துரத்தப்பட்டார்களோ, அந்தத் தூய்மையும் அழகுமிக்க ஏதேன் தோட்டம் அங்கேதான் இருந்தது. தேவன் அதை நட்டு, விசேஷமாக அதை ஆசீர்வதித்திருந்தார். ஆச்சரியமான தமது பாதுகாப்பினால், அதை பூமியிலிருந்து எடுத்துக்கொண்டார். எடுக்கப்படுவதற்கு முன்னிருந்ததைவிட மகிமையான அலங்காரத்துடன் அதை மீண்டும் பூமிக்குத் தருவார். அவர் இந்த பூமியைச் சபித்த சாபத்தினால் பாதிக்கப்படாத, அவருடைய பூரணமான சிருஷ்டிப்பின் ஒரு மாதிரியாக அதைப் பாதுகாக்க அவர் நோக்கங்கொண்டார். (3)

ஆண்டவர் அவருக்கு அதிக முழுமையாக மீட்பின் திட்டத்தை திறந்து காண்பித்து, தீர்க்கதரிசன ஆவியின்மூலமாக ஜலப்பிரளயத்திற்குப்பின் வாழப்போகிற தலைமுறையினர்வரைக்கும் அவரை எடுத்துச்சென்று, இரண்டாம் வருகையுடனும் உலகமுடிவுடனும் சம்பந்தப்பட்ட மாபெரும் சம்பவங்களையும் காண்பித்தார் (யூதா 14) (4)

இறந்தவர்களைக்குறித்து ஏனோக்கு மிகவும் கலங்கியிருந்தான். நீதிமான்களும் துன்மார்க்கர்களும் ஒன்றாகவே மண்ணுக்குச் செல்லுவார்கள்; அதுவே அவர்களது முடிவு என்பதுபோல அவனுக்குக் காணப்பட்டது. கல்லறைக்கப்பாலுள்ள நீதிமான்களின் வாழ்க்கையைப்பற்றி அவனால் தெளிவாகக் காணமுடியவில்லை. மனிதனின் ஈடுபலியாக மரிக்கவிருக்கிற கிறிஸ்துவைக்குறித்தும், மரித்த நீதிமான்களுக்கு விடுதலையைக் கொடுத்து அவர்களுடைய கல்லறைகளிலிருந்து அவர்களை மீட்டெடுக்க தேவதூதர்கள் புடைசூழ கிறிஸ்து வானத்தின் மேகங்களின்மீது வர இருப்பதையும் தீர்க்கதரிசனத்தின்வழியாக அறிவுறுத்தப்பட்டார். கிறிஸ்து இரண்டாவது முறையாக வருகின்ற நேரத்தில் உலகம் இருக்கக்கூடிய கறைபடிந்த நிலையை—தேவப்பிரமாணத்திற்கு எதிராகக் கலகம்

செய்வதற்கு அணிவகுத்து நின்று, ஒன்றான கர்த்தராகிய தேவனையும் நமது கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் மறுதலித்து, அவரது இரத்தத்தைக் காலின் கீழிட்டு மிதித்து, அவரது பாவநிவாரணத்தை இழிவாகக் கருதுகிற—பெருமைபாரட்டுகிற துணிகரமான சுய சித்தமுடைய தலைமுறையினர் இருப்பார்கள் என்பதையும் அவன் கண்டான். துன்மார்க்கர் கர்த்தருடைய சமுகத்திலிருந்து நீக்கப்பட்டு அக்கினியினால் எரிக்கப்பட்டுப்போனபோது, நீதிமான்கள் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்படுவதையும் அவன் கண்டான். தீர்க்கதரிசன ஆவியின் மூலமாக, தேவன் அவனுக்கு வெளிப்படுத்தின யாவற்றையும் ஏனோக்கு விசுவாசத்துடன் மக்களுக்கு செயல்முறையில் செய்துகாட்டினான். சிலர் அவனுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து, தேவனைத் தொழுதுகொள்ளுவதற்காகத் தங்களுடைய துன்மார்க்கத்தைவிட்டுத் திரும்பினார்கள். (5)

**ஏனோக்கு மறுரூபமடைதல்!**

ஏனோக்கு நாள்தோறும் தேவனுடன் தொடர்புகொண்டிருந்து, பரலோகவாசியாக மாறிக்கொண்டிருந்தான். ஞானமிக்க அவனுடைய வார்த்தைகளைக் கேட்கும் மனிதர்முன்பாக அவன் போதனைசெய்த போது, அவனது முகம் பரிசுத்தமான ஒரு ஒளியினால் பிரகாசித்து இருந்தது. பரலோகத் தன்மையும் மேன்மையுமிக்க அவனது தோற்றம் மக்களைக் திகைக்கச்செய்தது. தேவனுடைய சித்தத்தைப் பரிபூரணமாகச் செயல்படுத்தவேண்டும் என்பதற்காக, கர்த்தரை உறுதியுடன் பின்பற்றி, அக்கிரமத்தை வெறுத்து, பரலோக ஞானத்தை அக்கரையுடன் தேடினதால், கர்த்தர் ஏனோக்கை நேசித்தார். அவன் எவருக்குப்பயந்து பக்திசெலுத்தி துதித்திருந்தானோ, அந்த தேவனுடன் மேலும் அதிகமாக ஒன்றுசேர மிகவும் ஆவலுள்ளவனாக இருந்தான். மற்ற மனிதர்கள் மரிப்பதுபோல ஏனோக்கு மரிக்கும்படி அனுமதிக்கப்படவில்லை! மரணத்தைக் காணாதவனாக அவனைப் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளுவதற்கு தேவன் தூதர்களை அனுப்பினார்! நீதிமான்கள் துன்மார்க்கர் ஆகியோரின் சூழலிலிருந்து ஏனோக்கு நீக்கப்பட்டான். தேவன் அவனைத் தமது இளைப்பாறும் இடங்கள் ஒன்றில் வைத்திருக்கலாம் என்று அவனை நேசித்திருந்தவர்கள் எண்ணினார்கள். எனவே அக்கரையுடன் தேடியும் அவர்களால் அவனைக் கண்டுபிடிக்கமுடியாமல் போனபோது, அவனைக் காணோம், தேவன் அவனை எடுத்துக்கொண்டார் என்றார்கள். (6)

விழுந்துபோன ஆதாமின் சந்ததியில் ஒருவனான ஏனோக்கை மறுரூபப்படுத்தின் மூலமாக, யாரெல்லாம், வாக்குத்தத்தம்—செய்யப்பட்டுள்ள

தியாகபலியின்மீது விசுவாசத்தினால் சார்ந்திருந்து, அவருடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவார்களோ, அவர்களுக்கெல்லாம் அவர் பரிசளிப்பார் என்னும் மிகப்பெரியதும் முக்கியமானதுமான பாடத்தை கர்த்தர் இங்கு போதிக்கிறார். நீதிமான்கள், துன்மார்க்கர், கலகம் செய்பவர்கள், பக்தி விசுவாசமிக்கவர்கள் ஆகிய இரு வகுப்பினர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரையிலும் இருக்கவேண்டியவர்களாக உள்ளனர் என்பது இங்கு மறுபடியும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. தேவனுக்குப் பயப்படுகின்ற நீதிமான்களை தேவன் நினைப்பார். அவரது அதிகாரத்தைத் தங்களின் காலின் கீழிட்டு மிதிப்பவர்களை வீழ்த்தி பூமியிலிருந்து அழிப்பார்; அவர்கள் ஒருபோதும் இல்லாதவர்களைப் போலிருப்பார்கள். (7)

ஆதாம் விழுந்தபின்னர், பூரணமிக்க–மகிழ்ச்சியான ஒரு நிலையிலிருந்து துன்பமும் பாவமுமிக்க ஒரு நிலைக்கு மனித இனத்தின்மீது பாரமான ஒரு சாபம் தங்கியிருக்கிறது. மரணம் எல்லாருடைய பங்காகவும் இருக்கின்ற இந்த நிலையில், தேவனைச் சேவிப்பது விருதா; அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம் (மல்கியா 3:14) என்று கூறுகின்ற ஒரு அபாயம் இருந்தது. ஆனால் தேவன் ஆதாமுக்குக் கொடுத்த போதனையினாலும், அதுவே சேத்தினால் திரும்பக் கூறப்பட்டதினாலும், அவை ஏனோக்கினால் திரும்ப விளக்கிக் காட்டப்பட்டதினாலும், இருளும் துயரமும் நீங்கி, ஆதாமின்மூலமாக மரணம் வந்ததுபோல, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இயேசு என்னும் மீட்பரால் ஜீவனும் அழியாமையும் உண்டாகும் என்னும் நம்பிக்கை மனிதனுக்குக் கொடுக்கப்பட்டது. (8)

ஏனோக்கின் காரியத்தின்மூலம் நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தவர்களுக்கு, சிருஷ்டிகராகிய தேவனுக்குகெதிரான வெளிப்படையான கலகத்தில் ஈடுபட்டிருக்கிற அழிவுக்குரியவர்களும் பாவமிக்கவர்களுமாயிருக்கிற மக்களுக்கிடையில் வாழ்ந்தாலும், அவருக்குக் கீழ்ப்படிந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த மீட்பரின்மீது விசுவாசம் வைத்திருந்தால், ஏனோக்கைப்போல நீதியைச் செயல்படுத்த முடியும்; தேவனால் ஏற்றுக்கொள்ளப்படமுடியும்; கடைசியாக பரலோக சிங்காசனத்திற்கு உயர்த்தப்படமுடியும் என்று போதிக்கப்பட்டனர். (9)

உலகத்திலிருந்து தன்னை வேறுபடுத்திக்கொண்டிருந்து, தனது நேரத்தின் பெரும் பகுதியை ஜெபத்திலும் தேவனுடன் உறவாடுவதிலும் செலவிட்டிருந்த ஏனோக்கு, கடைசி நாட்களில் உலகத்திலிருந்து பிரிந்திருந்து, தேவனுக்கு விசுவாசமானவர்களாக இருக்கும் மக்களை

எடுத்துக்காட்டுகிறவனாக இருக்கிறான். பூமியின்மீது பயங்கரமான அளவிற்கு அநீதியும் துன்மார்க்கமும் பெருகும். மனிதர்கள் தங்களுடைய கேடான இருதயங்களின் நினைவுகளையெல்லாம் பின்பற்றி, தங்களுடைய வஞ்சிக்கும் தத்துவங்களைச் செயல்படுத்தி, உன்னதமான பரலோகத்தின் அதிகாரத்திற்கு எதிராகக் கலகம் செய்வார்கள். (10)

தேவனுடைய ஜனங்கள் தங்களைச் சுற்றியுள்ள துன்மார்க்கமான பழக்கங்களிலிருந்து தங்களை விலக்கி, தெய்வீக சாயல் தங்களில் பிரதிபலிக்கும்வரைக்கும் எண்ணங்கள் தூய்மையானதாகவும் அவருடைய சித்தத்திற்கு இசைவானதாகவும் மாற வகைதேடுவார்கள். ஏனோக்கைப்போல பரலோகத்திற்குச் செல்ல மறுரூபமாவதற்குத் தகுதிப்படுத்திக்கொண்டிருப்பார்கள். உலகத்திற்குப் போதிக்கவும் அதை எச்சரிக்கவும் முயற்சியெடுக்கும் வேளையில், அவிசுவாசிகளின் ஆவிக்கும் பழக்கங்களுக்கும் இசையாமல், தங்களுடைய பரிசுத்தமான நடக்கைகளின் மூலமாகவும் பக்தியான உதாரணத்தின்மூலமாகவும், அவர்களைக் கண்டிப்பார்கள். ஜலப்பிரளயத்திற்குச் சற்றுமுன்பாக, ஏனோக்கு பரலோகத்திற்கு மறுரூபமாக்கப்பட்ட சம்பவம், இந்த பூமி நெருப்பினால் அழிக்கப்படுவதற்குமுன், உயிருடனிருக்கும் நீதிமான்களனைவரும் மறுரூப மாக்கப்படுவதை குறிக்கிறது. தேவனுடைய நீதியான கற்பனைகளுக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்ததினால் வெறுக்கப்பட்ட பரிசுத்தவான்கள் தங்களை வெறுத்தவர்களுக்கு முன்பாக மகிமைப்படுத்தப்படுவார்கள். (11)

★

# 8

# இந்த உலகம் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்டது!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 62–71)**
**திருவசன ஆதாரம்: ஆதியாகமம் 6; 7; 8; 9:8–17**

சேத்தின் சந்ததியினர் தேவகுமாரர் என்னப்பட்டனர். காயீனின் சந்ததியினர் மனுஷகுமாரர் என்னப்பட்டனர். தேவ குமாரர் மனுஷ குமாரர்களுடன் கலந்துகொள்ளத் தொடங்கினபோது, கறைபடிந்தவர்களாகி, அவர்களுடனுண்டான கலப்புத் திருமணத்தின்மூலமாக, தங்களுடைய மனைவிமார்களின் ஆதிக்கத்தினால் இழக்கப்பட்டு, காயீனின் குமாரர்களுடன் விக்கிரக ஆராதனையில் ஐக்கியப்பட்டனர். அநேகர் தேவனைப்பற்றிய பயத்தை விட்டுவிட்டு, அவரது பிரமாணத்தைக் காலின் கீழிட்டு மிதித்திருந்தனர். ஆனாலும் தங்களுடைய சிருஷ்டிகருக்குப் பயந்து, அவரைக் கனப்படுத்தி, நீதியைச் செய்திருந்த சிலர் இருந்தனர். அந்தச் சில நீதிமான்களுக்கிடையில் நோவாவும் அவனுடைய குடும்பத்தினரும் இருந்தனர். (1)

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கண்டு, கர்த்தர் தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. ஜலப்பிரளயம் உண்டாவதற்கு நூற்றுக்கும் மேற்பட்ட வருடங்களுக்கு முன்னதாக இந்த அழிவுக்குரிய இனத்தின்மீது இனிமேல் அவர் இரக்கம் வைக்கமாட்டார் என்பதை நோவாவுக்கு அறிவிக்க கர்த்தர் ஒரு தூதனை அனுப்பினார்; அவரது திட்டத்தைக்குறித்து அவர்கள் அறியாமை உடையவர்களாக இருக்கும்படி விட்டுவிடப்படமாட்டார்கள். இந்த உலகத்திற்கு அழிவு வந்துகொண்டிருக்கிறது என்பதையும், இந்தப்

பூமியில் வாழ்பவர்கள் சாக்குப்போக்குக் கூறுவதற்கு இடமில்லாதவர்களாக இருப்பார்கள் என்பதையும்பற்றி, இந்த உலகத்தை எச்சரிக்க ஒரு விசுவாச மிக்க பிரசங்கியாக இருக்கும்படி அவர் அவனுக்குப் போதிப்பார். (2)

நோவா ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்யவேண்டியவனாக இருந்த அதே நேரத்தில், தேவன் காட்டுகின்ற விதத்தில், அவன் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக்கொள்ள ஒரு பேழையை உண்டுபண்ணவேண்டியிருந்தான். அவன் பிரசங்கம் செய்கிறவனாகமட்டும் இராமல், தான் கட்டுகின்ற பேழையின் உதாரணத்தினால், எவைகளைப் பிரசங்கித்திருந்தானோ அவைகளின்மீது நம்பிக்கையுடையவனாகவும் இருந்தான் என்பதை அனைவருக்கும் உணர்த்தவேண்டியவனாகவும் இருந்தான்! (3)

தேவனுக்குப் பயந்து அவருக்குக் கீழ்ப்படிவதில் நோவாவும் அவனது குடும்பத்தினரும் மட்டும் இருக்கவில்லை. ஆனால் பூமியிலிருந்த சகல பக்திமான்களிலும் நோவா மிகுந்த பக்திமானாகவும் பரிசுத்தமானவனாகவும் இருந்தான். இந்தப் பேழையைக் கட்டுவதிலும், வர இருக்கும் உலகத்தின் அழிவைப்பற்றி எச்சரிப்பதிலும் தேவன் நோவாவின் உயிரைப் பாதுகாத்திருந்தார். ஜலப்பிரளயம் உண்டாகின்ற அந்த வருடம் வரை நோவாவின் பாட்டனான மெத்தூசலா வாழ்ந்திருந்தான். நோவாவின் பிரசங்கத்தில் நம்பிக்கைவைத்து, அந்தப் பேழையைக் கட்டுவதில் உதவிசெய்த மற்ற அனேகம் பேரும் இருந்தனர். அவர்கள் ஜலப்பிரளயம் பூமியின்மீது வருமுன் மரித்துப்போனார்கள். தனது பிரசங்கத்தினாலும் பேழையைக் கட்டும் உதாரணத்தினாலும் நோவா இந்த உலகத்தைக் ஆக்கினைக்குள்ளாக்கியிருந்தான். (4)

மனந்திரும்பி, அவரிடம் திரும்பும் சந்தர்ப்பத்தை விரும்பின அனைவருக்கும் தேவன் வாய்ப்பைக் கொடுத்தார். ஆனால் அவர்கள் நோவாவின் பிரசங்கத்தை நம்பவில்லை. அவர்கள் அவனது எச்சரிப்பைப் பரிகாசம் செய்து, காய்ந்த நிலத்தின்மீது, அவன் மிகப்பெரிய பேழையைக் கட்டினதைக் குறித்து, எல்லோரும் பரிகசித்துச் சிரித்தனர். தன் உடன் மனிதர்களை சீர்திருத்த வேண்டுமென்ற நோவாவின் முயற்சிகள் வெற்றி அடையவில்லை; ஆனாலும் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக, மனிதர்கள் மனம்வருந்தி தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டும் என்பதற்காக, அவன் தனது முயற்சிகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தான். அந்தப் பேழையின்மீது அடிக்கப்பட்ட ஒவ்வொரு அடியும் மக்களுக்குப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தது. மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்து, அவனை ஒரு மூடன் பயித்தியக்காரன் என்று கருதியிருந்த காலங்களிலும்,

நோவா தனது பணியைச் செய்துகொண்டிருந்தான். பிரசங்கம் செய்தான்; செயலாற்றிக்கொண்டுமிருந்தான். (5)

**பேழையைக் கட்டுதல்!**

அந்தப் பேழையின் சரியான அளவுகளையும் அதன் கட்டுமான விதிமுறைகள் ஒவ்வொன்றையும் தேவன் நோவாவிடம் குறித்துக்கொடுத்தார். அது ஒரு வீட்டைப்போல ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது. அதன் அடிப்பாகம் தண்ணீரின்மீது மிதக்கக்கூடிய ஒரு படகைப்போலிருந்தது. அந்தப் பேழையின் பக்கங்களில் சன்னல்கள் வைக்கப்பட்டிருக்கவில்லை. மூன்றுமாடி உயரமுள்ளதாக அது இருந்தது. உயரே இருந்த ஒரு ஜன்னல் வழியாக அதற்குள் வெளிச்சம் பரவியிருந்தது. கதவு ஒரு பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்தது. பல்வேறுபட்ட மிருகங்களையும் தங்கவைக்கக்கூடிய விதத்தில் அதன் அறைகள் பல்வேறுவிதமாக வடிவமைக்கப்பட்டிருந்தன. மேலே உள்ள சன்னலிலிருந்து எல்லா அறைகளுக்கும் வெளிச்சம் கிடைக்கும்படியாகச் செய்யப்பட்டிருந்தது. கொப்பேர் என்னும் மரத்தினால் அந்தப் பேழை உண்டுபண்ணப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான ஆண்டுகள் சென்றாலும் அது கெடக்கூடாததாக இருந்தது. மனித ஞானத்தினால் கண்டுபிடிக்கமுடியாதவிதத்தில் பயன்பாட்டுத் தன்மை உள்ளதாக அது இருந்தது. தேவன் அதின் வடிவமைப்பாளராக இருந்தார்; நோவா அதைக் கட்டுகின்ற மேலாளனாக இருந்தான். (6)

பேழையின் ஒவ்வொரு பகுதியையும் சீராக அமைப்பதற்கு நோவா தனது திறமை முழுவதையும் பயன்படுத்தியிருந்தபோதிலும், தேவன் தமது கோபத்தினால் பூமியின்மீது கொண்டுவர இருந்த அவரது பெரும் புயலைத் தன்னில்தானே தாங்கிக்கொள்ளமுடியாததாக அது இருந்தது. அந்தப் பேழையின் கட்டுமான வேலைகள் மெதுவாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தது; ஒவ்வொரு மரப்பலகையும் மிக நெருக்கமாகப் பொருத்தப்பட்டிருந்தது; மனிதர்களால் எந்த அளவிற்கு அதனை மிகப்பொருத்தமாகச் செய்யமுடியுமோ அந்த அளவிற்கு மிகப் பொருத்தமாக அது செய்யப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், பயங்கரமான அலைகளுக்கிடையில் தேவன் ஒருவரால் மட்டுமே, அவரது அற்புதமான வல்லமையினால் மட்டுமே அதனைப் பாதுகாக்கமுடியும். (7)

திரளானவர்கள் முதலில் வெளிப்படையாக நோவாவின் எச்சரிப்பைப் பெற்றிருந்தபோதிலும், உண்மையான மனந்திரும்புதலுடன் ஒருவரும் தேவனிடத்திற்கு முழுமையாகத் திரும்பவில்லை. ஜலப்பிரளயம் வருவதற்கு முன்னால் அவர்களுக்குச் சிலகாலம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த நேரத்தில்

அவர்கள் சோதிக்கப்படவும் மெய்ப்பிக்கப்படவும் வேண்டியவர்களாக—தவணையின்காலத்தில் வைக்கப்படவேண்டியவர்களாக இருந்தனர். சோதனையைச் சகிப்பதில் அவர்கள் தோற்றுப்போனார்கள். நிலவியிருந்த அழியும் தன்மை அவர்களை மேற்கொண்டது. எனவே இறுதியில் அவர்கள் விசுவாசமிக்க நோவாவை நோக்கிப் பரிகாசம்செய்து, ஊளையிடும் மற்றவர்களின் கூட்டத்தில் சேர்ந்தனர். அவர்கள் தங்களுடைய பாவங்களைவிட்டு விலக மறுத்து, பல மனைவிகளுடன் வாழும் வாழ்வில் தொடர்ந்து, தங்களுடைய அழிவுக்குரிய ஆசை வெறிகளின்படி நடந்திருந்தனர். கூச்சலிடும் உலகத்தின் குடிகள் தெய்வீக வல்லமையின் விசேஷமான ஒரு அடையாளத்தை வேண்டியிருந்தனர். தேவன் அவனுக்குக் கொடுத்திருந்த போதனைகளை நோவா விசுவாசத்துடன் பின்பற்றியிருந்தான். தேவனின் திட்டப்படி அந்தப் பேழை மிகச் சரியாகக் கட்டிமுடிக்கப்பட்டிருந்தது. மனிதர்களுக்கும் விலங்கினங்களுக்கும் தேவையான, மிக அதிகமான அளவு உணவுப் பொருட்களை நோவா அதில் சேகரித்து வைத்திருந்தான். அனைத்தும் சீராகச் செய்யப்பட்டபின், கர்த்தர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன் என்றார். (8)

## மிருகங்கள் பேழைக்குள் பிரவேசிக்கின்றன!

தேவன் படைத்திருந்த விலங்குகளை காட்டிலிருந்தும் வயல் வெளிகளில் இருந்தும் கூட்டிச்சேர்க்கும்படி தேவதூதர்கள் அனுப்பப்பட்டனர். தூதர்கள் இந்த மிருகங்களுக்கு முன்செல்ல, அந்த மிருகங்களில் சுத்தமுள்ளவைகள் ஆணும் பெண்ணுமாக, ஏழு ஏழு இணைகளாக உள்ளே சென்றன. மிகவும் பயங்கரமானதுமுதல் மிகவும் சாதுவானதுவரையிலான இந்த மிருகங்கள் அமைதியாகவும் பக்திவிநயத்துடனும் பேழைக்குள் சென்றன. வானம் சகலவிதமான பறவைகளினாலும் நிரப்பப்பட்டது. அவைகள் இரண்டிரண்டாக—ஆணும் பெண்ணுமாக பேழைக்குள் பறந்துவந்தன. சுத்தமான பறவைகள் ஏழு என்ற வீதத்தில் வந்தன. உலகம் அதனை ஆச்சரியத்துடன் பார்த்தது; சிலர் பயத்துடன் பார்த்தனர். ஆனால் கலகத்தின் காரணமாக அந்த அளவிற்குக் கடினப்பட்டவர்களாகி இருந்ததினால், வெளிப்படையாகக் காணப்பட்டிருந்த தேவனின் இந்த வல்லமையின் செல்வாக்கு, சற்றுநேரத்திற்கு மட்டுமே அவர்கள்மீதிருந்தது. இந்த விலங்கினங்கள் ஏழு நாட்களாகத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. நோவா அவைகளுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த இடங்களில் அவைகளைத் தங்கவைத்தான். (9)

சூரியன் அதின் மகிமையில் பிரகாசிப்பதையும், பூமி ஏதேனின் அழகைப்போர்த்துக்கொண்டிருப்பதையும், அழிவுக்குரிய அந்த இனம் கண்டபோது, தங்களது வெறித்தனமான களியாட்டுக்களினால் தங்களுடைய பயங்களை விரட்டி, பலாத்காரமிக்க அவர்களது செயல்களினால் ஏற்கனவே எழுப்பப்பட்ட தேவகோபத்தை தங்கள்மீது வரவேற்பவர்கள்போல் காணப்பட்டனர். (10)

உள்ளே இருக்கும் நோவாவினால் அடைக்கமுடியாத விதத்தில் அமைக்கப்பட்டிருந்த பேழையை மூடுவதற்கான சகலவிதமான ஏற்பாடுகளும் இப்பொழுது ஆயத்தமாகியிருந்தன. ஏளனமாகப்பேசிக் கொண்டிருந்தவர்களுக்குமுன், மின்னலைப்போன்ற உடை அணிந்த ஒரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவருவது காணப்படுகிறது. வெளிப்புறமாக இருந்த அந்தப் பெரிய கதவை அடைத்தபின், பரலோகத்தை நோக்கித் தன் பயணத்தை மீண்டும் மேற்கொள்ளுகிறான். (11)

பூமியின்மீது மழைபெய்ய ஆரம்பிப்பதற்கு முன்னர், ஏழு நாட்கள் நோவாவின் குடும்பம் அந்தப் பேழையில் இருந்தது. பூமியின்மீது தண்ணீர் நிறைந்திருக்கும்போது, அவர்கள் நீண்டநாட்களாக அந்தப் பேழையில் தங்குவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் இந்த நேரத்தில் செய்துகொண்டிருந்தனர். நம்பிக்கையில்லாத திரளானவர்களுக்கு, இந்த நாட்கள், தேவதூஷணம்மிக்க களியாட்டுக்களின் நாட்களாக இருந்தன. நோவா பேழைக்குள் நுழைந்தவுடனே அவன் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறாததினால், அவன் வஞ்சிக்கப்பட்டுப்போனான் என்றும், ஒரு ஜலப்பிரளயத்தினால் உலகம் அழியும் என்பது நம்பமுடியாதது என்றும் அவர்கள் நினைத்தார்கள். இதற்கு முன்னர் பூமியின்மீது மழை பெய்திருக்கவில்லை. தண்ணீரிலிருந்து எழும்பின நீராவியை, இரவில் பனியாக பூமியின்மீது இறங்கச்செய்து, தேவன் தாவரங்களை வளர்த்தார். (12)

தேவனுடைய வல்லமை பக்திவிநயத்துடன் காட்டப்பட்டதை, அவர்கள் கண்டதுடனல்லாமல், காடுகளிலிருந்தும் வயல்களிலிருந்தும் விலங்குகள் வெளியேறி, பேழைக்குள் சென்றிருந்த, இயற்கைக்கு மாறான காட்சியைக் கண்டபின்னும், ஒளியை ஆடையாக அணிந்து, மகத்துவமுடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி, அந்தக் கதவை மூடுவதை அவர்கள் கண்டிருந்தும், தெய்வீக வல்லமையின் வெளிக்காட்டலுக்கும் மேலாக அவர்கள் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி, களியாட்டுக்களிலும் வெறியாட்டுக்களிலும் தொடர்ந்திருந்தனர். (13)

**புயல் வீசுகிறது!**

ஆனால் எட்டாவது நாளில் வானங்கள் இருண்டன. பயங்கரமான சத்தமுள்ள இடியோசைகளும் கண்ணைப்பறிக்கும் மின்னல்களும் மனிதனையும் மிருகங்களையும் அச்சுறுத்தத்தொடங்கின. அவர்களுக்கு மேலிருந்த மேகங்களிலிருந்து, மழை கீழே இறங்கினது. அவர்கள் இதுவரை கண்டிராத ஏதோ ஒன்றாக அது இருந்தது. பயத்தால் அவர்களது இருதயங்கள் சோர்ந்தன. பயங்கரமான திகிலுடன் திரிந்த மிருகங்களின் இசைவற்ற குரல்கள் அவைகளின் அழிவைக்குறித்தும் மனிதனின் அழிவைக்குறித்தும் துக்கம்கொண்டாடுவதைப்போல் காணப்பட்டது. பலமிக்க தகடுகளைப்போல வானத்திலிருந்து தண்ணீர் ஊற்றும்வரை, புயலின் உக்கிரம் அதிகரித்தது. ஆறுகளின் கரைகள் உடைந்தன. தண்ணீர்கள் பள்ளத்தாக்குகளை நோக்கி ஓடின. பெரும் ஆழத்தின் அஸ்திவாரங்களும் உடைந்தன. விவரிக்க முடியாத வேகத்தில் தண்ணீர் ஊற்றுக்கள் பூமியைப் பிளந்து, பெரும் கற்பாறைகளை நூற்றுக்கணக்கான அடி உயரத்திற்கு ஆகாயத்தின்மீது வீசியெறிந்தன. பின்னர் அவை, அவைகளாகவே பூமிக்குள் ஆழமாகப் புதைந்துபோயின! (14)

மக்கள் முதலில் தங்களது கரத்தின் கிரியைகள் அழிவதைக் கண்டனர். வானத்திலிருந்துண்டான மின்னல்களினால் அவர்களுடைய அலங்காரமான மாளிகைகளும் அழகாக ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டு இருந்த அவர்களது தோட்டங்களும், அங்கே வைத்திருந்த அவர்களுடைய விக்கிரகங்களும் அழிக்கப்பட்டன. அவைகளின் பாழ்க்கடிப்புகள் எல்லாப் பக்கங்களிலும் சிதறின. தோப்புகளில் அவர்கள் பலிபீடங்களைக் கட்டியிருந்தனர். அவைகளை அவர்கள் தங்களுடைய விக்கிரகங்களுக்கென்று பிரதிஷ்டை செய்திருந்தனர். அவைகளின்மீது அவர்கள் நரபலி செலுத்தியிருந்தனர். தேவன் மிகவும் வெறுக்கின்ற இவைகள், அவருடைய கோபத்தில் அவர்களுக்கு முன்பாகப் பிளக்கப்பட்டுப்போகவே, வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணினவரான ஜீவனுள்ள தேவனுடைய வல்லமைக்கு முன்னால் அவர்கள் நடுங்கினார்கள். அவர்களுடைய அருவருப்புகளும் விக்கிரகங்களுக்குச் செலுத்தும் சகிக்க முடியாத பலிகளும்தான் அவர்களுக்கு அழிவைக்கொண்டுவந்தன என்பதை அவர்கள் அறியும்படிச் செய்யப்பட்டது. (15)

புயலின் உக்கிரம் அதிகரித்தது. அவைகளுடன் மூலக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதுடன் தேவனுடைய அதிகாரத்தை அவமதித்திருந்தவர்களின் புலம்பலும் கலந்துகொண்டது. மரங்கள், கட்டிடங்கள், பாறைகள், பூமி ஆகியவை எல்லாத் திசைகளிலும் வீசியெறியப்பட்டன. மனிதன், மிருகங்கள் ஆகியோரின் பயம்

விவரிப்பதற்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. ஒன்றுடன் ஒன்று மோதும் மூலக்கூறுகளுக்கிடையில் இருக்கும்படி வற்புறுத்தப்பட்டிருந்த சாத்தானுங்கூட, தனது உயிருக்காக மிகவும் பயந்தான். வல்லமைமிக்கதாக இருந்த ஒரு இனத்தைக் கட்டுப்படுத்துவதில் அவன் மகிழ்ச்சிமிக்கவனாக இருந்து, அருவருப்புக்ளை நடத்துவதற்காக அவர்கள் வாழ்ந்தாகவேண்டுமென்றும் பரலோகத்தின் தேவனுக்கெதிரான அவர்களுடைய கலகத்தை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்றும் விரும்பினான். தேவன் அநீதியும் கொடுமையுமிக்கவர் என்று அவர்மீது பொய்க் குற்றஞ்சாட்டினான், சாத்தானைப்போன்று, அநேக மக்கள் தேவதூஷணம் கூறி, அவர்களால் அவர்களுடைய கலகத்தைத் தொடர்ந்து நடத்தியிருக்க முடிந்திருந்தால், தேவனை அவரது நீதியின் சிங்காசனத்திலிருந்து பிய்த்தெறிந்திருப்பார்கள். (16)

அநேகர் தேவதூஷணம் கூறிக்கொண்டிருந்து, தங்களது சிருஷ்டிகரை சபித்துக்கொண்டிருந்தபோது, மற்றவர்கள் பயத்தினால் என்ன செய்வதென்றறியாது அந்தப் பேழைக்கு நேராகத் தங்களுடைய கரங்களை நீட்டி, பேழைக்குள் செல்ல அனுமதிகேட்டுக் கெஞ்சிக்கொண்டிருந்தனர்; ஆனால் அது முடியாததாக இருந்தது. நோவாவை உள்ளே வைத்து, தெய்வபக்தி இல்லாதவர்களை வெளிளே வைத்து, அந்தப் பேழைக்குள் நுழையக்கூடிய ஒரே கதவை தேவன் அடைத்திருந்தார். அவரால் மட்டுமே அந்தக் கதவைத் திறக்க முடியும். அவர்களது பயமும் மனந்திரும்புதலும் காலதாமதமாக உண்டானது. எந்த ஒருவரை அவமதித்து தேவதூஷணம் கூறியிருந்தனரோ, அவர்களைவிட வல்லமைமிக்க ஜீவனுள்ள தேவன் அவர் என்பதை அறிந்துகொள்ளும்படி வற்புறுத்தப்பட்டனர். மிகுந்த அக்கறையுடன் அவர்கள் அவரை அழைத்தனர்; ஆனால் அவர்களுடைய அழுகைக்கு அவருடைய செவிகள் திறந்திருக்கவில்லை. சிலர் தங்களுடைய நம்பிக்கையற்ற நிலைமையில் அந்தப் பேழையை உடைத்து உள்ளே நுழைய முயன்றனர். ஆனால்—அந்தப் பேழையின் உறுதியான அமைப்பு அவர்களுடைய முயற்சிகளையெல்லாம் தடுத்தது. கோபாவேசத்துடன் உயர்ந்தெழுந்த தண்ணீர் அடித்துச் செல்லும்வரை சிலர் அந்தப் பேழையைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்தனர். என்றாலும் அவர்களது பிடிகள் சகல திசைகளிலும் வீசியெறியப்பட்ட கற்பாறைகளினாலும் மரங்களினாலும் விடுபட்டுப்போயின. (17)

நோவாவின் எச்சரிக்கையை அற்பமானதாக எண்ணி, விசுவாசத்துடன் நீதியைப் பிரசங்கித்தவனான நோவாவைப் பரிகசித்தவர்கள் தங்களுடைய நம்பிக்கையின்மைக்காக மிகத் தாமதமாக மனந்திரும்பினார்கள். அந்தப்பேழை மிகப் பயங்கரமானவிதத்தில் ஆட்டி அசைக்கப்பட்டது. பேழைக்குள்ளிருந்த

மிருகங்கள், அவைகளின் மிக அதிகமான பயத்தை, அவைகளின் மாறுபட்ட குரல்களினால் எடுத்துக்காட்டின. மூலக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்ற வேளையில், தண்ணீர்கள் உயர்ந்துகொண்டிருந்தபோது, மரங்களும் பாறைகளும் வீசியெறியப்பட்டிருந்த வேளையில், அந்தப் பேழை பாதுகாப்புடன் தனது பயணத்தைத் தொடர்ந்திருந்தது. மிகவும் வலிமைமிக்க தூதர்கள் அந்தப் பேழைக்கு ஆபத்தில்லாதவிதத்தில் அதனை நடத்திச்சென்றிருந்தனர். அந்த நாற்பது நாட்களில், இரவிலும் பகலிலும் பயங்கரமான அந்தப் புயலுக்கு மத்தியில் ஒவ்வொரு விநாடியிலும் அந்தப் பேழை பாதுகாக்கப்பட்டது சர்வவல்லவருடைய ஏற்பாடாக இருந்தது. (18)

புயலினால் தாக்கப்பட்ட மிருகங்கள் மனிதர்களின் கூட்டங்களை நோக்கி, அவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்ப்பதுபோல ஓடிவந்தன. மக்களில் சிலர் தங்களுடைய பிள்ளைகளையும் தங்களையும் பலமிக்க மிருகங்களுடன் இணைத்துக் கட்டினார்கள். அவர்கள், இந்த விலங்குகள் நீண்டகால ஆயுளை உடையவை; உயர்ந்து வரும் தண்ணீருக்கும் மேலாக, மிகஉயர்ந்த இடங்களுக்கு இவைகளால் செல்லமுடியும் என்று அறிந்திருந்தனர். புயல் தனது சீற்றத்தைக் குறைக்கவில்லை. முதலில் இருந்ததைவிடத் தண்ணீர் அதிவேகமாக அதிகரித்தது. நிலத்தில், மிக உயரமான இடத்திலிருந்த உயரமான மரங்களில் சிலர் தங்களைச் சேர்த்துக்கட்டிக் கொண்டனர்; ஆனால் அந்த மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டு, உக்கிரமாக ஆகாயத்தில் வீசப்பட்டு, பெருகிவரும் தண்ணீரில் கற்களுடனும் மண்ணுடனும் அமிழ்ந்துபோயின. நிலத்தின் மிக உயரமான இடத்தில் நின்றுகொள்ளும்படி மனிதர்களும் விலங்குகளும் போட்டியிட்டு, இறுதியில் நுரைதள்ளும் தண்ணீரில் அனைவரும் வீசியெறியப்பட்டனர். கடைசியாகத் தண்ணீர் அதிக உயரமான இடத்தை அடைந்தது. ஜலப்பிரளயத்தின் தண்ணீரினால் மிருகங்களும் மனிதர்களும் ஒன்றாக அமிழ்ந்தனர். (19)

நீர்மட்டம் எப்போது குறையுமென்று நோவாவும் அவனது குடும்பத்தினரும் கவலையுடன் கவனித்திருந்தனர். பூமியின்மீது மறுபடியும் வாழ்வதற்கு விரும்பி, நோவா ஒரு பறவையை வெளியே அனுப்பினான்; அது அங்குமிங்குமாகப் பறந்துசென்றபின், பேழைக்குள் திரும்பிவிட்டது. அவன் விரும்பின தகவல் அவனுக்குக் கிடைக்கவில்லை. மறுபடியும் ஒரு புறாவை அனுப்பினான்; அது தனக்கு இளைப்பாற வெளியில் இடம் கிடைக்காததினால் மறுபடியும் பேழைக்குள் வந்தது. ஏழு நாட்களுக்குப்பின் அந்தப் புறா மறுபடியும் அனுப்பப்பட்டது. அந்தப் புறாவின் வாயில் ஒரு ஒலிவ இலை காணப்பட்டபோது, இவ்வளவு நாட்களாக அந்தப் பேழைக்குள் அடைபட்டவர்களாக இருந்த எட்டு பேர் அடங்கிய அந்தக் குடும்பத்தில் பெரிய மகிழ்ச்சி உண்டானது. (20)

மறுபடியும் ஒரு தூதன் கீழிறங்கி வந்து, அந்தப் பேழையின் கதவைத் திறந்தான். நோவாவினால் அந்தப் பேழையின் மேல் பாகத்தைத் திறக்கமுடிந்தது; ஆனால் தேவன் மூடிய கதவை அவனால் திறக்கமுடியவில்லை. கதவைத் திறந்த தூதன்மூலமாக நோவாவும் அவனுடைய குடும்பமும் பேழையை விட்டு வெளியேறுவதுடன் அவர்களுடன் பேழைக்குள்ளிருந்த உயிரினங்களையும் வெளியே கொண்டுவரவேண்டும் என்று தேவன் கூறினார். தங்களைக் கிருபையாகப் பாதுகாத்த தேவனை நோவா மறந்துவிடவில்லை. அவன் உடனடியாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, சுத்தமான மிருகங்கள் ஒவ்வொன்றையும் சுத்தமான பறவைகள் ஒவ்வொன்றையும் எடுத்து, பெரும் தியாக பலியாக இருக்கக்கூடிய கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தைக் காட்டும்படியும், தங்களை ஆச்சரியமான விதமாகப் பாதுகாத்ததற்காக தன் நன்றியை வெளிக்காட்டுவதற்காகவும் அந்தப் பலிபீடத்தின்மீது தகனபலியாகச் செலுத்தினான். நோவா செலுத்தின பலி ஒரு சுகந்த வாசனையாக தேவ சமுகத்தை எட்டினது. அவர் அந்தக் காணிக்கையை ஏற்றுக்கொண்டு, நோவாவையும், அவனது குடும்பத்தையும் ஆசீர்வதித்தார். பூமியில் வாழுகின்ற அனைவருக்கும் இங்கு ஒரு பாடம் போதிக்கப்பட்டுள்ளது. வெளிக்காட்டப்பட்டுள்ள, தேவனுடைய ஒவ்வொரு இரக்கத்திற்காகவும் அவர்கள்பால் உள்ள அன்பிற்காகவும் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய முதல் காரியம், மனப்பூர்வமான நன்றியையும் தாழ்மையான தொழுகையையும் செலுத்துவதாகும். (21)

## நோவாவின் பலியும் தேவனின் வாக்குத்தத்தமும்!

மேகங்கள் சூழ்வதினாலும் மழைபெய்வதினாலும் மற்றுமொரு ஜலப்பிரளயத்தைப்பற்றி மனிதன் பயந்து திகிலடையக்கூடாது என்பதற்காக, ஒரு வாக்குத்தத்தத்தினால் நோவாவின் குடும்பத்தைக் கிருபையாக தைரியப்படுத்துகிறார். “உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள்முதல் இனிப் பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன். இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார். அன்றியும் தேவன்: எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும், நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக: நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும்

பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும். அப்பொழுது எல்லா மாம்சஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன். அந்த வில் மேகத்தில் தோன்றும்போது, தேவனுக்கும் பூமியின்மேலுள்ள சகலவித மாம்சஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப் பார்ப்பேன். இது எனக்கும், பூமியின்மேலுள்ள மாம்சமான யாவுக்கும், நான் ஏற்படுத்தின உடன்படிக்கையின் அடையாளம் என்று நோவாவோடே சொன்னார்"– ஆதியாகமம் 9:10–17. (22)

தேவனுடைய பகுதியாக இருந்த தாழ்த்துதல் எப்படிப்பட்ட ஒன்றாக இருந்தது. மனிதனுடனுள்ள ஒரு உடன்படிக்கையின் அடையாளமாக இருக்கும்படி பல நிறங்களினாலான அழகிய வானவில்லை மேகங்களின்மேல் வைத்தது, தவறும் மனிதனின்மீதுள்ள, மகா தேவனின் மன உருக்கம் எப்படிப்பட்டது! மனிதர்களின் பெரும் துன்மார்க்கத்தின் காரணமாக, பூமியின் குடிகளை, தேவன் ஒரு ஜலப்பிரளயத்தினால் அழித்தார் என்னும் உண்மைக்கு சகல தலைமுறையினருக்கும் சாட்சியாக, இந்த வானவில் இருக்கவேண்டியதாக இருந்தது. பின்வரும் தலைமுறையினரின் பிள்ளைகள், மேகத்தில் அந்த வில்லைக்கண்டு, வானம் முழுவதிலும் விரிந்திருக்கும் மகிமைமிக்க அந்த வானவில் இருப்பதற்கான காரணத்தை அவர்கள் விசாரிக்கவேண்டும் என்பது அவரது திட்டமாக இருந்தது; அப்பொழுது அவர்களுடைய பெற்றோர்கள், பழைய உலகத்திலிருந்த ஜனங்கள், தங்களைச் சகலவிதமான துன்மார்க்கங்களுக்கும் விட்டுக்கொடுத்தபோது, பழைய உலகம் ஒரு ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்டது என்பதை விளக்குவதற்காகவும், தேவன் இனி ஒருபோதும் ஜலப்பிரளயமாகிய வெள்ளத்தைப் பூமியின்மீது கொண்டுவரமாட்டார் என்பதின் அடையாளமாக இருக்கும்படியாகவும், உன்னதமானவருடைய கரங்கள் அந்த வில்லை வளைத்து மேகங்கள்மேல் வைத்தன என்பதை தங்களுடைய பிள்ளைகளுக்குக் விளக்கிக்காட்டவேண்டும் என்றும் தேவன் ஏற்பாடாகச் செய்திருந்தார். (23)

மேகத்தின்மேலுள்ள இந்த அடையாளம் அனைவருடைய நம்பிக்கையையும் உறுதிப்படுத்த வேண்டியதாக உள்ளது; ஏனெனில் அது தெய்வீக இரக்கம், நல்ல தன்மை ஆகியவைகளின் ஒரு அடையாளமாக உள்ளது. உலகத்தை ஒரு ஜலப்பிரளயத்தினால் அழிக்கும்படி

தேவனுக்குக் கோபமூட்டியிருந்தபோதிலும், அவரது இரக்கம் இடைவிடாமல் இந்தப் பூமியைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. மேகத்தில் அந்த வில்லைப் பார்க்கும்போது, தமது உடன்படிக்கையை நினைப்பார் என்று தேவன் கூறுகிறார். அவர் மறந்துவிடக்கூடியவர் என்று நாம் புரிந்துகொள்ளுவதற்காக அல்ல, அவரைச் சிறப்பாகப் புரிந்துகொள்ளுவதற்காக மனிதனுடைய சொந்த மொழியில் அவனிடம் பேசுகிறார். (24) ★

# 9

# பாபேல் கோபுரம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 72–74)**

**திருவசன ஆதாரம்: ஆதியாகமம் 11:1–9**

நோவாவின் சந்ததியின் சிலர் விரைவில் மருளவிழத் தொடங்கினார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் நோவாவின் மாதிரியைப் பின்பற்றி, தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தனர். மற்றவர்கள் நம்பிக்கையில்லாதவர்களாகவும் கலகம்செய்பவர்களாகவும் இருந்தனர். இவர்களும் நோவாவின் காலத்தில் இருந்தவர்களைப்போலவே, ஜலப்பிரளயத்தைப்பற்றி நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தனர். தேவன் இருக்கிறார் என்பதையே சிலர் நம்பாதவர்களாக இருந்து, இயற்கையின் காரணத்தினால் ஜலப்பிரளயம் உண்டானது என்று தங்களுடைய மனப்பான்மையின்படி கணக்கிட்டுக்கொண்டனர்; மற்றவர்கள் தேவன் இருக்கிறார் என்று நம்பினார்கள்; அழித்தார் என்றும் நம்பினார்கள்; அவர்களது உணர்வுகள் காயீனின் உணர்வுகளைப் போன்றிருந்தது; தேவன் மக்களை அழித்ததற்காகவும் மூன்றாவது சாபமாக ஜலப்பிரளயத்தை உண்டுபண்ணினதற்காகவும் தேவனுக்கு எதிராகக் கலகம்செய்ய எழுந்தனர். எவர்கள் தேவபக்தி உள்ளவர்களாயிருந்து, தங்களுடைய நீதியான உரையாடல்களினாலும் தெய்வபக்திமிக்க வாழ்க்கையினாலும் தேவனை நேசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தார்களோ அவர்களால், தேவனுக்கு எதிரிகளாக இருந்தவர்கள் நாள்தோறும் கடிந்துகொள்ளப்படுபவர்களாக இருப்பதை உணர்ந்தனர். துன்மார்க்கருடைய நடத்தையை நீதிமான்களுடைய வாழ்க்கை குறைகூறுவதாக இருந்ததினால், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசனைசெய்து, விசுவாசமிக்கவர்களிடமிருந்து பிரிந்துசெல்லவேண்டும் என்று தீர்மானித்தனர். (1)

அவர்கள் நீண்டதூரம் பயணம்செய்து, ஒரு பெரும் சமவெளியைத் தங்களது வாழுமிடமாகத் தெரிந்துகொண்டனர். அவர்கள் ஒரு நகரத்தைக் கட்டினார்கள். அதன்பின் மேகத்திற்குள்ளாக உயரும்வரை உயரமான ஒரு

கோபுரத்தைக் கட்டினால், அந்த நகரத்திலிருந்தும் கோபுரத்திலிருந்தும் சிதறிப்போகாதபடி ஒருமித்து வாழலாம் என்ற திட்டத்தையும் தீட்டினார்கள். மீண்டும் மற்றுமொரு ஜலப்பிரளயம் வந்தால், அதிலிருந்து பாதுகாப்பாக இருக்கும்படிக்கு, முதலில் உண்டான ஜலப்பிரளயத்தினால் தண்ணீர் எந்த அளவிற்கு உயர்ந்ததோ, அதைவிட உயரமான ஒரு கோபுரத்தைக் கட்டலாம்; அப்பொழுது உலகம் முழுவதும் தங்களை சிறப்பிக்கும்; மேலும் தேவர்களைப்போல் இருந்து, மக்களை ஆளுகைசெய்யலாம் என்றும் அவர்கள் எண்ணினார்கள். அந்தக் கோபுரமானது அதைக் கட்டுபவர்களை உயர்த்தவும், உலகத்தில் வாழ்பவர்களுடைய கவனத்தை தேவனைவிட்டு தங்களை (கடவுளாக) ஆராதனைசெய்யத் திரும்பும்படியான நோக்கத்துடனும் திட்டமிடப்பட்டு (அந்தக் கோபுரம்) கட்டப்பட்டது. அந்தக் கட்டிடத்தின் வேலை நிறைவடையுமுன், மக்கள் அந்தக் கோபுரத்தில் குடிபுகுந்தனர். மிகவும் கவரக்கூடிய பொருட்களால் அறைகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன; அவைகள் விக்கிரகங்களுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தவர்கள், தங்களுடைய கோபுரம் மேகங்களை எட்டுமானால் அங்கே இருந்துகொண்டு ஜலப்பிரளயம் உண்டானதற்கான காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்துவிடலாம் என்றும் கற்பனைசெய்திருந்தனர். (2)

அவர்கள் தேவனுக்கெதிராகத் தங்களை உயர்த்தினார்கள். ஆனால் அவர்களுடைய வேலையைப் பூர்த்திசெய்ய தேவன் அனுமதிக்கமாட்டார். மிக உயரமான அளவிற்கு அவர்கள் அந்தக் கோபுரத்தைக் கட்டினபோது, அவர்களை அவர்களுடைய வேலையில் குழப்புவதற்காகக் கர்த்தர் இரண்டு தூதர்களை அனுப்பினார். அந்தக் கோபுரத்தின் உச்சியிலிருந்து மேலும் உயரமாகக் கோபுரத்தைக் கட்டிக்கொண்டிருந்தவர்களுக்கு தரையிலிருந்து பொருட்கள் செல்லவேண்டியதாக இருந்தது; எனவே கோபுரத்தின் உச்சியில் வேலைசெய்திருந்தவர்கள் அவர்களுக்கு என்னென்ன பொருட்கள் தேவை என்பதைத் தரையில் இருப்பவர்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இருந்தது. அப்படித் தேவைப்படும் பொருட்களைப்பற்றித் தரையிலிருப்பவர்களுக்குத் தெரிவிப்பதற்காக, கோபுரம் நெடுகிலும் ஆங்காங்கே தகவல்களைப் பரிமாறுவதற்கு ஆட்களை நிறுத்தியிருந்தனர். கோபுரத்தின் உச்சியில் வேலைசெய்திருந்தவர்களுக்கு அவசியப்பட்டிருந்த பொருட்களைப்பற்றிய தகவல் இந்த இடைநிலை மனிதர்கள்மூலமாக தரைக்கு எட்டியிருந்தது. தரையில் இருந்தவர்கள் உச்சியில் இருந்தவர்கள் அனுப்பின தகவலின்படி பொருட்களை மேலே அனுப்பி இருந்தனர். இவ்வாறாக, அந்தக் கோபுரப்பணி முன்னேறிக்கொண்டிருந்தது. இந்த நிலைமையில் கர்த்தரால் அனுப்பப்பட்ட அந்த இரு தூதர்களும் மொழியைக் குழப்பிவிடவே—

தாறுமாறாக்கிவிடவே—கோபுரத்தின் உச்சியில் வேலைசெய்திருந்தவர்கள் ஒரு பொருளை அனுப்பிவைக்கும்படிக் கூற, வேறொரு பொருள் அனுப்பிவைக்கப்பட்டது. இந்தக் குழப்பத்தினால், கோபுரம் கட்டும் பணி தொடரமுடியாமலாகிவிட்டது. தேவையான பொருட்கள் கிடைக்காமலும், தேவையில்லாத பொருட்கள் கிடைத்ததினால் பயன் இல்லாமலுமாக, அந்தக் கோபுரப்பணி தொடரமுடியாமற்போய்விட்டது. மிகுந்த உழைப்புடன் பொருட்கள் கோபுரத்தின் உச்சியைச் சென்றடைந்தபோது, அவை அவர்களுக்கு அவசியப்படாதவைகளாக இருந்தன. மனமடிவும் கோபமும் அடைந்த வேலைக்காரர்கள் எவர்களைத் தவறு செய்கிறவர்களாக எண்ணினார்களோ அவர்களை நிந்தித்தனர். (3)

இப்படிப்பட்ட சூழ்நிலையினால் அவர்களது வேலைகளில் இசைவு இருக்கவில்லை. தவறாகப் புரிந்துகொள்ளுவதற்கான காரணத்தை அறியமுடியாத நிலையிலும், அவர்களுக்கிடையில் (எதிர்பாராமல்) உண்டான மொழி வேற்றுமையினாலும், அந்த வேலையை அவர்கள் விட்டுவிட்டு, ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து, பூமியின்மீதெங்கும் சிதறிப்போனார்கள். அந்த நேரம்வரையில் மனிதர்கள் ஒரே மொழியைப் பேசியிருந்தனர். தேவனுடைய கோபத்தின் அடையாளமாக வானத்திலிருந்துண்டான மின்னல்கள் அந்தக் கோபுரத்தின் உச்சியை இடித்துத் தரையில் விழச்செய்தன. இவ்வாறாக, தேவன், தாமே மேலானவர் என்பதைக் கலகம்செய்யும் மனிதனுக்குக் காட்டுவார். (4)

இனி உலகத்தை ஜலப்பிரளயத்தினால் அழிக்கமாட்டேன் என்று ஆண்டவர் தீர்மானமாக வாக்குத்தத்தம்செய்து, அதற்கு அடையாளச் சின்னமாக வானவில்லைக் கொடுத்தார். அதை நம்பாத மக்கள், இனி ஒரு ஜலப்பிரளயம் வந்தால் அந்த அழிவிலிருந்து தப்புவதற்காக ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டினார்கள்! ஜலப்பிரளயம் வரும் என்று நோவா பிரசங்கித்தபொழுது அதை நம்பவில்லை! இனி ஜலத்தினால் உலகத்தை அழிக்கமாட்டேன் என்று ஆண்டவரே வாக்குத்தத்தம் செய்தபோது அதையும் நம்பவில்லை! (5) ★

# 10

# ஆண்டவரை விசுவாசித்த ஆபிரகாம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 75–83)**

**திருவசன ஆதாரம்: ஆதி. 12:1–5; 13; 16; 17; 21; 22:1–19**

கர்த்தர் தமது சித்தத்தை நடத்துவதற்கு ஆபிரகாமைத் தெரிந்துகொண்டார். விக்கிரக ஆராதனை செய்யும் தனது ஜாதியினரைவிட்டு விலகிப் பிரிந்துசெல்லும்படி கர்த்தர் ஆபிரகாமிடம் கூறினார். ஆபிரகாமின் இளமையில் கர்த்தர் அவனுக்குத் தம்மை வெளிப்படுத்தி, புரிந்துகொள்ளும் ஆற்றலை அவனுக்குக் கொடுத்து, விக்கிரக ஆராதனையிலிருந்து அவனைப் பாதுகாத்தார். பிற்காலத்தில் பூமியில் வாழவிருக்கும் அவருடைய சந்ததியினருக்கு உண்மையான விசுவாசத்திற்கும் பக்திக்கும் உதாரணமானவனாக இருக்கும்படி அவர் அவனை தகுதிப்படுத்தினார். நேர்மை, ஈகை, விருந்தோம்பல் ஆகிய பண்புகளுக்காக அவன் போற்றப்படுவனாக இருந்தான். மக்களுக்கிடையில் வல்லமைமிக்க ஒரு பிரபுவாக இருந்து, அவர்களது மதிப்பைப் பெற்றிருந்தான். தேவன்மீது அவனுக்கிருந்த பக்தியும் அன்பும் அவரது சித்தத்தைச் செயலாற்றுவதில் இருந்த பூரணமான கீழ்ப்படிதலும் அவனது வேலைக்காரர்கள், அயல்வாசிகள் ஆகியோரிடமிருந்து அவனுக்கு மதிப்பைக்கொண்டுவந்திருந்தது. தெய்வபக்திமிக்க அவனுடைய உதாரணமும் நீதியான நடத்தையும், தனது வேலைக்காரர்களுக்கும் வீட்டிலுள்ளவர்களுக்கும் அவன் கொடுத்திருந்த விசுவாசமிக்க போதனைகளுடன் சேர்ந்து, அவர்கள் ஆபிரகாமின் தேவனிடம் பக்தி செலுத்தவும் அவரை நேசிக்கவும் அவருக்குப் பயப்படவும் வழிநடத்தியது. கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி, அவனுடைய சந்ததியார் வானத்தின் நட்சத்திரங்களைப்போல இருப்பார்கள் என்றார். அவன்மீது வந்த காரிருளின் பயத்தின் மூலமாக, எகிப்தில் அவனுடைய சந்ததியினர் நீண்டகாலம் அடிமைகளாக இருந்து சேவிப்பார்களென்பது அவனுக்கு உருவகமாக அறிவுறுத்தப்பட்டது. (1)

ஆரம்பத்தில் தேவன் ஆதாமுக்கு ஒரு மனைவியைக் கொடுத்து, இவ்விதமாக அவரது நியதியைக் காட்டியிருந்தார். மனிதனுக்குப் பல மனைவிகள் இருக்கவேண்டும் என்று அவர் ஏற்பாடு செய்யவில்லை. தேவனுடைய ஞானமிக்க இந்த ஏற்பாட்டிலிருந்து லாமேக்கு என்பவன்தான் முதன்முதலில் விலகிச்சென்றான். அவனுடைய வீட்டில் சச்சரவுகள் உண்டாகும்படி அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள்; அவர்கள் குடும்பத்தில் அமைதியின்மையை உண்டுபண்ணினார்கள். பூமியின்மீது மனிதர்கள் பெருகத்தொடங்கி, அவர்களுக்குப் பெண்பிள்ளைகள் பிறந்தபோது, எவர்களையெல்லாம் விரும்பினார்களோ அவர்களையெல்லாம் மனைவிகளாக வைத்துக்கொண்டனர். இந்த செயல் தேவனுக்கு கோபம் உண்டாக்கின பழைய உலகக் குடிகளின் பெரும் பாவங்களில் ஒன்றாக இருந்தது. ஜலப்பிரளயத்திற்குப்பின் இந்தச் சம்பிரதாயம் நடைமுறைப்படுத்தப்பட்டு, மிகவும் சாதாரணமானதாகி, நீதிமான்களும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பல மனைவிகளை கொண்டு, இந்தக் காரியத்தில் தேவனுடைய ஒழுங்கிலிருந்து விலகிச்சென்றனர்; எனினும் அது சிறிய பாவமாக இருக்கவில்லை! பேழைக்குள் வைக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டிருந்த நோவாவையும் அவன் குடும்பத்தினரையும் நோக்கி: “நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்” (ஆதியாகமம் 7:1) என்ற கர்த்தர் கூறினார். நோவா ஒரே மனைவியை உடையவனாக இருந்தான். அவர்களது ஒன்றுபட்ட குடும்பத்தின் ஒழுக்கம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. நோவாவின் குமாரர்கள் நீதிமான்களாக இருந்தபடியால், நீதிமானாயிருந்த அவர்களுடைய தகப்பனுடன் சேர்ந்து அவர்களும் பேழைக்குள் பிரவேசித்து பாதுகாக்கப்பட்டனர். பலதார மணத்தை தேவன் ஒரு தடவைகூட அனுமதிக்கவில்லை. அது அவருடைய சித்தத்திற்கு எதிரானதாக இருக்கிறது; அதன் காரணமாக, மனிதனின் மகிழ்ச்சி அழிந்துபோகும் என்பதை தேவன் அறிந்திருந்தார். ஆகாருடனுள்ள மகிழ்ச்சியற்ற திருமணத்தினால் ஆபிரகாமின் சமாதானம் மிகவும் அதிகமாகச் சீர்குலைந்தது! (2)

### தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மீதான தடுமாற்றம்!

லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்தபின்பு, கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: ”உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும்

இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும் என்றார். கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிரகாமே, பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார். அதற்கு ஆபிரகாம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே. என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்திரவாளியாய் இருக்கிறான் என்றான்.” (3)

ஆபிரகாமுக்குக் குமாரன் இல்லாமல் இருந்ததினால், அவனது நம்பிக்கைக்குரிய வேலைக்காரனான எலியேசர், சுவீகாரத்தின்மூலமாக அவனுக்கு மகனும் சுகந்திரவாளியுமாவான் என்று முதலில் நினைத்தான்; ஆனால் அவனுடைய வேலைக்காரன் அவனுக்குக் குமாரனாகவோ சுதந்திரவாளியாகவோ இருப்பதில்லை. உண்மையாகவே அவனுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்றார். ”அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னால் கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி, பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.” அவர்களுக்கு ஒரு குமாரன் கொடுக்கப்படுவான் என்ற வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்காக நம்பிக்கையுடன் ஆபிரகாமும் சாராளும் காத்திருந்தார்களானால், ஏற்பட்டிருந்த மிகுந்த மகிழ்ச்சிக்குறைவுகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அந்தக் காரியம் தேவன் வாக்குத்தத்தம் செய்ததாகத்தான் இருக்கும் என்று நம்பினர். ஆனால் வயதான காலத்தில் சாராளுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்பதை அவர்களால் நம்பமுடியவில்லை. சாராள் ஒரு திட்டத்தைக் கூறினாள்; அதன்படி தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று அவள் எண்ணினாள். ஆகாரை ஆபிரகாமின் மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி, அவள் அவனிடம் மன்றாடினாள். இந்தக் காரியத்தில் அவர்கள் இருவருமே தேவனுடைய வல்லமையின்மீது பூரணமான நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தனர். சாராளின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, ஆகாரைத் தனது மனைவியாகச் சேர்த்துக்கொண்டதினால், தேவனுடைய எல்லையில்லாத வல்லமையின்மீது அவனுக்கு இருந்திருக்கவேண்டிய விசுவாசத்திற்கான சோதனையில் தோற்றுப்போய், தன்மீதும் சாராளின்மீதும் அதிகமான மகிழ்ச்சியின்மையைக் கொண்டுவந்தான். தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்திருந்த அவரது வாக்குத்தத்தத்தின்மீது, ஆபிரகாம் வைத்திருந்த உறுதியான விசுவாசத்தையும் அவரைச் சார்ந்திருத்தலையும் மெய்ப்பிக்கக் கர்த்தர் விரும்பினார். (4)

## அகந்தைக்காரி—ஆகார்!

ஆகார் மிகவும் அகந்தையும் பெருமையுமிக்கவளாக சாராளுக்கு முன் கர்வமாக நடந்திருந்தாள். தேவன், ஆபிரகாமை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறின வாக்குத்தத்தத்தின்படி, நான் ஒரு பெரிய ஜாதிக்குத் தாயாவேன் என்று ஆகார் தனக்குள் அகந்தையும் மேட்டிமையுமிக்கவளானாள். ஆகாரின் நடத்தையைப்பற்றி அவள் தவறாக நடந்துகொள்ளுகிறாள் என்னும் சாராளின் குற்றச்சாட்டுகளைக் கவனிக்கும்படி ஆபிரகாம் வற்புறுத்தப்பட்டான். ஆபிரகாம் வருத்தமடைந்து, சாராளை நோக்கி: ஆகார் உன்னுடைய வேலைக்காரி, உன்னால் அவளைக் கட்டுப்படுத்தமுடியும் என்றான்; ஆனால் அந்தப் பிள்ளை ஆபிரகாமின் குமாரனாக இருப்பதினால், கர்ப்பிணியான ஆகாரை விரட்டிவிட ஆபிரகாம் மறுத்தான். ஆகாரின் பிள்ளையின்மூலமாகத்தான் வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டியதாக இருக்கிறது என்று அவன் நினைத்தான். சாராள் விசேஷமாக ஆபிரகாமிடம் வேண்டிக்கொள்ளாமலிருந்தால், அவளை அவன் தனது மனைவியாக்கிக்கொண்டிருந்திருக்கமாட்டான் என்றும் ஆபிரகாம் கூறுகிறான். (5)

சாராளின் அத்துமீறிய நடவடிக்கைகளைப்பற்றிய ஆகாரின் குற்றச்சாட்டுகளை ஆபிரகாம் கேட்கவேண்டியவனானான். ஆபிரகாம் குழம்பினான். ஆகாரின் தவறுகளுக்குப் பரிகாரம் காண முயன்றால், அது அவனது முதல் மனைவியும் அவனால் மிகவும் நேசிக்கப்படுபவளுமான சாராளின் பொறாமையையும் மகிழ்ச்சிக் குறைவையும் அதிகரிக்கச்செய்யும். சாராளின் முகத்திலிருந்து ஆகார் ஓடிப்போகிறாள். தேவதூதர்கள் அவளைச் சந்தித்து ஆறுதல்படுத்தி, அவளது முரட்டுத்தனமான நடத்தைக்காக அவளைக் கடிந்துகொண்டு, அவளுடைய எஜமானியிடத்திற்குத் திரும்பிச்சென்று, அவளுக்குக் கீழ்ப்படிந்துநடக்கும்படி கட்டளையிடுகிறார்கள். (6)

இஸ்மவேல் பிறந்தபின் கர்த்தர் மறுபடியும் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி: “நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்” என்றார். கர்த்தர் அவருடைய தூதனின்மூலமாக, சாராள் ஜாதிகளுக்குத் தாயாக இருக்கும்படி அவளுக்கு ஒரு குமாரனைத் தருவேன் என்னும் வாக்குத்தத்தத்தை திரும்பவும் கூறினார். அப்படியிருந்தும் ஆபிரகாமினால் தேவனுடைய வாக்குத்தத்தத்தைப்

புரிந்துகொள்ளமுடியவில்லை; வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட அநேக ஜாதிகள், இஸ்மவேல்மூலமாக உடனே உண்டாகப்போவதுபோல் அவன் எண்ணினான். அவனது மனம் இஸ்மவேலின்மேல் தங்கினது. அவன் தன் மகன்மீது வைத்திருந்த பாசத்தினால், உணர்ச்சிமேலிட்டவனாக, இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக என்றான். “உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாக உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்; அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் பின்வரும் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்” என்னும் வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு மிகவும் குறிப்பாகத் திரும்பவும் கூறப்பட்டிருக்கிறது. (7)

**வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மகன்—ஈசாக்கு!**

ஈசாக்கு பிறந்தபின், ஆபிரகாமும் சாராளும் வெளிக்காட்டின பெரிய மகிழ்ச்சி, ஆகாருக்கு அதிகமான பொறாமை உண்டாவதற்குக் காரணமாயிற்று. ஆபிரகாமின் மகனான இஸ்மவேல் சிறப்பான விதத்தில் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு, வாக்குத்தத்தத்தின்படி சுதந்திரவாளியாக இருப்பான் என்று, அவனுடைய தாயினால் போதிக்கப்பட்டிருந்தான். இஸ்மவேல் தனது தாயின் உணர்வுகளில் பங்குகொண்டு, ஈசாக்கின் பிறப்பினால் உண்டான மகிழ்ச்சியில் கோபங்கொண்டிருந்தான். அவன் தன்னை மூத்தவன் என்று நினைத்து, ஈசாக்கை இகழ்ந்து பரிகசித்தான். சாராள் தன்னுடைய மகனான ஈசாக்கினிடத்தில் இஸ்மவேல் நடந்துகொள்ளும் விதத்தைக் கண்டபோது, மிகவும் வேதனை அடைந்தாள். ஆபிரகாமிடம், இஸ்மவேல் அவளிடமும் அவளுடைய மகனான ஈசாக்கிடமும் மரியாதை இல்லாத விதத்தில் நடந்துகொள்ளுவதைப்பற்றிய காரியங்களை விவரித்து: இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும்; இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்திரவாளியாக இருப்பதில்லை என்றாள். (8)

ஆபிரகாம் மிகவும் வேதனை அடைந்தான். இஸ்மவேல் அவனால் நேசிக்கப்பட்ட அவனுடைய குமாரனாக இருந்தான். அவனை எப்படி அவனால் அனுப்பிவிடமுடியும்? அவன் தனது குழப்பத்தில் தேவனை நோக்கி ஜெபித்தான். எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆபிரகாம் சாராளின் சொல்லைக் கேட்கவேண்டுமென்றும், இஸ்மவேல், ஆகார் ஆகியோரின்மீதுள்ள அவனது அன்பு சாராளின் சொல்லுக்கு எதிரானதாக இருக்கக்கூடாது என்றும் கர்த்தர் அவருடைய தூதர்கள்மூலமாக ஆபிரகாமிற்குத் தெரிவித்தார். தனது வீட்டில் மறுபடியும் மகிழ்ச்சியையும் ஒற்றுமையையும் உண்டுபண்ண அவன் பின்பற்றவேண்டிய

செயல் இது ஒன்றுமட்டுமாகவே இருந்தது. இஸ்மவேல் அவனது தகப்பனுடைய வீட்டைவிட்டுப் பிரிந்துசெல்ல நேரிட்டாலும், மரிக்கவோ அல்லது தேவனால் கைவிடப்படவோமாட்டான். அவன் ஆபிரகாமின் மகனாக இருப்பதினால் பாதுகாக்கப்படுவான். இஸ்மவேலையும் ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்று தேவன் வாக்குத்தத்தம்செய்திருந்தார். ஆபிரகாம் மிகவும் மேன்மையானதும் அனுதாபமிக்கதுமான சுபாவத்தை உடையவனாக இருந்தான் என்பது சோதோமின் மக்களுக்காக அவன் மிகுந்த அக்கரையுடன் கெஞ்சி மன்றாடினதின்மூலமாக வெளிக்காட்டப்பட்டிருந்தது. பலமிக்க அவனுடைய ஆவி மிகுந்த வேதனையை அடைந்தது. ஆகாரையும் அவளது மகனான இஸ்மவேலையும் அந்நிய நாட்டில் அந்நியர்களாக அலைந்து திரியும்படி அனுப்பிவிட்டபோது, அவன் துயரத்தில் வீழ்ந்தான், ஆழ்ந்த துயரத்தால், தகப்பன் என்னும் அவனுடைய உணர்வானது அவனை மிக ஆழமாக அசைத்தது. (9)

பலதார மணத்தை தேவன் அனுமதித்திருந்தால், ஆகாரையும் அவளுடைய மகனையும் இவ்விதமாக அனுப்பிவிடும்படியாக, இப்படித் திசைகாட்டியிருந்திருக்கமாட்டார். திருமண உறவின் உரிமைகளும் மகிழ்ச்சியும் எப்பொழுதும் பெரும் தியாகத்திற்கிடையிலும் மதிக்கப்பட்டுக் காக்கப்படவேண்டும் என்று இந்தக் காரியத்தில் அவர் அனைவருக்கும் ஒரு பாடம் கற்பிக்கிறார். சாராள் ஒருவள் மாத்திரமே ஆபிரகாமின் உண்மையான ஒரே மனைவியாக இருந்தாள். ஒரு மனைவி—ஒரு தாய் என்னும் தகுதியில் அந்தக் குடும்பத்தில் வேறொருவருக்கும் இல்லாத உரிமைக்குத் தகுதி உடையவளாக அவள் இருந்தாள். அவள் தன் கணவனை ஆண்டவனே என்றழைத்து பக்திசெலுத்தியிருந்தாள்; ஆனால் அவனுடைய அன்பு ஆகாருடன் பகிர்ந்துகொள்ளப்படக்கூடாது என்பதில் வைராக்கியம் உள்ளவளாக இருந்தாள். சாராள் பின்பற்றின அவளது நடத்தைக்காக கர்த்தர் அவளைக் கடிந்துகொள்ளவில்லை! (10)

ஆபிரகாம் தேவனுடைய வல்லமையில் நம்பிக்கை வைக்காமல், ஆகாரை அவனது மனைவியாக ஏற்றுக்கொண்டு, அவள்மூலமாக வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று நினைத்ததற்காக, தூதர்களால் கடிந்துகொள்ளப்பட்டான்! (11)

## விசுவாசம்பற்றிய மாபெரும் சோதனை!

ஒரு மிகப் பயங்கரமான சோதனையின்மூலமாக, ஆபிரகாமின் விசுவாசத்தைச் சோதிப்பது தகுதியான ஒன்று என்று மறுபடியும் கர்த்தர் கண்டார். அவன் முதலாம் சோதனையைச் சகித்திருந்து சாராள்மூலமாக நிறைவேறவுள்ள

வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காகப் பொறுமையுடன் காத்திருந்து, ஆகாரைத் தனது மனைவியாக்கிக்கொள்ளாமல் இருந்திருந்தால், மனிதனிடமிருந்து ஒருபோதும் அவசியப்படாமலிருந்த இந்த மகா பயங்கரமான சோதனைக்கு அவன் ஆளாகி இருந்திருந்திருக்கமாட்டான். உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார். (12)

ஆபிரகாம் தேவன்மீது நம்பிக்கையற்றவனாக இருக்காமல், தயக்கமற்றவனாக இருந்தான்; அதினால் அதிகாலையில் அவன் தனது இரண்டு வேலைக்காரர்களையும் அவனது மகனாக ஈசாக்கையும் அழைத்துக்கொண்டு, தகனபலிக்கான விறகையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு, தேவன் அவனிடம் கூறியிருந்த இடத்தைநோக்கிச் சென்றான். சாராளிடம் கூறினால், தனது மகனின் மீதிருந்த பாசத்தின் காரணமாக, தேவன்மீது நம்பிக்கையற்றவளாக அவளது மகனை அனுப்ப மறுத்துவிடுவாள் என்று அறிந்து, அவனது பயணத்தின் உண்மையான நோக்கத்தை அவன் வெளிப்படுத்தவில்லை. தேவனுக்கு எதிராகக் கலகம்செய்யும்படிக்கு ஆபிரகாம், தகப்பன் என்னும் தனது உணர்ச்சிகள் தன்னைக் கட்டுப்படுத்துவதற்கு இடம் கொடாமலிருந்தான். அவனது ஆத்துமாவின் ஆழத்தைக் கலங்கச்செய்வதற்கென்றே தேவனுடைய கட்டளை கணக்கிடப்பட்டிருந்தது. உன் புத்திரனை அழைத்துக்கொண்டுபோய் என்று முதலில்கூறி, அதன்பின்னர் அவனுடைய இருதயத்தை இன்னும் சற்று ஆழமாகத் துளைப்பதற்காக, உன் நேச குமாரனாகிய ஈசாக்கை என்று சேர்த்து, அதாவது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஒரே குமாரனை தகனபலியாகப் பலியிடு என்றார். (13)

இந்தத் தகப்பன் மூன்று நாட்கள் தனது மகனுடன் பயணம் செய்தான். தேவன்மீது காரணம் காண்பதற்கும்–சந்தேகப்படுவதற்கும் இடம் கொடுத்தால், அப்படிச் சந்தேகப்பட போதுமான காலம் இருந்தது. ஆனால் அவன் தேவன்மீது நம்பிக்கை இல்லாதவனாக இல்லை. ஈசாக்கின்மூலமாக வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று தேவன் வெளிப்படையாக கூறியிருந்தார். இஸ்மவேலின்மூலமாக வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று அவன் இப்பொழுது காரணம் காணவில்லை. (14)

ஈசாக்கு மட்டுமே வாக்குத்தத்தத்தின் மகன் என்று ஆபிரகாம் நம்பினான். அவன் தன்னுடைய மகனைத் தகனபலி செலுத்தும்படி தேவன் கூறினார் என்றால், அவர் கூறியது சரிதான் என்றும் அவன் நம்பினார். சாராளுக்கு, அவளுடைய முதிர்வயதில்—தமது தெய்வீக ஏற்பாட்டினால் ஒரு மகனைக் கொடுத்தவர், அந்த மகனுடைய உயிரை எடுத்துவிடும்படி, காரணப்படுத்துவாரானால், அந்த ஈசாக்கை, மரணத்தில் இருந்தும் எழுப்பி, அவனுக்கு உயிரைக் கொடுக்கவும் முடியும் என்று விசுவாசமுள்ளவனாக இருந்து, தேவனுடைய வாக்குத்தத்தத்தில் அவன் தடுமாற்றம்

அடையாதவனாக இருந்தான். ஆபிரகாம் வழியருகில் வேலைக்காரர்களை விட்டுவிட்டு, அவர்களைவிட்டுச் சற்று தூரத்திற்குத் தானும் தனது மகனுமாகத் தனியாகச்சென்று, தேவனைத் தொழுதுவிட்டுவருவதாகக் கூறினான். (15)

தேவன் என்ன செய்யும்படி ஆபிரகாமுக்குக் கட்டளையிட்டிருந்தாரோ, அதைச் செய்யவிடாதபடி அந்த வேலைக்காரர்கள், ஈசாக்கின்மீதுள்ள அன்பினால், அவனைத் தடுத்துவிடுவார்கள் என்றெண்ணி, அவனுடைய வேலைக்காரர்கள் அவனுடன் வருவதற்கு அவன் அனுமதிக்காமலிருந்தான். வேலைக்காரர்களின் கைகளிலிருந்து கட்டைகளை வாங்கி, தனது மகனின் தோள்கள்மீது வைத்தான்; நெருப்பையும் கத்தியையும்கூட அவன் எடுத்துக்கொண்டான். தேவனால் அவனுக்கு கொடுக்கப்பட்டிருந்த பயங்கரமான செயலை நடத்த, அவன் ஆயத்தமானான். தகப்பனும் மகனும் ஒன்றாக நடந்துசென்றனர். (16)

அப்பொழுது ஈசாக்கு தனது தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: என் தகப்பனே, என்றான்; அதற்கு அவன்: என் மகனே, இதோ, இருக்கிறேன் என்றான்; அப்பொழுது அவன்: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது; தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துகொள்வார் என்றான்; வேதனையுடன் இருந்த அந்த அன்பான தகப்பன் உறுதியுடனும் திடமாகவும் அவனது மகனுக்குப் பக்கத்தில் நடந்துசென்றான். தேவன் ஆபிரகாமுக்குச் சுட்டிக்காட்டியிருந்த இடத்திற்கு அவர்கள் வந்ததும், அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதின்மேல் கட்டைகளை அடுக்கி, பலி செலுத்துவதற்குத் ஆயத்தமாகி, அதன்பின் ஈசாக்கிடம் அவனைத் தகனபலியாகச் செலுத்தும்படி தேவன் கொடுத்த கட்டளையைக் கூறினான். ஈசாக்கின்மூலமாக அவன் ஒரு பெரிய ஜாதியாவான் என்றும், அவனைப் பலிசெலுத்த தேவன் கொடுத்த கட்டளையைச் செயல்படுத்துவதின்மூலம், தேவன் அவரது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்றும், ஏனெனில் மரித்தோரிலிருந்து அவனை எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறார் என்றும், தேவன் அவனுக்குப் (ஆபிரகாமிற்கு) பலதடவைகள் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை அவனுக்கு (ஈசாக்கு)த் திரும்பவும் கூறினான். (17)

## கர்த்தருடைய தூதனானவரின் தூது!

ஈசாக்கு தேவனில் நம்பிக்கை உள்ளவனாக இருந்தான். அவன் தனது தகப்பனுக்குத் தவறாமல் கீழ்ப்படியும்படி கற்பிக்கப்பட்டிருந்து, அவன் தனது தகப்பனின் தேவனை நேசித்து, அவரிடம் பக்தி உள்ளவனாக இருந்தான். அவன் தனது தகப்பனைத் தடுக்க வேண்டுமென்று விரும்பியிருந்தால், அவனால் ஆபிரகாமைத் தடுத்திருந்திருக்க முடியும்; ஆனால் மிகுந்த அன்புடன் அவனது தகப்பனைக் கட்டித் தழுவியபின், தன்னைக் கட்டி,

அந்தக் கட்டைகளின்மீது கிடத்த அவன் கீழ்ப்படிந்தான். தனது மகனை வெட்டுவதற்காக அவன் கத்தியை உயர்த்தினபோது, மோரியா வரை ஆபிரகாம் செய்திருந்த பயணத்தில் ஆபிரகாமின் விசுவாசமனைத்தையும் பதிவுசெய்திருந்த கர்த்தருடைய தூதரானவர் வானத்திலிருந்து ஆபிரகாமை அழைத்து: ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன் என்றான். அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், ஏக சுதன் என்றும் பாராமல், எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால், நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார். ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாக புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம்போய், கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான். (18)

ஆபிரகாம் இப்பொழுது முழுமையாகவும் மேன்மையாகவும் அந்தச் சோதனையைச் சகித்துக்கொண்டான். முதலில் அவன் தேவன்மீது பூரணமான நம்பிக்கை இல்லாதவனாக இருந்து, எந்த விசுவாசக் குறைவினால் ஆகாரை மனைவியாக விவாகம்செய்தானோ அந்தக் குறைபாட்டை இப்பொழுது மீட்டுக் கொண்டான். ஆபிரகாமின் விசுவாசமும் தேவன்மீதிருந்த நம்பிக்கையும் வெளிக்காட்டப்பட்டபின் தேவன் அவனுடனுள்ள வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்தார். கர்த்தருடைய தூதரானவர் இரண்டாம்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு: நீ உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியால், நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும் கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும், என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். (19) ★

# 11

# ஈசாக்கின் திருமணம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 84–86)**

**திருவசன ஆதாரம்: ஆதியாகமம் 24.**

கானானியர்கள் உருவ வழிபாடு செய்பவர்களாக இருந்தனர். எனவே, தமது ஜனங்களும் உருவ வழிபாட்டிற்குள் நடத்தப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, அவர்கள் கானானியர்களுடன் கலப்புத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். ஆபிரகாம் முதிர்வயதுள்ளவனாயிருந்து, தான் விரைவில் மரிக்க இருப்பதை எதிர்பார்த்தான். ஈசாக்கு இன்னும் திருமணம் ஆகாதவனாக இருந்தான். ஈசாக்கைக் சுற்றிலுமிருந்த கறைபடிந்த ஆதிக்கங்களைப்பற்றி ஆபிரகாம் பயந்திருந்தான். எனவே தேவனைவிட்டு விலகிச்செல்லும்படி அவனை நடத்திவிடாத ஒரு மனைவியைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதில் கவனம் உள்ளவனாக இருந்தான். இந்தக் காரியத்தைத் தனது சொத்துக்களுக்கெல்லாம் மேல் விசாரணைக்காரனாக இருந்த, விசுவாசமிக்க அனுபவசாலியான வேலைக்காரனிடம் ஒப்படைத்தான். (1)

கானானியர்களிடமிருந்து தன் மகன் ஈசாக்கிற்குப் பெண் கொள்ளாமல், மெய்தேவனின்மீது நம்பிக்கை வைத்திருந்த ஆபிரகாமின் இனத்தாரிடத்திற்குச் சென்று, ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று அவன் கர்த்தருக்கு முன்பாக பக்திவிநயமாக ஆணையிட்டுக் கொடுக்கவேண்டுமென்று தனது வேலைக்காரனிடம் முக்கியப்படுத்தினான். அவன் தான் எந்த தேசத்திலிருந்து வந்திருந்தானோ அந்த தேசத்திற்குத் தன் மகனை உடன் அழைத்துச் செல்லாமல் இருப்பதற்கு எச்சரிக்கை உள்ளவனாக இருக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டான். ஏனெனில் அந்த இடமெல்லாம் ஏறத்தாழ உருவ வழிபாடுகளினால் பாதிக்கப்பட்டிருந்தது. (2)

தன்னுடைய இனத்தாரை விட்டுவிட்டு, தான் இருக்கும் இடத்திற்கு வரக்கூடிய ஒரு மனவைியை ஈசாக்கிற்கு அவனால் காணமுடியாமல், அவன் தான் இருக்குமிடத்திற்குத் திரும்பிவர நேர்ந்தால், அப்பொழுது

அவன் ஆணையிட்டுக்கொடுத்த அந்த ஆணைக்கு நீங்காலாகி இருப்பான் என்றான். (3)

ஈசாக்கு தனக்கென்று ஒரு பெண்ணைத் தன் தகப்பன் இல்லாமலேயே தேர்ந்தெடுத்துக்கொள்ளும்படி இந்த முக்கியமான காரியம் விட்டுவிடப்படவில்லை! அவன் எந்தப் பெண்ணைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்கு, தேவன் தமது தூதனை முன்னே அனுப்புவார் என்றும் ஆபிரகாம் அவனுடைய வேலைக்காரனிடம் கூறினான். இந்த வேலை எந்த வேலைக்காரனிடம் ஒப்புவிக்கப்பட்டதோ அவன் தன் நீண்ட பயணத்தைத் தொடங்கினான். ஆபிரகாமின் இனத்தார்கள் வாழ்ந்திருந்த நகரத்திற்குள் அவன் நுழைந்ததும், ஈசாக்கிற்கு மனைவியைத் தேர்ந்தெடுக்கும் இடத்திற்கு கர்த்தர் தன்னை நடத்தவேண்டும் என்று அவன் மிகுந்த அக்கறையுடன் ஜெபம் செய்தான். இந்தக் காரியத்தில் தான் தவறுசெய்யாமல் இருப்பதற்காக, அவனுக்கு நிச்சயமான அடையாளம் கொடுக்கப்படவேண்டும் என்றும் அவன் கேட்டுக்கொண்டான். அதிகமான கூட்டம் கூடிய ஒரு கிணற்றருகில் அவன் இளைப்பாறினான். இங்கு அவன் ரெபெக்காளின் மரியாதைமிக்க—பழக்கவழக்கங்களையும் உதாரகுணமான நடத்தையையும் கவனித்து, அவன் தேவனிடம் கேட்டிருந்த அடையாளங்களின்படி ஈசாக்கிற்கு மனைவியாக இருக்கும்படி தேவன் தெரிந்துகொண்ட பெண்ணாக அவள் காணப்படுவதை கவனித்தான். அவள் அந்த வேலைக்காரனைத் தன் தகப்பனின் வீட்டிற்கு அழைத்தாள். தன்னுடைய எஜமானனின் மகனான ஈசாக்குக்கு ரொபெக்காளை மனைவியாக தெரிந்தெடுக்க கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட அளையாளங்களைப்பற்றி அவன் ரெபெக்காளின் தகப்பனிடத்திலும் அவளுடைய சகோதரனிடத்திலும் விவரித்தான். (5)

பின்பு "இப்பொழுது நீங்களும் என் எஜமானுக்குத் தயையும் உண்மையும் உடையவர்களாய் நடக்க மனதுள்ளவர்களானால், எனக்குச் சொல்லுங்கள்; இல்லையென்றால் அதையும் எனக்குச் சொல்லுங்கள், அப்பொழுது நான் வலதுபுறத்தையாகிலும் இடதுபுறத்தையாகிலும் நோக்கிப் போவேன்" என்றான். (6)

எல்லா ஏற்பாடுகளையும் செய்துமுடித்தபின், பெண்ணின் தகப்பன், தாய், சகோதரன் ஆகியோரின் சம்மதத்தைப் பெற்றபின் பெண் ஈசாக்கின் மனைவியாவதற்காக ஆபிரகாமின் வேலைக்காரனுடன் அவளுடைய தகப்பனுடைய வீட்டிலிருந்த வெகுதூரம் செல்லுவாளா என்று ஆலோசிக்கப்பட்டது. நிகழ்வுற்ற சூழ்நிலைகளிலிருந்து ஈசாக்கிற்கு மனைவியாக இருக்கும்படி தேவனுடைய கரம் தன்னைத் தேர்ந்தெடுக்கிறது என்று அவள் நம்பி: "நான் போகிறேன்" என்று கூறினாள். (7)

பொதுவாகத் திருமண ஒப்பந்தங்கள் அக்காலத்தில் பெற்றோரால் செய்யப்பட்டன. அப்படியிருந்தபோதிலும், தங்களால் நேசிக்க முடியாதவர் களைத் திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தப்படவில்லை. ஆனால் பிள்ளைகள் அவர்களுடைய பெற்றோரின் கணிப்பில் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்து அவர்களுடைய ஆலோசனைகளைப் பின்பற்றி, தேவனுக்குப் பயப்படுகிறவர்களும் அனுபவசாலிகளுமான தங்களுடைய பெற்றோர் தங்களுக்கென்று தெரிந்துகொண்டவர்களின்மீது தங்களுடைய அன்பைக்காட்டியிருந்தனர். இதற்கெதிரான ஒரு நடத்தையைப் பின்பற்றுவது ஒரு குற்றமாகக் கருதப்பட்டிருந்தது. (8)

**பெற்றோருக்குக் கீழ்ப்படியும் ஒரு உதாரணம்!**

கீழ்ப்படிதல்மிக்க ஒரு வாழ்க்கை நடத்தும்படி, தேவனுக்கு பயந்து நடக்கும்படி, ஈசாக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்தான். அவன் நாற்பது வயதானவனாயிருந்தபோது, தேவனுக்குப் பயப்படும் தனது தகப்பனின் அனுபவமிக்க வேலைக்காரன் தனக்கென்று தேர்ந்தெடுத்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளுவதற்குக் கீழ்ப்படிந்தான். ஒரு மனைவியை அடைந்துகொள்ளுவதில் தேவன் வழிநடத்துவாரென்று அவன் விசுவாசித்தான். பின்வரும் தலைமுறையினருக்கென்று, சிறப்பாக, தங்களைத் தேவனுக்குப் பயப்படுபவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களின் பிள்ளைகள் பின்பற்றுவதற்கென்று, உதராணமாக இருக்கும்படி ஈசாக்கின்– காரியம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஈசாக்கிற்குப் பயிற்சியளிப்பதில் ஆபிரகாம் பின்பற்றிய விதம்தான் மேலான, கீழ்ப்படிகிற ஒரு வாழ்க்கைக்குக் காரணமாயிற்று. அது பெற்றோர்களின் நன்மைக்காக எழுதப்பட்டுள்ளது. அது தங்களுடைய வீட்டார் தங்களது முன்மாதிரியைப் பின்பற்ற நடத்துவதாக அமையவேண்டும். தங்களுடைய பிள்ளைகள் தங்கள் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியவும், அதை மதிக்கவும் செய்யும்படி பெற்றோர் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். தங்களுடைய குமாரர்களுக்கும் குமாரத்திகளுக்கும் துணைவர்களாக இருக்க எவர்கள் தகுதியானவர்கள் என்பதை தங்களுடைய அனுமானத்தினால் அறிந்து வழிகாட்டவேண்டிய ஒரு மேலான பொறுப்பு தங்கள்மீதுள்ளது என்பதைப் பெற்றோர்களும் உணரவேண்டும். (9) ★

# 12

# ஏசா—யாக்கோபு!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 87–93)**
**திருவசன ஆதாரம் : ஆதியாகமம் 25:19–34; 27:1–32**

தொடக்கத்திலிருந்து முடிவுவரையுள்ள அனைத்தையும் தேவன் அறிந்திருக்கிறார். யாக்கோபும் ஏசாவும் பிறப்பதற்கு முன்னமே அவர்கள் எப்படிப்பட்ட சுபாவம் உடையவர்களாக வளருவார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். தேவனுக்குக் கீழ்ப்படிகின்ற இருதயம் இல்லாதவனாக ஏசா இருப்பான் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் ரெபெக்காளின் துயரமிக்க ஜெபத்திற்கு மறுமொழியாக, அவளுக்கு இரண்டு பிள்ளைகள் பிறப்பார்களென்றும், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றும் தெரிவித்தார். அவர்களிலிருந்து இரண்டு ஜாதிகள் தோன்றும்; ஒன்று மற்றொன்றைவிடப் பெரியதாக இருக்கும்; மூத்தவன் இளையவனைச் சேவித்தாகவேண்டும் என்பதையும், அவளுடைய இரண்டு குமாரர்களின் எதிர்கால வரலாற்றினையும் அவள்முன் வைத்தார். முதலாவது பிறப்பவன் குடும்பத்தில் மற்றெவருக்கும் இல்லாத தகுதிகளை உடையவனாக, தனித்தன்மைமிக்க அனுகூலங்களுக்கும் சிறப்பான சலுகைகளுக்கும் தகுதி உடையவனாக இருப்பான். (1)

ஏசா, தான் வேட்டையாடி சமைத்தவைகளை ஈசாக்கிற்குக் கொடுத்திருந்தபடியால் ஈசாக்கு யாக்கோபைவிட ஏசாவை அதிகமாக நேசித்திருந்தான். காட்டு மிருகங்களை வேட்டையாடுவதில் அவனுக்கிருந்த தைரியத்தினால் அவன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். யாக்கோபின் சுபாவம் மிகவும் சாதுவானதாகவும், தனது தாய் மகிழ்ச்சியடையும்படி நடந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கமுடையதாகவும் இருந்தபடியால், அவனது தாய்க்குப் பிரியமான மகனாக இருந்தான். மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று தேவன் ரெபேக்காளுக்கு அறிவித்திருந்ததை யாக்கோபு அவனுடைய தாயிடமிருந்து அறிந்து, மூத்த குமாரனின்மீது வைக்கப்படும் சிறப்புரிமைகள் ஏசாவுக்குக் கொடுக்கப்படுமானால், இந்த வாக்குத்தத்தம் நிறைவேறாது என்று அவனுடைய இளமனம் முடிவுசெய்தது. பசியால் மயங்கிக் களைத்தவனாக வயல்வெளியிலிருந்து ஏசா வந்தபோது,

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஏசாவின் தேவையை தன்னுடைய அனுகூலத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு, மூத்த குமாரன் என்னும் தனது பிறப்புரிமையை இழக்க ஒப்புக்கொண்டால், தான் காய்ச்சிக்கொண்டிருந்த கூழினால் அவன் பசியை ஆற்றுவதாக யாக்கோபு கூறினான். அதின்படி ஏசா தனது பிறப்புரிமையை யாக்கோபிற்கு விற்றுப்போட்டான். (2)

ஏசா, விக்கிரக ஆராதனைக்காரிகளான இரு பெண்களை விவாகம் செய்துகொண்டான். இது ஈசாக்கிற்கும் ரெபெக்காளுக்கும் அதிக வருத்தத்தை உண்டுபண்ணியது. அதுமட்டுமல்லாமல், ஈசாக்கு யாக்கோபைவிட ஏசாவை அதிகமாக நேசித்தான். ஈசாக்கிற்குத் தான் மரணமடையப்போவதாக எண்ணம் உண்டானபோது, அவன் ஏசாவை அழைத்து, தான் மரணமடையப்போவதற்குமுன், அவனை ஆசீர்வதிப்பதற்காக, சிறப்பான உணவைத் தயாரிக்கும்படியாகக் கூறினான். ஏசா, தனது பிறப்புரிமையை விற்றுவிட்டதையும், அதை ஒரு ஆணையினால் உறுதிப்படுத்தினதையும் அவனுடைய தகப்பனிடம் கூறவில்லை. ஈசாக்கின் இந்த வார்த்தைகளை ரெபெக்காள் கேட்டபோது, மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்ற கர்த்தருடைய வார்த்தையை நினைத்துக்கொண்டாள். ஏசா தனது பிறப்புரிமையை மதிக்காமலிருந்து அதனை யாக்கோபிற்கு விற்றுவிட்டதையும் அவள் அறிந்திருந்தாள். ஈசாக்கிடமுள்ள ஆசீர்வாதத்தை யாக்கோபினால் எந்தவிதத்திலும் பெற்றுக்கொள்ளமுடியாது என்று அவன் எண்ணினதால், வஞ்சகத்தின் மூலமாவது பெற்றுக்கொள்ளுவதற்கு அவள் யாக்கோபை இணங்கச்செய்தாள். இந்த வஞ்சகமான காரியத்தைச் செய்வதற்கு யாக்கோபு முதலில் விருப்பமில்லாதவனாக இருந்தான். ஆனால் முடிவில் அவன் அவனுடைய அன்னையின் திட்டங்களுக்குச் சம்மதித்தான். (3)

ஈசாக்கு ஏசாவின்மீது கொண்டிருந்த மிகுந்த அன்பை ரெபெக்காள் அறிந்திருந்து, காரணங்களைக் காட்டுவது அவனுடைய நோக்கத்தை மாற்றாது என்பதால் மனத்திருப்தி உள்ளவளாக இருந்தாள். நிகழ்ச்சிகளை முடிவுசெய்யக்கூடிய தேவனின்மீது நம்பிக்கை வைப்பதற்குப்பதிலாக, தனது தகப்பனை வஞ்சிப்பதற்கு யாக்கோபை இணங்கச்செய்ததின்மூலம், அவள் தனது விசுவாசமின்மையை வெளிக்காட்டினாள். இந்தக் காரியத்தில் யாக்கோபு நடந்துகொண்டவிதம் தேவனால் அங்கிகரிக்கக்கூடியதாக இல்லை. நடக்கவிருப்பதாக முன்னறிவிக்கப்பட்ட நிகழ்வுகளை வஞ்சகத்தின் உதவியினால் கைகூடிவரச்செய்வதற்குப்பதிலாக, தேவன் அவருடைய சொந்த நோக்கங்களை அவருடைய சொந்த வழியிலும் அவருடைய சொந்த நேரத்திலும் நடத்துவதற்காக ரெபெக்காளும் யாக்கோபும் காத்திருந்திருக்கவேண்டும். (4)

முதலாவது பிறந்தவனின்மீது வைக்கப்படும் தகப்பனின் ஆசீர்வாதத்தை ஏசா பெற்றிருந்தாலும், அவனுடைய செழுமை தேவனிடமிருந்துமட்டுமே– வந்திருக்கும். அவனுடைய நடத்தைக்குத்தக்கதாக அவனைச் செழுமையினால் ஆசீர்வதித்திருப்பார் அல்லது அவன்மீது பாடுகள் வர அனுமதித்திருப்பார். நீதிமானான ஆபேலைப்போல அவன் தேவனை நேசித்து அவர்மீது பக்திசெலுத்தியிருந்தால், தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டிருந்திருப்பான்; துஷ்டனான காயீனைப்போல, தேவனையும் அவரது பிரமாணங்களையும் மதிக்காமல், கறைபடிந்த நடத்தையில் தொடர்ந்திருந்தால் தேவனிடமிருந்து ஒரு ஆசீர்வாதத்தையும் பெறாமல் காயீனைப்போலவே தேவனால் நிராகரிக்கப்பட்டிருப்பான். பொதுவாக முதற்பிறந்தவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஆசீர்வாதங்களையும் சலுகைகளையும் யாக்கோபு பெறாமல்போயிருந்தாலும், அவன் நடத்தை நீதி உள்ளதாக இருந்திருந்தால், அவன் தேவனை நேசித்து அவருக்குப் பயந்து நடந்திருந்தால், தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பான்; செழுமையைத் தரும் தேவனுடைய கரம் அவனுடன் இருந்திருக்கும். (5)

## யாக்கோபின் நாடுகடந்து சென்ற ஆண்டுகள்!

ரெபெக்காள் யாக்கோபிற்குக் கொடுத்த தவறான ஆலோசனைக்காக மனங்கசந்து மனந்திரும்பினாள். ஏனெனில் அதுவே அவனை அவளிடமிருந்து என்றைக்கும் பிரிப்பதற்கான காரணமாயிற்று. ஏசாவின் கோபத்திலிருந்து தன் உயிரைக்காத்துக்கொள்ள யாக்கோபு ஓடிவிடும்படி நிர்பந்திக்கப்பட்டான். அவனது தாய் அவன் முகத்தை மீண்டும் ஒருபோதும் காணவில்லை! ஈசாக்கு யாக்கோபிற்கு ஆசீர்வாதத்தைக் கொடுத்தபின்பு, அநேக வருடங்கள் உயிர்வாழ்ந்தான். ஏசா—யாக்கோபு ஆகியோரின் நடத்தைக்கு ஏற்றபடி அந்த ஆசீர்வாதம் சரியானவிதமாக யாக்கோபிற்குச் சொந்தமானது என்பதில் ஈசாக்கு மனதிருப்தி அடைந்தான். (6)

யாக்கோபுடைய மனைவிகள் சகோதரிகளாக இருந்தபோதிலும் அவனது திருமண உறவில் அவன் மகிழ்ச்சியாக இருக்கவில்லை. அவன் நேசித்திருந்த ராகேலுக்காக லாபானுடன் திருமண ஒப்பந்தம் செய்திருந்தான். அவன் ராகேலுக்காக ஏழு வருடங்கள் லாபானைச் சேவித்தபின்பும், லாபான் அவனை வஞ்சித்து, லேயாளை அவனுக்குக் கொடுத்தான். தனக்கெதிராகச் செய்யப்பட்ட வஞ்சகத்தை யாக்கோபு உணர்ந்தபோது, அவனை வஞ்சிக்கின்ற காரியத்தில் லேயாள் அவளுடைய பங்கைச் செய்திருந்ததை அவன் உணர்ந்தபோது, அவனால் லேயாளை நேசிக்க முடியவில்லை. யாக்கோபின் விசுவாசமிக்க சேவையை இன்னும் அதிகமான காலத்திற்கு

நீட்டிச்செல்ல லாபான் விரும்பினான். எனவேதான் ராகேலுக்குப் பதிலாக லேயாளைக் கொடுத்து, அவனை வஞ்சித்தான். நேசிக்காத லேயாளை அவனுக்குக் கொடுத்து, இவ்விதமாக அவனுடைய நேசத்தில் பிளவை உண்டுபண்ணினதற்காக யாக்கோபு லாபானைக் கடிந்துகொண்டான். லேயாளைக் கைவிட்டுவிடாமலிருக்கும்படி யாக்கோபிடம் லாபான் கெஞ்சி மன்றாடினான். ஏனெனில் இப்படிப்பட்ட செயல் அந்த மனைவிக்குமட்டும் கேவலம் உண்டுபண்ணுவதாக இராமல், குடும்பம் முழுவதற்கும் கேவலத்தை உண்டுபண்ணக்கூடியதாக இருந்தது. மிகவும் நெருக்கடியான நிலையில் யாக்கோபு வைக்கப்பட்டான். இருந்தபோதிலும் லேயாளைத் தனது மனைவியாகத் தொடரவும், அதே சமயத்தில் அவளுடைய சகோதரியையும் திருமணம் செய்யவும் அவன் முடிவு செய்தான். ராகேல் நேசிக்கப்பட்டிருந்த அளவைவிட மிகவும் குறைந்த அளவிற்கே லேயாள் நேசிக்கப்பட்டாள். (7)

யாக்கோபுடன் இடைப்பட்டிருந்த காரியங்களில் லாபான் சுயநலமுள்ளவனாக இருந்தான். யாக்கோபின் விசுவாசமிக்க சேவையினால் உண்டாகக்கூடிய அனுகூலங்களைப்பற்றி மட்டுமே அவன் சிந்தித்திருந்தான். ஏசாவைச் சந்திக்கின்ற காரியத்தில் யாக்கோபு பயந்திருந்தான். அப்படியில்லாதிருந்தால் அவன் அதிக நாட்களுக்கு முன்பாகவே தந்திரமிக்க லாபானைவிட்டு வெளியேறியிருந்திருப்பான். பின்பு "லாபானுடைய குமாரர்: எங்கள் தகப்பனுக்கு உண்டானவைகள் யாவையும் யாக்கோபு எடுத்துக்கொண்டான் என்றும், எங்கள் தகப்பனுடைய பொருளினாலே இந்தச் செல்வத்தையெல்லாம் அடைந்தான்" என்றும் சொன்ன வார்த்தைகளை கேட்டு, மனவேதனை அடைந்தான். " லாபானின் முகத்தை யாக்கோபு பார்த்தபோது, அது நேற்று முந்தைநாள் இருந்ததுபோல் இராமல் வேறுபட்டிருக்கக் கண்டான்." (8)

எந்தப் பக்கம் செல்லுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. தன் காரியத்தை தேவனுக்குமுன்பாக வைத்து, அவனுக்கு வழிகாட்டவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தான். கர்த்தர் இரக்கத்துடன் அவனது ஜெபத்திற்குப் பதிலளித்தார். "கர்த்தர் யாக்கோபை நோக்கி: உன் பிதாக்களுடைய தேசத்திற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப்போ; நான் உன்னோடேகூட இருப்பேன்" என்றார். (9)

அப்பொழுது யாக்கோபு ராகேலையும் லேயாளையும் வெளியிலே தன்னுடைய மந்தைகள் இருக்கின்ற இடத்தில் அழைப்பித்து, அவர்களை நோக்கி: "உங்கள் தகப்பனுடைய முகம் நேற்று முந்தைநாள் இருந்ததுபோல இருக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது; ஆனாலும் என் தகப்பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார். என்னால்

இயன்றமட்டும் நான் உங்கள் தகப்பனுக்கு ஊழியஞ்செய்தேன் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்கள் தகப்பனோ, என்னை வஞ்சித்து, என் சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினான்; ஆனாலும் அவன் எனக்குத் தீங்குசெய்ய தேவன் அவனுக்கு இடங்கொடுக்கவில்லை" என்றான். மேலும், தேவனால் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த சொப்பனத்தையும் விளக்கினான். ராகேலும் லேயாளும் தங்களுடைய தகப்பனின் நடத்தையைக்குறித்த அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். லாபானுடைய தவறுகளை அறிவித்து, அவனைவிட்டுச் செல்லத் தீர்மானித்திருப்பதை அவர்களுக்குச் சொன்னபோது, ராகேலும் லேயாளும்: "எங்கள் தகப்பன் வீட்டிலே இனி எங்களுக்குப் பங்கும் சுதந்தரமும் உண்டோ? அவரால் நாங்கள் அந்நியராய் எண்ணப்படவில்லையா? அவர் எங்களை விற்று, எங்கள் பணத்தையும் வாயிலே போட்டுக்கொண்டார். ஆகையால் தேவன் எங்கள் தகப்பனிடத்திலிருந்து எடுத்த ஐசுவரியம் எல்லாம் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் உரியது; இப்படியிருக்க, தேவன் உமக்குச் சொன்னபடியெல்லாம் செய்யும்" என்றார்கள். (10)

## கானானுக்குத் திரும்புதல்!

லாபான் இல்லாத நேரத்தில் யாக்கோபு தன்னுடைய குடும்பத்தையும் அவனுக்குள்ள யாவற்றையும் எடுத்துக்கொண்டு சென்றான். அவன் மூன்றுநாள் பயணம் செய்தபின்னர், யாக்கோபு போய்விட்டதை லாபான் அறிந்து, மிகவும் கோபமடைந்தான். பலாத்காரத்தினால் யாக்கோபைத் திருப்பிக்கொண்டுவரத் தீர்மானித்து, அவனைப் பின்தொடர்ந்தான். ஆனால் கர்த்தர் யாக்கோபின்மீது இரக்கம்வைத்து, லாபான் அவனை மேற்கொள்ள இருந்த நேரத்தில்: யாக்கோபிடம் நன்மையோ தீமையோ எதுவும் பேசக்கூடாது என்று—ஒரு கனவைக் கொடுத்தார். யாக்கோபைத் திரும்பும்படி பலாத்காரம்செய்யவோ அல்லது இச்சகமான வகையில் இணங்கவைப்பதோ கூடாது என்றார். (11)

லாபான் யாக்கோபைச் சந்தித்தபொழுது, நீ திருட்டளவாய்ப் புறப்பட்டு, என் குமாரத்திகளை யுத்தத்தில் பிடித்த சிறைகளைப்போலக் கொண்டுவந்தது என்ன செய்கை? "உங்களுக்குப் பொல்லாப்புச்செய்ய எனக்கு வல்லமை உண்டு; ஆகிலும், உங்கள் தகப்பனுடைய தேவன்: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று நேற்று ராத்திரி என்னோடே சொன்னார்" என்றான். அப்பொழுது யாக்கோபு, தனக்கு எதிரான லாபானின் நடத்தையையும் அவன் தனது அனுகூலங்களைமட்டுமே சிந்திப்பதையும் எடுத்துச்சொன்னான். யாக்கோபு லாபானுடன் இருந்த சமயத்தில் அவனது நேர்மையான நடத்தையையும்

சுட்டிக்காட்டி, “பீறுண்டதை நான் உம்மிடத்துக்குக் கொண்டுவராமல், அதற்காக நான் உத்தரவாதம்பண்ணினேன்; பகலில் களவுபோனதையும், இரவில் களவுபோனதையும் என் கையில் கேட்டு வாங்கினீர். பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது” என்றான். (12)

“இந்த இருபது வருஷகாலம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்; பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும், ஆறு வருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர். என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் பயபக்திக்குரியவரும் என்னோடிராமற்போனால், நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்; தேவன் என் சிறுமையையும் என் கைப்பிரயாசத்தையும் பார்த்து, நேற்று ராத்திரி உம்மைக் கடிந்துகொண்டார்” என்று சொன்னார். (13)

தன் குமாரத்திகளிடமும் குழந்தைகளிடமும் தனக்கிருக்கிற பிரியத்தை உறுதிப்படுத்தி அவர்களை உபத்திரவப்படுத்தமாட்டேன் என்றான். தங்களுக்கிடையிலே ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்று ஆலோசனை கூறினான். “இப்பொழுதும் எனக்கும் உனக்கும் சாட்சியாயிருக்கும்பொருட்டு, நீயும் நானும் உடன்படிக்கைபண்ணிக்கொள்ளக்கடவோம் என்றான். அப்பொழுது யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தினான். பின்னும் தன் சகோதரரைப் பார்த்து, கற்களைக் குவியலாகச் சேருங்கள் என்றான்; அவர்கள் கற்களை எடுத்துக்கொண்டுவந்து, ஒரு குவியலாக்கி, அந்தக் குவியலின்மேல் போஜனம்பண்ணினார்கள்.” (14)

மேலும் லாபான்: “நாம் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்தபின், நீ என் குமாரத்திகளைத் துயரப்படுத்தி, அவர்களையல்லாமல், வேறே ஸ்திரீகளை விவாகம்பண்ணினாயானால், கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று கண்காணிக்கக்கடவர்; நம்முடனே ஒருவரும் இல்லை; பார், தேவனே எனக்கும் உனக்கும் சாட்சி” என்றான். (15)

யாக்கோபு வேறு ஸ்திரீகளை மனைவிகளாகக் கொள்ளமாட்டேன் என்று பக்திவிநயமான உடன்படிக்கையைக் கர்த்தருக்கு முன்பாகச் செய்தான். “லாபான் யாக்கோபை நோக்கி: இதோ, இந்தக் குவியலையும் எனக்கும் உனக்கும் நடுவாக நான் நிறுத்தின தூணையும் பார். தீங்குசெய்ய நான் இந்தக் குவியலைக் கடந்து உன்னிடத்துக்கு வராதபடிக்கும், நீ இந்தக் குவியலையும் இந்தத் தூணையும் கடந்து என்னிடத்துக்கு வராதபடிக்கும் இந்தக் குவியலும் சாட்சி, இந்தத் தூணும் சாட்சி. ஆபிரகாமின் தேவனும் நாகோரின் தேவனும் அவர்கள் பிதாக்களின் தேவனுமாயிருக்கிறவர்

நமக்குள்ளே நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றான். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் பயபக்திக்குரியவர்மேல் ஆணையிட்டான்.” (16)

“யாக்கோபு பிரயாணம்பண்ணுகையில், தேவதூதர்கள் அவனைச் சந்தித்தார்கள். யாக்கோபு அவர்களைக் கண்டபோது: இது தேவனுடைய சேனை” என்றான். அவன் ஒரு சொப்பனத்தில் தேவதூதர்கள் அவனைச் சூழ்ந்திருப்பதைக் கண்டான். யாக்கோபு தனது சகோதரனான ஏசாவிற்கு மிகவும் தாழ்மையான ஒரு ஒப்புரவாக்குதலின் தூதை அனுப்பினான். அவர்கள் யாக்கோபினிடத்தில் வந்து, “அவரும் நானூறுபேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார் என்றார்கள். அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரித்து: ஏசா ஒரு பகுதியின்மேல் விழுந்து அதை முறிய அடித்தாலும், மற்றப் பகுதி தப்பித்துக்கொள்ள இடம் உண்டு என்றான்.” (17)

“பின்பு யாக்கோபு: என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே: உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே, அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும் தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன். தேவரீரோ: நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே” என்றான். (18) ★

# 13

# யாக்கோபும் தேவதூதனும்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 94–99)**

**திருவசன ஆதாரம்: ஆதியாகமம் 32:24–33; 11.**

மோசடியின்மூலமாக தனது மூத்த சகோதரனின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட யாக்கோபின் தவறு மிகப்பலமாக அவனுக்கு முன் தோன்றியது. அவனுடைய உயிரை எடுத்துக்கொள்ள தேவன் ஏசாவை அனுமதிப்பார் என்று அவன் பயந்தான். அவனுடைய துன்பத்தில் அவன் தேவனை நோக்கி இரவு முழுவதும் ஜெபித்தான். யாக்கோபின் சுபாவத்தை அதன் உண்மையான வடிவத்தில் எடுத்துக்காட்டி, யாக்கோபுக்கு முன்னால் ஒரு தூதன் நிற்பது எனக்கு காட்டப்பட்டது. அந்த தூதன் அவனை விட்டுச் செல்லுவதற்காகத் திரும்பினபோது, அவனைப் பிடித்துக்கொண்டு போகவிடாதிருந்தான். கண்ணீருடன் அவன் மன்றாடுகிறான். தனது தகப்பனின் வீட்டைவிட்டு இருபது வருடங்களாகப் பிரிந்திருக்கக் காரணமாக இருந்த—தனது சகோதரனுக்கு எதிராகச் செய்த பாவங்களுக்காகவும் தவறுகளுக்காகவும் மிகவும் ஆழ்ந்தவிதமாக மனந்திரும்பியிருப்பதாக கெஞ்சினான். அவ்வப்போது அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வாக்குத்தத்தங்களையும் அனுகூலமாகக் கொடுக்கப்பட்டிருந்த அடையாளங்களையும் சுட்டிக்காட்டி, மிகவும் கெஞ்சிக் கேட்டான். (1)

இரவு முழுவதும் ஒரு ஆசீர்வாதத்திற்காக மன்றாடி அவனுடன் போராடுகிறான். அந்தத் தூதன் தொடர்ந்து அவனுடைய பாவங்களை அவனுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவந்து, அவனுடைய ஜெபங்களை தடுப்பதுபோல் காட்டி, அதே நேரத்தில் அவனை விட்டுச் செல்ல முயலுகிறான். யாக்கோபு தனது சரீர பலத்தினால் அந்தத் தூதனைப் பிடித்துக்கொள்ள எண்ணாமல், ஜீவனுள்ள விசுவாசத்தினால் பிடித்துக்கொள்ளத் தீர்மானித்திருந்தான். யாக்கோபு அவனுடைய துன்பத்தில் அவனுடைய ஆத்துமாவின் மனந்திரும்புதலையும், தனது தவறுக்காக தான் ஆழ்ந்த தாழ்மையோடு இருப்பதையும் எடுத்துக்காட்டினான். ஆனால் அந்தத் தூதன் அவனுடைய ஜெபத்தைக் கருதாதவன்போல் காணப்பட்டு, யாக்கோபின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளத் தொடர்ச்சியாக

முயற்சிசெய்பவன்போல் காணப்பட்டான். அவன் மனித வல்லமைக்கு மேற்பட்ட—இயற்கைக்கு மேலான வல்லமையைப் பயன்படுத்தி, யாக்கோபின் பிடியிலிருந்து தன்னைப் பலவந்தமாக விடுவித்துக்கொண்டிருக்க முடியும். ஆனாலும் அப்படிச் செய்வதை அவன் தெரிந்துகொள்ளவில்லை. (2)

மேலும், யாக்கோபை மேற்கொள்ளமுடியவில்லை என்பதை அவன் கண்டபோது, இயற்கைக்கு அப்பாற்பட்ட தன்னுடைய வல்லமையை அவனுக்கு உணர்த்தும்படியாக அவனுடைய தொடையைத் தொட்டான். உடனேயே அதன் இணைப்பு கழன்றுபோனது. ஒரு ஆசீர்வாதத்தைப் பெறுவதுதான் அவனது நோக்கமாக இருந்தது. எனவே, சரீரப்பிரகாரமான வேதனை அந்த நோக்கத்திலிருந்து அவனை திருப்புவதற்குப் போதுமானதாக இல்லை. அவனுடைய நோக்கம் போராட்டத்தின் ஆரம்பத்தில் இருந்ததைவிட முடிவில் அவனது தீர்மானம் மிகவும் பலமுள்ளதாக இருந்தது. அவனுடைய விசுவாசம் மிகவும் ஊக்கமானதாகவும் பிடிவாதமானதாகவும் கடைசிவரை பொழுது விடிகிற நேரம்வரைக்குங்கூட வளர்ந்தது. அவன் தன்னை—ஆசீர்வதிக்கின்றவரைக்கும் அந்தத் தூதனின்மேலிருந்த தன் பிடியை விடாதிருந்தான். “அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான். அவர்: உன் பேர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான். அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்.” (3)

### மேற்கொள்ளும் விசுவாசம்!

யாக்கோபின் விடாமுயற்சியான விசுவாசம் வெற்றியடைந்தது. அவன் விரும்பியிருந்த ஆசீர்வாதமும் பாவமன்னிப்பின் நிச்சயமும் கிடைக்கும்வரை, அவன் அந்தத் தூதனை விடாமல் பிடித்திருந்தான். அப்பொழுது அவனுடைய பெயர் மன்றாடுகிறவன் என்னும் பொருளுள்ள யாக்கோபு என்பதிலிருந்து, தேவனுடைய பிரபு என்று பொருட்படக்கூடிய இஸ்ரவேல் என்று மாற்றப்பட்டது. “அப்பொழுது யாக்கோபு: உம்முடைய நாமத்தை எனக்கு அறிவிக்கவேண்டும் என்று கேட்டான்; அதற்கு அவர்: நீ என் நாமத்தைக் கேட்பானேன் என்று சொல்லி, அங்கே அவனை ஆசீர்வதித்தார். அப்பொழுது யாக்கோபு: நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர்தப்பிப் பிழைத்தேன்” என்றான். அந்த இரவு முழுவதும் கிறிஸ்து யாக்கோபோடு இருந்தார். அவன் அவருடனேதான் போராடிக்கொண்டிருந்தான். அவனை ஆசீர்வதிக்கும்வரை அவரை விடாமுயற்சியுடன் பற்றிக்கொண்டிருந்தான். (4)

கர்த்தர் யாக்கோபின் மன்றாட்டைக் கேட்டு, ஏசாவின் இருதயத்தின் நோக்கத்தை மாற்றினார். யாக்கோபு தொடர்ந்திருந்த அவனது தவறான எந்த நடத்தையையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அந்தத் தூதனுடன் உண்டான அவனுடைய அக்கறைமிக்க போராட்டத்தில் தேவன் அவனுடைய பாவங்களை மன்னித்திருக்கிறார் என்னும் சான்றினை அடையும்வரை, அவனுடைய பவத்தின் காரணமாக அவனது வாழ்க்கை சந்தேகம், குழப்பம், பாவங்களுக்கான வருத்தம் ஆகியவைகளால் நிறைந்திருந்தது. தேவன் அவனுடைய பாவங்களை மன்னித்துவிட்டார் என்ற சான்றினையும் அவன் பெற்றுக்கொண்டான். (5)

“அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்; பெத்தேலிலே அவர் அவனைக் கண்டு சந்தித்து, அவ்விடத்திலும் நம்மோடே பேசினார். கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன்; யேகோவா என்பது அவருடைய நாமசங்கீர்த்தனம்”– ஓசியா 12:4,5. (6)

ஏசா தனது சகோதரனான யாக்கோபைக் கொலைசெய்யும் நோக்கத்துடன் ஒருசேனையுடன் புறப்பட்டு வந்தான். ஆனால் யாக்கோபு அந்தத் தூதனுடன் போராடிக்கொண்டிருந்த நேரத்தில்—ஏசா உறங்கிக்கொண்டிருந்தபோது, அவனது இருதயத்தை அசைப்பதற்காக வேறொரு தூதன் அனுப்பப்பட்டான். ஏசாவின் கனவில், இருபது வருடங்களாக யாக்கோபு தனது உயிருக்குப் பயந்து, தகப்பனின் வீட்டைவிட்டு வெளியில் சென்றிருப்பதை ஏசா கண்டான். அவனது தாயார் மரித்துப்போனதற்காக அவன் துக்கப்படுவதையும் அவன் கண்டான். யாக்கோபின் தாழ்மையையும் தூதர்கள் அவனைச் சூழ்ந்திருப்பதையும் கண்டான். தன்னைத் துன்பப்படுத்துகின்ற எண்ணம் அவனுக்கு இல்லாமலிருந்ததையும் கண்டான். எழுந்தபின் ஏசா தன்னுடைய நாறூறு ஆட்களுக்கும் தான் கண்ட கனவைக்கூறி, அவர்கள் யாக்கோபைக் காயப்படுத்தக்கூடாது என்றும், ஏனெனில் அவனுடைய தகப்பனுடைய தேவன் அவனுடன் இருக்கிறார் என்றும் கூறினான். அவர்கள் யாக்கோபைச் சந்திக்கும்போது, அவர்களில் ஒருவனும் யாக்கோபுக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணக்கூடாது என்றான். யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஏசாவும் அவனோடேகூட நானூறு மனிதரும் வருவதைக்கண்டு.... குனிந்துவணங்கி, தன் சகோதரன் கிட்டச்சேர்ந்தான். அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான். இருவரும் அழுதார்கள். யாக்கோபு: தேவன் எனக்கு அனுக்கிரகம் செய்திருக்கிறார். வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு. ஆகையால்

உமக்குக் கொண்டுவரப்பட்ட காணிக்கையை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லி, வருந்திக் கேட்டுக்கொண்டான். அப்பொழுது ஏசா அதை ஏற்றுக்கொண்டான். (7)

## ஒரு பொருட்பாடம்!

யாக்கோபும் ஏசாவும் இரு வகுப்பினரை எடுத்துக்காட்டுகின்றனர். யாக்கோபு நீதிமான்களையும் ஏசா துன்மார்க்கரையும் சுட்டிக்காட்டுகின்றனர். ஏசா நானூறு மனிதர்களுடன் தனக்கெதிராக வந்துகொண்டிருக்கிறான் என்பது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குமுன் நீதிமான்களுக்கு மரண தண்டனை விதிக்கவேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்படும் சமயம், நீதிமான்களுக்கு உண்டாகக்கூடிய துன்பங்ளைக் காட்டுகிறது. துன்மார்க்கர் அவர்களைச் சூழ்ந்துகொள்ளும்போது, அவர்கள் மனவேதனையால் நிறைந்திருப்பார்கள்;ஏனெனில், அவர்கள் உயிரைக் காத்துக்கொள்வதற்காக, யாக்கோபைப்போலத் தப்பிக்கும் வழியைக் காணமுடியாதவர்களாக இருப்பார்கள். ஒரு தூதன் யாக்கோபின் முன் நின்றான். அவன் அந்தத் தூதனைப் பற்றிக்கொண்டு, இரவு முழுவதும் போராடிக்கொண்டிருந்தான். யாக்கோபு தூதனுடன் போராடியதைப்போல நீதிமான்கள் அவர்களுடைய இக்கட்டுக்காலத்தில்—ஜெபத்தில் தேவனுடன் போராடுவார்கள். தன்னுடைய துன்பத்தில் ஏசாவின் கரத்திலிருந்து தன்னை விடுவிக்கும்படி யாக்கோபு இரவு முழுவதும் ஜெபம் செய்திருந்தான். நீதிமான்கள் அவர்களைச் சூழ்ந்திருக்கும் துன்மார்க்கருடைய கரங்களிலிருந்து விடுதலைக்காக இரவும் பகலும் தங்களுடைய மனவேதனையில் தேவனை நோக்கித் தங்களது குரலை உயர்த்துவார்கள். (8)

“அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல” என்று யாக்கோபு தனது தகுதியின்மையை அறிக்கைசெய்தான். நீதிமான்களும் அவர்களுடைய பெரும் துன்பத்தில் தங்களுடைய தகுதியின்மையைப்பற்றிய ஆழ்ந்த உணர்வுகளை உடையவர்களாக இருப்பார்கள். அநேகர் அவர்களது தகுதியின்மையை ஆழ்ந்த கண்ணீருடன் அறிக்கையிட்டு, யாக்கோபைப்போல, இப்படித் தம்மை நம்பின—உதவியற்ற—மனந்திரும்புகின்ற பாவிகளுக்காக உண்டாயிருக்கிற வாக்குத்தத்தங்களுக்காக கிறிஸ்துவின் வழியாக மன்றாடுவார்கள். (9)

யாக்கோபு அவனுடைய துன்பத்தில் அந்த தூதனைப் பலமாகப் பிடித்துக்கொண்டு போகவிடாதிருந்தான். அவன் கண்ணீருடன் தனது விண்ணப்பங்களை ஏறெடுத்தபோது, அந்தத் தூதன் அவனுடைய

கடந்தகாலப் பாவங்களைப்பற்றிய ஞாபகத்தை அவனுக்கு உண்டுபண்ணி, அவனிடமிருந்து தப்பிச்செல்ல முயன்றான். இது அவனைச் சோதிக்கவும் மெய்ப்பிக்கவும் செய்யப்பட்டிருந்தது. அதைப்போலவே நீதிமான்களும் தங்களுடைய விசுவாசத்தின் பலத்தையும், அசைக்கமுடியாத பிடிவாதமான முயற்சியையும், தங்களை விடுவிக்கும் தேவனுடைய வல்லமையின்மேலுள்ள நம்பிக்கையையும் வெளிக்காட்டும்படி, சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டு, புடமிடப்படுவார்கள். (10)

யாக்கோபு விலகிச்செல்லக்கூடியவனாக இருக்கவில்லை; தேவன் இரக்கமுள்ளவர் என்பதை அறிந்து அவரது இரக்கத்திற்காக வேண்டுதல் செய்தான். தனது கடந்தகால தவறுகளுக்கான வருத்தங்களையும் மனந்திரும்புதலையும் மீண்டும் சுட்டிக்காட்டி, ஏசாவின் கரத்திலிருந்து தனக்கு விடுதலை வழங்கவேண்டும் என்ற அவனுடைய விண்ணப்பத்தை ஏறெடுத்தான். இப்படியாக அவனது விண்ணப்பம் இரவு முழுவதும் தொடர்ந்தது. அவன் தனது கடந்த காலத்தைத் திருப்பிப் பார்த்தபோது, ஏறத்தாழ தன்னம்பிக்கையின்மைக்கு விரட்டப்பட்டான். தேவனிடமிருந்து உதவி கிடைக்கவேண்டும் அல்லது அழியவேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். அந்தத் தூதனைப் பலமாகப் பிடித்துக்கொண்டு,அவனை மேற்கொள்ளும்வரை மனவேதனைமிக்க—அக்கரைமிக்க அழுகையுடன் தனது விண்ணப்பத்தை வற்புறுத்தினான். (11)

நீதிமான்களுடைய காரியங்களும் இப்படிப்பட்டதாகத்தான் இருக்கும். அவர்கள் தங்களுடைய கடந்தகால வாழ்க்கைகளைத் திருப்பிப்பார்க்கும்போது, ஏறத்தாழ அவர்களுடைய நம்பிக்கைகள் மூழ்கிப்போகும். அது ஜீவனுக்கோ அல்லது மரணத்திற்கோ அடுத்த ஒரு காரியம் என்பதை அவர்கள் உணரும்போது, தேவனை நோக்கி உருக்கமுடன் அழுவார்கள். தங்களுடைய கடந்தகால வருத்தங்களுக்காகத் தாழ்மையாக மனந்திரும்புவார்கள். அதன்பின் அவருடைய வாக்குத்தத்தத்தைச் சுட்டிக்காட்டி: “அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும்”(ஏசாயா 27:5) என்பார்கள். இரவும் பகலுமாக தேவனுக்கு முன்பாக அவர்கள் உருக்கமுடன் ஏறெடுக்கும் விண்ணப்பம் இதுவாகவே இருக்கும். மோசடியின்மூலமாகப் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதமாகிய தவறுக்காக யாக்கோபு முன்னதாகவே மனந்திரும்பியிருக்காவிட்டால், தேவன் யாக்கோபின் ஜெபத்தைக் கேட்டிருக்கமாட்டார். இரக்கமாக அவனுடைய உயிரைக் காப்பாற்றியிருக்கவும் மாட்டார்! (12)

யாக்கோபைப் போன்றே நீதிமான்களும், மறுதலிக்காத—விட்டுக்கொடுக்காத விசுவாசத்தையும், அக்கரையுள்ள தீர்மானத்தையும்

வெளிக்காட்டுபவர்களாக இருப்பார்கள். அவர்கள் தங்களுடைய தகுதி யின்மையை உணருவார்கள். வெளிப்படுத்துவதற்கென்று மறைத்து வைக்கப்பட்டுள்ள தவறுகள் எதுவும் அவர்களிடம் இருக்காது; மனவேதனையினாலும் பயத்தினாலும் சித்திரவதை செய்யப்படும்போது, தங்களுடைய தகுதியின்மையைப்பற்றிய உயிருள்ள உணர்வுள்ளவர்களோடு இருக்கும்போது, அவர்கள்முன் வரும்படியான அறிக்கைசெய்து விடப்படாத பாவங்கள் இருக்குமானால், அவர்கள் திகைத்துப் பேசமுடியாதவர்களாகி விடுவார்கள். அவர்களுடைய விசுவாசத்தை நம்பிக்கையின்மை முறித்துவிடும். விடுதலைக்காக அக்கறையுடன் ஜெபிப்பதற்கு அவர்களுக்கு தேவன்மீது நம்பிக்கை இருக்காது. விலைமதிப்புமிக்க அவர்களுடைய நேரங்கள் மறைந்திருக்கிற பாவங்களை அறிக்கைசெய்வதிலும் நம்பிக்கையற்ற நிலைக்காக புலம்புவதிலும் போய்விடும். (13)

தேவனுடைய நாளுக்காக ஆயத்தமாகும்படி தவணையின்காலம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயத்தப்படுவதை அலட்சியப் படுத்திக்கொண்டும், கொடுக்கப்படும் விசுவாசமிக்க எச்சரிப்புக்களுக்குச் செவிசாய்க்காமலும் இருந்துவந்தால், அவர்கள் சாக்குப்போக்குச் சொல்ல வழியில்லாதவர்களாக இருப்பார்கள். அக்கறையும் முயற்சியுமிக்கவனாக யாக்கோபு தூதனுடன் நடத்தின போராட்டம் கிறிஸ்தவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கவேண்டும். முயற்சிசெய்பவனாகவும் தீர்மான மிக்கவனாகவும் இருந்தபடியால் அவன் வெற்றியடைந்தான். (14)

தேவனுடைய ஆசீர்வாதத்தை விரும்பும் அனைவரும் யாக்கோபு செய்ததைப்போலச் செய்து, வாக்குத்தத்தத்தைப் பிடித்துக் கொள்ளுவார்களானால் அவன் இருந்ததைப்போல அக்கறையும் விடா முயற்சியும் உடையவர்களாக இருந்தால், அவன் வெற்றி அடைந்ததுபோல அனைவரும் வெற்றியடைவார்கள். தங்களைவிசுவாசிகள் என்று கூறிக் கொள்ளுபவர்களிடம் உண்மையான விசுவாசத்தைச் செயல்படுத்துவது மிகவும் குறைவாகவே உள்ளது. அப்படிப்பட்டவர்களின்மீது சத்தியத்தைக் குறித்த பாரம் மிகவும் குறைவாகவே தங்கியிருக்கிறது. ஏனெனில் ஆவிக்குரிய காரியங்களில் அவர்கள் மந்தமானவர்களாக உள்ளனர். முயற்சியெடுக்க மறுத்து, சுயத்தை விடமறுத்து, தேவனுக்கு முன்பாக வேதனை உள்ளவர்களாக இருப்பதற்கு மறுத்து, ஆசீர்வாதத்திற்காக அக்கரையுடன் நீண்ட நேரம் ஜெபிப்பதற்கு விருப்பமில்லாதவர்களாக இருப்பதினால், அதனைப் பெற்றுக்கொள்வதில்லை. இக்கட்டுக்காலத்தில் விசுவாசம் உயிருள்ளதாக இருக்கவேண்டுமானால், இப்பொழுதே நாள்தோறும் அது பயிற்றுவிக்கப்படவேண்டும். விடாப்பிடியான விசுவாசத்திற்காக பலமான

முயற்சிகளை இப்பொழுது செய்யாதவர்கள் இக்கட்டுநாளில் நிற்பதற்கு அவர்களைத் தகுதிப்படுத்தக்கூடிய அந்த விசுவாசத்தைச் செயல்படுத்த முற்றிலும் ஆயத்தமில்லாதவர்களாக இருப்பார்கள். (15) ★

# 14

# இஸ்ரவேல் ஜனங்கள்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 100–111)**

**திருவசன ஆதாரம்: ஆதியாகமம் 37; 39:41–48; யாத்திராகமம் 1:1–6.**

யோசேப்பு அவனுடைய தகப்பனின் போதனைகளைக் கேட்டு கர்த்தருக்குப் பயந்திருந்தான். அவன் அவனுடைய மற்ற சகோதரர்களைவிட அவனுடைய தகப்பனின் நீதியான போதனைகளுக்கு அதிகமாகக் கீழ்ப்படிந்தான்; அவன் தன் தகப்பனின் போதனைகளை இருதயத்தில் சேகரித்து வைத்து, நேர்மை மிக்க இதயத்துடன் தேவனுக்குக் கீழ்ப்படிவதை நேசித்திருந்தான்; அவன் தனது சகோதரர்களில் சிலரின் தவறுகளைக் கண்டு, வேதனையடைந்து, தங்களுடைய துன்மார்க்கமான செயல்களைவிட்டு விலகி, ஒரு நீதியான நடத்தையைப் பின்பற்றும்படி, தன் சகோதரர்களிடம் மிகப் பணிவாகக் கெஞ்சி மன்றாடியிருந்தான்; அது அவன்மீது அவர்களிடமிருந்த கசப்புணர்வைத் தூண்டிவிட்டது. அவனுடைய சகோதரர்கள் தேவனுக்கு எதிராகப் பாவம்செய்வதைக் கண்டு, தாங்கிக்கொள்ள முடியாதவனாக இருக்கின்ற அளவிற்கு பாவத்தின் மேலுள்ள அவனுடைய அதிகாரம் அவர்களைச் சீர்திருத்தும் என்று நினைத்து, அந்தக் காரியத்தை அவன் தனது தகப்பனிடம் தெரிவித்தான். இவ்விதமாக அவர்களது தவறை வெளிக்காட்டியது, அவர்களது சகோதரரை அவன்மீது கோபமிக்கவர்களாக்கியது. யோசேப்பின் மீதிருந்த தங்களுடைய தகப்பனின் பலத்த அன்பை அவர்கள் கண்டு, அவன்மீது பொறாமை கொண்டனர்; அது அவர்களுடைய வெறுப்பாக வளர்ந்து, முடிவில் அவனைக் கொலைசெய்வதற்கும் வழிநடத்தினது. (1)

சொப்பனங்களினால் கர்த்தருடைய தூதன் யோசேப்புக்குப் போதனை செய்தார். அவன் அவைகளை அவனது களங்கமற்ற நிலையில், தன் சகோதரர்களிடம் கூறினான். “நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது” என்றான். அவர்கள் அவனது சொப்பனத்திற்காகவும் அவனுடைய வார்த்தைகளுக்காகவும் அவனை மேலும் அதிகமாக வெறுத்தார்கள். (2)

“அவன் வேறொரு சொப்பம் கண்டு, தன் சகோதரரை நோக்கி: நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; இதோ, சூரியனும் சந்திரனும் பதினோரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான். இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் சொன்னபோது, அவன் தகப்பன் அவனைப் பார்த்து: நீ கண்ட இந்த சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமோ? என்று அவனைக் கடிந்துகொண்டான்.” (3)

## எகிப்தில் யோசேப்பு!

யோசேப்பினுடைய சகோதரர்கள் அவனைக் கொலைசெய்கின்ற நோக்கமுடையவர்களாயிருந்து முடிவில் அவன் தங்களைவிடப் பெரியவனாவதைத் தடுப்பதற்காக, அவனை அடிமையாக விற்றுவிடுவதில் திருப்திகொண்டனர். அவனுடைய கனவினால் இனிமேல் துன்பப்படாத இடத்தில் அவனை வைத்துவிட்டதாகவும், அங்கு அவனுடைய கனவுகள் நிறைவேறக்கூடிய வழிவகைகள் இல்லையென்றும் எண்ணியிருந்தனர். அவர்கள்மீது அவன் ஆளுகை செய்யக்கூடாது என்று அவர்கள் எந்தத் திட்டத்தைத் தொடர்ந்திருந்தனரோ அது நடைபெறவேண்டும் என்பதற்காக, தேவன் அவர்களது திட்டத்தை மேற்கொண்டார். (4)

யோசேப்பு எகிப்திற்குத் தனியாகச் செல்லும்படியாக தேவன் அவனை விட்டுவிடவில்லை. அங்கு அவனை வரவேற்பதற்கான பாதையை தேவதூதர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். பார்வோனின் காவலாளிகளின் தலைவன் என்னும் அதிகாரியான போத்திப்பார் இஸ்மவேலர்களிடமிருந்து அவனை விலைக்கு வாங்கினான். கர்த்தர் யோசேப்போடேகூட இருந்தார். அவர் அவனைச் செழுமையடையச் செய்து, அவனது எஜமானிடம் அனுகூலம் பெறச்செய்தார். எனவே போத்திப்பார் தனக்குண்டான யாவற்றையும் யோசேப்பின் நிர்வாகத்தில் ஒப்படைத்தான். ஆகையால் அவன் தனக்குண்டானதையெல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்படைத்துவிட்டு, தான் புசிக்கிற போஜனம் தவிர தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக் குறித்தும் விசாரியாதிருந்தான். ஒரு எகிப்தியனுக்கு ஒரு எபிரெயன் உணவு தயாரிப்பதென்பது அருவருப்பானதாகக் கருதப்பட்டிருந்தது. (5)

நீதியின் பாதையிலிருந்து விலகிச் செல்லும்படி யோசேப்பு சோதிக்கப்பட்டபோது, தேவனுடைய பிரமாணத்தைமீறி, அவனுடைய எஜமானுக்கு உண்மை இல்லாதவனாக இருக்கும்படி சோதிக்கப்பட்டபோது, அவன் அதனை உறுதியுடன் நின்று, தடுத்து, அவனுடைய எஜமானனின் மனைவிக்குப் பதில் கொடுப்பதில் தேவனுக்குப் பயப்படுதலின் வல்லமை

எவ்விதமாக உயர்த்துகின்றது என்பதற்குச் சாட்சி பகர்ந்தான். எல்லாவற்றையும் தன்னிடத்தில் ஒப்புவித்துள்ளதின் மூலமாக, தனது எஜமானன் அவன்மீது வைத்துள்ள பெரிய நம்பிக்கையைப்பற்றி அவன் பேசினபின், தான் தேவனுக்குப் பயந்தவனாக, இத்தனை பெரிய பொல்லாங்கிற்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம்செய்வது எப்படி? என்றான். நீதியின் பாதையிலிருந்து விலகிச்சென்று கவர்ச்சிக்கும் பயமுறுத்தலுக்கும் கீழ்ப்பட்டு, தேவப்பிரமாணத்தை மீறும்படி அவனை இணங்கச் செய்வது என்பதானது இயலாததாக இருந்தது! (6)

ஒரு குற்றம் அவன்மீது சுமத்தப்பட்டபோது, கீழ்த்தரமான ஒரு குற்றம் அவன்மீது பொய்யாய்ச் சுமத்தப்பட்டபோது, அவன் அவநம்பிக்கையில் அமிழ்ந்துபோகவில்லை. மனச்சாட்சியின் உணர்வில் களங்கமில்லாது சரியானவனாக இருந்து, அவன் மேலும் தேவனையே நம்பினான். இதுவரையிலும் அவனைத் தாங்கி நடத்திவந்த அந்த—அதே தேவன் அவனைக் கைவிடவில்லை! அவன் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, துயரமிக்க ஒரு சிறையில் வைக்கப்பட்டிருந்தான். இருந்தபோதிலும் அந்த மோசமான சூழ்நிலையை தேவன் ஆசீர்வாதமாக மாற்றினார். சிறைக் கண்காணிப்பாளனிடமிருந்து அவனுக்கு அனுகூலம் உண்டாகும்படி தேவன் நடத்தினார். விரைவில் எல்லாக் கைதிகளையும் மேற்பார்வைசெய்கின்ற பொறுப்பை உடையவனாக அவன் உயர்த்தப்பட்டான். (7)

இந்த பூமியின்மீது வாழக்கூடிய சகல தலைமுறையினருக்கும் இங்கு ஒரு எடுத்துக்காட்டு இருக்கிறது. அவர்கள் சோதனைகளுக்குள்ளானாலும் பாதுகாப்பு ஒன்று பக்கத்தில் உள்ளது என்பதை அவர்கள் எப்போதும் உணரவேண்டும்; அவர்கள் பாதுகாக்கப்படாவிட்டால், அது அவர்களுடைய சொந்தமான குற்றமாக இருக்கும். தேவன் ஒரு நிகழ்கால உதவியாளராக இருப்பார்; அவருடைய ஆவியானவர் ஒரு கேடயமாக இருப்பார். மிகக் கடுமையான சோதனைகளினால் சூழப்பட்டிருந்தாலும், விண்ணப்பம் செய்து அவைகளைத் தடுக்கக்கூடிய பலமிக்க (ஜெப) ஆதாரம் இருக்கிறது. (8)

யோசேப்பின் சன்மார்க்க நெறியின்மீது உண்டான தாக்குதல் எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது. ஆண்டவரைவிட்டு வெகு தூரத்திற்கு வழிநடத்திவிடக்கூடிய ஆதிக்கங்கள் ஒன்றிலிருந்து அது (சோதனை) வந்தது. அப்படியிருந்தபோதிலும், உடனுக்குடனும் உறுதியாகவும் அது தடுக்கப்பட்டது. அவனது நற்பண்பிற்காகவும் நேர்மைக்காகவும் அவன் துன்பப்பட்டான். ஏனெனில் அவனை எவளால் விலகிச் செல்லும்படி நடத்தமுடியுமோ அவள், தன்னால் பணியவைக்க முடியாத நற்பண்பின்மீது பழிவாங்கி, ஒரு தவறான குற்றத்தைச் சுமத்தி, அவளுடைய செல்வாக்கினால், அவன் சிறையில்

போடப்பட்டான். இங்கு யோசேப்பு அவனுடைய நேர்மையை விட்டுக்கொடுக்க மறுத்ததினால் துன்பப்பட்டான். அவன் தனது புகழையும் மேன்மைகளையும் தேவனுடைய கரங்களில் வைத்திருந்தான். ஒரு முக்கியமான இடத்தை நிரப்புவதற்காக சிறிது காலத்துக்குப் பாடுகளை அனுபவிக்கும்படி அவன் விட்டுவிடப்பட்டிருந்தபோதிலும் துன்மார்க்கமற்றவனாக இருந்தும் குற்றம் கடுமையாக்கப்பட்டிருந்த போதிலும் அவனுடைய புகழை தேவன் பாதுகாத்து, பிற்காலத்தில் அவருடைய திட்டத்திற்கு ஏற்ற நல்ல நேரத்தில், அதை ஒளிவீசச் செய்தார். சிறைச்சாலையைக்கூட அவனுடைய உயர்விற்கான பாதையாக இருக்கும்படி தேவன் ஏற்பாடுசெய்தார். நற்பண்பானது அதன் சொந்த நேரத்தில், அதன் சொந்தப் பரிசைக் கொண்டுவரும். தனது எஜமானுக்கும் ஆண்டவருக்கும் விசுவாசமும் நீதியும் உள்ளவனாக இருக்கும்படி யோசேப்பின் இருதயத்தை மூடியிருந்த கேடயம் பாதுகாத்திருந்தது. தேவனுக்குப் பயப்படுதல் என்பதானது, அந்த தேசம் முழுவதற்கும் அவன் அதிபதியாக உயர்த்தப்பட்டிருந்தபோதிலும், அவன் தேவனை மறக்கவில்லை. ஒரு அந்நிய தேசத்தில் தான் ஒரு அந்நியனாக இருப்பதை அவன் அறிந்திருந்தான். அவன் தன் தகப்பனிடமிருந்தும் சகோதரர்களிடமிருந்தும் பிரிக்கப்பட்டிருந்ததானது, அடிக்கடி அவனுக்குத் துயரத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. அவனை ஒரு சிறப்பான இடத்தில் வைப்பதற்காக தேவனுடைய கரங்கள் அவனுடைய பாதையை மாற்றி அமைத்துள்ளது என்று அவன் உறுதியாக நம்பினான். எகிப்தின் அதிபதி என்னும் பதவியில் அவன் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் விசுவாசத்துடன் தொடர்ந்து, தேவனைச்சார்ந்து செய்துவந்திருந்தான். (9)

யோசேப்பு தேவனுடன் நடந்திருந்தான். எந்தவிதமான கவர்ச்சியினாலும் அல்லது பயமுறுத்தலினாலும் நீதியின் பாதையை விட்டு விலகி, தேவப்பிரமாணத்தை மீறுவதற்கு அவன் இணங்கமாட்டான். பிற்காலத்தில் பூமியின்மேல் வாழும் அனைவரின் நம்மைக்காகவும் அவனுடைய சுயக்கட்டுப்பாடு, ஆபத்துக்காலத்தில் பொறுமை, அசையாத அவனுடைய கற்பு நெறி ஆகியவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. யோசேப்பின் சகோதரர்கள் அவர்களுடைய பாவத்தை அவனுக்கு முன்பாக அறிக்கைசெய்ய நெரிட்டிருந்த போதிலும், அவன் அவர்களை அளவுகடந்த நிலையில் மன்னித்தான். அவனுடைய அனுதாபமிக்க செயல்களினாலும் அன்பினாலும் அவர்கள் அவனிடம் காட்டியிருந்த கொடுமையான நடத்தைக்காக, விரோதமான உணர்வுகளை அவன் தன் இருதயத்தில் பேணியிருக்கவில்லை என்பதைத் தனது செயல்களினால் வெளிப்படுத்தினான். (10)

## செழுமையின் நாட்கள்!

இஸ்ரவேல் மக்கள் அடிமைகளாக இருக்கவில்லை. அநேக எகிப்தியர்கள் செய்திருந்ததுபோல அவர்கள் தங்களுடைய ஆடுமாடுகளையோ நிலங்களையோ தங்களையோ உணவிற்காகப் பார்வோனிடம் ஒருபோதும் விற்கவில்லை. யோசேப்பு அந்த நாட்டிற்குச் செய்த சேவைக்காக, அவர்கள் தங்களுடைய ஆடுமாடுகளுடன் வாழ்ந்துகொள்ளும்படியாக தேசத்தின் ஒரு பகுதி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த அரசாங்கம் சம்பந்தப்பட்ட சகல காரியங்களையும், யோசேப்பு நிர்வாகம்செய்துவந்த விதத்தையும், குறிப்பாக எகிப்து தேசத்தின்மீது வந்த நீண்டகாலப் பஞ்சத்தைச் சமாளிப்பதற்காக அவன்செய்த காரியங்களையும் பார்வோன் மிகவும் பாராட்டினான். அந்த நாட்டின் செழுமைக்காக யோசேப்பின் ஞானமிக்க நிர்வாகத்திற்கு அந்த நாடு முழுவதும் கடமைப்பட்டிருக்கிறது என்பதை அவன் உணர்ந்தான். எகிப்து தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; தேசத்திலுள்ள நல்ல இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேறும்படிச்செய்; அவர்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்கலாம்; அவர்களுக்குள்ளே திறமையுள்ளவர்கள் உண்டென்று உனக்குத் தெரிந்திருந்தால், அவர்களை என் ஆடுமாடுகளை விசாரிக்கிறதற்குத் தலைவராக வைக்கலாம் என்றான். (11)

“பார்வோன் கட்டளையிட்டபடியே, யோசேப்பு தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் எகிப்து தேசத்தில் நல்ல நாடாகிய ராமசேஸ் என்னும் நாட்டிலே சுதந்திரம் கொடுத்து, அவர்களைக் குடியேற்றினான். யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரையும் தன் தகப்பனுடைய குடும்பத்தார் அனைவரையும் அவரவர்கள் குடும்பத்திற்குத் தக்கதாய் ஆகாரம் கொடுத்து ஆதரித்துவந்தான்.” (12)

எகிப்தின் அரசன், யோசேப்பின் தகப்பனிடமிருந்தும் அவனது சகோதரர்களிடமிருந்தும் வரியை (மற்றவர்களிடம் வசூலிப்பதுபோல) வசூலிக்கவில்லை. அவர்களுக்குத் தாராளமாக உணவு வழங்கும்படி யோசேப்பு அனுமதிக்கப்பட்டிருந்தான். ஏராளமான இந்த உணவு விநியோகத்திற்காக நாம் யோசேப்பின் தேவனுக்கும் யோசேப்பிற்கும் கடமைப்பட்டவர்களாக இல்லையா? என்று அந்த அரசன் அதிபதிகளிடம் கேட்டான். அவனுடைய ஞானத்தினால் தானே நாம் இவ்வளவு ஏராளமான தானியங்களைக் களஞ்சியங்களில் சேகரித்து வைத்துள்ளோம். மற்ற நாடுகள் அழிந்துகொண்டிருக்கும்போது, நாம் போதுமானவைகளை உடையவர்களாக இருக்கிறேம். அவனுடைய நிர்வாகம் அந்த இராஜ்ஜியத்தை மிகுந்த செல்வச் செழிப்புள்ளதாக ஆக்கியிருக்கிறது என்றும் கூறினான். (13)

“யோசேப்பும் அவனுடைய சகோதரர் யாவரும், அந்தத் தலைமுறையார் எல்லாரும் மரணமடைந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தார்கள்; தேசம் அவர்களால் நிறைந்தது. யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்.” (14)

**ஒடுக்கப்படுதல்!**

எகிப்தின் புதிய அரசன், இஸ்ரவேல் மக்கள் தங்களது நாட்டின் பெரும் வேலைகளைச் செய்வதற்கானவர்களாக உள்ளனர் என்பதை அறிந்துகொண்டான். அவர்களில் அநேகர் தகுதி உள்ளவர்களும் புரிந்துகொள்ளும் சக்தியை உடையவர்களுமான வேலைக்காரர்களாக இருந்தனர். அவர்களுடைய வேலையை இழப்பதற்கு அவன் ஆயத்தமாயிருக்கவில்லை. புதிய அரசன் இஸ்ரவேல் ஜனங்களை தங்களுடைய நிலங்களையும் ஆடுமாடுகளையும் தங்களையும் அந்த இராஜ்யத்திற்கு விற்றுப்போட்ட அடிமைகளின் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டான். “அப்படியே அவர்களைச் சுமைசுமக்கிற வேலையினால் ஒடுக்கும்படிக்கு, அவர்கள்மேல் விசாரணைக்காரர்களை வைத்திருந்தான். அப்பொழுது அவர்கள் பார்வோனுக்காகப் பித்தோம், ராமசேஸ் என்னும் பண்டகசாலைப் பட்டணங்களைக் கட்டினார்கள்.” (15)

“ஆனாலும் அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள்; ஆகையால் அவர்கள் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து எரிச்சலடைந்தார்கள். எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் கொடுமையாய் வேலைவாங்கினார்கள். சாந்தும் செங்கலுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினாலும், வயலில் செய்யும் சகலவித வேலையினாலும், அவர்களுக்கு அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினார்கள்; அவர்களைக்கொண்டு செய்வித்த மற்ற எல்லா வேலைகளிலும், அவர்களைக் கொடுமையாய் நடத்தினார்கள்.” (16)

இஸ்ரவேல் பெண்கள் அடிமைகள்போல் நடத்தப்பட்டு, அந்தப் பெண்களை வயல்களில் வேலைசெய்யும்படி வற்புறுத்தினர். அப்படியிருந்தும் அவர்களுடைய எண்ணிக்கை குறையவில்லை. அவர்கள் தொடர்ச்சியாகப் பெருகிவருதை அந்த அரசனும் அவனுடைய அதிபதிகளும் கண்டபோது, குறிப்பிட்ட அளவிற்கு வேலையை அவர்கள் நாள்தோறும் செய்தாகவேண்டும் என்று அவர்களை வற்புறுத்த, அவர்கள் ஆலோசனைசெய்தனர். கடினமான வேலையினால் அவர்களது எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். அவர்களது எண்ணிக்கையையும் சுதந்திர தாகத்தையும் அவர்களால் ஒடுக்கிவிடமுடியாமல்போனதினால் கோபமடைந்தனர். (17)

அவர்களுடைய நோக்கத்தை அவர்களால் நிறைவேற்றமுடியாமல் போனதினால், மேலும் அதிகமாக அவர்களை வேலைவாங்கும்படி அவர்கள் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள். ஆண்குழந்தைகள் அனைத்தும் அவைகள் பிறந்தவுடன், உடனடியாகக் கொல்லப்படவேண்டும் என்று அரசன் கட்டளையிட்டான். இந்தக் காரியங்களைச் செய்வதற்கு சாத்தான் அவர்களை ஏவியிருந்தான். ஒடுக்கப்பட்டிருக்கின்ற நிலையிலிருந்த எபிரெயர்களைக் காப்பாற்ற ஒரு விடுதலையாளர் எபிரெயர்களக்கிடையிலிருந்து எழும்பவேண்டியவராக இருந்தார் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆண்குழந்தைகளைக் கொலைசெய்துவிடும்படி அரசனை நெருக்கி ஏவினால், தேவனுடைய நோக்கம் தோல்வி அடைந்துவிடும் என்று அவன் எண்ணினான்; ஆனால் எகிப்தின் (மருத்துவச்சிகள்) தேவனுக்குப் பயந்ததினால், எபிரெயக் குழந்தைகளைக் கொலைசெய்யத் துணியவில்லை. அவர்கள் அரசனின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருந்ததினால் கர்த்தர் அவர்களைச் செழுமைப்படுத்தினார். தன்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை என்பதை எகிப்தின் அரசன் கேள்விப்பட்டபோது, அவன் மிகவும் கோபமுடையவனானான். அப்பொழுது அவன் அவனுடைய கட்டளையை மிகவும் அவசரமும் பரவலுமாக்கினான். “ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவும், பெண்பிள்ளைகளையெல்லாம் உயிரோடே வைக்கவும்” கட்டளையிட்டான். (18)

## கரும்பு தின்பதற்குக் கூலி!

கொடுமைமிக்க இந்தச் சட்டம் அமலில் இருந்தபோதுதான் மோசே பிறந்தான். அவனுடைய தாய் அவனை எந்த அளவிற்குப் பாதுகாக்க முடியுமோ அந்த அளவிற்குப் பாதுகாத்து, அதன்பின் ஒரு நாணல் பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோரமாய் நாணலுக்குள் வைத்தாள். அந்தக் குழந்தையின் சகோதரி பிறர் கவனிக்காதவண்ணம் அந்த நாணல் பெட்டியின் அருகில் சுற்றித்திரிந்து, கவனிக்காதவள்போல் கவனிக்கும்படி திட்டம்செய்யப்பட்டிருந்தாள். தனது சிறிய சகோதரனுக்கு என்ன நிகழும் என்பதை அறிவதற்காக, அவள் மிகுந்த ஆர்வத்துடன் கவனித்திருந்தாள். அன்புமிக்க ஒரு தாயின், கண்ணீர்கலந்த ஆர்வமிக்க ஜெபத்துடன், தேவனுடைய கவனிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டு இருந்த உதவியற்ற அந்தச் சிறுகுழந்தைக்கு கேடு எதுவும் உண்டாகாத வண்ணம் தேவதூதர்கள் அதனைக் கவனித்திருந்தனர். (19)

களங்கமற்ற இந்த அந்நியக் குழந்தை கிடத்தப்பட்டிருந்த அதே இடத்திற்கருகில் உள்ள ஆற்றுக்கு பார்வோனின் மகளின் காலடிகளை இந்த தூதர்கள் நடத்தினார்கள். அந்தச் சிறியபேழை அவளுடைய கவனத்தை

மிகவும் கவர்ந்தது. தனக்கு வேலைக்காரிகளாக நின்றிருந்த பெண்களில் ஒருத்தியை, அந்தக் குழந்தையைத் தன்னிடம் கொண்டுவரும்படி கூறினான். தனியாக அமைக்கப்பட்டிருந்த அந்தப் பேழையின் மூடியைத் திறந்தபோது, ஒரு அழகிய குழந்தையை அவள் கண்டாள்; "பிள்ளை அழுதது; அவள் அதின்மேல் இரக்கமுற்றாள்." தான் அதிகமாக நேசித்த தனது குழந்தையைக் காப்பதற்காக அன்புமிக்க ஒரு எபிரெயத் தாய் ஒருத்திதான் இவ்விதமான நடவடிக்கையில் செயல்பட்டிருக்கிறாள் என்பதை அவள் அறிந்துகொண்டாள். உடனே இந்தக் குழந்தை தன்னுடைய மகனாக வளர்க்கப்படவேண்டும் என்று முடிவுசெய்தாள். மோசேயின் சகோதரி உடனே முன்னால்வந்து, "உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படி எபிரெய ஸ்திரீகளில் பால்கொடுக்கிற ஒருத்தியை நான் போய் உம்மிடத்தில் அழைத்துக்கொண்டு வரட்டுமா?" என்று கேட்டாள்; அதற்கு பார்வோனுடைய குமாரத்தி: அழைத்துக்கொண்டு வா என்றாள். அந்தச் சகோதரி மிகுந்த மகிழ்ச்சியுடன் தன் அன்னையிடத்திற்கு ஓடி, மகிழ்ச்சியான செய்திகளையெல்லாம் கூறி, அவளைப் பார்வோனின் குமாரத்தியினிடத்திற்கு அழைத்துவந்தாள். அவள் அந்த குழந்தையை வளர்க்கும்படியாக அவளிடம் ஒப்புவித்தாள். அவளது சொந்தக் குமாரனை வளர்ப்பதற்கு அவளுக்குத் தாராளமாகப் பணம் கொடுக்கப்பட்டது. பாதுகாப்பும் மகிழ்ச்சியும்மிக்க இந்தப் பணியில் அந்தத் தாய் மகிழ்ச்சியுடன் பிரவேசித்தாள். தேவன் அவனுடைய உயிரைப் பாதுகாத்திருக்கிறார் என்று அவள் நம்பினாள். வாழ்க்கைக்குப் பயன்தரக்கூடிய விதத்திலான பயனுள்ள ஒரு கல்வியை அவனுக்குக் கொடுப்பதற்காக அவளிடம் ஒப்படைக்கப்பட்ட வாய்ப்பை அவள் முன்னேறச் செய்தாள். அவன், ஏதோ ஒரு பெரிய வேலைக்காகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறான் என்று அவள் நம்பினதால், மற்ற பிள்ளைகளுக்குக் கொடுப்பதைவிட சிறப்பான போதனைகளை அவனுக்குக் கொடுப்பதில் அவள் கருத்துள்ளவளாய் இருந்தாள். அவள் தன்னுடைய விசுவாசமிக்க போதனையில் தேவனுக்குப் பயப்படுதல், சத்தியத்தின்மீதும் நீதியின்மீதும் உள்ள அன்பு ஆகியவைகளை அவனது பிஞ்சு மனத்திற்குள் புகட்டினாள். (20)

அவள் அத்துடன் நின்றுவிடாமல், கறைபடிந்த செல்வாக்குகள் ஒவ்வொன்றிலிருந்தும் தன் மகன் பாதுகாக்கப்படவேண்டும் என்று தேவனை நோக்கி அக்கரையுடன் ஜெபித்தாள். தேவன் ஒருவரால் மட்டுமே இந்தவிதமான அவசர வேளையிலும் உதவமுடியும். அகையால் ஜீவனுள்ள தேவனாகிய அவரைக் பணிந்து ஜெபித்துத் தொழுவதற்கு அவனுக்கு அவள் கற்றுக்கொடுத்தாள். உருவ வழிபாட்டில் உள்ள பாவத் தன்மையை அவனது மனதில் பதியச்செய்ய அவள் வகைதேடினாள். விரைவில் அவன் அவளது செல்வாக்கைவிட்டுப் பிரிந்து, அவனை சுவீகாரம் செய்திருந்த

அரசியான தாயிடம் ஒப்படைக்கப்பட்டு, வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்டவரைப்பற்றியும் அவன் அதிகமாக அறிந்திருக்கவேண்டும் என்பதையும் அவள் நன்றாக அறிந்துவைத்திருந்தாள். (21)

அரண்மனை வாழ்க்கையின் அழகினால், பாவத்தால் கறைப்படுத்தப்பட்டு அகந்தை உள்ளவனாகிவிடாமல், பலமுள்ளவனாக அவன் இருக்கவேண்டும் என்பதற்கென்று அவன் மனதைப் பலப்படுத்த அவன் தன் பெற்றோர்களிடமிருந்து போதனைகளைப் பெற்றிருந்தான். அவன் தெளிவான மனதை உடையவனாக இருந்தான். புரிந்துகொள்ளும் சக்தி உள்ள இருதயத்தை உடையவனாக இருந்தான். அவன் தனது இளமையில் பெற்றிருந்த பக்தியான உணர்த்துதல்களை ஒருபோதும் இழக்காதவனாக இருந்தான். தன்னால் முடிந்தகாலம்வரைக்கும் அவனுடைய தாய் அவனைப் பாதுகாத்திருந்தாள். ஆனால் அவனுக்குப் பன்னிரண்டு வயதானபோது, அவளிடமிருந்து அவன் பிரியவேண்டிய நிலைமை வந்தது; அதன்பின், அவன் பார்வோனின் குமாரத்தியின் மகனானான். (22)

இங்கு சாத்தான் தோற்கடிக்கப்பட்டான! ஆண்பிள்ளைகளை அழித்துவிடும்படி பார்வோனைத் தூண்டிவிட்டதின்மூலம், தேவனுடைய நோக்கத்தை நிறைவேறவிடாமல்செய்து, அவருடைய ஜனங்களை விடுதலைசெய்வதற்கென்று எழக்கூடிய ஒருவரை, அழித்துவிடலாம் என்று அவன் எண்ணினான். எபிரெயக் குழந்தைகளை மரணத்திற்கு உட்படுத்தின அதே கட்டளையானது, மோசேயை அரச குடும்பத்தில் வைப்பதற்கான கருவியாக மேற்கொள்ளப்பட்டு, அங்கேயிருந்து கல்விமானாவதற்கான அனுகூலங்களையும் கொடுத்து, எகிப்திலிருந்து அவனுடைய ஜனங்களை நடத்திச் செல்லுவதற்கேற்ற மேலான தகுதியையும் அளித்தது. (23)

பார்வோன் தான் சுவீகாரம்செய்திருந்த அவனது பேரனை சிங்காசனத்திற்கு உயர்த்தவேண்டும் என்று எதிர்பார்த்திருந்தான். எகிப்தின் சேனைத் தலைவனாக இருந்து, யுத்தத்தை நடத்துவதற்காக அவன் மோசேக்குப் பயிற்சி அளித்திருந்தான். பார்வோனின் பிரபுக்களுக்கு மத்தியில் மோசே மிகவும் ஆதரவு படைத்தவனாக இருந்தான். ஏனெனில் அவன் யுத்தத்தை மேலான திறமையுடனும் ஞானத்துடனும் நடத்தியிருந்தான். “மோசே எகிப்த்தியருடைய சகல சாஸ்த்திரங்களிலும் கற்ப்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்.” மோசே மிகவும் சிறப்பான குணங்களை உடையவனாக இருக்கிறான் என்று எகிப்தியர்கள் கருதியிருந்தனர். (24)

**தலைமை ஏற்று நடத்திட சிறப்பான ஆயத்தம்!**

இஸ்ரவேல் ஜனங்களுக்கு விடுதலைவழங்குவதற்காக தேவன் மோசேயைத் தெரிந்துகொண்டிருக்கிறார் என்று தேவதூதர்கள் போதித்தனர். இஸ்ரவேல் ஜனங்களுக்கு மத்தியிலிருந்த அதிபதிகளும் இந்த தூதர்களால், அவர்களது விடுதலையின் நேரம் மிகவும் சமீபித்துவிட்டது என்றும், இந்த வேலையை நிறைவேற்றுவதற்கு தேவன் பயன்படுத்தக்கூடிய மனிதனாக மோசே இருக்கிறான் என்றும் போதித்தான். ஒரு யுத்தத்தினால் இஸ்ரவேல் மக்கள் விடுதலை ஆவார்கள் என்றும், எகிப்திய சேனைகளுக்கு எதிராக அவன் நின்று, ஒடுக்குதலின் நுகத்தடியை முறித்து, அவனது சகோதரர்களுக்கு விடுதலை வழங்குவான் என்றும் மோசே எண்ணியிருந்தான். இத்தகைய கண்ணோட்டத்தை உடையவனாக இருந்த மோசே, தனது சுவீகாரத் தாயின்மீதும் பார்வோனின்மீதுமுள்ள அவனுடைய அன்பானது அவனுடைய சித்தத்தை அவனால் சுதந்திரமாகச் செயலாற்ற முடியாதபடி தடுத்துவிடக்கூடாது என்பதற்காக அவர்களுடனுள்ள தனது அன்பைக் கட்டுப்படுத்திக் காவல்செய்திருந்தான். (25)

தன்னைச் சுற்றிலுமிருந்த கறைபடிந்த செல்வாக்குகளினால் மோசே காயப்பட்டுவிடாதபடி கர்த்தர் அவனைப் பாதுகாத்திருந்தார். தேவனுக்குப் பயப்படுகின்ற பெற்றோர்களிடமிருந்து தனது இளமையில் பெற்றிருந்த சத்தியத்தின் கோட்பாடுகள் அவனால் ஒருபோதும் மறக்கப்பட்டிருக்கவில்லை. அரண்மனை வாழ்க்கையில் நடைமுறையில் உள்ள கறைபடிந்த செல்வாக்கிலிருந்து கேடயமாக அவன் பாதுகாக்கப்படவேண்டிய அவசியம் அவனுக்குண்டானபோது, இளமையில் அவன் கற்றிருந்த பாடங்கள் கனிகொடுத்தன. தேவனுக்குப் பயப்படுதல் அவன்முன் இருந்தது. தனது சகோதரர்களின்மீதிருந்த அன்பு மிகவும் பலமுள்ளதாக இருந்ததாலும், எபிரெய விசுவாசத்தின்மீது அவனுக்கிருந்த மரியாதை மிகப் பெரிதாக இருந்ததினாலும், அரச குடும்பத்தின் ஒரு வாரிசாகத் தான் இருப்பதற்காக உள்ள கனத்திற்காக, அவன் தனது பாரம்பரியத்தை மறைக்காதவனாக இருந்தான். (26)

“மோசே பெரியவனான காலத்தில் (நாற்பது வயது), அவன் தன் சகோதரரிடத்தில் போய், அவர்கள் சுமைசுமக்கிறதைப் பார்த்து, தன் சகோதரராகிய எபிரெயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக் கண்டு, அங்கும் இங்கும் பார்த்து, ஒருவரும் இல்லையென்று அறிந்து, எகிப்தியனை வெட்டி, மணலிலே புதைத்துப்போட்டான். அவன் மறுநாளிலும் வெளியே போனபோது, எபிரெய மனுஷர் இருவர் சண்டைபண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவன் அநியாயஞ்செய்கிறவனை நோக்கி: நீ உன் தோழனை

அடிக்கிறது என்ன என்று கோட்டான். அதற்கு அவன்: எங்கள்மேல் உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்? நீ எகிப்தியனைக் கொன்றுபோட்டதுபோல, என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ என்றான். அப்பொழுது மோசே காரியம் நிச்சயமாக வெளிப்பட்டது என்று பயந்தான். பார்வோன் அந்தக் காரியத்தைக் கேள்விப்பட்டபோது, மோசேயைக் கொலைசெய்ய வகைதேடினான். மோசே, பார்வோன் இடத்தினின்று தப்பியோடி, மீதியான் தேசத்தில் போய்த் தங்கி, ஒரு துரவண்டையிலே உட்கார்ந்திருந்தான்." தேவன் அவனை வழிநடத்தவே தேவனைத் தொழுதிருந்த எத்திரோ என்னும் ஒரு மனுஷ னுடைய வீட்டில் தங்கினான். அவன் மேய்ப்பனாகவும் மீதியான் தேசத்து ஆசாரியனாகவும் இருந்தான். அவனுடைய மந்தைகளை அவனது குமாரத்திகள் மேய்த்திருந்தனர். விரைவில் எத்திரோவின் மந்தைகள் மோசேயின் கண்காணிப்பில் விடப்பட்டன. அவன் எத்திரோவின் மகளை திருமாணம்செய்து, மீதியான் தேசத்தில் நாற்பது வருடங்கள் தங்கியிருந்தான். (27)

எகிப்தியர்களைக் கொலைசெய்வதில் மோசே தீவிரமாக இருந்தான். தேவனுடைய சிறப்பான பாதுகாப்பு எபிரெயர்களுக்கு விடுதலை வழங்கும்படி மோசேயை எழுப்பி உள்ளது என்று மோசே தனக்குள் யூகித்துக்கொண்டான்; ஆனால் மோசே நினைத்திருந்ததுபோல இஸ்ரவேல் இனங்களை யுத்தத்தின்மூலமாக விடுதலைசெய்யத் திட்டமிடாமல், தேவன் தமது சொந்த வல்லமையினால் விடுதலைசெய்து, அதன் மகிமை அவருக்கு மட்டும் சூட்டப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தார். தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எகிப்தியனைக் கொலைசெய்த மோசேயின் நோக்கத்தை மேற்கொண்டார். அவர் தமது தெய்வீக ஏற்பாட்டினால், மோசேயை எகிப்தின் அரச குடும்பத்திற்குள் கொண்டுவந்திருந்தார். அங்கு அவன் பூரணமான கல்வியைப் பெற்றுக்கொண்டான். அப்படியிருந்தும் எந்த ஒரு பெரிய வேலையை நிறைவேற்றுவதற்காக தேவன் மோசேயை எழுப்பியிருந்தாரோ அந்த வேலையை அவனிடம் ஒப்படைப்பதற்கு ஆயத்தமானவனாக மோசே இருக்கவில்லை. அரசனின் அரண்மனையைவிட்டு மோசேயினால் உடனடியாக வெளியேற முடியவில்லை. அரசனின் பேரன் என்ற நிலையில் அவனுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நடத்தைகளும் அதற்குத் தடையாக இருந்தது. எதிர்ப்புகள், வறுமை, என்னும் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டு, ஒரு அனுபவத்தை அடைய அவனுக்கு ஒரு நேரம் அவசியமாக இருந்தது. ஓய்வாக இருந்தபோது எதிர்காலத்தைப் பற்றி அவனுக்கு சிறப்பாகப் போதிக்க, கர்த்தர் தமது தூதர்களை அனுப்பியிருந்தார். சுயக் கட்டுப்பாடு, தாழ்மை என்னும் பெரிய பாடங்களை இங்கு அவன்

முழுமையாகக் கற்றுக்கொண்டான். எத்திரோவின் மந்தையை அவன் காத்திருந்து, மேய்ப்பனாகத் தாழ்மைமிகுந்த அவனது கடமைகளை அவன் செய்திருந்தபோது, தேவன் அவருடைய ஆடுகளான மந்தையை மேய்க்கின்ற ஒரு ஆவிக்குரிய மேய்ப்பனாக, இஸ்ரவேல் என்னும் அவரது ஜனத்தை நடத்துபவனாக இருக்கும்படி அவனை ஆயத்தம்செய்துகொண்டிருந்தார். (28)

மோசே ஆடுகளை வனாந்தரத்தில் மேய்த்து ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதத்திற்கு வந்தபோது, "அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று, அவனுக்குத் தரிசனமானார்." "அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்.அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, ... பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்.... இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன். நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா" என்றார்." (29)

ஒடுக்குதலிலிருந்து அவரது ஜனங்களை விடுவிக்கவும், அவர்களது எதிரிகளால் தொடரப்படும்போது அவர்களைப் பாதுகாக்கவும், அடையாளங்களையும் அற்புதங்களையும் நிறைவேற்றுவதில் வல்லமை உள்ளவனாக இருப்பதற்காகவும், மேய்பனின் கோலுக்குப் பதிலாக, தேவனுடைய கோலை மாற்றிப் பிடிப்பதற்காகவும் தேவன் ஏற்படுத்தின நேரம் முழுமையாக வந்தது. (31)

தனக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்ற மோசே இசைந்தான். அவனும் அவனுடைய குடும்பமும் எகிப்திற்குத் திரும்புவதற்காக முதலில் அவனது மாமனாரைச் சந்தித்து, அவரது சம்மதத்தைப் பெற்றான். பார்வோனுக்குத் கொடுக்கப்பட உள்ள தூதைப்பற்றி எத்திரோவிடம் கூறிட அவன் துணியவில்லை; ஏனெனில் அப்படிப்பட்ட ஆபத்தான வேலையின்போது அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் உடன்செல்லுவதற்கு அவன் விருப்பமில்லாதவனாக இருந்துவிடக்கூடும் என்று அவன் அஞ்சினான். "நீ எகிப்துக்குத் திருப்பிப் போ, உன் பிராணனை வாங்கத் தேடின மனிதர்

எல்லாரும் இறந்துபோனார்கள்" என்று கூறி, கர்த்தர் அவனைப் பலப்படுத்தி, அவனது பயங்களை நீக்கினார். (32) ★

# 15

# தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தப்பட்டது!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 112–118)**
**திருவசன ஆதாரம் : யாத்திராகமம் 5:1–12: 28.**

இஸ்ரவேலரின் பிள்ளைகள் அநேக வருடங்களாக எகிப்தியர்களுக்கு அடிமைகளாக வேலை செய்திருந்தனர். ஒரு சில குடும்பங்களாக மட்டுமே எகிப்திற்குச் சென்றவர்கள், திரள்கூட்டமானார்கள். உருவ வழிபாட்டில் சூழப்பட்டிருந்ததினால், அவர்களில் அநேகர் மெய்தேவனைப்பற்றிய அறிவை இழந்து, அவரது பிரமாணத்தை மறந்திருந்தனர். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் மிருகங்கள், மனிதர்களின் கரங்களால் செய்யப்பட்டிருந்த உருவங்கள் ஆகியவற்றை வணங்குவதில் எகிப்தியர்களுடன் சேர்ந்துகொண்டனர். ஜீவனுள்ள தேவனை அவர்கள் மறந்துவிடும்படியாக, இஸ்ரவேல் ஜனங்களைச் சுற்றியிருந்த ஒவ்வொன்றும் முன்னேற்பாட்டுடன் செய்யப்பட்டிருந்தது. அப்படியிருந்தபோதிலும், எபிரெயர்களுக்கிடையில் இருந்தவர்களில் பலர் வானத்தையும், பூமியையும் உண்டுபண்ணின ஜீவனுள்ள தேவனைப்பற்றிய அறிவைப் பாதுகாத்திருந்தனர். தங்களைச் சுற்றிலுமுள்ள விக்கிரகாராதனைக்காரர்களின் அருவருப்பான காரியங்களைப் பார்ப்பதையும், அவைகளில் பங்கு கொள்ளுவதையும், மரத்தாலும் கல்லாலும் செய்யப்பட்டிருந்த எகிப்திய தெய்வங்களுக்குமுன்னால் கீழே குனிந்து வணங்குவதையும் உணர்வுகள் இல்லாத அந்தப் பொருட்களுக்கு காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துவதையும் கண்டபோது, விசுவாசமிக்கவர்கள் வருந்தினார்கள். தங்களுடைய துன்பத்தில் எகிப்திய நுகத்திலிருந்து அவர்களை விடுவிக்கும்படி கர்த்தரை நோக்கி அழுதார்கள். அவர் அவர்களை எகிப்துக்கு வெளியேகொண்டுவந்து, சிலை வணக்க ஆராதனையிலிருந்தும், தங்களைச் சூழ்ந்திருந்த கறைபடிந்திருந்த ஆதிக்கங்களிலிருந்தும் விடுவிக்கவேண்டும் என்றும் விரும்பினார்கள். (1)

ஆனால் எபிரெயர்களில் அநேகர் ஒரு புதிய தேசத்திற்கென்று நீண்ட பயணத்தைச்செய்து, அதிலுள்ள துன்பங்களைச் சந்திப்பதைவிட,

அடிமைத்தனத்தில் தங்கிவிடுவதில் மனநிறைவு உடையவர்களாக இருந்தனர். எனவே கர்த்தர் பார்வோனுக்குமுன்பாகச் செய்த முதலாவது அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் அவர்களை விடுவிக்கவில்லை. அவர் தமது பெரிய வல்லமையை எகிப்தியர்களுக்கு வெளிக்காட்டவும், அவருடைய ஜனங்கள் எகிப்தைவிட்டு வெளியேறி, தேவனைச் சேவிப்பதைத் தெரிந்துகொள்வதற்கு ஆவல்மிக்கவர்கள் ஆவதற்கும், பார்வோனின் கொடுங்கோன்மைமிக்க ஆவி அதன் முழுமையை அடைவதற்காகவும், நிகழ்ச்சிகளைக் கடந்துசெல்லும்படி அவர் அனுமதித்தார். எபிரெயர்களில் அநேகர் விக்கிரக ஆராதனை யினால் கறைபடிந்தவர்களானபோதிலும் விசுவாசமுள்ளவர்கள் உறுதியாக நின்றிருந்தனர். அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை மறைத்துவைக்காமல், எகிப்தியர்களுக்கு முன்பாக வெளிப்படையாக தங்களுடைய மெய்த்தேவனும் ஜீவனுள்ள தேவனுமாகிய ஒருவரையே சேவிப்பதை அறிக்கைசெய்தனர். தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை அவர்கள் படைப்பின் காரியங்களிலிருந்தும், மற்றும் அநேகமான சான்றுகளிலிருந்தும் எடுத்துக்காட்டியிருந்தனர். எபிரெயர்களின் விசுவாசத்துடனும், அவர்களுடைய தேவனுடனும் எகிப்தியர்கள் அறிமுகமானவர்களாக இருக்கின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். ஆனால் மெய்த் தேவனைத் தொழுதுகொள்ளுபவர்களின் விசுவாசத்தைக் கெடுக்க, அவர்கள் செயலாற்றிக்கொண்டிருந்தனர். பயப்படுத்துவதினாலோ அல்லது வெகுமதிகளைத் தரும் வாக்குத்தத்தங்களினாலோ அல்லது கொடுமையான நடத்துதலினாலோ அவர்கள் வெற்றியடையாததினால் அவர்கள் மிகவும் எரிச்சலடைந்தார்கள். (2)

எகிப்தின் சிங்காசனத்தில் அமர்ந்திருந்த கடைசி இரு அரசர்கள் கொடுங்கோன்மையானவர்களாக இருந்து, எபிரெயர்களை மிகவும் கொடுமையாக நடத்தியிருந்தனர். எகிப்திலிருந்து அவர்களுடைய விடுதலையைப்பற்றி யோசேப்பு அவனுடைய மரணத்திற்கு முன், தீர்க்கதரிசனமாக முன்கூறியிருந்த வார்த்தைகளையும், ஆபிரகாமுக்குக் கொடுத்திருந்த வாக்குத்தத்தங்களையும் எடுத்துக்கூறி, மூப்பர்கள் அவர்களுடைய ஜனங்களின் அழிந்துகொண்டிருந்த விசவாசத்தை உயிர்ப்பிக்கின்ற பணியில் ஈடுபட்டிருந்தனர். சிலர் அதைக்கேட்டு நம்பினார்கள்; மற்றவர்களோ தங்களுடைய துயரமிக்க நிலமையை நோக்கியிருந்து, நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தனர். (3)

**சுற்றுச்சூழலால் பாதிக்கப்பட்ட இஸ்ரவேலர்!**

இஸ்ரவேல் ஜனங்களால் தவறான கடவுள்கள் என்று காட்டப்பட்டவைகளைத் தெரிந்துக்கொண்டிருக்கும் எகிப்தியர்கள்

தங்களுடைய தெய்வங்களை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து சுட்டிக்காட்டினார்கள். எகிப்தியர்களை அவர்களுடைய தெய்வங்கள் செல்வந்தர்களாக்கி உள்ளன என்று வெற்றிச்சிரிப்புடன் கூறிக்கொண்டனர். இந்தத் தெய்வங்கள் அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளைத் தந்துள்ளன; இஸ்ரவேலர்களைத் தங்களின் கரங்களுக்குள், தங்களைச் சேவிக்கும்படி வைத்துள்ளன; இஸ்ரவேல் ஜனம் என்னும் ஒன்றை இல்லாமலே செய்யும்படி அதனை ஒடுக்குகின்ற— அழிக்கின்ற வல்லமை அவைகளிடம் உண்டு என்றனர். எபிரெயர்கள் எப்போதாவது அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாவார்கள் என்று எண்ணுகின்ற எண்ணத்தையே அவர்கள் பரிகாசம்செய்தனர். (4)

தன்னுடைய கரத்திலிருந்து அவர்களுடைய தெய்வம் அவர்களை விடுவிக்கட்டுமே என்று பார்வோன் அகந்தையுடன் கூறினான். இஸ்ரவேல் ஜனங்களில் அநேகருடைய நம்பிக்கையை அந்த வார்த்தைகள் அழித்தன. அரசனும் அவனது ஆலோசகர்களும் கூறியது மிக மேட்டிமையாகக் காணப்பட்டது. அவர்கள் அடிமைகளைப்போல நடத்தப்பட்டிருந்தனர் என்பதையும் அவர்களது ஆளோட்டிகளும் அதிபதிகளும் அவர்கள்மீது எந்த அளவிற்கு வேலையைச் சுமத்துகின்றனரோ அந்த அளவிற்கு அவர்கள் அவைகளைச் செய்தாகவேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். அவர்களுடைய ஆண்பிள்ளைகள் தேடப்பட்டுக் கொலைசெய்யப்பட்டிருந்தனர். அவர்களது சொந்த வாழ்க்கை ஒரு சுமையாக இருந்தது. அப்படியிருந்தும் அவர்கள் பரலோகத்தின் தேவனை நம்பியிருந்து தொழுதுகொண்டிருந்தனர். மேலும் எகிப்தியர்களுடைய நிலைமையுடன் தங்களுடைய நிலையை ஒப்பிட்டுப்பார்த்திருந்தனர். காப்பாற்றவோ அல்லது அழிக்கவோ வல்லமையுள்ள ஒரு ஜீவனுள்ள தேவனை அவர்கள் நம்பவில்லை. சிலர் மரத்தினாலும் கல்லினாலும் உருவாக்கப்பட்ட விக்கிரகங்களைத் தொழுதிருந்தபோது, வேறு சிலர் சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும் வணங்குவதைத் தேர்ந்துகொண்டிருந்தனர். அப்படியிருந்தும் செழுமையும் ஐசுவரியமும் உள்ளவர்களாக இருந்தனர். எபிரெயர்களில் சிலர் தாங்கள் வணங்கும் ஆண்டவர் மற்ற தெய்வங்களெல்லாவற்றையும்விட உயர்ந்தவராக இருந்திருந்தால், விக்கிரக ஆராதனைசெய்யும் ஒரு ஜாதியினருக்குத் தங்களை அடிமைகளாகும்படி விட்டிருந்திருக்கமாட்டார் எனவும் எண்ணினார்கள். (5)

ஒரு ஜனமாக, அவர்கள் விசுவாசமில்லாதவர்களாக, கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் பழக்கத்தை உடையவர்களாக இருந்தனர்.

இவ்விதமாக அவர்கள் விக்கிரக ஆராதனைக்குள் நடத்தப்பட்டனர். ஆகையால்தான் கர்த்தர், அவர்களை எகிப்துக்குச் செல்லும்படி விட்டுவிட்டாரென்றும் தேவன்மீது விசுவாசமுள்ளவர்களாக இருந்த வேலைக்காரர்கள் புரிந்துகொண்டிருந்தனர். தேவன் விரைவில் அவர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவந்து, அவர்கள்மீதுள்ள நுகத்தடியை உடைத்துப்போடுவாரென்றும், அவர்கள் தங்களுடைய சகோதர—சகோதரிகளிடத்தில் உறுதியாக அறிவித்தனர். (6)

எகிப்தியர்கள் நிந்தித்திருந்த எபிரெயர்களின் கடவுள்தான், எல்லா தெய்வங்களையும்விட மேலானவர் என்று அவர்கள் ஒப்புக்கொள்ள வற்புறுத்தப்படும்விதத்தில், அவருடைய பலத்த வல்லமையை வெளிக்காட்டி, அவர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவரும்படி, ஒடுக்கப்பட்ட அவருடைய ஜனத்தின் ஜெபங்களுக்குத் தேவன் பதிலளிக்கின்ற நேரம் வந்திருந்தது! இப்பொழுது அவர், எகிப்தியர்களை அவர்களது விக்கிரகாராதனைக்காகவும், எவ்விதமான உணர்வும் இல்லாத விக்கிரக தெய்வங்களால் அவர்மீது கூறப்பட்டுள்ள அகந்தைமிக்க பெருமை அடித்துக்கொள்ளுதலுக்காகவும் தண்டிப்பார். மற்ற ஜாதிகள் அவருடைய வல்லமையைக் கேட்கவும், அவரது பலத்த செய்கைகளைக்கண்டு நடுங்கவும், அவருடைய ஜனங்கள் அவருடைய அற்புதமான செயல்களைக்கண்டு, தங்களுடைய விக்கிரகாராதனையை விட்டுத்திரும்பி, அவருக்குத் தூய்மையான தொழுகையைச் செலுத்தவும், தேவன் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவார். (7)

இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுதலைசெய்ததில் தேவன் அவரது மக்களின்மீது சிறப்பாகக் கொண்டுள்ள இரக்கங்களை எகிப்தியர்கள் அனைவருக்கும் முன்னால் வெளிப்படையாகக் காட்டுவார். தேவனுடைய வல்லமையானது மற்றனைத்தின் வல்லமையையும்விட, உயர்ந்ததாக இருக்கிறது என்பதை, வேறு எந்த விதத்திலும் பார்வோனுக்கு மன உணர்த்துதலைக் கொண்டுவர முடியாத நிலையில், துயரமிக்க அனுபவத்தினால்மட்டுமே, அதனை அவனால் அறிந்துகொள்ளமுடியும் என்ற நிலையில், பார்வோனின்மீது தமது நியாயத்தீர்ப்பைச் செலுத்துவது பொருத்தமானது என்பதாக தேவன் கண்டார். பூமி முழுவதிலும் அவரது பெயர் அறிவிக்கப்படும்படிக்கும் அவரது தெய்வீக வல்லமை, நீதி ஆகியவைகளுக்கான சிறப்பான சான்று அகியவைகளின் நடைமுறை விளக்கத்தை அவர் கொடுப்பார். அவருடைய வல்லமையின் வெளிக்காட்டுதலினால் அவரது ஜனங்களின் விசுவாசத்தைப் பலப்படுத்தவேண்டும் என்பது தேவனுடைய திட்டமாக இருந்தது. அவர்கள்

சார்பில் அப்படிப்பட்ட இரக்கமிக்க ஆச்சரியங்களைச்செய்த அவரைமட்டுமே அவரது பின் சந்ததியினர் உறுதியாக வணங்கவேண்டும் என்பதும் தேவனுடைய திட்டமாக இருந்தது. (8)

வைக்கோல் வழங்காமலேயே இஸ்ரவேல் ஜனங்கள் செங்கற்களை உற்பத்தி செய்தாகவேண்டும் என்று பார்வோன் கூறியபோது, தேவன் என்று ஒருவர் இருப்பது தனக்குத் தெரியாது என்று நடிப்பாகச் சொன்னபோது, அவருடைய உரிமைகளுக்கு இணங்கும்படி அவர் அவனைக் கட்டாயப்படுத்துவார் என்பதையும், அவனை ஒப்புக்கொள்ளும்படிச்செய்வார் என்பதையும் மோசே அறிவித்தான். (9)

## ஆண்டவரால் அனுப்பப்பட்ட வாதைகள்!

கோல்கள் சர்ப்பங்களானதும், நதியின் தண்ணீர் இரத்தமாக மாறியதுமான அற்புதங்கள், பார்வோனின் கடினமான இருதயத்தில் மாற்றத்தை உண்டுபண்ணவில்லை. அதற்குப்பதிலாக, இஸ்ரவேலுக்கெதிரான வெறுப்பைத்தான் அதிகரிக்கச்செய்தது. இந்த அற்புதங்கள் மந்திரவாதிகளின் வேலை. மந்திரவாதத்தினால்தான் இது நடைபெறுகிறது என்று நினைக்க அவன் நடத்தப்பட்டான். ஆனால் தவளைகளினால் உண்டான வாதை நீக்கப்பட்டபோது, இது அப்படிப்பட்டதல்ல (மந்திரவாதமல்ல) என்பதற்கான சான்று ஏராளமாக அவனுக்கிருந்தது. விநாடி நேரத்தில் அவைகளை மறைத்து மண்ணாகிப்போகும்படி செய்யக்கூடிய வல்லமை தேவனுக்குண்டு; ஆனால் அவர் அப்படிச்செய்யவில்லை. ஏனெனில் அவை நீக்கப்பட்டபின், அந்த அரசனும் எகிப்தியர்களும் அது மந்திரவாதிகளின் செயலைப்போன்ற மந்திரவாதத்தினால் உண்டானது என்று சொல்லக்கூடும். அவைகள் செத்தன; குவியல் குவியல்களாக சேர்க்கப்பட்டன; அவைகளின் உடல்களை அவர்களால் பார்க்கமுடிந்தது; அவைகள் காற்றைக் கெடுத்து நாறச்செய்தது. இங்கு, அந்த அரசனாலும் எகிப்தியர்களாலும் பரிகாரம் காணமுடியாத வீணான தத்துவங்களுக்கு எதிரான சான்றாக இருந்த இந்தச் செயல், மந்திரவாதமாக இராமல், பரலோகத்தின் தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இருக்கிறது என்பதற்கான சான்றாக இருந்தது. (10)

மந்திரவாதிகளால் பேன்களை உண்டுபண்ணமுடியவில்லை. மந்திரவாதிகள் பேன்களை உண்டுபண்ணும்படி அவர்களுடைய சொந்தக் கண்களினாலேயோ அல்லது எகிப்தியர்களால் பார்க்கவோகூட கர்த்தர் அனுமதிக்கவில்லை. அவநம்பிக்கையினால் உண்டாகும் சகலவிதமான சாக்குப்போக்குகளையும் பார்வோனிடத்திலிருந்து அவர் நீக்குவார். இது தேவனுடைய விரல் என்று மந்திரவாதிகளும்கூடக் கூறும்படிக்கு, அவர் அவர்களை வற்புறுத்தினார். (11)

அடுத்து, கூட்டமான வண்டுகளின் வாதை வந்தது. வண்டுகள் வருஷத்தின் சில பருவகாலத்தில் தோன்றி, நம்மை உபத்திரவம் செய்யாதவைகளாக இருக்கவில்லை. ஆனால் எகிப்தின்மீது கொண்டுவரப்பட்ட வண்டுகளின் கூட்டங்கள் பெரியவைகளும் விஷமுள்ளவைகளுமாக இருந்தன. அவைகளின் கொட்டுதல் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் மிகுந்த வேதனையைத் தருபவையாக இருந்தன. எகிப்தியர்களிலிருந்து, தேவன் தமது ஜனங்களை வேறுபடுத்தி, அவர்கள் வாழுமிடங்கள் எங்கிலும் அவைகள் தோன்றாமல் இருக்கச்செய்தார். (12)

அடுத்தபடியாக, கர்த்தர் எகிப்தியர்களின் மிருக ஜீவன்களின்மீது கொள்ளைநோயை வரவழைத்தார். அவைகள் யாவும் செத்துமடிந்தன. ஆனால் எபிரெயர்களின் மிருகஜீவன்களில் ஒன்றுகூட சாகாதபடி பாதுகாத்தார். அதற்கடுத்தபடியாக, மனிதர்களின்மீதும் மிருகங்களின்மீதும் எரிபந்தமான கொப்புளங்களை ஏற்படப்பண்ணினார். அதிலிருந்து மந்திரவாதிகளும் அவர்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. அதன்பின் கர்த்தர் எகிப்தின்மீது கல்மழையையும் நெருப்பையும் மின்னல்களையும் இடிமுழக்கங்களையும் உண்டுபண்ணினார். ஒவ்வொரு வாதை உண்டாவதற்குமுன்னும், அதற்கான நேரம் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால் அவை சந்தர்ப்பவசமாக நிகழ்ந்தவை என்று கூறமுடியாதபடி இருந்தது. எபிரெயருடைய தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்பட்டதாகப் பூமி முழுவதும் இருக்கிறது என்பதைக் கர்த்தர் நடைமுறை விளக்கத்தினால் எகிப்தியர்களுக்குக் காட்டினார். அதாவது இடி முழக்கங்கள், கல்மழை, புயல் ஆகிய யாவும் அவருடைய குரலுக்குக் கீழ்ப்படிகின்றன. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? என்று ஒரு தடவை அகந்தையுடன் கேட்டிருந்த பார்வோன் தன்னைத் தாழ்த்தி, நான் பாவம் செய்ததேன்; கர்த்தர் நீதியுள்ளவர்; நானும் என் ஜனமும் துன்மார்க்கர்கள் என்று கூறினான். பயங்கரமான இடிமுழக்கங்களும் மின்னல்களும் நிற்கும்படி, தனக்காக தேவனிடத்தில் பரிந்துபேச மோசேயைக் கேட்டுக்கொண்டான். பின்னர் கர்த்தர் பயங்கரமான வெட்டுக்கிளிகளை அனுப்பினார். தேவனுக்குக் கீழ்ப்படிவதைவிட வாதைகளைப் பெற்றுக்கொள்ளுவதை அந்த அரசன் தெரிந்துகொண்டான். பாவத்திற்கான வருந்துதல் இல்லாத காரணத்தினால் அந்த தேசம் முழுவதும் பயங்கரமான நியாயத்தீர்ப்புக்களுக்கடியில் இருப்பதை அவன் கண்டான். அதன்பின் கர்த்தர் எகிப்தின்மீது இருளை அனுப்பினார். மக்கள் ஒளியை இழந்தவர்களாகமட்டமல்ல, சூழ்நிலையின் நெருக்கடி திணறச்செய்வதால், சுவாசிப்பது கஷ்டமானதாக இருந்தது. அப்படியிருந்தபோதிலும், எபிரெயர்கள் வாழுமிடங்கள் தூய்மையானதாகவும் ஒளி உள்ளவைகளாகவும் இருந்தன. (13)

மேலும் ஒரு வாதையை—இதற்குமுன் நிகழ்ந்திருந்ததைவிட மிகக் கடினமான ஒரு வாதையை, தேவன் எகிப்தின்மீது கொண்டுவந்தார். மோசேயின் கடைசி விண்ணப்பத்திற்கு எதிர்த்து நின்றவர்களாக அந்த அரசனும் விக்கிரகாராதனைக்காரர்களான ஆசாரியர்களும் இருந்தனர். எபிரெயர்களை எகிப்தை விட்டுச்செல்லும்படி அனுமதிக்கவேண்டும் என்று (எகிப்திய) மக்கள் விரும்பினார்கள். கடைசி வாதையின் தன்மையையும் அதன் பலனையும் மோசே பார்வோனுக்கும் எகிப்தியர்களுக்கும் இஸ்ரவேலர்களுக்கும்கூட விவரித்திருந்தான். அந்த இரவில் எகிப்தியர்களுக்கு மிகவும் பயங்கரமானதாகவும் தேவனுடைய ஜனங்களுக்கு மிகவும் மகிமையானதாகவும் இருக்கக்கூடிய பஸ்கா என்னும் பக்திவிநயமான ஆராதனையானது நியமிக்கப்பட்டது. பரலோகத்தின் தேவனது சட்ட திட்டங்களுக்கேற்ப கீழ்ப்படிவது என்பது எகிப்தின் அரசனுக்கும், அகந்தையும் விக்கிரக ஆராதனைமிக்கவர்களுமாக இருந்த மக்களுக்கு கடினமானதாக இருந்தது. இணங்குவதற்கு மிகவும் மந்தமானவனாக அந்த எகிப்தின் அரசன் இருந்தான்; கடினமான துன்பங்களுக்குக் கீழாக இருக்கும்போது, அவன் சற்று இணங்கக்கூடியவனாக இருந்தான். ஆனால் அந்தத் துன்பம் நீக்கப்பட்டவுடன் அவன் அனுமதித்திருந்த எல்லாவற்றையும் திரும்ப எடுத்துக்கொள்ளுவான்; இவ்வாறாக, எகிப்தின்மீது வாதைக்குப்பின் வாதை தொடர்ச்சியாக வந்தது. தேவனுடைய பயங்கரமான கோபத்தினால், வற்புறுத்தப்படாதவரை, அவன் இணங்காதவனாகவே இருந்தான். எகிப்து பாழாக்கப்பட்ட பின்னருங்கூட, அந்த அரசன் அவனது கலகத்தில் பிடிவாதமுள்ளவனாகவே இருந்தான். (14)

இஸ்ரவேலைப் போகவிட அவன் மறுப்பதைத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாகத் தொடரக்கூடிய வாதைகளையும், அவைகளின் பலனையும் மோசேயும் ஆரோனும் விளக்கியிருந்தனர். ஒவ்வொரு தடவையும் அவர்கள் குறிப்பிட்டிருந்த நேரத்தில் மிகச்சரியாக அந்த வாதைகள் வருவதை அவன் கண்டிருந்தபோதிலும், இணங்காதவனாகவே இருந்தான். முதலில் எகிப்து தேசத்தில் தேவனுக்குப் பலிசெலுத்த அவன் அனுமதிக்கக்கூடியவனாக இருந்தான். (15)

தேவனுடைய கோபத்தினால் எகிப்து துன்பப்பட்டபோது, புருஷர்கள் மட்டுமே செல்லவேண்டும் என்று அவன் அனுமதித்தான். வெட்டுக்கிளிகளின் வாதையினால் ஏறத்தாழ எகிப்து முழுவதும் அழிக்கப்பட்டபின்னர், அவர்களுடைய பிள்ளைகளும் மனைவிகளும் கூடச்செல்ல அனுமதித்து, ஆனால் அவர்களுடைய மிருகங்களைச் செல்லவிடாமலிருந்தான். அதன்பின்னர், தேவனுடைய தூதன் அவர்களுடைய தலைச்சன்களையெல்லாம்

கொன்றுபோடுவான் என்று அந்த அரசனிடம் மோசே கூறினான். ஒவ்வொரு வாதையும் அதற்கு முன் நிகழ்ந்த வாதையைவிடச் சற்று கடுமையானதாகவே இருந்தது. இது மற்றெல்லாவற்றையும்விட மிகக் கடுமையானதாகவும், பயங்கரமானதாகவும் இருக்கவேண்டியதாக இருந்தது; ஆனால் அகந்தை மிக்க அந்த அரசன் தன்னைத் தாழ்த்தாதவனாக, மிகவும் அதிகமான கோபமுடையவனாக இருந்தான். அந்த பயங்கரமான இரவுக்கென்று இஸ்ரவேலர்களுக்கிடையில் பெரும் ஆயத்தம் நிகழ்ந்துகொண்டிருப்பதை அவர்கள் கண்டபோது, அவர்களுடைய கதவு நிலைகளின்மீது பூசப்பட்டிருந்த இரத்தத்தின் அடையாளத்தையும் அவர்கள் பரிகசித்தனர். (16) ★

# 16

# எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 119–125)**
**திருவசன ஆதாரம் : யாத்திராகமம் 12:29–15:19.**

தேவனால் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதலை இஸ்ரவேல் ஜனங்கள் பின்பற்றினார்கள். சங்கார தூதன் எகிப்தியர்களுக்கிடையில், ஒவ்வொரு வீடாகக் கடந்துசென்றபோது, அவர்கள் யாவரும் தங்களுடைய பயணத்திற்கு ஆயத்தமாக இருந்து, கலகம்செய்யும் அந்த அரசனும் அவனுடைய பெரிய மனிதர்களும் அவர்களை நோக்கிப் புறப்பட்டுச் செல்லுங்கள் என்று சொல்லுவதற்காக் காத்திருந்தார்கள். (1)

நடுராத்திரியிலே சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளைவரைக்கும், எகிப்து தேசத்திலிருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார். அப்பொழுது பார்வோனும் அவனுடைய சகல ஊழியக்காரரும் எகிப்தியர் யாவரும் இராத்திரியிலே எழுந்திருந்தார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று; சாவில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை. இராத்திரியிலே அவன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நீங்கள் சொன்னபடியே உங்கள் ஆடு–மாடுகளையும் ஒட்டிக்கொண்டுபோங்கள்; என்னையும் ஆசீர்வதியுங்கள் என்றான். எகிப்தியர்: நாங்கள் எல்லாரும் சாகிறோமே என்று சொல்லித் தீவிரமாய் ஜனங்களைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை மிகவும் துரிதப்படுத்தினார்கள். (2)

பிசைந்தமா புளிக்குமுன் ஜனங்கள் அதைப் பாத்திரத்துடனே, தங்கள் வஸ்திரங்களில் கட்டி, தங்கள் தோள்மேல் எடுத்துக்கொண்டு போனார்கள். மோசே சொல்லி இருந்தபடி இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியர்களிடத்தில் வெள்ளி உடைமைகளையும் பொன் உடைமைகளையும்

வஸ்திரங்களையும் கேட்டார்கள். கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியர்களின் கண்களில் தயவுகிடைக்கும்படிச் செய்ததினால், கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; இவ்விதமாய் அவர்கள் எகிப்தியர்களைக் கொள்ளை யிட்டார்கள். (3)

அப்பொழுது அவர் ஆபிரகாமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அந்தத் தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்; இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருட்களுடனே புறப்பட்டு வருவார்கள். ஆம்; நானூறு வருடங்களுக்கு முன்பு கர்த்தர் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினது நிறைவேறியது.(ஆதியாகமம் 15:13–14). (4)

அவர்களோடேகூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதுமின்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று. இஸ்ரவேல் ஜனங்கள் அவர்களுடைய உடைமைகளுடன், எகிப்தைவிட்டுச் சென்றார்கள். ஏனெனில் அவர்கள் ஒருபோதும் அவைகளைப் பார்வோனுக்கு விற்கவில்லை. யாக்கோபும் அவனுடைய குமாரர்களும் தங்களுடைய மந்தையையும் மிருக ஜீவன்களையும் தங்களுடன் எகிப்துக்குக் கொண்டுபோனார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் மிக அதிகமாக பலுகிப் பெருகினார்கள். அவர்களுடைய மந்தைகளும் மிருகஜீவன்களும் மிகவும் அதிகரித்தது. தேவன் வாதைகளை அனுப்பி, எகிப்தியர்களை நியாயந்தீர்த்து, அவருடைய ஜனங்களை எகிப்தைவிட்டு மிகவிரைவாக அவர்களுடைய உடைமைகளுடன் வெளியேறச்செய்தார். (5)

பார்வோன் ஜனங்களைப் போகவிட்டபின், ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து, எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று சொல்லி, பெலிஸ்தரின் தேசவழியாய்ப் போவது சமீபமானாலும், தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல், சிவந்த சமுத்திரத்தின் வனாந்தரவழியாய் ஜனங்களைச் சுற்றிப்போகப்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து அணியணியாய்ப் புறப்பட்டுப்போனார்கள். மோசே தன்னோடகூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டுபோனான். தேவன் நிச்சயமாய் உங்களைச் சந்திப்பார்; அப்பொழுது உங்களோடகூட என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோங்கள் என்று யோசேப்பு சொல்லி, இஸ்ரவேல் புத்திரரை உறுதியாய் ஆணையிடும்படிச் செய்திருந்தான். (6)

**அக்கினி ஸ்தம்பம்!**

அவர்கள் சுக்கோத்திலிருந்து பிரயாணப்பட்டு, வனாந்தரத்தின் ஓரமாய் ஏத்தாமிலே பாளயமிறங்கினார்கள். அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன்சென்றார். பகலிலே மேக ஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை. (7)

பெலிஸ்தியர்களுடைய தேசத்தின் வழியாக அவர்கள் கடந்து செல்ல பெலிஸ்தியர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதைக் கர்த்தர் அறிந்திருந்தார். அவர்கள் தங்களுடைய எஜமானர்களிடமிருந்து திருட்டளவாய் எகிப்திலிருந்து சென்றுவிட்டார்கள் என்று கூறி, அவர்களுடன் யுத்தம்செய்வார்கள். இவ்வாறாகத் தேவன் அவர்களைக் கடற்கரை வழியாகக் கொண்டுவந்ததினால், தம்மை ஒரு மனஉருக்கமுள்ள தேவனாகவும் இருப்பதை வெளிக்காட்டினார். கர்த்தர் மோசேயை நோக்கி: பார்வோன் அவர்களைப் பின்தொடருவான் என்று கூறி, அவர்களைக் கடலருகில் எங்கே பாளயமிறங்கச் செய்யவேண்டும் என்பதையும், அவனுடைய சேனைக்கு முன்பாகவும் அவர் மேன்மைப்படுவார் என்றும் கூறினார். (8)

எபிரெயர்கள் எகிப்தை விட்டுச்சென்ற சில நாட்களுக்குப் பின் எகிப்தியர்கள் பார்வோனிடம் அவர்கள் ஓடிப்போனார்கள். இனி ஒருபோதும் நமக்குச் சேவைசெய்யும்படியாகத் திரும்பிவரமாட்டார்கள் என்று கூறினார்கள். அவர்களை எகிப்தைவிட்டுச் செல்லும்படி விட்டு விட்டதற்காக அவர்கள் துக்கமடைந்தார்கள். அவர்களுடைய சேவைகளை இழந்தது அவர்களுக்குப் பெரிய இழப்பாக இருந்தது. அவர்களைப் போக அனுமதித்ததற்காக அவர்கள் வருத்தப்பட்டனர். தேவனுடைய நியாயத்தீர்ப்புகளையெல்லாம் அனுபவித்தது மட்டுமின்றி, தொடர்ச்சியான கலகத்தினால் அவர்கள் கடினமானவர்களானார்கள்; அதின் காரணமாக எபிரெயர்களைப் பின்தொடர்ந்துசென்று பலாத்காரத்தில் எகிப்திற்குத் திருப்பிக்கொண்டு வரவேண்டுமென்று, முடிவுசெய்தார்கள். அந்த அரசன், ஒரு பெரிய சேனையுடனும் அறுநூறு இரதங்களுடனும் அவர்களைப் பின்தொடர்ந்து, அவர்கள் கடலினெதிரே பாளயமிறங்கியிருந்தபோது, அவர்களை நெருங்கினார்கள். (9)

பார்வோன் சமீபித்து வருகின்றபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக்கண்டு, மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர்

கர்த்தரைநோக்கிக் கூப்பிட்டார்கள். அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால் எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன? நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலைசெய்ய எங்களைச் சும்மாவிட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாட்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாய் இருக்குமே என்றார்கள். அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்! நீங்கள் நின்றுகொண்டு, இன்றைக்கு கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பை பாருங்கள்! இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்! கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்! நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான். (10)

இஸ்ரவேலர்கள் எவ்வளவு விரைவில் கர்த்தர்மீது அவநம்பிக்கை கொண்டனர்? இஸ்ரவேல் ஜனங்களைப் போகவிடும்படி எகிப்தின்மீது உண்டான நியாயத்தீர்ப்புகளுக்கெல்லாம் அவர்கள் சாட்சிகளாக இருந்தனர். ஆனால் தேவன்மீதுள்ள அவர்களுடைய விசுவாசம் சோதிக்கப்பட்டபோது, ஆச்சரியமான விதத்தில் அவர்களுக்கு விடுதலையை வழங்கியிருந்த அவருடைய வல்லமையின் சான்றுகளைக் கண்டிருந்தும்கூட, அவர்கள் முறுமுறுத்தனர். தங்களுடைய தேவையின் போது தேவன்மீது நம்பிக்கை வைப்பதற்குப்பதிலாக, விசுவாசமிக்க மோசேயினிடம் அவர்கள் எகிப்தில் வைத்துக்கூறியவைகளை நினைவுபடுத்தி, அவனுக்கு எதிராக முறுமுறுத்தார்கள். அவர்களுடைய துன்பங்களுக்கெல்லாம் அவன்தான் காரணம் என்று அவன்மீது குற்றம்சாட்டினார்கள். தங்களுடைய நம்பிக்கையின்மையைக் கட்டுப்படுத்தி, கர்த்தர் அவர்களுக்காக என்ன செய்வார் என்பதைப் பார்க்கும்படி, கர்த்தரின்மீது நம்பிக்கை வைக்கும்படி அவன் அவர்களைத் தைரியப்படுத்தினான். கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட அவருடைய ஜனங்களை விடுதலைசெய்யும்படி மோசே ஆண்டவரிடத்தில் ஊக்கமாக அழுது ஜெபித்தான். (11)

### செங்கடலில் விடுதலை!

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப்போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு. நீ உன் கோலை ஓங்கி, உன் கையை சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள் என்றார். தேவன் தம்முடைய ஜனங்களுக்காகக் கிரியை செய்வார் என்பதை

மோசே அறிந்துகொள்ளவேண்டும் என்று தேவன் விரும்பினார். அதாவது அவர்களுடைய தேவை தேவனுடைய வாய்ப்பாக இருக்கும். அவர்களால் எவ்வளவு தூரத்துக்குப்போக முடியுமோ அவ்வளவு தூரத்துக்கு அவர்கள் போகும்போது, இன்னும் முன்னோக்கிச்செல்லுங்கள் என்று அவன் அவர்களுக்குக் கட்டளையிடவேண்டும். தேவன் அவனுக்குக் கொடுத்திருந்த கோலினால் அவன் தண்ணீர்களைப் பிளக்கவேண்டும். (12)

எகிப்தியர் உங்களைப் பின்தொடர்ந்துவரும்படி நான் அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, பார்வோனும் அவன் இரதங்கள் குதிரைவீரர் முதலாகிய அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவேன்; இப்படி நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைவீரர்களாலும் மகிமைப்படும்போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள் என்றார். அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார்; அவர்களுக்குமுன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்களுக்குப் பின்னே நின்றது. அது எகிப்தியரின் சேனையையும் இஸ்ரவேலரின் சேனையையும் இராமுழுதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது; எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது; இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று. மோசே தன் கையை சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ்க்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படிச்செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று. இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்; அவர்கள் வலது புறத்திலும் அவர்கள் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. (13)

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் தங்களுடைய வல்லமைக்குள் இருக்கின்றனர் என்று எகிப்தியர்களின் சேனை அந்த இரவில் வெற்றி முழக்கம் செய்துகொண்டிருந்தது! அவர்கள் தப்பிச்செல்லுவதற்கான வழிகள் இல்லையென்று அவர்கள் நினைத்தார்கள். ஏனெனில் அவர்களுக்கு முன்பாகச் செங்கடல் பரந்துகிடந்தபோது, அவர்களுடைய பெரிய சேனைகள் அவர்களுக்குப் பின்னால் மிக அருகில் இருந்தது. அதிகாலையில் அவர்கள் கடலருகில்வந்தபோது, இதோ, ஒரு உலர்ந்த பாதை இருந்தது. தண்ணீர்கள் பிரிந்து இருபக்கங்களிலும் சுவரைப்போல் நின்றிருந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் உலர்ந்த தரையில் நடந்து, கடலினூடாகப் பாதிதூரம் கடந்து சென்றிருந்தனர். தாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காக அவர்கள் சற்றுநேரம் தயங்கி நின்றனர். எபிரெயர்கள் ஏறத்தாழத் தங்களுடைய வல்லமைக்கு உள்ளாக்கப்பட உள்ளனர் என்பதைப்

பற்றி அவர்கள் மிக நிச்சயமானவர்களாக இருந்த நேரத்தில், எதிர்பாராத ஒரு பாதை அவர்களுக்குக் கடலில் திறக்கப்பட்டதைக் கண்டபோது, எகிப்தியர்கள் மனமுடைந்தவர்களும் கோபாவேசமிக்கவர்களுமானார்கள். எபிரெயரைப் பின்தொடர எகிப்தியர்கள் முடிவுசெய்தனர். (14)

அப்பொழுது எகிப்தியர் அவர்களைத் தொடர்ந்து, பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் குதிரைவீரரோடும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்கள். கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்கள் சேனையைக் கலங்கடித்து, அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும்பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர்: இஸ்ரவேலரை விட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று, எகிப்தியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள். (15)

தேவன் தம்முடைய ஜனங்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த பாதையில் பிரவேசிக்க எகிப்தியர்கள் துணிந்து முயன்றார்கள். தேவதூதர்களின் சேனை எகிப்திய சேனைக்கூடாகச்சென்று, அவர்களுடைய இரதங்களின் சக்கரங்களைக் கழற்றிவிட்டார்கள்; அவர்கள் துன்பப்பட்டனர். அவர்களுடைய முன்னேற்றம் மிகவும் மந்தமாயிற்று. அவர்கள் கஷ்டப்படத்தொடங்கினார்கள். இஸ்ரவேலைப்போகும்படி விட்டுவிடச்செய்வதற்காக எபிரெயர்களின் தேவன், அவர்கள்மீது நடப்பித்த நியாயத்தீர்ப்புகளைப்பற்றி, அவர்கள் நினைத்தார்கள். அவர்களனைவரையும் இஸ்ரவேலர்களின் கரங்களுக்குள் (கர்த்தர்) விட்டுவிடுவார் என்று அவர்கள் எண்ணினார்கள். அவர்கள் மிகவும் பயங்கரமான விதத்தில் கலங்கி, அவர்களைவிட்டு ஓடிப்போகத் திரும்பினார்கள். கர்த்தர் மோசேயை நோக்கி: ஜலம் எகிப்தியர்கள்மேலும் அவர்களுடைய இரதங்கள்மேலும் அவர்களுடைய குதிரைவீரர்மேலும் திரும்பும்படிக்கு, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டு என்றார். (16)

அப்படியே மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; விடியற்காலத்தில் சமுத்திரம் பலமாய்த் திரும்பிவந்தது; எகிப்தியர் அதற்கு எதிராக ஓடும்போது, கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப்போட்டார். கடல்நீர் திரும்பிவந்து, இரதங்களையும் குதிரை வீரரையும், அவர்கள் பின்னாகச் சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டது; அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை. இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்துபோனார்கள்; அவர்கள் வலது புறத்திலும் அவர்கள்

இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து இரட்சித்தார்; கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் கண்டார்கள். கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர்கள் கண்டார்கள். அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம்வைத்தார்கள். (17)

எகிப்தியர்களை அழித்ததில் தேவனுடைய ஆச்சரியமான செயலை எபிரெயர்கள் கண்டபோது, மிக உரத்த குரலில், ஒரு பாடலைப் பாடுவதற்கு அவர்கள் ஒருமித்தனர். (18) ★

# 17

# இஸ்ரவேலரின் பயணங்கள்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 126–136)**
**திருவசன ஆதாரம் : யாத்திராகமம் 15:23–18:27.**

இஸ்ரவேல் ஜனங்கள் மூன்று நாட்கள் பயணம் செய்திருந்தனர். மூன்று நாட்களாக அவர்களுக்குக் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்கள் தாகத்தால் துடித்திருந்தனர். "அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: என்னத்தைக் குடிப்போம் என்றார்கள். மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று. அவர் அங்கே அவர்களுக்கு ஒரு நியமத்தையும் ஒரு நியாயத்தையும் கட்டளையிட்டு, அங்கே அவர்களைச் சோதித்து: நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்." (1)

இஸ்ரவேல் ஜனங்கள் அவநம்பிக்கை நிறைந்த கெட்ட இருதயத்தை உடையவர்களாகக் காணப்பட்டனர். வனாந்திர வாழ்க்கையின் கடுமையைத் தாங்கிக்கொள்ள விருப்பமற்றவர்களாக இருந்தனர். சங்கடங்களை சந்தித்தபோது, அவைகளை தங்களால் மேற்கொள்ளமுடியாது என்று கருதியிருந்தனர். தேவன்மீதுள்ள அவர்களது நம்பிக்கை அற்றுப்போய், மரணம் ஒன்றைத்தவிர வேறெதையும் அவர்களால் பார்க்கமுடியவில்லை. அந்த வனாந்திரத்திலே சபையார் எல்லோரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: "நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே" என்று சொன்னார்கள். (2)

உண்மையில் அவர்கள் பசியின் கொடுமையை அனுபவித்திருக்கவில்லை. நிகழ்காலத்திற்கான உணவு அவர்களிடம் இருந்தது. ஆனால் அவர்கள் எதிர்காலத்தைப்பற்றிப் பயந்திருந்தார்கள். தங்களிடமிருந்த எளிமையான உணவைக்கொண்டு, இஸ்ரவேலரின் சேனை அவர்களுடைய நீண்ட வனாந்தர பயணத்தில் எப்படிப் பிழைக்கும் என்பதை அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. தங்களுடைய அவிசுவாசத்தால் தங்களுடைய பிள்ளைகள் பஞ்சத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதாகக் கண்டார்கள். அவர்களுக்கு உணவுக் குறைவு உண்டாகவேண்டும் என்றும், அதினால் அவர்கள் துன்பங்களைச் சந்திக்கவேண்டும் என்றும், அதினிமித்தம் தங்களுக்கு இதுவரைக்கும் உதவி செய்திருந்தவரை நம்புவதற்கேதுவாக அவர்களுடைய இருதயங்கள் அவரிடம் திரும்பவேண்டும் என்றும் கர்த்தர் விரும்பியிருந்தார். அவர்களுக்கு ஒரு நிகழ்கால உதவியாக இருக்க அவர் எப்பொழுதும் தயாராக இருந்தார். அவர்களுடைய தேவையில் அவரை அழைத்தார்களேயானால், அவர் தம்முடைய அன்பின் தொடர்ச்சியான அடையாளங்களால் தொடர்ச்சியான பாதுகாப்பினை வெளிப்படுத்துவார். (3)

ஆனால், அவரது தொடர்ச்சியான வல்லமையின் சான்றுகளை தங்களுடைய கண்களுக்கு முன்னால் பார்க்கமுடிகிற அளவுக்கும் அதிகமாக கர்த்தரை நம்ப விருப்பமற்றவர்கள்போல காணப்பட்டனர். அவர்களுக்கு தேவன் மீது உண்மையான விசுவாசமும் உறுதியான நம்பிக்கையும் இருந்திருந்தால், அவர்களது அடிமைத்தன வேலைகளிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக கர்த்தர் ஆச்சரியமானவிதத்தில் செயல்பட்டதற்குப்பிறகு, வசதிக்குறைவுகளும் தடைகளும் உண்மையான பாடுகளுங்கூட மகிழ்ச்சியுடன் சகிக்கப்பட்டிருக்கும். அதற்கும்மேலாக, அவர்கள் அவருடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவார்களானால் எந்தவிதமான நோயும் அவர்களை அணுகாது; ஏனெனில் நானே உனது பரிகாரியாகிய கர்த்தர் என்று ஆண்டவர் அவர்களுக்கு வாக்குக்கொடுத்திருந்தார். (4)

தேவனிடத்திலிருந்துண்டான நிச்சயமான இந்த வாக்குத்தத்தத்துக்குப் பின்னும் அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் பசியினால் சாகநேரிடும் என்று எதிர்பார்ப்பது, குற்றமான நம்பிக்கையின்மையாகும். எகிப்தில் அவர்கள் அதிகமான வேலைப்பளுவினால் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகள் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய மனவேதனைமிக்க ஜெபங்களுக்கு மறுமொழியாக தேவன் இரக்கமாக அவர்களை விடுதலை செய்திருந்தார். அவர்களுடைய தேவனாக இருந்து, அவர்களைத் தம்மிடம் ஒரு ஜனமாகச் சேர்த்துக்கொண்டு, மிகப்பெரிய ஒரு நல்ல தேசத்திற்கு நடத்திச்செல்லுவதாக வாக்குக் கொடுத்திருந்தார். (5)

ஆனால் அந்த நாட்டுக்குச் செல்லுகின்ற பாதையில் அவர்களுக்கு ஏதாவது இடையூறு உண்டானால், உடனே அவர்கள் மயங்கி விழக்கூடியவர்களாக இருந்தனர். எகிப்தியர்களுக்குச் சேவை செய்திருந்தபோது, அவர்கள் அதிகமான பாடுகளைத் தாங்கியிருந்தனர். ஆனால் இப்பொழுது தேவனுக்குச் சேவைசெய்வதில் பாடுகளைச் சகிக்கமுடியாதவர்களாக இருந்தனர். அவர்கள் சோதிக்கப்பட்டபோது, துயரமிக்க சந்தேகங்களுக்குத் தங்களை விட்டுவிடவும், அதைரியத்தில் மூழ்கவும் தயாராக இருந்தனர். அவர்களுடைய சோதனையின்போது, தேவனுக்கென்று தன்னைப் பிரதிஷ்டை செய்திருந்த தேவனுடைய ஊழியக்காரனான மோசேயினிடத்தில் நாங்கள் எகிப்தில் எங்களுடைய இறைச்சிப் பானைகளுக்கருகில் உட்கார்ந்து வயிறு நிறைய அப்பம் சாப்பிட்டிருந்தோமே என்று முறுமுறுத்தனர். (6)

## நமது நாளுக்கான ஒரு பாடம்!

இஸ்ரவேல் ஜனங்களின் நம்பிக்கையின்மையும் முறுமுறுப்பும் இப்பொழுது பூமியின்மீதுள்ள தேவனுடைய ஜனங்களைச் சித்தரித்துக்காட்டுகிறது. கர்த்தர் அவர்களுக்கு இவ்வளவு அதிகமாகச் செய்தபின்னும், அவருடைய அன்பையும் கரிசனையையுங்குறித்த சான்றுகளை திரும்பத்திரும்பக் கொடுத்திருந்தபின்னும், அவர்கள் நம்பிக்கையற்றிருந்ததையும் முறுமுறுத்ததையும் அநேகர் திரும்பிப்பார்த்து ஆச்சரியப்படுகின்றனர். நாங்கள் அப்படிப்பட்ட நன்றிகெட்டவர்களாக இருக்கமாட்டோம் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் இப்படி நினைப்பவர்களில் சிலர், சின்ன விளைவுகளின்போதுங்கூட முறுமுறுத்துக் குறைகூறுகின்றனர். அவர்கள் தங்களைப்பற்றி அறியாதவர்களாக உள்ளனர். சிறிய காரியங்களில் தேவன் அவர்களுடைய விசுவாசத்தைச் சோதித்து, அடிக்கடி அவர்களை நிரூபிக்கிறார். பண்டைய இஸ்ரவேலர்கள் எவ்விதமாக சோதனையைச் சகிக்க முடியாதவர்களாக இருந்தனரோ அவர்களைவிட இவர்கள் மேலானவர்களாக இல்லை. (7)

அநேகருடைய தேவைகள் இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன. அப்படி இருந்தபோதிலும் எதிர்காலத்திற்காக அவர்கள் கர்த்தரில் நம்பிக்கை வைக்கமாட்டார்கள். எதிர்பார்த்த தேவை நடைபெறாமல்போகும்போது, அவர்கள் மனமடிவாகித் துயரடைந்து, நம்பிக்கையின்மையில் மூழ்குகின்றனர். சிலர் தேவைகளை உடையவர்களாவார்கள். தங்களுக்கு குறைவுபடும் என்றும், தங்களுடைய பிள்ளைகள் துன்பப்படநேரிடும் என்றும் சிலர் தொடர்ச்சியான கஷ்டங்களில் இருக்கிறார்கள். கஷ்டங்கள்

நேரிடும்போது, இடுக்கமான இடத்திற்குக் கொண்டுவரப்படும்போது, அவர்களுடைய விசுவாசமும் தேவன்பேரில் அவர்களுக்குள்ள நம்பிக்கையும் சோதிக்கப்படும்போது, சோதனையிலிருந்து அவர்கள் பின்வாங்கி அவர்களைத் தூய்மைப்படுத்துவதற்கென்று தேவன் தெரிந்துகெண்டுள்ள முறைகளைக்குறித்து முறுமுறுக்கின்றனர். எல்லாவற்றையும் சகித்துக்கொள்ள அவர்களுடைய அன்பு தூய்மையானதெனவும் பூரணமானதெனவும் மெய்ப்பிக்கப்படுவதில்லை. (8)

பரலோகத்தின் தேவனுடைய பிள்ளைகளின் விசுவாசம் பலமுள்ளதாகவும்—தீவிரமானதாகவும்—தாங்கிக்கொள்ளக்கூடியதாகவும் நம்பப்படுகிறவைகளின் உறுதியாகவும் இருக்கவேண்டும். அப்படிப் பட்டவர்களின் மொழி: “என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி” ஏனெனில் அவர் என்னிடம் தாராளமாக இருந்திருக்கிறார் என்பதாகவே இருக்கும். (9)

சுயமறுப்பு சிலரால் உண்மையான பாடாக கருதப்படுகிறது. தவறான உணவுப்பழக்கங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆரோக்கியமற்ற பசியார்வத்தின்மீது இருக்கும் கட்டுப்பாடு, எளிமையான உணவின் பலன் பட்டினிகிடப்பதற்குச் சமம் என்பதைப்போல, தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் அநேகரைப் பின்வாங்கிச்செல்ல நடத்துகிறது. இஸ்ரவேல் ஜனங்களைப் போலவே, இறைச்சிப்பாத்திரங்களை இழப்பதைவிட, அடிமைத்தனத்தையும் நோயுற்ற உடல்களையும் மரணத்தையுங்கூட அவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள். இக்கட்டுக்காலத்தில் மீதியானவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளதெல்லாம் அப்பமும் தண்ணீரும் மட்டும் தான். (10)

### மன்னா!

“பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின்மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின்மேல் கிடந்தது. இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம். கர்த்தர் கட்டளையிடுகிறது என்னவென்றால், அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாக அதில் எடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்களிலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்தின்படி, அவனவன் தன் தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காகத் தலைக்கு ஒரு ஓமர் அளவு எடுத்துக்கொள்ளக்கடவன் என்றான். (11)

“இஸ்ரவேல் புத்திரர் அப்படியே செய்து, சிலர் மிகுதியாயும் சிலர் கொஞ்சமாயும் சேர்த்தார்கள். பின்பு, அதை ஓமரால் அளந்தார்கள்: மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மீதியானதும் இல்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதும் இல்லை; அவரவர் தாங்கள் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்தார்கள். மோசே அவர்களை நோக்கி: ஒருவனும் விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் வைக்கக்கூடாது என்று அவர்களுக்குச் சொல்லியும், மோசேயின் சொல் கேளாமல், சிலர் அதில் விடியற்காலம்மட்டும் கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள்; அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது. அவர்கள்மேல் மோசே கோபங்கொண்டான். அதை விடியற்காலந்தோறும் அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்தார்கள்; வெயில் ஏறஏற அது உருகிப்போம். ஆறாம் நாளில் தலைக்கு இரண்டு ஓமர் வீதமாக இரண்டத்தனையாய் ஆகாரம் சேர்த்தார்கள்; அப்பொழுது சபையின் தலைவர் எல்லாரும் வந்து, அதை மோசேக்கு அறிவித்தார்கள். அவன் அவர்களை நோக்கி: கர்த்தர் சொன்னது இதுதான்; நாளைக்குக் கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு; நீங்கள் சுடவேண்டியதைச்சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்கள் என்றான். மோசே கட்டளையிட்டபடியே, அதை மறுநாள்வரைக்கும் வைத்துவைத்தார்கள்; அப்பொழுது அது நாறவும் இல்லை, அதிலே பூச்சிபிடிக்கவும் இல்லை. அப்பொழுது மோசே: அதை இன்றைக்குப் புசியுங்கள்; இன்று கர்த்தருக்குரிய ஓய்வுநாள்; இன்று நீங்கள் அதை வெளியிலே காணமாட்டீர்கள். ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம்நாள் ஓய்வுநாளாயிருக்கிறது; அதிலே அது உண்டாயிராது என்றான்.” (12)

மோசே சொல்லப்பட்ட கட்டளையைக் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த நேரத்தில் ஓய்வுநாளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தாரோ அதைவிட இன்று அதின் முக்கியத்துவத்தை அவர் எள்ளளவும் குறைக்கவில்லை. நீங்கள் சுடவேண்டியதைச் சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைக்காக வைத்துவையுங்கள் என்றார். (13)

வானத்திலிருந்து அப்பம் அனுப்பினதில், தேவன் அவரது ஜனங்களின் மீதுள்ள பெரும் கரிசனையையும் அன்பையும் வெளிப்படுத்தியிருந்தார். மனிதன் தூதர்களுடைய அப்பத்தைப் புசித்தான். அதாவது மனிதர் களுக்காக தூதர்களால் ஏற்படுத்தப்பட்ட அப்பத்தைச் சாப்பிட்டான். ஆறாம் நாளில் இருமடங்கு! ஏழாம் நாளில் ஒன்றுமில்லை! மற்ற நாட்களில் சேமித்துவைத்தால் உபயோகத்திற்குத் தகுதியற்றதாகப் போய்விடும் அது,

ஓய்வுநாள் முழுவதிலும் புதிதாகவே இருந்தது! என்பதான—மூன்றுவிதமான அற்புதங்கள் ஓய்வுநாளின் பரிசுத்தத் தன்மையை அவர்களுக்கு உணர்த்தும்படி திட்டம்செய்யப்பட்டிருந்தது. (15)

ஏராளமான அளவிற்கு உணவு வழங்கப்பட்டபின்பு, அவர்கள் தங்களுடைய நம்பிக்கையின்மையையும் முறுமுறுப்பையுங்குறித்து வெட்கப்பட்டு, எதிர்காலத்திற்காக கர்த்தர்மீது நம்பிக்கைவைப்பதாக வாக்குக் கொடுத்தார்கள். ஆனால் விரைவில் அதை மறந்து, அவர்களுடைய விசுவாசத்தைப்பற்றி முதலாவது சோதனையிலேயே தோல்வி அடைந்தார்கள். (16)

## கன்மலையிலிருந்து தண்ணீர்!

அவர்கள் சீன் வனாந்தரத்திலிருந்து பயணம்செய்து, ரெவிதீமில் பாளயம் இறங்கினார்கள். அங்கே ஜனங்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாதிருந்தது. “அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடி: நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தரவேண்டும் என்றார்கள். அதற்கு மோசே: என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரிட்சை பார்க்கிறீர்கள் என்றான். ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர்த் தவனமாயிருந்தபடியால், அவர்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டுவந்தீர் என்றார்கள். மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: இந்த ஜனங்களுக்கு நான் என்ன செய்வேன், இவர்கள் என்மேல் கல்லெறியப் பார்க்கிறார்களே என்றான். (17)

“அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக்கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான். இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரிட்சை பார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்.” (18)

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய துன்பத்தில் அவரை நோக்குவார்களா அல்லது இதற்குமுன் செய்ததுபோல முறுமுறுப்பார்களா

என்பதைப் பார்ப்பதற்காக, மெய்ப்பிப்பதற்காக தேவன் அவர்களைத் தண்ணீரில்லாத ஒரு இடத்தில் பாளயமிறங்கச்செய்தார். தேவன் அவர்களுக்கு அருளின ஆச்சரியமான விடுதலைக்காக என்ன செய்திருந்தார் என்பதின் கண்ணோட்டத்தில் அவர்கள் அவர்களுடைய துன்பத்தில் அவரை நம்பியிருக்கவேண்டும். தமது ஜனங்களாகத் தம்மிடம் சேர்த்துக்கொள்ளுவேன் என்று வாக்குத்தத்தம் செய்திருந்த அவர்களை, தாகத்தால் மடியும்படி விட்டுவிடமாட்டார் என்று அவர்கள் அறிந்திருக்கவேண்டும். தங்களுடைய தேவைக்கென்று ஏற்பாடு செய்ய கர்த்தரிடம் தாழ்மையாக மன்றாடுவதற்குப்பதிலாக, மோசேக்கு எதிராக முறுமுறுத்து, தங்களுக்குத் தண்ணீர்கொடுக்கும்படி முரட்டாட்டம் செய்தார்கள். (19)

அவர்கள் பெற்றிருந்த நன்மைகளனைத்தும் அவரிடமிருந்துதான் வந்திருந்தது என்பதையும், அவருடைய சித்தத்தின்படியே அவர்களுக்குக் கொடுக்கவும்முடியும் அல்லது நீக்கவும்முடியும் என்பதை அவர்களுக்குப் புரியச்செய்வதற்காக தேவன் தொடர்ச்சியாக அவரது வல்லமையை ஆச்சரியமானவிதத்தில் வெளிக்காட்டியிருந்தார். சில சமயங்களில் அவர்கள் இதைப்பற்றிய முழுமையான உணர்வை உடையவர்களாக இருந்து, கர்த்தருக்குமுன்பாகத் தங்களைப் பெரிய அளவிற்குத் தாழ்த்தினார்கள். ஆனால் தாகமோ அல்லது பசியோ உண்டானபோது, மோசேயை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக அவர்கள் எகிப்தைவிட்டு வெளியேறியதுபோல், அதற்கான எல்லாக் குற்றங்களையும் மோசேயின்மீது சுமத்தினார்கள். அவர்களுடைய கொடுமையான முறுமுறுப்பினால் மோசே வருத்தமடைந்தான். ஜனங்கள் அவன்மீது கல்லெறியத் தயாராக இருந்ததினால், தான் என்ன செய்வேண்டும் என்பதைக்குறித்து கர்த்தரிடம் விசாரித்தான். தேவனுடைய கோலினால் கன்மலையை அடிக்கும்படி கர்த்தர் கட்டளை கொடுத்தார். அவருடைய மகிமையின் மேகம் அந்தப் பாறைக்கு நேராக நின்றிருந்தது. “வனாந்தரத்திலே கன்மலைகளைப்பிளந்து, மகா ஆழங்களிலிருந்து தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்தார். கன்மலையிலிருந்து நீரோட்டங்களைப் புறப்படப்பண்ணி, தண்ணீரை நதிபோல ஓடிவரும்படி செய்தார்”–சங்கீதம் 78:15–16. (20)

மோசே கன்மலையை அடித்தான். ஆனால் பாறைக்கிடையிலிருந்து தண்ணீர் ஓடிவருவதற்குக் காரணமானவராக கிறிஸ்துவே அங்கு நின்றிருந்தார். ஜனங்கள் அவர்களுடைய தாகத்தில் கர்த்தரை சோதித்து, தேவன் எங்களை இந்த இடத்திற்குக் கொண்டுவந்திருந்தாரானால் அவர் ஏன் எங்களுக்குத் தண்ணீரும் அப்பமும் தரவில்லை என்று கூறினார்கள். அது குற்றமான நம்பிக்கையின்மையாக இருந்ததைக்காட்டி, தேவன்

அவர்களுடைய முறுமுறுப்புகளுக்காக அவர்களைத் தண்டித்துவிடுவார் என்று மோசே பயப்பட்டான். கர்த்தர் அவருடைய ஜனங்களின் விசுவாசத்தைச் சோதித்தார். ஆனால் அவர்கள் அந்தச் சோதனையை சகிக்கவில்லை. அவர்கள் உணவுக்காகவும் தண்ணீருக்காகவும் முறுமுறுத்து, மோசேயின்மீது குற்றஞ்சாட்டினார்கள். அவர்களுடைய பெலம் எங்கிருந்து வருகிறது என்பதை அவருடைய ஜனங்களுக்கு வெளிக்காட்டும்படியாக, அவர்களுடைய எதிரிகள் அவர்களுடன் யுத்தஞ்செய்வதை சகித்துக்கொண்டார். (21)

## அமலேக்கிடமிருந்து விடுதலை!

அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள். அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான். யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம் பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையை தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொண்டான். மோசேயின் கைகள் அசந்துபோயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின்மேல் உட்கார்ந்தான்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இவ்விதமாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்வரைக்கும் ஒரே நிலையாயிருந்தது.” (22)

மோசே தேவனுடைய கோலைத் தன் கரத்தில் பிடித்து, வானத்திற்கு நேராக தனது கையை உயர்த்தி, தேவனிடமிருந்து உதவிக்காக மன்றாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது இஸ்ரவேலர்கள் அமலேக்கியர்களை மேற்கொண்டு, தங்களுடைய எதிரியை பின்னிட்டுப்போகும்படி விரட்டினார்கள். மோசே தன்னுடைய கையைக் கீழே தாழ்த்தினபோது, இஸ்ரவேலர்கள் அடைந்திருந்த வெற்றிகளையெல்லாம் இழந்து, எதிரிகளால் மேற்கொள்ளப்படுவதுபோல் காணப்பட்டது. மோசே மறுபடியும் தனது கையை வானத்ததுக்கு நேராக உயர்த்தினான்; இஸ்ரவேலர்கள் மேற்கொண்டார்கள்; எதிரிகள் விரட்டப்பட்டார்கள். (23)

மோசே தனது கரத்தை தேவனுக்கு நேராக உயர்த்தின இந்தச் செயலின்மூலமாக, இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை அவர்களுடைய நம்பிக்கையாகக்கொண்டு, அவரது பலத்தைப் பற்றிக்கொண்டு, அவரது

சிங்காசனத்தை உயர்த்தினபோது, அவர் அவர்களுக்காக யுத்தஞ்செய்து, அவருடைய எதிரிகளைக் கீழ்ப்படுத்துவார் என்கிற கருத்தானது இஸ்ரவேலருக்குப் போதிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அவரது பலத்தைப் பற்றிக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு, தங்களுடைய சுயபலத்தின்மீது நம்பிக்கைவைக்கும்போது, தேவனைப்பற்றிய அறிவில்லாதவர்களாக, அவர்களுடைய எதிரிகளைவிடப் பலவீனர்களாகி, அதினால் எதிரிகள் அவர்களை மேற்கொண்டிருந்தனர். இறுதியில் யோசுவா அவர்களை பட்டயக்கருக்கினாலே முறியடித்தான். (24)

“பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி யோசுவாவின் செவிகேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன்” என்றார். மோசே ஒரு பலிபீடத்தைக்கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டு, அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தபடியால் தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாக கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்றான்.” இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்காதிருந்தார்களானால், அவர்களுடைய சத்துருக்கள் அவர்களோடே யுத்தஞ்செய்ய தேவன் அனுமதித்திருக்கமாட்டார். (25)

## மோசேயின் மாமன்—எத்திரோ!

மோசே எகிப்திற்குப் புறப்பட்டுச்செல்லுவதற்குமுன், தனது மனைவியையும் பிள்ளைகளையும் தனது மாமனாரிடத்திற்கு திருப்பி அனுப்பிவைத்திருந்தான். எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் ஆச்சரியமான விதத்தில் விடுதலைசெய்யப்பட்டதை எத்திரோ அறிந்து, வனாந்தரத்தில் மோசேயைச் சந்தித்தான். மோசேயின் மனைவியையும் பிள்ளைகளையும் அவனிடத்திற்குக் கொண்டுவந்தான். “அப்பொழுது மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டுபோய், அவனை வணங்கி, முத்தஞ்செய்தான்; ஒருவரை ஒருவர் சுகசெய்தி விசாரித்துக்கொண்டு கூடாரத்துக்குள் பிரவேசித்தார்கள். பின்பு மோசே கர்த்தர் இஸ்ரவேலினிமித்தம் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் செய்த எல்லாவற்றையும், வழியில் தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும், கர்த்தர் தங்களை விடுவித்து இரட்சித்ததையும் தன் மாமனுக்கு விவரித்துச் சொன்னான். (26)

‘‘கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து, அவர்களுக்குச்செய்த சகல நன்மைகளையுங்குறித்து எத்திரோ சந்தோஷப்பட்டு: உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும்

தப்புவித்து, எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் எல்லாத் தேவர்களைப்பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்; அவர்கள் இடும்பு செய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார் என்று சொல்லி, மோசேயின் மாமனாகிய எத்திரோ சர்வாங்கதகனபலியையும் மற்றப் பலிகளையும் தேவனுக்குக் கொண்டுவந்து செலுத்தினான். பின்பு ஆரோனும் இஸ்ரவேல் மூப்பர் அனைவரும் வந்து, மோசேயின் மாமனுடனே தேவசமுகத்தில் போஜனம் பண்ணினார்கள்.” (27)

ஜனங்கள் தங்களுடைய கடினமான காரியங்களை மேசேயினிடத்தில் கொண்டுவந்ததையும் அவன் அவர்களுக்கு தேவனுடைய சட்டங்களுக்கடுத்த அறிவுரைகளைக் கொடுத்ததையும் கவனித்த எத்திரோ, மோசேயின் மேலிருந்த பாரம் மிகப் பெரியது என்பதை புரிந்துகொண்டான். மோசேயை நோக்கி: “இப்பொழுது என் சொல்லைக்கேளும், உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறேன்; தேவனும் உம்மோடுகூட இருப்பார், நீர் தேவசந்நிதியிலே ஜனங்களுக்காக இரும்; விசேஷித்தவைகளைத் தேவனிடத்தில் கொண்டுபோய், கட்டளைகளையும் பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி; அவர்கள் நடக்கவேண்டிய வழியையும், அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும். ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும். அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம்விசாரித்து, பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்; இப்படி அவர்கள் உம்மோடேகூட இந்தப் பாரத்தைச் சுமந்தால், உமக்கு இலகுவாயிருக்கும்” என்றான். (28)

“மோசே தன் மாமன் சொல்கேட்டு, அவன் சொன்னபடியெல்லாம் செய்தான். மோசே இஸ்ரவேலர் எல்லாரிலும் திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஜனங்கள்மேல் தலைவராக்கினான். அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம் விசாரித்தார்கள்; வருத்தமான காரியங்களைமாத்திரம் மோசேயினிடத்தில் கொண்டுவந்தார்கள்; சிறிய காரியங்களையெல்லாம் தாங்களே தீர்த்தார்கள். பின்பு மோசே தன் மாமனை அனுப்பிவிட்டான்; அவன் திரும்பத் தன் தேசத்துக்குப் போய்விட்டான்.” (29)

மோசே தன்னுடைய மாமனால் போதிக்கப்படக்கூடாத அளவிற்கு மேலானவனாக இல்லை. தேவன் மிகப்பெரிய அளவிற்கு அவனை உயர்த்தி, அவனது கரத்தினால் ஆச்சரியமானவைகளை நடப்பித்தார். அப்படியிருந்தும், மற்றவர்களுக்குப் போதிக்கும்படி தேவன் தன்னைத் தெரிந்துகொண்டிருக்கிறர் என்றும், அவனது கரத்தினால் ஆச்சரியமான காரிங்களை நடப்பித்திருக்கிறார் என்றும், பிறரால் போதிக்கப்படவேண்டிய அவசியம் தனக்கு இல்லையென்றும் மோசே காரணம் காட்டவில்லை. அவன் தன் மாமனின் கருத்துக்களை மகிழ்ச்சியுடன் கவனித்து, அதனை ஒரு ஞானமிக்க ஏற்பாடு என்று எடுத்துக்கொண்டு அதின்படிச் செய்தான். (30) ★

# 18

# பரமன் தந்த பத்துக்கட்டளைகள்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 137–150)**
**திருவசன ஆதாரம் : யாத்திராகமம் 19,20.**

இஸ்ரவேல் ஜனங்கள் ரெவிதீமிலிருந்து பிரயாணம் புறப்பட்டு, "சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்து, அந்த வனாந்தரத்தில் பாளயமிறங்கினார்கள்; இஸ்ரவேலர் அங்கே மலைக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள். மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார். மோசே வந்து ஜனங்களின் மூப்பரை அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொன்னான். அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்." (1)

இங்கு மக்கள் தேவனுடன் ஒரு உடன்படிக்கை செய்தனர். அதினால் அவருடைய தெய்வீகஅதிகாரத்திற்கு விசேஷமானவர்களாக்கப்பட்டனர். "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன் என்றார்." எபிரெயர்கள் அவர்களுடைய பாதையில் துன்பங்களை சந்திக்க நேர்ந்தபோது, தங்களை அழிக்கும்படிக்குத்தான் மோசேயும் ஆரோனும் அவர்களை எகிப்பதிலிருந்த நடத்தி வந்ததாக அவர்களைக் குற்றப்படுத்தி முறுமுறுத்தனர். தேவன்

மோசேயை அவர்களுக்கு முன்னால் கனப்படுத்தி, அவர்களை அவனது ஆலோசனைகளின்மீது நம்பிக்கைவைக்கும்படிச்செய்து, அவர் தமது ஆவியை அவனுக்குள் வைத்திருக்கிறார் என்பதை அறியச்செய்தார். (2)

## தேவனைச் சந்திக்க ஆயத்தப்படுதல்!

தூதர்கள்மூலமாக அல்ல தாமே ஜனங்களின் அருகில் வந்து சொல்லப்போகிற தமது கற்பனைகளை கேட்பதற்காக, மோசே அவர்களை ஆயத்தப்படுத்தவேண்டுமென்று தேவன் விளக்கமான கட்டளைகளைக் கொடுத்தார். “கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஜனங்களிடத்தில் போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தப்படுத்து; அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்; மூன்றாம் நாளில் கர்த்தர் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகச் சீனாய்மலையின்மேல் இறங்குவார்.” என்றார். (3)

உலகப்பிரகாரமான வேலைகளையும் கவனத்தையும் விட்டுவிலகி, தேவனை தியானத்திருக்கும்படி ஜனங்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர் ஒரு ஒழுங்கின் தேவன். பூமியிலுள்ள அவருடைய ஜனங்கள் மிகவும் சுத்தமான பழக்க வழக்கங்களை உடையவர்களாக இருக்கவேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். சுத்தமில்லாத உடலுடனும் உடையுடனும் அவரைத் தொழுதுகொள்ள வருபவர்கள், அவரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவிதத்தில் வருவதில்லை. அவரைக்குறித்த பக்தி இல்லாதவர்களில் அவர் திருப்தி இல்லாதவராக இருக்கிறார். அசுத்தமானவர்களாக அவரைத் தொழுபவர்களை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். ஏனெனில் அவர்களைப் படைத்தவரை அவர்கள் கேவலப்படுத்துகின்றனர். வானத்தையும் பூமியையும் படைத்த சிருஷ்டிகர் சுத்தத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்திருந்ததினால், “அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்ப்பார்களாக” என்றார். (4)

“ஜனங்களைச் சுற்றிலும் நீ ஒரு எல்லை குறித்து, அவர்கள் மலையில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள் என்று அவர்களுக்குச் சொல்; மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே கொல்லப்படுவான். ஒரு கையும் அதைத் தொடலாகாது; தொட்டால், நிச்சயமாகக் கல்லெறியுண்டு, அல்லது ஊடுருவ எய்யுண்டு சாகவேண்டும்; மிருகமானாலும்சரி, மனிதனானாலும்சரி, உயிரோடே வைக்கப்படலாகாது; எக்காளம் நெடுந்தொனியாய்த் தொனிக்கையில், அவர்கள் மலையின் அடிவாரத்தில் வரக்கடவர்கள் என்றார்.” சிருஷ்டிகருக்கும் அவரது கற்பனைகளுக்கும் ஆழ்ந்த பயபக்தியை

கொடுக்கவேண்டும் என்கிறதை கலகக்காரரான ஜனங்களின் மனங்களில் ஆழமாகப் பதிக்கும்படிக்கே இந்த கட்டளை வடிவமைக்கப்பட்டது. (5)

**தேவனுடைய திகைப்பூட்டும் வெளிக்காட்டல்!**

“மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று; பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள்.” தெய்வீக மகத்துவத்துடன் உடன்சென்றிருந்த தூதர்களின் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக எக்காளம் போன்ற சத்தத்தைப் பூமி முழுவதும் அதிரும்படி உயர்த்தி, மக்களை அழைத்தது. (6)

“அப்பொழுது ஜனங்கள் தேவனுக்கு எதிர்கொண்டுபோக, மோசே அவர்களைப் பாளயத்திலிருந்து புறப்படப்பண்ணினான்; அவர்கள் மலையின் அடிவாரத்தில் நின்றார்கள். கர்த்தர் சீனாய்மலையின்மேல் அக்கினியில் இறங்கினபடியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது; அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது.” தெய்வீக மகத்துவம், எரிகிற அக்கினி ஜுவாலையைப்போன்று காணப்பட்ட மகிமையான தூதர்களின் அணிவகுப்போடு மேகங்களின்மீது இறங்கியது. (7)

“எக்காளசத்தம் வரவர மிகவும் பலமாய்த் தொனித்தது; மோசே பேசினான்; தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார். கர்த்தர் சீனாய்மலையிலுள்ள கொடுமுடியில் இறங்கினபோது, கர்த்தர் மோசேயை மலையின் கொடுமுடியிலே வரவழைத்தார்; மோசே ஏறிப்போனான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: ஜனங்கள் பார்க்கிறதற்கு எல்லையைக் கடந்து கர்த்தரிடத்தில் வராதபடிக்கும், அவர்களில் அநேகர் அழிந்துபோகாதபடிக்கும், நீ இறங்கிப்போய், அவர்களை உறுதியாக எச்சரி. கர்த்தரின் சமுகத்தில் வருகிற ஆசாரியர்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடி, தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.” (8)

இவ்வாறாக, கர்த்தர் தமது பயங்கரமான மகத்துவத்துடன் ஜனங்கள் தன்னை நம்பவேண்டும் என்பதற்காக சீனாய் மலையிலிருந்து பேசினார். அவர் ஒருவர்தான் ஜீவனுள்ள மெய்யான தேவன் என்பதை அவர்கள் அறிவதற்காக, அவருடைய மகத்துவமான அதிகாரத்தை அவர்கள் கண்கள் காண்பதற்காக, கற்பனைகளை கொடுக்கும்போது அவர் வந்தார். மகிமையின் மேகத்திற்குள் வரும்படி மோசே அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அதனைச் சுற்றிலுமிருந்த கடுமையான இருள்வரைக்கும் அவன்

அனுமதிக்கப்பட்டான். அவன் ஜனங்களுக்கும் கர்த்தருக்கும் நடுவில் நின்றான். (9)

## தேவனுடைய கற்பனை அறிவிக்கப்பட்டது!

கர்த்தர் அவருடைய வல்லமைக்கான சான்றுகளை அவர்களுக்குக் கொடுத்தபின், தாம் யாராக இருக்கிறார் என்பதை அவர்களிடம் கூறினார். (10)

1. உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். (எகிப்தியர்களுக்கு மத்தியில் தமது வல்லமையை உயர்த்தியிருந்த அதே தேவன் இப்பொழுது அவரது கற்பனைகளைக் கூறினார்.)

2. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

4. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

6. கொலை செய்யாதிருப்பாயாக.

7. விபசாரம் செய்யாதிருப்பாயாக.

8. களவு செய்யாதிருப்பாயாக.

9. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக.

10. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்.

யேகோவாவினால் கூறப்பட்ட முதல் இரண்டு கற்பனைகள் விக்கிரக ஆராதனைக்கு எதிரான கற்பனைகளாக இருந்தன. ஏனெனில் விக்கிரக ஆராதனை பழக்கப்படுத்தப்பட்டால், அவை மனிதர்களைப் பாவத்திற்குள்ளும் கலகத்திற்குள்ளும் நடத்தி, முடிவில் நரபலிகொடுப்பதில் கொண்டுவந்து விடும். அப்படிப்பட்ட அருவருப்புகளுக்கு, மிகக் குறைந்த அளவில்கூட நடத்தக்கூடிய அனைத்திலிருந்தும் தேவன் பாதுகாப்பார். தேவன்பால் மனிதனுக்குள்ள கடமைகளைக் காட்டுவதற்காக முதல் நான்கு கற்பனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மகத்துவமானவரான தேவனையும் மனிதனையும் இணைக்கும் சங்கிலியின் கண்ணியாக நான்காவது கற்பனை உள்ளது. மனிதனுடைய நன்மைக்காகவும் தேவனுடைய கனத்திற்காகவும் நான்காவது கற்பனை கொடுக்கப்பட்டுள்ளது. மனிதனுக்கும் உடன் மனிதனுக்குமுள்ள கடமையைக் கடைசி ஆறு கற்பனைகள் காட்டுகின்றன. (11)

தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையிலான நித்தியமான அடையாளமாக ஓய்வுநாள் உள்ளது. ஓய்வுநாளை ஆசரிக்கும் அனைவரும், அவர்கள் வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின சிருஷ்டிகராகிய ஜீவனுள்ள தேவனை ஆராதிப்பவர்கள் என்பது இவ்விதமாக ஒரு அடையாளமாக இருக்கவேண்டியதாக இருந்தது. அவரைச் சேவிக்கின்ற ஒரு ஜனம் பூமியில் இருக்கும்வரை, ஓய்வுநாள் தேவனுக்கும் அவரைச் சேவிக்கும் ஜனங்களுக்குமிடையில் ஒரு அடையாளமாக இருக்கவேண்டியதாக இருந்தது. (12)

“ஜனங்கள் எல்லாரும் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் எக்காளச் சத்தத்தையும் மலை புகைகிறதையும் கண்டார்கள்; அதைக்

கண்டு, ஜனங்கள் பின்வாங்கி, தூரத்திலே நின்று, மோசேயை நோக்கி: நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள். மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், தேவன் எழுந்தருளினார் என்றான்.” (13)

“ஜனங்கள் தூரத்திலே நின்றார்கள்; மோசே, தேவன் இருந்த கார்மேகத்துக்குச் சமீபமாய்ச் சேர்ந்தான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன் என்று கண்டீர்கள்.” என்றார். சீனாய் மலையின்மீது தோன்றிய தேவனுடைய மகத்துவமிக்க பிரசன்னமும், அதனால் பூமியில் மனிதர்களிடம் உண்டான உணர்ச்சிகளின் கொந்தளிப்பும், பயங்கரமான இடிமுழக்கங்களும் மின்னல்களும், பரிசுத்தமும் மகத்துவமுமானவருக்குரிய பரிசுத்தத்தையும் பயபக்தியையும் ஜனங்களின் மனங்களில் உணர்த்திற்று. எனவே அவரது பயங்கரமான மகிமையினை அவர்களால் தாங்கமுடியாதபடி போய்விடக்கூடாதென்று அவர்கள் பின்வாங்கினார்கள். (14)

### விக்கிரக ஆராதனையின் அபாயம்!

மறுபடியும் தேவன் அவரது ஜனங்களை விக்கிரக ஆராதனையிலிருந்து காப்பார். “நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்” என்றார். அவர்கள் எகிப்தியர்களின் உதாரணத்தைப் பின்பற்றி கடவுளை எடுத்துக்காட்டுகின்ற விக்கிரகங்களைத் தங்களுக்கென்று உண்டுபண்ணிக்கொள்ளக்கூடிய அபாயம் இருந்தது. (15)

கர்த்தர் மோசேயிடம்: “வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது. நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன். என் தூதனானவர் உனக்குமுன்சென்று, எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும்

இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டுபோவார்; அவர்களை நான் அதம்பண்ணுவேன்.” என்றார். இஸ்ரவேலுக்கு முன்சென்ற தூதன் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவே. “நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும், அவர்களை நிர்மூலம்பண்ணி, அவர்களுடைய சிலைகளை உடைத்துப்போடுவாயாக. உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்.” (யாத்திராகமம் 23:24 –25) என்று கூறினார். (16)

தேவனுடைய ஜனங்களுக்கு அவர் மட்டுமே தொழுகையின் பொருளாக இருக்கவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும் என்று அவர் விரும்புகிறார். எபிரெயர்கள் தங்களைச் சூழ்ந்துள்ள விக்கிரக ஆராதனைசெய்யும் ஜாதிகளை மேற்கொள்ளும்போது, அவர்கள் வணங்கும் பொருளாகிய விக்கிரகங்களை பாதுகாக்காமல் அவைகளை முற்றிலுமாக அழித்துவிடவேண்டும். இந்த அஞ்ஞான தெய்வங்களில் அநேகமானவைகள் விலைமதிப்புள்ளவைகளாகவும் அழகிய வேலைப்பாடு உள்ளவைகளாகவும் இருந்தன. எனவே அவை, எகிப்தில் சதாரணமாயிருந்த விக்கிரக ஆராதனையைப் பார்த்திருந்தவர்களை, மீண்டும் அவைகளுக்கு ஓரளவு பக்தியைத் தரும்படி உணர்வுகளேதும் இல்லாத இவைகள் தூண்டிவிடக்கூடும். துன்மார்க்கத்தின் ஒவ்வொரு படிக்கும் இந்த ஜாதிகளை நடத்தியிருந்த விக்கிரக ஆராதனைக்காகத்தான், அவர்களைத் தண்டிக்கும்படியாகவும், அவர்களுடைய தெய்வங்களை அழிக்கும்படியாகவும், தேவன் இஸ்ரவேலரைக் கருவிகளாக உபயோகிப்பார் என்பதை அவர்கள் அறியவேண்டுமென்று அவர் விரும்பினார். (17)

“எனக்குப் பயப்படும் பயத்தை உனக்குமுன் செல்லும்படி செய்வேன். நீ செல்லும் இடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரையும் கலங்கடித்து, உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகு காட்டப்பண்ணுவேன். உன் முகத்திற்கு முன்னின்று ஏவியரையும் கானானியரையும் ஏத்தியரையும் துரத்திவிட, குளவிகளை உனக்கு முன்னே அனுப்புவேன். தேசம் பாழாய்ப்போகாமலும், காட்டுமிருகங்கள் உனக்கு விரோதமாய்ப் பெருகாமலும் இருக்கும்படி, நான் அவர்களை ஒரே வருஷத்திற்குள்ளே உன் முன்னின்று துரத்திவிடாமல், நீ விருத்தியடைந்து, தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்வரைக்கும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் முன்னின்று துரத்திவிடுவேன். சிவந்த சமுத்திரம் தொடங்கி பெலிஸ்தரின் சமுத்திரம்வரைக்கும், வனாந்தரம் தொடங்கி நதிவரைக்கும் உன் எல்லையாயிருக்கும்படி செய்வேன்; நான்

அந்தத் தேசத்தின் குடிகளை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்; நீ அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுவாய். அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக. அவர்கள் உன்னை எனக்கு விரோதமாகப் பாவஞ்செய்யப்பண்ணாதபடிக்கு உன் தேசத்திலே குடியிருக்கவேண்டாம்; நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால், அது உனக்குக் கண்ணியாயிருக்கும் என்றார்"–யாத்திராகமம் 23:27–33. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஜனங்களுக்கு கீழ்ப்படிதல் என்ற நிபந்தனையின்பேரில் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் அவர்களுக்காகப் பெரிய காரியங்களைச் செய்வார். (18)

மோசே இந்த நியாயங்களையெல்லாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்று ஜனங்களுக்காக அவைகளையும் கீழ்ப்படிதல் என்னும் நிபந்தனையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களையும் எழுதியபின்பு, அவர் மோசேயை நோக்கி: "நீயும் ஆரோனும் நாதாபும் அபியூவும் இஸ்ரவேலின் மூப்பரில் எழுபதுபேரும் கர்த்தரிடத்தில் ஏறிவந்து, தூரத்திலிருந்து பணிந்துகொள்ளுங்கள். மோசே மாத்திரம் கர்த்தரிடத்தில் சமீபித்து வரலாம்; அவர்கள் சமீபித்து வரலாகாது; ஜனங்கள் அவனோடேகூட ஏறிவரவேண்டாம் என்றார். மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்"–யாத்திராகமம் 24:1–3. (19)

மோசே பத்துக்கற்பனைகளை எழுதாமல், அவர்கள் கடைபிடிக்கும் படியான நியாயங்களையும் அவருக்கு அவர்கள் கீழ்ப்படியவேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களையும் எழுதினான். அவன் அவைகளை ஜனங்களுக்கு வாசித்துக் காட்டினான். அவர்கள் கர்த்தர் கூறியுள்ள வார்த்தைகள் யாவுக்கும் நாங்கள் கீழ்ப்படிவோம் என்று தாங்களாகவே ஆணையிட்டார்கள். அதன்பின் மோசே அவர்களுடைய பக்திவிநயமான ஆணையை ஒரு புத்தகத்தில் எழுதினான். ஜனங்களுக்காக அவன் கர்த்தருக்குப் பலியிட்டான். "உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள். அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்." கர்த்தர் கூறிய யாவையும் செய்வோம்; அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்போம் என்று ஜனங்கள் தங்களுடைய பக்திவிநயமான ஆணையை திரும்பவும் கூறினார்கள். (20)

நான்காம் கற்பனையிலுள்ள ஓய்வுநாள் ஏதேனில் வைத்துக் கொடுக்கப்பட்டது. தூதர்கள் அதனால் ஆளுகைசெய்யப்பட்டிருந்தனர். தேவ அரசாங்கத்தின் கொள்கைகளை மீறினதால் சாத்தான் விழுந்துபோனான். ஆதாமையும் ஏவாளையும் படைத்தபின்பு, தேவன் அவரது பிரமாணங்களை அவர்கள் அறியும்படிச்செய்தார். அதற்குப்பின்பு, அது எழுதப்படாமல் யேகோவாவால் திரும்பவும் எடுத்துக்காட்டப்பட்டது. (21)

## தேவனுடைய நித்திய பிரமாணம்!

நான்காம் கற்பனையில் உள்ள ஓய்வுநாள் ஏதேனில் ஏற்படுத்தப்பட்டது. தேவன் உலகத்தைப் படைத்து, அதன்மீது மனிதனைப் படைத்தார். அவர் மனிதனுக்காக ஓய்வுநாளை ஏற்படுத்தினார். ஆதாமின் பாவம், விழுகை ஆகியவைகளுக்குப்பின் பத்துக்கற்பனைகளிலிருந்து எதுவும் நீக்கப்படவில்லை. பத்துக்கற்பனைக் கொள்கைகள் விழுகைக்குமுன்னும் இருந்தன. மனிதர்கள் மற்றும் தூதர்களின்—பரிசுத்தமான ஒழுங்குமிக்க தன்மையுள்ளவர்களின் சுபாவ ஒழுங்கிற்குப் பொருந்தக்கூடியவைகளாக அவை இருந்தன. விழுகைக்குப்பின் அந்தக் கற்பனைகளின் கொள்கைகள் மாற்றப்படவில்லை. ஆனால் மனிதனின் விழுந்துபோன நிலையில் அவனுக்குப் பொருந்தக்கூடிய அதிகமான கட்டளைகள் கொடுக்கப்பட்டன. (22)

கீழ்ப்படியாமைக்குரிய தண்டனையாக மரணம் உள்ளது என்பதை ஏவாள் நம்பாமலிருக்கும்படி சர்ப்பம் செய்திருந்ததை, விழுந்துபோன மனிதனின் முன்வைப்பதற்காக, மிருகங்களைப் பலியிடுகின்ற ஒரு நியமனம் அப்பொழுது ஏற்படுத்தப்பட்டது. தேவப்பிரமாணங்கள் மீறப்பட்டபோது, கிறிஸ்து பலியாக மரிப்பதை அது சுட்டிக்காட்டியது. தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள மனிதனுக்கு வழி உண்டுபண்ணப்பட்ட அதே நேரத்தில், தேவனுடைய பிரமாணங்களின் மேன்மையும் பாதுகாக்கப்பட்டது. மனிதனுடைய இந்த விழுந்துபோன நிலையில் பலிமுறைகள் அவனுக்குத் தாழ்மையைப் போதிக்கின்றவையாக இருந்தன. கடந்த காலத்தில் தேவப்பிரமாணங்களை மீறினதற்கான மன்னிப்பை, வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்த மீட்பரின் மூலமாகப் பெறுவதற்கு, மனம் வருந்தவும், தேவனைமட்டுமே நம்பவும், இந்தப் பலிமுறைகள் நடத்தியிருந்தன. தேவப்பிரமாணம் மீறப்படாமலிருந்தால், மரணம் ஒருபோதும் சம்பவித்திருக்காது. மனிதனுடைய விழுந்துபோன நிலைமைக்கு பொருந்தும்படியான அதிகப்படியான கட்டளைகளும் கொடுக்கப்பட்டிருந்திருக்காது. (23)

ஆதாம் அவன் சந்ததியினருக்கு தேவனுடைய கற்பனைகளைப் போதித்திருந்தான். இது அடுத்தடுத்துவந்த தலைமுறைகளிலிருந்த

உண்மையானவர்களுக்கு மாறிவந்தது. தேவனுடைய பிரமாணங்கள் தொடர்ச்சியாக மீறப்பட்டபோது, அது பூமியின்மீது ஒரு ஜலப்பிரளயத்தைக் கொண்டுவந்தது! சரியானதை செய்ததால் தேவனுடைய ஒரு அற்புதத்தினால் காப்பாற்றப்பட்ட நோவாவினாலும் அவனது குடும்பத்தினராலும் அது காக்கப்பட்டது. நோவா அவனுடைய சந்ததிக்கு பத்துக்கற்பனைகளை போதித்தான். தேவப்பிரமாணத்தைத் தங்களுடைய இருதயங்களில் பாதுகாத்திருந்த ஒரு ஜனத்தை, ஆதாம்முதல் யுகங்கள் நெடுகிலும் அவருக்கென்று பாதுகாத்திருந்தார். அவர் ஆபிரகாமைக்குறித்து: "ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால்" என்றார்–ஆதியாகமம் 26:5. (24)

"கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றார்"–ஆதியாகமம் 17:1,2. "உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன் என்றார்"–ஆதியாகமம் 17:7). (25)

தமக்குரிய விசேஷ ஜனமாக சகல கூட்டங்களிலிருந்தும் தங்களை பிரித்து தனிமைப்படுத்தியிருக்கிறார் என்பதற்கடையாளமாக, விருத்தசேதனம் அதாவது மாம்சத்திலிருந்து ஒரு வட்டம் வெட்டி பிரித்தெடுக்கும்படி ஆபிரகாமிடம் கூறினார். தேவனுக்கும் அவரது பரிசுத்த பிரமாணத்திற்கும் காண்பிக்கவேண்டிய பயபக்தியை இழந்து, தங்களைச் சுற்றியுள்ள விக்கிரக ஆராதனை செய்யும் ஜனங்களைப்போல ஆகிவிடுவதற்கேதுவாக, மற்ற ஜனத்தாருடன் கலப்புத்திருமணம் செய்யமாட்டார்கள் என்று, இந்த அடையாளத்தினால் அவர்கள் தாங்களாகவே ஆணையிட்டார்கள். (26)

மற்ற ஜனங்களிடமிருந்து பிரிந்து பூரணமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று ஆபிரகாமோடு செய்யப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளில் தங்கள் பங்கைச் செய்வோம் என்று விருத்தசேதன செயலின்மூலமாக, அவர்கள் சம்மதித்திருந்தனர். ஆபிரகாமின் பின்சந்ததியினர் மற்ற ஜாதிகளிடமிருந்து விலகியிருந்திருப்பார்களானால், விக்கிரக ஆராதனையில் மயங்கியிருக்கமாட்டார்கள். மற்ற ஜாதியினரிடமிருந்து பிரிந்திருப்பதினால், அவர்களுடைய பாவகரமான நடத்தைகளில் ஈடுபட்டு தேவனுக்கு எதிராகக் கலகம் செய்யக்கூடிய பெரிய ரோசதனை

அவர்களைவிட்டு நீக்கப்பட்டிருக்கும். அவர்கள் தங்களைச் சுற்றியிருந்த ஜாதியினருடன் கலந்ததினால், தங்களுடைய தனித்தன்மைவாய்ந்த பரிசுத்தமான சுபாவத்தை இழந்திருந்தனர். அவர்களைத் தண்டிப்பதற்காகக் கர்த்தர் அவர்களுடைய தேசத்தில் ஒரு பஞ்சத்தை உண்டுபண்ணவே அவர்கள் தங்களுடைய உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்காக எகிப்திற்குச் செல்லும்படி வற்புறுத்தப்பட்டனர். ஆனால் ஆபிரகாமுடன் செய்திருந்த உடன்படிக்கையின் காரணமாக, அவர்கள் எகிப்தில் இருக்கும்போது, தேவன் அவர்களைக் கைவிடாமலிருந்தார். அவர்கள் தங்களுடைய துன்பத்தில் ஆண்டவரிடத்திற்குத் திரும்பவும், அவருடைய நீதியும் இரக்கமுமிக்க அரசாங்கத்தை தெரிந்துகொள்ளவும், அவரது எதிர்பார்ப்புகளுக்குக் கீழ்ப்படியவும் அவர்கள் எகிப்தியர்களால் ஒடுக்கப்படுவதற்கு அனுமதித்தார். (27)

சில குடும்பங்கள் மட்டுமே எகிப்பதிற்குச் சென்றன. இவர்கள் திரளாகப் பெருகினர். தேவனுடைய பிரமாணங்களின்படி நடக்க தங்களுடைய பிள்ளைகளுக்குப் போதிப்பதில் சிலர் கவனமுள்ளவர்களாக இருந்துபோது, அநேக இஸ்ரவேலர்கள் விக்கிரக ஆராதனையை மிக அதிகமாக கவனித்திருந்ததால், தேவப்பிரமாணங்களைப்பற்றிக் குழப்பமுடையவர்களாக இருந்தனர். தேவனுக்குப் பயந்தவர்கள் ஆவியின் உருக்கத்துடன், அவரை சுதந்திரமாக ஆராதிப்பதற்காக அவர்களது அடிமைத்தனத்தின் கடினமான நுகத்தை முறித்துப்போடவும், அடிமைகளாக இருக்கும் தேசத்திலிருந்து அவர்களை விடுவிக்கவும் வேண்டுமென்று தேவனை நோக்கி அழுதனர். தேவன் அவர்களுடைய அழுகைகளைக் கேட்டு, அவருடைய ஜனங்களை விடுவிக்க மோசேயை ஒரு கருவியாக எழுப்பினார். அவர்களுக்கு முன்னால் செங்கடலின் தண்ணீர் பிரிந்தது. அவர்களை ஒரு தேசத்திலிருந்து வேறொரு தேசத்திற்கு காத்தர் கொண்டுசென்றார். அந்த அடையாளங்களையும் அற்புதங்களையும் கண்டபின்பு, அந்த ஜனங்கள் அவர்மீது நம்பிக்கை வைப்பார்களா என்பதைக் காண இவைகளையெல்லாம் செய்து மெய்ப்பித்தார். ஆனால் அந்த சோதனையைச் சகிப்பதில் அவர்கள் தோற்றுப்போனார்கள். வழியில் தேவனுக்கெதிராக முறுமுறுத்து, வழியிலுள்ள துன்பங்களினால் மீண்டும் எகிப்திற்குத் திரும்பிவிட விரும்பினார்கள். (28)

**கற்பலகைகளில் எழுதப்பட்ட பத்துக்கற்பனைகள்!**

சாக்குப்போக்குச்சொல்ல இடமில்லாதபடி, கர்த்தர் தாமே தூதர்கள் புடைசூழ மகிமையுடனும் மிகவும் பயங்கரமான விதத்திலும் இறங்க மனமுவந்து, சீனாய் மலைக்கு வந்து, அவருடைய பத்துக்கற்பனைகளை அறிக்கைசெய்தார். மற்றெவராலும், தூதர்காளளலுங்கூட போதிக்கப்படுவதற்கு

அவர்களை விடாமல், எல்லா ஜனங்களும் கேட்கும்படியான குரலில் அவரது பிரமாணங்களைப் பேசினார். அதோடு, அவருடைய நியமங்களை விரைவில் மறந்துவிடக்கூடிய தன்மையுடைய மக்களின் நினைவில்மாத்திரம் அவைகளைப் பதியவிடாமல், தமது பரிசுத்தமான விரலினால் கற்பலகைகளிலும் அவைகளை எழுதினார். அவருடைய கற்பனைகளுடன் வேறு எந்த மனிதப் பாரம்பரியங்களும் கலப்பதற்கோ, அல்லது மனித பழக்கங்களால் தமது எதிர்பார்ப்புகள் குழம்பிப்போவதற்கோ இருக்கும் அனைத்து வாய்ப்புகளையும் தகர்த்தார். (29)

அதன்பிறகு, தம்மைவிட்டு சுலபமாக விலகிப்போகக்கூடியவர்களாக இருந்த அவருடைய ஜனங்களிடத்திற்கு மேலும் அருகில் வந்து, அந்தப் பத்துக்கற்பனைகளோடு மட்டும் அவர்களை விட்டுவில்லை. அவர்களை நடத்தக்கூடிய நியாயங்களையும் பிரமாணங்களையும், அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார் என்பதைப்பற்றிய நுணுக்கமான கட்டளைகளையும் தாம் சொல்லும்போது எழுதும்படி மோசேக்குக் கட்டளையிட்டார். இப்படியாக அவர் கற்பலகைகளில் எழுதியிருந்த பத்துக்கற்பனைகளையும் பாதுகாத்தார். தவறு செய்யும் தன்மையுடைய மனிதனை, அவன் மீறிவிடக்கூடிய சன்மார்க்கப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதற்கு இழுக்கும்படியாக, குறிப்பான இந்தக் கட்டளைகளும் நியமங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. (30)

ஆதாமின் விழுகைக்குப்பின் அவனுக்குக் கொடுக்கப்பட்டு, நோவாவால் பேழைக்குள் பாதுகாக்கப்பட்டு, ஆபிரகாமால் கடைபிடிக்கப்பட்டிருந்த விதத்தில் தேவனுடைய கற்பனைகளை மனிதன் கைக்கொண்டிருந்தால், விருத்தசேதனம் என்னும் நியமத்துக்கு அவசியம் இருந்திருக்காது. விருத்தசேதனத்தை அடையாளமாகக் கொண்டிருந்த உடன்படிக்கையை ஆபிரகாமின் சந்ததியினர் கைக்கொண்டிருந்தால், விக்கிரக ஆராதனைக்குள் சென்றிருக்கமாட்டார்கள், அல்லது எகிப்துக்குப் போகும்படி நிர்பந்திக்கப்பட்டி ருக்கமாட்டார்கள்; சீனாய் மலையிலிருந்து தேவன் தமது பிரமாணங்களை அறிவிக்கவும் அவைகள் கற்பலகைகளின்மீது பொறிக்கவும், மோசேயின் நியாயப்பிரமாணங்களிலும் கட்டளைகளிலும் இருந்த குறிப்பான முறைகளினால் அது காக்கப்படவேண்டியதான அவசியமும் இருந்திருக்காது. (31)

### நியமங்களும் கட்டளைகளும்!

மோசே தேவனுடன் மலையின்மேல் இருந்தபோது, தேவன் சொல்வதைக்கேட்டு நியமங்களையும் கட்டளைகளையும் எழுதினான். பத்துக்கற்பனைகளின் கொள்கைகளுக்கு தேவனுடைய ஜனங்கள்

கீழ்ப்படிந்திருந்தால், தேவனுக்கும் ஒருவருக்கொருவரும் செய்யவேண்டிய கடமைகள் சம்பந்தப்பட்ட, மோசே புத்தகத்தில் எழுதின குறிப்பான வழிமுறைகள் கொடுக்கப்படவேண்டிய அவசியம் உண்டாகியிருக்காது. அவருடைய ஜனங்கள் ஒருவருக்கொருவர் கடைப்பிடிக்கவேண்டிய கடமைகளும், அந்நியருடன் கடைபிடிக்கவேண்டிய கடமைகளுந்தான் தவறுசெய்ய அவசியம் ஏற்படாதபடிக்கு, சுருக்கப்பட்டு, குறிப்பான விதத்தில் கொடுக்கப்பட்டிருந்த பத்துக்கற்பனைகளின் கொள்கைகளாயிருந்தது. (32)

சடங்காச்சாரப் பலிமுறைகளைப்பற்றிக் கர்த்தர் குறிப்பாகப் போதித்திருந்தவைகள் யாவும் கிறிஸ்துவின் மரணத்துடன் முடிவடைய வேண்டியவைகளாக இருந்தன. குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகக் கிறிஸ்து தம்மைப் பலியாகச் செலுத்துவதின் முன்னடையாளமாகப் பலிமுறைகள் இருந்தன. பலிசெலுத்துதல் என்னும் முறையைக் கர்த்தர் முதலில் ஆதாமின் விழுகைக்குப்பின் அவனிடம் ஏற்படுத்தினார். அவன் அதனை அவனுடைய சந்ததியினருக்குப் போதித்தான். விசுவாசத்துடன் தேவனைப் பின்பற்றியிருந்தவர்களைவிட்டு ஜலப்பிரளயத்திற்கு முன் பிரிந்துசென்றவர்களாலும், பாபேல் கோபுரத்தைக் கட்டுகின்ற வேலையில் ஈடுபட்டிருந்தவர்களாலும் இந்தப் பலிமுறைகள் கறைப்படுத்தப்பட்டிருந்தன. பரலோகத்தின் தேவனுக்குப் பலிசெலுத்துவதற்குப் பதிலாக, அவர்கள் தங்களால் உண்டுபண்ணப்பட்ட தெய்வங்களுக்குப் பலிசெலுத்தினார்கள். அவர்கள் வரவிருக்கும் மீட்பரின்மீது விசுவாசம் வைத்துப் பலிசெலுத்தாமல், மாசுபடிந்த விக்கிரகங்களின் பலிபீடங்களின்மீது அநேக மிருகங்களைப் பலியிட்டிருந்தனர். இப்படிச் செய்வதினால் தங்களுடைய தெய்வங்களைப் பிரியப்படுத்தலாம் என்று எண்ணினார்கள். அவர்களுடைய மூடநம்பிக்கை அவர்களை வீணான காரியங்களைச் செய்ய நடத்தியது. எந்த அளவிற்கு அவர்களுடைய பலிகள் பெரியதாக இருக்குமோ, அந்த அளவிற்கு அவை அவர்களுடைய தெய்வங்களுக்குப் பிரியத்தை உண்டுபண்ணுமென்றும், தங்களுடைய ஜாதியின் செழுமைக்கும் செல்வத்திற்கும் அது காரணமாக இருக்கும் என்றும் அவர்கள் போதித்தனர். எனவே, உணர்வுகள் எதுவும் இல்லாத அந்த விக்கிரகங்களுக்கு அவர்கள் அடிக்கடி நரபலியும் செலுத்தியிருந்தார்கள். அந்த ஜாதியினர் அதிகக் கொடுமைமிக்கதாக இருந்த மக்களின் நடத்தைகளைக் கட்டுப்படுத்த சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் உண்டுபண்ணியிருந்தனர். கிருபையினால் மென்மையடையாத இருதயங்களை உடையவர்களாக இருந்தவர்களால் அந்தச் சட்டங்கள் உண்டுபண்ணப்பட்டிருந்தன. மிகவும் கீழ்த்தரமான குற்றங்களை அவர்கள் கவனிக்காமல் விட்டுவிட்டிருந்தபோது, அதிகாரத்தில் ஒரு சிறிய குற்றங்கூட பெரிய தண்டனையை வரவழைத்திருந்தது. (33)

இதன் காரணமாக, மோசே இஸ்ரவேல் ஜனங்களிடம்: "நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன். ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?" (உபாகமம் 4:5–8) என்று கூறினான். (34) ★

# 19

# ஆசரிப்புக்கூடாரம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 151–157)**
**திருவசன ஆதாரம் : யாத்திராகமம் 19; 20; 35:20–40:38.**

ஆசரிப்புக்கூடாரம் தேவன் கட்டளையிட்டிருந்தபடி கட்டப்பட்டிருந்தது. மிகுந்த கலைத்திறனும் மதிநுட்பமும்வாய்ந்த அந்த வேலையைச் செய்வதற்கு இயற்கையான தகுதிகளுக்கும் மேலான தகுதிகளுடைய மனிதர்களை தேவன் எழுப்பினார். மோசேயோ அல்லது அந்தக் கட்டிட வேலையைச் செய்திருந்த மனிதர்களோ அதனை வடிவமைக்கும்படி அனுமதிக்கப்படவில்லை. தேவன் தாமே அதன் அமைப்பைப்பற்றிய குறிப்பான அளவு, வடிவம், பயன்படுத்தப்படவேண்டிய பொருட்கள், அதில் இருக்கவேண்டிய பொருட்களின் வடிவம் அளவு ஆகியவைகளைத் திட்டஞ்செய்து மோசேயிடம் கொடுத்தார். பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் ஒரு சிறு மாதிரியை தேவன் மோசேக்குக் காண்பித்து, மலையிலே காட்டப்பட்டதின் மாதிரியின்படியே செய்யும்படி அவனுக்குக் கட்டளை கொடுத்தார். தேவன் காண்பித்த அனைத்தையும் மோசே ஒரு புத்தகத்தில் வரைந்து, அவைகளை மிகவும் செல்வாக்குள்ள மக்களுக்கு வாசித்துக்காட்டினான். (1)

அதன்பின் இஸ்ரவேலர்களுக்கு மத்தியில் கர்த்தர் வாசம்பண்ணும்படி, ஒரு ஆசரிப்புக்கூடாரத்தை உண்டுபண்ணுவதற்காக காணிக்கை கொண்டுவரும்படியாக கர்த்தர் கட்டளையிட்டார். “அப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேயின் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். பின்பு எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ, அவர்கள் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும், அதின் சகல ஊழியத்துக்கும், பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள். மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும், அஸ்தகடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் முதலான சகல

வித பொன்னாபரணங்களையும் கொண்டுவந்தார்கள்; கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தின ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக்கையாகச் செலுத்தினான்.” (2)

பெரியதும் செலவுமிக்கதுமான ஆயத்தங்கள் அவசியமாக இருந்தன. மிக அருமையானதும் விலை உயர்ந்ததுமான பொருட்கள் சேகரிக்கப்படவேண்டியதாக இருந்தது. தேவனுக்காக ஒரு இடத்தை ஆயத்தஞ்செய்தவற்கு தேவனுடைய வேலைக்கான அர்ப்பணம் இருதயத்திலிருந்துண்டாகும் தியாகம் ஆகியவை முதலில் அவசியமாக இருந்தன. ஆசரிப்புக்கூடாரத்தின் கட்டுமானப்பணி நடந்துகொண்டிருந்தபோது ஜனங்கள் தங்களுடைய காணிக்கைகளை மோசேயிடம் கொண்டு வந்தார்கள். அவன் அவைகளை பொற்கொல்லர்களுக்கு முன்பாக வைத்தான். அப்பொழுது பரிசுத்த ஸ்தலத்து வேலைகளைச் செய்கிற விவேகிகள் யாவரும் அந்தக் காணிக்கைகளை சோதித்து, ஜனங்கள் போதுமானஅளவும் அதற்கும் மேலுங்கூட கொண்டுவந்துவிட்டார்களென்று தீர்மானித்தார்கள். அப்பொழுது மோசே: “இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்யவேண்டாம் என்று பாளயம் எங்கும் கூறும்படி கட்டளையிட்டான்; இவ்விதமாய் ஜனங்கள் கொண்டுவருகிறது நிறுத்தப்பட்டது.” (3)

**பின்சந்ததிக்காக குறிக்கப்பட்டிருக்கின்றன!**

மீண்டும் மீண்டும் எழும்பின இஸ்ரவேலரின் முறுமுறுப்புகளும் அவர்களின் மீறுதல்களுக்காக உண்டான தேவகோபமும் பிற்காலத்தில் பூமியில் வாழக்கூடிய மனிதர்களுக்கு, குறிப்பாக காலத்தின் முடிவில் இருக்கக்கூடிய ஜனங்களுக்கு எச்சரிப்பு உண்டாகும்படிக்கு எழுதப்பட்டுள்ளது. அவர்களுடைய அர்ப்பணங்களும், உழைப்புகளும், மோசேயிடம் மனப்பூர்வமாகக் கொடுத்த அவர்களது காணிக்கைளும் கூட மக்களுடைய நன்மைக்காக எழுதப்பட்டுள்ளது. ஆலயப்பணிக்காகப் பொருட்களைச் சேகரிப்பதில் மகிழ்ச்சிமிக்கவர்களாக இருந்த அவர்களின் உதாரணம் உண்மையான அன்புடன் தேவனைத் தொழுதுகொள்ள விரும்புகிறவர்களுக்கு ஒரு உதாரணமாக உள்ளது. தேவன் தங்களைச் சந்திப்பதற்கென்று கட்டிடத்தை ஆயத்தம் செய்யும்போது, அவருடைய பரிசுத்தமிக்க பிரசன்னத்தை பாக்கியமானதாக எண்ணும் அனைவரும் தங்களுடைய பூமிக்குரிய சுகங்களைவிட, பரலோக ஆசீர்வாதங்களை மேலாக மதித்து, பெரிய வாஞ்சையை வெளிக்காட்டவேண்டும். தேவனுக்கென்று ஒரு வீட்டைக் கட்டுகிறோமென்பதை உணரவேண்டும். (4)

தேவன் தம்முடைய ஜனங்களைச் சந்திப்பதற்கென்று சிறப்பாக ஒரு வீட்டை ஆயத்தஞ்செய்வது சில விளைவுகளை உடையதாக இருப்பதால் அது ஏற்புடையதாகவும் வசதியுள்ளதாகவும் இருக்கும்படி கட்டுவதற்குக் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் அது தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டு அவரது சமுகத்தில் வைக்கப்படவேண்டும். அவர் தமது பரிசுத்தமான பிரசன்னத்தினால் அதைப் பரிசுத்தமாக்கி, அங்கே தங்கவேண்டுமென்று மன்றாடவேண்டும். வேலையைத் தாராளமாகச் செய்துமுடிக்க கர்த்தருக்கு மனவிருப்பத்துடன் கொடுக்கவேண்டும். அப்போதுதான் இனி காணிக்கைகளைக் கொண்டுவரவேண்டாமென்று ஊழியக்காரர்களால் சொல்லமுடியும். (5)

## மாதிரியின்படி!

ஆசரிப்புக்கூடாரத்தை அமைத்து முடித்தபின், சகல பணிகளும் மோசேக்குக் காட்டப்பட்டபடி செய்யப்பட்டிருக்கிறதா என்று அவன் பரிசோதித்துப்பார்த்து, ஒவ்வொரு பகுதியும் மிகவும் சரியான விதத்தில் செய்யப்பட்டிருப்பதைக்கண்டு, அவன் ஜனங்களை ஆசீர்வதித்தான். (6)

உடன்படிக்கைப்பெட்டியை எப்படி உண்டுபண்ணவேண்டும் என்ற சிறப்பான மாதிரியை மோசேக்கு தேவன் கொடுத்திருந்தார். தேவன் தமது சொந்த விரலினால் எழுதின பத்துக்கற்பனைகள் பொறிக்கப்பட்டிருந்த கற்பலகைகள் அந்தப் பெட்டிக்குள் வைக்கப்படவேண்டியதாக இருந்தது. அது ஒரு சிறிய பெட்டியின் வடிவில் இருந்தது. அதின் உட்புறமும் வெளிப்புறமும் சுத்தமான பொன்தகட்டினால் மூடப்பட்டிருந்தது. அதின்மேல்பகுதி முழுவதும் பொன் வேலையினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதின் மேல்பாகத்து மூடியான கிருபாசனம் தடித்த பொன் தகட்டினால் உண்டுபண்ணப்பட்டிருந்தது. கிருபாசனத்தின் இரு பக்கங்களிலும் தடித்த பொன் தகட்டினால் உண்டுபண்ணப்பட்டிருந்த இரு கேருபீன்கள் இருந்தன. அவைகளின் முகங்கள் பக்தியுடன் கீழாகக் கிருபாசனத்தை நோக்கியிருந்தன. அவைகளின் முகங்கள் ஒன்றையொன்று நோக்கும்படியாக இருந்தன. இது பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள உடன்படிக்கைப்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த தேவனுடைய பிரமாணத்தின்மீது பரலோகத்தின் தூதர்கள் ஆர்வத்துடனும் பக்தியுடனும் நோக்கியிருப்பதை எடுத்துக்காட்டுவதாக இருந்தது. இந்தக் கேருபீன்களுக்கு இறக்கைகள் இருந்தன. ஒவ்வொரு தூதனின் சிறகும் மேல்நோக்கி உயரே விரிக்கப்பட்டிருந்தது. அடுத்த சிறகு அதின் உடலை மூடியிருந்தது. பூமிக்குரிய ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த உடன்படிக்கைப்பெட்டி, பரலோகத்தில் உள்ள உண்மையான உடன்படிக்கைப்பெட்டியின் மாதிரியாக இருந்தது. அங்கு அந்த உடன்படிக்கைப்பெட்டிக்கு இரு

புறங்களிலும் இரண்டு தூதர்கள் கிருபாசனத்தை லேசாக நிழல்விழும்படி ஒரு இறக்கையை மேலே விரித்து, அடுத்த இறக்கையால் தங்களுடைய பக்தியையும் தாழ்மையையும் காட்டும்படி அதனை மடித்திருந்தனர். (7)

பூமிக்குரிய ஆசரிப்புக்கூடாரத்தில் கற்பலகைகளை உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கும்படி மோசே கட்டளையிடப்பட்டிருந்தான். இவைகள் சாட்சியின் பலகைகள் என்று கூறப்பட்டிருந்தன. இந்த பெட்டி சாட்சியின் பெட்டி என்றும் கூறப்பட்டிருந்தது. ஏனெனில் அதற்குள் தேவனுடைய சாட்சியான பத்துக்கற்பனைகள் வைக்கப்பட்டிருந்தன. (8)

## இரண்டு பகுதிகள்!
## (பரிசுத்தஸ்தலம், மகா பரிசுத்தஸ்தலம்)

ஆசரிப்புக்கூடாரம் இரண்டு பகுதிகளை உடையதாக இருந்தது. அவை ஒரு திரைச்சீலையால் பிரிக்கப்பட்டிருந்தன. அது சம்பந்தமான பணிமுட்டுகளனைத்தும் கெட்டியான பொன்னினால் செய்யப்பட்டிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்தின் திரைச்சீலைகள் பலவிதமான நிறங்களில் மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருந்தன. இந்தவிதமான திரைச்சீலைகளின்மீது பொன், வெள்ளி ஆகியவற்றின் கம்பி இழைகளினாலும் நூலினாலும் கேரூபீன்கள் நெய்யப்பட்டிருந்தன. இவை பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியங்களுடன் சம்பந்தப்பட்டவையாகவும், பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும் தூதர்களை எடுத்துக்காட்டுபவையாகவும் இருந்தன. (9)

இரண்டாவது திரைச்சீலைக்குப்பின் சாட்சியின்பெட்டி வைக்கப்பட்டிருந்தது. சாட்சியின் பெட்டிக்கு முன்னால் மிக அழகிய மேன்மையான (சற்று உயரம் குறைந்த) திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருந்தது. இந்தத் திரைச்சீலை அந்தக் கட்டிடத்தின் உயரத்தை எட்டவில்லை. கிருபாசனத்திற்கு மேலாகக் காணப்பட்ட தேவனுடைய மகிமை, இரண்டு பிராகாரங்களிலிருந்தும் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் முதலாம் பிராகாரத்திலிருந்து குறைந்த அளவில்தான் காணப்பட்டது. (10)

திரைச்சீலையினால் பிரிக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப்பெட்டிக்கு நேராக, முன்னால் தூபபீடம் இருந்தது. இந்த தூபபீடத்தின்மீதிருந்த அக்கினி கர்த்தரால் ஒளிர்ந்திருக்கும்படிச் செய்யப்பட்டிருந்தது. பரிசுத்தமான தூபவர்க்கம் இடைவிடாமல் அதின்மீது போடப்பட்டு, அதின் சுகந்தவாசனைமிக்க மேகம் இரவும் பகலும் ஆசரிப்புக்கூடாரத்தை நிரப்பும்படி பேணப்பட்டிருந்தது. அதின் சுகந்த வாசனை ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றி பல கல் தூரத்திற்கு பரவியிருந்தது. ஆசாரியன் தூபகலசத்தைக் கர்த்தருக்கு முன்பாக அசைத்தபோது, அவன் கிருபாசனத்தைப்

பார்த்திருந்தான். அவனால் அதனைக் காணமுடியாமலிருந்தாலும், அது அங்கே இருக்கிறதென்பதை அறிந்திருந்தான். அந்த சுகந்த தூபம் ஒரு மேகத்தைப்போல உயர எழும்பினபோது, கர்த்தருடைய மகிமை கிருபாசனத்தின்மீது இறங்கி, மகா பரிசுத்தஸ்தலம், பரிசுத்தஸ்தலம் இரண்டையும் நிரப்பியிருந்ததினால் ஆசாரியனால் அவனது ஊழியத்தைச் செய்யமுடியாமல், ஆசரிப்புக்கூடாரவாசலில் செயல்படமுடியாதவனாக நின்றிருந்தான். (11)

ஆசாரியன், அவனால் பார்க்கமுடியாமலிருந்த கிருபாசனத்தை நோக்கி விசுவாசத்தோடு ஏறெடுத்திருந்த அவனது ஜெபம், பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியஞ்செய்துகொண்டிருக்கும் கிறிஸ்துவை நோக்கி தேவனுடைய ஜனங்கள் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இயற்கையான கண்களினால் அவர்களால் அவர்களுடைய மத்தியஸ்தரைப் பார்க்கமுடியாது. ஆனால் விசுவாசக்கண்களினால் அவர்கள் கிறிஸ்துவைக் கிருபாசனத்திற்குமுன்பாகக் கண்டு, அவருடைய மத்தியஸ்தத்தினால் உண்டாகும் நன்மைகளைக் குறித்துள்ள நிச்சயத்தின்மீது உரிமைபாராட்டி, தங்களுடைய ஜெபங்கைள அவருக்கு நேராக ஏறெடுக்கின்றனர். (12)

பரிசுத்தமான இந்த ஆசரிப்புக்கூடாரப் பகுதிகள், ஒளி உட்புகாவண்ணம், பலகணிகள் இல்லாதவைகளாக இருந்தன. சுத்தப் பொன்னாலான குத்துவிளக்கு செய்யப்பட்டு, அந்த ஆசரிப்புக்கூடாரத்தின் இருபகுதிகளுக்கும் ஒளியைக் கொடுக்கும்படி இரவும் பகலும் இடைவிடாமல் எரியவைக்கப்பட்டிருந்தது. அந்தக் குத்துவிளக்கிலிருந்துண்டான ஒளி, பொன் தகடுகளால் பொதியப்பட்டிருந்த ஆசரிப்புக்கூடாரப் பக்கச்சுவர்ப் பலகைகளின்மீதும், கூடாரத்திலிருந்த பரிசுத்தமான பணிமுட்டுகள், பொன் இழைகளினாலும் வெள்ளி இழைகளினாலும் நெய்யப்பட்டிருந்த கேருபீன்கள், வடிவமைக்கப்பட்டிருந்த பலவிதமான வண்ணங்களைக்கொண்ட திரைச்சீலைகள் ஆகியவைகளின்மீதும் பிரதிபலித்து, ஆசரிப்புக்கூடாரத்தின் இரு பகுதிகளையும் ஒளி வெள்ளத்தால் நிரப்பியிருந்தது. மகிமைமிக்க அதன் தோற்றம் விவரித்துச் சொல்லமுடியாத அளவிற்கு இருந்தது. அதின் அழகு, வசீகரம் ஆகியவைகளைக் காட்டியிருந்த இந்த ஆசரிப்புக்கூடாரப்பகுதிகளின் பரிசுத்தமான மகிமையையும் பரிசுத்தத் தையும் மனோகரச் சூழ்நிலையையும் எந்த மொழியினாலும் விவரித்துச் சொல்லமுடியாது. ஆசரிப்புக்கூடாரத்திற்குள்ளிருந்த பொன் திரைச்சீலைகள் பல நிறங்ககளைப் பிரதிபலிக்கவே, அது வானவில்லின் பல நிறங்களைப் போலத் தோற்றமளித்தது. (13)

பக்திவிநயமிக்க—கவனமுமிக்க ஆயத்தத்திற்குப்பின், வருடத்திற்கு ஒரேஒரு தடவை மட்டுந்தான் பிரதான ஆசாரியனால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கமுடிந்திருந்தது. மகா பரிசுத்தஸ்தலத்தின் பரிசுத்தமான மகத்துவத்தை பிரதான ஆசாரியன் ஒருவனைத்தவிர சாவுக்கேதுவான எந்தக் கண்களாலும் காணமுடியாமலிருந்தது. ஏனெனில் அது, காணக்கூடிய தேவனுடைய மகிமை வாசம்பண்ணின மிகச்சிறப்பான இடமாக இருந்தது. பக்திவிநயமான மௌனத்துடன் மக்கள் பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து திரும்பி வருவதற்காகக் காத்திருந்த நேரத்தில் பிரதான ஆசாரியன் எப்பொழுதும் அதற்குள் பயபக்தியுடன்கூடிய நடுக்கத்துடன் பிரவேசித்திருந்தான். தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதே அவர்களுடைய அக்கறைமிக்க வாஞ்சையாக இருந்தது. கிருபாசனத்திற்குமுன் தேவன் பிரதான ஆசாரியனிடம் உரையாடியிருந்தார். அவன் திரும்பி வருவதற்கு வழக்கத்திற்கும் மாறாக, அதிக நேரத்தை எடுத்துக்கொண்டால், தங்களுடைய பாவங்களின் காரணமாக அல்லது ஆசாரியனின் ஏதோ பாவத்தின் காரணமாக, தேவனுடைய மகிமை அவனைக் கொன்றுவிட்டது என்று அவர்கள் பயந்து, திகிலடைந்திருந்தனர். ஆனால் அவனுடைய வஸ்திரத்தின் ஓரத்திலுள்ள மணிகளின் ஓசை கேட்கும்போது, அவர்கள் மிகப்பெருமளவிற்கு அச்சம் நீங்கினவர்களாக இருந்தனர். பின்னர் அவன் ஜனங்களுக்கு முன்பாக வந்து அவர்களை ஆசீர்வதித்திருந்தான். (14)

ஆசரிப்புக்கூடார அமைப்பின் பணி முடிந்தபின், “ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம் அதின்மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால், மோசே ஆசரிப்புக்கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது.” “இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாம் பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும்பிரத்தியட்சமாகப்பகலில்கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருந்தது.” அவர்களுடைய பயணங்கள் நெடுகிலும் எடுத்துச்செல்லக்கூடியவிதமாக ஆசரிப்புக்கூடாரமானது துண்டுகளாக இணைத்துச் சேர்க்கப்படும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. (15)

## வழிகாட்டும் மேகம்!

இஸ்ரவேல் ஜனங்களின் வனாந்தரத்தினூடான பயணங்கள் நெடுகிலும் கர்த்தர் அவர்களை இயக்கியிருந்தார். அந்த ஜனங்களின் நன்மைக்காகவும் தேவனுடைய மகிமைக்காகவும் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அவர்கள் தங்களுடைய கூடாரங்களை அடித்து, அங்கு தங்கியிருக்கவேண்டும்

என்றிருந்தபோது, மேகஸ்தம்பத்தை நேரடியாக ஆசரிப்புக்கூடாரத்தின்மேல் தாழ்வாகத் தங்கியிருக்கும்படிச் செய்து அதின்மூலமாக தேவன் தமது சித்தத்தை அடையாளப்படுத்திக்காட்டியிருந்தார். அவர்கள் மறுபடியும் பிரயாணம் செய்யவேண்டும் என்று தேவனுக்குத் தோன்றும்வரை அது அங்கு தங்கியிருக்கும். பின்னர் மகிமையின் மேகம் ஆசரிப்புக்கூடாரத்தைவிட்டு உயரே எழுந்தபோது, அவர்கள் மறுபடியும் பயணம் செய்திருந்தனர். (16)

அவர்கள் தங்களுடைய பயணங்களனைத்திலும் பூரணமான கிரமத்தைக் கடைப்பிடித்திருந்தனர். ஒவ்வொரு வம்சத்திற்கும் அவர்களது கோத்திரப்பிதாவின் வம்ச அடையாளத்தைக் குறிக்கின்ற ஒரு சின்னம் அலலது கொடி இருந்தது. ஒவ்வொரு வம்சத்தாரும் தங்களுடைய கொடியின்கீழ் கூடாரங்களை அடிக்கும்படி கட்டளையிடப்பட்டிருந்தனர். அவர்கள் பயணப்பட்டபோது, ஒவ்வொரு வித்தியாசமான வம்சத்தினரும் அவரவருடைய கொடியின்கீழ் கிரமமாக அணிவகுத்துச் சென்றிருந்தனர். ஆசரிப்புக்கூடாரம் நிறுவப்பட்டபோது, அதைச்சுற்றிலும் சற்று தொலையில் தேவன் கட்டளையிட்டிருந்த கிரமத்தில் தங்களுடைய கூடாரங்களை அமைத்திருந்தனர். (17)

ஜனங்கள் பிரயாணம்பண்ணினபோது, உடன்படிக்கைப்பெட்டி அவர்களுக்குமுன் சுமந்துசெல்லப்பட்டிருந்தது. அவர்கள் பாளயத்திலிருந்து பிரயாணம்பண்ணுகிறபோது கர்த்தருடைய மேகம் பகலில் அவர்கள்மேல் தங்கியிருந்தது. பெட்டியானது புறப்படும்போது, மோசே: "கர்த்தாவே எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக; உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக" என்பான். அது தங்கும்போது, "கர்த்தாவே அநேக ஆயிரமானவர்களாகிய இஸ்ரவேலரிடத்தில் திரும்புவீராக" என்று சொல்லுவான். (18) ★

# 20

# வேவுகாரர்களும் அவர்களது செய்தியும்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 158–163)**
**திருவசன ஆதாரம் : எண்ணாகமம் 13:1—14:39.**

தேவன் இஸ்ரவேலர்களுக்குத் தரவுள்ள கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்து வருவதற்காக மனிதர்களை அனுப்பும்படி மோசேக்குக் கட்டளையிட்டார். இந்தக் காரியத்திற்காக ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒரு அதிபதி தேர்ந்தெடுக்கப்படவேண்டியவனாக இருந்தான். அவர்கள் சென்று, தேசத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு, நாற்பது நாட்களுக்குப்பின் திரும்பிவந்து, மோசேக்கும் ஆரோனுக்கும் சபையார் அனைவருக்கும் முன்பாக நின்றார்கள். அந்த தேசத்தின் கனிகளை அவர்கள் மக்களிடம் காட்டினார்கள். அந்த நாட்டினுடைய மிகவும் நல்ல கனிகளை, விளைச்சலின் சான்றுகளாக அவர்கள் கொண்டுவந்து காட்டினபோது, அது ஒரு நல்லதேசம் என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டனர். ஒரு திராட்சைப்பழக்குலை மிகவும் பெரிதாக இருந்ததினால், அதனை ஒரு கோலில் கட்டி, இருவர் தங்கள் தோள்களில் சுமந்துவந்திருந்தனர். அங்கு ஏராளமாக விளைந்திருந்த அத்திப்பழங்களையும் மாதுளம் பழங்களையுங்கூட அவர்கள் கொண்டுவந்திருந்தனர். (1)

அந்த நாட்டின் வளத்தைப்பற்றிப் பேசியபின், அவர்களில் இருவர் தவிர, மற்றவர்கள் அந்த நாட்டைக் கைப்பற்றிக்கொள்ளுவதைப்பற்றி அதைரியமாகப் பேசினார்கள். அந்த தேசத்தில் குடியிருந்த ஜனங்கள் மிகுந்த பலசாலிகள் என்றும், பட்டணங்களெல்லாம் உயர்ந்த மதில் சூழ்ந்தவையாக இருந்தன என்றும், இவை எல்லாவற்றிகும் மேலாக, அங்கு ஏனாக்கின் பிள்ளைகளான இராட்சதர்களைக் கண்டதாகவும் கூறினார்கள். அந்தக் கானானியர் கானானைச்சுற்றி எவ்விதமாக வாழ்ந்துவருகின்றனர்

என்றும், நம்மால் அதைக் கைப்பற்றிக்கொள்ளுவது ஒருபோதும் முடியாத காரியம் என்றும் அவர்கள் கூறினார்கள். (2)

மக்கள் இந்தச் செய்தியைக் கேட்டபோது, அவர்கள் கசப்பான நிந்தனைகளுடன் புலம்பி, தங்களது ஏமாற்றத்தை வெளிக்காட்டினார்கள். இவ்வளவுதூரம்வரை கொண்டுவந்திருந்த தேவனானவர் நிச்சயமாகவே அந்த தேசத்தையும் நமக்குக் கொடுப்பார் என்று அவர்கள் காத்திருக்கவும் இல்லை; காரணம் காணவுமில்லை. மாறாக, தங்களை அதைரியத்திற்கு விட்டுக்கொடுத்தனர். பரிசுத்தமான ஒருவரின் வல்லமையை அவர்கள் மட்டுப்படுத்தி, இதுவரை அவர்களை நடத்தியிருந்த தேவனின்மீது அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை. இதுதான் நமது நம்பிக்கைகளின் முடிவு என்று அவர்கள் மோசேயை நிந்தித்து, ஒருவருக்கொருவர் முறுமுறுத்தனர். நமது நம்பிக்கைகள் அனைத்தின் முடிவாக இது இருக்கிறது; அடைந்துகொள்ளுவதற்காக நாம் எகிப்திலிருந்து பயணம் செய்துகொண்டிருந்த தேசம் இப்படிப்பட்டதாக அல்லவா இருக்கிறது என்றனர். (3)

காலேபும் யோசுவாவும் கூறுவதை மக்கள் கவனிக்கவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அந்த ஜனங்கள் மிகவும் கிளர்ச்சியடைந்தவர்களாக இருந்ததினால், அந்த இரு மனிதர்களாலும் தாங்கள் சொல்லுவதைக் கேட்கும்படியாகக் கட்டளையிடமுடியவில்லை. ஜனங்கள் சற்று அமைதி அடைந்தபின் அவர்களிடம் பேசுவதற்குக் காலேப் துணிந்து, “நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் என்றான். அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ: நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள்.” மேலும், அவர்கள் தங்களுடைய துர்ச்செய்தியை மீண்டும்மீண்டும் கூறுவதில் தொடர்ந்து, “நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம்” என்றார்கள். (4)

### இஸ்ரவேலர்கள் மறுபடியும் முறுமுறுத்தல்!

“அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே

செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும், பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டுவந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள். பின்பு அவர்கள்: நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம், வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்குமுன்பாகவும் முகங்குப்புற விழுந்தார்கள்.” (5)

தங்களால் கைப்பற்றிக்கொள்ளமுடியாத ஒரு தேசத்தைத் தங்களுக்கு வாக்குத்தத்தம்செய்ததின்மூலமாக, மோசே மட்டுமின்றி தேவனும் தங்களுடன் வஞ்சகமாக நடந்துகொண்டார் என்று குற்றச்சாட்டுக்களைக் கூறத்தொடங்கி, அவர்கள் மோசேயையும் தேவனையும் குற்றஞ்சாட்டினார்கள். தங்களை எகிப்து தேசத்திலிருந்து இதுவரை நடத்திவந்துள்ள சர்வவல்லமையுள்ள தேவனின் கரத்தையும், ஒன்றன்பின் ஒன்றாக அற்புதங்களையும் கண்டிருந்தபின்பும், கலகம் செய்யும் அவர்களுடைய ஆவி மிகவும் அதிகமாக எழுந்ததினால் அவைகளை மறந்துவிட்டு, அடிமைகளாக அநேக துன்பங்களை அனுபவித்திருந்த எகிப்திற்கு மீண்டும் திரும்பிச்செல்லுவதற்காக, அவர்களை நடத்தக்கூடிய ஒரு தலைவனைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் தீர்மானம் செய்தனர். மிகவும் பொறுமையுள்ளவனும் பாடுகளை அனுபவிக்கின்ற தலைவனுமாக இருந்த மோசேயைப் புறக்கணித்து, தேவனுக்கெதிராக மிகவும் கசப்பாக முறுமுறுத்து, உண்மையிலேயே அவர்கள் வேறொரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டனர். (6)

அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கும் முன்பாக முகங்குப்புறவிழுந்து, கலகம் செய்யும் ஒரு ஜனத்திடம் தேவன் இரக்கம் காட்டவேண்டுமென்று மன்றாடினார்கள். அவர்களுடைய துன்பமும் வருத்தமும் வார்த்தைகளால் விவரிக்கமுடியாத அளவிற்கு மிகவும் பெரிதாக இருந்தன. அவர்கள் மௌனத்துடன் முகங்குப்புற விழுந்துகிடந்தனர். காலேபும் யோசுவாவும் அவர்களுடைய பெரும் துயரின் அடையாளமாகத் தங்களின் ஆடைகளைக் கிழித்தனர். “இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி: நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக்

கொடுப்பார். கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை என்றார்கள்.” (7)

“அவர்களை காத்திருந்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று.” அதாவது கானானியர் அவர்களுடைய அக்கிரமத்தின் பாத்திரத்தை நிரப்பியிருந்தனர்; தெய்வீகப் பாதுகாப்பு அவர்களை விட்டு நீங்கியிருந்தது; அவர்கள் பூரணமான பாதுகாப்பில் இருப்பதாக உணர்ந்திருந்து, யுத்தத்திற்கு ஆயத்தமில்லாதவர்களாக இருந்தனர். தேவனுடைய உடன்படிக்கையினால் அந்த தேசம் நமக்குக் கையளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைகள் அவைகளின் பலனை அவர்கள்மீது கொண்டுவருவதற்குப்பதிலாக, அவர்கள் தீர்மானம் செய்திருந்த அவர்களுடைய கலகத்தை அதிகப்படுத்தினது. அவர்கள் மிகவும் கோபமடைந்து அவர்களுடைய கோபாவேசத்தில் காலேபும் யோசுவாவும் கல்லெறியப்படவேண்டும் என்று கத்தினார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் அனைவருக்கும் முன்பாகக் கர்த்தர் பயங்கரமான தமது மகிமையை வெளிக்காட்டிக் குறுக்கிடாமல் இருந்திருந்தால், அந்த ஜனங்கள் காலேபையும் யோசுவாவையும் கல்லெறிந்து கொன்றிருப்பார்கள். (8)

## மோசேயின் வேண்டுதல்!

தேவனுடன் உரையாடுவதற்காக மோசே ஆசரிப்புக்கூடாரத்திற்குள் சென்றான். “கர்த்தர் மோசேயை நோக்கி: எதுவரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்? நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்குப் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன் என்றார். மோசே கர்த்தரை நோக்கி: எகிப்தியர் இதைக் கேட்பார்கள், அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களைக் கொண்டுவந்தீரே. கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர் முகமுகமாய்த் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள்; இந்த தேசத்தின் குடிகளும் சொல்லுவார்கள். ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய

கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார்: கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய்விடக் கூடாதேபோனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே" என்றான். (9)

இஸ்ரவேல் அழிக்கப்படவும் தான் இஸ்ரவேலரைவிடப் பெரிய ஜாதியாகவும் ஆவதற்கு மோசே மறுபடியும் மறுத்தான். தேவனுக்குப் பிரியமான இந்த ஊழியக்காரன் இஸ்ரவேலின்மீதுள்ள தனது அன்பு, தன்னைப் படைத்தவரின் மகிமையின்மீதுள்ள அவனுடைய வைராக்கியம் மக்களின் கனம் ஆகியவைகளை வெளிக்காட்டுகிறான். "என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக. உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியேயும், எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்துவந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும்" என்றான். (10)

அப்பொழுது கர்த்தர்: "உன் வார்த்தையின்படியே மன்னித்தேன். பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்குச் செவிகொடாமல், இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சைபார்த்த மனிதரில் ஒருவரும், அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள். என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றிவந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" என்றார். (11)

**மீண்டும் வனாந்தரத்தை நோக்கி ...!**

செங்கடலின் கரைவழியாக வனாந்தரத்திற்குத் திரும்பும்படி கர்த்தர் எபிரெயர்களுக்குக் கட்டளையிட்டார். அந்த நல்ல தேசத்திற்கு மிக அருகில் அவர்கள் இருந்தனர். ஆனால் துன்மார்க்கமான அவர்களுடைய கலகத்தின் காரணமாக, தேவனுடைய பாதுகாப்பை அவர்கள் இழந்துபோனார்கள். காலேபும் யோசுவாவும் கொடுத்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு, அவர்கள் உடனே முன்சென்றிருந்தார்களானால், கர்த்தர் கானான் தேசத்தை அவர்களுக்குக் கொடுத்திருப்பார். ஆனால் அவர்கள் நம்பிக்கையின்மை உடையவர்களாயிருந்து, தேவனுடன் சண்டையிடுகின்ற ஒரு ஆவியைக்காட்டி,

குற்றச்சாட்டுக்களை அவர்களாகவே அவர்கள்மீது கொண்டுவந்து, அதினால் வாக்குப்பண்ணப்பட்டிருந்த தேசத்துக்குள் ஒருபோதும் பிரவேசிக்க முடியாதவர்களானார்கள். வேவுகாரர்கள் கூறியவைகளைக் கேட்டு, அவர்கள் தயங்கிக்கொண்டும் முறுமுறுத்துக்கொண்டும் இருந்ததை அறிந்த அமலேக்கியர்களும் கானானியர்களும் யுத்தஞ்செய்வதற்கு ஆயத்தமானார்கள் என்பதை அறிந்த தேவன், அவருடைய இரக்கத்தினால் செங்கடல்பாதைவழியாக அவர்களைத் திருப்பி அனுப்பினார். (12)

"பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன். நீ அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்னபிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார். இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும். எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைபண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள்" என்றார். (13)

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து கணக்கெடுத்துக்கொண்டு, அவர்களுடைய பிதாக்கள் செய்த கலகம் காரணமாக அவர்களுடைய பிதாக்களனைவரும் செத்துமடியும்வரையும், நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரியவேண்டும் என்று கர்த்தர் அறிவித்தார். இவ்வாறாக, அவர்கள் தங்களுடைய அக்கிரமங்களின் பலன்களை அந்த நாட்டைத் தேடிச்சென்ற நாட்களின்படி ஒரு நாளுக்கு ஒரு வருடம் என்னும் வீதத்தில் நாற்பது வருடங்கள் தங்களுடைய கீழ்ப்படியாமையின் விளைவுகளை சுமக்கவேண்டும் என்று அறிவித்தார். (14)

அவர்களுடைய விக்கிரகாராதனைக்கும் கலகம் செய்யும் முறுமுறுப்புகளுக்கும் தண்டனை அது என்பதை அவர்கள் முற்றிலுமாக உணரவேண்டும். அவைகளின் காரணமாகவே அவர்கள் சம்பந்தப்பட்ட அவருடைய நோக்கத்தை மாற்றவேண்டிய கட்டாயம் அவருக்குண்டானது. இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் காலேபிற்கும் யோசுவாவிற்கும்

வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த தெய்வீக நன்மைகள் முன்னுரிமையாகவே வழங்கப்படும் என்ற வாக்குத்தத்தம் உண்டானது. ஏனெனில், அவர்கள் தேவனுடைய அனுகூலத்தின்மீதும் பாதுகாப்பின்மீதும் நம்பிக்கைவைத்து, எல்லாவற்றையும் விட்டுவிட்டிருந்தனர். (15) ★

# 21

# மோசேயின் பாவம்!

**(மூலநூல் : The Story of Redemption பக்கம் 164–169)**
**திருவசன ஆதாரம் : எண்ணாகமம் 20.**

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தைவிட்டுப் புறப்பட்டபின்பு, எந்த இடத்தில் அவர்கள் சோதிக்கப்பட்டிருந்தார்களோ, அந்த இடத்திற்கு அவர்கள் மறுபடியும் கொண்டுவரப்பட்டனர். கர்த்தர் அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்திருந்தார். அவர்கள் மறுபடியுமாக அந்தக் கன்மலையிடம் வரும்வரை அதிலிருந்து தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அவர்கள் மறுபடியும் தங்களுடைய விசுவாசமாகிய சோதனையைச் சகிப்பார்களோ அல்லது அவருக்கெதிராக முறுமுறுப்பார்களோ என்பதைக் காண்பதற்காக அந்தத் தண்ணீரை கர்த்தர் நிறுத்தியிருந்தார். (1)

எபிரெயர்கள் தாகமுடையவர்களானபோது, தண்ணீரைக் காணாதபோது, பொறுமையற்றவர்கள் ஆனார்கள். நாற்பது வருடங்களுக்கு முன்பு அதே கன்மலையிலிருந்து கர்த்தர் அவர்களுக் காகத் தண்ணீரை ஓடச் செய்த தேவனுடைய வல்லமையை அவர்கள் நினைத்துப்பார்க்கவில்லை. தேவன்மீது நம்பிக்கை வைப்பதற்குப்பதிலாக, அவர்கள் மோசேயின்மீதும் ஆரோனின்மீதும் குற்றஞ்சாட்டி, “எங்கள் சகோதரர் கர்த்தருடைய சந்நிதியில் மாண்டபோது, நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலமாயிருக்கும்” என்றார்கள். அதாவது, கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களின் கலகத்தில் உண்டான வாதையில் செத்துப்போனவர்களில் தாங்களும் இருந்திருக்க விரும்பினார்கள். (2)

“நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை, இந்த வனாந்தரத்திலே கொண்டுவந்தது என்ன?” என்று கோபத்துடன் வினவினார்கள். “விதைப்பும், அத்திமரமும், திராட்சைச்செடியும், மாதளஞ்செடியும், குடிக்கத் தண்ணீரும் இல்லாத இந்த கெட்ட இடத்தில் எங்களைக் கொண்டுவரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன என்றார்கள்.” (3)

“அப்பொழுது மோசேயும் ஆரோனும் சபையாரைவிட்டு, ஆசரிப்புக் கூடார வாசலில் போய், முகங்குப்புற விழுந்தார்கள்; கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது. கர்த்தர் மோசேயை நோக்கி: நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்கு முன்னே, கன்மலையைப்பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார். அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே, கர்த்தருடைய சந்நதியிலிருந்த கோலை எடுத்தான். மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்தார்கள். அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே, கேளுங்கள்! உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீரைப் புறப்படப் பண்ணுவோமோ என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாகப் புறப்பட்டது. சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தன. பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற்போனபடியினால், இந்த சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்.” (4)

இங்கு மோசே பாவம் செய்தான். ஜனங்களின் தொடர்ச்சியான முறுமுறுப்புக்களினால், அவன் களைத்துப்போயிருந்தான். தேவன் கட்டளையிட்டபடி, அவன் அந்தக் கோலை எடுத்துக்கொண்டுசென்று, அந்தக் கன்மலையிடம் பேசுவதற்குப் பதிலாக, அந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்றான். இங்கு மோசே தன் உதட்டைக் கட்டுப்படுத்தாமல், அவசரப்பட்டுப் பேசிவிட்டான். தேவன் தமது வல்லமைக்கு இன்னொரு சான்றினை அவர்களுக்குக்காட்டி, கன்மலையிலிருந்து உங்களுக்குத் தண்ணீரைக் கொண்டுவருவார் என்று அவன் சொல்லவில்லை. தண்ணீரைக்கொண்டுவருவதினால் அவன் ஜனங்களுக்கு முன்பாக, தேவனுக்கு வல்லமையையும் மகிமையையும் கொடுக்காமல், அதினால் மக்கள்முன் தேவனை மேன்மைப்படுத்தத் தவறிவிட்டான். மோசே செய்த இந்தத் தவறுக்காக வாக்குத்தத்தம் செய்த நாட்டிற்குள் அவனைப் பிரவேசிக்க தேவன் அனுமதிக்கமாட்டார். (5)

தேவனுடைய வல்லமையை வெளிக்காட்டுகின்ற இந்த நிகழ்வானது, அந்தச் சந்தர்ப்பத்தை பக்திவிநயமான ஒன்றாக்கி இருந்தது. மக்கள்மீது

அனுகூலமான ஒரு உணர்த்துதலை உண்டுபண்ணக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக அதனை மோசேயும் ஆரோனும் முன்னேறச் செய்திருக்கவேண்டும். மக்களின் முறுமுறுப்புகளின் காரணமாக கலக்கப்பட்டு, மக்களின்மீதுள்ள கோபத்தின் காரணமாக பொறுமையை இழந்து கோபமடைந்து, மக்களை நோக்கி, கலகக்காரர்களே, கேளுங்கள், இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படச் செய்வோமோ? என்று அவன் கூறினான். இவ்விதமாகப் பேசியதில் இஸ்ரவேலரின் முறுமுறுப்புகளை ஒத்துக்கொள்ளுகிறவனாகவும், எகிப்தைவிட்டு அவர்களை நடத்திக்கொண்டுவந்த காரியத்தில் அவன்மீது அவர்கள் குற்றம்சாட்டினது சரி என்றும் ஒத்துக்கொள்ளுபவனுமானான். மோசேயின் பகுதியிலிருந்த இந்தத் தவறைவிட, மக்களிடமிருந்த பெரிய தவறுகளை தேவன் மன்னித்திருந்தார். ஆனால் நடத்திச் செல்லப்பட்டிருந்த மக்களிடம் காணப்பட்டிருந்த பாவத்தைப்போன்ற பாவமானது மக்களை நடத்திச் செல்லுகிற ஒரு தலைவனிடம் காணப்படும் என்றால், அந்தப் பாவத்தை கர்த்தரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. மோசேயின் பாவத்தை மன்னித்து, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டிற்குள் நுழைய அவரால் அவனை அனுமதிக்க முடியவில்லை! (6)

இங்கு கர்த்தர் தமது ஜனங்களுக்குத் தவறில்லாத ஒரு சான்றினைக் கொடுத்தார். அதாவது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அதிசயமான விதத்தில் விடுதலையைக் கொடுத்து, அவர்களைக் கொண்டுவந்தவர், வல்லமைமிக்க தூதனானவர் ஆவார்—மோசே அல்ல! அவர் அவர்களுடைய பயணங்களிலெல்லாம் முன்சென்றிருந்தார். “வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்திற்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, ஒரு தூதனை நான் உனக்கு முன்னே அனுப்புகிறேன். அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது என்றார்.” (7)

தேவனுக்குச் சொந்தமான மகிமையை மோசே எடுத்துக் கொண்டான். எனவே, அவனுக்கு அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்கவேண்டியது அவருக்கு அவசியமாயிற்று. அந்த நடவடிக்கை எகிப்திலிருந்து அவர்களை நடத்தினது மோசே அல்ல—தேவன்தான் என்று, கலகம்செய்யும் இஸ்ரவேலரை என்றென்றைக்குமாக திருப்திப்படுத்த வேண்டியதாக இருந்தது. இஸ்ரவேலர்களின் பயணங்கள் நெடுகிலும் அந்த வல்லமைமிக்க தூதனானவர் முன்சென்று, அதை இயக்கியிருந்தபோது, அந்த ஜனங்களை நடத்திச்செல்லுகின்ற பாரத்தைக் கர்த்தர் மோசேயிடம் ஒப்படைத்திருந்தார்.

தேவன் தமது தூதரின் மூலமாக நடத்திக்கொண்டிருக்கிறார் என்பதை மறப்பதினால் வரும் ஆபத்திற்குள்ளானவர்களாக இருந்து, தேவனுடைய வல்லமைமட்டுமே செய்யக்கூடியதை மனிதனுக்குச் சாற்றுவதற்கு ஆயத்தமாக இருந்ததினால், அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிவார்களா— இல்லையா? என்பதை அறிய அவர்களைச் சோதித்து, மெய்ப்பித்தார். ஒவ்வொரு சோதனையிலும் அவர்கள் தோற்றிருந்தனர். அவர்களது பாதையைத் தமது வல்லமையின் சான்றுகளால் நிறைத்திருந்தவரையும், கரிசனையான அன்பின் அடையாளங்களையும் நம்புவதற்குப்பதிலாக, அவர்மீது அவநம்பிக்கைகொண்டு, அவர்கள் எகிப்தைவிட்டு வெளியேறினதற்கு மோசேயைக் காரணம்காட்டி, தங்களுக்குண்டான தீங்குகளுக்கெல்லாம் மோசேதான் காரணம் என்று அவனைக் குற்றப்படுத்தியிருந்தனர். மோசே அவர்களுடைய முரட்டாட்டங்களையெல்லாம் நன்கு தெரியக்கூடியவிதமான பொறுமையினால் சகித்திருந்தான். ஒரு சமயத்தில், அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து கொல்லப்போவதாகவும் அறிவித்தனர். (8)

## கடினமான தண்டனை!

அந்த தேசத்திற்குள் செல்லவிடாதபடி மோசேயைத் தடை செய்வதின் மூலமாக, மோசேதான் எங்களைக் கானானுக்குள் கொண்டுவந்தான் என்ற உணர்த்துதலை அவர்களுடைய மனங்களில் இருந்து நீக்கினார். கர்த்தர் மோசேயை மிகவும் அதிகமாக உயர்த்தியிருந்தார். அவர் தமது மகத்தான மகிமையை அவனுக்கு வெளிக்காட்டியிருந்தார். அவர் அவனைத் தமது பரிசுத்த தன்மைக்கு அருகில், மலைக்கு அழைத்துச்சென்று, ஒரு மனிதன் தனது சிநேகிதனுடன் பேசுவதுபோல் அவனுடன் பேசுவதற்காகத் தம்மைத் தாழ்த்தினார். அவர் தமது சித்தம், கட்டளைகள், பிரமாணங்கள் ஆகியவைகளை ஜனங்களுடன் மோசேயின்மூலமாக பேசித் தொடர்புகொண்டிருந்தார். இவ்விதமாக, தேவனால் உயர்த்தப்பட்டு கனப்படுத்தப்பட்டிருந்த அவன், பெரிய தவறைச் செய்திருந்தான். மோசே தனது பாவத்திற்காக மனம் வருந்தி, தன்னை தேவனுக்கு முன்பாக மிகவும் தாழ்த்தினான். தனது பாவத்திற்கான மனவருத்தத்தை அவன் எல்லா இஸ்ரவேலருக்கும் விவரித்தான். அவன் தன்னுடைய பாவத்தின் பலனை மறைக்கவில்லை. மாறாக, தேவனுக்குத் செலுத்தவேண்டிய மகிமையைச் செலுத்தத் தவறிவிட்டதினால், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் அவர்களை நடத்திச்செல்ல அவனுக்கு முடியாமற்போய்விட்டது என்று அவர்களிடம் கூறினான். அவன் செய்த இந்தத் தவறு, தேவனால் சீர்படுத்தப்படவேண்டிய அளவிற்கு அவ்வளவு பெரிதாக இருந்தால், அவர்களுடைய தவறுகளுக்காக தேவன் அவர்களைச் சந்தித்ததற்கெல்லாம்

அவர்கள் மோசேயைக் குற்றப்படுத்தி அவனுக்கு விரோதமாக மீண்டும் மீண்டும் முறுமுறுத்ததை, தேவன் எப்படிப் பார்ப்பார் என்று கேட்டான். (9)

தன்னுடைய ஜனங்களுக்கு மத்தியில் தேவனுடைய பெயரைப் பெரிதுபடுத்திக் காட்டுவதற்குப் பதிலாக, மோசே தான்தான் கன்மலையிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்ததாக மக்கள் நினைக்கும்படியான உணர்த்துதலை இந்த ஒரே ஒரு நிகழ்ச்சியில் அனுமதித்தான். மோசே ஒரு சாதாரண மனிதனாக இருந்தானென்றும், அவன், அவனைவிட பலமுள்ளவராக இருந்த தேவகுமாரனுடைய நடத்துதலையும் வழிகாட்டுதலையும் பின்பற்றியிருந்தான் என்ற விஷயத்தையும், தேவன் இப்பொழுது தமது ஜனங்களிடம் முடிவு செய்வார். இந்தக் காரியத்தில் அவர் அவர்களைச் சந்தேகமில்லாதவர்களாக இருக்கும்படி விட்டுவிடுவார். எங்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிறதோ, அங்கு அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது! தேவனுடைய மகத்துவத்தின் சிறப்பான பார்வையில், மோசே மிகவும் அதிகமான ஆதரவை உடையவனாக இருந்தான், மிக ஏராளமான விதத்தில் தேவனுடைய ஒளியும் மகிமையும் அவனுக்குள் பதிக்கப்பட்டிருந்தது. கர்த்தர் அவன்மீது பிரகாசிக்கச்செய்திருந்த அவரது மகிமையின் ஒளி அவரது மக்களின்மீது பிரதிபலிக்கும்படி செய்யப்பட்டிருந்தது. அனைவரும் அவர்களுக்குக் கிடைக்கப்பெற்றிருந்த சலுகைகளையும் ஒளியையும் நன்மைகளையும் அனுசரித்தே நியாயம் விசாரிக்கப்படுவார்கள். (10)

பொதுவாக, பின்பற்றுவதற்குத் தகுதியானவிதத்தில் காணக்கூடிய சுபாவத்தை உடைய மனிதர்களின் பாவங்கள், குறிப்பாக தேவனுக்கு விரோதமானதாக இருக்கிறது. அவை சாத்தான் வெற்றி அடைவதற்குக் காரணமாகின்றன. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய தோல்விகளினால், தேவதூதர்கள் புண்படுத்தப்படுகின்றனர். அநீதி யானவர்கள் தங்களை தேவனுக்கு எதிராக உயர்த்துவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கிறது. கர்த்தர் தாமே சிறப்பான விதத்தில் மோசேயை நடத்தியிருந்து, பூமியில் உள்ள ஒருவரும் காணாத விதத்தில் அவருடைய மகிமையை அவனுக்கு வெளிப்படுத்தியிருந்தார். இயற்கையில் அவன் பொறுமை இல்லாதவனாக இருந்தான். ஆனால் தேவ கிருபையை உறுதியாகப் பற்றிக்கொண்டு, பரலோகத்திலிருந்துள்ள ஞானம் தேவையென்று தாழ்மையாக மன்றாடி, அவன் தனது பொறுமையின்மையை மேற்கொண்டான்; எனவே, பூமியிலுள்ள மனிதர்கள் எல்லாரிலும் மோசே சாந்தமானவனாக இருந்தான் என்றும், தாழ்மையான மனிதன் என்றும் தேவனாலும் அழைக்கப்பட்டான். (11)

மேரிபாவின் பாறையிலிருந்து தண்ணீரைக் கொண்டுவருகின்ற நேரத்தில், ஆரோன் மோசேயுடன் சேர்ந்து பாவம்செய்ததினால்,

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள் அவன் பிரவேசிக்கக் கூடாது என்று கர்த்தர் கூறியிருந்ததினால், ஓர் மலையின்மீது அவன் மரித்துப்போனான். மக்கள் ஆரோனின் சரீரத்திற்காக மிகப் பெரிய சடங்குசெய்து, விக்கிரக ஆராதனை என்னும் பாவமாகிய குற்றத்திற்கு உள்ளாகாமல் இருப்பதற்காக, மோசேயும் ஆரோனின் குமாரரும் சேர்ந்து அவனை (ஓர்) மலையில் அடக்கம் செய்தார்கள். (12) ★

# 22

# மோசேயின் மரணம்!

**(மூலநூல் : The Story of Redemption பக்கம் : 170–174)**
**திருவசன ஆதாரம் : உபாகமம் 31–34.**

மோசே விரைவில், மரிக்கவிருந்தான்; அவன் தனது மரணத்திற்கு முன், ஜனங்கள் அனைவரையும் கூட்டிச்சேர்த்து, எபிரெயர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்துள்ள அவர்களின் பயணங்கள் முழுவதையும்பற்றி அவர்களுக்கு விவரிக்கவும் அவர்கள்மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்த அவர்களுடைய பிதாக்களின் பெரிய மீறுதல்கள் அனைத்தையும், அதனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாதபடி அவர்கள் தடைசெய்யப்பட்டதையும் அவர்களுக்குக் கூறும்படி அவன் கட்டளையிடப்பட்டிருந்தான். கர்த்தருடைய வார்த்தையின்படியே அவர்களுடைய பிள்ளைகள் பெரியவர்களாகி இருந்தனர். கானான் தேசத்தைக் கைப்பற்றிக்கொள்ளுகின்ற வாக்குத் தத்தம் அவர்களிடத்தில் நிறைவேறவேண்டியதாக இருந்தது.கற்பனைகள் கொடுக்கப்பட்டிருந்தபோது, இந்தப் பிள்ளைகளில் அநேகர் சிறுவர்களாக இருந்தனர். அந்த நிகழ்சிசியின் மகத்துவத்தைப்பற்றி அநேகர் ஞாபகமில்லாதவர்களாக இருந்தனர். மற்றவர்கள் வனாந்திரத்தில் பிறந்தவர்களாக இருந்தனர். அவர்கள் மோசேக்குக் கொடுக்கப்பட்டிருந்த நியாயப்பிரமாணங்கள், கற்பனைகள், கட்டளைகள் நியாயத்தீர்ப்புகள் ஆகியவைகளைப்பற்றிய அறிவு இல்லாதவர்களாக இருந்து, அவைகளுக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியம் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடாமலிருக்கும்படி, நியாயப் பிரமாணங்களையும் மற்ற கற்பனைகளையுங்குறித்தும், அவைகள் கொடுக்கப்பட்ட சூழ்நிலைகள்பற்றியும், திரும்பவும் இஸ்ரவேலருக்கு விளக்கும்படி மோசே கட்டளையிட்டான். மோசே, அவனிடத்தில் தேவனால் கொடுக்கப்பட்டிருந்த பிரமாணங்கள், நியாயத்தீர்ப்புக்கள் அனைத்தையும் ஒரு புத்தகத்தில் எழுதி, அவருடைய போதனைகள் அனைத்தையும் அவை கொடுக்கப்பட்ட விதத்தில் பதிவுசெய்திருந்தான். அவன் அவர்களுக்காகச்

செய்திருந்த அற்புதங்கள் அனைத்தையும் இஸ்ரவேல் மக்களின் முறுமுறுப்பு அனைத்தையும் விசுவாசத்துடன் பதிவு செய்திருந்தான். அவர்களது முறுமுறுப்புக்களினால் அவன் மேற்கொள்ளப்பட்டதையும் மோசே பதிவு செய்திருந்தான். (1)

மக்களனைவரும் அவன்முன் கூடியிருந்தனர். அவர்களுடைய கடந்தகாலத்தின் வரலாற்று நிகழ்ச்சிகளை அவன் எழுதிவைத்த புத்தகத் திலிருந்து, வாசித்துக் காண்பித்தான். அவர்கள் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருந்தால், தேவனிடத்திலிருந்து உண்டாகக்கூடிய ஆசீர்வாதங்களையும், அவர்கள் கீழ்ப்படியாதவர்களாக இருந்தால், அவர்கள்மீது வரக்கூடிய சாபங்களையும் வாசித்துக் காண்பித்தான். (2)

அவர்களுடைய கலகங்களுக்காக கர்த்தர் பலமுறை அவர்களை அழிப்பதற்கு முற்பட்டார்; ஆனால் அவன் அவர்களுக்காக மிகுந்த அக்கரையுடன் வேண்டுதல் செய்ததினால், அவர் அவர்களை அழிக்காமல் விட்டுவைத்தார். பார்வோனுக்கு முன்பாகவும் எகிப்து தேசம் முழுவதிலும் கர்த்தர் செய்த அற்புதங்களை அவன் அவர்களுக்கு நினைப்பூட்டினான். “கர்த்தர் செய்த மகத்துவமான கிரியைகளை எல்லாம் உங்கள் கண்கள் அல்லவோ கண்டது. ஆகையால் நீங்கள் பலப்படும்படிக்கும், நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்துக்குள் பிரவேசித்து அதைச் சுதந்தரிக்கும்படிக்கும், கர்த்தர் உங்கள் பிதாக்களுக்கும் அவர்கள் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீங்கள் நீடித்து வாழும்படிக்கும் இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற கற்பனைகளை எல்லாம் கைக்கொள்ளுவீர்களாக” (உபாகமம் 11:7 –9) என்றான். (3)

விக்கிரகாராதனைக்குள் வஞ்சிக்கப்பட்டுப்போகாமலிருக்கும்படி, மோசே, குறிப்பாக இஸ்ரவேல் ஜனங்களை எச்சரித்திருந்தான். தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி, அவன் அவர்களுக்கு அக்கரையுடன் கட்டளையிட்டான். அவர்கள் அன்பும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களாக இருப்பதை மெய்ப்பிப்பார்களானால், பூரணமான அன்புடன் கர்த்தரை சேவிப்பார்களானால், ஏற்ற வேளையில் அவர்களுக்கு அவர் மழையைக் கொடுப்பார். அது உணவுப்பொருட்களின் பெருக்கத்திற்கும் ஆடுமாடுகளின் அதிகரிப்புக்கும் காரணமாக அமையும். சிறப்பானதும் மேலானதுமான சலுகைகளை அவர்கள் அனுபவித்துத் தங்களுடைய எதிரிகளின்மீது வெற்றிபெறுவார்கள். (4)

மிகுந்த அக்கரைமிக்க விதத்திலும், அவர்களை உணர்த்தக் கூடிய விதத்திலும் மோசே இஸ்ரவேலர்களுக்குப் போதித்தான். அவர்களுடன்

பேசுகின்ற கடைசிச் சந்தர்ப்பம் இதுதான் என்பதை அவன் அறிந்திருந்தான். தேவன் அவனுக்குக் கொடுத்திருந்த எல்லா விதிகளையும், சட்டங்களையும், பிரமாணங்களையும், நியாயத் தீர்ப்புக்களையும், கட்டளைகளையும் அவன் ஒரு புத்தகத்தில் எழுதி முடித்து, அத்துடன் பலிமுறை விதிகளையும் ஒரு புத்தகத்தில் எழுதி முடித்தான். அந்தப் புத்தகத்தை ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியம் செய்பவர்களிடம் அவன் கொடுத்து, உடன்படிக்கைப்பெட்டிக்குப் பக்கத்தில் அது பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். ஏனெனில், தேவனுடைய தொடர்ச்சியான கவனம் அந்த உடன்படிக்கைப்பெட்டியின்மீது இருந்தது. மோசேயின் இந்தப் புத்தகம் பாதுகாக்கப்படவேண்டியதாக இருந்தது. அந்தப் புத்தகத்தைத் திருப்பிப் பார்க்கும்படியான விவகாரம் ஏதாவது உண்டானால், அப்பொழுது இஸ்ரவேலின் நியாயாதிபதிகளால் அது கவனிக்கப்படும். தவறு செய்யும் மக்கள், தேவன் அவசியப்படுபவைகளைத் தங்களுடைய காரியங்களுக்கு இசைவாகக் கூறிக்கொள்ளக்கூடிய நிலைமை உள்ளது. எனவேதான், மோசேயின் புத்தகம் எதிர்காலக் குறிப்புக்காக மிகவும் பரிசுத்தமான இடத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. (5)

மோசே தனது கடைசிப் போதனைகளை ஒரு வல்லமைமிக்க தீர்க்கதரிசன அறிவுரையுடன் முடித்தான்; அது துயரமிக்கதாகவும் மேலான மொழிநயம் உடையதாகவும் இருந்தது. தேவனுடைய ஏவுதலினால் அவன் இஸ்ரவேலின் கோத்திரங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆசீர்வதித்தான். அவனுடைய வார்த்தைகளின் முடிவில் தேவனுடைய மகத்துவங்களையும் இஸ்ரவேலின் மேன்மையையும்பற்றி அதிகமாகப்பேசி, அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய பலத்தைப் பற்றிக்கொள்ளுவார்களானால், அவை எப்பொழுதும் தொடரும் என்றான். “பின்பு மோசே மோவாபின் சமனான வெளிகளிலிருந்து எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினான்; அப்பொழுது கர்த்தர் அவனுக்கு, தாண் மட்டுமுள்ள கீலேயாத் தேசம் அனைத்தையும், நப்தலி தேசம் அனைத்தையும், எப்பிராயீம், மனாசே என்பவர்களின் தேசத்தையும், கடைசிச் சமுத்திரம் வரைக்குமுள்ள யூதா தேசமனைத்தையும், தென்புறத்தையும், சோவார் வரைக்குமுள்ள பேரீச்சமரங்களின் பட்டணம் என்னும் ஊர் முதற்கொண்டு, எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமமான பூமியையும் காண்பித்தார், அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான். இதை உன் கண் காணும்படிச்செய்தேன்; ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்துபோவதில்லை என்றார். அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே,

மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான். மோசே மரிக்கிறபோது, நூற்றிருபது வயதாயிருந்தான்; அவன் கண் இருளடையவுமில்லை; அவன் பெலன் குறையவுமில்லை"–உபாகமம் 34:1–7. (6)

**மோசேயின் மரணமும் உயிர்த்தெழுதலும்!**

பிஸ்காவின் மலை உச்சிக்கு மோசேயுடன் சேர்ந்து ஒருவரும் போவது தேவனுடைய சித்தமாக இருக்கவில்லை. தேவ சமுகத்திலும், பரலோக தேவதூதர்களுக்கு முன்பாகவும், பிஸ்காவின் கொடுமுடியில் மிக உயரமான ஒரு இடத்தில் அவன் நின்றான். அவன் திருப்தியடையும்வரை, கானான் தேசம் முழுவதையும் பார்த்துவிட்டு, களைப்படைந்த ஒரு இராணுவவீரன் இளைப்பாறுவதற்காகப் படுத்துக்கொள்ளுவதுபோல் கீழே படுத்துக்கொண்டான். நித்திரை அவன்மீது வந்தது; ஆனால் அது மரணத்தின் நித்திரையாக இருந்தது. தேவதூதர்கள் அவனது உடலை எடுத்துப் பள்ளத்தாக்கில் அடக்கம்செய்தார்கள்; அவனுடைய சரீரத்தைப்பற்றி, மக்கள் விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டுவிடக்கூடாது என்பதற்காக, அவன் இரகசியமாகப் புதைக்கப்பட்டான். (7)

தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வதில், மோசேயின்மீது வெற்றி அடைந்துவிட்டதற்காக சாத்தான் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான். இந்த மீறுதலின் காரணமாகவே மோசே மரணத்தின் ஆளுகைக்கு உட்பட்டான். கன்மலையிலிருந்து தண்ணீரை வரவழைக்கின்ற அந்த ஒரு காரியத்தில், அவன் தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரத் தவறாதவனாக இருந்து, விசுவாசத்தில் தொடர்ந்திருந்தால் அவனது வாழ்க்கை அந்த ஒரே மீறுதலினால் கறைபடாததாக இருந்திருந்தால், வாக்குத்தத்தம்செய்யப்பட்டிருந்த தேசத்தில் அவன் பிரவேசித்திருப்பான். மரணத்தைக் காணாதவனாக பரலோகத்திற்கு மறுரூபமடைந்திருப்பான், அவனைப் புதைத்த மிகாவேல் என்ற கிறிஸ்து என்பவர் தமது தூதர்களுடன் பரலோகத்திலிருந்து கீழே வந்து, சிறிது காலம் கல்லறையில் இருந்த அவனை, அதன்பின் உயிர்ப்பித்து, பரலோகத்திற்கு அழைத்துச்சென்றார். (8)

கிறிஸ்துவும் அந்த தேவதூதர்களும் கல்லறையை சமீபித்தபோது, அவனுடைய உடலைக் கொண்டுசெல்லுவதற்காக யாராவது வரக்கூடும் என்று நினைத்து, அதைத் தடுப்பதற்காக சாத்தானும் அவனுடைய தூதர்களும் அந்தக் கல்லறைக்கருகில் காவல் செய்திருந்தனர். கிறிஸ்துவும் அவருடைய

தூதர்களும் அருகில் நெருங்கினபோது, அவர்கள் சமீபிப்பதற்குச் சாத்தான் தடைசெய்தான்; ஆனால் கிறிஸ்துவின் மகிமையினாலும் வல்லமையினாலும் அவரது தூதர்களின் வல்லமையினாலும் மகிமையினாலும் அவர்கள் பின்னிட்டு விழுவது தவிர்க்க முடியாததானது. மோசேயின் ஒரு மீறுதலின் காரணமாக சாத்தான் அவனது சரீரத்தின்மீது உரிமைபாராட்டினான்; ஆனால் கிறிஸ்து பொறுமையுடன் அவரது பிதாவைச் சுட்டிக்காட்டி, “பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயுடைய சரீரத்தைக்குறித்து பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல், கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்.” மோசே மனம் வருந்தியிருக்கிறான்; அவனது சுபாவத்தின்மீது எந்தவிதமான கறையும் இல்லை. பரலோகத்தில் உள்ள புத்தகத்தில் அவனுடைய பெயர் எந்தவிதமான கறையும் இல்லாததாக இருக்கிறது என்பதை அவர் அறிந்திருப்பதாகக் கூறினார்; அதற்குப்பின், சாத்தான் உரிமைபாராட்டியிருந்த மோசேயுடைய சரீரத்தை, அவர் உயிரோடெழுப்பினார்! (9)

கிறிஸ்து மறுரூபமடைந்தபோது, மறுரூபமாக்கப்பட்டிருந்த மோசேயும் எலியாவும் கிறிஸ்துவுக்கு உண்டாகக்கூடிய பாடுகளைப் பற்றிப் பேசுவதற்கும் தேவனுடைய அருமையான குமாரனுக்கு தேவனுடைய மகிமையைக் கொண்டுசெல்லவும், கிறிஸ்துவுடன் பேசவும் ஆனுப்பப்பட்டனர். மோசே, தேவனால் மிகவும் அதிகமாக கனப்படுத்தப்பட்டிருந்தான். ஒரு மனிதன் தனது சிநேகிதனுடனே பேசுவதுபோல் மோசே தேவனுடன் முகமுகமாகப் பேசும் சலுகையைப் பெற்றிருந்தான். எந்த ஒரு மனிதனுக்கும் ஒருபோதும் காட்டப்பட்டிராத விதத்தில், தேவன் அவரது மேன்மையான மகிமையை அவனுக்கு வெளிக்காட்டியிருந்தார். (10) ★

# 23

# கானான் தேசத்திற்குள் பிரவேசித்தல்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 175–182)**
**திருவசன ஆதாரம் : யோசுவா 1: 3–6, 23, 24**

மோசேயின் மரணத்திற்குப்பின் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு இஸ்ரவேல் ஜனங்களை நடத்த யோசுவா தலைவனாக இருந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் அலைந்துதிரிந்த காலத்தின் அதிகமான பகுதியில் யோசுவா, மோசேக்குப் பிரதான மந்திரியாக இருந்தான். மோசேயின்மூலமாக தேவன் செய்திருந்த ஆச்சரியமான காரியங்களையும் மக்களுடைய சுபாவத்தையும் அவன் மிக நன்றாக அறிந்திருந்தான். வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த நாட்டை, சுற்றிப்பார்த்துவரும்படி அனுப்பப்பட்டிருந்த பன்னிரண்டு வேவுகாரர்களில் அவனும் ஒருவனாக இருந்தான். அந்த தேசத்தின் வளத்தைப்பற்றிய விசுவாசமிக்க கணக்கை, திரும்பி வந்தபின் விவரித்து தேவனுடைய பலத்தினால் அந்த தேசத்திற்குச் சென்று, அதனைக் கைப்பற்றிக்கொள்ளலாம் என்று கூறிய இருவரில் அவனும் ஒருவனாக இருந்தான். இந்தப் பதவிக்கு அவன் நல்ல தகுதியைப் பெற்றவனாக இருந்தான். தேவனுடைய கற்பனைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிவதில் அவன் விசுவாசமுள்ளவனாக இருந்ததால், கர்த்தர் மோசேயுடன் இருந்ததுபோல அவனுடனும் இருப்பதாகவும், கானான் தேசம் அவனுக்கு எளிதில் வெற்றியாகக் கிடைத்துவிடும் என்றும், கர்த்தர் யோசுவாவிற்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். கானான் தேசத்துக்கு இந்த ஜனங்களை எப்படி நடத்துவது என்பதில் அவன் மிகுந்த கவலை உள்ளவனாக இருந்தான். ஆனால் இந்த தைரியமூட்டுதல் அவனுடைய பயங்களையெல்லாம் நீக்கிவிட்டது. (1)

மூன்றுநாள் பயணத்திற்கு இஸ்ரவேலர் அனைவரும் ஆயத்தமாக வேண்டும் என்று யோசுவா கூறி, யுத்தம்செய்யக்கூடிய புருஷர்கள்

அனைவரும் யுத்தம்செய்யச் செல்லவேண்டும் என்றான். “அப்பொழுது அவர்கள் யோசுவாவிற்குப் பிரதியுத்திரமாக: நீர் எங்களுக்குக் கட்டளையிடுகிறதையெல்லாம் செய்வோம்; நீர் எங்களை அனுப்புமிடமெங்கும் போவோம். நாங்கள் மோசேக்குச் செவிகொடுத்ததுபோல, உமக்கும் செவிகொடுப்போம்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் மாத்திரம் மோசேயோடே இருந்ததுபோல, உம்மோடும் இருப்பாராக. நீர் எங்களுக்குக் கட்டளையிடும் சகல காரியத்திலும் உம்முடைய சொல்லைக் கேளாமல், உம்முடைய வாக்கிற்கு முரட்டாட்டம் பண்ணுகிற எவனும் கொலைசெய்யப்படக்கடவன்; பலங்கொண்டு திடமனதாய் மாத்திரம் இரும் என்றார்கள்.” இஸ்ரவேல் ஜனங்கள் யோர்தானைக் கடந்துசெல்லுதல் ஆச்சரியமானதொன்றாக இருக்கவேண்டியதாக இருந்தது. யோசுவா ஜனங்களை நோக்கி: உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான். பின்பு யோசுவா ஆசாரியர்களை நோக்கி: நீங்கள் உடன்படிக்கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோங்கள் என்றான்; அப்படியே உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு ஜனங்களுக்கு முன்னே போனார்கள். கர்த்தர் யோசுவாவை நோக்கி: நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு, இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன் என்றார் (யோசுவா 3:5–7). (2)

## யோர்தானைக் கடத்தல்!

ஆசாரியர்கள் தேவனுடைய கற்பனைகள் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப்பெட்டியைச் சுமந்தவர்களாக ஜனங்களுக்கு முன்பாகச் செல்லவேண்டியவர்களாக இருந்தனர். யோர்தானின் கரையிலிருந்த நீரின்மீது அவர்களது பாதங்கள் பட்டதும், தண்ணீர் மேலிருந்துவருவது நின்றுபோயிற்று. உடன்படிக்கைப்பெட்டியைச் சுமந்தவர்களாக ஆசாரியர்கள் கடந்துசென்றனர். இது தெய்வீகப் பிரசன்னத்தின் அடையாளமாக இருந்தது. இஸ்ரவேலர்கள் பின்சென்றார்கள். ஆசாரியர்கள் யோர்தான் நதியின் பாதி தூரத்தைக் கடந்தபோது, இஸ்ரவேலர்கள் அனைவரும் யோர்தானின் அக்கரையைச் சென்றடையும்வரை, ஆசாரியர்கள் உடன்படிக்கைப்பெட்டியைச் சுமந்தவர்களாக, நடு ஆற்றில் அதன் தரையின்மீது நிற்கும்படி கட்டளையிடப்பட்டனர். இங்கு, இப்பொழுதுள்ள இஸ்ரவேலரின் தலைமுறையினர், நாற்பது வருடங்களுக்கு முன்னால், செங்கடலின் தண்ணீர் பிரிக்கப்பட்டு, நிறுத்தப்பட்டதைக் கண்டிருந்தனர். இப்பொழுது யோர்தானின் தண்ணீரும் அதே வல்லமையினால் நிறுத்தப்பட்டிருக்கிறது

என்னும் மன உணர்த்துதலை அடைந்தனர். இவர்களில் அநேகர் செங்கடலைக் கடக்கும்போது, சிறுபிள்ளைகளாக இருந்தனர். இப்பொழுது அவர்கள் யுத்த மனிதர்களாக, யுத்தத்திற்கான ஆயுதம் அணிந்தவர்களாக, யோர்தானைக் கடந்துசெல்கின்றனர். இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரும் யோர்தானைக் கடந்தபின், ஆசாரியர்களை ஆற்றிலிருந்து கரையேறும்படி கட்டளையிட்டான். உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்திருந்த ஆசாரியர்கள் ஆற்றிலிருந்து வெளியே வந்து, உலர்ந்த தரையின்மீது நின்றபோது, யோர்தானின் தண்ணீர் முன்போலவே மறுபடியும் கரைபுரண்டு ஓடிற்று. இஸ்ரவேல் ஜனங்களுக்காக ஆச்சரியமான விதத்தில் நடத்தப்பட்ட இந்த அற்புதம் அவர்களுடைய விசுவாசத்தைப் பெரிய அளவிற்கு அதிகரித்தது. இந்த ஆச்சரியமான அற்புதம் மறக்கப்பட்டுப்போகாமல் இருப்பதற்காக, எபிரெயர்கள் ஆற்றைக் கடந்துசென்றுகொண்டிருந்த நேரத்தில், ஆசாரியர்கள் உடன்படிக்கைப்பெட்டியைச் சுமந்தவர்களாக, நடு ஆற்றில் நின்றிருந்தபோது, ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்து, ஆசாரியர்களின் பாதங்கள் எங்கு நின்றிருந்தனவோ, அவைகளுக்கருகிலிருந்து, ஒரு கல்லைத் தங்களுடைய தோள்களின்மீது சுமந்துகொண்டுவந்து, கில்கால் என்னுமிடத்தில் ஒரு நினைவுச்சின்னத்தை ஸ்தாபித்து, இஸ்ரவேலர்கள் உலர்ந்த தரையின் வழியாக யோர்தானைக் கடந்துசென்றனர் என்பதை நினைவில் வைப்பதற்காகச் செய்யும்படியும், கர்த்தர் யோசுவாவிற்குக் கட்டளைகொடுத்தார். ஆசாரியர்கள் யோர்தானைவிட்டு மேலேவந்தபின், தேவன் அவருடைய வல்லமைமிக்க கரத்தை நீக்கவே, மீண்டும் தண்ணீர் அதன் பாதையில் கரைபுரண்டு பாய்ந்துசென்றது. எமோரியர்களின் அரசர்கள் அனைவரும் கானானியர்களின் அரசர்கள் அனைவரும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாகக் கர்த்தர் தண்ணீரை நிறுத்தினார் என்று கேள்விப்பட்டபோது, அவர்களுடைய இருதயங்கள் கரைந்துபோயின; இஸ்ரவேலர்கள் மோவாபியர்களின் இரு அரசர்களைக் கொலைசெய்திருந்தனர். உயர்ந்து கரைபுரண்டு ஒடியிருந்த யோர்தானில், அவர்களுக்குண்டான அற்புதமான பாதை அவர்களைப் பெரும் திகிலினால் நிரப்பியது; அதன் பின், யோசுவா வனாந்தரத்தில் பிறந்த சகல ஆண்பிள்ளைகளுக்கும் விருத்தசேதனம் செய்தான். இந்தச் சடங்காச்சாரத்திற்குப்பின் அவர்கள் எரிகோவின் சமவெளியில் பஸ்கா பண்டிகையைக் கொண்டாடினார்கள். கர்த்தர் யோசுவாவை நோக்கி: இன்று எகிப்தின் நிந்தையை உங்கள்மேல் இராதபடிக்குப் புரட்டிப்போட்டேன் என்றார்; அதினால் அந்த ஸ்தலம் இந்நாள்வரைக்கும் கில்கால் என்னப்படுகிறது. (3)

அஞ்ஞான மார்க்கத்தினர் கர்த்தரையும் அவரது ஜனங்களையும் நிந்தித்திருந்தனர். ஏனெனில் எகிப்தைவிட்டுப் புறப்பட்டபின் விரைவில்

கைப்பற்றிக்கொள்ள எதிர்பார்த்திருந்த எபிரெயர்கள், கானான் தேசத்தைத் தங்களது உடைமையாகக் கொண்டிருக்கவில்லை. இவ்வளவு காலமாக வனாந்தரத்தில் அலைந்து திரிந்ததினால் அவர்களுடைய எதிரிகள் வெற்றி அடைந்தவர்களாக இருந்தனர். கர்த்தரால் அவர்களைக் கானான் தேசத்திற்குள் நடத்திச்செல்ல முடியவில்லையென்று அறிவித்து, தங்களை தேவனுக்கு எதிராக உயர்த்தியிருந்தனர். இப்பொழுதோ எபிரெயர்கள் உலர்ந்த தரைவழியாக யோர்தானைக் கடந்திருந்தனர்; அதற்குப் பின்னர் அவர்களது எதிரிகளால் எபிரெயர்களை நிந்திக்கமுடியவில்லை. (4)

இந்த நேரம்வரை மன்னா தொடர்ந்து பொழிந்திருந்தது. இஸ்ரவேலர்கள் கானானைக் கைப்பற்றி, அந்த நிலத்தின் பலனைப் புசிக்கக்கூடிய நிலைமை உண்டாகி இருந்ததினால், இப்பொழுது அவர்களுக்கு மன்னா தேவை இல்லாததாக இருந்தது; எனவே மன்னா பொழிவது நின்றுவிட்டது. (5)

## கர்த்தருடைய சேனையின் தலைவன்!

தேவப்பிரசன்னம் சிறப்பாகத் தன்னுடன் இருக்கவேண்டும் என்பதற்காக யோசுவா, இஸ்ரவேலின் சேனையைவிட்டு விலகிச்சென்று, தியானமும் ஜெபமும் செய்தான். அப்பொழுது மிகப்பெரிய உருவத்தை உடைய, யுத்தம்செய்கின்ற ஆயுததாரியின் உடையைத் தரித்திருந்த ஒரு மனிதனை அவன் கண்டான். அவன் தன் பட்டயத்தைத் தன் கையில் பிடித்திருந்தான். அவன் இஸ்ரவேலின் சேனையைச் சேர்ந்த ஒருவனாக இருப்பதாக யோசுவாவினால் இனம் கண்டுகொள்ள முடியவில்லை; இருந்தபோதிலும், அவன் ஒரு எதிரியின் தோற்றத்தை உடையவனாக இருப்பதுபோல் காணப்படவில்லை! அவனுடைய ஆர்வத்தில் யோசுவா அவனைச் சமீபித்து: நீர் எங்களைச் சேர்ந்தவரோ எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று கேட்டான். அதற்கு அவர்: நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன் என்றார்; அப்பொழுது யோசுவா தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்துகொண்டு, அவரை நோக்கி: என் ஆண்டவர் தமது அடியேனுக்குச் சொல்லுகிறது என்னவென்று கேட்டான். அப்பொழுது கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார்; யோசுவா அப்படியே செய்தான். அவர் ஒரு சாதாரண தூதனாக இருக்கவில்லை. அவர் வனாந்தரத்தில் இரவில் அக்கினி ஸ்தம்பத்திலும் பகலில் மேகஸ்தம்பத்திலும் தம்மை மறைத்துக்கொண்டு, இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தில் நடத்தியிருந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாக இருந்தார். அவரது பிரசன்னத்தினால் அந்த இடம்

பரிசுத்தமடைந்திருந்தது; எனவே, யோசுவா அவனது பாதரட்சைகளைக் கழற்றிப்போடவேண்டும் என்று கட்டளையிடப்பட்டான். (6)

அதன்பின் எரிகோவைக் கைப்பற்றிக்கொள்ள என்ன விதமான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி, கர்த்தர் யோசுவாவிற்குப் போதனைசெய்தார். யுத்த வீரர்கள் அனைவரும் ஆறுநாட்களிலும் தினமும் ஒருநாளில் ஒருதடவை அந்த நகரத்தைச் சுற்றிவரவேண்டும்; ஏழாம்நாளில் அவர்கள் ஏழுதடவை சுற்றிவரவேண்டும் என்றார். (7)

## எரிகோவைக் கைப்பற்றுதல்!

அந்தப்படியே யோசுவா ஆசாரியரை அழைத்து: உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு போங்கள்; தொனிக்கும் ஏழு எக்காளங்களையும் ஏழு ஆசாரியர்கள் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகப் பிடித்துக்கொண்டு போகக்கடவர்கள் என்று சொல்லி, ஜனங்களை நோக்கி: பட்டணத்தைச் சுற்றி நடந்துபோங்கள்; யுத்தசன்னத்தரானவர்கள் கர்த்தரின் பெட்டிக்குமுன் நடக்கக்கடவர்கள் என்றான். எக்காளங்களை ஊதுகிற ஆசாரியர்களுக்குமுன் யுத்த சன்னத்தரானவர்கள் நடந்தார்கள்; பெட்டி அவர்களுக்குப் பின்சென்றது; யோசுவா ஜனங்களை நோக்கி: நான் சொல்லும் நாள்மட்டும், நீங்கள் ஆர்ப்பரியாமலும் உங்கள் வாயினால் சத்தம் காட்டாமலும் இருங்கள்; உங்கள் வாயிலிருந்து ஒரு பேச்சும் புறப்படவேண்டாம்; ஆர்ப்பரியுங்கள் என்று உங்களுக்கு நான் சொல்லும் நாளிலே, ஆர்ப்பரிப்பீர்களாக என்று கட்டளையிட்டிருந்தான். (8)

எபிரெய சேனை பூரணமான ஒழுங்குடன் நடந்துசென்றது. முதலில் போர்க்கவசங்களை அணிந்தவர்களாக சிறந்த வீரர்களின் கூட்டம் முன்சென்றது. அவர்கள் தங்களுடைய வல்லமையை இப்பொழுது பயன்படுத்தாமல், விசுவாசம் மட்டும் உள்ளவர்களாக, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டும்; அதற்கு அடுத்தபடியாக, ஏழு ஆசாரியர்கள் எக்காளங்களைப் பிடித்தவர்களாக பின்சென்றனர்; அதற்குப்பின், பொன்னினால் மின்னிக்கொண்டிருந்த உடன்படிக்கைப் பெட்டி சென்றது. மகிமையின் ஒரு ஒளிவட்டம் அதனைச் சூழ்ந்திருந்தது. ஆசாரியர்கள் தங்களுடைய பரிசுத்தமான பணியின் மேன்மையைக் காட்டும் விதத்தில், விலை உயர்ந்த ஊழியத்திற்கான உடைகளை அணிந்தவர்களாக உடன்படிக்கைப்பெட்டியைச் சுமந்துசென்றிருந்தனர். இஸ்ரவேலின் பெரும்சேனை அதினதின் கோத்திரத்தின் சின்னத்துடன் கிரமமாகச் சென்றிருந்தது; இவ்வாறாக, அவர்கள் அந்தப் பட்டணத்தைத் தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டியுடன் சுற்றியிருந்தனர். பலமிக்க அந்த

சேனையின் காலடி ஓசையைத் தவிர, வேறு ஒலி எதுவும் கேட்கப்படவில்லை. எக்காளங்களின் பக்திவிநயமான ஓசை குன்றுகளின் மீது எதிரொலித்து, எரிகோ பட்டணத்தில் மீண்டும் ஒலித்தது. (9)

பட்டணத்துக் காவல்காரர்கள் ஆச்சரியத்துடனும் அபாய உணர்வுடனும் இஸ்ரவேல் சேனையின் நடத்தை ஒவ்வொன்றையும் அதிகாரத்தில் இருந்தவர்களிடம் தெரிவித்தார்கள். இந்தச் செயலின் பொருள் என்ன என்பதை அவர்களால் கூறமுடியாது. யோசுவாவைத் தங்களின் தலைமையாகக்கொண்டு, அவனைப் பின்பற்றிச்செல்லும் இஸ்ரவேலின் சேனையையும் பக்திவிநயமிக்க ஆசாரியர்களின் மதிப்புவாய்ந்த தோற்றத்தையும் உடன்படிக்கைப்பெட்டியினுடைய அலங்காரத்தையும் அவர்கள் கண்டபோது, இந்தவிதமாக அந்தப் பட்டணத்தைக் கைப்பற்றும் ஆலோசனையில் சிலர் திகைத்திருந்தபோது, சிலர் பரிகசித்துச் சிரித்தனர். நாற்பது வருடங்களுக்குமுன், அவர்களுக்கு முன்பாகச் செங்கடல் பிளந்ததை அவர்கள் நினைக்கின்றனர்; யோர்தான் வழியாக அவர்களுக்குப் பாதை இப்பொழுது ஆயத்தம் செய்யப்பட்டிருந்ததையும் அவர்கள் நினைக்கின்றார். விளையாட்டாக இருப்பதற்கில்லாமல், அவர்கள் மிகவும் திகிலடைந்தவர்களாகவே உள்ளனர். அந்த நகரத்தின் வாசலை அடைத்துவைப்பதிலும், பலமிக்க வீரர்கள் அந்த வாசலைக் காவல் செய்வதிலும் மிகவும் தீவிரமானவர்களாக இருந்தனர். இஸ்ரவேலின் சேனை ஆறுநாட்களாக அந்தப் பட்டணத்தைச் சுற்றிவந்தது; ஏழாவதுநாளில் அவர்கள் எரிகோவை ஏழுதடவை சுற்றி வந்தார்கள்; இந்த ஜனங்கள் எப்போதும்போல மௌனமாயிருக்கும்படி கட்டளையிடப்பட்டிருந்தனர். எக்காளச் சத்தம் மட்டுமே கேட்கப்பட வேண்டியதாக இருந்தது. ஜனங்கள் கவனித்திருந்து வழக்கத்திற்கு மாறாக, எக்காள நெடுந்தொனியை ஒலிக்கும்போது, எல்லோரும் சேர்ந்து ஆர்ப்பரிக்கவேண்டியவர்களாக இருந்தனர்; ஏனெனில், தேவன் அந்தப் பட்டணத்தை அவர்களுக்குக் கொடுத்திருந்தார். ஏழாம்நாளில் அதிகாலமே கிழக்கு வெளுக்கும்போது எழுந்திருந்து, அன்றைய தினத்தில் மட்டுமே பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவந்தார்கள். எக்காளங்களை ஊதுகையில், ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; எக்காளச் சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழங்குகையில், அலங்கம் இடிந்துவிழுந்தது; உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நேராகப் பட்டணத்தில் ஏறி, பட்டணத்தைப் பிடித்து, பட்டணத்திலிருந்த, புருஷரையும் ஸ்திரீகளையும் வாலிபரையும் கிழவரையும் ஆடுமாடுகளையும் கழுதைகளையும் பட்டயக்கருக்கினால் சங்காரம்பண்ணினார்கள். (10)

கானானின்மீதான வெற்றிக்கான புகழை, இஸ்ரவேலர்கள் தங்களுக்குச்

சூட்டிக்கொள்ளக்கூடாது என்பதைக்காட்ட தேவன் விரும்பினார். கர்த்தருடைய சேனையின் தலைவர் எரிகோவை மேற்கொண்டார். அவரும் அவருடைய தூதர்களும் இந்த வெற்றியில் ஈடுபட்டிருந்தனர். யோசுவாவும் அவனுடைய சேனைகளும் எரிகோவிற்குள் பிரவேசிப்பதற்கான ஆயத்தம்செய்வதற்காக, எரிகோவின் மதிலை விழச்செய்யும்படி பரலோக சேனைகளுக்குக் கிறிஸ்து கட்டளையிட்டார். ஆச்சரியமான இந்த அற்புதத்தினால், இஸ்ரவேலர்களின் எதிரிகளைக் கீழ்ப்படுத்துவதில் தேவனுக்கிருந்த வல்லமையின்மேல், இந்த ஆச்சரியமிக்க அற்புதத்தினால் விசுவாசம் வைக்கும்படிக்குச் செய்தது மட்டுமன்றி, அவர்களுடைய பழைய நம்பிக்கையின்மையைக் கடிந்துகொண்டுமிருந்தார். (11)

எரிகோ பட்டணமானது இஸ்ரவேலின் சேனைகளையும் பரலோகத்தின் தேவனையும் அவமதித்திருந்தது! ஒரு நாளுக்கு ஒரு தடவை என்னும் வீதத்தில், இஸ்ரவேலின் சேனை எரிகோவைச்சுற்றி நடந்திருந்தபோது, அவர்கள் அபாய உணர்வை அடைந்தனர்; ஆனால் அவர்கள் தங்களுடைய பலமிக்க தற்காப்பின்மீதும், அவைகளின் உறுதிமிக்கதும் உயரமான மதில்களை எண்ணியும், எந்தவிதமான தாக்குதலையும் தங்களால் தடுக்கமுடியுமென்று அவர்கள் நிச்சயமாக நம்பியிருந்தனர்; ஆனால் அவர்களுடைய உறுதியான மதில்கள் திடீரென்று அசைந்து பயங்கரமான இடிமுழங்கங்களின் ஓசையைப் போன்ற ஓசையுடன் கீழேவிழுந்தபோது, அவர்கள் திகிலினால் செயலிழந்து, எதிர்ப்பைக்காட்ட முடியாதவர்களானார்கள்! (12)

### ஒரு ஞானமிக்க அர்ப்பணிப்புள்ள தலைவன்—யோசுவா!

யோசுவாவின் சுபாவத்தில் எவ்விதமான கறையும் இருக்கவில்லை. அவன் ஒரு ஞானமிக்க தலைவனாக இருந்தான். அவனது வாழ்க்கை முற்றிலுமாக தேவனுக்கென்று பிரதிஷ்டைசெய்யப்பட்டதாக இருந்தது. அவன் மரணமடைவதற்கு முன்னால், மோசே காட்டியிருந்த உதாரணத்தைப்போல, எபிரெய ஜனங்களைக் கூடிவரச்செய்து, வனாந்தரத்தில் அவர்கள்செய்த பயணங்களையும், அவர்களிடம் தேவன் இடைப்பட்டிருந்த விபரங்களையும் அவர்களுக்குத் திரும்ப எடுத்துக் கூறினான். பின்பு, மிகுந்த திறமையுடன் அவன் அவர்களிடம் யுத்தம் செய்ததையும், மோவாபிய அரசன் எபிரெயர்களைச் சபிக்கும்படி பிலேயாமை அழைத்ததையும், தேவன் பிலேயாமுக்குச் செவிகொடுக்க சித்தமில்லாததினாலே அவன் உங்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தான் என்றான்; அதன்பின், அவன் கர்த்தரை சேவிக்கிறது உங்களுக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்தில்

உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியர்களின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான். (13)

அப்பொழுது ஜனங்கள் பிரதியுத்தரமாக: வேறே தேவர்களைச் சேவிக்கும்படி கர்த்தரைவிட்டு விலகுகிற காரியம் எங்களுக்குத் தூரமாயிருப்பதாக என்றார்கள். ஜனங்கள் யோசுவாவுடன் அவர்களது உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொண்டார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தரையே சேவித்து, அவர் சத்தத்திற்கே கீழ்ப்படிவோம் என்றார்கள். அவர்களுடைய உடன்படிக்கையை, யோசுவா மோசேக்குக் கொடுக்கப் பட்டிருந்த கட்டளைகளும் பிரமாணங்களும் அடங்கிய புஸ்தகத்தில் எழுதினான். யோசுவா, சகல இஸ்ரவேலர்களாலும் நேசிக்கப்பட்டு மதிக்கப்பட்டிருந்தான். அவனுடைய மரணத்திற்காக அவர்களால் அதிகமாக துக்கம் கொண்டாடப்பட்டது. (14) ★

# 24

# தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 183–195)**
**திருவசன ஆதாரம் : 1 சாமுவேல் 3:6; 2 சாமுவேல் 6.**

உடன்படிக்கைப்பெட்டி பரிசுத்தமான ஒரு பெட்டியாக இருந்தது. அதற்குள் பத்துக் கற்பனைகள் வைக்கப்படவேண்டியதாக இருந்தது. இந்தப் பிரமாணம் தேவனுடைய பிரதிநிதியாக இருந்தது. உடன்படிக்கைப் பெட்டி இஸ்ரவேலின் மகிமையாகவும் பலமாகவும் கருதப்பட்டிருந்தது; அதன்மீது தேவப்பிரசன்னம் இரவும் பகலும் தங்கியிருந்தது! (1)

அதற்கு முன்பாக ஊழியம்செய்திருந்த ஆசாரியர்கள் பரிசுத்தமான அந்த ஊழியத்திற்கென்று அர்ப்பணம்செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் ஒரு மார்ப்பதக்கத்தை அணிந்திருந்தனர். அது, பலவிதமான விலைமதிப்புமிக்க கற்களாலான கரைகளை உடையதாக இருந்தது. தேவனுடைய நகரத்தின் அஸ்திவாரமான கற்களாக இருந்த அதே வகையான கற்களால் அது செய்யப்பட்டிருந்தது. அந்தக் கரைக்குள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பெயர்களும் இருந்தன. அவை விலைமதிப்புமிக்க கற்களில் பொறிக்கப்பட்டு, அந்தக் கற்கள் பொன்னிற்குள் பதிக்கப்பட்டிருந்தன. இது ஒரு விலையுயர்ந்ததும் அழகானதுமான வேலைப்பாடாக இருந்து, ஆசாரியர்களுடைய தோள்களிலிருந்து தொங்கவிடப்பட்டு மார்பை மூடியிருந்தது. மேலும் அந்த மார்புப் பதக்கங்களின் வலது இடது பக்கங்களில் பெரிய இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டு, அவை மிகப் பிரகாசமாக ஒளிவீசிக் கொண்டிருந்தன. கடினமான காரியங்கள் நியாயாதிபதிகளிடம் கொண்டுவரப்பட்டிருந்தபோது, அவர்களால் அவைகளைப்பற்றி முடிவுசெய்ய முடியாமலிருந்தபோது, அவைகள் ஆசாரியர்களிடம் விசாரிக்கப்பட்டிருந்தன; அவர்கள் தேவனிடம் விசாரித்திருந்தனர். தேவன் அவர்களுக்குப்

பதிலளித்திருந்தார். அவர் அதனை அனுகூலம் செய்திருந்தால், வலது பக்கத்திலிருந்த விலை மதிப்புமிக்க கல்லின் மீது ஒளிவட்டம் தங்கியிருந்தது; அவர் அதனை மறுத்திருந்தபோது, ஒரு ஆவி அல்லது மேகம் இடது பக்கத்திலிருந்து விலைமதிப்புமிக்க கல்லின்மேல் படிந்திருந்ததுபோல் காணப்பட்டிருந்தது. யுத்தம் செய்வதற்குச் செல்லுவதைப்பற்றி அவர்கள் தேவனிடம் விசாரித்துதிருந்தபோது, வலது பக்கத்திலிருந்த விலைமதிப்புமிக்க கல்லின்மீது ஒளி வட்டமிட்டபோது, அதன்பொருள்: "போகலாம்" வெற்றி அடைவீர்கள் என்பதாக இருந்தது. இடது பக்கத்துக் கல் மேகத்தால் இருண்டபோது, அதன் பொருள்: நீங்கள் போகவேண்டாம்; நீங்கள் வெற்றி அடையமாட்டீர்கள் என்பதாக இருந்தது. (2)

வருடத்திற்கு ஒரு முறை பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்று, திகைப்பூட்டும் தேவ சமுகத்தில் ஊழியம் செய்திருந்தபோது, அவன் தேவனிடம் விசாரித்திருந்தான். கேட்கக்கூடிய குரலில் அப்பொழுது தேவன் அவனுக்குப் பதிலளித்திருந்தார். தேவன் ஒரு குரலினால் பதிலளிக்காதபோது, பரிசுத்தமான ஒளிக்கதிர்கள் வலது பக்கத்திலிருந்த கேருபீனின்மீது ஒளியையும் மகிமையையும் தங்கியது. அப்போது, அந்தக் காரியம் அங்கீகரிக்கப்பட்டதாக—அனுகூலமானதாக இருந்தது. அவர்களுடைய வேண்டுகோள்கள் மறுக்கப்பட்டிருந்தபோது, இடது பக்கத்திலிருந்த கேருபீனின்மீது, மேகம் தங்கியிருந்தது. (3)

உடன்படிக்கைப் பெட்டியின் பயணங்கள் எல்லாவற்றிலும் நான்கு பரலோக தேவதூதர்கள் எப்போதும் அதனுடன் சென்றிருந்தனர். அவர்கள் அந்த உடன்படிக்கைப் பெட்டிக்கு உண்டாகக்கூடிய சகலவிதமான ஆபத்துக்களிலிருந்தும் அதனைக் காப்பதற்காகவும், உடன்படிக்கைப்பெட்டி சம்பந்தமான பணி ஏதாவது இருந்தால், அதனை முழுவதுமாகச் செய்யவும், உடன் சென்றிருந்தனர். உடன்படிக்கைப்பெட்டி யோர்தானுக்கு வந்தபோது பரலோக தேவதூதர்கள் பின்தொடர, தேவகுமாரனாகிய இயேசு அதற்கு முன்சென்றார். அவருடைய சமுகத்தில் தண்ணீர்கள் நின்றுபோயின. சகல இஸ்ரவேலர்களும் யோர்தானைக் கடந்துதீருகின்றவரை உடன்படிக்கைப் பெட்டியுடன் ஆசாரியர்கள் யோர்தான் நதியின் தரையில் நின்றிருந்தனர். அவர்களுடன் கிறிஸ்துவும் தேவதூதர்களும் அங்கு நின்றிருந்தனர். யோசுவாவும் இஸ்ரவேலர்களும் எரிகோவைச் சுற்றிவந்திருந்தபோது, கிறிஸ்துவும் தேவதூதர்களும் அவர்களுடனிருந்து, முடிவில் அதின் பெரிய மதில்களை இடிந்துவிழச்செய்து, எரிகோ பட்டணத்தை இஸ்ரவேலர்களிடம் கொடுத்தனர். (4)

## ஏலியின் அலட்சியத்தின் விளைவுகள்!

ஏலி பிரதான ஆசாரியனாக இருந்தபோது, அவனது குமாரர்களை ஆசாரியர் பதவிக்கு உயர்த்தினான். ஏலி ஒருவன் மட்டுமே வருடத்திற்கு ஒரு தடவை, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தான். அவனுடைய குமாரர்கள் ஆசரிப்புக்கூடார வாசலில் மிருகங்களைப் பலியிடுவதிலும் பலிபீடத்தினருகில் ஊழியம் செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். இந்தப் பரிசுத்தமான ஊழியத்தை அவர்கள் தொடர்ந்து தவறாகச் செய்திருந்தனர். அவர்கள் சுயநலம், பிறர் பொருள்களின்மீது ஆசை, பெருந்திண்டி, கீழ்த்தரமான செயல்கள் ஆகியவைகளை உடையவர்களாக இருந்தனர். குடும்ப ஒழுங்கினைக் குற்றகரமான விதத்தில் அலட்சியம் செய்ததற்காக தேவன் ஏலியைக் கடிந்திருந்தார். ஏலி தன் குமாரர்களைக் கடிந்திருந்தான். ஆனால் கட்டுப்படுத்தவில்லை. அவர்கள் ஆசாரிய ஊழியத்தில் வைக்கப்பட்டபின், இஸ்ரவேல் ஜனங்களின் காணிக்கைகளில் அவனது மகன்களின் ஏமாற்றுகின்ற நடத்தையை ஏலி கேள்விப்பட்டான்; அதுவுமின்றி, அவர்கள் தேவப்பிரமாணங்களைத் துணிகரமாக மீறுவதையும், இஸ்ரவேலரைப் பாவஞ்செய்யவைப்பதற்குக் காரணமான அவர்களது முரட்டுத்தனமான நடவடிக்கைகளையும் அவன் கேள்விப்பட்டான். (5)

ஏலியின் அலட்சியத்தின் காரணமாக, ஏலியின் வீட்டின்மேல் கர்த்தர் கொண்டுவர இருந்த நியாயத்தீர்ப்புகளைக் கர்த்தர் சாமுவேல் என்னும் சிறுவன் மூலமாக அறியச் செய்திருந்தார். “கர்த்தர் சாமுவேலை நோக்கி: இதோ, நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச் செய்வேன்; அதைக்கேட்கிற ஒவ்வொருவனுடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும். நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும், அவன்மேல் அந்நாளிலே வரப்பண்ணுவேன்; அதைத் தொடங்கவும் அதை முடிக்கவும் போகிறேன். அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்புச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன். அதினிமித்தம் ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒருபோதும் பலியினாலாவது காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை என்று ஏலியின் குடும்பத்தைக் குறித்து ஆணையிட்டிருக்கிறேன் என்றார்” (1 சாமுவேல் 3:11–14). ஏலியின் மகன்களின் மீறுதல்கள் பரிசுத்தமான தேவனுக்கு அவ்வளவு துணிகரமானவையாக—அவமானப்படுத்துகிறவையாக இருந்தன. அப்படிப்பட்ட துணிகரமான மீறுதல்களுக்கு எந்தப் பலியும் பரிகாரம் உண்டுபண்ணாது. பாவகரமான இந்த ஆசாரியர்கள், தேவகுமாரனைச் சுட்டிக்காட்டியிருந்த பலிகளைப் பரிசுத்தக்குலைச்சலாக்கியிருந்தனர்.

அவர்களுடைய தேவதூஷணமான நடத்தையினால், எல்லாப் பலிகளின் புண்ணியமும் எதிலிருந்து பெறப்பட்டிருந்ததோ, அந்தப் பாவ நிவாரணத்தின் இரத்தத்தை அவர்கள் தங்களது காலின்கீழிட்டு மிதித்திருந்தனர். (6)

கர்த்தருடைய வார்த்தையை சாமுவேல் ஏலியிடம் கூறினான். அப்பொழுது ஏலி: "அவர் கர்த்தர்; அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக என்றான். தேவன் கனவீனம்பண்ணப்பட்டிருக்கிறார் என்பதையும், அவன் பாவம்செய்திருந்தான் என்பதையும் ஏலி அறிந்திருந்தான். பாவகரமான தனது அலட்சியத்திற்காக தேவன் தன்னைத் தண்டித்துக்கொண்டிருக்கிறார் என்று அவன் தேவனிடம் தன்னை ஒப்புவித்தான். சாமுவேலின் மூலமாக ஏலிக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய வார்த்தை இஸ்ரவேலர் அனைவருக்கும் தெரியவந்தது. இப்படிச் செய்வதின்மூலமாக தனது கடந்தகால அலட்சியத்தை ஓரளவுக்குச் சீர்செய்துகொள்ள அவன் எண்ணினான். ஏலியின்மீது கூறப்பட்ட பொல்லாங்கு அதிக காலத்திற்குத் தாமதம்பண்ணப்படவில்லை. (7)

இஸ்ரவேலர்கள் பெலிஸ்தியர்களுடன் போர்செய்து தோற்றுப் போனார்கள். நாலாயிரம்பேர் கொலைசெய்யப்பட்டனர்; எபிரெயர்கள் பயந்தார்கள்; மற்ற தேசத்தினர் இந்தத் தோல்வியை அறிந்தால் அவர்களும் எபிரெயர்களுடன் போர்செய்வதற்கு தைரியமடைவார்கள் என்பதை, அவர்கள் அறிந்திருந்தனர். உடன்படிக்கைப்பெட்டி அவர்களுடன் இல்லாததே அவர்களுடைய தோல்விக்குக் காரணம் என்று இஸ்ரவேலின் மூப்பர்கள் முடிவுசெய்தனர்; எனவே, உடன்படிக்கைப்பெட்டியைச் சீலோவிலிருந்து கொண்டுவர ஆட்களை அனுப்பினார்கள். அவர்களுடன் உடன்படிக்கைப் பெட்டி இருந்தபோது, அவர்கள் யோர்தனைக் கடந்துவந்ததையும் எரிகோவின்மீது அடைந்த வெற்றியையுங்குறித்து எண்ணினார்கள். எனவே எதிரிகளின்மீது வெற்றிபெறுவதற்கு உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுவருவதுதான் தேவை என்று அவர்கள் முடிவுசெய்தனர். அவர்களுடைய பலம் தேவனுடைய பிரதிநிதியாக இருந்த உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவது என்பதை அவர்கள் உணரவில்லை. தேவனுடைய பிரமாணங்களை மீறிக்கொண்டிருந்த ஆசாரியர்களான ஓப்னியும் பினெகாசும் பரிசுத்தமான உடன்படிக்கைப் பெட்டியுடன் இருந்தனர். இந்தப் பாவிகள் உடன்படிக்கைப் பெட்டியை இஸ்ரவேலின் பாளயத்திற்கு நடத்தினார்கள். யுத்த மனிதர்களின் நம்பிக்கை அவர்களிடம் திரும்பி வந்தது. அவர்கள் வெற்றியைப்பற்றின நிச்சயமுடையவர்களானார்கள். (8)

**உடன்படிக்கைப்பெட்டி எடுத்துச்செல்லப்பட்டது!**

"கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி பாளயத்தில் வருகிறதுபோது, இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத்தக்கதாக, மகா ஆர்ப்பரிப்பாய்ச் சத்தமிட்டார்கள். அவர்கள் ஆர்ப்பரிக்கிற சத்தத்தைப் பெலிஸ்தர் கேட்டபோது: எபிரெயருடைய பாளயத்தில் இந்த மகா ஆர்ப்பரிப்பின் சத்தம் என்ன என்றார்கள்; பின்பு கர்த்தரின் பெட்டி பாளயத்தில் வந்தது என்று அறிந்துகொண்டார்கள். தேவன் பாளயத்தில் வந்தார் என்று சொல்லப்பட்டபடியினால், பெலிஸ்தர் பயந்து, ஐயோ, நமக்கு மோசம் வந்தது; இதற்குமுன் ஒருபோதும் இப்படி நடக்கவில்லையே. ஐயோ, அந்த மகத்துவமான தேவர்களின் கைக்கு நம்மைத் தப்புவிப்பவர் யார்? எகிப்தியரைச் சகலவிதமான வாதைகளினாலும் வனாந்தரத்திலே அடித்த தேவர்கள் இவர்கள்தானே. பெலிஸ்தரே, திடங்கொண்டு புருஷரைப்போல நடந்துகொள்ளுங்கள்; எபிரெயர் உங்களுக்கு அடிமைகளாக இருந்ததுபோல, நீங்களும் அவர்களுக்கு அடிமைகளாகாதபடிக்கு, புருஷராயிருந்து, யுத்தம்பண்ணுங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் யுத்தம்பண்ணினார்கள். இஸ்ரவேலர் முறிந்து, அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்; மகா பெரிய சங்காரம் உண்டாயிற்று; இஸ்ரவேலிலே முப்பதினாயிரம் காலாட்கள் விழுந்தார்கள். தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டது; ஏலியின் இரண்டு குமாரர்களாகிய ஓப்பனியும் பினெகாசும் மாண்டார்கள்"–1 சாமுவேல் 4: 5–11. இந்தப் பெட்டிதான் இஸ்ரவேலின் தெய்வம் என்று பெலிஸ்தியர்கள் நினைத்தார்கள். வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின ஜீவனுள்ள தேவன் அவருடைய பிரமாணத்தைச் சீனாய் மலையில் வைத்துக்கொடுத்து, அதற்குக் கீழ்ப்படிதல் அல்லது மீறுதல் ஆகியவைகளுக்குத்தக்கதாக ஆசீர்வாதத்தை அல்லது சாபத்தைக் கொடுத்திருந்தார். (9)

இஸ்ரவேலின் பெரிய தோல்வி உண்டானது. ஏலி நடுங்கும் இருதயத்துடன் யுத்தக்களத்திலிருந்து வரும் செய்தியைப் பெற்றுக் கொள்ளுவதற்காக வழியருகில் உட்கார்ந்திருந்தான். பெலிஸ்திய சேனை உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துச்சென்று, அதனை மாசுபடுத்தக்கூடும் என்று அவன் பயந்திருந்தான். ஒரு செய்திக்காரன் இராணுத்திலிருந்து சீலோவிற்கு ஓடிச்சென்று, ஏலியின் இரண்டு குமாரர்களும் கொலை செய்யப்பட்டுவிட்டனர் என்று ஏலியிடம் தெரிவித்தான். இதனை ஓரளவுக்கு அமைதியுடன் தாங்கிக்கொள்ள அவனால் முடிந்தது; ஏனெனில் அதனை எதிர்பார்ப்பதற்கான காரணம் இருந்தது; ஆனால் அந்தச் செய்திக்காரன் அத்துடன், உடன்படிக்கைப்பெட்டியும் பிடிபட்டுப்போனது என்று கூறினவுடன், அவன் தனது மனவேதனையினால் தடுமாறி, தன் இருக்கையிலிருந்து

பின்பக்கமாக விழுந்து, மரித்துப்னோனான். அவன் அவனுடைய குமாரர்களின்மீது உண்டான தேவகோபத்தில் பங்குபெற்றான். அவர்களுடைய மீறுதல்களில் அவன் பெருமளவுக்குக் குற்றமுள்ளவனாக இருந்தான்; ஏனெனில் அவன் அவர்களைக் கட்டுப்படுத்துவதில், குற்றம் கூறக்கூடிய அளவிற்கு அலட்சியமாயிருந்தான். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி, பெலிஸ்தியர்களால் கைப்பற்றப்பட்டது. இஸ்ரவேலின்மீது விழக்கூடியதாக இருந்த பேரழிவு மிகப் பெரிதாகக் கருதப்பட்டது. பினெகாசின் மனைவி தனது மரணத்தருவாயில் பிறந்த குழந்தைக்கு, தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி பிடிபட்டதினால், இஸ்ரவேலின் மகிமை போய்விட்டது என்று பொருள்படும்படி இக்கபோத் என்று பேரிட்டாள். (10)

## பெலிஸ்தியரின் தேசத்தில்!

உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த பிரமாணங்களை அவமதிக்கும் விதத்தில் இஸ்ரவேலர்கள் நடந்துகொண்டிருந்து, அதே நேரத்தில் அவரது பிரசன்னத்தின் அடையாளமாக இருந்த உடன்படிக்கைப் பெட்டியின்மீது நம்பிக்கைவைப்பது எவ்விதம் வீணானது என்பதை இஸ்ரவேலர்களுக்குக் காட்டுவதற்காக, அவர்களுடைய எதிரிகளால் உடன்படிக்கைப்பெட்டி பிடிபட்டுச்செல்லுவதற்கு தேவன் அனுமதித்தார். அவர்களது பெலனும் நம்பிக்கையுமாக உடன்படிக்கைப்பெட்டி இருக்கிறதென்று இஸ்ரவேலர்கள் பெருமைபாராட்டிக்கொண்டிருந்த நேரத்தில், அவர்களிடமிருந்து உடன்படிக்கைப் பெட்டியை நீக்குவதினால், தேவன் அவர்களைக் கீழானவர்களாக்கினார். (11)

இஸ்ரவேலர்களுக்காகப் பெரும் அதிசயங்களைச் செய்து, தங்களுடைய எதிரிகளுக்குப் பயங்கரமான திகிலை உண்டுபண்ணியிருந்த புகழ்வாய்ந்த இஸ்ரவேலர்களின் தெய்வம் என்று எண்ணியிருந்த உடன்படிக்கைப்பெட்டி, அவர்களிடம் வந்துவிட்டதினால் பெலிஸ்தியர்கள் வெற்றிமுழக்கம் செய்தனர். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை அஸ்தோத் என்னுமிடத்தில் இருந்த அவர்களுடைய புகழ்வாய்ந்த தெய்வமாகிய தாகோனைக் கனப்படுத்துவதற்கென்று கட்டப்பட்டிருந்த மிக அலங்காரமான கோவிலில், அவர்களுடைய தெய்வத்திற்குப் பக்கத்தில் வைத்தனர். அந்த தெய்வத்தின் ஆசாரியர்கள் காலையில் கோவிலுக்குள் நுழைந்திருந்தபோது, கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டிக்கு முன்னால், அவர்களுடைய தெய்வமாகிய தாகோன், தலைகுப்புறக் கவிழ்ந்து தரையில் கிடப்பதைக் கண்டு, அவர்கள் திகிலடைந்தார்கள். அவர்கள் தாகோனின் சிலையைத் தூக்கி எடுத்து, மறுபடியும் அதன் ஸ்தானத்தில் அதனை நிறுத்தினார்கள். அவன் (தாகோனின் சிலை) தற்செயலாக விழுந்திருப்பான்

என்று அவர்கள் நினைத்தனர்; ஆனால் மறுநாள் காலையில் முன்போலவே அந்தச் சிலை விழுந்து கிடப்பதையும், தாகோனின் தலையும் இரண்டு கைகளும் உடைபட்டிருப்பதையும் கண்டார்கள். (12)

உடன்படிக்கைப் பெட்டியுடன் சென்றிருந்த தேவதூதர்கள், தேவனாகிய ஜீவனுள்ள தேவன் எல்லாத் தேவர்களுக்கும் மேலானவராக இருக்கிறார் என்றும், அவருக்கு முன்னால், அஞ்ஞான தெய்வங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுமில்லையென்பதையும் காட்டுவதற்காக உணர்வுகளற்ற அந்த தெய்வச் சிலையை, சாஷ்டாங்கமாக விழச்செய்து, அதன்பின் அதனைச் சிதைத்தார்கள். அஞ்ஞான மார்க்கத்தினர், அவர்களுடைய தெய்வமாக இருந்த தாகோனின்மீது மிகுந்த பக்தியை உடையவர்களாக இருந்தனர். அது கெடும்படியாகச் சிதைக்கப்பட்டு, தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டிக்கு முன்னால் முகங்குப்புற விழுந்துகிடப்பதைக் கண்டபோது, அவர்கள் மிகவும் துயரமடைந்து, அதனைப் பெலிஸ்தியர்கள் ஒரு கெட்ட சகுனமாகக் கருதினர். பெலிஸ்தியர்களும் அவர்களது தெய்வங்களனைத்தும் எபிரெயர்களால் கீழ்ப்படுத்தப்பட்டு, அழிக்கப்பட்டுவிடுவார்கள் என்றும், எபிரெயர்களுடைய தேவன், மற்ற எல்லா தேவர்களையும்விட அதிகமான வல்லமை உடையவரென்றும் கருதப்பட்டது. அவர்கள் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை விக்கிரகக் கோவிலிலிருந்து வெளியே எடுத்துவைத்துவிட்டார்கள். (13)

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியைப் பெலிஸ்தியர்கள் ஏழுமாதங்கள்வரை அவர்களிடம் வைத்திருந்தனர். அவர்கள் இஸ்ரவேலரின்மீது வெற்றியடைந்து, தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துச்சென்றிருந்தனர். இந்த உடன்படிக்கைப் பெட்டிக்குள்தான், இஸ்ரவேலருடைய வல்லமையானது இருக்கிறது என்று அவர்கள் யூகித்துக்கொண்டவர்களாக, இனி எப்போதும் பாதுகாப்பாக இருக்கலாம், இஸ்ரவேலின் சேனையைப்பற்றிய பயம் எதுவும் இனிமேல் இல்லையென்று நினைத்துக்கொண்டனர். அவர்களுடைய வெற்றியின் சந்தோஷத்திற்கு நடுவில் தேசமுழுவதிலுமிருந்து ஒரு புலம்பல் கேட்கப்பட்டது. இறுதியில் தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டிதான் இதற்குக் காரணம், எனக்கருதி, அதற்கு மதிப்புக் கொடுக்கப்பட்டது. திகிலுடன் அது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. அந்தப் பாதையெங்கிலும் தேவனிடமிருந்துள்ள அழிவு பின்தொடர்ந்ததினால், இதை என்ன செய்வதென்று அறிந்துகொள்ளுவதில், பெலிஸ்தியர்கள் மிகவும் குழப்பமடைந்தனர். அதனுடன் சென்றிருந்த தேவதூதர்கள் அதற்குண்டாகக்கூடிய அபாயங்கள் அனைத்திலிருந்தும் அதனைக்

காத்திருந்தனர். அந்தப் பெட்டியைத் திறப்பதற்குப் பெலிஸ்தியர்கள் துணியவில்லை; தங்களுடைய தெய்வமாகிய தாகோனுக்கு அப்படிப்பட்ட அழிவு உண்டானதினால், அவர்கள் அதைத் தொடப் பயந்தனர். அவர்கள் ஆசாரியர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் அழைத்து, தேவனுடைய பெட்டியைக்குறித்து, அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று அவர்களிடம் விசாரித்தனர். அந்தப் பெட்டி யாருக்குச் சொந்தமோ, அவர்களிடத்திற்குத் திரும்ப அனுப்பிவிடும்படி, அவர்கள் ஆலோசனை கூறினார்கள்; அதை அனுப்பும்போது, விலையேறப்பெற்ற மீறுதலின் காணிக்கையுடன் அனுப்பும்படி கூறினார்கள். அதனை அங்கீகரிக்க தேவன் விரும்பினால், அவர்கள் சுகப்படுத்தப்படுவார்கள் என்றனர். இஸ்ரவேலருக்கு மட்டுமே சொந்தமாயிருந்த அவருடைய பெட்டியை அவர்கள் எடுத்திருந்ததினால் தேவனுடைய கரம் அவர்கள்மேல் இருந்தது என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். (14)

சிலர் அவ்வாறு செய்ய விருப்பமில்லாதவர்களாக இருந்தனர். அந்தப்பெட்டியைத் திரும்ப அனுப்புவது என்பது மிக அதிகமான கேவலத்தை உண்டுபண்ணக்கூடியது; எனவே, பெலிஸ்தியர்களில் எவனும் பெலிஸ்தியர்களின்மீது சாவை உண்டுபண்ணியிருந்த, இஸ்ரவேலின் தேவனுடைய அந்தப் பெட்டியைப் தன் உயிரை இழக்கும்படித் துணிந்து, அதைத் தொடக்கூடாது என்று அவர்கள் தீர்மானித்தார்கள்; எகிப்தியர்களும் பார்வோனும் செய்ததுபோலச்செய்து, இன்னும் அதிகமான துன்பங்களையும் வாதைகளையும் அவர்கள்மீது வரவழைத்துக்கொள்ளக்கூடாது என்று அவர்களின் ஆலோசகர்கள் அவர்களிடம் வேண்டினார்கள். அவர்களனைவரும் தேவனுடைய பெட்டியை எடுப்பதற்குப் பயந்ததினால், இப்போதும் நீங்கள் ஒரு புது வண்டில்செய்து, நுகம் பூட்டாதிருக்கிற இரண்டு கறவைப் பசுக்களைப்பிடித்து, அவைகளை வண்டிலிலே கட்டி, அவைகளின் கன்றுக்குட்டிகளை அவைகளுக்குப் பின்னாகப் போகவிடாமல், வீட்டிலே கொண்டுவந்துவிட்டு, பின்பு கர்த்தருடைய பெட்டியை எடுத்து, அதை வண்டிலின்மேல் வைத்து, நீங்கள் குற்றநிவாரணக் காணிக்கையாக அவருக்குச் செலுத்தும் பொன்னுருப்படிகளை அதின் பக்கத்தில் ஒரு சிறிய பெட்டியிலேவைத்து, அதை அனுப்பிவிடுங்கள் என்று கூறினார்கள். (15)

## இஸ்ரவேலரிடத்திற்குத் திரும்ப அனுப்பப்பட்டது!

காணக்கூடாத ஒரு வல்லமையினால் அவை வற்புறுத்தப்படாதவரை, கறவைப்பசுக்கள் வீட்டிலுள்ள அவைகளின் கன்றுகளை விட்டுவிலகிச் செல்லும்படி ஈர்க்கப்படமாட்டாது என்பதைப் பெலிஸ்தியர்கள் அறிந்திருந்தனர். அந்தப் பசுக்கள் அவைகளின் கன்றுகளுக்காகக் கத்திக்கொண்டு, பெத்ஷ

மேசுக்கு நேராக கன்றுக் குட்டிகளுக்கு நேர் எதிர்திசையில் சென்றன. அந்தப் பரிசுத்தமான பெட்டியின் காரியத்தில், அவர்கள் முழு நம்பிகையையும் அந்தப் பசுக்களின்மீது வைக்கத் துணியவில்லை. அவைகளுக்கு ஏதாவது தீங்கு நேரிட்டால், தங்களுக்குப் பெரிய அழிவு உண்டாகும் என்று அவர்கள் பயந்தனர். தேவதூதர்கள் அந்தப் பெட்டியுடன் சென்றிருந்து, அந்தப் பெட்டிக்குச் சொந்தமான இடத்தில் அந்தப் பசுக்களை நடத்தியிருந்தனர் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. (16)

## துணிகரத்திற்கான தண்டனை!

பெத்ஷிமேசின் ஜனங்கள் வயலில் அறுவடை செய்து கொண்டிருந்தனர். அவர்கள் கர்த்தருடைய பெட்டி கறவைப்பசுக்களினால் வண்டிலின்மீது இழுத்துவரப்பட்டதைக் கண்டபோது, மிகவும் களிகூர்ந்தனர். அது தேவனுடைய செயல் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். வண்டிலின்மீதிருந்த பெட்டியை இழுத்துவந்திருந்த அந்தக் கறவைப் பசுக்கள் ஒரு பெரிய கல்லினருகே வந்து, அங்கு அவைகளாகவே நின்றுவிட்டன. லேவியர்கள் கர்த்தருடைய பெட்டியையும் பெலிஸ்தியர்களின் காணிக்கையையும் எடுத்துக் கீழே வைத்து, வண்டிலைப்பிரித்து விறகாகப் பயன்படுத்தி, அந்தக் கறவை பசுக்களைக் கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்தினார்கள்; பெலிஸ்தியரின் பிரபுக்கள் எக்ரோனுக்குத் திரும்பினார்கள்; வாதை நிறுத்தப்பட்டது. (17)

பெத்ஷிமேசின் மனிதர்கள் இப்படிப்பட்ட ஆச்சரியமான காரியங்களைச் செய்வதற்கு அந்தப் பெட்டிக்குள் என்ன வல்லமை அடங்கியிருக்கும் என்பதை அறிந்துகொள்ள விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் தேவனுடைய வல்லமைக்கு மதிப்புக்கொடுக்காமல், அந்தப் பெட்டியைமட்டும் வல்லமையுள்ளதாக நினைத்து, அதனைப் பார்த்தார்கள். அந்தப் பெட்டியை மூடியிருந்த துணிகளின்றி, அதைப் பார்ப்பதற்கு, பரிசுத்தமான விதத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த மனிதர்களைத் தவிர, மற்றவர்கள் சாகாதபடிக்கு அதைப் பார்க்கமுடியாத ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; ஏனெனில் அது தேவனையே பார்ப்பது போன்றதாக இருந்தது. அந்த ஜனங்கள் அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டுமென்னும் ஆர்வத்தினால், அஞ்ஞானிகளான விக்கிரக ஆராதனைக்காரர்கள்கூடச் செய்யத் துணியாத செயலாக—அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தபோது, அந்தப் பெட்டியைக் கவனித்திருந்த தேவதூதர்கள் ஐம்பதினாயிரம் பேரைக் கொன்றார்கள். (18)

அந்த பெட்டியைக் குறித்து பெத்ஷிமேசின் ஜனங்கள் பயந்து இந்தப் பரிசுத்தமான தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கத்தக்கவன்

யார்? பெட்டி நம்மிடத்திலிருந்து யாரிடத்திற்குப் போகும் என்று சொல்லி, கீரியாத்யாரீமின் குடிகளுக்கு ஆட்களை அனுப்பி: "பெலிஸ்தியர் கர்த்தருடைய பெட்டியைத் திரும்ப அனுப்பினார்கள்; நீங்கள் வந்து, அதை உங்களிடத்திற்கு எடுத்துக்கொண்டுபோங்கள் என்று சொல்லச் சொன்னார்கள்." கீரியாத்யாரீமின் மக்கள் கர்த்தருடைய பெட்டியை அபினதாபின் வீட்டுக்குக் கொண்டுவந்து, அதனைக் காக்கும்படிக்கு அவன் குமாரனைப் பரிசுத்தப்படுத்தினார்கள். எபிரெய ஜனங்கள் இருபது வருடங்கள் பெலிஸ்தியரின் வல்லமையின்கீழ் இருந்தனர். அவர்கள் பெரிய அளவிற்குத் தங்களைத் தாழ்த்தி அவர்களுடைய பாவங்களுக்காக மனம் வருந்தினார்கள். சாமுவேல் அவர்களுக்காகப் பரிந்துபேசினான்; எனவே, தேவன் மறுபடியும் அவர்கள்மீது இரக்கம் வைத்தார். பெலிஸ்தியர்கள் அவர்களுடன் யுத்தம்செய்தார்கள். அப்பொழுது கர்த்தர் ஒரு அற்புதமான விதத்தில் செயலாற்றவே, அவர்கள் அவர்களுடைய எதிரிகளை மேற்கொண்டனர். (19)

தாவீது அரசனாக்கப்படும்வரை அந்தப் பெட்டி அபினதாபின் வீட்டில் இருந்தது. தாவீது இஸ்ரவேலில் தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பதினாயிரம் மனிதர்களை ஒன்றுசேர்த்து, கர்த்தருடைய பெட்டியைக் கொண்டுவரப்போனான். அவர்கள் கர்த்தருடைய பெட்டியை அபினதாபின் வீட்டிலிருந்து வெளியே கொண்டுவந்து, ஒரு புதிய இரதத்தின்மேல் ஏற்றினார்கள். அபினதாபின் குமாரர்களான ஊசாவும் அகியோவும் அந்த புதிய இரதத்தை ஓட்டியிருந்தனர். தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார்கள் அனைவரும் சகலவித கீதவாத்தியங்களோடும் கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக்கொண்டு போனார்கள். "அவர்கள் நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு, பெட்டியை அசைத்தபடியினால், ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி, அதைப் பிடித்தான். அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின்மேல் கோபம்மூண்டது; அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார்; அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில், செத்தான்" (2 சாமுவேல் 6:6,7). காளைகள் தடுமாறினதால், ஊசா காளைகளின்மீது கோபமுள்ளவனாக இருந்தான். பெலிஸ்தியர்களின் தேசத்திலிருந்து பெட்டியைக் கொண்டுவந்த கர்த்தரால், அதைக் கவனித்துக்கொள்ளமுடியாததுபோல் ஊசா நினைத்து, தேவன்மீதுள்ள அவனது நம்பிக்கையின்மையை வெளிக்காட்டினான். கர்த்தருடைய பெட்டியைக் கவனித்திருந்த தேவதூதர்கள், ஊசா பொறுமையில்லாமல் கர்த்தருடைய பெட்டியின்மீது அவனுடைய கையை வைக்கத் துணிகரம் கொண்டதினால், அவனை அடித்தார்கள்; அவன் செத்தான். (20)

“தாவீது அன்றையதினம் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படியென்று சொல்லி, அதைத் தன்னிடத்தில்— தாவீதின் நகரத்தில் கொண்டுவர மனதில்லாமல், கித்தியனாகிய ஓபேத்—ஏதோமின் வீட்டிலே கொண்டுபோய்வைத்தான். கர்த்தருடைய பெட்டி கித்தியனாகிய ஓபேத்—ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கையில், கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார்”–2 சாமுவேல் 6:9–11. கர்த்தருடைய பெட்டிக்குள் இருக்கும் கற்பனைகளை மீறுபவர்களுக்கு அது பயங்கரமும் மரணமுமாக இருந்த அதே நேரத்தில், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு அது ஒரு ஆசீர்வாதமும் பெலனுமாகவும் இருக்கிறது என்பதை தேவன் அவருடைய ஜனங்களுக்குப் போதிக்கிறார். ஓபேத்—ஏதோமின் வீடும் அவனுக்குண்டான யாவும் பெருமளவிற்கு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது என்பதை தாவீது கேள்விப்பட்டபோது, அவன் அதனைத் தனது நகருக்குள் கொண்டு வருவதற்கு மிகுந்த ஆர்வம் உள்ளவனாக இருந்தான்; ஆனால் தாவீது பரிசுத்தமான அந்தப் பெட்டியை அந்த இடத்திலிருந்து நகர்த்துவதற்கு முன், அவன் தன்னை தேவனுக்கென்று பரிசுத்தம்பண்ணினான். அவனுடைய இராஜ்ஜியத்தில் மிக உன்னதமான அதிகாரத்தில் உள்ள அனைவரும் தங்களை உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்து விலக்கக்கூடியதும், பரிசுத்தமான தியானத்திலிருந்து அவர்களது மனங்களை வேறுபக்கம் இழுக்கக்கூடியதுமான அனைத்தையும்விட்டு விலகவேண்டுமென்றும், அவன் கட்டளையிட்டான். தாவீதின் நகரத்திற்கு பரிசுத்தமான பெட்டியைக்கொண்டுவருவதற்கென்று இப்படியாக அவர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். அப்பொழுது தாவீது தேவனுடைய பெட்டியை ஓபேத்—ஏதோமின் வீட்டிலிருந்து, தாவீதின் நகரத்திற்கு மகிழ்ச்சியுடனே கொண்டுவந்தான். (21)

அவர்கள் கர்த்தருடைய பெட்டியை உள்ளே கொண்டுவந்து, அதற்கு தாவீது அமைத்திருந்த கூடாரத்திற்குள் இருக்கிற அதின் ஸ்தானத்திலே அதை வைத்தபோது, தாவீது கர்த்தருடைய சந்நிதியிலே சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் இட்டான். (22)

### சாலொமோனின் ஆலயத்தில்!

சாலொமோன் தாவீதின் நகரத்தில் ஆலயத்தைக் கட்டிமுடித்தபின் உடன்படிக்கைப்பெட்டியை அதற்கு வெளியே கொண்டுவருவதற்காக, அவன் இஸ்ரவேலின் மூப்பர்களையும் மக்களுக்கு மத்தியில் மிகுந்த செல்வாக்கை உடையவர்களாக இருந்த மனிதர்களையும் கூடிவரச்செய்தான். தங்களை தேவனுக்கென்று அர்ப்பணித்திருந்த இந்த

மனிதர்கள் மிகுந்த பக்திவிநயத்துடனும் தெய்வபக்தியுடனும் பெட்டியைச் சுமந்துவந்திருந்த ஆசாரியர்களுடன் சேர்ந்துவந்திருந்தனர். “பெட்டியையும், ஆசரிப்புக்கூடாரத்தையும், கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்துகொண்டுவந்தார்கள். ராஜாவாகிய சாலொமோனும் அவனோடேவந்த இஸ்ரவேல் சபையனைத்தும் பெட்டிக்கு முன்பாக நடந்து, எண்ணிக்கையும் கணக்குமில்லாத திரளான ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டார்கள்”–1 இராஜாக்கள் 8:4,5. சாலொமோன் அவனுடைய தகப்பனாகிய தாவீதின் முன்மாதிரியைப் பின்பற்றினான். ஒவ்வொரு ஆறுபடியிலும் அவன் பலி செலுத்தினான். “அப்படியே ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகா பரிசுத்தஸ்தலத்திலே கேருபீன்களுடைய செட்டைகளின்கீழே கொண்டுவந்து வைத்தார்கள். கேருபீன்கள் பெட்டியிருக்கும் ஸ்தானத்திலே தங்கள் இரண்டு செட்டைகளையும் விரித்து, உயர இருந்து, பெட்டியையும் அதின் தண்டுகளையும் மூடிக்கொண்டிருந்தது”–1 இராஜாக்கள் 8:6,7. (ஆறுபடிகள் = ஆறு தப்படிகள்). (23)

மோசேக்கு மலையின்மேல் காட்டப்படிருந்தபடியும் அதற்குப்பின் கர்த்தரால் தாவீதுக்குக் காட்டப்பட்டபடியும், ஒரு மிக அலங்காரமான பரிசுத்தஸ்தலம் உண்டுபண்ணப்பட்டிருந்தது. பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தின் மாதிரியின்படியே பூலோக பரிசுத்தஸ்தலம் உண்டு பண்ணப்பட்டிருந்தது. பெட்டிக்கு மேலிருந்த இரண்டு கேருபீன்களுக்கும் மேலாக பெரிய உருவிலான இரு கேருபீன்களை உண்டுபண்ணி, தேவனுடைய கற்பனைகளுக்கு எப்பொழுதும் பரலோக தூதர்கள் காவலாக இருப்பதை எடுத்துக்காட்டும்படி, பெட்டியின் இரு பக்கங்களிலும் நிறுத்தினான். கூடாரத்தின் அழகையும் அலங்காரத்தையும் விவரிப்பது இயலாத காரியம். பரலோக மகா பரிசுத்தஸ்தலத்தில் இருப்பதுபோல, பரிசுத்தமான பெட்டி, பக்திவிநயத்துடனும் ஒழுங்குடனும் சுமந்துசெல்லப்பட்டு அங்கே தரையின்மீது நின்றிருந்த இரு கேருபீன்களின் செட்டைகளுக்குள் கீழாக வைக்கப்பட்டது. (24)

சகலவிதமான இசைக் கருவிகளுடன் பரிசுத்தமான பாடகர்களின் குழுவானது தேவனுக்குத் துதிசெலுத்தும்படி தங்களுடைய குரல்களை ஒன்றுபடுத்தினர். இசைக் கருவிகளின் இசையுடன் இசைந்த குரல்கள் ஆலயம் முழுவதிலும் திரும்ப ஒலித்து, காற்றின்மூலமாக எருசலேம் எங்கும் கொண்டுசெல்லப்பட்டபோது, மகிமையின் மேகம் முன்பு கூடாரத்தை நிரப்பியிருந்ததைப்போல இப்பொழுதும் நிரப்பினது. “அப்பொழுது ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில், மேகமானது

கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்கிறதற்கு நிற்கக்கூடாமற்போயிற்று; கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று"–1 இராஜாக்கள் 8:10,11. சாலொமோன் அரசன் பலிபீடத்திற்கு முன்னாலிருந்த வெண்கலத்தாலான மேடையின்மீது நின்று, ஜனங்களை ஆசீர்வதித்தான். அதற்குப்பின், அவன் முழந்தாள்படியிட்டு, தனது கரங்களை வானத்திற்கு நேராக உயர்த்தி, சபையினர் அனைவரும் அவர்களுடைய முகங்கள் தரையில்படும்படி குனிந்து இருந்தபோது, அவன் தனது அக்கரைமிக்க ஜெபத்தை ஏறெடுத்தான். சாலொமோன் ஜெபம்செய்து முடிந்தபின், அற்புதமான விதத்தில் வானத்திலிருந்து அக்கினி இறங்கி, பலியைப் பட்சித்தது. (25)

இஸ்ரவேலரின்பாவங்களின்காரணமாக அந்த ஆலயத்திற்கு வரக்கூடிய பேரழிவைப்பற்றி தேவன் கூறியிருந்தது, சில நூறு வருடங்களுக்குப்பின் அவருடைய ஜனங்கள் அவரைவிட்டு விலகிச் சென்றபோது நிறைவேறியது. சாலொமோன் தேவனுக்கு விசுவாசமுள்ளவனாக இருந்தால், அவருடைய ஜனங்கள் அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்திருந்தால், மகிமைமிக்க அந்த ஆலயம் அதின் அழகுடன் எப்போதும் நிற்கும். செழுமைக்கு ஒரு சான்றாக இருக்குமென்றும், இஸ்ரவேலின் கீழ்ப்படிதலுக்காக மேலான ஆசீர்வாதங்கள் அவர்கள் மேல் தங்கியிருக்கும் என்றும் தேவன் சாலொமோனிடம் வாக்குத்தத்தம் செய்திருந்தார். (26)

தேவனுடைய கற்பனைகளின்மீது இஸ்ரவேலர்கள் செய்திருந்த மீறுதல்களினாலும் துன்மார்க்கமான அவர்களுடைய நடத்தையினாலும் அவர்களைத் தாழ்மைப்படுத்தித் தண்டிப்பதற்காக அவர்களை அடிமைத்தனத்திற்குள்ளாகும்படி, தேவன் அனுமதித்தார். அந்த ஆலயத்தின் அழிவைப்பற்றி, அந்த ஆலயம் அழிக்கப்படுவதற்கு முன்பே, தேவன் அவருடைய சில விசுவாசமிக்க ஊழியர்களை அறிந்துகொள்ளும்படிச் செய்திருந்தார். இஸ்ரவேலின் அடிமைத்தனத்தைப்பற்றியும் அவர் வெளிப்படுத்தியிருந்தார். இஸ்ரவேலரின் பாவங்களினிமித்தம் இனித் திரும்பக் கிடைக்காதவிதத்தில், பத்துக்கற்பனைகள் எழுதப்பட்ட கற்பலகைகளைக் கொண்டிருந்த அந்தப் பரிசுத்தமான பெட்டி மறைத்து வைக்கப்படவேண்டியதாக இருந்தது. அந்த நீதிமான்கள், தேவாலயத்தின் அழிவிற்குச் சற்றுமுன்னதாக, மிகுந்த துக்கத்தோடும் துயரத்தோடும் அதை ஒரு குகைக்குள் இரகசியமாக வைத்தனர்; இரகசியமாக வைக்கப்பட்டபின் ஒருபோதும் அது கண்டுபிடிக்கப்படவில்லை! (27) ★

# 25

# கிறிஸ்துவின் முதலாம் வருகை!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 196–201)**
**திருவசன ஆதாரம் : யோவான் 1:9; லுக்கா 3:22.**

இயேசு மனித சாயலை எடுத்துக்கொண்டு, தம்மை ஒரு மனிதனாகத் தாழ்த்தி, சாத்தானின் சோதனைகளை அனுபவித்த காலம்வரை, (தரிசனத்தில்) நான் எடுத்துச்செல்லப்பட்டேன். அவரது பிறப்பு உலகப்பிரகாரமான மகத்துவம் எதுவும் இல்லாததாக இருந்தது. அவர் ஒரு மாட்டுத்தொழுவத்தில் பிறந்து, அதன் முன்னணையில் தொட்டிலாட்டப்பட்டிருந்தார். அப்படி இருந்தபோதிலும், அவரது பிறப்பு மனிதகுலத்தின் மானிடர்கள் எவரையும்விட மிக மேலானதாக கனப்படுத்தப்பட்டிருந்தது. பரலோகத்திலிருந்துள்ள தூதர்கள் இயேசுவின் வருகையை மேய்ப்பர்களுக்குத் தெரிவித்தனர். தேவனிடமிருந்துள்ள ஒளியும் மகிமையும் அவர்களுடைய சாட்சியுடன் தொடர்ந்திருந்தன. பரலோகத்தின் சேனைகள் அவர்களுடைய சுரமண்டலங்களைமீட்டி, தேவனை மகிமைப்படுத்தியிருந்தனர். மீட்பின்பணியை நிறைவேற்றி, அவரது மரணத்தினால் சமாதானம், மகிழ்ச்சி, மனிதனின் நித்தியஜீவன் ஆகியவைகளை விழுந்துபோன இந்த உலகத்திற்கு அருள, தேவகுமாரன் வருவதை அவர்கள் வெற்றிகரமாக முன்னறிவித்தனர். தேவன் அவரது குமாரனின் வருகையைக் கனப்படுத்தினார்; தூதர்கள் அவரைத் தொழுதனர். (1)

### இயேசுவும் திருமுழுக்குப்பெற்றார்!

அவரது ஞானஸ்நானம் நடைபெற்ற சூழ்நிலையில், தூதர்கள் அங்கே குவிந்திருந்தனர். பரிசுத்தஆவியானவர் ஒரு புறாவின் வடிவில் இறங்கி, அவர்மீது ஒளியை வீசினார். மக்கள் ஆச்சரியத்துடன் தங்களது கண்களை அவர்மீது பதித்திருந்தபோது, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்னும் பிதாவின் குரல் வானத்திலிருந்து கேட்டது! (2)

யோர்தானில் தன்னிடம் ஞானஸ்நானம் பெறவந்திருப்பவர்தான் இரட்சகர் என்பதைப்பற்றி நிச்சயமில்லாதவனாக யோவான் இருந்தான். ஆனால் தேவ ஆட்டுக்குட்டியை அறிந்துகொள்ளக்கூடிய ஒரு அடையாளத்தை தேவன் அவனுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். பரலோகப் புறா இயேசுவின்மீது இறங்கினபோது, தேவ மகிமை அவரைச் சுற்றிப் பிரகாசித்தபோது, அந்த அடையாளம் கொடுக்கப்பட்டது. யோவான் அவனது கரத்தை இயேசுவுக்கு நேராக நீட்டி: "இதோ உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றான். (3)

## யோவானின் ஊழியம்!

இயேசுதான் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியாவாகிய உலக இரட்சகர் என்று யோவான் அவனுடைய சீடர்களுக்குத் தெரிவித்தான். அவனுடைய ஊழியம் அதின் முடிவை சமீபித்தபோது, அவன் தன்னுடைய சீடர்களுக்கு, மாபெரும் போதகராகிய இயேசுவைப் பார்க்கும்படிப் போதித்தான். யோவானின் வாழ்க்கை துக்கமும் சுயமறுப்பும் உள்ளதாக இருந்தது. அவன் கிறிஸ்துவின் முதலாம் வருகையை முன்னறிவித்தான். ஆனால் அவருடைய வெளிக்காட்டப்பட்டிருந்த வல்லமையை அனுபவித்து மகிழும்படி அவன் அனுமதிக்கப்படவில்லை. இயேசு தாமே தம்மை ஒரு போதகராக ஏற்படுத்திக்கொள்ளும்போது, தான் மரணமடைய நேரிடும் என்பதை, யோவான் அறிந்திருந்தான். வனாந்தரத்தைத் தவிர வேறிடங்களில் அவனது குரல் அபூர்வமாகவே கேட்கப்பட்டிருந்தது. அவனது வாழ்க்கை தனிமையானதாக இருந்தது. அவன் தனது தகப்பனைச் சார்ந்திருந்தவர்களிடமிருந்து மகிழ்ச்சியை அனுபவிப்பதற்காக தகப்பனின் குடும்பத்தைப் பற்றிக்கொண்டிராமல், தனது ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக அவர்களைவிட்டு விலகியிருந்தான். ஆச்சரியமான அந்தத் தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கேட்பதற்காக திரளான மக்கள் அலுவல்கள் நிறைந்த நகரங்களையும் கிராமங்களையும் விட்டுவிட்டு, அந்த வனாந்தரத்தில் திரண்டிருந்தனர். யோவான் மரத்தின் வேரின்மீது கோடரியை வைத்தான். பலன்களைப்பற்றி அஞ்சாதவனாக அவன் பாவத்தைக் கடிந்து கொண்டு, தேவ ஆட்டுக்குட்டிக்கான பாதையை ஆயத்தம்செய்தான். (4)

யோவான் கொடுத்த வல்லமையான—தெளிவான சாட்சியைக் கவனித்தபோது, மிகவும் பாதிக்கப்பட்டவனான ஏரோது, ஆழ்ந்த ஆர்வத்துடன், தான் அவனுடைய சீடனாவதற்கு என்ன செய்யவேண்டுமென்று கேட்டான். ஏரோது தனது சகோதரன் உயிருடன் இருக்கும்போதே, தன் சகோதரனுடைய மனைவியை மணம் செய்துகொள்ள இருந்தான் என்னும் உண்மையை யோவான் அறிந்திருந்து, இது நியாயப்பிரமாணத்தின்படி

(சட்டப்படி) சரியானது அல்ல என்று விசுவாசத்துடன் ஏரோதுவினிடம் கூறினான். ஏரோது எந்தவிதமான தியாகத்தையும் செய்வதற்கு விருப்பமற்றவனாக இருந்தான். அவன் அவனுடைய சகோதரனின் மனைவியை அடைந்து, அவளது செல்வாக்கினால், யோவானைப் பிடித்துச் சிறையிலிட்டான்; என்றாலும் யோவானை விடுதலைசெய்யும் விருப்பமுள்ளவனாக இருந்தான். யோவான் சிறையிலிருந்தபோது, இயேசுவின் பலத்த கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டான். அவரது கிருபை நிறைந்த வார்த்தைகளை அவனால் கேட்கமுடியாமல்போனது; ஆனால் அவருடைய சீடர்கள் கேட்டிருந்தவைகளை யோவானுக்குக் கூறி, அவனை ஆறுதல்படுத்தினார்கள். ஏரோதின் மனைவியின் செல்வாக்கினால், விரைவில் யோவான் சிரைச்சேதம் பண்ணப்பட்டான். இயேசுவைப் பின்பற்றியிருந்த மிகத் தாழ்மையான சீடர்கள் அவரது அற்புதங்களைக்கண்டு, யோவான் பேசியிருந்த வார்த்தைகளைவிட, அவரது உதடுகளிலிருந்து விழுந்த ஆறுதலான வார்த்தைகள் மேலானவைகளாக இருப்பதைக் கேட்டனர்; அதாவது அவைகள் மிகவும் உயர்த்தப்பட்டுக் கனப்படுத்தப்பட்டன; அவைகளால் அவர்களுடைய வாழ்க்கைகளில் அதிகமான மகிழ்ச்சியை அனுபவித்திருந்தார்கள் என்பதையும் நான் கண்டேன். இயேசுவின் முதலாம் வருகைபற்றி அறிவிக்க யோவான், எலியாவின் ஆவியோடும் வல்லமையோடும் வந்திருந்தான். கோபாக்கினையின் நாளைப்பற்றியும், இயேசுவின் இரண்டாம் வருகையைப்பற்றியும் கடைசிநாட்களில் முன்னறிவிக்கக்கூடியவர்களே எலியாவின் ஆவியுடனும் பலத்துடனும் செல்லக்கூடியவர்கள் என்பதை எடுத்துக்காட்டுபவனாக யோவான் இருந்தான் என்பதாக நான் கண்டேன்! (5)

## சோதனை!

யோர்தானில் இயேசு திருமுழுக்குப் பெற்றபின், பிசாசினால் சோதிக்கப்படுவதற்காக, அவர் ஆவியானவரால், வனாந்தரத்திற்கு நடத்தப்பட்டார். பயங்கரமான சோதனைகளுக்கான அந்தத் தனிப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக பரிசுத்தஆவியானவர் அவரை ஆயத்தம் செய்திருந்தார். அவர் சாத்தானால் நாற்பது நாட்கள் சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர் எதையும் சாப்பிடவில்லை. மானிட இயல்பு பின்வாங்கிக்கொள்ளக்கூடிய விதத்தில், அவரைச் சுற்றியிருந்த அனைத்தும் அருவருக்கக்கூடியவையாக இருந்தன. பாழடைந்த ஒரு தனிமையான இடத்தில், அவர் காட்டு மிருகங்களுக்கும் பிசாசுகளுக்கும் இடையில் இருந்தார். உபவாசத்தின் மூலமாகவும், பாடுகளின்மூலமாகவும் தேவகுமாரன் வெளிரி, மெலிந்தவராக இருந்தார்; ஆனால் அவரது பாதை ஏற்கனவே வகுக்கப்பட்டதாக இருந்தது; செய்வதற்காக வந்த வேலையை அவர் நிறைவேற்றியாகவேண்டும்.

தேவகுமாரன் தம்மைத்தாமே தாழ்த்தியிருந்த காரணத்தால், அவர்மீது வெற்றி அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கைகொண்டு, தேவகுமாரனுடைய பாடுகளைத் தனக்கு அனுகூலமாக எடுத்துக்கொண்டு, அவரை ஏராளமான சோதனைகளால் சூழவைக்க சாத்தான் ஆயத்தம் செய்தான். “நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும்” என்னும் சோதனையுடன் சாத்தான் வந்தான். அவர் மேசியாவாக இருக்கிறார் என்பதை மெய்ப்பிப்பதற்காக, இயேசு தம்மைத் தாழ்த்தி, அவருடைய தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தவேண்டும் என்று அவன் இயேசுவைச் சோதித்தான். “மனுஷன் அப்பத்தினாலே மட்டுமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” என்று எழுதியிருக்கிறதே என்று இயேசு, அவனுக்கு மென்மையாகப் பதில் கூறினார் (லூக்கா 4:3,4). (6)

இயேசு தாம் தேவனுடைய குமாரனாக இருக்கிறார் என்பதைப்பற்றிய ஒரு வாக்குவாதம் செய்ய சாத்தான் வகைதேடியிருந்தான். அவன் அவருடைய பாடுகள் நிறைந்த பலவீனமான நிலைமையைச் சுட்டிக்காட்டி, அவன் அவரைவிடப் பலசாலியாக இருப்பதாகப் பெருமையடித்துக்கொண்டான். ஆனால் “நீர் என்னுடைய நேசகுமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன்” என்று வானத்திலிருந்து கூறப்பட்ட வார்த்தைகள் இயேசுவை அவரது பாடுகளுக்குஊடாகத் தாங்கி நடத்தப் போதுமானதாக இருந்தது. இயேசு அவரது வல்லமையைப்பற்றியும் அல்லது அவர் உலகத்தின் இரட்சகராக இருப்பதைப்பற்றியுமுள்ள காரியத்தில் சாத்தானுக்கு மனத்திருப்தியை உண்டுபண்ணுவதற்கான அவசியம் எதுவும் அவருக்கிருக்கவில்லை என்பதை நான் கண்டேன். தேவகுமாரனுடைய உயர்வான அந்தஸ்தையும் அதிகாரத்தையும்பற்றி, சாத்தான் போதுமான சான்றுகளை உடையவனாக இருக்கிறான். கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு இணங்க அவன் மறுத்ததுவே, அவனைப் பரலோகத்திலிருந்து வெளியேற்றியது. (7)

சாத்தான் அவனுடைய வல்லமையை வெளிக்காட்டுவதற்காக, இயேசுவை எருசலேமுக்குத் தூக்கிச்சென்று, அதின் ஆலயக்கோபுரத்தின் உச்சியில் அவரை நிறுத்தி, இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கிறார் என்பதை மெய்ப்பித்துக்காட்ட, தலையைச் சுற்றச்செய்யும் அந்த உயரத்திலிருந்து, அவரைக் கீழேகுதிக்கவேண்டும் என்றான். ஏவுதல்மிக்க வேதவாக்கியங்களுடன் சாத்தான் வந்தான். “அப்பொழுது அவன் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இங்கேயிருந்து தாழக்குதியும்; ஏனெனில் உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்குக்

கட்டளையிடுவார் என்றும், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் எந்திக்கொண்டுபோவார்கள் என்றும் எழுதியிருக்கிறது" என்று சொன்னான். அதற்கு இயேசு மறுமொழியாக: "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லிருக்கிறதே" என்றார். இயேசு அவருடைய பிதாவின் இரக்கத்தின்மீது யூகம் செய்து அவருடைய ஊழியத்தை நிறைவேற்றுமுன், அவரது உயிரை அபாயத்திற்குள்ளாக்க வேண்டுமென்று சாத்தான் விரும்பினான். இரட்சிப்பின் திட்டம் தோல்வி அடைந்துவிடும் என்று நம்பியிருந்தான்; ஆனால் அந்தத் திட்டம் சாத்தானால் கவிழ்க்கப்படுவதற்கும் சிதைக்கப்படுவதற்கும் முடியாதவிதத்தில் மிக ஆழமாகப் போடப்பட்டிருந்தது. (8)

சகல கிறிஸ்தவர்களுக்கும் இயேசு உதாரணமாயிருக்கிறார். அவர்கள் சோதிக்கப்படும்போது, அல்லது அவர்களது உரிமைகள்பற்றி விவாதம் உண்டாகும்போது, அவர்கள் அதனைப் பொறுமையுடன் சகித்துக்கொள்ளவேண்டும். அவர்கள் தங்களுடைய எதிரிகளின்மீது வெற்றி அடையவும், அதினால் தேவனை நேரடியாகக் கனப்படுத்தவும் மகிமைப்படுத்தவும் அவர்களால் இயலாதவரை, தேவன் அவருடைய வல்லமையை வெளிக்காட்டும்படி அவரை அழைக்கின்ற உரிமை அவர்களுக்கு உண்டு என்று அவர்கள் உணரக்கூடாது. இயேசு தேவாலய உச்சியிருந்து தாமாகவே குதித்திருந்தாரானால், அது அவரது பிதாவை மகிமைப்படுத்தியிருந்திருக்காது. ஏனெனில் சாத்தானும் தேவதூதர்களும் தவிர வேறொருவரும் அந்தச் செயலைப் பார்த்திருந்திருக்கமாட்டார்கள். அந்தச் செயல் கர்த்தரை, அவரது வல்லமையை மிகவும் கசப்பான அவரது எதிரிக்குக் காட்டும்படி அவரைச் சோதிப்பதாக இருந்திருக்கும். அச்செயல் இயேசு எவனை வெற்றிகொள்ளுவதற்காக வந்திருந்தாரோ, அவனுக்குக் கீழ்ப்படியும் ஒரு செயலாக இருந்திருக்கும். "பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல இராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து: இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன்; இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்குப் பிரியமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்துகொண்டால், எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார் (லூக்கா 4:5–8) (9)

சாத்தான் இந்த உலகத்தை, மிகவும் வசீகரிக்கக்கூடிய வெளிச்சத்தில் இயேசுவிற்குக் காட்டினான். இயேசு அவனை வணங்கினால், இந்த

உலகத்தின் உரிமையாளன் நான்தான் என்னும் உரிமையை, அவன் விட்டுவிடுவதாகக் கூறினான். இரட்சிப்பின் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மனிதனை மீட்பதற்காக இயேசு மரித்தாகவேண்டும் என்பதையும், சாத்தானின் வல்லமைகள் எல்லையிடப்பட்டாக வேண்டுமென்றும், முடிவில் அது நீக்கப்பட்டு, அவன் அழிக்கப்படுவான் என்பதையும், சாத்தான் அறிந்திருந்தான்; எனவே, தேவகுமாரனால் ஆரம்பிக்கப்பட்டிருந்த பெரும்பணியை, முடியுமானால் நிறைவேறவிடாமல் செய்யவேண்டும் என்பது, அவனது திட்டமிட்ட செயலாக இருந்தது. மனிதனுடைய மீட்பின் திட்டம் தோல்வி அடையவேண்டுமானால், சாத்தான் உரிமைபாராட்டியிருந்த அவனுடைய இராஜ்யம் அவனிடம் தக்கவைக்கபடவேண்டும்; அவன் வெற்றி அடைந்தால், தேவனுக்கு எதிரான அவனுடைய ஆளுகையை நடத்துவான் என்று அவன் தனக்குத்தானே பெருமைப்பட்டுக்கொண்டான். இயேசு அவருடைய வல்லமையையும் மகிமையையும் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, பரலோகத்தைவிட்டுப் புறப்பட்டபோது, சாத்தான் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான். தேவகுமாரன் அவனுடைய வல்லமையின்கீழ் வைக்கப்பட்டிருக்கிறார் என்று அவன் நினைத்துக்கொண்டான். ஏதேனிலிருந்த பரிசுத்த தம்பதியரை, சோதனை எளிதாக வென்றது. எனவே சாத்தானுக்குரிய தனது வல்லமையினாலும் தந்திரத்தினாலும் தேவகுமாரனைக்கூடத் தோற்கடித்துவிடலாம் என அவன் நம்பினான்; அதன் மூலமாக, அவனுடைய ஆயுளையும் அவனுடைய இராஜ்யத்தின் ஆயுளையும்கூட, காப்பாற்றிக்கொள்ளலாம் என அவன் நினைத்தான். இயேசுவை அவருடைய பிதாவின் சித்தத்தைவிட்டு விலகிச் செல்லும்படிச் செய்யக்கூடுமானால், அவனுடைய நோக்கம் வெற்றியடைந்துவிடும். ஆனால் இயேசு: "அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்ற கடிந்துகொள்ளுதலுடன் சாத்தானைச் சந்தித்தார். (10)

சாத்தான் பூமியின் இராஜ்யங்கள் அவனுடையது என்று உரிமைபாராட்டி, அவர் அவனைத் தொழுதுகொண்டால், இந்த இராஜ்யங்களை அடைந்துகொள்ளுவதற்காக, அவர் அனுபவிக்கக்கூடிய பாடுகளையெல்லாம் தவிர்க்கலாமென்றும், அவர் மரிக்கவேண்டிய அவசியம் இல்லையென்றும், அவர் பூமி முழுவதையும் சொந்தமாக்கிக்கொள்ளலாம் என்றும், அவைகள்மீது ஆளுகை செய்கின்ற மகிமையையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும், தந்திரமாகக்கூறி இயேசுவைக் கவர்ந்திழுத்தான்; ஆனால் இயேசு அசையாதவராக இருந்தார். அவர் தமது சொந்த ஜீவனால் இராஜ்யங்களை சாத்தானிடமிருந்து மீட்டுக்கொள்ளுவாரென்றும், சிறிது காலத்திற்குப்பின், பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள அனைத்தும், அவருக்குக்

கீழ்ப்படிந்திருக்கும் என்றும், அந்த நேரம் வரவேண்டியதாக இருக்கிறது என்றும் இயேசு அறிந்திருந்தார். பூமியின் இராஜ்யங்களை நித்தியமாக அவருடைய ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ளும்படி, அவரது கரங்களில் ஒப்படைத்து, அவர் அவைகளுக்கு உரிமையுள்ள சுதந்திரவாளியாகும்படிக்கான ஒரு பாதையாக, அவரது பிதாவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாதையான, பயங்கரமான பாடுகளையும் அச்சம்தரும் மரணத்தையும் அவர் தேர்ந்துகொண்டார். இனி இயேசுவையும் அல்லது மகிமையிலுள்ள அவரது பரிசுத்தவான்களையும் ஒருபோதும் இடையூறுசெய்யாமலிருக்கும்படி சாத்தானை அழிப்பதற்காக அவரது கரங்களுக்குள் அவன் கொடுக்கப்படுவான். (11) ★

# 26

# கிறிஸ்துவின் ஊழியம்!

(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 202–207)

சாத்தான் அவனுடைய சோதனைகளை முடித்தபின் இயேசுவை விட்டுத் தற்காலிகமாகப் பிரிந்துசென்றான். வனாந்தரத்தில் தூதர்கள் உணவை ஆயத்தம் செய்துகொடுத்து, அவரைப் பலப்படுத்தினார்கள். அவருடைய பிதாவின் ஆசீர்வாதம் அவர்மேல் தங்கியது. சாத்தான் அவனுடைய மிகப் பங்கரமான சோதனையில் தோற்றுப்போனான். அப்படியிருந்தபோதிலும், அவருக்கு எதிரான அவனது தந்திரங்களைப் பல சமயங்களில் செயல்படுத்தி, அவர்மீது வெற்றிகொள்ள முயன்று, இயேசுவின் ஊழியத்தின் காலத்தை அவன் எதிர்நோக்கியிருந்தான். இயேசுவை வெறுக்கவும், அவரை அழிக்கவும் வகைதேடும்படி அவரை ஏற்றுக்கொள்ளாமலிருக்கக் கூடியவர்களைக் கலக்கி, அதினால் அவரை மேற்கொள்ளலாம் என்று அவன் தொடர்ச்சியாக நம்பியிருந்தான். (1)

சாத்தான் அவனுடைய தூதர்களின் ஒரு சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டியிருந்தான். தேவகுமாரனை ஒரு வகையிலும் அவர்களால் மேற்கொள்ள முடியாமல்போனதைப்பற்றி, அவர்கள் மனமடிவடைந்தவர்களாகவும் கோபாவேசமிக்கவர்களாகவும் இருந்தனர். அவர்தான் உலக இரட்சகராக இருக்கிறார் என்பதைப்பற்றி அவருடைய சொந்த இனத்தாரிடத்தில் அவநம்பிக்கையை உண்டுபண்ணி, இவ்விதமாக இயேசுவின் ஊழியத்தில் அவருக்கு அதைரியம் உண்டாகும்படிச் செய்வதற்காக, மக்களைத் தூண்டிவிடுவதற்கு, அவர்கள் தங்களுடைய வல்லமையைப் பயன்படுத்த, மிக அதிகமான தந்திரத்தை உடையவர்களாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்தனர். இயேசுவை நிந்திக்கவும் நிராகரிக்கவும் அவர்கள் நடத்தப்படுவதற்காக, மேசியா வல்லமையுள்ள உலகப்பிரகாரமான அரசராக வருவார் என்று அவர்களை நம்பச்செய்தால்—தீர்க்கதரிசனங்களை அறியாதபடி அவர்களைக் குருடர்களாக்கிவிட்டால், யூதர்கள் தங்களுடைய சடங்காச்சாரங்களிலும் பலிமுறைகளிலும் மிகமிகச் சரியானவர்களாக இருந்தாலும் அது காரியமல்ல. (2)

கிறிஸ்துவின் ஊழியத்தின்போது, நம்பிக்கையின்மை, வெறுப்பு, பரிகாசம்செய்தல் ஆகியவைகளால் மனிதர்களை அவருக்கெதிராக ஏவிவிடும்படி, சாத்தானும் அவனுடைய தூதர்களும் மிகவும் தீவிரமாகச் செயல்பட்டிருந்தனர். மனிதர்களின் பாவங்களைக் கடிந்துகொள்ளுகின்ற வகையில், இயேசு அடிக்கடி பாவத்தை நேரடியாகச் சுட்டிக்காட்டும் சத்தியங்களைக் கூறினபோது, ஜனங்கள் அவரைக் கொல்லும்படி—சாத்தானும் அவனுடைய தூதர்களும் ஒன்றுபட்டு அவரைக் கல்லெறியும்படி மக்களை ஏவினர். ஆனால் கோபமிக்க திரளான ஜனங்களிடமிருந்து, தூதர்கள் அவரைப் பாதுகாத்து, பத்திரமான இடத்திற்கு நடத்திச்சென்றனர். மறுபடியும் அவருடைய உதட்டிலிருந்து வெளிப்படையான சத்தியம் விழுந்தபோது, அவரை மலை உச்சிக்கு இழுத்துச்சென்று, அங்கிருந்து கீழே தள்ளிவிட முயன்றனர். அவரை என்னசெய்யவேண்டும் என்பதைப்பற்றிய ஒரு வாக்குவாதம் அவர்களுக்கிடையில் நடந்தது; அப்பொழுது தூதர்கள் திரளானவர்களிடமிருந்து அவரை மறைத்துக்கொள்ளவே, அவர் அவர்களுக்கிடையிலிருந்து கடந்து, தமது பாதையில் சென்றார். (3)

இரட்சிப்பின் மாபெரும் திட்டம் தோல்வி அடைந்துவிடுமென்று அவன் தொடர்ந்து நம்பியிருந்தான். அவருக்கெதிராக மக்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தவும் இயேசுவுக்கெதிரான அவர்களது உணர்ச்சிகளைக் கசப்பாக்கவும், சாத்தான் அவனுடைய வல்லமைகள் அனைத்தையும் செயல்படுத்தினான். இவ்வளவு சிறிய கூட்டத்தினருக்காக நான் இவ்வளவு பெரிய பாடுகளையும் தியாகங்களையும் சகிக்க வேண்டுமா என்று இயேசு ஆலோசிக்கும்படி, ஒரு சிலர் மட்டுமே அவரை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று அவன் நம்பினான்; ஆனால் இருவர் மட்டுமே இயேசுவை தேவகுமாரனாக ஏற்றுக்கொண்டு தங்களுடைய ஆத்துமாக்களை இரட்சிக்கும்படி அவரை நம்பியிருந்தாலும்கூட, அவர் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியிருந்திருப்பார் என்பதை நான் கண்டேன்! (4)

## பரம வைத்தியர்—இயேசு!

பாடுகள் அனுபவித்துக்கொண்டிருந்தவர்களின்மீது சாத்தானுக்கிருந்த வல்லமையைத் தகர்த்துக்கொண்டு, இயேசு அவருடைய பணியைத் தொடங்கினார். சந்தோஷத்தினால் துள்ளிக்குதித்து, தேவனை மகிமைப்படுத்தும்படி அவர் நோயுற்றவர்களை சுகப்படுத்தினார். குருடருக்குப் பார்வையைக் கொடுத்தார். முடவர்களை குணப்படுத்தினார். சாத்தானின் கொடூரமான வல்லமையினால் பல வருடங்களாகக் கட்டிவைக்கப்பட்டிருந்தவர்களை—மனச்சோர்வடைந்திருந்தவர்களைத் தமது கிருபைமிக்க வார்த்தைகளால் ஆறுதல்படுத்தினார். சாத்தான் வெற்றிகரமாகப்

பாடுகளில் கட்டிவைத்திருந்தவர்களுக்கு, பூரண சரீர சுகத்தையும் பெரும் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் கொண்டுவரும்படி இயேசு அவர்களை அவனது பிடியிலிருந்து விலக்கினார். அவர் மரித்தவர்களை எழுப்பினார். அவர்கள் அவருடைய வல்லமையின் வெளிக்காட்டலுக்காக, தேவனை மகிமைப்படுத்தியிருந்தனர். அவர்மீது நம்பிக்கைவைத்த அனைவருக்காகவும் அவர் வல்லமையுடன் செயலாற்றினார். (5)

கிறிஸ்துவின் வாழ்க்கையும் வார்த்தைகளும் அனுதாபமிக்க செயல்களும் அனுதாபம், அன்பு ஆகியவைகளால் நிறைந்திருந்தன. அவரிடம் வந்தவர்களின் துயரங்களைக் கவனித்து, நிவாரணம் அளிப்பதற்கு அவர் எப்பொழுதும் கவனமுள்ளவராகவே இருந்தார். அவரது தெய்வீக வல்லமையின் சான்றினைத் திரளானவர்கள் தங்களுடைய சரீரங்களில் சுமந்துசென்றிருந்தனர். அப்படியிருந்தபோதிலும், நலமடைந்த பின்னர் வல்லமைமிக்க அந்தப் போதகரைப்பற்றி வெட்கப்படுபவர்களாகவே இருந்தனர். அதிபதிகள் அவரை நம்பாமலிருந்ததினால், இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜனங்கள் விருப்பமற்றவர்களாக இருந்தனர். அவர் துயரமிக்கவராகவும் துன்பங்களுடன் அறிமுகமானவராகவுமிருந்தார். அவருடைய நிதானமும் சுயமறுப்புமிக்க வாழ்க்கையினால் ஆளுகைசெய்யப்படுவதையும் சகிக்க முடியாதவர்களாக அவர்கள் இருந்தனர். உலகம் தருகின்ற கனத்தை அனுபவித்துக்கொள்ள அவர்கள் விரும்பியிருந்தனர். அப்படி இருந்தபோதிலும், அநேகர் தேவகுமாரனைப் பின்பற்றினர்; அவருடைய போதனைகளைக் கவனித்திருந்தனர்; அவருடைய உதடுகளிலிருந்து கிருபைமிக்க வார்த்தைகளை அவர்கள் விருந்தாக உண்டிருந்தனர்; அவரது வார்த்தைகளெல்லாம் பொருள் நிறைந்தவைகளாக இருந்தன; ஆனாலும் மிகவும் பலவீனர்களும்கூட (கல்வியறிவு இல்லாதவர்கள்) புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில், அவை தெளிவானவையாக இருந்தன. (6)

## பலனற்ற எதிர்ப்பு!

சாத்தானும் அவனுடைய தூதர்களும் யூதர்களின் கண்களைக் குருடாக்கி, புரிந்துகொள்ளுதலை இருளடையச்செய்து, ஜனங்களின் தலைவனையும் அதிபதிகளையும் இரட்சகரின் உயிரை எடுத்துவிடும்படி கலங்கச்செய்திருந்தனர். இயேசுவைத் தங்களிடம் கொண்டுவரும்படி மற்றவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர்; ஆனால் அவர் இருந்த இடத்திற்கு அவர்கள் சென்றபோது, பெரிதும் வியப்படைந்தனர். மனித ஆத்துமாக்களை அவர் காணும்போது, அனுதாபமும் உருக்கமனமும் உடையவராக இருப்பதை அவர்கள் கண்டனர். பலவீனமானவர்களிடத்திலும் துன்பப்பட்டிருந்தவர்களின்

இடத்திலும் மென்மையாகவும் தைரியமூட்டும் விதத்திலும் அவர் பேசுவதை அவர்கள் கேட்டனர். வல்லமைமிக்க குரலுடன் சாத்தானைக் கடிந்துகொண்டு, அவனுக்கு அடிமைகளாக இருந்தவர்களை, விடுதலை பெற்றவர்களாகச் செல்லும்படி அவர் கூறியதை அவர்கள் கேட்டனர். அவரது உதடுகளிலிருந்து ஞானமிக்க வார்த்தைகளை அவர்கள் கவனித்தனர்; அதினால் அவர்கள் கவரப்பட்டனர். அவர்களால் அவர் மீது கைவைக்கமுடியவில்லை. அவர்கள் இயேசுவைப் பிடித்துவராமல் ஆசாரியர்கள், அதிபதிகள் ஆகியோர்களிடம் சென்றனர். (7)

நீங்கள் ஏன் அவரைக் கொண்டுவரவில்லை என்று கேட்டபோது அவர்கள் தாங்கள் கண்ட அற்புதங்களையும் இரக்கம் நிறைந்த பரிசுத்தமான வார்த்தைகளையும் அன்பையும் அவர்கள் கேட்ட அறிவையும் அவர்களுக்கு விவரித்து, அந்த மனிதனைப்போல் ஒருவரும் ஒருபோதும் பேசவில்லை என்றனர். நீங்களும் வஞ்சிக்கப்பட்டுப் போனீர்களா என்று பிரதான ஆசாரியர்கள் கூறியபோது, அவரைப் பிடித்துக்கொண்டு வராததற்காகச் சில அதிகாரிகள் வெட்கப்பட்டனர். ஆசாரியர்கள் பரிகாசமான விதத்தில், அதிபதிகளில் யாராவது அவரை விசுவாசித்திருக்கிறார்களா? என்று கேட்டனர். அநேக நீதிபதிகளும் அதிகாரிகளும் இயேசுவை நம்பினதையும், ஆனால் அதனை வெளிப்படையாக ஒப்புகைசெய்யாதபடி, சாத்தான் அவர்களைத் தடுத்திருந்ததையும், தேவனுக்குப் பயப்படுவதைவிட அதிகமாக அவர்கள் மக்களின் நிந்தைக்குப் பயந்திருந்ததையும் நான் கண்டேன். இம்மட்டும் சாத்தானுடைய தந்திரமும் வெறுப்பும் இரட்சிப்பின் திட்டத்தை உடைக்கவில்லை. இயேசு எந்த நோக்கத்திற்காக இந்த உலகத்திற்கு வந்திருந்தாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றவேண்டிய நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. கிறிஸ்துவின் சொந்த ஜாதியினரே அவருடைய இரத்தத்திற்காக வெறியுடன் குரல் எழுப்பவும் அவர்மீது கொடூரத்தையும் பரிகாசத்தையும் குவிக்கவும், அவர்களைத் தூண்டிவிடுவதற்காக சாத்தானும் அவனது தூதர்களும் ஒருமித்து ஆலோசித்து முடிவுசெய்தனர். இந்த வகையான நடத்துதலுக்கு இயேசு ஆட்சேபம்செய்து, அவருடைய தாழ்மையையும் எளிமையையும் செயல்படுத்தாமல் இருந்துவிடுவார் என்று அவர்கள் நம்பினார்கள். (8)

சாத்தான் அவனது திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தபோது அவர் கடந்துசெல்லவேண்டியதாக இருந்த பாடுகளைப்பற்றி—அவர் சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம்நாளில் உயிர்த்தெழவேண்டும் என்று அவரது சீடர்களுக்கு மிகவும் ஜாக்கிரதையாக விவரித்திருந்தார். ஆனால் அவர்களுடைய புரிந்துகொள்ளும் திறன் மந்தமாக இருப்பதுபோல் காணப்பட்டு,

அவர் என்ன கூறினார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளமுடியாதவர்களாக இருந்தனர். (9)

**மறுரூபமடைதல்!**

கிறிஸ்துவின் மகிமையைக் காணவும் அவருடைய தெய்வீகத் தன்மையைப்பற்றி சாட்சிபகரும் வானத்திலிருந்துண்டான குரலைக் கேட்கவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டபோது, சீடர்களின் விசுவாசம் பெரிய அளவிற்கு பலப்படுத்தப்பட்டது. அவருடைய சிலுவை மரணத்தினால் உண்டாகக்கூடிய மனமடிவினால், அவர்கள் தங்களுடைய நம்பிக்கையை முழுவதுமாக விட்டுவிடக்கூடாது என்பதற்காக, இயேசுதான் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா என்பதற்கான, பலத்த சான்றினைக் கொடுப்பதை தேவன் தேர்ந்துகொண்டார். மறுரூபமடைதலின்போது, இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் குறித்து, இயேசுவிடம் பேசும்படி கர்த்தர் மோசேயையும் எலியாவையும் அனுப்பினார். அவருடைய குமாரனுடன் பேசுவதற்கு தூதர்களைத் தேர்ந்துகொள்ளுவதற்குப் பதிலாக, பூமியின் சோதனைகளில் அனுபவம் அடைந்தவர்களாக இருந்த அவர்களையே தெரிந்துகொண்டார். (10)

எலியா தேவனுடன் சஞ்சரித்திருந்தான். அவனுடைய பணிவேதனை மிக்கதும் சோதனை நிறைந்ததுமான இருந்தது. ஏனெனில் கர்த்தர் அவன்மூலமாக இஸ்ரவேலின் பாவங்களைக் கடிந்துகொண்டிருந்தார். எலியா தேவனுடைய ஒரு தீர்க்கதரிசியாக இருந்தான். அப்படியிருந்தும் அவன் தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்காக, இடம்விட்டு இடம் ஒடும்படி வற்புறுத்தப்பட்டிருந்தான். அவனை அழிக்கும்படி அவனுடைய ஜாதியினர் ஒரு காட்டு மிருகத்தை வேட்டையாடுவதுபோல் விரட்டியிருந்தனர். ஆனால் தேவன் எலியாவை மறுரூபப்படுத்தினார். மகிமையிலும் வெற்றியிலும் தேவதூதர்கள் அவனைப் பரலோகத்திற்கு எடுத்துச்சென்றனர். (11)

தனக்குமுன் வந்திருந்த அனைவரையும்விட மோசே மிகவும் பெரியவனாக இருந்தான். ஒரு மனிதன் தனது நண்பனுடன் பேசுவதுபோல், கர்த்தருடன் முகமுகமாகப்பேசுகின்ற வாய்ப்பினைப்பெற்றவனாக, தேவனால் மிகவும் மேன்மைப்படுத்தப்பட்டவனாக இருந்தான். பிதாவைச் சூழ்ந்திருந்த பிரகாசமான ஒளியையும் மேலான மகிமையையும் காணும்படி அவன் அனுமதிக்கப்பட்டிருந்தான். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மோசேயின் மூலமாகக் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்திருந்தார். மோசே அடிக்கடி தன்னுடைய ஜனங்களுக்கும் தேவனுடைய கோபத்திற்கும் இடையில் ஒரு மத்தியஸ்தனாக இருந்தான். இஸ்ரவேலரின் நம்பிக்கையின்மை, முறுமுறுப்பு

சாவுக்கேதுவான பாவங்கள் ஆகியவைகளுக்கெதிராகக் கர்த்தருடைய கோபம் பற்றியெரிந்தது; ஆகையால் அவர்கள்மீதான மோசேயின் அன்பு சோதிக்கப்பட்டிருந்தது. அவர்களை அழித்துவிட்டு, அவனை ஒரு பலத்த ஜாதியாக்க தேவன் உத்தேசித்தார். அவர்கள் சார்பில் பரிந்துபேசுவதினால், மோசே இஸ்ரவேலின்மீதிருந்த அவனுடைய அன்பைக் காட்டியிருந்தார். அவனுடைய துன்பத்தில், அவன் தேவனை நோக்கி, இஸ்ரவேலருக்கெதிரான பயங்கரமான கோபத்தைவிட்டு அவர் திரும்பவேண்டுமென்றும், இல்லாவிட்டால் அவருடைய புஸ்தகத்திலிருந்து அவனுடைய பெயரை நீக்கிப்போடவேண்டும் என்றும் அவன் விண்ணப்பம் செய்தான். மோசே மரணத்துக்குள் கடந்துசென்றான். ஆனால் அவனுடைய சரீரம் அழிவைக் காணுமுன் (மிகாவேல்) கிறிஸ்து வந்து, அவனுக்கு ஜீவனைக் கொடுத்தார். அந்த சரீரம் தனக்குச் சொந்தமானது என்று உரிமைபாராட்டி, அதைப் பிடித்துவைத்துக்கொள்ள சாத்தான் முயற்சி செய்தான்; ஆனால் மிகாவேல் மோசேயை எழுப்பிப் பரலோகத்திற்கு அழைத்துச்சென்றார். தன்னுடைய இரையை (மோசேயை), தன்னைவிட்டு எடுப்பது அநீதி என்று சாத்தான் வெளிப்படையாகக் குற்றம் சாட்டினான்; தேவனுடைய ஊழியக்காரனாக இருந்த மோசே, சாத்தானின் சோதனையின்மூலமாக விழுந்திருந்தபோதிலும், சாத்தானை கிறிஸ்து கடிந்துகொள்ளவில்லை. அவர் மிகுந்த சாந்தமுடன் கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்ளுவாராக (யூதா 9) என்று தமது பிதாவைக் குறிப்பிட்டார். (12)

இயேசுவுடன் நிற்பவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் வல்லமையுடன் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று அவர் தமது சீடர்களிடம் கூறியிருந்தார். மறுரூபமடைதலில் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது. அங்கு அவருடைய முகம் மாறி, சூரியனைப்போல பிரகாசித்தது. அவருடைய உடை வெண்மையாகவும் ஒளிவீசுவதாகவும் இருந்தது. இயேசுவின் இரண்டாம் வருகையின் போது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழ உள்ளவர்களை எடுத்துக்காட்ட மோசே இருந்தான். மரணத்தைக் காணாமல் மறுரூபமாக்கப்பட்ட எலியா, இயேசுவின் இரண்டாம் வருகையின்போது, மரணத்தைக் காணாமல் அழிவில்லாமைக்கு மாற்றப்பட்டு பரலோகத்திற்கு மறுரூபமாக்கப்பட இருப்பவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருந்தான். சீடர்கள் ஆச்சரியத்துடனும் பயத்துடனும் இயேசுவின் மகத்துவத்தையும் அவர்மீது ஒரு மேகம் நிழலிட்டதையும் கண்டனர். “இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்” என்னும் சத்தத்தையும் கேட்டனர். (13) ★

# 27

# இயேசு காட்டிக்கொடுக்கப்படுதல்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 208–212)**
**திருவசன ஆதாரம் : மத்தேயு 26:54; லூக்கா 22:42.**

பஸ்கா போஜனத்தை இயேசு தமது சீஷர்களோடு புசித்த அந்த நேரத்திற்கு நான் எடுத்துச்செல்லப்பட்டேன். சாத்தான் யூதாஸை ஏமாற்றி, அவனும் கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களில் ஒருவன் என்று நினைக்கும்படிச்செய்தான்; ஆனால், அவனது இதயமோ எப்பொழுதும் மாம்ச சிந்தைக்கு ஏற்றதாக இருந்தது. அவருடைய ஊழியத்தின் காலம் முழுவதும் கூடவே இருந்து அவருடைய மகத்துவமான கிரியைகளைக் கண்டவன். அவர்தான் மேசியா என்ற மிகவும் வல்லமையுள்ள ஆதாரத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்திருந்தான்; எனினும், இச்சையும் பேராசையும் மிகுந்து காணப்பட்டான். பணத்தை நேசித்தான். இயேசுவின்மேல் பூசப்பட்ட விலையுயர்ந்த நறுமண தைலத்தைக்குறித்துக் குற்றஞ்சாட்டி கோபங்கொண்டான். (1)

மரியாள் அவளுடைய ஆண்டவரை நேசித்தாள். அவளுடைய ஏராளமான பாவங்களை அவளுக்கு அவர் மன்னித்திருந்தார். அவளால் அதிகமாக நேசிக்கப்பட்ட சகோதரனை மரித்தோரிலிருந்து எழுப்பியிருந்தார். அவளுக்கு இயேசுவின்மேல் பூசக்கூடாத அளவிற்கு எந்த பொருளும் அருமையானதாகத் தோன்றவில்லை. அந்த பரிமளதைலம் எவ்வளவு அருமையானதோ, அவ்வளவு நன்றாக அவள் தனது நன்றியை தனது மீட்பருக்குத் தெரிவிக்கமுடியும்; எனவே, அதை அவருக்கு அர்ப்பணித்தாள்.

யூதாஸோ தனது பேராசையால், இந்தத் தைலத்தை விற்று அந்தப் பணத்தை ஏழைகளுக்குக் கொடுக்கலாமே எனச் சாக்குப்போக்கு கூறினான்; ஏழைகளுக்காகக்கொண்ட கவலையினால் அவன் அதைக் கூறவில்லை. ஏழைகளுக்காகக் கொடுக்கும்படி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களை தனக்காக உபயோகித்துக் கொள்ளுமளவிற்கு தன்னலமுடையவனா யிருந்தான். இயேசுவின் சௌகரியங்களுக்கும் ஏன்

தேவைகளுக்குங்கூட அவன் கவனஞ்செலுத்தவில்லை. தன்னுடைய பேராசையை மறைப்பதற்காகவே ஏழைகளைப்பற்றியே எப்பொழுதும் குறிப்பிட்டுப் பேசினான். மரியாளின் இந்தத் தாராள மனப்பான்மை அவனுடைய பேராசையுள்ள மனநிலைக்கு ஒரு வெட்டிப் பிளக்கும் கண்டனமாக அமைந்தது. யூதாஸின் இதயத்திலே சாத்தானின் சோதனை வழிகண்டடைய ஒரு வரவேற்பு ஆயத்தமாக இருந்தது. (2)

யூத அதிகாரிகளும் ஆசாரியர்களும் இயேசுவை வெறுத்தார்கள். ஆனால், ஞானமுள்ள உபதேசங்களைக் கேட்பதற்காகவும், அவருடைய வல்லமையான செய்கைகளைக் காண்பதற்காகவும் திரள்கூட்டம் நெருங்கி வந்து அவருக்குச் செவிசாய்த்தது. மக்களுக்கு ஆழ்ந்த ஆவலும் எழுச்சியும் உண்டாயிற்று. இந்த அதிசயமான போதகரின் போதனையைக் கேட்பதற்காக ஆவலோடு பின்தொடர்ந்தார்கள். அநேக அதிகாரிகள் அவர்மேல் நம்பிக்கை வைத்திருந்தார்கள்; ஆனால், ஆலயத்திலிருந்து தங்களைப் புறம்பாக்கிப்போடுவார்களே என்ற பயத்தால், துணிந்து தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடவில்லை. இயேசுவிடமிருந்து மக்களுடைய கவனத்தைத் திருப்புவதற்காக ஏதாவது செய்யப்படவேண்டுமென்று ஆசாரியர்களும் மூப்பர்களும் தீர்மானித்தார்கள். எல்லோரும் அவரில் விசுவாசம் வைத்து விடுவார்களெனப் பயந்தார்கள். தங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லையெனக் கண்டார்கள். தங்களது பதவிகளை கட்டாயமாக இழக்கவேண்டும் அல்லது இயேசு மரிக்கவேண்டும். அவரைக் கொலைசெய்த பிறகுங்கூட, அவருடைய வல்லமையின் உயிருள்ள ஞாபகார்த்தங்களாக மேலும் அநேகர் இருப்பார்கள். (3)

இயேசு மரித்த லாசருவை உயிரோடு எழுப்பினார். இயேசுவைக் கொலைசெய்வார்களானால், அவருடைய மகத்துவமான வல்லமைபற்றி லாசரு சாட்சிகூறுவான் என்று பயந்தார்கள். மரித்து உயிரோடெழுப்பப்பட்ட லாசருவைப் பார்க்க அநேகமக்கள் கூட்டங்கூட்டமாக வந்தார்கள். லாசருவையும் கொலைசெய்துவிட்டால், இந்தப் பரபரப்பை அமைதியாக்கி விடலாமென்று அதிகாரிகள் திட்டமிட்டனர்; பின்பு, மக்களின் கொள்கைகள் பாரம்பரியங்களின்படி ஒற்றலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் கொடுக்கச்செய்து, மறுபடியும் அவர்கள்மேல் செல்வாக்கை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று எண்ணினார்கள். இயேசு தனியாக இருக்கும்போது, அவரைப் பிடிக்கத் தீர்மானித்தார்கள். அவர் கூட்டத்தோடு செல்கையில் பிடிக்க எத்தனிப்பார்களானால், மக்களின் மனது அவரைச் சார்ந்திருக்கிறபடியால், அவர்கள் கல்லெறியப்படுவார்கள் என்பதை அறிந்திருந்தனர். (4)

பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் இயேசுவைப் பிடிக்க எவ்வளவு ஆவலாயிருந்தார்கள் என்பதை யூதாஸ் அறிவான். ஒரு சில வெள்ளிக் காசுகளுக்காக அவர்களிடம் காட்டிக்கொடுப்பதாக அவனும் சம்மதித்தான். பணத்தின்மேல் யூதாசுக்கு இருந்த ஆசை, தனது ஆண்டவரை அவருடைய பயங்கரமான விரோதிகளிடத்திலே காட்டிகொடுக்கும்படியாக சம்மதிக்க வைத்தது. யூதாஸின்மூலமாக சாத்தான் நேரடியாக வேலைசெய்தான். உள்ளத்தைக் கவரும் அந்த இராப்போஜன விருந்தின் நேரத்திலே, தனது ஆண்டவரைக் காட்டிக்கொடுக்கத் திட்டம் வகுத்துக்கொண்டிருந்தான். என்னிமித்தம், இந்த இரவிலே நீங்கள் அனைவரும் இடறலடைவீர்களென்று துக்கத்தோடு இயேசு தமது சீஷர்களிடத்தில் கூறினார். ஆனால், பேதுரு மிகுந்த ஆர்வத்தோடு இயேசுவினிமித்தம் எல்லோரும் இடறலடைந்தாலும், தான் ஒருபோதும் இடறலடைப்போவதில்லையென உறுதியோடு கூறினான். இயேசு பேதுருவை நோக்கி: "இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு, உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு, உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" (லூக்கா 22:31,32) என்றார். (5)

## தோட்டத்தில்!

இயேசுவை தமது சீஷர்களோடு தோட்டத்திலே நான் கண்டேன். மிகுந்த துக்கங்கொண்டவராக, அவர்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணும்படிக் கூறினார். அவர்கள் விசுவாசத்தில் சோதிக்கப்படவும், ஏமாற்றத்தைச் சந்திக்கவும் வேண்டியதிருந்தது என்பதை அவர் அறிவார். அதிக விழிப்பாக, ஊக்கமாக ஜெபஞ்செய்வதால்தான் தங்களுக்கு வேண்டிய ஆவிக்குரிய பெலனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறிவார். மிகுந்த சத்தத்தோடும் கண்ணீரோடும்: "பிதாவே உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிச் செய்யும்; ஆயினும், என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக்கா 22:42) என்று ஜெபித்தார். மகா துயரத்தோடு தேவகுமாரன் ஜெபித்தார். இரத்தத்தின் பெருந்துளிகள் அவரது முகத்தில் அரும்பி தரையிலே விழுந்தன. மேலே பரவிநின்ற தூதர்கள் இந்தக் காட்சியைக் கண்டார்கள். தேவனுடைய கடுந்துயரத்தின் வேளையிலே ஒரு தூதனுக்கு மாத்திரம் இயேசுவை பெலப்படுத்தும்படிச் செல்ல கட்டளை கொடுக்கப்பட்டது. பரலோகமெங்கும் மகிழ்ச்சி இல்லை. தூதர்கள் தங்களது கிரீடங்களையும் சுரமண்டலங்களையும் அகற்றிப்போட்டு, ஆழ்ந்த அக்கறையோடு அமைதியாக இயேசுவைக் கவனித்தார்கள். தேவகுமாரனைச்

சூழ்ந்து நிற்க ஆவல்கொண்டார்கள்; ஆனால், தலைமைத் தூதர்கள் அதை அனுமதிக்கவில்லை; ஏனெனில், அவர் காட்டிக்கொடுக்கப்படுவதை அவர்கள் காண்பார்களானால், இயேசுவை விடுதலைசெய்துவிடுவார்கள்; போடப்பட்ட திட்டம் நிச்சயமாக நிறைவேறியாகவேண்டும். (6)

இயேசு ஜெபித்த பின்பு சீஷர்களிடத்திற்கு வந்தார்; ஆனால், அவர்களோ தூங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த பயங்கரமான வேளையிலே தமது சீஷர்களின் அனுதாபமும், ஜெபமுங்கூட அவருக்கில்லை. சற்று முன்பாக மிகுந்த ஆர்வத்தைக்காட்டிய பேதுருகூட ஆழ்ந்த தூக்கத்திலிருந்தான். அவன் திட்டமாகக் கூறியவைகளைக்கொண்டு: “ஒரு மணிநேரமாவது என்னோடு விழித்திருக்கக்கூடாதா?” (மத்தேயு 26:40) என்றார். கடுந்துயரோடு மூன்று தடவைகள் தேவகுமாரன் ஜெபித்தார்; (7)

## யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுக்கிறான்!

பின்பு, ஆயுதம் தாங்கிய கூட்டத்தோடு யூதாஸ் அங்கு தோன்றினான். அவருக்கு வழக்கமாக வந்தனஞ்செய்வதுபோல் அவரை நெருங்கினான். கூட்டம் இயேசுவைச் சூழ்ந்தது; ஆனால், இயேசு தமது தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தி, அவர்களை நோக்கி: “யாரைத் தேடுகிறீர்கள்? நான்தான் அவர்” என்று கூறினார். அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அவர்கள் அவரது வல்லமையை உணரவேண்டும் என்பதற்காகவும், அவர்களுடைய கரங்களினின்று அவர் தன்னை விடுவித்துக்கொள்ள விரும்பினால், அதுவும் அவரால் முடியுமென்பதை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்பதற்காகவுமே இயேசு இதைக் கேட்டார். (8)

தடிகளோடும், ஆயுதங்களோடும் வந்த திரள் கூட்டம் திடீரென்று விழுந்தமாத்திரத்தில், சீஷர்களுக்கு நம்பிக்கை துளிர்விட ஆரம்பித்தது. அவர்கள் திரும்பவும் எழுந்து, தேவகுமாரனைச் சூழ்ந்தபோது, பேதுரு பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை காதற வெட்டினான். இயேசு அவனுடைய பட்டயத்தை அதன் உறையிலே போடச் சொல்லி, அவனை நோக்கி: “நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?” (மத்தேயு 26:53) என்றார். அவர் இந்த வார்த்தைகளைக் கூறியபோது, நம்பிக்கையினால் தூதர்களின் முகங்களில் ஆர்வம் நிரம்பியதை நான் கண்டேன். அப்பொழுது தங்களது தலைவரைச் சூழ்ந்து கொந்தளிக்கும் அந்த மக்கள் கூட்டத்தைச் சிதறடிக்க விரும்பினார்கள். இயேசு மறுபடியும்:

“அப்படிச் செய்வேனானால், இந்தவிதமாகச் சம்பவிக்க வேண்டுமென்கிற வேத வாக்கியங்கள் எப்படி நிறைவேறும்” (மத்தேயு 26:54) என்று கூறியபோது, தூதர்களின் முகங்களில் துக்கம் நிறைந்தது. இயேசு அவரது விரோதிகளால் நடத்திச்செல்லப்படுவதை சீஷர்கள் கண்டபோது, மனமுறிவடைந்து கசப்பான ஏமாற்றத்திற்குள்ளானார்கள். (9)

சீஷர்கள் அனைவரும் தங்களது சொந்த உயிருக்குப் பயந்து அவரைக் கைவிட்டு ஓடிவிட்டார்கள். கொலைகாரக் கூட்டத்தின் கைகளிலே இயேசு தனியாக விடப்பட்டார். ஆ! சாத்தானுக்கு எத்தகைய வெற்றி! ஆனால் தேவ தூதர்களின் துக்கத்தையும் துயரத்தையும் என்னவென்று சொல்வது! அநேக தூதர்கள் கூட்டம், ஒவ்வொன்றும் ஒரு நெடிய தலைமைத் தூதனுக்கடியில் இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காக அனுப்பப்பட்டது. தேவகுமாரனுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளையும் பேசப்பட்ட ஒவ்வொரு நிந்தனையான வார்த்தைகளையும் அவர்கள் பதிவுசெய்யவேண்டும். இயேசு அனுபவிக்கவேண்டிய ஒவ்வொரு கடுந்துயரையும் பதிவுசெய்யவேண்டும்; ஏனெனில், இந்தப் பயங்கர காட்சியில் சம்பந்தப்பட்ட அதே மனிதர்கள், இதே காரியங்களை மறுபடியும் உயிருள்ள எழுத்துக்களில் காண்பார்கள். (10) ★

# 28

# இயேசுவைப்பற்றிய நியாயவிசாரணை!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 213–219)**
**திருவசன ஆதாரம் : மத்தேயு 26:33; லூக்கா 22:64**

தூதர்கள் மிகுந்த துக்கத்தோடு, தங்களுடைய ஒளிமிகுந்த கிரீடங்களை கழற்றிவைத்துவிட்டு, பரலோகத்தைவிட்டு வந்தார்கள். தங்களது படைத்தலைவர் துன்பத்தை அனுபவித்து முட்கிரீடம் அணியவிருக்கின்றபடியால், அவர்கள் தங்களது பொற்கிரீடங்களை அணிய விரும்பவில்லை. நீதிமன்றத்திலே சாத்தானும் அவனது தூதர்களும், மனுஷீக சிந்தனையையும் அனுதாபத்தையும் அழித்துப்போடுவதற்காக, துரிதமாக வேலைசெய்துவந்தார்கள். அந்தச் சூழ்நிலையே பாரமாயும் அவர்களது செல்வாக்கினால் மிகவும் கேடுபாடு நிறைந்ததாயும் இருந்தது. மனிதரால் சகிக்கக்கூடாத அளவிற்கு மிகவும் கடினமான முறையிலே, சாத்தான் பிரதான ஆசாரியர்களையும் மூப்பர்களையும் தூண்டிவிட்டு, இயேசுவை நிந்தித்து கேவலப்படுத்தும்படிச்செய்தான். இந்தவிதமான கேலியையும் வன்முறையையும் சகிக்கமுடியாமல், தேவகுமாரன் குற்றஞ்சாட்டி முறுமுறுப்பார் என்று சாத்தான் நம்பினான்; அல்லது, அவர் தமது தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தி, இந்தத் திரளான மக்களின் பிடியிலிருந்து, தன்னைத் தப்புவித்துக்கொள்வார்; இவ்வாறாக, இரட்சிப்பின் திட்டமே இறுதியில் தோல்வியடையும் என்றும் எதிர்பார்த்தான். (1)

### பேதுருவின் மறுதலிப்பு!

இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டபின்பு, பேதுரு அவரைப் பின்தொடர்ந்தான். இயேசுவிற்கு என்ன செய்யப்படும் என்பதைக் காண அக்கறையோடிருந்தான்; ஆனால், தானும் அவருடைய சீஷர்களில் ஒருவன்தான் என்று குற்றஞ்சாட்டப்பட்டபோது, தனது பாதுகாப்பைப்பற்றிய பயம் அவனைப் பிடித்துக்கொண்டதால், அந்த மனிதனை அறியேன் என்று

கூற ஆரம்பித்தான். சீஷர்களின் பேச்சு எப்பொழுதும் சுத்தமாக இருக்கும் என்பது யாவருக்கும் தெரியும். தான் கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவன் அல்ல என்று தன்னைக் குற்றஞ்சாட்டியவர்களை நம்பச்செய்வதற்காக மூன்றாம் தடவையும் மறுதலித்து, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் ஆரம்பித்தான். பேதுருவிற்கு சற்று தூரத்தில் நின்ற இயேசு, துக்கத்தோடு பார்வையால் கடிந்துகொண்டார். மேலறையில் இயேசு தன்னோடு பேசிய வார்த்தைகளை பேதுரு நினைவுகூர்ந்தான்; மேலும், தானும் இயேசுவை நோக்கி: "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" (மத்தேயு 26:33) என்று உறுதியாகக் கூறியதையும் நினைத்தான். சபித்தும் சத்தியஞ்செய்தும் தனது ஆண்டவரை மறுதலித்துவிட்டான்; ஆனால், இயேசுவின் அந்தப் பார்வை பேதுருவின் இருதயத்தை உருக்கி, அவனைக் காப்பாற்றியது. தனது பெரிய பாவத்தினிமித்தம் மனந்திரும்பி, மனங்கசந்து அழுதான்; எனவே, பேதுரு மனந்திரும்பி, சகோதரரை பெலப்படுத்த ஆயத்தமானான். (2)

## நியாயவிசாரணை மண்டபத்தில்!

திரள் கூட்டம் அவரது இரத்தத்திற்காகக் கூச்சலிட்டது. அவரை வாரினால் கொடுமையாக அடித்தார்கள். அரசர்கள் அணியும் பழைய சிவப்பு அங்கியை அவருக்கு உடுத்துவித்தார்கள். அவரது பரிசுத்த சிரசிலே முள்முடியைச் சூட்டினார்கள். அவர் கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு, "யூதருடைய இராஜாவே, வாழ்க" என்று அவரைப் பரிகாசம்பண்ணி, வணக்கஞ்செலுத்தினார்கள்; பின்பு, அந்தக் கோலை அவர் கையினின்று வாங்கி, அவருடைய சிரசில் அடித்தார்கள். அப்பொழுது முட்கள் அவரது நெற்றியிலே அழுந்தியதால், இரத்தம் அவரது முகத்திலும் தாடியிலும் கசிந்தொழுகியது. (3)

அந்தக் காட்சியை தூதர்களால் சகிக்கமுடியவில்லை. இயேசுவை விடுதலைசெய்திருப்பார்கள்; ஆனால், கட்டளைகொடுக்கும் தூதர்கள் அதைத் தடுத்துவிட்டார்கள்; ஏனெனில், மனிதனுக்காகச் செலுத்தப்படவேண்டிய மாபெரும் பிணையம் அதுவே என்றும், இது முற்றுப்பெறும்போது, மரணத்தின் மேல் வல்லமைகொண்ட சாத்தானின் மரணத்திற்குக் அதுவே காரணமாகும் என்றும் கூறினார்கள். தான் அவமானமடையும் அந்தக் காட்சியை தூதர்கள் பார்த்துக்கொண்டிருப்பதை இயேசு அறிவார். பலவீனமான தூதன்கூட, கேலிசெய்யும் அந்தத் திரள் கூட்டத்தை வலிமையற்று விழச்செய்து இயேசுவை விடுவித்திருக்கமுடியும். தம்முடைய பிதாவினிடத்தில் கேட்க விரும்பியிருப்பாரானால், அந்தக் கணமே தூதர்கள் அவரை விடுதலை

செய்திருப்பார்கள். மீட்பின் திட்டத்தை ஏற்று நடத்துவதற்காக துன்மார்க்கரின் வன்முறையை அனுபவிக்கவேண்டியது அவசியமாயிருந்தது. (4)

வெறிமிகுந்த திரள்கூட்டத்திற்குமுன்பாக, அவர்கள் அவரை கேவலமான வார்த்தைகளால் நிந்தித்தபோது, இயேசு பணிவாகவும் தாழ்மையாகவும் நின்றார். எந்த முகத்தைக்கண்டு ஒருநாள் மறைய விரும்புவார்களோ, தேவ பட்டணத்திற்கு வெளிச்சத்தைக் கொடுத்து, சூரியனைவிட பிரகாசிப்பது எந்த முகமோ—அந்த முகத்திலே துப்பினார்கள். தனக்கு துன்பம் கொடுப்பவர்களை கோபமாகக்கூடப் பார்க்கவில்லை. ஒரு பழைய துணியை எடுத்து அவரது தலையை மூடி, கண்களைக் கட்டி, அவருடைய முகத்திலே அறைந்து, "உன்னை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் சொல்" (லூக்கா 22:64) என்று உரத்தசத்தமிட்டார்கள். தூதர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது. உடனே அவரைத் தப்புவித்திருப்பார்கள்; ஆனால், தலைமைத் தூதர்கள் அவர்களைக் கட்டுப்படுத்தினார்கள். (5)

சீஷர்களில் சிலர் நம்பிக்கையில் தேறியவர்களாய், இயேசு இருக்கும் இடம்வரை சென்று, விசாரணையைப் பார்த்தார்கள். அவர் தமது தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தி, தமது விரோதிகளின் கரங்களினின்று விடுதலை பெற்று, தமக்கு அவர்கள் செய்த கொடுமைக்காக அவர்களைத் தண்டிப்பார் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். பலவிதமான காட்சிகள் மாறிமாறிச் செல்ல, அவர்களது நம்பிக்கையும் ஏறி—இறங்குவதாக இருந்தது. சில சமயங்களில் தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோமோ என்று சந்தேகப்படவும், பயப்படவும் ஆரம்பித்தார்கள்; ஆனால், மறுரூபமலையிலே தாங்கள் கேட்ட சத்தமும், தாங்கள் கண்ட மகிமையும், அவர் தேவகுமாரன்தான் என்ற விசுவாசத்தை பெலப்படுத்தியது. தாங்கள் கண்ட காட்சிகளையும், வியாதியஸ்தர்கள் குணமானதையும், குருடர்களின் கண்கள் திறக்கப்பட்டதையும், செவிடரின் செவி திறக்கப்பட்டதையும், பிசாசுகள் கடிந்துகொள்ளப்பட்டு துரத்தப்பட்டதையும், மரித்தோர் உயிரோடெழுப்பப்பட்டதையும், காற்றும் கடலும் அமைதிப்படுத்தப்பட்டதுமாகிய அற்புதங்களை, தங்களது நினைவிற்குக் கொண்டுவந்தார்கள். (6)

அவர் மரிப்பார் என்பதை அவர்களால் நம்பமுடியவில்லை. இனியும் வல்லமையோடு வந்து, அதிகாரமுள்ள தொனியோடு இரத்தவெறிபிடித்த திரளான கும்பலை சிதறடிப்பார் என்றே நம்பினார்கள். தனியாக தேவாலயத்தில் நுழைந்து, அதை வியாபாரஸ்தலம் ஆக்கியவர்களை விரட்டியடிக்க, அவர்கள் அங்கிருந்து ஆயுதம் தாங்கிய போர்ச்சேவகர்கள் விரட்டியதைப்போல விரைந்து ஓடினார்களே, அதைப்போலவே இப்பொழுது

அவர் தமது வல்லமையை எழுப்பி, தமது அதிகாரத்தொனியினால் இரத்தப்பிரியரான அக்கூட்டத்தாரை விரட்டியடிப்பார் என்று நம்பினார்கள். இயேசு தமது வல்லமையை வெளிப்படுத்தி, அவர்தான் இஸ்ரவேலின் இராஜா என்பதை எல்லோரும் விளங்கிக்கொள்ளச் செய்வார் என்று சீஷர்கள் நம்பினார்கள். (7)

**யூதாசின் பாவ அறிக்கை!**

இயேசுவைக் காட்டிக்கொடுத்ததிலே, யூதாஸ், தான் செய்த நம்பிக்கைத் துரோகமான காரியத்தை எண்ணி, மனம் நொந்து, அவமானத்தால் நிறைந்தான். மீட்பர் சகித்த நிந்தனையை அவன் கண்டபோது, அவனால் தாங்கமுடியவில்லை. இயேசுவை நேசித்தான்; ஆனால், பணத்தை அதற்கும் அதிகமாக நேசித்தான். தான் அழைத்துக்கொண்டுவந்த திரள் கூட்டத்தினால் பிடிக்கப்பட இயேசு தம்மை அனுமதிப்பார் என்று யூதாஸ் நினைக்கவேயில்லை. அவர் ஒரு அற்புதத்தைச்செய்து, தன்னை அவர்களிடமிருந்து விடுவித்துக்கொள்வார் என எதிர்பார்த்தான்; ஆனால், நீதிமன்றத்தில் கொந்தளிக்கும் திரள்கூட்டமான மக்கள் இரத்த வெறிபிடித்து நிற்பதைக் கண்டபொழுது, தான் செய்த குற்றத்தை ஆழமாக உணர்ந்தான். இயேசுவை அநேகர் ஆவேசத்தோடு குற்றஞ்சாட்டும்பொழுது, யூதாஸ் ஜனத்திரளுக்குள்ளாகப் புகுந்தோடி, குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தேன் என்று அறிக்கைசெய்தான். தனக்குக் கொடுக்கப்பட்ட பணத்தை திருப்பிக்கொடுப்பதாகச் சொல்லி, இயேசு முற்றிலும் குற்றமற்றவர் என அறிவித்து, அவரை விடுதலை செய்யும்படியாகக் கெஞ்சினான். (8)

சிறிது நேரத்திற்கு எரிச்சலும் குழப்பமும் ஆசாரியர்களை அமைதியாக்கிற்று. இயேசுவின் பின்னடியார் என்று சொல்லிக்கொள்ளுகிற ஒருவருக்கே கைக்கூலிகொடுத்து, அவரைத் தங்களுக்கு காட்டிக்கொடுக்கவேண்டுமென்று அவர்கள் செய்த காரியத்தை மக்கள் தெரிந்துகொள்ளுவதை அவர்கள் விரும்பவில்லை. திருடனைப்போல அவரைப் பின்தொடர்ந்து, இரகசியமாகப் பிடித்துக்கொண்டுவந்ததை மறைக்க விரும்பினார்கள்; ஆனால், யூதாஸின் பாவ அறிக்கையும், அவனது விரும்பப்படாத அருவருக்கத்தக்க குற்றமுள்ள தோற்றமும், திரளான மக்களுக்கு முன்பாக ஆசாரியர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டுபோவதற்கு வெறுப்பே காரணம் என்று வெளிப்படுத்தியது. இயேசு குற்றமற்றவர் என்று யூதாஸ் உரத்துக் கூறியபோது, ஆசாரியர்கள்: “எங்களுக்கென்ன, அது உன்பாடு” (மத்தேயு 27:4) என்றார்கள். தங்களது வல்லமைக்குள்ளே இயேசு இருந்ததால், அவரை விடக்கூடாது என்ற திட்டத்தோடிருந்தார்கள். கடுந்துயரம் நிறைந்தவனாய், இப்பொழுது அவன் இழிவாகக் கருதின

அந்தப் பணத்தை, தன்னைக் கைக்கூலியாக அமர்த்திக்கொண்டவர்களது பாதத்தில் வீசி எறிந்துவிட்டு, மனக் கசப்போடு நடுக்கம் நிறைந்தவனாக அங்கிருந்து சென்று தூக்குப்போட்டுக்கொண்டான். (9)

இயேசுவைச் சுற்றியிருந்த கூட்டத்திலே, அவர்மேல் பரிவுகாட்டியவர்களும் இருந்தார்கள். அவரிடம் கேட்ட கேள்விகளில் அநேகத்திற்கு அவர் பதில் கொடுக்காதது, அங்கிருந்த கூட்டத்தை வியப்பிலாழ்த்தியது. அந்த மக்கள் கூட்டத்தில் கேலி, வன்முறை ஆகியவைகளுக்கு மத்தியில், கோபமோ, கலக்கமடைந்த தோற்றமோ அவரது முகபாவத்தில் காணப்படவில்லை. பெருந்தன்மையோடும் அமைதியோடும் காணப்பட்டார். அவரைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள், வியப்பினால் அவரை நோக்கிப் பார்த்தனர். அவரது பூரணமான உருவத்தையும், உறுதியையும், மேன்மையான தோற்றத்தையும் கண்டார்கள். நியாயமன்றத்தில் இயேசுவிற்கு விரோதமாக நிற்பவர்களைப் பார்த்து, அங்குள்ள அதிகாரிகளைப்பார்க்கிலும் இவர் ஒரு அரசனைப் போலிருக்கிறார் என்று ஒப்பிட்டு ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். ஒரு குற்றவாளியைப்போன்ற எந்த அடையாளமும் அவரில் காணப்படவில்லை. அவருடைய கண்ணானது கனிவோடு—தெளிவாக—பயமின்றியிருந்தது. அவருடைய நெற்றி அகன்று உயர்ந்து காணப்பட்டது. அவருடைய வடிவம் அன்புச் செயலாலும், மேன்மையான கொள்கையாலும் உறுதியாக விளங்கியது. ஒரு மனிதன் அனுபவிப்பது போலல்லாது அவர் காட்டிய பொறுமையையும் இரக்கத்தையும் கண்டு, அநேகர் நடுங்கினார்கள். அவருடைய மேன்மையான—கடவுள்போன்ற தோற்றத்தைக்கண்டு, பிலாத்துவும் ஏரோதுவுங்கூட அதிக மனக்கலக்கமடைந்தார்கள். (10)

## பிலாத்துவுக்கு முன்பாக இயேசு!

இயேசு ஒரு சாதாரண மனிதனல்ல என்பது முதலிலிருந்தே பிலாத்துவின் உள்மனதிற்கு நன்றாகத் தெரியும். அவர் உன்னதமான குணவான் என்றும், கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்திலும், அவர் முற்றிலும் குற்றமற்றவர் என்றும் அவரைப்பற்றி அவன் உறுதியாக எண்ணினான். இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த தூதர்கள், ரோம தேசாதிபதியின் உள்ளத்தின் நினைவுகளை அறிந்தார்கள்; எனவே, இயேசுவை சிலுவையிலறையும்படி ஒப்புக்கொடுக்கும் இந்தப் பயங்கரமான செய்கையில் ஈடுபடாதபடி காப்பாற்றுவதற்காக, பிலாத்துவின் மனைவியிடத்திற்கு ஒரு தூதன் அனுப்பப்பட்டான். தூதன் சொப்பனத்தின்மூலமாக, பிலாத்துவின் மனைவியிடம், அவள் கணவன் ஈடுபட்டிருக்கும் விசாரணை தேவ குமாரனைப்பற்றியது எனவும், அவர்

குற்றமற்றவராகப் பாடு அனுபவிக்கிறார் என்றும் கூறினான்; உடனே, அவள் பிலாத்துவிற்கு ஆளனுப்பி, இயேசு பரிசுத்தமானவரென்றும், அவர் நிமித்தம் தான் சொப்பனத்தில் வெகுபாடுபட்டதாகவும், அதனால் அவருக்கு ஒன்றுஞ்செய்யவேண்டாமென்றும் கூறியனுப்பினாள். தூதுவன் கூட்டத்தினூடே இடித்துத் தள்ளிக்கொண்டுபோய், அந்தக் கடிதத்தை பிலாத்துவின் கையில் ஒப்படைத்தான். அதை வாசித்தபோது நடுநடுங்கினான்; அவன் முகம் வெளுத்தது. இயேசுவைக் கொலைசெய்யும் திட்டத்தில் தான் எந்தப் பங்கும் வகிக்கக்கூடாதென்று தீர்மானம்பண்ணிக்கொண்டான். யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்யவேண்டுமானால், தனது செல்வாக்கை அதற்காக உபயோகிக்காமல், அவரை விடுதலைசெய்துவிட எண்ணினான். (11)

**ஏரோதுவிடம் அனுப்பப்பட்டார்—இயேசு!**

ஏரோது எருசலேமில் இருக்கிறான் என்று கேள்விப்பட்டபோது, அவனுக்கு பெரிய நிம்மதி ஏற்பட்டது. இயேசுவை விசாரித்து ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கும் எல்லாவிதமான பொறுப்புகளிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள எண்ணினான். குற்றஞ்சாட்டுகிறவர்களோடு சேர்ந்து இயேசுவை ஏரோதினிடத்திற்கு உடனே அனுப்பிவைத்தான். இந்த ஏரோது பாவத்தினால் கடினப்பட்டவனாக இருந்தான். யோவான் ஸ்நானகனைக் கொலைசெய்ததால், அவனது மனச்சாட்சியில் ஏற்பட்ட கறையினின்று அவன் தன்னை விடுவித்துக்கொள்ளமுடியவில்லை. இயேசுவைப்பற்றியும் அவர் செய்த வல்லமையான அற்புதங்கள்பற்றியும் கேள்விப்பட்டபோது, யோவான் ஸ்நானகன்தான் மரித்தோரிலிருந்து எழும்பிவிட்டான் என்று எண்ணி, பயந்து நடுங்கினான். பிலாத்துவினால் ஏரோதின் கையில் இயேசு ஒப்படைக்கப்பட்டபோது, தனது வல்லமையையும், அதிகாரத்தையும், நியாயத்தீர்ப்பையும் ஏற்றுக்கொண்டதாக எண்ணினான்; இதன் விளைவால், முன்பு விரோதிகளாயிருந்த இந்த இரண்டு தேசாதிபதிகளும் இப்பொழுது நண்பர்களானார்கள். இயேசுவைப் பார்த்து ஏரோது மிகுந்த மகிழ்ச்சியடைந்து, தனது திருப்திக்காக மகா வல்லமையான சில அற்புதங்களைச் செய்வார் என எதிர்பார்த்தான். ஒருவருடைய அறியவேண்டுமென்கிற ஆர்வத்தைத் திருப்திப்படுத்துவதோ, அல்லது தனது சொந்தப் பாதுகாப்பைத் தேடுவதோ அவரது வேலையல்ல. அவரது தெய்வீக அற்புத வல்லமை அவருக்காக அல்ல, மற்றவர்களுடைய இரட்சிப்பிற்காகவே செயல்படுத்தப்படவேண்டும். (12)

ஏரோது கேட்ட அநேக கேள்விகளுக்கு இயேசு பதிலே கொடுக்க வில்லை. ஆவேசமாக தன்னைக் குற்றப்படுத்தும் விரோதிகளுக்கும் அவர்

எந்தப் பதிலையும் கூறவில்லை. இயேசு தனது அதிகாரத்திற்குக்கூட பயப்படுவதாகத் தோன்றவில்லையே என ஏரோது மிகுந்த கோபமடைந்தான். தேவகுமாரனை தனது போர்வீரர்களோடு சேர்ந்து ஏளனம்செய்து—பரிகசித்து—நிந்தித்தான். அவமானமாக அவரை நிந்தித்தும், அவரது மேன்மையான—தேவன்போன்ற தோற்றம் அவனைத் திகைக்கச்செய்தது. அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பயந்து, மறுபடியும் பிலாத்துவிடம் அனுப்பிவிட்டான். (13)

சாத்தானும் அவனது தூதர்களும் பிலாத்துவை சோதித்து, அவனையும் அழிவிற்குள் அழைத்துச்செல்ல முயன்றார்கள். பிலாத்து இயேசுவிற்கு ஆக்கினைத்தீர்ப்புகொடுக்காவிட்டால், மற்றவர்கள் கொடுப்பார்கள் என்று சாத்தானும் அவனது தூதர்களும் பிலாத்துவிற்கு ஆலோசனை கூறினார்கள். திரளாள மக்கள் கூட்டம் அவரது இரத்தத்திற்காகத் துடித்தது. இயேசுவை சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுக்காவிட்டால், பிலாத்து தனது அதிகாரத்தையும் உலகச் செல்வாக்கையும் இழப்பான். ஒரு ஏமாற்றுக்காரனை நம்பினான் என்று உலகம் அவனைப் பழித்துரைக்கும். தனது செல்வாக்கையும் அதிகாரத்தையும் இழந்துபோவோமே என்ற பயத்தால், இயேசுவின் மரணத்திற்கு பிலாத்து சம்மதித்தான்; இருந்தபோதிலும், இயேசுவின் இரத்தப்பழியை அவரைக் குற்றஞ்சாட்டுகிறவர்கள்மீது சுமத்தினான். மக்கள் கூட்டமோவெனில்: "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" (மத்தேயு 27:25) எனச் சத்தமிட்டு, இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டது; ஆயினும், பிலாத்து இதில் தப்பிவிடவில்லை. கிறிஸ்துவின் இரத்தப்பழி அவன்மேல் சுமந்தது. தன்னுடைய சுயநலமான தேவைகளுக்காக, உலகிலுள்ள பெரிய மனிதர்களின் செல்வாக்கு தனக்கு வேண்டுமென்ற ஆசையால், குற்றமற்ற மனிதனை மரிக்கும்படியாக ஒப்புக்கொடுத்தான். பிலாத்து தனது மனதில்பட்ட உண்மையான காரியங்களைப் பின்பற்றியிருப்பானானால், இயேசுவை ஆக்கினைத்தீர்ப்பிற்கு ஆளாக்கியதில் அவனுக்கு எந்தவித பங்கும் இருந்திருக்காது. (14)

விசாரணையின்போது, இயேசுவின் தோற்றமும் அவரது வார்த்தைகளும் அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்த அநேகருடைய மனதில் ஒரு ஆழமான எண்ணத்தை உண்டாக்கியது. இந்தச் செல்வாக்கினால் ஏற்பட்ட விளைவு அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு மிகத் தெளிவாகத் தெரிந்தது. சபையில் சேர்ந்தவர்களில் அநேகர், முன்னரே இயேசுவின் விசாரணையைக் கண்டிருந்ததினால் அசையாத—உறுதியான எண்ணத்தைப் பெற்றவர்களாக சபையில் இணைந்தார்கள். (15)

யூதர்களைக்கொண்டு இயேசுவின்மீது தான் சுமத்திய கொடுமையின் விளைவாக அவர் சிறிதளவும் முறுமுறுக்கவில்லை என்பதைக் கண்ட சாத்தான், கோபத்தால் நிறைந்தான். மனிதனின் சாயலைத் தன்மீது எடுத்துக்கொண்டபோதிலும், தெய்வத்தன்மையுள்ள மனவுறுதிபடைத்தவராக அவர் தளராதிருந்தார். தமது பிதாவின் சித்தத்தினின்று ஒரு சிறிதும் விலகிவிடவில்லை. (16) ★

# 29

# உலக இரட்சகர் இயேசுவின் தியாகபலி!

**(மூலநூல் : The Story of Redemptionஇ பக்கம்: 220–229)**
**திருவசன ஆதாரம் : லூக்கா 23:24; மாற்கு 15:31**

தேவனுடைய நேச குமாரனாகிய கிறிஸ்து சிலுவையில் அறையப் படுவதற்காக நடத்திச்செல்லப்பட்டு, மக்களிடம் ஒப்படைக்கப்பட்டார். அந்தப் பகுதியைச் சுற்றியிருந்த சீடர்களும் விசுவாசிகளும் கல்வாரியை நோக்கி, இயேசுவைப் பின்தொடர்ந்திருந்த கூட்டத்தினருடன் சேர்ந்துகொண்டனர். அன்பான சீடனான யோவானால் தாங்கப்பட்டிருந்த இயேசுவின் தாயாரும் அங்கிருந்தார்கள். அவளுடைய இருதயம் மரண வேதனையால் தாக்கப்பட்டிருந்தது. அப்படி இருந்தபோதிலும் இயேசு அவருடைய வல்லமையை வெளிக்காட்டி, அவருடைய எதிரிகளுக்கு முன்பாக தேவனுடைய குமாரனாகத் தோற்றமளிப்பாரென்றும் அப்பொழுது வேதனைமிக்க இந்தக் காட்சி மாறிவிடுமென்றும் அவள் நம்பியிருந்தாள். அவர் சுருக்கமாகக் கூறியிருந்த காரியங்கள் இப்பொழுது செயல்படுத்தப்படுகின்றன என்ற அவரது வார்த்தைகளை நினைத்தபோது, அன்னையாக இருந்த அவளுடைய இருதயம் வேதனையில் மூழ்கியது. பிலாத்துவின் வீட்டைவிட்டு இயேசு கடந்த உடனே பரபாசுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருந்த சிலுவை வெளியில் கொண்டுவரப்பட்டு, காயப்பட்டு இரத்தம் சிந்திக்கொண்டிருந்த அவரது தோள்களின்மேல் வைக்கப்பட்டது. இயேசு மரிக்கின்ற நேரத்தில் அவருடன் சேர்ந்து மரிக்கவேண்டியிருந்த பரபாசின் கூட்டாளிகளின்மீதும் சிலுவைகள் வைக்கப்பட்டன. இரட்சகர் அவரது சிலுவையைச் சுமந்தவராக சில அடிதூரம் நடந்ததும், இரத்தத்தை இழந்திருந்ததாலும் அளவுக்கும் மிஞ்சிய களைப்பினாலும் வேதனையினாலும் மயங்கித் தரையிலே விழுந்தார். (1)

இயேசு திரும்ப எழுந்தபோது, மறுபடியும் சிலுவை அவரது

தோள்களின்மீது சுமத்தப்பட்டு, முன்னோக்கிச் செல்லும்படி வற்புறுத்தப்பட்டார். சில அடிதூரங்கள் அவர் நடந்ததும் தள்ளாடி, தமது பாரமான சுமையைச் சுமந்தவராக உயிரில்லாதவரைப்போல தரையின்மீது விழுந்தார். அவர் இறந்துவிட்டதாக முதலில் கூறப்பட்டது. ஆனால் முடிவில் அவர் மறுபடியும் எழுந்தார். பாடுபட்டுக்கொண்டிருக்கும் தங்களுடைய இரையின்மீது ஆசாரியர்களும் அதிபதிகளும் மனஉருக்கம் என்னும் உணர்வற்றவர்களாக இருந்தனர். ஆனால் சித்திரவதைசெய்யும் கருவியை (சிலுவையை) அவரால் மேலும் சுமந்து செல்லமுடியாது என்று அவர்கள் கண்டனர். என்னசெய்யலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருந்தபோது, எதிர்த்திசையிலிருந்து வந்துகொண்டிருந்த சிரேனே ஊரானாகிய சீமோன் அந்தக் கூட்டத்தினரைச் சந்திக்கவே, ஆசாரியர்களின் தூண்டுதலினால் அவன் பிடிக்கப்பட்டு, கிறிஸ்துவின் சிலுவையைச் சுமக்கும்படி வற்புறுத்தப்பட்டான். சீமோனின் குமாரர்கள் இயேசுவின் சீடர்களாக இருந்தனர். ஆனால் அவன் ஒருபோதும் அவருடன் தொடர்புகொண்டிருக்கவில்லை. (2)

ஒரு பெரும் கூட்டத்தில் அநேகர் பரிகாசமும் கிண்டலும் செய்துகொண்டு, கல்வாரியை நோக்கி, இயேசுவைப் பின்தொடர்ந்திருந்தனர். ஆனால் சிலர்மட்டும் அழுதுகொண்டும் திரும்பத்திரும்ப அவரைப் போற்றிக்கொண்டும் இருந்தனர். பலவிதமான நோய்களிலிருந்து அவரால் சுகப்படுத்தப்பபட்டவர்கள், மரித்தோரிலிருந்து அவரால் எழுப்பப்பட்டவர்கள், வாஞ்சைமிக்க குரலில் ஆச்சரியமான அவரது செயல்களை அறிவித்து, ஒரு குற்றவாளியாக நடத்தப்படுவதற்கு இயேசு என்ன செய்தார் என்று அறிவிக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர். சில நாட்களுக்கு முன்தான் அவர்கள் ஓசன்னா என்னும் போற்றுதலுடன் பேரீச்ச மரங்களின் இலைகளை அசைத்துக்கொண்டு அவருடன் சென்றிருந்தனர். அப்படிச்செய்வது பிரபலமானதாக இருந்ததினால் அவரை வாழ்த்திக் குரல் கொடுத்திருந்தவர்கள் இப்பொழுது அவனைச் சிலுவையில் அறையுங்கள்! அவனைச் சிலுவையில் அறையுங்கள்! என்று குரல் எழுப்பியிருந்தனர்! (3)

## இயேசு சிலுவையில் அறையப்பட்டார்!

தண்டனையை நிறைவேற்றும் இடத்திற்கு வந்துசேர்ந்ததும் சித்திரவதைக்குட்படுத்தப்படும் சிலுவையுடன் சேர்த்து ஆக்கினைக் குட்படுத்தப்பட்டவர்கள் கட்டப்பட்டனர். சிலுவையில் அறையப்படுவதற்காக அவர்களுடைய கரங்கள் விரிக்கப்பட்டபோது, இரண்டு திருடர்களும் போராட, இயேசுவோ தடையெதுவும் செய்யவில்லை. இயேசு அவரை விடுவிக்க ஒரு அற்புதம் செய்வாரென்கிற நம்பிக்கையுடன் முடிவு இன்னதென்று அறியமுடியாத வேதனையுடன் இயேசுவின் தாயார்

பார்த்தார்கள். எப்பொழுதுமே ஆசீர்வாதங்களைக் கொடுக்கும்படி நீட்டப்பட்டிருந்த கரங்கள், பாடுகளை அனுபவித்திருந்தவர்களை சுகமாக்கும்படி அநேக தடவைகள் நீட்டப்பட்டிருந்த கரங்கள், இப்பொழுது சுத்தியலும் ஆணிகளும் கொண்டுவரப்பட்டு ஆணியடிக்கப்பட்டது. ஆணிகள் அவருடைய மென்மையான சரீரத்தைத் துளைத்துச்சென்று சிலுவையோடு அவரை கவ்வி இணைத்தபோது, இருதயம் நொருங்கிப்போயிருந்த சீடர்கள், மயக்கமடையும் நிலையிலிருந்த அவருடைய தாயாரை அந்தக் கொடூரமான காட்சியிலிருந்து அப்புறப்படுத்தினார்கள். (4)

இயேசு குறைகூறி முறுமுறுக்கவில்லை. அவரது முகம் வெளிரி அமைதியாக இருந்தது. ஆனால் வியர்வையின் பெரும்துளிகள் அவரது புருவங்களின்மேல் நின்றிருந்தன. மரணத்துளிகளாக இருந்த அவைகளை அவரது முகத்திலிருந்த துடைத்து நீக்க இரக்கமுள்ள ஒருகரம்கூட இருக்கவில்லை. அவரது மனித இருதயத்தைத் தாங்கவும், அனுதாபம் மாறாத விசுவாசமான வார்த்தைகளைப் பேசவும் ஒருவரும் இருக்கவில்லை. திராட்சை ஆலையை அவர் தனியாக மிதித்துக்கொண்டிருந்தார். எல்லாவிதமான மக்களிலும் ஒருவர்கூட அவருடன் இருக்கவில்லை. இராணுவ வீரர்கள் அவர்களுடைய பயங்கரமான வேலையைச் செய்துகொண்டிருந்தபோது, மிக அதிகமான வேதனையை அவர் அனுபவித்துக்கொண்டிருந்தபோது, இயேசு அவருடைய எதிரிகளுக்காக ஜெபித்தார். அப்பொழுது இயேசு “பிதாவே இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்”—லூக்கா 23:24. அவரது எதிரிகளுக்காக அவர் செய்த ஜெபம் காலத்தின் முடிவுவரை உயிருடன் இருக்கக்கூடிய ஒவ்வொரு பாவியையும் உட்படுத்திக்கொண்டு, உலகம் முழுவதையும் தழுவிற்று. (5)

இயேசு சிலுவையில் அறையப்பட்டபின் பலசாலிகளான பல மனிதர்கள் சேர்ந்து அந்தச்சிலுவையைத்தூக்கி, அதற்கென்று ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்த குழியில், தேவகுமாரனுக்கு மிகுந்த வேதனையைத் தருகின்ற விதத்தில் மிகுந்த முரட்டுத்தனத்துடன் நாட்டினார்கள். பயங்கரமான ஒரு காட்சி இப்பொழுது செயல்படுத்தப்பட்டாகிவிட்டது. ஆசாரியர்கள் அதிபதிகள் வேதபாரகர்கள் ஆகியோர் தங்களுடைய பரிசுத்தமான பதவிகளின் கனத்தை மறந்து, மரித்துக்கொண்டிருக்கும் தேவகுமாரனைப் பரிகாசமும் கேலியும் செய்துகொண்டிருந்த கீழ்மக்களுடன் சேர்ந்துகொண்டு, “நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம்பண்ணினார்கள்” (லூக்கா 23:37). “பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களுக்குள்ளே பரியாசம்பண்ணி: மற்றவர்களை

இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" (மாற்கு 15:31) என்றார்கள். ஆலயத்தின் மேலான அந்தஸ்தில் இருந்தவர்கள், கடினமடைந்துவிட்ட இராணுவ வீரர்கள், சிலுவையின் மீதிருந்த துன்மார்க்கனான திருடன், திரளானவர்களில் கீழ்த்தரமும் கொடூரமும் மிக்கவர்கள் ஆகிய அனைவரும் கிறிஸ்துவைப் பழிப்பதில் ஒன்று சேர்ந்தனர். (6)

இயேசுவுடன் சிலுவையிலறையப்பட்ட திருடர்கள், அவருடன் சேர்ந்து அவரைப்போலவே சரீரப்பிரகாரமான சித்திரவதைகளை அனுபவித்திருந்தனர். ஆனால் அவர்களில் ஒருவன், அவனுடைய வேதனையிலும் துணிச்சலுள்ளவனாகவும் எதிர்ப்பவனாகவும் இருந்தான். அவன் ஆசாரியர்களின் பரிகாசங்களை எடுத்துக்கொண்டு: "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்"—லூக்கா 23:39. மற்றொரு குற்றவாளி கடினமானவனாக இருக்கவில்லை. குற்றத்தில் கூட்டாளியாக இருந்தவனின் உருமலை அவன் கேட்டபோது, "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டான்" (லூக்கா 23:40,41) அதன்பின் அவனது இருதயம் கிறிஸ்துவிடம் சென்றதினால், பரலோக ஒளி அவன் மனதை நிரப்பியது. காயப்படுத்தப்பட்டு, பரிகசிக்கப்பட்டு, சிலுவையின்மீது தொங்கிக்கொண்டிருந்த இயேசுவில் தனது ஒரே நம்பிக்கையாக இருந்த இயேசுவை மீட்பராகக் கண்டு, தாழ்மையான விசுவாசத்துடன் "இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்"—லூக்கா 23:42,43. (7)

மிகப்பயங்கரமான சரீர மன வேதனைகளை அனுபவித்துக்கொண்டிருந்த இயேசு மற்றவர்களைக்குறித்து மட்டுமே சிந்தித்திருந்து பாவத்திற்காக மனம் வருந்தியிருந்த அந்த ஆத்துமாவை, விசுவாசிக்கும்படி தைரியமூட்டிக் கொண்டிருந்த அவரது எல்லையில்லாத அன்பைத் தூதர்கள் கண்டனர். அவரது ஜீவனை அவர் மரணத்தில் ஊற்றிக்கொண்டிருந்தபோது, மரணத்தை விட வலிமைவாய்ந்த அன்பை அவர் செயல்படுத்தினார். கல்வாரிக் காட்சிகளுக்குச் சாட்சிகளாக அநேகர் இருந்தனர். பின்னர் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தில் அவர்களில் அநேகர் ஸ்திரப்படுத்தப்பட்டனர். (8)

இயேசுவின் எதிரிகள் இப்பொழுது பொறுமையற்ற நம்பிக்கையுடன்

அவரது மரணத்திற்காகக் காத்திருந்தனர். அந்தச் சம்பவமே அவருடைய தெய்வீக வல்லமை, அவருடைய ஆச்சரியமான அற்புதங்கள் ஆகியவைபற்றின வதந்திகளை நிரந்தரமாக மௌனமடையச்செய்யும் என்று அவர்கள் கற்பனைசெய்திருந்தனர். அவருடைய செல்வாக்கின் காரணமாக அவர்கள் இனிமேல் நடுங்கவேண்டிய அவசியம் இல்லை என்று அவர்கள் தங்களுக்குள் திருப்தியடைந்துகொண்டனர். இயேசுவின் உடலை சிலுவையிலறைந்த உணர்ச்சியற்றவர்களாக இருந்த அந்த இராணுவ வீரர்கள், அவருடைய உடையைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, தையல் இணைப்பு எதுவும் இல்லாது நெய்யப்பட்டிருந்த உடையைக் கிழிக்காமல், தங்களுக்குள்ளே பங்கிடுவதைப்பற்றி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டனர். கடைசியாக, சீட்டுப்போடுவதின்மூலமாக, அந்தக் காரியத்தைத் தீர்மானித்துவிடலாம் என்று முடிவுசெய்தனர். ஆவியின் தூண்டுதலினால் எழுதப்பட்ட எழுதுகோல் அந்தச் சம்பவம் நடப்பதற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே, அதைப்பற்றி மிகச்சரியாக விவரித்திருந்தது. “நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்” (சங்கீதம் 22:16,18). அவருடைய மரணத்தைக் காண்பதற்காக ஒன்று சேர்ந்திருந்த திரளானவர்களுக்கு ஊடாக இயேசுவின் கண்கள் அங்குமிங்குமாக அலைந்தன. கிறிஸ்துவின் அன்னையாகிய மரியாளைத் தாங்கினவனாக, சிலுவையினடியில் யோவான் இருப்பதை அவர் கண்டார். அவளுடைய மகனைவிட்டுத் தூரமாக இருப்பதற்கு முடியாதவளாக இருந்த அவள், பயங்கரமான அந்தக் காட்சியின் இடத்திற்குத் திரும்பியிருந்தாள். பெற்றோரின்மீதுள்ள அன்பு இயேசு கொடுத்த கடைசிப்பாடமாக இருந்தது. அவர் துயரம் தோய்ந்த அவரது அன்னையின் முகத்தைப் பார்த்தார். அதன்பின் யோவானைப்பார்த்து: “அதோ, உன் தாய் என்றார்;” அன்னையைப்பார்த்து: “அதோ, உன் மகன்” என்றார். யோவான் இயேசுவின் வார்த்தைகளையும் அவனிடம் ஒப்படைக்கப்பட்ட பரிசுத்தமான பொறுப்பையும் மிக நன்றாக புரிந்தவனாக இருந்தான். உடனே அவன் அந்த அன்னையைக் கல்வாரிக் காட்சியிலிருந்து விலக்கி அழைத்துச்சென்றான். அந்த மணிநேரமுதல் கடமைமிக்க ஒரு மகனைப்போல அவன் அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று பராமரித்தான். பெற்றோரின் மீதிருந்த இயேசுவின் பூரணமான அன்பின் உதாரணம் யுகங்களுக்கூடாக மங்காத ஒளியுடன் பிரகாசிக்கிறது. மிகத் தீவிரமான சித்திரவதைகளை அனுபவித்துக்கொண்டிருந்தபோதும், அவர் தமது அன்னையை மறக்காமல் அவளுடைய எதிர்காலத்திற்கு அவசியமாக இருந்த எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்! (9)

## பெற்றோரின்மீதுள்ள அன்பைக்காட்டும் ஒரு பாடம்!

கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்க்கையிலுள்ள ஊழியம் ஏறத்தாழ நிறைவேறியிருந்தது. அவரது நாக்கு வறண்டிருந்தது. எனவே, நான் தாகமாயிருக்கிறேன் என்று கூறினார். அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்திற்குக் நீட்டிக் கொடுத்தார்கள். அவர் அதனை ருசிபார்த்துவிட்டு, மறுத்துவிட்டார். இப்பொழுது ஜீவனுக்கும் மகிமைக்கும் உரியவரான கர்த்தர், மனித இனத்தின் பாவப் பிராயச்சித்தமாக மரித்துக்கொண்டிருந்தார். மனிதனின் பதிலாளியாக அவர் இருந்ததினால் பிதாவின் கோபம் அவர்மீது கொண்டுவரப்பட்டது. பாவத்தின் அந்த உணர்வுதான் மிகவும் கசப்பான அந்தப் பாத்திரத்தில் அவரைப் பானம்பண்ணச்செய்தது. அது தேவகுமாரனுடைய இருதயத்தை உடைத்தது. மனிதனின் பதிலாளியாகவும் பிணையாளியாகவும் கிறிஸ்து இருந்ததினால், மனிதர்களின் அக்கிரமம் அவர்மீது வைக்கப்பட்டது. கற்பனையின் சாபத்திலிருந்து அவர்களை மீட்கவேண்டும் என்பதற்காக அவர் ஒரு அக்கிரமக்காரராக எண்ணப்பட்டார். யுகங்கள் நெடுகிலுமாக இருந்த ஆதாமின் சந்ததியாரின் ஒவ்வொருவரது குற்றமும் அவரது இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்தது. அக்கிரமத்தின் காரணமாக உண்டான தேவனுடைய கோபமும் அவரது பயங்கரமான பிரியக்கேட்டின் வெளிக்காட்டலினால் அவரது குமாரனின் ஆத்துமாவைத் திடீரென்று பயத்தில் நிரப்பியது. வேதனையின் அதிகமான இந்த நேரத்தில் தேவனின் முகம் இரட்சகரைவிட்டுப் பின்னிழுக்கப்பட்டது. ஆகையால் மனிதனால் ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியாத விதத்திலுள்ள துயரத்தினால், அவரது இருதயம் கிழிக்கப்பட்டது. தேவகுமாரன் சிலுவையின்மீது சகித்த மரண வேதனையும், அவரது சிரசின்மீதிருந்தும் கரங்களிலிருந்தும் பாதங்களிலிருந்தும் விழுந்த இரத்தத்தின் துளிகளும், அவரது சரீரத்தைக் குலுக்கிய வேதனைகளும், அவரது முகத்திலிருந்து அவரது பிதாவின் முகம் மறைக்கப்பட்டதினால் உண்டான சொல்லமுடியாத வேதனைகளும், தேவகுமாரன்மீது சுமத்தப்பட்டுள்ள வெறுக்கத்தக்க குற்றங்களும், இவைகளை அனுபவிக்கிறதற்கு உன்மீதுள்ள அன்புதான் தேவகுமாரனைச் சம்மதிக்கச் செய்துள்ளது என்று மனிதனிடம் கூறுகிறது. ஏனெனில் மரணத்தின் ஆளுகையை அவர் கொள்ளையிட்டு, பரதீசின் வாசலையும் அழியாமையுடைய வாழ்க்கையையும் உனக்காகத் திறக்கிறார். தமது வார்த்தைகளினால் கோபமிக்க அலைகளை அமைதிப்படுத்தி நுரைகள் நிறைந்த தண்ணீரின்மேல் நடந்தவர், பிசாசுகளை நடுங்கச்செய்தவர், தொடுதலினால் நோய்களை ஓட்டினவர், மரித்தோரை உயிரடையும்படி எழுப்பினவர், குருடர்களின் கண்களைத் திறந்தவர், மனிதனுக்கான

கடைசிப் பலியாகத் தம்மைத்தாமே சிலுவையின்மீது கொடுக்கிறார். பாவத்தைச் சுமப்பவரான அவர், நீதித்துறையின் தண்டனையைச் சகித்து, மனிதனுக்காகத் தாமே பாவமானார். (10)

சாத்தான் அவனுடைய பயங்கரமான சோதனைகளினால் இயேசுவின் இருதயத்தை முறுக்கிப் பிழிந்திருந்தான். அவருடைய பார்வைக்கு வெறுப்புமிக்கதாக இருந்த பாவம், அதின் பாரத்தினால்—அதின் சுமையினால் வருந்தும்வரை அவர்மீது குவிக்கப்பட்டது. பயங்கரமான அந்த நேரத்தில் அவரது மானிட இயல்பு நடுங்கினது ஆச்சரியமல்ல. நம்பிக்கையில்லாமல் வேதனையுடனிருந்த தேவகுமாரனை தூதர்கள் வியப்புடன் பார்த்தனர். அவருடைய உடல் வேதனையைவிட, மனவேதனை மிகவும் அதிகமாக இருந்ததினால் சரீரவேதனையை அவர் மிகக்குறைவாகவே உணர்ந்தார். பயங்கரமான அந்தக் காட்சியிலிருந்து தூதர்கள் தங்களுடைய முகங்களைத் திரையிட்டு மறைத்துக்கொண்டனர். (11)

அவமானத்துடன் இறந்துகொண்டிருக்கும் தனது ஆக்கியோனுக்காக இயற்கையின் அசையாத்தன்மை தனது ஒரு அனுதாபத்தை உணர்த்தினது. திகைப்பூட்டும் அந்தக் காட்சியைத் காணச் சூரியன் மறுத்துவிட்டது. நடுப்பகலில் பூமியை ஒளிப்பெறச்செய்துகொண்டிருந்த அதின் பிரகாசமிக்க ஒளிக்கதிர்கள் அனைத்தும் திடீரென்று நீக்கப்பட்டுவிட்டதுபோல் காணப்பட்டது. சிலுவையையும் அதைச் சுற்றியிருந்த இடத்தையும் முழுமையான இருள் ஒரு மரணப் போர்வையைப்போல் மூடிக்கொண்டது. மூன்று முழு மணிநேரங்களுக்கு அந்த இருள் தங்கியிருந்தது. ஒன்பதாம் மணி நேரத்தில் பயங்கரமான அந்த இருள் மக்களைவிட்டு நீக்கப்பட்டது. ஆனாலும் ஒரு அங்கியைப்போல அது இரட்சகரை மூடிக்கொண்டிருந்தது. அவர் சிலுவையில் தொங்கினபோது, பயங்கரமான மின்னல்கள் அவர்மீது வீசப்பட்டதுபோல் காணப்பட்டது. பின்பு “ஏலோயீ! ஏலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்”–மாற்கு 15:34. (12)

## முடிந்தது!

பயங்கரமான இந்தக் காட்சியின் முடிவை மக்கள் கவனிக்கின்றனர். மறுபடியும் சூரியன் ஒளிவீசுகிறது. ஆனால் சிலுவை இருளால் மூடப்பட்டிருக்கிறது. திடீரென்று அந்தச் சோகம் சிலுவையைவிட்டு நீக்கப்படுகிறது. படைப்பு முழுவதிலும் எதிரொலிக்கின்ற தெளிவான வெற்றிகரமான குரலில், “முடிந்தது” என்று இயேசு சத்தமிடுகிறார். “பிதாவே,

என்னுடைய ஆவியை உம்முடைய கைகளில் ஒப்படைக்கிறேன்” என்றார். (லூக்கா 23:46). ஒரு ஒளி சிலுவையைச் சூழ்ந்தது. இரட்சகரின் முகம் சூரியனைப்போன்று பிரகாசித்தது. அதன்பின் அவர் தமது சிரசை தமது மார்பின்மீது சாய்த்தவராக மரித்தார். (13)

கிறிஸ்து மரித்த அதே நேரத்தில், ஆலயத்தில் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்தஸ்தலத்தையும் பிரித்திருந்த திரைச்சீலைக்கு முன்பாக நின்று, ஊழியம் செய்துகொண்டிருந்தனர். திடீரென்று அவர்களுக்கு கீழாக இருந்த நிலம் நடுங்குவதை அவர்கள் உணர்ந்தார்கள். அந்தத் திரைச்சீலையானது ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்பட்டிருந்தது. பெல்ஷாத்சாரின் அரண்மனைச் சுவரின்மீது, அவனது விழுகையை எழுதின அதே இரத்தமில்லாத கை, அந்தத் திரைச்சீலையை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழித்திருந்தது. (14)

இயேசு அவர் செய்ய வந்திருந்த வேலையைச் செய்துமுடிக்கும்வரை அவருடைய உயிரை விட்டுவிடவில்லை. பிரிந்துசெல்லும் அவரது சுவாசத்துடன் சேர்ந்து அது முடிந்தது என்று கூறினார். அந்த வார்த்தைகள் கூறப்பட்டபோது, தூதர்கள் களிகூர்ந்தனர். ஏனெனில் மாபெரும் இரட்சிப்பின் திட்டம் வெற்றிகரமாகக் கொண்டுசெல்லப்பட்டிருந்தது. கீழ்ப்படிதல்மிக்க ஒரு வாழ்க்கையின்மூலமாக ஆதாமின் புத்திரர்கள் இப்பொழுது முடிவாக தேவ சமுகத்திற்கு உயர்த்தப்படக்கூடிய நிலைமை உண்டாகிவிட்டதற்காக, பரலோகத்தில் மகிழ்ச்சி உண்டாயிற்று. சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்! அவனுடைய இராஜ்யம் இழக்கப்பட்டுப்போனது என்பதை அவன் அறிந்தான். (15)

## இயேசுவின் உடல் அடக்கம்செய்யப்பட்டது!

யோவான், அவனால் நேசிக்கப்பட்டிருந்த ஆண்டவரைப்பற்றி என்ன செய்யவேண்டும் என்பதை அறியாதவனாக இருந்தான். முரட்டுத்தனமும் உணர்ச்சிகளும் இல்லாத அந்த இராணுவ வீரர்களால் அவரது சரீரம் அடக்கம் செய்யும்படி இழிவான ஒருஇடத்தில் வைக்கப்படுமென்பதை நினைத்தபோது, அவன் நடுங்கினான். யூத அதிகாரிகளிடத்திலிருந்து எவ்விதமான அனுகூலத்தையும் பெறுவது நம்பிக்கை இல்லாத காரியம் என்பதையும் அவன் அறிந்திருந்தான். ஆனால் நிக்கொதேமுவும் யோசேப்பும் அந்த அவசரமான நேரத்தில் முன்வந்தனர். இந்த இருவரும் சனெகரீப் சங்கத்தின் அங்கத்தினர்களாக இருந்து, பிலாத்துவிற்கு அறிமுகமானவர்களாக இருந்திருந்தனர். இருவரும் செல்வமும் செல்வாக்கும் உள்ளவர்களாக இருந்திருந்தனர். இயேசுவின் சரீரம் மிகவும் கனம்பொருந்தின விதத்தில்

அடக்கம் செய்யப்படவேண்டும் என்று தீர்மானம் செய்திருந்தனர். (16)

யோசேப்பு பிலாத்துவிடம் சென்று இயேசுவின் சரீரத்தை அடக்கம்செய்யும்படித் தரவேண்டுமென்று கெஞ்சினான். அப்பொழுது இயேசுவின் சரீரம் யோசேப்பிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று அதிகாரப்பூர்வமான ஒரு கட்டளையை பிலாத்து பிறப்பித்தான். சீடனான யோவான் அவனால் நேசிக்கப்பட்டிருந்த ஆண்டவரின் பரிசுத்தமான உடலைப்பற்றிக் கவலையும் கலக்கமும் உடையவனாக இருந்தபோது, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு ஆளுநரின் உத்தரவைப்பெற்றவனாக திரும்பிவந்தான். பிலாத்துவுடனுள்ள யோசேப்பின் நேர்முகச் சந்திப்பின் பலனை எதிர்பார்த்துக்கொண்டிருந்த நிக்கொதேமு, விலையுயர்ந்த நூறு இராத்தல் எடையுள்ள வெள்ளைப்போளம் கரியபோளம் ஆகியவைகளுடன் வந்தான். எருசலேமிலிருந்த மிகவும் மேலான கனம்பொருந்தினவர்களுக்குக்கூட மரணத்தில் இப்படிப்பட்ட சிறப்பான நல்லடக்க மரியாதை கிடைத்திருக்காது! (17)

அவர்கள் தங்களுடைய சொந்தக் கரங்களினால் மென்மையாகவும் பயபக்தியுடனும் இயேசுவின் சரீரத்தை சிலுவையில் இருந்து எடுத்து, காயங்களடைந்திருந்த அவரது உடலைக்கண்டு கண்ணீர்விட்டு, இரத்தக்கறைகள் உடலைவிட்டுநீங்கும்படி மிகவும் கவனமாக அதனை ஸ்நானம் செய்வித்து, சுத்தம் செய்தனர். யோசேப்பு, பாறையைக் குடைந்து தனக்கென்று ஒரு கல்லறையை செதுக்கிவைத்திருந்தான். அது கல்வாரிக்கு அருகிலிருந்தது. அவன் இப்பொழுது அந்தக் கல்லரையை இயேசுவுக்கென்று ஆயத்தம்செய்தான். அந்த சரீரம் நிக்கொதேமு கொண்டுவந்திருந்த வாசனைப் பொருட்களினால் பூசி வாசனையேற்றப்பட்டபின் ஒரு துணியால் போர்த்தப்பட்டது. அந்த மூன்று சீடர்களும் சேர்ந்து அதனை அதுவரை ஒரு மனிதனும் வைக்கப்படாதிருந்த அந்தக் கல்லறைக்குச் சுமந்துசென்றனர். அங்கு அவர்கள் காயப்படுத்தப்பட்டிருந்த அவரது கால்களை நீட்டி, காயமடைந்திருந்த அவரது கரங்களை இதயத்துடிப்பில்லாத அவரது மார்பின்மீது மடக்கிவைத்தனர். அவர்கள் அன்பாக நேசித்திருந்த அவர்களது ஆசிரியரின் உயிரற்ற உடலுக்கு என்ன செய்யமுடியுமோ, அவைகளெல்லாம் சரியாகச் செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதற்காக கலிலேய ஸ்திரீகள் அருகில் வந்தனர். பாரமான கல் கல்லறையின் வாசலுக்கு நகர்த்தப்பட்டு மூடப்பட்டதை கண்டனர். தேவகுமாரன் இளைப்பாறும்படி விட்டுவிடப்பட்டார். அந்த ஸ்திரீகள் சிலுவையருகிலும் கல்லறை அருகிலும் கடைசிவரை இருந்தனர். (18)

யூதத் தலைவர்கள் தேவகுமாரனை மரணத்திற்குள்ளாக்குவதில்

அவர்களுடைய பேய்த்தனமான நோக்கங்களைச் செயலாற்றியிருந்தபோதிலும் அவர்களுடைய பயங்கள் அமைதி அடையவில்லை. இயேசுவின்மேலிருந்த அவர்களுடைய பொறாமையும் செத்திருக்கவில்லை. பழிவாங்கிவிட்ட மகிழ்ச்சியுடன் கலந்து, யோசேப்பின் கல்லறையில் வைக்கப்பட்டிருந்த அவருடைய சரீரம் உயிரடையும் என்ற பயம் எப்பொழுதும் அவர்களிடம் காணப்பட்டிருந்தது. “ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்றுநாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்றுநாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள்” (மத்தேயு 27:63,64). இயேசு அவரை அழித்தவர்களின் குற்றத்திற்காக அவர்களைப் பழிவாங்குவதற்காக உயிர்த்தெழுவார் என்பதை யூதர்கள் விரும்பாமலிருந்ததுபோல, பிலாத்தும் விரும்பாதவனாக இருந்தான். எனவே ஆசாரியர்கள் கட்டளையிடுகிறபடி நடந்துகொள்ள ரோம இராணுவ வீரர்களின் ஒரு கூட்டத்தை அவர்களிடம் ஒப்படைத்தான். “அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல்வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்” –மத்தேயு 27:65,66. (19)

இயேசுவின் கல்லறையைச் சுற்றி அப்படிப்பட்ட காவலாளிகள் இருப்பதின் அனுகூலத்தை யூதர்கள் உணர்ந்திருந்தனர். யாருக்கும் தெரியாதபடி அந்தக் கல்லறையை ஒருவரும் சேதம்செய்துவிடக்கூடாது என்ற நோக்கத்துடனும் இயேசுவின் சரீரத்தைப்பற்றிச் சீடர்கள் எந்தவிதமாக மோசடியும் செய்துவிடக்கூடாது என்பதற்காகவும் அவர்கள் அந்தக் கல்லின்மீது ஒரு முத்திரையை வைத்தார்கள். ஆனால் அவர்களுடைய திட்டங்கள் முன்னெச்சரிக்கைகள் யாவும் உயிர்த்தெழுதலின் வெற்றியை அதிகமாகப் பூரணப்படுத்தவும், உண்மையை மிகவும் முழுமையாக உறுதிப்படுத்தவுமே பயன்பட்டது. (20) ★

# 30

# இயேசுவின் உயிர்த்தெழுதல்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 230–238)**
**திருவசன ஆதாரம் : யோவான் 20:17,28,29**

மகிமையின் அரசரான இயேசு கல்லறையில் இருந்தபோது, அவரது மரணத்திற்காக துக்கமடைந்தவர்களாக இருந்த சீடர்கள் ஓய்வுநாளில் இளைப்பாறியிருந்தனர். இரவு வந்தபோது, பரிசுத்தமான அந்த இடத்தில் தூதர்கள் காணக்கூடாதவர்களாக வட்டமிட்டிருந்தபோது, இரட்சகரின் இளைப்பாறுமிடத்தைக் காவல் செய்யப் படைவீரர்கள் வைக்கப்பட்டனர். இரவு மெல்லக் கடந்துசென்றது. இன்னும் இருளாக இருந்தபோது, தேவனுடைய பிரியமான குமாரனும் அவர்களால் நேசிக்கப்படும் சேனைகளின் தலைவருமானவரின் விடுதலை நேரம் சமீபித்துவிட்டது என்பதை காவல் செய்திருந்த தூதர்கள் அறிந்திருந்தனர். வெற்றியின் அந்த நேரத்திற்காக அவர்கள் தீவிரமான உணர்வுகளுடன் காத்திருந்தனர். பலமிக்க ஒரு தூதன் பரலோகத்திலிருந்து பறந்துவந்தான். அவனுடைய முகம் மின்னலைப்போலவும் அவனுடைய ஆடை உறைந்த மழையைப்போலவும் இருந்தது. அவனது ஒளி அவனது பாதையிலிருந்த இருளை நீக்கினது. இயேசுவின் சரீரத்தின்மீது வெற்றிகரமாக உரிமை பாராட்டியிருந்த பொல்லாத தூதர்களை, அவனுடைய வருகையின் ஒளி ஏற்படுத்திய மகிமையின் பயம் அந்த இடத்தைவிட்டு ஓடச்செய்தது. கிறிஸ்துவின் அவமானத்திற்குச் சாட்சியாக இருந்து அவருடைய இளைப்பாறுமிடத்தைக் காவல்செய்திருந்த தூதர்களில் ஒருவன் பரலோகத்திலிருந்து வந்த தூதனுடன் சேர்ந்து, அவர்கள் இருவருமாக கல்லறையினிடத்திற்கு வந்தனர். (1)

ரோம நாட்டுக் காவலர்களை திகில் பற்றிக்கொண்டது. இயேசுவின் சரீரத்தைக் காத்துக்கொள்கின்ற அவர்களுடைய வல்லமை இப்போது எங்கே? இப்பொழுது அவர்கள் தங்கள் கடமையையோ, அல்லது அவருடைய சீடர்கள் அவரைத் திருடிச்செல்லுவதைப்பற்றியோ நினைக்கவில்லை. சூரியனைவிடப் பிரகாசமான அந்தத் தூதர்களின் ஒளி

சுற்றிலும் பிரகாசித்த அந்த நேரத்தில், அந்த ரோம நாட்டுக் காவலாளிகள் செத்தவர்களைப்போலத் தரையில் விழுந்தார்கள். தூதர்களில் ஒருவன் கல்லறையை மூடியிருந்த கல்லை வாசலைவிட்டு உருட்டித்தள்ளிவிட்டு, அதின்மேல் உட்கார்ந்தான். அடுத்தவன் கல்லறைக்குள் நுழைந்து, இயேசுவின் சிரசின்மீது சுற்றப்பட்டிருந்த துணியை அவிழ்த்தான். (2)

**உம்முடைய பிதா உம்மை அழைக்கிறார்!**

அதற்குப்பின் பரலோகத்திலிருந்து வந்த அந்தத் தூதன் பூமியை நடுங்கச்செய்யும் குரலில்: "தேவகுமாரனே! உம்முடைய பிதா உம்மை அழைக்கிறார்! வெளியே வருவீராக!!" என்று சத்தமிட்டு அழைத்தான். அதற்குமேல் மரணத்தால் அவர்மீது ஆளுகைசெய்ய முடியவில்லை. இயேசு மரித்தோரிலிருந்து ஒருவெற்றிவீரராக வெளியே வந்தார். அந்தக் காட்சியை தூதர்களின் சேனை பக்திவிநயமான திகைப்புடன் பார்த்தது. இயேசு கல்லறையைவிட்டு வெளியே வந்தபோது, ஒளிவீசும் அந்த தூதர்கள் தரையில் முகங்குப்புற விழுந்து, அவரைத் தொழுது, வெற்றியின் கீதங்களினால் அவரைப் போற்றினார்கள். (3)

எங்கும் நுழைந்து செல்லுகின்ற தூதர்களின் பிரகாசமான ஒளி சாத்தானின் தூதர்களை ஓடிப்போகும்படி வற்புறுத்தியது. அவர்கள் தங்களுடைய அரசனிடம் மிகுந்த கசப்புடன், அவர்களுடைய இரை அவர்களிடமிருந்து பலாத்காரமாகப் பிடுங்கிச்செல்லப்பட்டது என்று குற்றஞ்சாட்டினார்கள். எவரை அவர்கள் அதிகமாக வெறுத்திருந்தார்களோ, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருக்கிறார். விழுந்துபோன மனிதனின்மீது சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் உண்டாயிருந்த வல்லமை ஜீவாதிபதியாகிய கர்த்தரைக் கல்லறையில் கிடத்தும்படிச்செய்தது என்று சாத்தானும் அவனுடைய தூதர்களும் வெற்றிச் சிரிப்புச் சிரித்தனர். ஆனால் நரகத்தன்மைமிக்க அவர்களுடைய வெற்றி, குறைந்த நேரத்திற்குத்தான் இருந்தது. ஏனெனில், இயேசு அவருடைய சிறைவீட்டிலிருந்து மகத்துவமான வெற்றிவீரராக வெளியே நடந்தார். சிறிது காலத்திற்குப்பின் சாத்தான் மரித்தாகவேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். அவனுடைய இராஜ்யம் எவருக்கு உரிமையானதாக இருந்ததோ, அவரிடத்திற்குக் கடந்துசெல்லும் என்பதையும் அவன் அறிந்திருந்தான். அவனுடைய சகலவிதமான முயற்சிகளினாலும் இயேசுவை மேற்கொள்ளமுடியவில்லை என்பதுமட்டுமின்றி, மனிதனின் இரட்சிப்பிற்கான ஒரு பாதையை அவர் திறந்துவிட்டாரென்றும், எனவே அதற்குள் நடக்கவேண்டுமென்று விரும்புகிற எவரும் இரட்சிப்பை அடைந்துகொள்ளுவார்களென்றும் புலம்பிக் கோபப்பட்டான். (4)

தேவ அரசாங்கத்திற்கு எதிராக எப்படிச் செயலாற்றலாம் என்று ஆலோசிப்பதற்காக பொல்லாத தூதர்களும் அவர்களுடைய தலைவர்களும் ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் சந்தித்தனர். பிரதான ஆசாரியர்களிடத்திற்கும் மூப்பர்களிடத்திற்கும் செல்லும்படி சாத்தான் அந்தப் பொல்லாத தூதர்களுக்குக் கட்டளையிட்டான். இயேசுவுக்கு எதிராக அவர்களை ஏமாற்றுவதிலும் அவர்களுடைய கண்களைக் குருடாக்குவதிலும் அவர்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்துவதிலும் நாம் வெற்றி அடைந்தோம்; அவரை அவர்கள் ஒரு வேஷக்காரர் என்று நம்பும்படிச் செய்தோம்; அந்த ரோம அரசாங்கத்தின் காவலாளிகள் கிறிஸ்து எழுந்துவிட்டார் என்னும் வெறுக்கத்தக்க செய்தியை எங்கும் கூறுவார்கள்; இயேசுவை வெறுக்கவும் அவரைக் கொலை செய்யவும் நாம் ஆசாரியர்களையும் மூப்பர்களையும் நடத்தினோம்; இயேசு உயிர்த்தெழுந்திருக்கிறார் என்பதை மக்கள் அறிந்தால், குற்றமில்லாத ஒருவரை மரணாக்கினைக்கு உட்படுத்தினதற்காக அவர்களை கல்லெறிவார்கள் என்று கூறுங்கள் என்றான். (5)

## ரோம நாட்டுக் காவலாளிகளின் அறிக்கை!

பரலோக தூதர்கள் கல்லறையை விட்டுச்சென்றபின் அந்த ஒளியும் மகிமையும் கடந்துசென்றபின், அந்த ரோம அரசாங்கத்தின் காவலாளிகள் தங்கள் தலைகளை உயர்த்திச் சுற்றிலும் பார்க்கத் தைரியமடைந்தனர். வாசலிலிருந்த பெரிய கல் உருட்டித் தள்ளப்பட்டிருப்பதையும், இயேசுவின் சரீரம் இல்லாததையும் கண்டபோது, அவர்கள் வியப்பினால் நிறைந்தனர். அவர்கள் கண்டதை ஆசாரியர்களுக்கும் மூபர்பர்களுக்கும் அறிவிக்கும்படி நகரத்திற்கு விரைந்து சென்றனர். ஆச்சரியமான அந்த அறிக்கையை அந்தக் கொலைகாரர்கள் கேட்டபோது, அவர்களுடைய முகங்கள் வெளிரிப்போயின. அவர்கள் செய்தது என்ன என்பதைப்பற்றிய எண்ணத்தில அவர்களுடைய பயம் மிகவும் அதிகமானது. அந்த அறிக்கை சரியானதாக இருந்தால் அவர்கள் இழக்கப்பட்டவர்களாவார்கள். என்ன செய்வது அல்லது என்ன சொல்லுவது என்பதை அறியாதவர்களாக, சற்றுநேரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளுவது என்பது தங்களைத் தாங்களே ஆக்கினைக்கு உள்ளாக்கிக்கொள்ளுவதாக இருக்கும். என்ன செய்யவேண்டும் என்பதை ஆலோசிப்பதற்காக அவர்கள் ஒரு பக்கம் சென்றார்கள். காவலாளிகளால் கொண்டுவரப்பட்ட அறிக்கை மக்களுக்குத் தெரியவந்தால், கிறிஸ்துவைக் கொலை செய்தவர்கள் கொலைகாரர்களாக இருப்பதாகக் கருதி, தங்களைக் கொலைசெய்துவிடுவார்கள் என்று காரணம் கண்டார்கள். (6)

இந்தக் காரியத்தை இரகசியமாக வைத்துக்கொள்ளுவதற்காக "சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து, நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள்" என்றார்கள் (மத்தேயு 28:12,13). ஆசாரியர்களும் அதிபதிகளும் அவர்களுக்குப் பெரும் தொகையைக் கொடுத்தார்கள். வேலைக்கு அமர்த்தப்பட்ட இடத்தில் நீங்கள் ஏன் நித்திரை செய்தீர்கள் என்று விசாரித்தால் அவர்களுக்கு என்ன நேரிடும் என்று அந்தக் காவலாளிகள் கேட்டார்கள். யூத அதிகாரிகள் ஆளுநரை அவர்களுடைய பாதுகாப்புக்கு இணங்கச்செய்வதாகக் கூறினார்கள். பணத்திற்காக ரோம அரசின் காவலாளிகள் தங்களுடைய நேர்மையை விற்பதற்கு ஒப்புக்கொண்டு, ஆசாரியர்கள், அதிபதிகள் ஆகியோரின் ஆலோசனையைப் பின்பற்றவும் ஒப்புக்கொண்டனர். (7)

## மீட்பின் முதற்பலன்கள்!

இயேசு சிலுவையில் "முடிந்தது" என்று சத்தமிட்டபோது, பாறைகள் பிளந்தன. பூமி அசைந்தது. சில கல்லறைகளும் திறக்கப்பட்டன! மரணத்தையும் கல்லறையையும் வெற்றிகொண்டவராக அவர் எழுந்தபோது, பூமி தள்ளாடி, பரிசுத்தமான இடத்தைச் சுற்றிப் பரலோகத்தின் மகிமை பிரகாசித்தபோது, மரித்த நீதிமான்களில் அநேகர் அவருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, அவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்று சாட்சிபகரும்படி, கல்லறைகளைவிட்டு வெளியே வந்தனர். கிருபையைப் பெற்றவர்களாக உயிர்த்தெழுந்தவர்கள் மகிமையுடன் வெளியே வந்தார்கள். சிருஷ்டிப்புமுதல் கிறிஸ்துவின் நாட்கள்வரையும் உள்ள காலக்கட்டத்தில், அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகவும் பரிசுத்தவான்களாகவும் இருந்தனர். இவ்வாறாக, இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற உண்மையை யூதர்களின் தலைவர்கள் மறைக்க முயன்றிருந்தபோது, இயேசு உயிர்த்தெழுந்திருக்கிறார் என்று சாட்சி பகரவும், அவரது மகிமையை அறிவிக்கவும், தேவன் ஒரு கூட்டமான ஜனங்களை அவர்களுடைய கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழச் செய்தார். (8)

உயிர்த்தெழுந்தவர்கள் உயரத்திலும் வடிவத்திலும் வித்தியாசமுள்ளவர்களாக இருந்து, மற்றவர்களைவிடத் தோற்றத்தில் மிகவும் மேன்மை உள்ளவர்களாக இருந்தனர். பூமியின் குடிகள் தங்களுடைய பலத்தையும் அழகையும் இழந்து குறைந்துவருகின்றனர் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நோய்க்கும் மரணத்திற்குமான வல்லமை உடையவனாகச் சாத்தான் இருக்கிறான். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சாபத்தின் பலன் அதிகமாகக் காணக்கூடியதாக உள்ளது. சாத்தானின்

வல்லமை வெளிப்படையாகக் காணக்கூடியதாக உள்ளது. நோவா, ஆபிரகாம் ஆகியோரின் காலத்தில் வாழ்ந்திருந்தவர்கள் தூதர்களைப் போன்ற அமைப்பையும், அழகையும், பலத்தையும் கொண்டிருந்தனர். ஆனால் பின்வந்த ஒவ்வொரு தலைமுறையினரும் பலவீனர்களாகவும், நோயால் தாக்கப்படக்கூடியவர்களாகவும் இருந்து, அவர்களுடைய ஆயுள் குறைவானதாகவும் உள்ளது. மனித இனத்தை எவ்விதமாக வலிமையற்றவர்களாக்கலாம் என்று சாத்தான் கற்றுக்கொண்டிருந்தான். (9)

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை சீஷர்களால் நம்ப முடியவில்லை. இந்தச் செய்தியைக் கொண்டுவந்த பெண்களோடு கல்லறைக்கு விரைந்தோடினார்கள். இயேசு அங்கே இல்லாதிருப்பதையும் அவரைச் சுற்றியிருந்த துணிகள் அங்கிருப்பதையும் கண்டார்கள்; ஆனால், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற அந்த நல்ல செய்தி அவர்களால் நம்பக்கூடாமலிருந்தது. தாங்கள் கண்ட காரியங்களைக்குறித்தும், பெண்களால் கொண்டுவரப்பட்ட செய்தியைக்குறித்தும் ஆச்சரியமடைந்தவர்களாக வீடு திரும்பினார்கள்; (10)

ஆனால், மரியாளோ கல்லறையைச் சுற்றி நேரத்தைச் செலவிடுவதைத் தெரிந்துகொண்டு, தான் கண்டவைகளைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டு, ஒருவேளை தான் ஏமாற்றப்பட்டிருக்கலாமோ என நினைத்து வருந்திக்கொண்டிருந்தாள். மேலும் புதிய துன்பங்கள் தனக்காகக் காத்திருக்கிறது என உணர்ந்தாள். மறுபடியும் துக்கம் நிறைந்தவளாய் மனங்கசந்து அழ ஆரம்பித்தாள். மீண்டும் கல்லறையினுள் பார்ப்பதற்காகக் குனிந்தாள். அங்கு வெண்மையான வஸ்திரம் தரித்த இரண்டு தூதர்களைக் கண்டாள். இயேசுவின் தலை வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒருவரும், பாதங்களிருந்த இடத்தில் மற்றொருவருமாக உட்கார்ந்திருந்தார்கள். ஏன் அவள் அழவேண்டுமென ஆதரவோடு கேட்டார்கள். அதற்கு மரியாள்: "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டுபோய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள்"–யோவான் 20:13. (11)

## என்னைத் தொடாதே!

அவள் கல்லறையினின்று திரும்பும்போது இயேசு அங்கு நிற்பதைக் கண்டாள்; ஆனால், அவர்தான் இயேசு என்று அறியவில்லை. அவளுடைய துக்கத்திற்குக் காரணம் என்னவென்றும், யாரைத் தேடிக்கொண்டிருக்கிறாளென்றும் அவர் ஆதரவோடு வினவினார். அவரைத் தோட்டக்காரரென எண்ணி, ஒருவேளை அவளுடைய ஆண்டவரை எங்காவது எடுத்துச் சென்றதுண்டானால்—வைத்த இடத்தை சொன்னால்

தான் அவரை எடுத்துக்கொண்டுபோகமுடியுமெனக் கெஞ்சினாள். அவரோ, அவருக்கே உரிய பரலோகக் குரலில் அவளை நோக்கி: "மரியாளே" என்றார். அவளுக்குப் பழக்கப்பட்ட அந்த அன்பான குரலைக் கேட்டபோது: உடனடியாக "போதகரே" என்றாள். அவளுடைய மகிழ்ச்சியில் அவரைத் தழுவிக்கொள்ள முனைந்தபோது, இயேசு அவளை நோக்கி: "என்னைத் தொடாதே; நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை. நீ என் சகோதரரிடத்திற்குப்போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு" என்றார் (யோவான் 20:17). மகிழ்ச்சியோடு இந்த நற்செய்தியைக் கூறும்படி சீஷர்களிடத்திற்கு விரைந்தாள். தாம் செலுத்திய பலியை பிதா ஏற்றுக்கொண்டார் என்று அவர் வாயினின்று கேட்கவும், பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள எல்லா வல்லமையையும் பெற்றுக்கொள்ளவும், இயேசு விரைந்து பரமேறி பிதாவிடத்திற்குச் சென்றார். (12)

தேவகுமாரனைச் சுற்றிலும் மேகம்போன்று தூதர்கள் சூழ்ந்து, மகிமையின் இராஜா பிரவேசிக்கும்படியாக, நித்திய கதவுகளை உயர்த்தும்படிக் கட்டளையிட்டார்கள். இயேசு பிரகாசமான பரலோகக் கூட்டத்தாரோடு தேவனுடைய சந்நிதியில் அவரது மகிமையால் சூழப்பட்டிருக்கும்போது, பூமியிலிருக்கும் சீஷர்களை மறந்துவிடவில்லை என்பதை நான் கண்டேன். திரும்பிவரும்போது, அவர்களுக்குக் கொடுப்பதற்காக பிதாவிடம் வல்லமையைக் கேட்டுப் பெற்றுக்கொண்டார். அதே நாளிலேதானே, அவர் பூமிக்குத் திரும்ப வந்து, தமது சீஷர்களுக்குத் தம்மைக் காண்பித்தார். அவர் தமது பிதாவிடத்திற்கு ஏறிப்போய், வல்லமையைப் பெற்றுவந்ததினால், தன்னை அவர்கள் தொடும்படி அனுமதித்தார். (13)

### சந்தேகப்படும் தோமா!

இந்தச் சமயத்திலே, தோமா அங்கிருக்கவில்லை. சீஷர்கள் கொண்டு வந்த செய்தியை தாழ்மையுடன் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் அவருடைய கையில் ஆணிகளினாலுண்டான தழும்பைக்கண்டு, அந்தத் தழும்பிலே விரலையிட்டும், கொடும் ஈட்டியால் குத்தப்பட்ட அவருடைய விலாவிலே கையைப்போட்டும் பார்த்தாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்று உறுதியோடும் தன்னம்பிக்கையோடும் வலியுறுத்திக் கூறினான். இந்தக் காரியத்தில் சகோதரரிடத்திலே தனது நம்பிக்கையின்மையைக் காட்டினான். இவ்வாறு எல்லாருமே இந்தவிதமான ஆதாரத்தை வேண்டுவார்களானால், ஒருவருமே இயேசுவை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவருடைய உயிர்த்தெழுதலை விசுவாசிக்கமாட்டார்கள். உயிர்த்தெழுந்த மீட்பரின்

வார்த்தைகளைக் கேளாமலும், அவரைப் பார்க்காமலும் இருப்பவர்களும் சீஷர்களின் செய்தியை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது தேவசித்தம். (14)

தோமாவின் அவிசுவாசத்தை தேவன் விரும்பவில்லை. மறுபடியும் இயேசு அவருடைய சீஷர்களைச் சந்தித்தபோது, தோமாவும் அவர்களோடிருந்தான். அவன் இயேசுவைக் கண்டபோது, அவரை விசுவாசித்தான். சரியான ஆதாரத்தோடு, தோற்றமும் இருந்தாலொழிய திருப்தியடையமுடியாது என்பதாக முன்பே அறிவித்திருந்தான். அவன் விரும்பிய ஆதாரத்தை அவனுக்குக் கொடுத்தார். தோமா அவரைநோக்கி: "என் ஆண்டவனே, என் தேவனே" எனச் சத்தமிட்டான். இயேசு அவனது அவிசுவாசத்திற்காக அவனைக் கடிந்துகொண்டு: "தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்; காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்றார் (யோவான் 20:28,29). (15)

## கிறிஸ்துவை கொலைசெய்தவர்களின் அவமானம்!

இந்தச் செய்தியானது, பட்டணங்கள்தோறும் நகரங்கள்தோறும் பெருகியபோது, யூதர்கள் தங்களது உயிருக்குப் பயந்து, சீஷர்களுக்கு விரோதமாக நெஞ்சாரப்பேணிய தங்களுடைய வெறுப்பை மூடிமறைத்தார்கள். அவர்களுடைய பொய்யான வதந்தியைப் பரப்புவதே, அவர்களுடைய ஒரே நம்பிக்கையாயிருந்தது. இந்தப் பொய்யான வதந்தி உண்மையாயிருக்க வேண்டுமே என விரும்பியவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற செய்திகேட்டு பிலாத்து நடுநடுங்கினான். கொடுக்கப்பட்ட சாட்சிகளை அவனால் சந்தேகிக்கமுடியவில்லை. அந்த நேரத்திலிருந்து என்றுமாக சமாதானம் அவனைவிட்டு விலகிப்போயிற்று. உலகத்தின் நன்மதிப்பிற்காகவும், தனது அதிகாரத்தையும் உயிரையும் இழப்பதற்கும் பயந்து, இயேசுவை மரணாக்கினைக்கு ஒப்புக்கொடுத்தான். ஒரு குற்றமற்ற மனிதனுடைய இரத்தப்பழிக்கு ஆளானோம் என்பது மாத்திரமல்ல, அவர் தேவ குமாரன் என்ற காரியத்தையும் முற்றிலுமாக விளங்கிக்கொண்டான். முடிவுமட்டும் கடுந்துயரத்தை அனுபவித்தான். மனக்கசப்பும் கடுந்துயரமும் அவனுடைய நம்பிக்கையான—மகிழ்ச்சியான உணர்ச்சிகளை அழித்துப்போட்டது. அவன் தேற்றப்படுவதை ஏற்றுக்கொள்ள மறுத்து, மிகுந்த துயரமுள்ள மரணத்தையடைந்தான். (16)

## சீஷர்களுடன் நாற்பது நாட்கள்!

இயேசு தமது சீஷர்களோடு 40 நாட்கள் தங்கியிருந்து, தேவனுடைய இராஜ்யத்தின் உண்மைகளை அவர்களுக்கு முற்றிலுமாக விவரித்துக்கூறியபோது, அவர்களுடைய இருதயம் மகிழ்ச்சியாலும்

பேரானந்தத்தாலும் நிறைந்தது. அவருடைய பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைபற்றி அவர்கள் கண்டு—கேட்ட காரியங்களை சாட்சியாக அறிவிக்கவேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். தம்மிடத்தில் வருபவர்கள் நித்திய ஜீவனைக் கண்டடையத்தக்கதாக, அவர் பாவத்திற்காக பலியானார் என்பதையும் அவர்கள் சாட்சியாக அறிவிக்கவேண்டும். மிகுந்த உண்மையான அனுதாபத்தோடு அவர்கள் அனுபவிக்கவேண்டிய உபத்திரவங்கள்பற்றியும் துன்பங்கள்பற்றியும் கூறினார்; ஆனால், தங்களது பழைய அனுபவங்களை நினைவுகூர்ந்து, அவர் தம்மோடே பேசிய வார்த்தைகளை ஞாபகத்தில் கொண்டுவந்து, அதில் ஆறுதல் அடையவேண்டுமெனக் கூறினார். பாடுகள், துன்பங்கள் ஆகியவற்றின் மூலமாகத்தான், சாத்தானால் வந்த சோதனைகளின்மீது அவர் வெற்றி கண்டார் என்பதைக் கூறினார். சாத்தானுக்கு அவர்மீது எந்தவிதமான வல்லமையும் இல்லையெனக் கூறினார்; ஆனால், அவரது நாமத்தை விசுவாசித்தவர்கள் அத்தனைபேர்மேலும், நேரடியாக அவன் சோதனையைக் கொண்டுவருவான் எனக் கூறினார்; எனவே, அவர் மேற்கொண்டதுபோலவே அவர்களும் மேற்கொள்ளலாம். இயேசு அவருடைய சீஷர்களுக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமையைக் கொடுத்திருந்தார். அவர்கள் துன்மார்க்கரால் உபத்திரவப்படும்பொழுது, காலாகாலங்களில் தொடர்ந்து அவர் தமது தூதர்களை அனுப்பி, அவர்களை விடுதலைசெய்வார். அவர்களுடைய வேலை நிறைவேறும்வரை, அவர்களுடைய உயிரைப் போக்கமுடியாது. தாங்கள் எடுத்துச்சென்ற சாட்சிகள், தங்களது இரத்தத்தால் முத்திரையிடப்படவேண்டுமென்பது அவசியமாயிருக்கிறது. (17)

அவருடைய ஆர்வமுள்ள பின்னடியார்கள், மகிழ்ச்சியோடு அவரது போதகத்திற்குச் செவிசாய்த்தார்கள். அவருடைய பரிசுத்த உதடுகளிலிருந்து விழுந்த ஒவ்வொரு வார்த்தையையும், ஆர்வத்தோடு எடுத்து உட்கொண்டார்கள். இப்பொழுது அவர்தான் உலகத்தின் மீட்பர் என்று நிச்சயமாக அவர்களுக்குத் தெரியும். அவருடைய வார்த்தைகள் அவர்களுடைய இருதயத்தில் ஆழமாகப் பதிந்தன. தமது பரலோகப் போதகரைவிட்டு சீக்கிரம் பிரியவேண்டுமே என்று துக்கித்தார்கள். இனி அவரது வாயினின்று வரும் ஆறுதலான கிருபையுள்ள வார்த்தைகளை அவர்கள் ஒருபோதும் கேட்கமுடியாது; ஆனால், இயேசு தாம் போய் அவர்களுக்காக மாளிகைகளை ஆயத்தம்பண்ணி, அவர்கள் சதாகாலமும் தம்மோடு இருக்கும்படியாக, திரும்பவும்வந்து கூட்டிச்செல்வதாகக் கூறியபோது, அவர்களது இருதயங்கள் அன்பினாலும் மிகுந்த மகிழ்ச்சியினாலும் அனலடைந்தன. அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும்படியாக, பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவதாகவும் வாக்களித்தார்;

மேலும், அவர் தமது கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார்
—லூக்கா 24:50. (18) ★

# 31

# இயேசு பரமேறுதல்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 239–240)**
**திருவசன ஆதாரம் : சங்கீதம் 24:7–10; அப்போஸ்தலர் 2.**

இயேசு அவருடைய பிதாவினிடத்திற்கு எழுந்தருளிச் செல்லவேண்டிய வெற்றியின் நேரத்திற்காகப் பரலோகம் முழுவதும் காத்திருந்தது. மகிமையின் அரசரை ஏற்றுக்கொண்டு, வெற்றிகரமாக அவரைப் பரலோகத்திற்கு அழைத்துச்செல்ல தேவதூதர்கள் வந்திருந்தனர். இயேசு அவரது சீடர்களை ஆசீர்வதித்தபின், அவர்களைவிட்டுப் பிரிந்து உயரே எடுத்துச்செல்லப்பட்டார். அவர் உயரே எழும்பிச்சென்றபோது, அடிமைத்தளையில் வைக்கப்பட்டிருந்து அவருடன் உயிர்த்தெழுந்த திரளானவர்கள் பின்தொடர்ந்தனர். எண்ணிலடங்காத தூதர்களின் கூட்டம் அவரது வருகைக்காகப் பரலோகத்தில் காத்திருந்தபோது, பரலோக சேனையின் திரளானவர்கள் அவருடன் இருந்தனர். (1)

பரிசுத்த நகரத்திற்கு அவர்கள் எழுந்தருளிச் சென்றபோது, இயேசுவுடன் சென்றிருந்த தூதர்களின் குழு: "வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்" என்று ஆர்ப்பரித்தார்கள். பட்டணத்திற்கு உள்பக்கமிருந்த, வரவேற்கக் காத்திருந்த தூதர்களின் குழுவினர்: "யார் இந்த மகிமையின் ராஜா?" என்றனர். இயேசுவுடன் இருந்த தூதர்கள் வெற்றித்தொனியில்: "அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே. வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்" என்றனர். மீண்டும் காத்திருந்த தூதர்கள்: "யார் இந்த மகிமையின் ராஜா?" என்றபோது, இனிமையான தொனியில் அவருடனிருந்த தூதர்கள்: "அவர் சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் ராஜா" (சங்கீதம் 24:7–10) என்றனர். பரலோகத்திற்கான அந்தக் கூட்டம் தேவனுடைய நகரத்திற்குள் கடந்துசென்றது. பின்பு பரலோக

சேனை அனைத்தும் மகத்துவமிக்க அவர்களது சேனைத்தலைவரைச் சூழ்ந்துகொண்டது. ஆழ்ந்த துதியுடன் அவர்கள் அவரைப் போற்றிப் பணிந்து, ஒளிவீசும் தங்களுடைய கிரீடங்களை அவரது காலடிகளில் வைத்தனர். பின்பு தங்களுடைய பொன் சுரமண்டலங்களின் கம்பிகளை மீட்டி, அடிக்கப்பட்டவராக இருந்தும் மறுபடியும் மகத்துவத்திலும் மகிமையிலும் ஜீவிக்கும் ஆட்டுக்குட்டியானவரைப் போற்றிப்பாடும் இனிய இசையினால் பரலோகம் முழுவதையும் நிரப்பினார்கள். (2)

## இயேசுவின் வாக்குத்தத்தமும் சாத்தானின் கோபமும்!

உயர எழுந்தருளிக்கொண்டிருக்கும் தங்களுடைய கர்த்தரின் கடைசிக்காட்சியை அவர்கள் கவலை நிறைந்தவர்களாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது, வெண்வஸ்திரம் தரித்த இரண்டு தூதர்கள் அவர்கள் அருகில் நின்று: “கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்” என்றார்கள் (அப்போஸ்தலர் 1:11). தேவகுமாரன் எழுந்தருளிச் சென்றதை சாட்சியாகக் கண்ட சீடர்களும் இயேசுவின் தாயாரும் அதைத் தொடர்ந்து ஆச்சரியமான அவரது செயலையும் மிகக்குறைந்த நேரத்தில் நிகழ்ந்த மாறுபட்டதும் மகிமைமிக்கதுமான சம்பவங்களையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தவர்களாக அந்த இரவைக் கழித்தனர். (3)

தேவ அரசாங்கத்தின்மீதுள்ள கசப்புமிக்க வெறுப்போடு சாத்தான் அவனுடைய தூதர்களுடன் மீண்டும் ஆலோசனை நடத்தினான். பூமியின் மீதுள்ள வல்லமையும் அதிகாரமும் உடையவனாக அவன் இருக்கும்போது, இயேசுவின் அடியார்களுக்கு எதிரான அவர்களுடைய முயற்சிகள் பத்துத்தடவை அதிக பலமுள்ளதாக இருக்கவேண்டுமென்று அவர்களிடம் கூறினான். அவர்கள் கிறிஸ்துவுக்கு எதிராக எதையுமே மேற்கொள்ளவில்லை. எனவே முடியுமானால் அவரது அடியார்களை மேற்கொள்ளவேண்டும். ஒவ்வொரு தலைமுறையிலும் இயேசுவை நம்புபவர்களைக் கண்ணிக்குள் அகப்படுத்தவேண்டும். நம்மைக் கடிந்துகொள்ளவும் துரத்தவும் நம்மால் துன்பப்படுத்தப்படுபவர்களைச் சுகப்படுத்தவும் இயேசு அவரது சீடர்களுக்கு வல்லமையைக் கொடுத்திருக்கிறார் என்றும் சாத்தான் அவனது தூதர்களிடம் கூறினான். பின்பு இயேசுவின் அடியார்களை அழிப்பதற்காக கெர்ச்சிக்கிற சிங்கங்களைப்போல சாத்தானின் தூதர்கள் முன்சென்றனர். (4) ★

# 32

# பெந்தெகொஸ்தே!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 241–247)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 2.**

இயேசு அவரைப்பற்றிய தீர்க்கதரிசனங்களின் புரிந்துகொள்ளுதலை சீடர்களின்முன் திறந்துகாட்டியபோது, வானத்திலும் பூமியிலும் உள்ள அதிகாரங்களெல்லாம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நிச்சயப்படுத்தி, ஒவ்வொரு சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் செல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். இயேசு எருசலேமில் தாவீதின் சிங்காசனத்தில் அமர்வார் என்ற பழைய நம்பிக்கையின் திடீர் எழுப்புதலுடன், “அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல” (அப்போஸ்தலர் 1:6,7) என்றுகூறி, ஒரு குறிப்பிட்ட காலம்பற்றிய நிச்சயமின்மையை அவர்களுடைய மனங்களில் உண்டுபண்ணினார். (1)

பரிசுத்த ஆவி ஆச்சரியமான விதத்தில் இறங்குவது இயேசுவை ஏற்றுக்கொள்ளும் செல்வாக்கை உடையதாக இருக்குமென்று சீடர்கள் நம்பத்தொடங்கியிருந்தனர். பரிசுத்தஆவி முழு அளவில் அவர்கள்மீது வந்து அவர்களுடைய மனங்களை ஒளிப்படுத்துவதினால் அவர்கள் தங்களுடைய பணியை முழுவதுமாக அறிந்து, எந்த இடத்தில் இயேசு விட்டுச்சென்றாரோ, அந்த இடத்திலிருந்து அந்தப் பணியைத் தொடங்குவார்கள் என்பதை முன்னறிந்து அவர்களுக்கு விளக்கினார். விசுவாசமுள்ள ஸ்திரீகளுடனும் இயேசுவின் தாயாகிய மரியாளுடனும் சேர்ந்து, அவருடைய சகோதரர்களுடனும் சீடர்கள் மேல்மாடியில் உள்ள வீட்டில் ஒன்றாகக்கூடி ஜெபம் செய்திருந்தனர். இதுவரை நம்பாமலிருந்த சகோதரர்கள் இயேசுவின் சிலுவைக்காட்சி, உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகிய காட்சிகளினால் விசுவாசமடைந்து ஸ்திரப்படுத்தப்பட்டனர்.

கூடிவந்திருந்தவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ நூற்றிருபதாக இருந்தது. (2)

## பரிசுத்தஆவி இறங்குதல்!

பிரிந்திருக்கின்ற அக்கினிமயமான நாவுகளின் உருவில் பரிசுத்தஆவி கூடியிருந்தவர்களின் தலைகளின்மேல் அமர்ந்தது, அவர்கள் இதற்குமுன் அறிந்திராத பலபாஷைகளை இப்போது சரளமாகப் பேசினது ஆகியவை அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஈவின் அடையாளமாக இருந்தது. அக்கினி தோன்றினது, அவர்கள் எந்த அளவிற்கு வாஞ்சையாக ஊழியம் செய்வார்கள் என்பதற்கும், அவர்களுடைய வார்த்தைகளில் எந்த அளவிற்கு வல்லமை இருக்கும் என்பதற்கும் எடுத்துக்காட்டாக இருந்துள்ளது. கிறிஸ்து அவர்களுக்கு விளக்கியிருந்த வேதவாக்கியங்களில் வல்லமைமிக்க சத்தியங்கள் பரலோகத்தின் ஒளியால் தெளிவான பிரகாசத்துடன் அவர்களது மனங்களில் நின்றன. நீக்கப்பட்டிருந்ததின் முடிவினை பார்க்கமுடியாதபடிக்கு தடையாக இருந்த திரை நீக்கப்பட்டுவிடவே, கிறிஸ்துவின் ஊழியத்தின் நோக்கம், அவரது ராஜ்யத்தின் தன்மை ஆகியவைகள் பூரணமாகப் புரிந்துகொள்ளப்பட்டன. (3)

## பெந்தெகொஸ்தேயின் வல்லமையால்!

யூதர்கள் ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் சிதறடிக்கப்பட்டு, பல்வேறுபட்ட மொழிகளையும் பேசக்கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் வெகு தூரத்திலிருந்து வந்து, அப்பொழுது நடைபெற்றிருந்த மத சம்பந்தப்பட்ட பண்டிகைகள் முழுவதிலும் அவர்களுக்கு அவசியமாயிருந்தவைகளைச் செய்துமுடிக்க தற்காலிகமாக அங்கு எருசலேமில் தங்கியிருந்தனர். அவர்கள் கூடிவந்தபோது, வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்களாக இருந்தனர். (4)

கிறிஸ்துவைப்பற்றிய இந்தக் கோட்பாடுகளை பூமியின் கடைசிப் பகுதிகள்வரைக்கும் வெளியிடுவதற்கு தேவனுடைய வேலைக்காரர்களுக்கு மாறுபட்ட இந்த மொழிகள் தடையாக இருந்தன. அப்போஸ்தலர்களிடமிருந்த அந்தக் குறையை தேவன் ஒரு அற்புதமான விதத்தில் ஈடுசெய்தது, மக்களுக்குக் கிறிஸ்துவின் சாட்சிகளாக இருந்த இவர்கள் கொடுத்தசாட்சி, மிகஅதிகமான—பூரணமான உறுதிப்படுத்தலாக இருந்தது. அவர்களால் அவர்களது வாழ்நாள் காலம் முழுவதிலும் நிறைவேற்ற முடியாததாக இருந்தவைகளைப் பரிசுத்தஆவியானவர் அவர்களுக்காகச் செய்திருந்தார். இப்பொழுது அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்தை வெளிநாடுகளுக்குப் பரப்பக்கூடியவர்களாக இருந்தனர். அதனை அவர்கள் எவர்களுக்காக ஊழியம் செய்திருந்தார்களோ, அவர்களுடைய சொந்த மொழிகளில்

மிகச் சரியாக அறிவித்திருந்தனர். அவர்களுடைய ஊழியம் பரலோகத்தின் முத்திரையை உடையதாக இருக்கிறது என்பதற்கு அவர்கள் மக்கள்முன் வைக்கக்கூடிய சாட்சியாக இந்த அற்புதமான ஆவியின் வரம் இருந்தது. (5)

“வானத்தின்கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? என்றார்கள்” (அப்போஸ்தலர் 2:5–8). (6)

ஆச்சரியமான இந்த வெளிகாட்டுதலில் ஆசாரியர்களும் அதிபதிகளும் மிகவும் கோபமடைந்தார்கள். இந்தச் செய்தி எருசலேமிலும் அதைச் சுற்றி இருந்த இடங்களிலும் பரவியது. ஆசாரியர்களும அதிபதிகளும் தங்களுடைய விரோதத்தை வெளிக்காட்டவில்லை. ஏனெனில் அதனால் மக்களின் வெறுப்பை சம்பாதிக்க நேரிடும். அவர்களுடைய ஆண்டவரை அவர்கள் மரணத்திற்குட்படுத்தியிருந்தனர். ஆனால் இங்கு கல்வியறிவு இல்லாத கலிலேயே மனிதர்கள் தீர்க்கதரிசனங்களின் ஆச்சரியமான நிறைவேறுதல்களை விவரித்துக்கொண்டும் அப்பொழுது பேசப்பட்டிருந்த சகல மொழிகளிலும் இயேசுவின் போதனைகளைப் போதித்துக்கொண்டுமிருந்தனர். இரட்சகரின் ஆச்சரியமான செயல்களை அவர்கள் வல்லமையுடன் பேசி, கேட்டிருந்தவர்களுக்கு தேவகுமாரனுடைய இரத்தத்திலும் பலியிலும் உண்டாயிருந்த இரட்சிப்பின் திட்டத்தைப்பற்றிக் கூறினார்கள். அந்த வார்த்தைகளைக் கவனித்திருந்தவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் மனஉணர்த்துதலையும் மாற்றத்தையும் அடைந்தனர். ஆசாரியர்களால் உட்புகுத்தப்பட்டிருந்த பாரம்பரியங்களும் மூடநம்பிக்கைகளும் அவர்களுடைய மனங்களிலிருந்து அடித்துச்செல்லப்படவே, அவர்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து தூய்மையான போதனைகளை ஏற்றுக்கொண்டனர். (7)

## பேதுருவின் பிரசங்கம்!

இந்த வெளிக்காட்டப்படுதலானது யோவேல் தீர்க்கதரிசனத்தின் நேரடியான நிறைவேறுதலாயிருக்கிறது என்று பேதுரு சுட்டிக்காட்டி, தேவனுடைய மனிதர்களை அந்த ஊழியத்திற்குத் தகுதிப்படுத்த அப்படிப்பட்ட வல்லமை அவர்கள்மீதும் வருமென்றும் கூறினான். (8)

கனம்பொருந்திய தாவீதின் குடும்பத்தின் வம்சாவளியில் நேரடியாகக் கிறிஸ்து இருந்ததை பேதுரு விவரித்தான். அவன் தனது உண்மையான நிலையை மெய்ப்பிக்க இயேசுவின் போதனைகள் எதையும் பயன்படுத்தவில்லை. ஏனெனில் இயேசுவைப்பற்றின தவறான எண்ணம் அந்த அளவிற்குப் பெரிதாக இருந்தினால் அதினால் பயன் எதுவும் இருக்காது என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே, யூதர்கள் தங்களுடைய மரியாதைக்குரிய கோத்திரப் பிதாவாகக் கருதியிருந்த தாவீதைப்பற்றிக் குறிப்பிட்டான். (9)

“அவரைக்குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்; அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்; என் ஆத்துமாவைப் பாதாளத்தில்விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக்காணவொட்டீர்” (அப்போஸ்தலர் 2:25 –27) என்றார். தாவீது தன்னைப்பற்றிக்கூறாமல், கிறிஸ்துவைக்குறித்தே கூறியிருந்தான் என்று பேதுரு இங்கு காட்டுகிறான். தாவீது மற்ற மனிதர்களைப்போல ஒரு இயற்கையான மரணத்தை அடைந்தான். உருக்குலைந்த நிலையிலுள்ள தாவீதின் கனமிக்க சரீரம் இந்த நேரம்வரை கல்லறையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலின் ஒரு அரசனாகவும் தீர்க்கதரிசியாகவும் இருந்த தாவீது, தேவனால் பெரிய அளவிற்குச் சிறப்பாகக் கனப்படுத்தப்பட்டிருந்தான். தீர்க்கதரிசனக் காட்சியில் கிறிஸ்துவின் எதிர்கால வாழ்க்கையும் ஊழியமும் அவனுக்குக் காட்டப்பட்டிருந்தது. அவரை நிராகரித்தது, அவரது நியாய விசாரணை, சிலுவையில் அறையப்படுதல், அடக்கம், உயிர்த்தெழுதல், பரமேறிச்செல்லுதல் ஆகியவைகளையும் அவன் கண்டான். (10)

கிறிஸ்துவின் ஆத்துமா நரகத்தில் (கல்லறையில்) விடப்படுவதில்லை என்றும், அவரது சரீரம் அழிவைக் காண்பதில்லையென்றும் தாவீது சாட்சி கொடுத்திருந்தான். நசரேயனாகிய இயேசுவில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறி இருப்பதைப் பேதுரு காட்டுகிறான். அவரது சரீரம் அழிவதற்குமுன் தேவன் அவரை அவரது கல்லறையிலிருந்து உண்மையாகவே எழுப்பியிருந்தார். வானத்திற்கு மேலாக உள்ள பரலோகத்தில் அவர் இப்பொழுது மிகவும் உயர்த்தப்பட்டவராக இருக்கிறார். நினைவில் நிற்கக்கூடிய அந்தவிதமான சந்தர்ப்பத்தில் இயேசு தேவனுடைய குமாரன் என்று கூறுவது உண்மையானதல்ல என்று இதுவரைப் பரிகாசம் செய்திருந்தவர்கள் இப்பொழுது சத்தியத்தைப் பெற அவர்தான் அவர்களுடைய இரட்சகர் என்பதை ஒப்புக்கொள்வதில் முழுமையான

மனநிறைவை உடையவர்களானார்கள். அந்தநாளில் மூவாயிரம்பேர் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் அப்போஸ்தலர்கள் பேசினார்கள். அவர்களுடைய வார்த்தைகளை எதிர்க்க முடியவில்லை. ஏனெனில் தேவனுடைய ஆவி ஊற்றப்படுவதினால் உண்டான பலத்த அற்புதங்களினால் அவைகள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. இந்தச் சந்திப்பினால் உண்டான பலன்களையும் விரைவான ஏராளமான ஆத்தும அறுவடையையும்பற்றிச் சீடர்கள் தங்களுக்குத் தாங்களே ஆச்சரியமடைந்தவர்களாக இருந்தனர். மக்களனைவரும் ஆச்சரியம் நிரம்பினவர்களாக இருந்தனர். தங்களுடைய தவறான எண்ணங்களையும் மதவிரோதத்தையும் விட்டுவிட முடியாதவர்களாக இருந்தவர்கள், குரலினாலோ அல்லது வன்முறையினாலோ அந்த வல்லமைமிக்க கிரியையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர்களுடைய எதிர்ப்பு தற்காலிகமாக இல்லாமலிருந்தது. (11)

அப்போஸ்தலர்களின் காரணங்காட்டுதல்மட்டுமே தெளிவாகவும் மனநிறைவை உண்டுபண்ணுவதாகவும் இருந்தபோதிலும், மிக அதிகமான சான்றுகளைத் தாங்கிநின்றிருந்தபோதிலும், அவை யூதர்களின் தவறான எண்ணங்களை நீக்கியிருந்திருக்காது. ஆனால் அந்த வாதங்களைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய இருதயங்களுக்குள் தெய்வீக வல்லமையுடன் அனுப்பிவைத்தார். அவைகள் சர்வவல்லவருடைய கூர்மையான அம்பைப் போலிருந்தது. மகிமையின் கர்த்தரை நிராகரித்து, அவரைச் சிலுவையில் அறைந்த அவர்களுடைய பயங்கரமான குற்றத்தைப்பற்றிய மன உணர்த்துதலை அவை உண்டுபண்ணியிருந்தன. “இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” என்றான்—அப்போஸ்தலர் 2:37,38. (12)

அவர்கள் ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் வஞ்சிக்கப் பட்டிருந்ததினால்தான் கிறிஸ்துவை நிராகரித்தனர் என்ற உண்மையை— மனஉணர்த்துதல் அடைந்திருந்த அந்த மக்களின் இருதயங்களில் பேதுரு பதியவைத்தான். ஆலோசனைக்காக இனியும் ஆசாரியர்களையும் அதிபதிகளையும் அவர்கள் எதிர்பார்த்தால், தாங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவதற்குமுன் அந்தத் தலைவர்கள் கிறிஸ்துவை

அறிக்கைசெய்யவேண்டும் என்று காத்திருந்தால், அவர்கள் ஒருபோதும் அவரை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று கூறினான். அந்த வல்லமைமிக்க மனிதர்கள் பக்தியைப்பற்றிய ஒரு வேஷத்தைத் தரித்திருந்தபோதிலும், செல்வத்தின்மீதும் உலகப்பிரகாரமான மகிமையின்மீதும் ஆசையும் ஆவலும் கொண்டிருந்தனர். ஒளியைப் பெற்றுக்கொள்ளுவதற்காக அவர்கள் ஒருபோதும் கிறிஸ்துவினிடத்திற்கு வரமாட்டார்கள். அவர்களுடைய பிடிவாதமான விசுவாசமின்மைக்கு எதிராகவும், இயேசு தேவனுடைய குமாரன் என்பதற்கான மிகுந்த வல்லமையுள்ள சான்றுகளின்மீது விசுவாசம்கொள்ளாததின் காரணமாகவும் வரவிருக்கும் பயங்கரமான தேவகோபமாகிய தண்டனையைப்பற்றி இயேசு முன்னறிவித்திருந்தார். (13)

இந்த நேரத்திற்குப்பிறகு சீடர்களின் மொழி அது தாய்மொழியானாலும் பிறமொழியானாலும் தூய்மை எளிமை மிகச்சரியானவை ஆகியவைகளாகவே இருந்தன. தீர்க்கதரிசிகளின் பள்ளியில் பயின்றிராத இந்தத் தாழ்மையான மனிதர்கள் பேசுவதைக் கேட்டிருந்தவர்கள் மிகவும் ஆச்சரியப்படும் விதத்தில் மிகமேலானதும் தூய்மையானதுமான விதத்தில் இயேசுவை முன்வைத்திருந்தனர். பூமியின் கடைசிப்பகுதிவரை அவர்களால் நேரடியாகச் செல்லமுடியாமலிருந்தது. ஆனால் அந்தப் பண்டிகையில் உலகின் சகல பாகங்களிலுமுள்ள மனிதர்கள் இருந்தனர். அவர்கள் பெற்றுக்கொண்ட சத்தியத்தைத் தங்களுடைய வேறுபட்ட இல்லங்களுக்குச் சுமந்துசென்று, தங்களுடைய ஜனங்களுக்கிடையில் வெளியிட்டு, ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் செய்திருந்தனர். கிறிஸ்தவ சபை ஸ்தாபிக்கப்பட்டதைப்பற்றிய சாட்சி, வரலாற்றின் பரிசுத்தமான ஒரு பகுதி என்றுமட்டும் நமக்குக் கொடுக்கப்படாமல், ஒரு பாடமாகவும் கொடுக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவின் பெயரைக் கூறிக்கொண்டிருக்கும் அனைவரும் காத்திருப்பவர்களாகவும், விழித்திருப்பவர்களாகவும், ஒரே இருதயத்துடன் ஜெபிப்பவர்களாகவும், வேற்றுமைகள் அனைத்தும் நீக்கப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். ஒற்றுமையும், ஒருவர்மேல் ஒருவருக்கு இருக்கும் கனிவான அன்பும் எல்லாரிடமும் பரவியிருக்கவேண்டும். அப்பொழுது நமது ஜெபங்கள் ஒன்றுசேர்ந்து, வாஞ்சைமிக்க விசுவாசத்துடன் நமது பரலோகப் பிதாவினிடத்திற்குச் செல்லும். அப்பொழுது வாக்குதத்தம் நிறைவேறுவதற்காக நாம் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் காத்திருக்கலாம். பதிலானது அதிகமான வேகத்துடனும் மேற்கொள்ளும் வல்லமையுடனும் வரலாம். அல்லது நமது விசுவாசம் ஒரு சோதனையைப் பெறும்படி நாள்கணக்காகவும் வாரக்கணக்காகவும் தாமதிக்கலாம். ஆனால் நம்முடைய ஜெபத்திற்கு எவ்விதமாகப் பதில் அளிக்கலாம் என்பதைத் தேவன் தெரிந்திருக்கிறார். தெய்வீகப் பாதையில் தொடர்புள்ளவர்களாக

இருக்கும்படி நம்மை நாம் வைப்பது நமது செயலின் பகுதியாக உள்ளது. தேவன் அவருடைய வேலையின் பகுதிக்கு அவர் பொறுப்புள்ளவராக இருக்கிறார். வாக்குத்தத்தம் செய்துள்ளவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். சகலவிதமான பொறாமைகளையும் விரோதங்களையும் விட்டுவிட்டு, தாழ்மையாக ஜெபிப்பவர்களாகவும், விழித்திருப்பவர்களாகவும் இருக்கவேண்டியது நம்மிடமுள்ள பெரிதும் முக்கியமானதுமான செயலாக இருக்கிறது. ஜெபத்திலும் விழித்து இருப்பதிலும் காத்திருந்தவர்களுக்கு அன்று பெந்தெகொஸ்தே நாளில் இயேசு என்ன செய்தாரோ, அதை நமக்குச் செய்யவும் அவர் ஆயத்தமாக இருக்கிறார். (14) ★

**வாசகர்கள் கவனத்திற்கு:**

பெந்தெகொஸ்தே பண்டிகையைப்பற்றிய குறிப்பு வேதாகமத்தல் மூன்று இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

★பெந்தெகொஸ்தே என்ற வார்த்தை ஒரு கிரேக்க வார்த்தை. 50–வது நாள் என்பது அதின் பொருளாகும். எபிரெயர்கள் அந்த நாளை வாரங்களின் பண்டிகை என்றும் குறிப்பிடுவர். (7*7=49 நாட்கள் முடிந்தபின் 50–வது நாள்).

★யூதர்களின் காலக்கணக்கின்படி, தேவன் பத்துக்கற்பனைகளை வழங்கிய நாளை பெந்தெகொஸ்தே பண்டிகையாக மாறியதாக வரலாறு கூறுகிறது.

★பயணம் செய்வதற்கு வசதியான பருவகாலமாக இருப்பதினால் பெந்தெகொஸ்தே பண்டிகைச் சமயத்தில் உலகின் பல பகுதிகளிலும் வாழ்ந்துவந்த யூதர்கள் எருசலேமிற்கு வந்து, இந்தப் பண்டிகையைக் கொண்டாடுவார்கள்.

# 33

# முடவனைச் சுகப்படுத்துதல்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 248-253)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 3,4**

பரிசுத்த ஆவியானவர் இறங்கினதற்குச் சில நாட்களுக்குப்பின்— ஊக்கமான ஜெபத்தின் நாளுக்குப்பின் உடனடியாகப் பேதுருவும் யோவானும் தொழுகைக்காக ஆலயத்திற்குச் சென்றுகொண்டிருந்தனர். அங்கு நாற்பது வயதான ஒரு மனிதனைக் கண்டார்கள். அவன் வேதனை உள்ளவனாகவும் முடவனாகவும் இருந்து, துன்பத்திலும், வறுமையிலும் பாதிக்கப்பட்டு, வாழ்வதற்கு ஒன்றுமில்லாதவனாக இருந்தான். வாழ்வின் நன்மைகளை இழந்த அந்த மனிதன், சுகமடைவதற்காக இயேசுவிடம் செல்லவேண்டுமென்று வெகுநாட்களாக ஆசைப்பட்டிருந்தான். ஆனால் ஏறத்தாழ அவன் உதவியற்றவனாக இருந்து, பெரும் வைத்தியரான இயேசு எந்த இடத்தில் ஊழியஞ்செய்திருந்தாரோ, அந்த இடத்தைவிட்டு வெகுதூரத்தில் நீக்கிவைக்கப்பட்டிருந்தான். இறுதியில் அக்கரைமிக்க அவனுடைய வேண்டுதல்கள், சில அன்பான மனிதர்களை, அவனை ஆலய வாசலுக்குக் கொண்டுசெல்லும்படி ஈர்த்திருந்தது. அங்கு அவன் வந்துசேர்ந்ததும் அவனுடைய நம்பிக்கை எவரை மையமாகக்கொண்டிருந்ததோ அந்த சுகமளிப்பவர் கொடூரமான மரணத்திற்குள்ளாக்கப்பட்டார் என்பதை அறிந்தான். இயேசுவினால் சுகப்படுத்தப்படுவதை எதிர்பார்த்து, அவன் எவ்வளவு காலம் ஆர்வத்துடன் நம்பியிருந்தான் என்பதை அறிந்திருந்தவர்களுக்கு அவனது மனமடிவு இரக்கத்தை உண்டுபண்ணியது. எனவே ஆலயத்தைக் கடந்து செல்லுபவர்கள் அவனது நிகழ்காலத் தேவைகளுக்கு ஏதாவது செய்யும்படி ஏவப்படுவார்கள் என்று நினைத்து, நாள்தோறும் அவனை ஆலயத்திற்குக் கொண்டுவந்திருந்தனர். பேதுருவும் யோவானும் கடந்துசென்றபோது, அவன் அவர்களிடம் பிச்சைகேட்டான். அந்த சீடர்கள் அவனை மனஉருக்கத்துடன் பார்த்தார்கள். பேதுரு யோவானுடன் சேர்ந்து, தனது கண்களை அவன்மீது வைத்தவனாக, “வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை

உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட” என்றான். (1)

பேதுரு அவனுடைய சொந்த வறுமையை அறிவித்தபோது, அந்த ஏழை மனிதனின் முகம் கவிழ்ந்துவிட்டது. ஆனால் அந்த சீடர்கள் தொடர்ந்தபோது, அவனது முகம் நம்பிக்கையினாலும் விசுவாசத்தினாலும் பிரகாசமடைந்தது. பேதுரு “வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும், ஜனங்களெல்லாரும்கண்டு: தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே பிச்சைகேட்க உட்கார்ந்திருந்தவன் இவன்தான் என்று அறிந்து, அவனுக்குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்.” (2)

இயேசுவைப்போலவே சீஷர்களாலும் அற்புதங்களைச் செய்யமுடிந்தது என்பதையூதர்கள் அறிந்தபோது, ஆச்சரியமடைந்தார்கள். அவர் இறந்துபோனார் என்று நினைத்தவர்கள் அவருடன்கூட ஆச்சரியமான வெளிக்காட்டுதல்களும் நின்றுவிட்டன என்றும்கூட நினைத்திருந்தனர். அப்படியிருந்தபோது, நாற்பது வருடங்களாக உதவியற்ற முடவனாக இருந்தவன் இப்பொழுது அவனது கைகால்களை முழுமையாகப் பயன்படுத்திக் களிகூர்ந்துகொண்டிருக்கிறான். வேதனையிலிருந்து விடுபட்டவனாக இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்ததில் மகிழ்ச்சியுமுடையவனாக இருக்கிறான் என்பதைக் கண்டனர். அப்போஸ்தலர்கள் மக்கள் ஆச்சரியப்படுவதைக் கண்டு, அவர்கள் கண்ட அற்புதத்தைக் குறித்து ஆச்சரியமடைவது ஏன் என்று கேட்டு, இது ஏதோ எங்களுடைய சுயவல்லமையால் நடந்ததைப்போல நீங்கள் திகைப்பது ஏன் என்றார்கள். அவர்களால் நிராகரிக்கப்பட்டு சிலுவையிலறையப்பட்ட—தேவன் மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்து எழுப்பின—நசரேயனாகிய இயேசுவின் புண்ணியத்தினால் தான் இந்த அற்புதம் நடைபெற்றிருக்கிறது என்றும் உறுதிப்படுத்திக் கூறினான் பேதுரு. (3)

“அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது. அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக இந்த சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது என்றான்.” (4)

இந்த அற்புதம் செய்யப்பட்டபின் மக்கள் ஆலயத்தில் கூடினார்கள். பேதுரு ஆலயத்தின் ஒரு பகுதியிலிருந்தும் யோவான் மறுபகுதியிலிருந்தும் மக்களுக்குப் பிரசங்கம் செய்தார்கள். யூதர்கள் ஜீவாதிபதியை நிராகரித்துக்

கொலைசெய்த பெரிய குற்றத்தைப்பற்றி அப்போஸ்தலர் வெளிப்படையாகக் கூறினபோது, மக்களுக்கு வெறியையும் நம்பிக்கையின்மையையும் உண்டுபண்ணாமலிருப்பதற்கு எச்சரிக்கையுமுள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் அறியாமையின் காரணமாக அப்படிச் செய்தார்கள் என்று கூறி, அவர்களது அக்கிரமத்தின் அளவைப்பற்றிக் கூறினான். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, மனம் மாறினவர்களாக வேண்டுமென்று பரிசுத்தஆவியானவர் அழைத்துக்கொண்டிருக்கிறார் என்று அறிவித்தான். அவர்கள் சிலுவையில் அறைந்த கிறிஸ்துவின்மூலமாக அல்லாமல் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்றும், அவர்மீதுள்ள விசுவாசத்தினால் மட்டுமே, அவரது இரத்தத்தினால்மட்டுமே அவர்களது பாவங்கள் நீக்கப்படவேண்டியதாக உள்ளது என்றும் கூறினான். (5)

## அப்போஸ்தலர் கைதுசெய்யப்படுதலும் விசாரிக்கப்படுதலும்!

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றியும் அவரது மரணம் உயிர்த்தெழுதல் ஆகியவைகளின்மூலமாக, முடிவில் மரித்தோர் அனைவரையும் அவர்களது கல்லறைகளிலிருந்து அவர் வெளியே கொண்டுவருவார் என்றும் செய்த பிரசங்கம் சதுசேயர்களை ஆழமாகக் கலக்கியது. அவர்களுக்கு மிகவும் பிரியமான கோட்பாடும், அவர்களுடைய புகழும், கழுமரத்தில் ஏற்றப்பட்டிருப்பதாக அவர்கள் உணர்ந்தனர். ஆலய அதிகாரிகளில் சிலரும் ஆலயத்தைக் காவல்செய்பவர்களின் தலைவனும் சதுசேயர்களாக இருந்தனர். சில சதுசேயர்களின் உதவியுடன் அந்தக் காவலாளிகளின் தலைவன் இரண்டு அப்போஸ்தலர்களையும் கைதுசெய்து, அவர்களுடைய வழக்கை அந்த இரவில் விசாரணை செய்வதற்கு நேரமாகிவிட்டதினால் சிறையில் வைத்தான். (6)

அடுத்த நாளில் அன்னாவும் காய்பாவும் மற்றும் ஆலய நிர்வாகிகளில் மேலானவர்களும் சிறைப்பட்டிருப்பவர்களின் விசாரணைக்காக ஒன்று சேர்ந்தனர். அப்பொழுது சிறைப்பட்டிருந்த அப்போஸ்தலர் இருவரும் அவர்கள்முன் கொண்டுவரப்பட்டனர். அந்த—அதேஅறையில், அந்த—அதே மனிதர்களின் முன், வெட்கக்கேடானவிதத்தில் பேதுரு அவனுடைய கர்த்தரை மறுதலித்திருந்தான். அந்தச் சீடன் அவனுடைய சொந்த விசாரணைக்காகக் கொண்டுவரப்பட்டபோது, இவைகளெல்லாம் அவன் மனதில் தெளிவாகத் தோன்றியது. அவனது பழைய கோழைத்தன்மையை மீட்டுக்கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு இப்பொழுது அவனுக்குக் கிடைத்திருக்கிறது. (7)

அங்கு இப்பொழுதிருந்த கூட்டத்தினர், பேதுரு அவனுடைய ஆண்டவரைப்பற்றிய விசாரணை நடந்துகொண்டிருந்தபோது நடந்து

கொண்ட விதத்தை ஞாபகத்தில் வைத்து, சிறைத்தண்டனை அல்லது மரணதண்டனை அடைவாய் என்றுகூறி அவனைப் பயப்படுத்துவதினால், அடிபணியச்செய்துவிடலாம் என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். கிறிஸ்துவின் மிகவும் தேவையான நேரத்தில் உணர்ச்சிவசப்படக் கூடியவனாகவும் சுயத்தின்மீது நம்பிக்கை உள்ளவனாகவும் இருந்து, கிறிஸ்துவை மறுதலித்த பேதுருவைவிட இப்பொழுது சனெகரீப் சங்கத்தின்முன் விசாரணைக்காக நிறுத்தப்பட்டிருந்த பேதுரு, பெரிய அளவில் மாறுபட்டவனாக இருந்தான். அவன் மனம் மாறினவனாக இருந்தான். அவன் சுயத்தின்மீது நம்பிக்கை வைக்காதவனாக இருந்தன். அதற்குப்பின் அகந்தைமிக்க—பெருமைபாராட்டாதவனாக இருந்தான். அவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, அதின் வல்லமையால் கன்மலையைப்போல உறுதியும் தைரியமும் உள்ளவனாக இருந்தபோதிலும், கிறிஸ்துவைப் பெரிதுபடுத்திக் காட்டுவதில் அடக்கமுடையவனாக இருந்தான். ஒரு சமயத்தில் அவன் மறுதலித்திருந்த பெயரை இப்பொழுது கனப்படுத்துவதினால், அவன் தனது பழைய மருள விழுகையின் கறையை நீக்கிவிட ஆயத்தமாக இருந்தான். (8)

## பேதுருவின் தைரியமிக்க தற்காப்பு!

இதுவரை ஆசாரியர்கள் இயேசு சிலுவையிலறையப்பட்டது அவருடைய உயிர்த்தெழுதல் ஆகியவைகளைப்பற்றிக் குறிப்பிடுவதைத் தவிர்த்திருந்தனர். ஆனால் இப்பொழுது அவர்களுடைய நோக்கத்தின் நிறைவேறுதலாக, குற்றவாளிகளாகக் கருதப்பட்டிருந்த அவர்கள், எந்த வல்லமையினால் அந்த முடவனான மனிதனுக்கு குறிப்பிடத்தக்க சுகத்தைக் கொடுத்தார்கள் என்று அறிவிக்கும்படி வற்புறுத்தப்பட்டனர். அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஆசாரியர்களுக்கும் மூப்பர்களுக்கும் மரியாதை செலுத்தி, “ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே, பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக்குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானனென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக்கேட்டால், உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக் கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே

அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” என்றான். (9)

கிறிஸ்துவின் முத்திரை பேதுருவின் வார்த்தைகளில் இருந்தது. அவனுடைய முகம் பரிசுத்த ஆவியினால் ஒளியடைந்திருந்தது. அவர்களுக்கருகில்—பின்னால்—மனதிருப்தியை உண்டுபண்ணுகின்ற சாட்சியாக அற்புதமானவிதத்தில் சுகமாக்கப்பட்ட மனிதன் நின்றிருந்தான். சிலமணி நேரங்களுக்கு முன்வரை முடவனாக இருந்த அந்த மனிதனின் தோற்றம் இப்பொழுது பூரணமாக சுகமுள்ள சரீரத்தை உடையதாகவும், இப்பொழுது நசரேயனாகிய இயேசுவைப்பற்றிய ஒளியை அடைந்ததாகவும் இருந்து, பேதுருவின் வார்த்தைக்கு வலிமையூட்டுவதாக இருந்தது. ஆசாரியர்களும் அதிபதிகளும் மக்களும் மௌனமாயிருந்தனர். அவனுடைய அறிக்கையை மறுப்பதற்கு அதிபதிகள் வல்லமையற்றவர்களாக இருந்தனர். அவர்கள் கேட்க விரும்பாமலிருந்ததைக் கேட்கும்படி இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிய உண்மையையும், ஊடுபொருள்களாக இருந்த அப்போஸ்தலர்களின்மூலமாக அற்புதங்களைச் செய்வதற்குப் பரலோகத்திலுள்ள கிறிஸ்துவுக்கு வல்லமை உண்டு என்பதையும் கேட்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். (10)

பேதுரு அவனுடைய பதிலில், எங்கிருந்து அவனுக்கு இந்த வல்லமை கிடைத்தது என்று தைரியமாகக் கூறியது, அவர்களைத் திடுக்கிடச்செய்தது. வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல், அதாவது அவர்கள் நிராகரித்திருந்தவரின் மதிப்பை உணாந்திருக்கவேண்டியவர்களாக சபை அதிகாரிகள் இருந்தனர் மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று அந்தக் கல்லைப்பற்றி அவன் குறிப்பிட்டான். அந்த வார்த்தைகளில் அவன் சபையின் அஸ்திவாரக்கல்லாகக் கிறிஸ்துதான் இருக்கிறார் என்று நேரடியாகக் குறிப்பிட்டான். (11)

சீடர்களின் தைரியத்தைக்கண்ட ஜனங்கள் வியப்படைந்தனர். அவர்கள் அறியாமைமிக்க மீனவர்களாக இருந்தபடியால், ஆசாரியர்கள், வேதபாரகர்கள், மூப்பர்கள் ஆகியவர்களால் எதிர்வாதம் செய்யப்படும்போது, திகைப்பினால் அவர்கள் மேற்கொள்ளப்பட்டுப்போவார்கள் என்று யூகித்துக்கொண்டிருந்தனர். ஆனால் அவர்களோ, இயேசுவுடன் இருந்ததினால் அறிவைப் பெற்றுக்கொண்டவர்களாக இருந்தனர். இயேசு, அவருடைய எதிரிகளை மௌனப்படுத்தி, மனதிருப்தியை உண்டுபண்ணும் வல்லமையுடன்பேசியிருந்ததைப்போலவே அப்போஸ்தலர்களும்பேசினார்கள். ஆசாரியர்களும் அதிபதிகளும் தங்களுடைய குழப்பத்தை மறைப்பதற்காக, அவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்யும்படியாக அப்போஸ்தலர்களை

வெளியே கொண்டுசெல்லும்படியாகக் கட்டளையிட்டனர். (12)

சிலுவையில் அடிக்கப்பட்ட இயேசுவின் நாமத்தினால், அப்போஸ்தலர் களுக்குக் கொடுக்கப்பட்ட வல்லமையினால்தான் அந்த மனிதன் சுகமடைந்தான் என்பதை மறுக்கமுயலுவது பயனற்ற ஒருசெயல் என்று அவர்களனைவரும் ஒத்துக்கொண்டனர். பொய்ப் பிரச்சாரங்களினால் அந்த அற்புதத்தை அவர்களால் மகிழ்ச்சியாக மூடிமறைத்திருக்கமுடியும், ஆனால் அந்த அற்புதம் பகலின் நல்ல வெளிச்சத்தில், ஜனங்களின் ஒரு கூட்டத்திற்குமுன் செய்யப்பட்டு, ஆயிரக்கணக்கானவர்களின் அறிவுக்கு ஏற்கனவே வந்திருந்தது. அந்தப் பணி உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்தனர். அப்படியில்லாவிட்டால் இயேசு அநேகரை ஆதாயப்படுத்திக்கொள்ளுவார். அவர்களுடைய சொந்த இரக்கமற்ற தன்மை பின்தொடரும். அப்பொழுது தேவகுமாரனைக் கொலைசெய்த குற்றத்திற்கு அவர்கள் பொறுப்பாளிகளாக்கப்படுவார்கள். (13)

மேலும், சீடர்களை அழித்துவிடவேண்டும் என்ற தீர்மானம் அவர்களுக்குள் இருந்தபோதிலும், இயேசுவின் பெயரால் போதிக்கவோ அல்லது செயலாற்றவோ செய்தால் கடுமையான தண்டனை அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று பயமுறுத்துவதைவிட அதிகமான எதையும் செய்ய அவர்கள் துணியவில்லை. அதற்கு பேதுருவும் யோவானும் தங்களுடைய வேலை தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர்கள் கண்டதும்கேட்டதுமானவைகளை அவர்களால்பேசாமலிருக்க முடியாதென்றும் தைரியமாக அறிவித்தார்கள். அவர்களுடைய பரிசுத்தமான அழைப்பிற்கு அசையாத உண்மை உடையவர்களாக இருப்பதற்காக ஆசாரியர்களால் அந்த மேன்மைமிக்க மனிதர்களைத் தண்டித்திருக்கமுடியும். ஆனால் அவர்கள் ஜனங்களுக்குப் பயந்தார்கள். நடந்த சங்கதிகளைக்குறித்து எல்லோரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். அப்படியே திரும்பத்திரும்பக் கூறப்பட்ட பயமுறுத்தல்களுடனும் தடை உத்தரவுகளுடனும் அவர்கள் விடுதலைசெய்யப்பட்டார்கள். (14) ★

# 34

# வீழ்ச்சியடையாத விசுவாசம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 254–258)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 5:12–42.**

நோயாளிகளைச் சுகப்படுத்துவதிலும், சிலுவையிலறைப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரை அறிவிப்பதிலும், அப்போஸ்தலர்கள் அவர்களுடைய இரக்கத்தின் மகத்தான பணியில் பெரிய வல்லமையுடன் தொடர்ந்திருந்தனர். ஞானஸ்நானத்தின்மூலமாக சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வந்தது. ஆனால் கிறிஸ்தவ விசுவாசிகளுடன் இருதயத்திலும் மனதிலும் ஒன்றுபடாமலிருந்தவர்கள், அவர்களுடன் சேரத் துணியவில்லை. சுகவீனமானவர்களையும் அசுத்த ஆவிகளினால் துன்பப்பட்டவர்களையும், திரளானவர்கள் ஒன்று திரண்டு எருசலேமிற்குக் கொண்டுவந்திருந்தனர். பேதுருவும் யோவானும் நடந்துசெல்லும்போது, அவர்களுடைய நிழல்பட்டால்கூட சுகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அநேகர் தங்களுடைய சுகவீனமானவர்களைத் தெருக்களில் கிடத்தியிருந்தனர். உயிர்த்தெழுந்த இரட்சகரின் வல்லமை உண்மையாகவே அப்போஸ்தலர்களின்மீது விழுந்திருந்தது. நாள்தோறும் விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடியவிதத்தில் அவர்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்திருந்தனர். (1)

இந்தக் காரியங்கள் ஆசாரியர்களையும் அதிபதிகளையும் குறிப்பாக சதுசேயர்களுக்கிடையில் இருந்தவர்களையும் பெரிய அளவிற்குக் குழப்பியது. உயிர்த்தெழுந்த ஒரு இரட்சகரைப்பற்றிப் பிரசங்கம் செய்யவும் அற்புதங்களைச் செய்யவும் அப்போஸ்தலர்கள் அனுமதிக்கப்படுவார்களானால், மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லை என்னும் அவர்களுடைய கோட்பாடு அனைவராலும் நிராகரிக்கப்பட்டு, அவர்களுடைய சார்புக் கூட்டம் விரைவில் இல்லாமலாகிவிடும் என்பதை அவர்கள் (சதுசேயர்கள்) கண்டார்கள். அவர்கள் பிரசங்கம் செய்யும் விதம், யூத சடங்காச்சாரங்களைத் தகர்த்து, பலிகள் செலுத்துவதைப் பயனற்றதாக்கிவிடும் என்பதைப்

பரிசேயர்கள் கண்டனர். இந்தப் பிரசங்கிமார்களை அடித்து அமர்த்தும் முன்னைய முயற்சிகள் வீணானவைகளாக இருந்தன. என்றாலும் இப்பொழுது அந்த எழுப்புதலை அமர்த்திடவேண்டியது அவசியம் என்னும் தீர்மானத்தை உணர்ந்தனர். (2)

## ஒரு தேவதுதூதனால் விடுவிக்கப்பட்டான்!

விசாரணைக்காக அப்போஸ்தலர்கள் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டனர்; அவர்களுடைய வழக்கை விசாரிப்பதற்காக சனகரீம் சங்கம் கூட்டப்பட்டது. அந்த சபையில் இருந்தவர்களுடன் சேர்ந்து பெரும் எண்ணிக்கையிலான கற்றறிந்த மனிதர்கள் அழைக்கப்பட்டு, அவர்களனைவரும் ஒன்றுசேர்ந்து சமாதானத்தைச் சீர்குலைக்கும் இந்த மனிதர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசித்தனர். “கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே கொண்டு வந்து: நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்; அவர்கள் அதைக்கேட்டு, அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்து போதகம்பண்ணினார்கள்.” (3)

அப்போஸ்தலர்கள் விசுவாசிகளுக்குமத்தியில் தோன்றி, ஆசாரியர் களாலும் அதிபதிகளாலும் இடையூறுசெய்யப்பட்ட ஊழியத்தைத் தொடரும்படி, காவலாளிகள் சிறைச்சாலையைக் காவல் செய்துகொண்டிருந்தபோது, அவர்களும்கூட அறிந்துகொள்ளமுடியாதவண்ணம் தூதன் எவ்விதமாகத் தங்களை நடத்திவந்து கட்டளையிட்டான் என்பதை அவர்கள் மீண்டும் கூறினபோது, சகோதரர்கள் மகிழ்ச்சியாலும் ஆச்சரியத்தாலும் நிரப்பப் பட்டனர். ஆசாரியர்களும் அதிபதிகளும் ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டி, அவர்கள் கலகம் செய்கின்றவர்கள் என்ற குற்றத்தையும், அனனியாவையும் சப்பீராளையும் கொலைசெய்தார்கள் என்ற குற்றத்தையும் (அப்போஸ்தலர் 5:1–11)ஆசாரியர்களின் அதிகாரத்தை அவர்களிலிருந்து நீக்கி அவர்களைக் கொலைசெய்ய சதிசெய்தனர் என்ற குற்றத்தையும் அவர்கள்மீது சுமத்த முடிவுசெய்தனர். அப்பொழுது கோபமிக்க கூட்டத்தினர் காரியத்தை அவர்களது கரங்களில் எடுத்துக்கொண்டு, எவ்விதமாக இயேசுவிடம் நடந்துகொண்டார்களோ அதேவிதமாக, அப்போஸ்தலர்களுடனும் நடந்துகொள்ளுவார்கள் என்று அவர்கள் நம்பினர். கிறிஸ்துவின் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளாத அநேகர், அதிகாரிகளின் தன்னிச்சையான ஆளுகையில் களைப்புற்று, குறிப்பிட்ட ஏதாவது மாறுதல் உண்டாகவேண்டும் என்ற கவலையுடன் இருந்தனர். இந்த மக்கள் ஆர்வமிக்கவர்களாக மாறி, அப்போஸ்தலர்களின் விசுவாசத்தை தழுவி, இயேசுதான் மேசியா என்று

ஒப்புக்கொண்டால், மக்கள் அனைவரின் கோபமும் ஆசாரியர்களுக்கு எதிராக எழும்பும்; அப்பொழுது கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றி அவர்கள் பதில் கூறவேண்டியவர்களாக இருப்பார்கள் என்றும் பயந்தனர். இதைத் தடுப்பதற்குப் பலத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் முடிவுசெய்தனர். முடிவாக, சிறைக் கைதிகளைப்போலிருந்த அவர்களை அவர்களுக்குமுன் கொண்டுவரச் செய்தனர். ஆனால் சிறைக் கதவுகள் பத்திரமாகத் தாழிடப்பட்டிருந்தன என்றும், அவர்களுக்கு முன்னால் காவலாளிகள் நின்றிருந்தார்கள் என்றும், சிறைக்கைதிகளை எங்கும் (பேதுருவையும் யோவானையும்) காணவில்லை என்றும் அவர்களிடம் செய்தி திரும்பக்கொண்டுவரப்பட்டபோது, அவர்களுடைய வியப்பு மிகப்பெரிதாக மாறியது. (4)

"அப்பொழுது ஒருவன் வந்து: இதோ, நீங்கள் காவலில் வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்று, ஜனங்களுக்குப் போதகம் பண்ணுகிறார்கள் என்று அவர்களுக்கு அறிவித்தான்." அப்போஸ்தலர்கள் ஆச்சரியமானவிதத்தில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் விசாரிக்கப் படுவதிலும் தண்டனை அடைவதிலுமிருந்து காப்பாற்றப்படவில்லை. கிறிஸ்து அவர்களுடன் இருந்தபோது: அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள் என்று அவர்களிடம் கூறியிருந்தார். தேவன் அவர்களுக்கு அவரது கிரிசனையின் ஒரு அடையாளத்தையும், ஒரு தூதனையும் அனுப்பிவைப்பதினால், அவரது பிரசன்னத்தின் நிச்சயத்தையும் கொடுத்திருந்தார். ஆனால் இப்பொழுது அவர்கள் பிரசங்கித்திருந்த இயேசுவிற்காக பாடுகளை அனுபவிப்பது அவர்களது பங்காக இருந்தது. மக்கள் தாங்கள் கண்டதினாலும், கேட்டதினாலும் உருவாக்கப்பட்டிருந்தபடியால், மக்களை அப்போஸ்தலர்களுக்கு எதிராக எழுப்பிவிடுவது முடியாத காரியம் என்பதை ஆசாரியர்களும் அதிபதிகளும் அறிந்திருந்தனர். (5)

### இரண்டாவது விசாரணை!

"உடனே சேனைத்தலைவன் சேவகரோடே கூடப்போய், ஜனங்கள் கல்லெறிவார்களென்று பயந்ததினால், பலவந்தம்பண்ணாமல் அவர்களை அழைத்துக்கொண்டுவந்தான். அப்படி அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி: நீங்கள் அந்த நாமத்தைக் குறித்துப் போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல்

சுமத்த வேண்டுமென்றிருக்கிறீர்கள்” என்று சொன்னான். அவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகளின்மேலும் இருக்கட்டும் என்று கோபாவேசத்துடன் கூட்டத்தினர்கள் குரல் எழுப்பினபோது, அந்தக் கீழ்த்தரமானவர்களுடன் அவர்களும் (ஆசாரியர்களும் அதிபதிகளும்) சேர்ந்திருந்தபோதிலும், இயேசுவைக் கொலைசெய்ததின் குற்றத்தை ஒப்புக்கொள்ள அவர்கள் விரும்பாதவர்களாக இருந்தனர். (6)

பேதுரு, மற்ற அப்போஸ்தவர்களுடன் சேர்ந்து, முதலாவது விசாரணையில், எவ்விதமான பதிலை அளித்திருந்தானோ அதே விதமாகவே இப்போதும் கூறினான். “அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்றார்கள்.” அவர்களைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலைசெய்த தூதன்தான் ஆலயத்தில் பிரசங்கம்செய்யும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தான். அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருந்தனர். இதனை அவர்கள் தங்களுக்கு என்ன நேரிட்டாலும் செய்தாக வேண்டும். “நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம். தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்.” (7)

எழுப்புதலின் ஆவி அப்போஸ்தலர்களின்மீது இருந்தது. எனவே குற்றம்சாட்டினவர்கள் குற்றவாளிகளானார்கள். இயேசுவைக் கொலைசெய்த குற்றம் அந்த ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டியிருந்த ஆசாரியர்கள்மீதும் அதிபதிகள்மீதும் சுமத்தப்பட்டது. அதினால் யூதர்கள் அதிகக் கோபமடைந்து, மேற்கொண்டு எந்தவிதமான விசாரணையுமின்றி, ரோம அதிகாரிகளின் உத்தரவு எதுவுமின்றி, சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, சிறைக் கைதிகளுக்கு மரணதண்டனை விதிப்பது என்று முடிவுசெய்தனர். ஏற்கனவே கிறிஸ்துவின் இரத்தத்தின்மீது குற்றவாளிகளாக இருந்தவர்கள், இப்பொழுது அவருடைய சீடர்களின் இரத்தத்தால் தங்களுடைய கைகளை நனைக்க ஆவலுள்ளவர்களானார்கள்; ஆனால் கற்றறிந்தவனும் மேலான அந்தஸ்தை உடையவனுமான ஒருவன் அந்தக் கூட்டத்தில் இருந்தான்; அவனுடைய தெளிவான நுண்ணறிவினால், பலாத்காரமிக்க இந்த நடவடிக்கையானது, பயங்கரமான பலன்களைக்கொண்டுவரும் என்று கண்டது. ஆசாரியர்களும் அதிபதிகளும் செய்ய இருந்த பலாத்காரமிக்க

நடவடிக்கைகளை நிறுத்திவைக்க தேவன் ஒரு மனிதனை அவர்களுடைய ஆலோசனைச் சங்கத்திலிருந்தே எழுப்பினார். (8)

கற்றறிந்தவனும் முனைவருமான கமாலியேல் மிகவும் புகழ்வாய்ந்த ஒரு மனிதனாக இருந்தான்; அவன் மிகுந்த எச்சரிக்கை உள்ளவனாக இருந்தான்; அவன் கைதிகளைப்பற்றிப் பேசுமுன் அவர்களை இந்த இடத்தைவிட்டு அப்புறமாகவைக்கும்படி கேட்டுக் கொண்டான். அதன்பின்பு, மிகுந்த நிதானத்துடனும் அமைதியுடனும் சங்கத்தாரை நோக்கி: “இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனென்றால், இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள்; அவனுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறது என்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல், இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம்; தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணாப்படாதபடிக்குப் பாருங்கள்” என்றான். (9)

ஆசாரியர்கள் கமாலியேலின் கருத்துக்கள் நியாயமாக உள்ளன என்று கண்டனர். அவர்கள் அவனுடன் ஒத்துப்போகக் கடமைப்படுத்தப்பட்டனர். மனமில்லாதவர்களாக, அவர்களிடம் இனிமேல் இயேசுவைப்பற்றிப் பிரசங்கிக்கக்கூடாது என்று மறுபடியும் மறுபடியும் கூறி, கீழ்ப்படியாவிட்டால், அவர்களுடைய துணிகரத்திற்காக அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்று கூறி, அவர்களைக் கோலால் அடித்து, விடுதலை செய்தனர். (10)

அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், மகிழ்ச்சியாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (11)

அப்போஸ்தலர்களை உபத்திரவப்படுத்தினவர்கள், அவர்களை மேற்கொள்ளும் வலிமையற்றவர்களாக இருப்பததைக் கண்டபோது,

கலக்கமடைந்தனர். அப்போஸ்தலர்கள் அவர்களது ஆண்டவருக்காக, அவர்களுடைய வெட்கத்தை மகிமையாகவும், அவர்களுடைய வேதனையை மகிழ்ச்சியாகவும் மாற்றக்கூடிய தைரியமுள்ளவர்களாக இருந்து, தங்களுக்கு முன்னுள்ள அவமானங்களையும் வேதனைகளையும் தாங்கிக்கொண்டனர். இவ்வாறாக தைரியமிக்க அந்தச் சீடர்கள், பொது இடங்களிலும், யூதர்களுக்குப் பயந்து தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கைசெய்யத் துணிவில்லாதவர்களுக்கு அவர்களுடைய வேண்டுகோளின்பேரில், தனிப்பட்ட வீடுகளில் இரகசியமாகவும் போதனைசெய்திருந்தனர். (12)

**வாசகர்கள் கவனத்திற்கு :**

கிறிஸ்து என்ற கிரேக்க பெயருக்கு மேசியா என்று பொருள். யோவான் 4:25; அப்போஸ்தலர் 9:22; 18:28; கிறிஸ்து என்பதற்கு அபிஷேகம் செய்யப்பட்டவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ★

# 35

# சுவிசேஷ ஒழுங்கு!

(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 259–261)
திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 6:1–7

"அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள் தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்." அங்கு தங்கியிருந்த கிரேக்கர்கள், கிரேக்க மொழி பேசப்பட்டிருந்த மற்ற நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். மதம் மாறினவர்களில் அநேகர் எபிரெய மொழி பேசியிருந்த யூதர்களாக இருந்தனர். ஆனால் இவர்கள் ரோம இராஜ்யத்தில் வாழ்ந்து, கிரேக்க மொழியைமட்டுமே பேசியிருந்தனர். எபிரெயர்களுக்குள்ளே தேவை உள்ளவர்களாக இருந்தவர்களில் கிரேக்க விதவைகளுக்குப் போதுமான அளவு பொருள்கள் வழங்கப்படவில்லை என்னும் முறுமுறுப்பு உண்டானது. இவ்விதமான பட்சபாதங்கள் தேவனை வருத்தப்படுத்துவதாக உள்ளது. எனவே விசுவாசிகளுக்குள் சமாதானத்தையும் இசைவையும் உண்டுபண்ண உடனடியான நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏழைகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்கின்ற காரியத்திலும், அவைபோன்ற பாரங்களிலிருந்தும், அப்போஸ்தலர்கள் விடுவிக்கப்பட்டு, கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதற்கு சுதந்திரமானவர்களாகும்படி ஒரு மார்க்கத்தைப் பரிசுத்தஆவியானவர் கருத்தாகத் தெரிவித்தார். "அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சிபெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்; நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்றார்கள். (1)

சபையின் ஒழுங்கின்படி விசுவாசம் நிறைந்தவர்களும், தேவஆவியின் ஞானத்தை உடையவர்களுமான ஏழு மனிதர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் சபை சம்பந்தமான அலுவல்களைக் கவனித்துக்கொள்ளுவார்கள்.

முதலாவதாக, ஸ்தேவான் தேர்ந்தெடுக்கப்பட்டான். பிறப்பிலும் மதத்திலும் ஒரு யூதனாக இருந்த அவன் கிரேக்க மொழியைப் பேசி, கிரேக்கர்களின் சம்பிரதாயங்களையும் மரியாதைகளையும் அறிந்தவனாக இருந்தான்; எனவே விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் பிரித்துவைக்கப்பட்ட நிதியைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு தலைமைதாங்கி நடத்துவதற்குத் தலைவனாக இருப்பதற்கு மிகவும் பொருத்தமானவன் என்று ஆலோசிக்கப்பட்டான். இந்தத் தேர்வு எல்லாருடைய மனங்களையும் திருப்திப்படுத்தினதால், அதிருப்தி, முறுமுறுத்தல் ஆகியவைகள் அமைதிப்படுத்தப்பட்டன. ஜெபத்தினாலும் தலைகளில் கைவைப்பதினாலும் இந்த வேலைகளுக்கு அந்த ஏழு மனிதர்களும் பிரித்துவைக்கப்பட்டனர். அதனாலேயே விசுவாசத்தைப்பற்றிப் போதனை செய்வதிலிருந்து தவிர்க்கப்படவில்லை. அதற்கு நேர் எதிராக ஸ்தேவான், விசுவாசமும் வல்லமையும் நிறைந்தவனாக இருந்து, மக்களுக்கு மத்தியில் ஆச்சரியமானவைகளையும் அற்புதமானவைகளையும் செய்தான் என்று கூறப்பட்டுள்ளது. சத்தியத்தைப் போதிப்பதில் அவர்கள் முற்றிலும் தேர்ந்தவர்களாக இருந்தனர். முறுமுறுத்தலும் பொறாமையும்மிக்க கடினமான வழக்குகளுடன் ஈடுபடுவதற்கு, அவர்கள் அமைதியும் நியாயமும் பிரித்தறியும் வல்லமையும்மிக்க மனிதர்களாக இருந்தனர். அப்போஸ்தலர்கள் அவர்களது சிறப்பான பணியான சத்தியத்தைப் போதிப்பதற்கென்றும், அலுவல்களைக் கவனிப்பதற்கென்றும், மனிதர்களைத் தேர்ந்தெடுத்தது தேவனால் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. எண்ணிக்கையிலும் பலத்திலும் சபை முன்னேற்றமடைந்தது; “தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்.” (2)

அப்போஸ்தலர்களுடைய காலத்தில் இருந்ததைப்போலவே இப்பொழுதும் சபையில் அதேவிதமான முறைகள் பின்பற்றப்படவேண்டியது அவசியமாக உள்ளது. நோக்கத்தின் செழுமையானது, பெரிய அளவில் சபையின் பல பிரிவுகளின் திறமையான மனிதர்களால் நடத்தப்படுவதில் உள்ளது. அவர்கள் தங்களுடைய பதவிக்குத் தகுந்தவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய காரியத்தில் தலைவர்களாக இருக்கும்படி தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சபையின் ஆவிக்குரிய வளர்ச்சியில் பொதுவாகக் கவனமுள்ளவர்களாக இருந்து, முடிந்தவரை உலகப்பிரகாரமானதன்மையையுடைய கவனங்களிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் விடுபட்டவர்களாக இருக்கவேண்டும். வார்த்தைகள் கோட்பாடு ஆகியவைகளில், ஊழியம் செய்பவர்கள் தியானம்செய்வதற்கும் ஜெபம்செய்வதற்கும் வேதவாக்கியங்களை ஆராய்வதற்கும் நேரம் உடையவர்களாக இருக்கவேண்டும். சிறு காரியங்களைப்பற்றிய விபரங்களை

அறிய முயற்சிப்பதினாலும், சபையின் அந்தஸ்தில் மாறுபட்ட சுபாவத்தை உடைய பலருடனும் இடைப்படுவதினாலும், அவர்களுடைய தெளிவான ஆவிக்குரிய அறியும்தன்மை மங்கிவிடுகிறது. உலகப்பிரகாரமான தன்மை உடைய சகல காரியங்களும் அவைகளுக்குப் பொருத்தமான அதிகாரிகளுக்குமுன் கொண்டுவரப்பட்டு, சரிசெய்யப்படுவது சரியானதாக இருக்கிறது; ஆனால் ஞானத்தை தடுமாறச்செய்யக்கூடிய தன்மை உடையவைகளாக இருந்தால், அவைகள் சபை முழுவதற்கும் பொறுப்பானவர்களாகவுள்ள ஆலோசனைச் சங்கத்திற்கு எடுத்துச்செல்லப்படவேண்டும். (3) ★

# 36

# ஸ்தேவானின் மரணம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 262–267)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 6:8–7:60**

தேவனுடைய காரியங்களில் ஸ்தேவான் தீவிரமானவனாக இருந்து, அவனது விசுவாசத்தை அறிக்கைசெய்திருந்தான். "அப்பொழுது லிபர்த்தீனர் என்னப்பட்டவர்களின் ஆலயத்தைச் சேர்ந்தவர்களிலும், சிரேனே பட்டணத்தாரிலும், சிலிசியா நாட்டாரிலும், ஆசியா தேசத்தாரிலும் சிலர் எழும்பி, ஸ்தேவானுடனே தர்க்கம்பண்ணினார்கள்." பெரிய ரபிமார்களின் மாணவர்களாக இருந்தவர்கள், ஒரு பொதுமேடையில் வாக்குவாதம்செய்தால் ஸ்தேவானின் அறியாமையின் காரணமாக, அவன்மீது பூரணமான வெற்றியை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால், அவன் பரிசுத்தஆவியின் வல்லமையுடன் பேசினது மட்டுமின்றி, தீர்க்கதரிசனங்களின் மாணவனாக நியாயப்பிரமாணம் சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் நன்றாகக் கற்றிருந்தான் என்பதையும் பெரும் கூட்டத்தினர் வெளிப்படையாக அறிந்திருந்தனர். அவன் தர்க்கித்திருந்த சத்தியங்களில், திறமையுடன் பேசி, அவனது எதிரிகளை முற்றிலுமாகத் தோற்கச்செய்திருந்தான். (1)

ஸ்தேவானின் ஊழியத்தில் காணப்பட்டிருந்த வல்லமையின் ஆச்சரியமான வெளிக்காட்டுதலைக் கண்டிருந்த ஆசாரியர்களும் அதிபதிகளும் கசப்புமிக்க வெறுப்பினால் நிரப்பப்பட்டார்கள். அவன் முன்வைத்த சான்றுகளின் அழுத்தத்திற்கு இணங்குவதற்குப்பதிலாக, அவனை மரணத்திற்குட்படுத்துவதின்மூலமாக, அவனுடைய குரலை மௌனப்படுத்திவிடலாம் என்று அவர்கள் தீர்மானம்செய்தனர். (2)

எனவே அவர்கள் ஸ்தேவானைப் பிடித்து விசாரணைக்காகச் சனகரீம் சங்கத்தின் முன்பாகக் கொண்டுவந்தனர். (3)

குற்றவாளியின் வாதங்களை மறுப்பதற்காக சுற்றுப்புறங்களிலிருந்து, கற்றறிந்த யூதர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். கிறிஸ்துவின் கோட்பாட்டிற்கு எதிரான வைராக்கியமுள்ளவனென்று தெரிந்து கொள்ளப்பட்டிருந்த சவுலும்—

இயேசுவின்மீது விசுவாசம் வைத்திருந்தவர்களை உபத்திரவப்படுத்தின அவனும் அங்கே இருந்தான். அந்தக் காரியத்தைப்பற்றின ரபிமார்களின் தர்க்கவியலால், ஸ்தேவான் பொய்த்தோற்றங்கொண்ட பயங்கரமான கோட்பாடுகளைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறான் என்று சவுல் தனது பேச்சுத் திறமையினால், மக்களுக்கு மனத்திருப்தியை உண்டுபண்ண முயன்றான். (4)

ஆனால் ஸ்தேவானில் தன்னைப்போலவே மிகவும் உயர்வான கல்வியறிவுடையவனை சவுல் சந்தித்தான். தன்னைப்போலவே மற்ற ஜாதியினருக்குச் சுவிசேஷத்தைப் பரப்புகின்ற தேவனுடைய நோக்கத்தை அவன் புரிந்திருந்தான் என்பதையும் அறிந்துகொண்டான். ஸ்தேவான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியவர்களின்மீது விசுவாசம் கொண்டிருந்து, யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சலுகைகளில் முற்றிலுமாக ஸ்திரப்பட்டவனாக இருந்தான்; எனவே அவனுடைய விசுவாசம் விசாலமானதாக இருந்தது. உண்மையான விசுவாசிகள் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில்மட்டும் தொழுதுகொள்ளாமல், உலகெங்கிலுமிருந்து தேவனை ஆவியுடனும் உண்மையுடனும் தொழுதுகொள்ளுகின்ற நேரம் வந்திருக்கிறது என்பதையும் அவன் அறிந்திருந்தான். ஸ்தேவானின் கண்களில் இருந்த திரை நீக்கப்படவே, அவன் கிறிஸ்துவின் மரணத்தினால் நீக்கப்பட்டவைகளின் முடிவையும் அறிந்திருந்தான். (5)

ஆசாரியர்களும் அதிபதிகளும் கோபமாயிருந்தபோதிலும், அவர்களால் அவனுடைய தெளிவான—அமைதிமிக்க ஞானத்தை எவ்விதத்திலும் மேற்கொள்ள முடியவில்லை. ஸ்தேவானுக்குக் கொடுக்கப்படுகின்ற மரணதண்டனையை ஒரு உதாரணமாக வைத்து, அதின்மூலமாக அவர்களுடைய பழிவாங்கும் வெறுப்பைத் திருப்திப்படுத்துபவர்களாக இருக்கின்ற அதே நேரத்தில் மற்றவர்களை அதனால் பயமுறுத்தி, இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தைத் தடைசெய்யலாம் எனவும் எண்ணினார்கள். கற்பனையான குற்றச்சாட்டுகளை அவன்மீது புனைத்துரைத்தார்கள். ஆலயத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் எதிராக அவன் தேவதூஷணம் கூறினான் என்று சாட்சிகூறப் பொய்ச்சாட்சிகளைக் கூலிக்கு ஏற்படுத்திக்கொண்டார்கள். "இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமல் பேசுகிறான்; எப்படியென்றால் நசரேயனாகிய அந்த இயேசு, இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவாரென்று இவன் சொல்லக் கேட்டோம்" என்றார்கள். (6)

ஸ்தேவான் அவனை நியாயம்விசாரிக்கின்ற நியாயாதிபதிகளுக்குமுன், அவன்மீது சாட்டப்பட்டிருந்த தேவதூஷணம்பற்றிய குற்றங்களுக்குப் பதில்கூற முகமுகமாக நின்றபோது, அவனுடைய முகத்தின்மீது பரிசுத்தமான ஒளி பிரகாசித்திருந்தது. ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன் முகம் தேவதூதனின் முகம்போல் இருக்கக் கண்டார்கள். பிரகாசமடைந்திருந்த ஸ்தேவானின் முகத்தைப் பார்த்தபோது, அநேகர் நடுங்கி, தங்களது முகங்களை முக்காடிட்டு மறைத்துக்கொண்டனர். ஆனாலும் பிடிவாதமான நம்பிக்கையின்மையும் தவறான எண்ணமும் சற்றும்கூட தள்ளாடாததாக இருந்தது. (7)

## ஸ்தேவானின் பதில்!

அவனுக்கெதிராகச் சாட்டப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களில் உள்ள உண்மையைப்பற்றிக்கூறும்படி கேட்கப்பட்டபோது, ஸ்தேவான் தனது பதிலை ஆலோசனைச்சங்க மண்டபம் முழுவதிலும் ஒலிக்கும்படி மிகத் தெளிவான குரலில் கூறினான்; அங்கு கூடியிருந்த அனைவரும் மௌனமடையும்படி, தெரிந்தெடுக்கப்பட்ட தேவனுடைய ஜனங்களின் வரலாற்றை மீண்டும் கூறத்தொடங்கினான். யூதருடைய ஆட்சிமுறையைப்பற்றிய பூரணமான அறிவைக்காட்டி, இப்பொழுது கிறிஸ்துவின்மூலமாக வெளிக்காட்டப்பட்ட அதின் ஆவிக்குரிய அர்த்தத்தையும் விளக்கினான். ஆபிரகாமில் தொடங்கி, அவனுக்குப் பின்வந்த ஒவ்வொரு தலைமுறையையும் வரலாற்றின்மூலமாக, இஸ்ரவேல் தொடங்கி, சாலொமோன்வரையுள்ளவர்களில் இருந்த— உணர்த்துதல்களை உண்டுபண்ணக்கூடிய காரியங்களையும், அவைகளின் நியாயத்தின் உண்மைகளையும் விவரித்தான். (8)

அவர்கள் இரட்சிப்பிற்காக நம்பிக்கை வைத்திருந்த நியாயப்பிரமாணம், இஸ்ரவேலை விக்கிரக ஆராதனையிலிருந்து பாதுகாப்பதற்குத் திறமையற்றதாக இருந்தபோது, அவன் தேவனுக்கும் யூத விசுவாசத்திற்கும் ராஜவிசுவாசமுடையவனாக இருப்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டினான். யூதவரலாறு முழுவதுடனும் அவன் இயேசுவை இணைத்துக் காட்டினான். சாலொமோன் கட்டின தேவாலயத்தைப்பற்றி, சாலொமோன், ஏசாயா ஆகிய இருவரும் கூறின வார்த்தைகளை: "உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். வானம் எனக்குச் சிங்காசனமும் பூமி எனக்குப் பாதபடியுமாயிருக்கிறது; எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்; நான் தங்கியிருக்கத்தக்க ஸ்தலம் எது; இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்கவில்லையா என்று கர்த்தர் உரைக்கிறார்" என்பதை எடுத்துக்காட்டினான். தேவனை மேலானவிதத்தில் தொழுகின்ற இடம் பரலோகத்திலிருக்கிறது என்றான். (9)

இந்தக் காரியத்தை ஸ்தேவான் கூறியபோது, ஜனங்களுக்கிடையில் சந்தடி உண்டாயிற்று. கைதியாக இருந்த அவன், தனது முன்னாலிருந்த ஜனங்களின் முகங்களிலிருந்து அவனது முடிவை வாசித்தறிந்தான். பரிசுத்த ஆவியானவர் சொல்லிக்கொடுத்துப் பேசப்பட்டிருந்த வார்த்தைகளுக்கு உண்டான தடையை அவன் உணர்ந்துகொண்டான். தனது கடைசிச் சாட்சியைக் கொடுத்துக்கொண்டிருப்பதை அவன் அறிந்திருந்தான். ஸ்தேவானின் பேச்சைக் கேட்டவர்களில் சிலர் சரியான விதத்தில் அதனை வரவேற்றனர். அவனுடைய வார்த்தைகள் கொடுக்கும் முழுமையான முக்கியத்துவத்தை, அந்தச் சந்தர்ப்பம், காலம், இடம் ஆகியவைகளால் மனதில் கொள்ளப்படவேண்டும். (10)

அவன் முன்பு செய்ததுபோலவே தீர்க்கதரிசனங்களுடன் இயேசு கிறிஸ்துவையும் தேவாலயத்தையும் இணைத்தபோது, ஆசாரியன் திகிலடைந்தவனாகத் தனது வஸ்திரத்தைக் கிழித்தான். அவனுடைய குரல் விரைவில் என்றென்றைக்குமாக மௌனப்படுத்தப்படும் என்பதற்கு இந்தச் செய்கை ஸ்தேவனுக்கு ஒரு சைகையாக இருந்தது. அவன் தனது பிரசங்கத்தின் மத்தியிலிருந்தபோதிலும், வரலாற்றுச் சங்கிலியைத் திடீரென்று அறுத்துக்கொண்டு, அவனுக்கெதிராகக் கடுங்கோபமுடையவர்களாக இருந்த நியாயாதிபதிகளை நோக்கி: “வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள். தீர்க்க தரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள். தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள்” என்றான். (11)

### ஒரு இரத்தசாட்சியின் மரணம்!

ஸ்தேவான் இப்படிக்கூறினதால், ஆசாரியர்களும் அதிபதிகளும் அவன்மீது கோபமுள்ளவர்களானார்கள். மனிதர்களைக் காட்டிலும் அவர்கள், தனது இரையைத் தாக்கும் காட்டுமிருகங்களைப்போலிருந்தனர். அவர்கள் பற்களைக் கடித்துக்கொண்டு, ஸ்தேவான்மீது பாய்ந்தனர்; ஆனால் அவன் அதை எதிர்பார்த்திருந்ததினால், அதற்காக அவன் கோழையாகிப்போகவில்லை. அவனுடைய முகம் அமைதி உள்ளதாக ஒரு தேவதூதனுடைய முகத்தைப்போல் பிரகாசித்தது. கோபாவேசமடைந்த ஆசாரியர்களையும் கலகக்காரக் கூட்டத்தினரையும் கண்டு, அவன்

அஞ்சவில்லை. "அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு: அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" என்றான். (12)

தன்னைச் சுற்றியிருந்த காட்சி அவனது பார்வையிலிருந்து மங்கிப்போனது. பரலோகத்தின் வாசல்கள் பகுதியாகத் திறக்கப்பட்டிருந்தன. அதற்குள் ஸ்தோவன் தேவனுடைய மண்டபங்களின் மகிமையையும் கிறிஸ்துவையும், இப்பொழுது அவருடைய பெயருக்காக இரத்தசாட்சியாகவிருக்கும் அவருடைய ஊழியக்காரனைத் தாங்குவதற்காக அவர் தமது சிங்காசனத்திலிருந்து எழுந்து நிற்பதையும் கண்டான். தனக்குமுன் திறக்கப்பட்ட மகிமையான காட்சியை ஸ்தேவான் அறிவித்தபோது, அது அவனை உபத்திரவம்செய்பவர்களுக்குத் தாங்கமுடியாத அளவிற்கு அதிகமானதாக இருந்தது. அந்த வார்த்தைகளைக் கேட்கக்கூடாது என்பதற்காக "அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்தக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்." (13)

கொடூரமான மரணத்தின் வேதனைகளுக்கிடையில், விசுவாசமிக்க அந்த இரத்தச்சாட்சி அவனுடைய தெய்வீக எஜமானைப்போலவே தன்னைக் கொலைசெய்பவர்களுக்காக ஜெபம்செய்தது! ஸ்தேவான்மீது குற்றம்சாட்டினவர்கள். அவன்மீது முதலாவது கல்லெறிய வேண்டியவர்களாக இருந்தனர். கைதியின் மரணம் சம்பந்தமான தர்க்கத்தில் தீவிரமானவர்களாக இருந்து, ஸ்தேவானின் மரணத்திற்குச் சம்மதித்திருந்த இந்த மனிதர்கள் தங்களுடைய ஆடைகளை சவுலின் பாதத்தருகில் வைத்திருந்தனர். (14)

ஸ்தேவான் இரத்தசாட்சியானபோது, அதற்குச் சாட்சியாக இருந்தவர்களின்மீது, அது ஒரு ஆழ்ந்த உணர்த்துதலை உண்டுபண்ணி யிருந்தது; அது சபைக்கு, அதனைப் புண்படுத்தும் ஒரு சோதனையாக இருந்தது. ஆனால் சவுலின் மதமாற்றத்திற்கு அது பலனாக அமைந்தது. ஸ்தேவானுடைய விசுவாசம், அவன் அடைந்த மகிமை ஆகியவைகளை அவனால் தன்னுடைய ஞாபகத்திலிருந்து நீக்கமுடியவில்லை. ஒளியைத்

தடுக்கும்படி கடினமாகிப்போனவர்களைத்தவிர, மற்றவர்களுடைய முகத்திலும் வார்த்தைகளிலும் காணப்பட்ட தேவனுடைய முத்திரை, ஆழமாகப் பதிந்து, அவன் அறிவித்திருந்த சத்தியமானது, அதைக் கண்டிருந்தவர்களுக்குச் சாட்சிகொடுத்தது. (15)

நீதித் துறையின் சட்டப்படியான தண்டனை எதுவும் ஸ்தேவானுக்கு விதிக்கப்படவில்லை. ஆனால் அந்த வழக்கைப்பற்றி விசாரணை எதுவும் செய்யாமலிருப்பதற்காக ரோம அதிகாரிகளுக்குப் பெரும் தொகை லஞ்சமாகக் கொடுக்கப்பட்டது. ஸ்தேவானைப்பற்றின விசாரணையிலும் மரணத்திலும், சவுல் ஆவியின் தூண்டுதலினால் ஏவப்பட்டு, வைராக்கியமுடையவன்போல் காணப்பட்டான். ஸ்தேவான் மனிதர்களால் கனவீனப்படுத்தப்பட்டிருந்த அதேநேரத்தில், தேவனால் கனப்படுத்தப்பட்டிருந்தான் என்னும் இரகசியமான மன உணர்ததுதலினால், அவன் ஆயத்தமானவனாக இருந்தான். (16)

தேவனுடைய சபையை உபத்திரவப்படுத்துவதில் அவன் தொடர்ந்து விசுவாசிகளை அவர்களுடைய வீடுகளில் முற்றுகையிட்டுக் கைதுசெய்து, அவர்கள் சிறைத் தண்டனை அடையும்படி அவர்களை ஆசாரியர்களிடத்திலும் அதிபதிகளிடத்திலும் ஒப்படைத்திருந்தான். அவனது செயல்கள் எருசலேமி லிருந்த கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த திகிலை உண்டுபண்ணுவதாக இருந்தது. கொடூரமான அந்தச் செயல்களைத் தடுப்பதற்கு ரோம அரசின் அதிகாரிகள் சிறப்பாக எதுவும் செய்யவில்லை. யூதர்களுடன் சமாதானமாக இருக்கவும் அவர்களுடைய அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளவும் அவர்கள் யூதர்களுக்கு இரகசியமாக உதவிசெய்திருந்தனர். (17)

தேவகுமாரனுக்கு எதிரான கலகத்தை நடத்துவதில் கல்விமானாக இருந்த சவுல், சாத்தானின் ஒரு பலத்த கருவியாக இருந்தான். ஆனால் சாத்தானைவிட பலமிக்கவராக இருந்த ஒருவர், இரத்தசாட்சியாகிப்போன ஸ்தேவானின் இடத்தை நிரப்பவும், அவருக்கென்று ஊழியம் செய்யவும், பாடுபடவும் சவுலைத் தேர்ந்தெடுத்தார். சவுல் யூதர்களுக்கிடையே, அவனுடைய கல்வி அறிவிற்காகவும் விசுவாசிகளை உபத்திரவப்படுத்தும் வைராக்கியத்திற்காகவும் மிகுந்த மதிப்பை உடையவனாக இருந்தான். ஸ்தேவானின் மரணம் நிகழும்வரை, அவன் சனகரீப் சங்கத்தில் அங்கத்தினராக இருக்கவில்லை. ஸ்தேவானின் மரணம் நிகழ்ந்த சந்தர்ப்பத்தில், அவன் அதில் பங்குபெற்றிருந்ததற்காக சனெகரீப் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டான். (18) ★

# 37

# சவுலின் மனமாற்றம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 268–275)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 9:1–22**

ஸ்தேவானின் வீரமரணத்தினால் சவுலின் மனம் பெரிய அளவில் கலக்கப்பட்டது. தனது தவறான எண்ணத்திற்காக அவன் நடுங்கினான். ஆனால் ஆசாரியர்கள், அதிபதிகள் ஆகியோரின் வாதங்களினால் ஸ்தேவான் ஒரு தேவதூஷணம் கூறுபவன் என்றும், அவன் பிரசங்கம்செய்திருந்த இயேசு கிறிஸ்து ஒரு வேஷதாரி என்றும், பரிசுத்தமான பதவிகளை வகிப்பவர்கள் சரியானவர்களாகத்தான் இருப்பார்களென்றும் நினைத்து, அவன் முடிவில் மனத்திருப்தியடைந்தான். தீர்மானமிக்க மனதையும் நோக்கத்தில் பலத்தையும் உடையவனாக அவன் இருந்து, கிறிஸ்தவ மார்க்கத்திற்கெதிரான காரியத்தில் கசப்புமிக்க எதிர்ப்பை உடையவனானான். அந்தக் கருத்துக்கள் அவனுடைய உள்ளத்தில் ஒரு தடவை பதிந்துவிட்டபோது, ஆசாரியர்கள், அதிபதிகள் ஆகியோரின் பார்வைகள், சரியானவை என்ற மனமுடிவுக்கு அவன் வந்தான். விசுவாசிகளை வலியச்சென்று உபத்திரவப்படுத்துவதற்கு ஈடுபடுவதில் அவனது வைராக்கியம் அவனை நடத்தினது. ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக விசுவாசிகளை இழுத்துக்கொண்டுவந்து, அவர்கள் இயேசுவின்மேலுள்ள விசுவாசம் ஒன்றைத்தவிர குற்றம் சம்பந்தமான எவ்விதமான ஆதாரமுமின்றி, அவர்கள் சிறைக்கைதிகளாவதற்கோ அல்லது மரணதண்டனை அடைவதற்கோ, அவன் காரணமாக இருந்தான். இதேவிதமான வேறொரு கோணத்தில் யாக்கோபு, யோவான் ஆகியவர்களின் வைராக்கியம் இருந்து, தங்களுடைய ஆண்டவரை நிந்தித்துப் பரிகசிப்பவர்களின்மீது வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து எரிக்கவேண்டும் என்று எண்ணக்கூடியவர்களாக அவர்கள் இருந்தனர். (1)

சவுல் தனது சொந்த அலுவல் காரணமாக தமஸ்குவுக்குச் செல்லவேண்டியவனாக இருந்தான். அப்படிப்போகும்சமயத்தில், அங்கிருக்கிற கிறிஸ்தவ விசுவாசிகளையும் தேடிக் கண்டுபிடிக்கின்றவனாகவும், அதினால்

ஒரே நேரத்தில் இரண்டு காரியங்களை நடப்பிக்கும் தீர்மானமுடையவனாகவும் இருந்தான். இந்த நோக்கத்திற்காக எவர்களெல்லாம் கிறிஸ்தவர்கள் என்று சந்தேகப்படக்கூடியவர்களாக இருக்கின்றனரோ, அவர்களையெல்லாம் விசாரிக்கப்படும்படியாகவும், தண்டனையளிக்கப்படும்படியாகவும் கைதுசெய்து எருசலேமுக்கு அனுப்பிவைப்பதற்கு அவனை அதிகாரப்படுத்தும் கடிதத்தை ஜெப ஆலயத்தில் வாசிக்கும்படி, பிரதான ஆசாரியனிடத்திலிருந்து பெற்றுச் சென்றான். தவறான வைராக்கியம் என்னும் அனலுடன் பலமும் சக்தியும் நிரம்பினவனாகவும் அவன் தனது மனிதத்துவநிலையில்—தனது பாதையில் புறப்பட்டுச்சென்றான். களைப்படைந்த அந்தப் பயணிகள் தமஸ்குவை சமீபித்தபோது, வளமிக்க அந்த இடத்தின் இன்பங்களின்மீதும் அழகிய தோட்டங்களின்மீதும் பழத்தோட்டங்களின்மீதும் பசுமையான நீரோடைகளின்மீதும் சவுலின் கண்கள் பதிந்தன. களைப்பூட்டும் பயணத்தில் பாழான நிலங்களை நீண்ட பயணத்தினால் கடந்துவந்திருந்தவர்களுக்கு, அப்படிப்பட்ட காட்சியைப் பார்ப்பது, மிகுந்த புத்துணர்வை உண்டுபண்ணுவதாக இருந்தது. சவுல் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து, அந்தக் காட்சியைக் கண்டு, வியந்துகொண்டிருந்தபோது, சூரியனைவிட அதிகமான ஒரு ஒளி அவனைச் சுற்றிலும் திடீரென்று பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். “அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்” என்றார். (2)

## கிறிஸ்துவின் தரிசனம்!

அந்தக் காட்சி பெரும் குழப்பத்தை உண்டுபண்ணக்கூடிய ஒன்றாக இருந்தது. சவுலின் கூட்டாளிகள் திகிலால் தாக்கப்பட்டு, அந்த ஒளியின் சக்தியினால் ஏறத்தாழக் குருடர்களைப்போலானார்கள். அவர்கள் ஒரு குரலைக்கேட்டார்கள்; ஆனால் ஒருவரையும் காணவில்லை! அவை அனைத்தும் அவர்களது நுண்ணறிவிற்கு எட்டாத தேவஇரகசியமாக இருந்தது! ஆனால் சவுல் தரையில் முகங்குப்புற விழுந்து, பேசப்பட்டிருந்த வார்த்தைகளைப் புரிந்துகொண்டான். தனக்கு முன்பாக தேவகுமாரன் இருப்பதையும் தெளிவாகக் கண்டான். மகிமைமிக்க அவரைப் பார்த்த ஒரே பார்வை, அடிக்கப்பட்டு விழுந்த அந்த யூதனின் ஆத்துமாவிற்குள் அவரது உருவத்தைப் பதித்துவிட்டது. அவனைத் திடுக்கிடச்செய்யும் வலிமையுடன் அந்த வார்த்தைகள் அவனது இருதயத்தைச் சென்றடைந்தது. இருளடைந்திருந்த அவனது மனதின் அறைகளுக்குள், ஒளிவெள்ளமானது அவனது அறியாமையையும் தவறையும் வெளிப்படுத்திக்கொண்டு பாய்ந்தது.

கிறிஸ்துவின் அடியார்களை உபத்திரவப்படுத்துவதினால், தேவனுக்காக வைராக்கியமாகச் செயலாற்றிக்கொண்டிருப்பதாகக் கற்பனைசெய்துகொண்டு, உண்மையில் அவன் சாத்தானுக்கு வேலைசெய்துகொண்டிருப்பதைக் கண்டான். (3)

ஆசாரியர்கள், அதிபதிகள் ஆகியோரின் வாக்குறுதிகளின்மீது அவனது விசுவாசம் வைக்கப்பட்டிருந்ததற்கான தனது தவறை அவன் கண்டான். அவர்களுடைய பரிசுத்தமான பதவிகளின் காரணமாக, உயிர்த்தெழுதலின் கதை, இயேசுவின் சீடர்களால் சாமர்த்தியமாகப் புனையப்பட்ட ஒன்று என்று நம்பும்படி அவனது மனதின்மீது செல்வாக்கை உண்டுபண்ணியிருந்ததையும் அவன் கண்டான். இப்பொழுதோ, சவுலுக்குக் கிறிஸ்து வெளிப்படுத்தப் பட்டதினால், ஸ்தேவானின் பிரசங்கம் மிகுந்த வலிமையுடன் அவனது மனதிற்குள் கொண்டுவரப்பட்டது. ஆசாரியர்களால் தேவதூஷணம் என்று கூறப்பட்டிருந்த அந்த வார்த்தைகள், இப்பொழுது அவனுக்குச் சத்தியமாக நிதரிசனமான உண்மையாகத் தோன்றியது. ஆச்சரியமான அந்த ஒளியின் நேரத்தில், அவனது மனது குறிப்பிடத்தக்க வேகத்தில் செயல்பட்டது. யூதர்களால் இயேசு நிராகரிக்கப்பட்டதும் சிலுவையில் அறையப்பட்டதும் உயிர்த்தெழுந்ததும் பரமேறிச்சென்றதும் ஆகிய யாவும் தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டுள்ளதையும், அவர்தான் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த மேசியா என்று அது மெய்ப்பிக்கின்றதையும் அவன் தீர்க்கதரிசன வரலாற்றின்மூலமாகக் கண்டான். “அதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்” (அப். 7:56) என்ற ஸ்தேவானின் வார்த்தைகளை நினைவுகூர்ந்தான். எனவே மரித்துக்கொண்டிருந்த அந்தப் பரிசுத்தவான் மகிமையின் இராஜ்யத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான் என்பதையும் அவன் அறிந்தான். (4)

விசுவாசிகளை உபத்திரவப்படுத்துபவனுக்கு இவை யாவும் எப்படிப்பட்ட ஒரு வெளிப்படுத்தலாக இருந்தது? தெளிவான—ஆனால் பயங்கரமான ஒளி சவுலின் ஆத்துமாவை நொறுக்கியிருந்தது. கிறிஸ்து அவருடைய ஊழியத்தின் நிறைவேறுதலாக பூமிக்கு வந்து, நிராகரிக்கப்பட்டு, இழிவாக நடத்தப்பட்டு, பழிக்கப்பட்டு, எவர்களை இரட்சிப்பதற்காக அவர் வந்திருந்தாரோ அவர்களால் சிலுவையில் அறையப்பட்டு, பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றிருப்பது அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவனுடைய (பவுலின்) சம்மதத்தினால்தான் பரிசுத்தமான ஸ்தேவான் பலியாக்கப்பட்டிருந்தான் என்பதையும், அவனைக் கருவியாகக் கொண்டதின்மூலமாகத் தகுதிவாய்ந்த அநேக பரிசுத்தவான்கள் கொடூரமான உபத்திரவத்தில் மரணமடைந்தனர் என்பதையும், பயங்கரமான அந்த நேரத்தில் அவன் நினைவுகூர்ந்தான். (5)

அவன் நடுங்கித் திகைத்து: “ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ. நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்” என்றார். அவனுடன் பேசியிருந்த இவர்தான் உண்மையான நசரேயனாகிய இயேசு என்பதைப்பற்றியும், உண்மையாகவே இவர்தான் நெடுங்காலமாக எதிர்பார்க்கப்பட்டுக்கொண்டிருந்த மேசியா என்பதைப்பற்றியும், இஸ்ரவேலின் ஆறுதலும் மீட்பருமானவர் என்பதைப்பற்றியும் எந்தவிதமான சந்தேகமும் சவுலின் மனதிற்குள் பிரவேசிக்கவில்லை. அந்த மகிமையின் பிரகாசமான ஒளியானது மறைந்தபின், சவுல் எழுந்து தரையின்மீது நின்று, தான் முற்றிலும் பார்வையை இழந்தவனாக இருப்பதைக் கண்டான். சாவுக்கேதுவான அவனது பார்வைக்கு கிறிஸ்துவின் மகிமையின் ஒளி மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்ததினால், அது நீங்கினபோது, அவனது பார்வையில் இரவின் இருள்படிந்தது. இயேசுவின் அடியார்களைக் கொடூரமான விதத்தில் உபத்திரவப்படுத்தினதற்கான தேவனுடைய தண்டனையாகத் தனது குருட்டுத் தன்மை உள்ளது என்று அவன் நம்பினான். பயங்கரமான இருளில் அவன் தடவினான்; எனவே, அவனுடன் வந்தவர்கள் பயத்துடனும் ஆச்சரியத்துடனும் அவனுக்குக் கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவிற்கு அழைத்துச்சென்றனர். (6)

### சபைக்கு நடத்தப்படுதல்!

“நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ. நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்” என்பது அவனது கேள்விக்கான பதிலாக இருந்தது. இயேசு, விசாரித்துக்கொண்டிருக்கும் யூதனை, சபையில் உள்ளவர்களிடமிருந்து கடமையைப்பற்றின அறிவை அடைந்துகொள்ளும்படி, அவரது சபைக்கு அனுப்புகிறார். வெளிப்படுத்தல் மனஉணர்த்துதலை உண்டுபண்ணுதல் ஆகிய பணிகளைக் கிறிஸ்து செய்தார். இப்பொழுது பாவத்திற்காக வருந்தும் அவன், அவருடைய சத்தியத்தைப் போதிக்கும்படி தேவன் நியமித்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் நிலைமையில் இருந்தான். இவ்வாறாக, இயேசு அவரால் அமைக்கப்பட்ட சபைக்கு அதிகாரத்தை அனுமதித்து, சவுலைப் பூமியிலுள்ள அவரது பிதிநிதிகளுடன் தொடர்புள்ளவனாகும்படி வைத்தார். பரலோகத்தின் ஒளி சவுலைப் பார்வையை இழக்கும்படிச் செய்தது. ஆனால் பெரும் பரிகாரியான அவர், அவனை உடனே சுகப்படுத்தவில்லை. ஆசீர்வாதங்களனைத்தும் கிறிஸ்துவிடமிருந்து பிரவாகித்துவருகின்றன; ஆனால் இப்பொழுது பூமியின்மேல் அவரது பிரதிநிதியாக இருக்கும்படி அவர் அவரது சபையை ஏற்படுத்தியிருக்கிறார். மனம் திரும்பும் பாவியை வாழ்க்கையின் பாதையில்

நடத்துவதற்கான ஒரு வேலை அதற்குரியதாக உள்ளது. சவுல் எவர்களை அழிப்பதற்கு நோக்கமுடையவனாக இருந்தானோ, அந்த அதே மனிதர்கள், அவன் நிந்தித்து உபத்திரவப்படுத்தியிருந்த மதத்தில், அவனுடைய ஆசிரியர்களாக இருக்கவேண்டியவர்களாக இருந்தனர். (7)

தமஸ்குவிலிருந்த யூதாவின் வீட்டில் சவுல் மூன்று நாட்கள் உபவாசத்திலும் ஜெபத்திலும் இருந்தபோது, அவனுடைய விசுவாசம் கடுமையாகச் சோதிக்கப்பட்டது. அவன் மொத்தத்தில் குருடனாக இருந்தான். அவனிடமிருந்து என்ன அவசியப்படுத்தப்படுகிறது என்பதை அறியாதவனாக, அவன் மனதில் கடுமையான இருளில் இருந்தான். அவன் தமஸ்குவுக்குச் செல்லவேண்டுமென்றும், அவன் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி அங்கு அவனுக்குக் கூறப்படும் என்றும் அவன் நடத்தப்பட்டான். அவனுடைய நிச்சயமின்மையிலும் துன்பத்திலும் அவன் தேவனை நோக்கி, அக்கரையுடன் அழுதான். “தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான். அப்பொழுது கர்த்தர் நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத்தேடு; அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான். அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படித் தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான்” என்றார். (8)

பரிசுத்தவான்களை மிகவும் கசப்பான விதத்தில் சவுல் உபத்திரவப்படுத்தியிருந்த செய்திகளானது தூரத்திலும் சமீபத்திலும் பரவியிருந்ததினால், தேவதூதனால் அனனியாவுக்குக் கூறப்பட்ட வார்த்தைகளை அவனால் ஏற்கமுடியவில்லை. எனவே அவன் சிநேகபாவத்துடன் ஆட்சேபிக்கத் துணிந்தான். “அதற்கு அனனியா: ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக் குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையும் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே” என்றான். ஆனால் அனனியாவுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை கண்டிப்பானதாக இருந்தது. “அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டும் என்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்.” (10)

ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த அந்தச் சீடன், சமீபத்தில் இயேசுவின் பெயரில் விசுவாசம் உடையவர்களுக்கெதிராக இருந்து பயமுறுத்தி அவர்களைச் சாகடித்திருந்தவனை, தேடிச்சென்று, அவன் வீட்டிற்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: "சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது; அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான்." (11)

கிறிஸ்து மனிதர்களின் இரட்சிப்பிற்காகச் செயல்படுகின்ற விதத்தை இங்கு ஒரு முன்மாதிரியாகக் காட்டுகிறார். இந்தக் காரியங்களையெல்லாம் சவுலுக்காக அவரால் நேரடியாகச் செய்திருந்திருக்கமுடியும். ஆனால் அப்படிச்செய்வது அவரது திட்டத்திற்கு இசைவானதாக இல்லை. அவரது ஆசீர்வாதங்கள் அவர் ஏற்படுத்தியிருக்கும் இடைக்கருவிகளின்மூலமாக வரவேண்டியதாக இருந்தது. சவுல் எவர்களை அழிப்பதைப்பற்றிச் சிந்தித்திருந்தானோ, அவர்களிடம் பாவ அறிக்கை போன்ற விதத்தில் ஏதாவது செய்யவேண்டியவனாக இருந்தான். எனவே அவரது சார்பில் செயலாற்றும்படி தேவன் அதிகாரப்படுத்தியிருந்தவர்களின்மூலமாகச் செயலாற்றவேண்டிய ஒரு பொறுப்பான பணி தேவனிடமிருந்தது. (12)

சவுல் சீடர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் ஒருவனாகிறான். கற்பனையின் ஒளியில் அவன் தன்னையே ஒரு பாவியாகக் காண்கிறான். அவன் தன்னுடைய அறியாமையின் காரணமாக, எந்த இயேசுவை ஒரு வேஷதாரியாகக் கண்டிருந்தானோ, அவர்தான் ஆதாமின் நாட்களிலிருந்து தேவனுடைய ஜனத்தின் மதத்தின் ஆக்கியோனாகவும் அஸ்திவாரமாகவும், இப்பொழுது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள தரிசனத்தின்படி இப்பொழுது விசுவாசத்தை முடிப்பவராகவும், சத்தியத்தை நியாயமென்று நிரூபிப்பவராகவும் இருக்கிறார் என்பதைக் காண்கிறான். இயேசு தேவனுடைய கற்பனையைப் பயன்பற்றதாகச்செய்யும் ஒருவராக இருப்பதாக அவன் கருதியிருந்தான். ஆனால் அவனுடைய ஆவிக்குரிய பார்வை தேவனுடைய விரலினால் தொடப்பட்டபோது, யூதமுறைகள், பலிமுறைகள் ஆகியவை முழுவதற்கும் கிறிஸ்துதான் ஆதியானவர் என்பதை அவன் கற்றுக்கொண்டான். தமது பிதாவின் கற்பனையை நியாயமென்று மெய்ப்பிக்கும் நோக்கத்துடன் கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். நிழலாட்டமாயிருந்த பிரமாணம் (சடங்காச்சாரப் பிரமாணங்கள்) அவரது மரணத்தில் நிஜத்தைச் சந்தித்தது என்றும் அறிந்தான். அவன் வைராக்கியமாக அனுசரித்துக்கொண்டிருப்பதாக

நினைத்துக்கொண்டிருந்த சன்மார்க்கப் பிரமாணத்தின் ஒளியில் சவுல் தன்னை பாவிகளில் ஒரு பிரதான பாவியாகக் கண்டான். (13)

**உபத்திரவப்படுத்தியவனே அப்போஸ்தலனாக மாறினான்!**

தமஸ்கு ஆற்றில் பவுல் அனனியாவினால் ஞானஸ்நானம் பெற்றான். அதற்குப்பின் அவன் உணவினால் பலப்படுத்தப்பட்டு, உடனே அவன் எவர்களை அழிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் எருசலேமிலிருந்து புறப்பட்டிருந்தானோ, அந்த விசுவாசிகளுக்கு நகரத்தில் இயேசுவைப்பற்றிப் பிரசங்கிக்க ஆரம்பித்தான். மரிப்பதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இயேசுதான் உண்மையில் தேவகுமாரன் என்று அவன் ஜெபஆலயங்களில் போதித்தான். தீர்க்கதரிசனங்களிலிருந்த அவனுடைய வாதங்கள் தீர்மானமுடையவையாக இருந்து, அவனது முயற்சிகள் தேவனுடைய வல்லமை கலந்ததாக இருந்து, எதிர்க்கும் யூதர்களால் பதில்கூறமுடியாத விதத்தில், அவர்களைக் குழப்பியிருந்தது. ரபிமார்கள், பரிசேயர் ஆகியவர்களால் கிடைத்திருந்த பவுலின் கல்வி, இப்பொழுது சுவிவேஷத்தைப் பிரசங்கம் செய்வதற்கும், அவன் ஒரு சமயத்தில் எந்தக் காரியத்தை அழிக்க ஒவ்வொரு முயற்சியையும் எடுத்திருந்தானோ, அந்த சுவிசேஷத்தைத் தாங்குதவற்கான நல்ல காரியத்திற்குப் பயன்படுவதற்குமாக இருந்தது. (14)

பவுலின் மதமாற்றத்தில் யூதர்கள் முற்றிலுமாக ஆச்சரியமும் குழப்பமும் அடைந்தவர்களானார்கள். எருசலேமில் அவனுக்கிருந்த அந்தஸ்தை அவர்கள் அறிந்திருந்தனர். அவன் தமஸ்குவுக்கு வந்த பயணத்தின் முக்கியமான நோக்கம் இன்னதென்பதையும் அறிந்திருந்தனர். இயேசுவை விசுவாசிப்பவர்களை எருசலேமின் சிறைச்சாலைக்கு அனுப்புவதற்காகப் பிரதான ஆசாரியனிடமிருந்துள்ள அதிகாரத்துடன் அவன் தமஸ்குவுக்கு வந்திருக்கிறான் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். அப்படியிருந்தும், இப்பொழுது அவன் இயேசுவைப் பிரசங்கிப்பதையும், ஏற்கனவே அவரது சீடர்களாக இருந்தவர்களைப் பலப்படுத்துவதையும், முன்பு வைராக்கியமாக எதிர்த்திருந்தவர்களும் விசுவாசத்திற்குப் புதிதாக மாற்றமடைபவர்களும் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டிருப்பதையும் அவர்கள் கண்டார்கள். பவுலின் விசுவாசமாற்றம் முன்யோசனை இல்லாததினாலோ அல்லது மதவெறியினாலோ உண்டாகாமல், தன்னை வெற்றிகொண்ட சான்றினால் உண்டானது என்பதாக தனது பேச்சைச் கேட்டிருந்த யாவருக்கும் அவன் விளக்கிக் காட்டிருந்தான். (15)

அவன் ஜெப ஆலயத்தில் ஊழியம் செய்தபோது, அவனது விசுவாசம் பலப்பட்டது. யூதர்களிடமிருந்துண்டான பயங்கரமான எதிர்ப்புக்குமுன்பாக இயேசுதான் தேவகுமாரன் என்று சாதிக்கும் அவனுடைய வைராக்கியம்

அதிகரித்தது. அவனால் தமஸ்குவில் அதிககாலம் தங்கியிருக்கமுடியவில்லை. ஏனெனில், அவனுடைய ஆச்சரியமான மதமாற்றத்தினால் உண்டான ஆச்சரியத்திலிருந்தும், அதற்குப் பின்னான ஊழியத்திலிருந்து யூதர்கள் விடுபட்டதும், அவர்கள் கிறிஸ்துவைப்பற்றிய கோட்பாட்டிற்கு சாதகமாகக் கொண்டுவரப்பட்ட வியப்பூட்டும் சான்றுகளிலிருந்தும் தீர்மானத்துடன் திரும்பினார்கள். பவுலின் மதமாற்றத்தினால் உண்டான அவர்களுடைய ஆச்சரியம் இயேசுவுக்கு எதிராக வெளிக்காட்டின வெறுப்பைப்போல, கடுமையான வெறுப்பாக மாறியது. (16)

## ஊழியத்திற்கான ஆயத்தம்!

பவுலின் உயிர் அபாயத்தில் இருந்தது. தற்காலிகமாகத் தமஸ்குவை விட்டுப்போகும்படியான ஒரு கட்டளை அவனுக்கு தேவனிடத்திலிருந்து வந்தது. அவன் அரேபியாவுக்குச் சென்றான். அங்கே ஏறத்தாழத் தனிமையில் தேவனுடன் தொடர்புகொள்ளுவதற்கும் தியானம்செய்வதற்கும் போதுமான வாய்ப்பை பெற்றிருந்தான். தன்னுடைய இருதயத்தை சோதித்துப் பார்ப்பதற்காகவும் தனது மனந்திரும்புதலை ஆழப்படுத்தவும், தான் எடுத்துக்கொள்ளுவதற்கு மிகவும் பெரிதானதும் மிகவும் முக்கியமானதுமாகத் தோன்றின பணியில் ஈடுபடுவதற்கும், ஜெபத்தினாலும் வேதவாசிப்பினாலும் தன்னை ஆயத்தப்படுத்த அவன் விரும்பினான். அவன் மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு அப்போஸ்தலனாக இருந்தான். அவனுடைய ஊழியம் புறஜாதியாருக்கிடையில் இருந்தது என்று வெளிப்படையாக அறிவிக்கப்பட்டிருந்தது. (17)

அவன் அரேபியாவிலிருந்தபோது, அப்போஸ்தவர்களுடன் தொடர்பு கொள்ளாமல், தன்னுடைய மனந்திரும்புதல் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும், தன்னுடைய பெரிய பாவம் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்னும் நிச்சயத்தை அறியும்வரை, அவன் தனது முழு இருதயத்துடனும் தேவனை அக்கரையாகத் தேடினான். வரவிருக்கும் அவனுடைய ஊழியத்தில், இயேசு அவனுடன் இருப்பார் என்னும் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளும்வரை, அவன் தன்னுடைய போராட்டத்தைக் கைவிடமாட்டான். அவன் எப்பொழுதும் தன்னுடைய சரீரத்திலும், பரலோக ஒளியினால் குருடாக்கப்பட்ட அவனது கண்களிலும், கிறிஸ்துவின் மகிமையின் அடையாளங்களையும் தன்னைத் தாங்கும் கிறிஸ்துவின் கிருபையையும், சுமந்திருக்கவேண்டியவனாக இருந்தான். பவுல் பரலோத்துடன் நெருங்கிய தொடர்பை உடையவனாக இருந்தான். இயேசு அவனுடன் தொடர்புகொண்டு, அவரது ஞானத்தையும் கிருபையையும் அவனுக்கு அருளி, அவரைப்பற்றும் விசுவாசத்தில் அவனை உறுதிப்படுத்தினார். (18) ★

# 38

# பவுலின் ஆரம்பகால ஊழியங்கள்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 276–280)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 9:23–31; 22:17–21.**

இப்பொழுது பவுல் தமஸ்குவுக்குத் திரும்பி வந்து, இயேசுவின் நாமத்தினால் தைரியமாகப் பிரசங்கம் செய்தான். அவனுடைய வாதங்களில் இருந்த ஞானத்திற்குமுன், யூதர்களால் நிற்கமுடியவில்லை. எனவே, பலாத்காரத்தின்மூலமாக அவனுடைய குரலை மௌனப்படுத்த, அவர்கள் ஒன்றுசேர்ந்து ஆலோசனைசெய்தார்கள். மூழ்கிக்கொண்டிருக்கும் ஒரு காரியத்தை காப்பதற்காக விடப்பட்டிருந்த ஒரேவாதம் அதுவாக—பலாத்காரம் செய்வதாக இருந்தது! அவனைக் கொலைசெய்ய அவர்கள் முடிவுசெய்தனர்! அவர்களுடைய நோக்கத்தை அப்போஸ்தலன் அறியும்படி உணர்த்தப்பட்டிருந்தான். அவன் தப்பிச்செல்லுவதைத் தடுப்பதற்காக இரவும் பகலும் நகரத்தின் வாசல்கள் விழிப்புடன் காக்கப்பட்டிருந்தன. சீடர்களின் கவலை, ஜெபத்தினால் தேவனைச் சமீபிக்கும்படி அவர்களை இழுத்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலனை, தப்பவைப்பதற்கு வழிகளையும் உபாயங்களையும் அவர்கள் தேடிக்கொண்டிருந்தபோது, அவர்களுக்கிடையில் ஊக்கம் மிகவும் குறைவாக இருந்தது. முடிவாக அவனை ஒரு கூடையில்வைத்து, சன்னல்வழியாக இரவில் சுவருக்கு வெளியில் இறக்கிவிடுவது என்ற திட்டம் தீட்டப்பட்டது. இப்படிப்பட்ட அவமானப்படுகிறவிதத்தில் பவுல் தமஸ்குவைவிட்டுத் தப்பிச்சென்றான். (1)

அவன் இப்பொழுது அப்போஸ்தலர்களைத் தன்னுடன் அறிமுகப் படுத்திக்கொள்ளுவதற்காக, குறிப்பாகப் பேதுருவைத் தன்னுடன் அறிமுகப்படுத்திக்கொள்ளுவதற்காக எருசலேமிற்குப் புறப்பட்டுச் சென்றான். பூமியில் கிறிஸ்து இருந்தபோது, அவருடன் வாழ்ந்து, ஜெபித்து, அவருடன் உரையாடியிருந்த அந்தக் கலிலேய மீனவ மனிதர்களைச் சந்திப்பதற்கு அவன் மிகவும் ஆவலுள்ளவனாக இருந்தான். அப்போஸ்தலர்களில் தலைமையானவனைச் சந்திப்பதற்கு ஏக்கமுள்ள இருதயத்துடன்

விருப்ப முள்ளவனாக அவன் இருந்தான். பவுல் எருசலேமுக்குள் பிரவேசித்தபோது, அந்த நகரத்தின்மீதும், தேவாலயத்தின்மீதும், மாறுபட்ட கண்ணோட்டம் உடையவனாக இருந்தான். தேவகோபமாகிய நியாயத்தீர்ப்பு அவர்களுக்குமேல் தொங்கிக்கொண்டிருப்பதை அவன் இப்பொழுது அறிந்தான். (2)

பவுலின் மதமாற்றத்தினால், யூதர்களுக்கிடையில் உண்டான வருத்தமும் கோபமும் எல்லையில்லாததாக இருந்தது. ஆனால் அவன் ஒரு கன்மலையைப்போல் உறுதி உள்ளவனாக இருந்து, ஆச்சரியமான அவனது அனுபவங்களைப்பற்றி தனது நண்பர்களிடம் கூறினபோது, அவன் செய்ததைப்போல அவர்களும் தங்களுடைய விசுவாசத்தை மாற்றிக்கொண்டு, இயேசுவின்மேல் விசுவாசம் வைக்கவேண்டுமென்று பெருமையாகக் கூறினான். கிறிஸ்துவுக்கும் அவரது அடியார்களுக்கும் எதிரான அவனது எதிர்ப்பில் அவன் கண்டிப்பான மனச்சாட்சியின்படி நடப்பவனாக இருந்தான். அவன் கைதுசெய்யப்பட்டு, அவனது பாவத்தைப்பற்றிய மன உணர்த்துதலை அடைந்தபோது, உடனே தனது பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பி, இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை அறிக்கைசெய்தான். இயேசுவை தேவகுமாரன் என்று நம்பியிருந்தவர்களை உபத்திரவப்படுத்தி, மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த அகந்தைமிக்க பரிசேயனாக இருந்த அவன், ஆச்சரியமான மதமாற்றத்தின் சூழ்நிலைகளைப்பற்றி அவனுடைய பழைய நண்பர்களுடனும் கூட்டாளிகளுடனும் கேட்டிருந்ததை முற்றிலுமாக நம்பியிருந்த அவன், அவர்களும் தங்களுடைய தவறைப்பற்றி மனஉணர்த்துதலை அடைந்து, விசுவாசிகளின் கூட்டத்தில் சேர்ந்துகொள்ளவேண்டுமென்று விரும்பினான். (3)

சீடர்களான சகோதரர்களுடன் அவன் சேர்ந்துகொள்ள முயன்றான். ஆனால் அவர்களுக்குள் ஒருவனாக அவனை ஏற்றுக்கொள்ள அவர்கள் விருப்பமில்லாமலிருப்பதைக் கண்டபோது, அவனது வருத்தமும் மனமடிவும் மிகப் பெரிதாக இருந்தது. அவன் முன்பு உபத்திரவம் செய்திருந்ததை அவர்கள் நினைவில்கொண்டு, அவர்களை வஞ்சிப்பதற்காகவும் அழிப்பதற்காகவும் அவன் நடிக்கிறான் என்று அவன்மீது அவர்கள் சந்தேகப்பட்டார்கள். அவனுடைய ஆச்சரியமான மதமாற்றத்தைப்பற்றி, அவர்கள் கேட்டிருந்தது உண்மைதான்; ஆனால் அவன் உடனே அரேபியாவுக்கு ஒதுங்கிச் சென்றதும், அதற்குமேல் அவனைப்பற்றித் திட்டமாக ஒன்றையும் அவர்கள் கேள்விப்படாமல் இருந்ததுமான காரியங்களினால், அவனது பெரிய மாறுதலுக்கு அவர்கள் மதிப்புக்கொடுக்கவில்லை. (4)

**யாக்கோபுவையும் பேதுருவையும் சந்தித்தல்!**

கிறிஸ்துவின் காரியத்தைத் தாங்குவதற்காகவும், ஏழைகளின் தேவைகளுக்கு நிவாரணம் அளிக்கவும், பர்னபாஸ் தாராளமாக நன்கொடை வழங்கியிருந்தான். பவுல் விசுவாசிகளை எதிர்த்தபோது, அவன் பவுலுக்கு அறிமுகமானவனாக இருந்தான். அவன் இப்பொழுது முன்வந்து, தனது அறிமுகத்தைப் புதுப்பித்துக்கொண்டு, பவுலின் ஆச்சரியமான மதமாற்றத்தையும் அந்த நேரத்திலிருந்து அவனுக்குண்டான, அனுபவங்களைப்பற்றியும் கேட்டிருந்தான். அவன் பவுலை முற்றிலுமாக நம்பி, அவனை ஏற்றுக்கொண்டு, அவனுக்கு கைகொடுத்து, அப்போஸ்தலர் களுக்குமுன் கொண்டுபோய்விட்டான். அவன், தான் பவுலைப்பற்றிக் கேள்விப்பட்டவைகளை விவரித்து—அதாவது பவுல் தமஸ்குவுக்குச் சென்றிருந்தபோது, இயேசு அவனுக்கு வழியில் நேரடியாகக் காட்சியளித்ததையும், அவர் அவனுடன் பேசியிருந்ததையும் அனனியாவின் ஜெபத்திற்கு மறுமொழியாகப் பவுல் மீண்டும் பார்வைஅடைந்ததையும், அதற்குப்பின், இயேசுதான் தேவகுமாரன் என்று நாள்தோறும் ஜெப ஆலயங்களில் பிரசங்கித்திருந்ததையும் விவரித்தான். (5)

அதற்குப்பின்னர் அப்போஸ்தலர்கள் தயங்கவில்லை. அவர்கள் தேவனுக்கு எதிராகச் செயல்படக்கூடாதல்லவா? அந்த நேரத்தில் யாக்கோபு, பேதுரு ஆகிய இரு அப்போஸ்தலர்கள்மட்டுமே எருசலேமில் இருந்தனர். ஒரு சமயத்தில் அவர்களுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களை உபத்திரவப்படுத்துபவனாக இருந்த பவுலுக்கு அவர்கள் வலதுகை கொடுத்து, அவன் இதற்குமுன் எந்த அளவிற்கு அஞ்சப்படக்கூடியவனாகவும் தவிர்க்கப்படக்கூடியவனாகவும் இருந்தானோ, அந்த அளவிற்கு இப்போது நேசிக்கப்பட்டு மதிக்கப்பட்டான். இங்கு புதிய விசுவாசத்தின் இரண்டு சுபாவங்கள் (நபர்கள்) ஒன்றையொன்று சந்தித்தன. அதாவது, கிறிஸ்து பூமியில் இருந்தபோது, பேதுரு அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவனாக இருந்தான். பரிசேயனாகிய பவுல் கிறிஸ்துவின் பரமேறுதலிலிருந்து, அவரை முகமுகமாகச் சந்தித்து அவருடன் பேசியிருந்தான். அவரையும் பரலோகத்தில் அவருடைய ஊழியத்தின் தன்மையையும் தரிசனத்தில் கண்டிருந்தான். (6)

இவர்களது முதல் சந்திப்பு இரண்டு அப்போஸ்தலர்களுக்கும் நல்ல பலனைத் தருவதாக இருந்தது. ஆனால் அது குறைந்த அளவு நேரமே நீடித்தது. ஏனெனில் பவுல் தன்னுடைய ஆண்டவருடைய ஊழியத்திற்காகச் செல்லுவதில் ஆவலுள்ளவனாக இருந்தான். மிகுந்த அக்கரையுடன் ஸ்தேவானுடன்வாக்குவாதம்செய்திருந்த அந்தக்குரல், அதே ஜெபஆலயத்தில்

இயேசுதான் தேவகுமாரன் என்று அச்சமின்றி அறிவிப்பது கேட்கப்பட்டது! ஸ்தேவான் எந்தக் காரணத்தை நியாயமென்று மெய்ப்பிப்பதற்காக மரித்திருந்தானோ, அதையே அந்தக் குரல் பரிந்துரைசெய்துகொண்டிருந்தது! அவனுடைய ஆச்சரியமான அனுபவத்தை அவன் விவரித்தான். தனது சகோதரர்கள், முந்தைய கூட்டாளிகள் ஆகியோரின்மீதுள்ள இருதயம் நிறைந்த அதிகமான விருப்பத்துடன் தீர்க்கதரிசனங்களிலுள்ள சான்றுகளை முன்வைத்து, ஸ்தேவான் சொன்னதுபோலவே, சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே தேவகுமாரன் என்று கூறினான். (7)

ஆனால் பவுல், தனது யூதச் சகோதரர்களின் ஆவியைப்பற்றித் தவறாகக் கணக்கிட்டிருந்தான். ஸ்தேவானுக்கு எதிராக ஏற்பட்டிருந்த அதே கடுங்கோபம் அவனையும் சந்தித்தது. தனது சகோதரர்களிடமிருந்து தான் பிரிந்துசெல்லவேண்டும் என்பதைக்கண்டபோது, துயரம் அவனது இருதயத்தை நிரப்பினது. அவன் தனது உயிரைக்கொடுப்பதினால் சத்தியத்தைப்பற்றிய ஒரு அறிவை அவர்களுக்கு உண்டுபண்ணக்கூடுமானால், தனது ஜீவனைக் கொடுக்கவும் மனப்பூர்வமாக இணங்குபவனாக இருந்தான். அவனது உயிரை எடுக்க யூதர்கள் திட்டம் தீட்டுகின்றனர். எனவே சீடர்கள் அவனை, எருசலேமைவிட்டுச் செல்லும்படி வற்புறுத்தினார்கள். ஆனால் அவன் அந்த இடத்தை விட்டுச்செல்ல மனமற்றவனாக, தனது யூதச் சகோதரர்களுக்காக, இன்னும் சிறிது காலம் அங்கு ஊழியம்செய்யவேண்டுமென்ற கவலையுடன் தயங்கிநின்றான். ஸ்தேவான் இரத்தசாட்சியானதில் பவுல் ஒரு தீவிரமான பங்கை உடையவனாக இருந்தான். சத்தியத்தைத் தைரியமாகப் பேசினதால், இழக்கப்பட்ட ஸ்தேவானின் உயிருக்காகவும் கவலை உள்ளவனாக இருந்தான். எருசலேமைவிட்டு ஓடிப்போவது ஒரு கோழைத்தனமான செயல்போல் அவனுக்குக் காணப்பட்டது. (8)

## எருசலேமிலிருந்து ஓடிப்போகுதல்!

அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கைக்கு எதிராக உண்டாகக்கூடிய பலன்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் ஆயத்தத்தோடு, தேவாலயத்திலிருந்து தேவனை நோக்கி அக்கரையுடன் ஜெபித்துக் கொண்டிருந்த பவுலுக்கு இரட்சகர் ஒரு தரிசனத்தில் தோன்றி; “நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப் போ” என்றார். அதற்கு மறுமொழியாகப் பவுல்: “ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில்வைத்து, ஜெப ஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, நானும் அருகே நின்று, அவனைக் கொலைசெய்வதற்குச்

சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்ததையும் இவர்கள் அறிந்திருக்கிறார்களே” என்றான். அப்படியிருந்தும்கூட பிடிவாதமான யூதர்களுக்கு சத்தியத்தைப்பற்றிய அவனுடைய விசுவாசம்பற்றி ஒரு மனத்திருப்தியை உண்டுபண்ணாமல், எருசலேமைவிட்டுச் செல்லத் தயங்கினான். சத்தியத்திற்காகத் தனது ஜீவனையே தியாகம் செய்ய நேரிட்டாலும், அது ஸ்தேவானின் மரணத்திற்காக தனக்கு எதிராக இருந்த பயங்கரமான கணக்கைத் தீர்வுசெய்யாது என்று அவன் எண்ணியிருந்தான். ஆனால் அதற்கான பதில் முடிவானதாக இருந்தது. “அதற்கு அவர்: நீ போ; நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்தில் அனுப்புவேன் என்று சொன்னார்.” பவுலின் தரிசனத்தைப்பற்றியும் தேவன் அவன்மீது கொண்டுள்ள கரிசனையைப்பற்றியும், சகோதரர்கள் அறிந்தபோது, அவனைப் பற்றிய கவலை அவர்களில் அதிகரித்தது. ஏனெனில் அவன் கர்த்தரால் உண்மையாகவே புறஜாதியினருக்கு சத்தியத்தை அறிவிப்பதற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு பாத்திரமாக இருக்கிறான் என்பதை அவர்கள் உணர்ந்தனர். யூதர்களால் அவன் கொலைசெய்யப்பட்டுவிடுவான் என்ற பயத்தில், எருசலேமிலிருந்து அவன் தப்பிச் செல்லுவதை அவர்கள் விரைவுபடுத்தினார்கள். பவுல் புறப்பட்டுச்சென்றதானது. பலமிக்க யூதர்களின் எதிர்ப்பைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தது. சபைக்கு அதனால் வளர்ச்சியடைவதற்கான ஒரு நேரம் கிடைத்தது. அதற்குள் அநேகர் விசுவாசிகளின் கூட்டத்துடன் அதிகமான எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். (9) ★

# 39

# பேதுருவின் ஊழியம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 281–291)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 9:32–11:18**

பேதுரு அவனுடைய ஊழியத்தின் தொடர்ச்சியாக லித்தாவிலுள்ள பரிசுத்தவான்களைச் சந்தித்தான். அங்கு அவன் திமிர்வாத நோயினால் எட்டு வருடங்களாகப் படுக்கையில் கிடந்த, ஐனேயா என்பவனைச் சுகப்படுத்தினான். "பேதுரு அவனைப் பார்த்து: ஐனேயாவே, இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்றான். உடனே அவன் எழுந்திருந்தான். லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்." (1)

யோப்பா பட்டணம் லித்தாவுக்கு அருகில் உள்ளது. அங்கு தொற்காள் என்னும் மறுபெயருள்ள தபீத்தாள் என்பவள் மரணமடைந்து, கிடத்தப்பட்டிருந்தாள். அவள் இயேசு கிறிஸ்துவுக்கு மதிப்பு வாய்ந்த ஒரு சீஷியாக இருந்தாள். அவளது உதாரத்துவமான செயல்கள், ஏழைகளிடத்திலும் துயரப்படுபவர்களிடத்திலும் காட்டியிருந்த அன்பு, சத்தியத்தின்மீதுள்ள வைராக்கியம், ஆகியவைகளால் அவள் எடுத்துக்காட்டானவளாக இருந்தாள். அவளுடைய மரணம் பெரும் இழப்பாக இருந்தது. பிள்ளைப் பருவத்திலிருந்த சபைக்கு அவளது உதவி தவிர்க்கமுடியாததாக இருந்தது. லித்தாவில் பேதுரு கொடுத்த அற்புதமான சுகத்தைப்பற்றி விசுவாசிகள் கேள்விப்பட்டபோது, அவன் யோப்பாவுக்கு வரவேண்டுமென்று அவர்கள் அதிகமாக விரும்பினார்கள். அவனை அங்குவரும்படி அழைப்பதற்காக இரண்டு மனுஷரை அனுப்பினார்கள். (2)

"பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும்வஸ்திரங்

களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தி னான்.” இறந்தவளை உயிரடையும்படி எழுப்பிய இப்பெரும் செயல் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்திற்கு அநேகரை மாற்றம்செய்வதற்கு ஒரு கருவியாக அமைந்தது. (3)

## நூற்றுக்கு அதிபதி!

“இத்தாலியாப் பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச்செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்.” கொர்நேலியு என்பவன் ரோமநாட்டைச் சேர்ந்த ஒருவனாக இருந்திருந்தபோதிலும், மெய்யான தேவனுடன் அறிமுகமானவனாக இருந்து, விக்கிரக ஆராதனையைவிட்டு விலகியிருந்தான். அவன் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிபவனாக இருந்து, உண்மையான இருதயத்துடன் அவரைத் தொழுதிருந்தான். அவன் தன்னை யூதர்களுடன் பிணைத்துக்கொள்ளவில்லை. ஆனால் சன்மார்க்கப் பிரமாணங்களுடன் அறிமுகமுள்ளவனாக இருந்து அதற்குக் கீழ்ப்படிபவனாக இருந்தான். அவன் தனக்கு விருத்தசேதனம் செய்துகொள்ளவில்லை. எனவே, யூதர்களால் அசுத்தமானவனாகக் கருதப்பட்டிருந்தான். அப்படியிருந்தபோதிலும், அவன் யூதர்களுடைய சமயக் காரியங்களைத் தனது தாராளமான நன்கொடைகளினால் தாங்கியிருந்து, அவனது உதாரமிக்க செயல்களுக்காகவும் அனுதாபத்திற்காகவும் தூரத்திலும் அருகிலும் உள்ளவர்களால் அறியப்பட்டிருந்தான். அவனுடைய நீதிமிக்க வாழ்க்கை அவனுக்கு யூதர்களிடத்திலும் புறஜாதியினரிடத்திலும் நல்ல புகழை உண்டுபண்ணியிருந்தது. (4)

கொர்நேலியு தீர்க்கதரிசனங்களின்மீது நம்பிக்கை வைத்து, மேசியா வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோதிலும், அவன் கிறிஸ்துவின்மீது புரிந்துகொள்ளப்பட்ட விசுவாசம் உடையவனாக இருக்கவில்லை. அவனுடைய அன்பினாலும் கீழ்ப்படிதலினாலும் அவன் தேவனுக்கருகில் கொண்டுவரப்பட்டிருந்தான். அவனுடைய இரட்சகர் வெளிப்படும்போது, அவரை

ஏற்றுக்கொள்ள அவன் ஆயத்தமாக இருந்தான். கொடுக்கப்பட்ட ஒளியை நிராகரிக்கும்போது, ஆக்கினை உண்டாகிறது. அந்த நூற்றுக்கதிபதி மேலான குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருந்து, நம்பிக்கைக்கும் கனத்திற்குமுரிய மேலான பதவியை வகித்திருந்தான். ஆனால் அவனுடைய மேலான சுபாவத்தின் சிறப்பை இந்தச் சூழ்நிலைகளால் பக்திவிசுவாசமற்றதாகச் செய்ய இயலவில்லை. சன்மார்க்க நெறியில் அவன் தகுதி உள்ளவன் என்று போற்றப்படுவதற்கு அவனிடம் உண்மையான நல்ல தன்மையும் சிறந்த பண்பும் ஒன்று சேர்ந்திருந்தன. அவன் எவர்களுடனெல்லாம் தொடர்புகொள்ளும்படி கொண்டுவரப்பட்டானோ, அவர்களனைவருக்கும் அவனுடைய செல்வாக்கு நன்மையைத் தருவதாக இருந்தது. (5)

அவன் வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின ஒரு தேவன்மீது நம்பிக்கை உடையவனாக இருந்தான். அவன் அவர்மீது பக்தி செலுத்தி, அவரை ஏற்றுக்கொண்டு, அவனுடைய வாழ்க்கையின் காரியங்கள் அனைத்திலும் அவருடைய ஆலோசனையைத் தேடியிருந்தான். அவன் தன் வீட்டின் வேலைகளிலும் அலுவலகப் பொறுப்புகளிலும் விசுவாசமுள்ளவனாக இருந்து, அவனுடைய குடும்பத்தில் தேவனுடைய பீடத்தை அமைத்திருந்தான். தேவனுடைய உதவி இல்லாமல் அவனுடைய திட்டங்களைச் செயல்படுத்தவும், தனது பாரமிக்க பொறுப்புக்களைச் சுமக்கவும் அவன் துணியாதவனாக இருந்தான். எனவே அந்த உதவிக்காக அவன் மிகுந்த வாஞ்சையுடன் ஜெபம் செய்திருந்தான். அவனுடைய பணிகளிலெல்லாம் விசுவாசம் என்னும் குறியிடப்பட்டிருந்தது. அவனது தூய்மையான செயல்களையும் தாராள மனப்பான்மையையும் தேவன் மதித்து, வார்த்தையிலும் செயலிலும் அவர் அவனருகில் வந்திருந்தார். (6)

## தேவதூதனால் சந்திக்கப்பட்ட கொர்நேலியு!

கொர்நேலியு ஜெபம்செய்துகொண்டிருந்தபோது, பரலோகத்தின் ஒரு தூதனை தேவன் அவனிடத்திற்கு அனுப்பினார். அவன் கொர்நேலியுவைப் பெயர் சொல்லி அழைத்தான். அந்த நூற்றுக்கு அதிபதி பயந்தபோதிலும், அவனுக்குப் போதனைசெய்வதற்காகத்தான் அந்த தூதன் அனுப்பப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்து, ஆண்டவரே, என்றான். அப்பொழுது அவன்: “உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி; அவன் தோல்பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய

வீடு கடலோரத்திலிருக்கிறது; நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான்” என்றான். (7)

இங்கு தேவன் மறுபடியும் அவர் தமது ஊழியத்தின்மீதும் அமைக்கப்பட்டுள்ள சபையின்மீதும் கருத்துள்ளவராக இருப்பதைக் காட்டினார். கொர்நேலியுவுக்குச் சிலுவையின் கதையைக் கூறுவதற்காக அந்த தூதன் அனுப்பப்படவில்லை. சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்து பரமேறிச்சென்றிருக்கிற இரட்சகரைப்பற்றிப் போதிப்பதற்கு அவனைப்போலவே மனித பலவீனங்களுக்கும் சோதனைகளுக்கும் கீழ்ப்பட்டவனாக ஒரு மனிதன் ஏற்படுத்தப்பட்டிருந்தான். அவனும் அவனுடைய வீட்டாரும், எவ்விதமாக இரட்சிக்கப்படமுடியும் என்பதைப் போதிக்கக்கூடிய ஒரு தேவனுடைய ஊழியக்காரனுடன் தொடர்புகொள்ளவைக்கின்ற முக்கியமான நோக்கத்திற்காக அந்தப் பரலோக தூதன் அனுப்பப்பட்டு வந்திருந்தான். (8)

அந்தத் தூதனுக்கு கொர்நேலியு மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிந்து, அவனுடைய வழிகாட்டுதலின்படி பேதுருவைத் தேட, அவன் உடனே ஆட்களை அனுப்பினான். பேதுரு தங்கியிருந்த வீட்டின் உரிமையாளனின் பெயர், தொழில் ஆகியவைகள் மிகச் சரியாக அறிவித்ததினால் பரலோகமானது வாழ்க்கையின் சகல நிலைகளிலுமுள்ள மனிதர்களின் வரலாறு, தொழில் ஆகியவைகளுடன் மிக நன்றாக அறிமுகமானதாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. நாள்தோறும் வேலைசெய்து பிழைக்கின்ற தாழ்மையான வேலைக்காரர்களையும், சிங்காசனத்தின்மேல் அமர்ந்திருக்கும் அரசனையும் தேவன் அறிந்தவராக இருக்கிறார். பேராசை, கொடூரம், இரகசியமான குற்றங்கள், சுயநலம் ஆகியவைகளுடன் அவர்களது நல்லசெயல்கள், உதாரத்துவம், தாராள மனப்பான்மை, அன்பு ஆகியவைகளையும் தேவன் அறிந்திருக்கிறார்; தேவனிடமிருந்து எதுவும் மறைக்கப்பட்டிருக்கவில்லை! (9)

## பேதுரு கண்ட தரிசனம்!

அந்த தூதன் கொர்நேலியுவைச் சந்தித்தபின், உடனே, பயணத்தினால் களைப்பும் பசியுமுள்ளவனாக இருந்து, மேல்வீட்டில் ஜெபம்செய்துகொண்ருந்த பேதுருவைச் சந்தித்தான். அவன் ஜெபம் செய்துகொண்டிருந்தபோது, ஒரு தரிசனத்தைக் கண்டான். வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒரு விதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருப்பதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும்,

ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். “அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று; அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புதித்ததில்லை என்றான்; அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் உண்டாயிற்று; முன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று; பின்பு அந்தக்கூடு திரும்ப வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.” (10)

இங்கு அவருடைய சித்தம் பரலோகத்தில் நடைபெறுகிறதுபோல பூலோகத்திலும் நடைபெறும்படி அந்த ஊழியக்காரனை இயங்கச்செய்கின்ற தேவனுடைய செயலாற்றுதலை நாம் அறிந்துகொள்ளுகிறோம். பேதுரு இதுவரை புறுஜாதியினருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை. அவன் போதித்திருந்த சத்தியங்களைக் கவனிப்பதற்கு அநேகர் விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். ஆனால் கிறிஸ்து தம்முடைய மரணத்தினால், தகர்த்திருந்த பிரிவினையாகிய நடுச்சுவர் இன்னும் அப்போஸ்தலர்களின் மனங்களில் உயிர்வாழ்ந்திருந்து, சுவிசேஷத்தின் சலுகைகளிலிருந்து புறஜாதியினரைத் தவிர்த்திருந்தது. அப்போஸ்தலர்களது உழைப்பின் பலனை, கிரேக்க நாட்டு யூதர்கள் பெற்றிருந்தனர். அவர்களில் அநேகர் இயேசுவைப்பற்றிய விசுவாசத்தைத் தழுவினதின்மூலம், அந்த முயற்சிகளுக்குப் பதில் அளித்தனர். ஆனால் புறஜாதியினருக்கு மத்தியிலிருந்த கொர்நேலியுவில் உண்டான மதமாற்றம் முக்கியமானவைகளில் முதன்மையானதாக இருந்தது. (11)

பரலோகத்திலிருந்து இறங்கி வந்திருந்த அந்தத் துப்பட்டியினாலும், அதிலிருந்தவைகளைப்பற்றிய தரிசனத்தினாலும், புறஜாதியினருக்கெதிராகக் கொண்டிருந்த தன்னுடைய தவறான எண்ணத்தை விட்டுவிட்டு, கிறிஸ்துவின்மூலமாக யூத ஜாதியினருக்குக் கிடைத்திருந்த ஆசீர்வாதங்கள், சலுகைகள் ஆகியவைகளெல்லாவற்றிலும், புறஜாதியினரும் பங்குபெற்று, இவ்விதமாக அவர்களுக்குச் சமமாக நன்மைகளை அவர்கள் அடையவேண்டியவர்களாக இருந்தனர் என்பதை பேதுரு புரிந்துகொள்ள வேண்டியவனானான். இதற்குமுன் அசுத்தமானவைகள் என்று அறிவித்துத் தடைசெய்யப்பட்டிருந்த மாம்சங்களின்மீதிருந்த தடைகளையெல்லாம் தேவன் நீக்கிவிட்டார் என்பதை இந்தத் தரிசனம் எடுத்துக்காட்டுகிறதென்றும், எனவே பன்றி மாமிசம் புசிப்பதற்குத் தகுதியானது என்றும் சிலர் வற்புறுத்தியிருந்தனர். இது மிகவும் குறுகிய—தவறான விளக்கம். மேலும் அந்தத் தரிசனம்—அதன் பலன்கள் ஆகியவைகள் ஆவிக்குரிய தன்மையுடன் வெளிப்படையாக முரண்படுவதாகவும் உள்ளது. உயிருள்ள

சகல ஜந்துக்களும் அந்தத் துப்பட்டியில் இருப்பதாகக் காட்டப்பட்ட தரிசனமும், அதிலிருந்ததை அடித்துப் புசிக்கும்படி பேதுருவுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டதும், தேவன் சுத்தப்படுத்தினதை அவன் பொதுவானது என்றும் அசுத்தமானது என்றும் கருதக்கூடாது என்ற கட்டளையும், புறஜாதிகளுடைய உண்மையான நிலை கிறிஸ்துவின் மரணத்தினால் தேவனுடைய இஸ்ரவேலின் உடன் சுதந்திரர்களாக்கப்பட்டுள்ளதும் அவனது மனதிற்கு எடுத்துக்காட்டுகின்ற சாதாரணமான விளக்கமாக இருந்தது. அது பேதுருவுக்குக் கடிந்துகொள்ளுதல், போதனை ஆகிய இரண்டையும் எடுத்துக்கூறியது. இதுவரை அவனுடைய ஊழியங்கள் யூதர்களுக்காக என்று மட்டும் குறுகியிருந்தது. அவன் புறஜாதியினரை அசுத்தமான ஒரு இனம் என்று பார்த்திருந்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களிலிருந்து அவர்களைத் தவிர்த்திருந்தான். இப்பொழுது அவனுடைய மனம் தேவனுடைய உலகளாவிய திட்டத்தை அறிந்துகொள்ளும்படி நடத்தப்பட்டுக்கொண்டிருந்தது. (12)

அவன் இப்பொழுது அந்தத் தரிசனத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, அது அவனுக்கு விளக்கப்பட்டது. "அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக் குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில், இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனிதர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக்கொண்டு வாசற்படியிலே வந்து நின்று: பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாரா என்று கேட்டார்கள். பேதுரு அந்தத் தரிசனத்தைக்குறித்துச் சிந்தனைபண்ணிக்கொண்டிருக் கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்கும் சந்தேகப்படாமல், அவர்களுடனேகூடப் போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார்." மேலும் அது பேதுருவைச் சோதிக்கின்ற ஒரு கட்டளையாகவும் இருந்தது. ஆனால் அவன் தனது உணர்ச்சிகளின்படி நடக்கத்துணியாமலிருந்து, தனது அறையிலிருந்து கீழிறங்கிவந்து, கொர்நேலியுவினிடத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த வேலைக் காரர்களை வரவேற்றான். அவர்கள் அவர்களுடைய பயணத்தின் ஒரே நோக்கத்தை அந்த அப்போஸ்தலனுக்கு அறிவித்தனர். அவன் தேவனிடமிருந்து இப்போது பெற்ற கட்டளைக்கு இணங்க, அவர்களை ஏற்று, மறுநாள் காலையில் அவர்களுடன் செல்ல ஒத்துக்கொண்டான். அந்த இரவில் அவர்களுக்குவேண்டிய உபச்சாரங்களையெல்லாம் பேதுரு செய்தான். மறுநாள் காலையில் அவர்களுடன் செசரியாவிற்குப் புறப்பட்டான். புறஜாதியினரை அவன் சந்திக்கும்போது அவன் பேசும் அனைத்திற்கும், செய்யும் அனைத்திற்கும், சாட்சிகளாக இருக்கும்படி அவன் ஆறு சகோதரர்களுடன் சென்றான்; ஏனெனில் யூத விசுவாசத்திற்கு எதிரான

போதனைகளுக்கு அவன் கணக்குக்கொடுக்கும்படி அழைக்கப்படுவான் என்பதை அவன் அறிந்திருந்தான். (13)

அந்தப் பயணம் முடிவதற்கு ஏறத்தாழ இரண்டு நாட்களாயிற்று. தேவனுடைய வாக்குறுதியின்படி அவனும் அவனுடைய வீட்டாரும் எவ்விதமாக இரட்சிக்கப்படுவார்கள் என்பதைப் போதிக்க இருக்கின்ற சுவிசேஷ ஊழியனுக்குத் தனது கதவை மகிழ்ச்சியுடன் திறக்கின்ற சலுகையை (கொர்நேலியு) அவன் பெற்றிருந்தான். அந்த மனுஷர்கள் அவர்களுடைய பயணத்தை மேற்கொண்டிருந்தபோது, அந்த நூற்றுக்கு அதிபதி, தானும், சத்தியத்தால் போதிக்கப்படுவதற்கென்று தனது உறவினர்களில் எத்தனை பேர்களைக் கூட்டிச்சேர்க்க முடியுமோ அத்தனை பேர்களையும் கூட்டிச்சேர்த்திருந்தான். பேதுரு வந்தபோது, அவனது வார்த்தைகளைக் கேட்பதற்கு ஒரு பெரும் கூட்டமானவர்கள் காத்திருந்தனர். (14)

## கொர்நேலியுவுடன் சந்திப்பு!

பேதுரு அந்தப் புறஜாதியானுடைய வீட்டிற்குள் பிரவேசித்தபோது, கொர்நேலியு அவரைச் சாதாரணமான விருந்தினன் என்று வணக்கம் செய்து வரவேற்காமல், தேவனால் கனப்படுத்தப்பட்டுத் தன்னிடத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு மனிதனாக எண்ணி, வணக்கம்செய்தான். ஒரு பிரபுவுக்குமுன் அல்லது மேலானவர்களுக்குமுன், குனிந்து வணக்கம் செலுத்துவதும், நம்பிக்கைக்குரிய ஸ்தானத்திலிருக்கும் பெற்றோர்கள் முன் அவர்களைக் கனப்படுத்த, பிள்ளைகள் குனிந்து வந்தனம்செய்வதும் கீழ்த்திசை நாட்டின் சம்பிரதாயமாக இருந்தது. ஆனால் தேவனால் பிரதிநிதியாக அனுப்பப்பட்ட அந்த அப்போஸ்தலனின்மீதுள்ள வியப்பினாலும் பக்தியினாலும் மேற்கொள்ளப்பட்டு, அவனது பாதங்களுக்கடியில் வீழ்ந்து, அவனைத் தொழுதான். (15)

நூற்றுக்கதிபதியின் இச்செயலினால் பேதுரு திடுக்கிட்டுப் பின்வாங்கி: "நானும் உன்னைப்போல் ஒரு மனிதன்தான்; எழுந்திரும் என்றான்." அதன்பின் அந்த நூற்றுக்கு அதிபதி, தன்மீது கொண்டிருக்கும் பணிவோடுகூடியுள்ள அச்ச உணர்வினையும் அதிகப்படியான பக்தியையும் அவனிடத்திலிருந்து நீக்குவதற்காக பேதுரு அவனுடன் பழக்கப்பட்டவனைப்போல தாராளமாகப் பேசத்தொடங்கினான். (16)

ரோமன் கத்தோலிக்கச் சபை பேதுருவுக்கு அளித்திருக்கும் அதிகாரத்தையும் அஸ்தஸ்தையும் உடையவனாகப் பேதுரு இருந் திருந்தால், அவன் கொர்நேலியுவின் பக்தியைத் தடுப்பதற்குப்பதிலாக, அதனை வரவேற்றிருந்திருப்பான். அப்படி அழைக்கப்படுகின்ற பேதுருவின்

பின்னடியார்கள், அரசர்களும் பேரரசர்களும் தங்களுடைய பாதத்தில் விழுந்து, வணங்கவேண்டுமென்று அவசியப்படுகின்றனர். ஆனால் பேதுரு தான் தவறும் குற்றமும்செய்யக்கூடிய ஒரு மனிதன் என்று தன்னைப்பற்றிக் கூறியிருந்தான். (17)

யூதர்களுடைய சம்பிரதாயங்களைப்பற்றிப் பேதுரு கொர்நேலியுவினிடத்திலும் அங்கு கூடியிருந்தவர்களிடத்திலும் பேசினான். புறஜாதியினருடன் கலந்துகொள்ளுவது சட்டவிரோதமானது என்று கருதப்பட்டிருந்தது என்றும், அது சடங்காச்சாரத்தைத் தீட்டுப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்டது என்றும் கூறினான். தேவனுடைய கற்பனையில் அது தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. ஆனால் மனிதர்களின் பாரம்பரியம் அதனைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு சம்பிரதாயமாக்கிவிட்டது என்றும் கூறினான். மேலும் அவர்களை நோக்கி: "அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கின்றதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்ததும் எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார். ஆகையால் நீங்கள் என்னை அழைத்தனுப்பினபோது, நான் எதிர்பேசாமல் வந்தேன். இப்போதும் என்ன காரியத்திற்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன்" என்றான். (18)

அதற்குப்பின், கொர்நேலியு அவனுடைய அனுபவத்தையும் தரிசனத்தில் ஒரு தூதன் தன்முன் தோன்றினதையும் கூறினான். முடிவாக அவன் அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்களனைவரும் இப்பொழுது இங்கே தேவசமுகத்தில் கூடிவந்திருக்கிறோம் என்றான். "அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து, நீதியைச் செய்கிறவனெவனோ, அவனே அவருக்கு உகந்தவன் என்றும், நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்றான்." தேவன் மற்ற எல்லா ஜாதியினருக்கும் மேலாக யூதர்களிடம் ஆதரவுள்ளவராக இருந்திருந்தபோதிலும், அவர்கள் ஒளியை நிராகரித்து, அவர்களுடைய விசுவாசத்திற்கு இசைவாக வாழாவிட்டால், அதற்குமேல் அவரால், அவர்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள். புறஜாதிகளுக்கு மத்தியில் கொர்நேலியுவைப்போல தேவனுக்குப் பயந்து, நீதியைச் செய்து, அவர்கள் எந்த அளவிற்கு ஒளியைப் பெற்றிருந்தார்களோ அதற்குத்தக்கதாக வாழ்ந்தால், அப்பொழுது தேவன் அவர்களை அன்புடன் கருதுவார். அவர்களுடைய மனப்பூர்வமான சேவையானது அவரால் அங்கீரிக்கப்பட்டிருந்திருக்கும். (19)

ஆனால் கிறிஸ்துவைப்பற்றிய அறிவு இல்லாமல், கொர்நேலியுவின் விசுவாசமும் நீதியும் பூரணமானதாகவும் இருக்கமுடியாமலிருந்தது. எனவே அவனுடைய நீதியின் தன்மையை மேலும் முன்னேற்றமடையச்செய்வதற்காக, தேவன் அந்த ஒளியையும் அறிவையும் அவனிடத்திற்கு அனுப்பினார். தேவனுடைய தெய்வீக ஏற்பாடு அவர்களுக்கு அனுப்பும் ஒளியைப் பெற்றுக்கொள்ள, அநேகர் மறுத்து, பேதுரு கொர்நேலியுவினிடம் கூறிய "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து, நீதியைச் செய்திறவனெவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என்கிற வார்த்தைகளை சாக்குப்போக்காகக் குறிப்பிடுகின்றனர். மனிதர்களின் செயல்கள் நல்லவைகளாக இருக்கின்றவரை, மனிதன் எதை நம்பினாலும் அது காரியமல்ல என்று அவர்கள் பிடிவாதமாகக் கூறுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் தவறானவர்களாக உள்ளனர். விசுவாசம் அவர்களுடைய செய்கைகளுடன் சேர்ந்து செயல்படவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒளியுடன் சேர்ந்து அவர்கள் முன்னேறவேண்டும். தேவனுடைய வார்த்தையினால் புதிய ஒளியைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களுடன் உறவுகொள்ளும்படி, தேவன் அவர்களைக் கொண்டுவந்தால், அதனை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். சத்தியம் முன்னோக்கிச் செல்லுவதாக உள்ளது. அப்படியில்லாமல் தங்களுடைய விசுவாசம்மட்டுமே தங்களை இரட்சிக்கும் என்பவர்கள், ஒரு மணல்கயிறை நம்பிக்கொண்டுள்ளனர். ஏனெனில் விசுவாசம் கிரியைகளினால்மட்டுமே பலப்படுத்தப்பட்டுப் பூரணப்படுகிறது. (20)

## யூதர் அல்லாதவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுகின்றனர்!

கவனமாகக் கேட்டிருந்தவர்களின் கூட்டத்திற்குப் பேதுரு, இயேசுவின் வாழ்க்கை, அவருடைய ஊழியம், அற்புதங்கள், காட்டிக்கொடுக்கப்படுதல், சிலுவையில் அறையப்படுதல், பரமேறிச்செல்லுதல், மனிதனுடைய பிரதிநிதி யாகவும் பாவியின் சார்பாகப் பரிந்து பேசுபவராகவும் பரலோகத்தில் அவர் செய்யும் பணி, ஆகியவைகளைப் பிரசங்கித்தான். அவ்வாறு அப்போஸ்தலன் மக்களுக்குச் சத்தியத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது, தேவஆவியின் சத்தியத்தினால் அவனுடைய இருதயம் கொழுந்துவிட்டெரிந்தது. அவனது பிரசங்கத்தைக் கேட்டிருந்தவர்கள் அந்த போதனைகளினால், வசீகரிக்கப்பட்டனர். ஏனெனில் சத்தியத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு அவர்களுடைய இருதயங்கள் ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தன. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி வெளிக்காட்டப்பட்டதுபோல் பரிசுத்த ஆவி இறங்கினதால், அந்த அப்போஸ்தலனுக்குத் தடங்கல்

உண்டாயிற்று. "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்." (21)

புறஜாதியாரின்மீது பரிசுத்த ஆவி இறங்கினது ஞானஸ்நானத்திற்குச் சமமானதல்ல, மாற்றத்திற்கு எல்லாக் காரியத்திலும் அவசியமான படிக்கட்டுகளாக, விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம் ஆகியவை உள்ளன. இவ்வாறான மெய்யான கிறிஸ்தவன் ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் ஆகியவைகளால் சபையுடன் ஐக்கியப்பட்டிருக்கிறான். பரிசுத்தப்படுத்தும் கிருபையினால் மாறுபட்ட சுபாவங்கள் அனைத்தும் மாறுதல் செய்யப்படுகின்றன. மேன்மையான கொள்கைகள் எல்லாருடைய வாழ்க்கையையும் ஒழுங்குபடுத்துகிறது. விசுவாசமுள்ள புறஜாதியினரின் வேண்டுகோளுக்குப் பேதுரு இணங்கி, சில காலம் அவர்களுடன் தங்கியிருந்து, சுற்றிலுமிருந்த புறஜாதியினர் அனைவருக்கும் கிறிஸ்துவைப் பிரசங்கித்திருந்தான். (22)

யூதேயாவிலிருந்த சகோதரர்கள், பேதுரு புறஜாதியினருக்குப் பிரசங்கித்திருந்தாரென்றும், அவர்களைச் சந்தித்து, அவர்களுடன் அவர்களுடைய வீடுகளில் உணவருந்தினார் என்றும் கேள்விப்பட்டபோது, அவனுடைய பங்காக அவன் செய்த காரியங்களைப்பற்றி, அவர்கள் ஆச்சரியமும் எதிர்ப்பும் உள்ளவர்களானார்கள். அவர்களுக்குத் துணிகரமாகத் தோன்றிய நடத்தையானது அவனுடைய சொந்தப் போதனைகளுக்கு எதிரானதாகிவிடும் என்பதுபோல் அவர்களுக்குக் காணப்பட்டது. பேதுரு அவர்களைச் சந்தித்த உடனே கடுமையான கண்டனங்களுடன் அவர்கள் அவனைச் சந்தித்து, விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய், அவர்களோடே ஏன் போஜனம்பண்ணினீர் என்று அவனோடே வாக்குவாதம்பண்ணினார்கள். அப்பொழுது பேதுரு, தனக்கு முன்னிருந்த காரியத்தையெல்லாம் மறைக்காமல் அவர்கள்முன் வைத்தான். அந்த தரிசனம் சம்பந்தப்பட்ட அவனுடைய அனுபவத்தை

அவன் விவரித்தான். இனிமேல் விருத்தசேதனம், விருத்தசேதனம் இல்லாமை என்னும் சடங்காச்சார வேற்றுமையைக் கடைப்பிடிக்கவேண்டியதில்லை. புறஜாதியினரை அசுத்தமானவர்களாகப் பார்க்கக்கூடாதென்றும், ஏனெனில் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்று அது அவனை எச்சரித்தது என்றும், அவர்களிடம் பரிந்துபேசினான். புறஜாதியினிடத்திற்குச் செல்லும்படி தேவன் கொடுத்த கட்டளையையும், தன்னிடம் அந்த மனிதர்களின் வருகையையும், செசரியாவிற்கு பயணம்செய்ததையும் கொர்நேலியுவையும் அங்கு கூடியிருந்த கூட்டத்தினரையும் சந்தித்ததையும் அவன் தெரிவித்தான். புறஜாதியினருடைய வீட்டுக்குச் செல்லும்படி தேவன் கட்டளையிட்டிருந்தபோதிலும், அப்பொழுது அங்கிருந்த ஆறு சீடர்களை அங்கு அவன் இருக்கும்படி அவன் தன்னுடன் அழைத்துச் சென்றது ஆகியவைகள் அவனது முன்னெச்சரிக்கையை அந்தச் சகோதரர்களுக்கு எடுத்துக்காட்டியது. கொர்நேலியுவுடன் உண்டான அவனது சந்திப்பின் பொருளை அவன் திரும்பவும் விவரித்துக்கூறி, அதில் கொர்நேலியு, தான் கண்ட தரிசனம் பற்றிப் பேதுருவிடம் கூறினதையும், அந்தத் தரிசனத்தில் அவனும் அவனுடைய வீட்டாரும் இரட்சிக்கப்படும்படியான வார்த்தைகளைக் கூறக்கூடிய பேதுருவை, யோப்பா பட்டணத்திற்கு அழைத்துவரும்படி அவனுக்குக் கூறப்பட்டதையும் பேதுரு விளக்கினான். (23)

புறஜாதியினருடனுள்ள அவனது முதல் சந்திப்பைப்பற்றி இவன் பேசத்தொடங்கினபோது, “பரிசுத்தஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன். ஆதலால் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் ஆவியின் வரத்தை அநுக்கிரகம்பண்ணினதுபோல, அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணியிருக்கும்போது, தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்” என்றான். (24)

இந்த விளக்கங்களையெல்லாம் கேட்ட சீடர்கள் மௌனமடைந்து, பேதுருவின் நடத்தை தேவனுடைய திட்டத்தின் நேரடியான நிறைவேறுதலாக இருக்கிறது என்றும், அவர்களுடைய பழைய தவறான எண்ணங்களும் தனிப்பட்ட தன்மையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் முற்றிலுமாக அழிக்கப்படவேண்டியதாக இருந்தது என்றும் எண்ணும் மனத்திருப்தியை அடைந்தனர். இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: “அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை

தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.” (25) ★

# 40

# சிறைச்சாலை என்ன செய்யும்?

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 292–300)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 12:1–23**

ஏரோது பெயரளவுக்குத் தன்னை யூதமதத்திற்கு மதமாற்றம் செய்துகொண்டவனாக இருந்து, சடங்காச்சாரப் பிரமாணங்களை வெளிப்படையாகத் தொடர்ந்து செய்வதில் வைராக்கியம் உள்ளவனாக இருந்தான். ரோம பேரரசனான கிலவுதியுவின்கீழ் யூதேயாவின் அரசாங்கம் ஏரோதின் கரங்களில் இருந்தது. கலிலேயாவின் ஆட்சிப் பொறுப்பும் அவனிடம் இருந்தது. ஏரோது தனது பதவியையும் கனத்தையும் காத்துக்கொள்ளும் நம்பிக்கையுடன், யூதரின் ஆதரவை அடைந்துகொள்ளுவதில் கவலை உள்ளவனாக இருந்தான். எனவே கிறிஸ்துவின் சபையை உபத்திரவப் படுத்துவதில் யூதர்களின் விருப்பத்தை நடப்பிப்பதற்கு அவன் புறப்பட்டான். விசுவாசிகளுடைய வீடுகளையும் பொருட்களையும் சேதப்படுத்துவதில் அவன் தனது வேலையைத் தொடங்கினான். அதன்பின் தலைமை தாங்கியிருந்தவர்களைச் சிறையிலடைக்கத்தொடங்கினான். தீர்க்கதரிசியாக இருந்த யோவான் ஸ்நானகன், சிரச்சேதம் செய்யப்படுவதற்கு வேறொரு ஏரோது காரணமாக இருந்ததுபோல, இந்த ஏரோது, யாக்போபைக் கைது செய்து சிறையிலிட்டு, ஒரு வாளினால் அவனைக் கொலைசெய்யும்படி ஒரு கொலையாளியை அனுப்பிவைத்தான். அவனுடைய செயலில் யூதர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்ததைக் கண்டு, தைரியமடைந்து, பேதுருவைச் சிறைப்படுத்தினான். பஸ்கா பண்டிகையின் பரிசுத்தமான சந்தர்ப்பத்தில் இந்தக் கொடூரங்கள் செய்யப்பட்டன. (1)

யாக்கோபுக்கு எல்லாருக்கும் தெரியும்விதத்தில் மரணதண்டனையைக் கொடுத்திருந்தால், விசுவாசிகளையும் அநுதாபிகளையும் முற்றிலுமாக அது அச்சுறுத்தியிருக்கும் என்று சொல்லி, அவன் மறைமுகமாக கொல்லப்பட்டதை சிலர் குற்றம் கூறியிருந்தபோதும், ஏரோதின் அந்தச் செயலை மக்கள் பாராட்டினார்கள். எனவே யூதர்களின் ஆசையைத் திருப்திப்படுத்துவதற்காக பேதுருவின் மரணத்தை பொதுவான காட்சியாக்கவேண்டும் என்று, அவனை தனது பொறுப்பின்கீழ் வைத்திருந்தான். ஆனால் மிகவும் சிறப்புவாய்ந்த

அப்போஸ்தலனான பேதுருவுக்கு, பஸ்கா பண்டிகைக்காகக் கூடியிருக்கும் மக்கள் அனைவருக்கும்முன் மரணதண்டனையை நிறைவேற்றுவது பாதுகாப்பானதல்ல என்னும் கருத்து அந்த அதிபதிக்கு அறிவிக்கப்பட்டது. பக்திக்குரிய அவனது தோற்றம் மக்களிடம் அவர்களுடைய இரக்கத்தையும், மரியாதையையும் எழுப்பிவிடும் என்று அஞ்சப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையையும் சுபாவத்தையும் விசாரித்துப்பார்க்கும்படி அடிக்கடி பேதுரு விடுத்திருந்த அவனுடைய வல்லமைமிக்க வேண்டுகோள்கள் மக்களை எழுப்பியிருந்தன. ஆனால் (யூதர்கள்) தங்களுடைய சகலவிதமான தந்திரங்களினாலும் அதனை எதிர்ப்பதற்கு முற்றிலுமாக முடியாதவர்களாக இருந்தனர். மேலும் அப்படிப்பட்ட ஒரு வேண்டுகோளை அவன் செய்துவிடக்கூடாது என்றும், அப்படி நடந்தால், அவன் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை அரசனுடைய கரங்களில் வைக்கப்பட்டுவிடும் என்றும் அவர்கள் பயந்தனர். (2)

பஸ்கா பண்டிகை முடிவடைகிறவரைக்கும் பலவிதமான போலியான காரணங்களினால் பேதுருவின் மரணதண்டனை தாமதப்பட்டுக்கொண்டிருந்த போது, இருதயங்களை ஆழமாகச் சோதித்தறியவும் அக்கரைமிக்க ஜெபத்தை ஏறெடுக்கவும் கிறிஸ்துவின் சபைக்கு நேரம் இருந்தது. பலத்த விண்ணப்பங்கள், கண்ணீர்கள், உபவசங்கள் ஆகியவை ஒன்றுசேர்ந்திருந்தன. பேதுருவுக்காக அவர்கள் இடைவிடாமல் ஜெபம்செய்துகொண்டிருந்தனர். கிறிஸ்துவின் ஊழியத்திலிருந்து அவனை விடுவிக்க முடியாது என்பதை அவர்கள் உணர்ந்தனர். தேவனுடைய சிறப்பான உதவி இல்லாவிட்டால், கிறிஸ்துவின் சபை இல்லாமல்போய்விடும் என்கிற ஒரு கட்டத்திற்கு வந்திருப்பதாக அவர்கள் உணர்ந்தனர். (3)

இறுதியில் பேதுருவுக்கு மரணதண்டனை அளிக்கும் நாள் குறிக்கப்பட்டது. ஆனாலும் விசுவாசிகளின் ஜெபம் பரலோகத்தை நோக்கி மேலும் உயர்ந்துகொண்டிருந்தது. அவர்களுடைய பலங்கள் அனுதாபங்கள் அனைத்தும் ஊக்கமான விண்ணப்பங்களாக ஏறெடுக்கப் பட்டிருந்தபோது, சிறைவைக்கப்பட்டிருந்த அப்போஸ்தலனை தூதர்கள் காவல்செய்திருந்தனர். மனிதனின் இறுதிநிலை தேவனின் வாய்ப்பாக இருக்கிறது. பேதுரு இரண்டு சங்கிலிகளால் கட்டப்பட்டு, இரண்டு சேவகர்களுக்கு நடுவில் வைக்கப்பட்டிருந்தான். ஒவ்வொரு சங்கிலியும் ஒவ்வொரு சேவகனுடைய மணிக்கட்டுடன் பிணைக்கப்பட்டிருந்தது. எனவே அவர்களை அறியாமல், அவனால் அசையமுடியாமலிருந்தது. சிறைக் கதவுகள் பாதுகாப்பாக மூடப்பட்டிருந்து, பலத்த காவல் அவன்முன் வைக்கப்பட்டிருந்தது. மனிதர்களால் அவனை விடுவிக்கவோ அல்லது

தப்பித்துச்செல்லுவதற்கு வழிசெய்யவோகூடிய வாய்ப்புக்கள் அனைத்தும் இவ்வாறாகத் துண்டிக்கப்பட்டிருந்தன. (4)

அப்போஸ்தலன் அவனுடைய இந்த நிலைமையை கண்டு மிரண்டுவிடவில்லை. கிறிஸ்துவை மறுதலித்ததற்குப்பிறகு மீண்டும் அந்தப் பதவியில் வைக்கப்பட்டதுமுதல் ஆபத்தைத் தைரியமாக சந்தித்து சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்து பரமேறிச் சென்றுள்ள இரட்சகரைப் பிரசங்கிப்பதில் அவன் தனது மேலான தன்மை, தைரியம், துணிவு ஆகியவைகளை வெளிக்காட்டியிருந்தான். (5)

அவனது மரணதண்டனைக்குக் குறிக்கப்பட்டிருந்த நாளுக்கு முந்தின இரவில், இரண்டு சேவகர்களுக்கிடையில் பேதுரு நித்திரைசெய்து கொண்டிருந்தான். பேதுருவும் யோவானும் தங்களுடைய விசுவாசத்திற்காகச் சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது, அவர்கள் தப்பிச்சென்றதை நினைவு கூர்ந்திருந்த ஏரோது, இந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டு மடங்கு முன்னெச்சரிக்கை உள்ளவனாக இருந்தான். காவலுக்காக வைக்கப்பட்டிருந்த சேவகர்கள் அதிகமான விழிப்புள்ளவர்களாக இருக்கும்படி சிறைக் கைதியைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் பதில் சொல்லவேண்டியவர்களாக ஏற்படுத்தப்பட்டிருந்தனர். பெரிய பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்ட ஒரு நிலவறையில் அவன் கட்டிவைக்கப்பட்டவனாக இருந்தான். அதின் கதவுகள் கம்பிகளால் பொறுத்தப்பட்டுத் தாழிடப்பட்டிருந்தன. சரியான இடைவெளி வைத்து, மாறும் விதத்தில் அந்த நிலவறையைக் காக்கும்படி, பதினாறு சேவகர்கள் வைக்கப்பட்டிருந்தனர். ஒரு நேரத்தில் நான்கு சேவகர்கள் காவல்செய்திருந்தனர். பேதுருவைச் சிறையிலிருந்து விடுவிக்கும் காரியத்தில் தேவனுடைய வெற்றியை முழுமையாக்குவதற்காக, சிறைக் கைதிக்கு மனித உதவிகள் எதுவும் கிடைக்கின்ற வாய்ப்புக்கள் இல்லாதபடி, ரோம நாட்டுச் சேவகர்களும் அந்த நிலவறைக் கம்பிகளும் தாழ்ப்பாள்களும் இருந்தன. சர்வ வல்லமையுள்ளவருக்கு எதிராக ஏரோது தனது கையை உயர்த்திக்கொண்டிருந்தான். எனவே தேவனுடைய ஊழியக்காரனுடைய உயிரை எடுக்கும் அவனுடைய முயற்சியில் அவன் முற்றிலுமாக அவமானத்தையும் தோல்வியையும் அடையவேண்டியவனாக இருந்தான். (6)

## பேதுரு ஒரு தேவதூதனால் விடுவிக்கப்பட்டான்!

மரணதண்டனைக்குக் குறிக்கப்பட்டிருந்த அந்தக் கடைசி இரவில் பேதுருவை மீட்பதற்காகப் பரலோகத்திலிருந்து ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு தூதன் கீழே இறங்கினான். தேவனுடைய பரிசுத்தவானை உள்ளே வைத்துப்

பூட்டியிருந்த பலமான வாசல் கதவுகள் திறக்கின்றன. உன்னதமானவரின் தூதன் உள்ளே பிரவேசித்ததும், அந்தக் கதவுகள் ஓசை எதுவுமின்றி மறுபடியும் அவைகளாகவே சாத்திக்கொள்ளுகின்றன. கெட்டியான பாறையில் செதுக்கப்பட்டிருந்த அந்த நிலவறைக்குள் அவன் பிரவேசிக்கிறான். அங்கு ஒவ்வொரு பக்கத்திலும் வல்லமை உள்ள ஒரு சேவகனுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டவனாக பாக்கியவானும் குற்றமில்லாதவனும் தேவனின்மீது பூரணமான நம்பிக்கைகொண்டவனுமான பேதுரு நித்திரை செய்துகொண்டிருக்கிறான். அந்த தேவதூதனைச் சூழ்ந்திருந்த ஒளி சிறையை ஒளிப்படுத்துகிறது. ஆனால் நித்திரைசெய்துகொண்டிருக்கும் அப்போஸ்தலனை அது விழிக்கச்செய்வதில்லை. பக்கத்திற்கு ஒரு வல்லமைமிக்க சேவகனுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டவனாக இளைப்பாறுதலையும் தெம்பையும் புதுப்பிக்கின்றதும், நல்மனச்சாட்சியினால் உண்டானதுமான ஆழ்ந்த தூக்கத்தில் பேதுரு இருக்கிறான். (7)

சீக்கிரமாக எழுந்திரு என்று அவனை விலாவிலே தட்டி எழுப்புகின்ற தேவதூதனுடைய கரத்தை உணரும்வரை, குரலைக் கேட்கும்வரை, அவன் நித்திரையிலிருந்து எழவில்லை. சூரிய ஒளிக் கதிரினால் ஒருபோதும் ஆசீர்வதிக்கப்படாமலிருந்த அந்த நிலவறை, பரலோகத்தின் ஒளியினால் ஒளியாக்கப்பட்டிருப்பதையும், பெரும் மகிமைமிக்க ஒரு தூதன் அவன்முன் நிற்பதையும் அவன் காண்கிறான். அவன் அந்த தூதனின் குரலுக்கு இயந்திரம்போல் கீழ்ப்படிந்து, எழுந்து, தனது கரங்களை உயர்த்தியபோது, அவனது மணிக்கட்டுகளிலிருந்த அந்தச் சங்கிலிகள் உடைந்துபோயிருப்பதை காண்கிறான். மீண்டும் தூதனுடைய சத்தம்: “உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்” என்று கேட்கிறது. (8)

மறுபடியும் பரலோகத்திலிருந்து தன்னைச் சந்திப்பதற்காக வந்திருப்பவனின்மீது தனது பார்வையைப் பதித்தவனாக, தான் ஒரு கனவு அல்லது தரிசனம் காண்பதாக நம்பிக்கொண்டு, இயந்திரம்போல் கீழ்ப்படிகின்றான். ஆயுததாரியான சேவகர்கள் சலவைக் கற்களால் செதுக்கப்பட்ட சிலைகளைப்போல செயலற்றவர்களாக நிற்கின்றனர். அந்த தூதன் மறுபடியும் அவனை நோக்கி: “உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு, என் பின்னே வா” என்றான். அதற்குப்பின் அந்தப் பரலோகவாசி கதவை நோக்கிச் செல்லுகிறான்; வழக்கமாக ஓயாமல் பேசும் தன்மை உடையவனாக இருக்கும் பேதுரு, வியப்பினால் ஊமையாகப் பின்தொடருகிறான். அசையாமல் நிற்கும் சேவகர்களையும் கடந்து, கனமான கம்பிகளும் தாழ்ப்பாள்களும் இடப்பட்டிருக்கும் வாசல் கதவுகளை அடைந்தபோது, அந்த வாசல் கதவுகளுக்கு உள்ளேயும் வெளியேயும்

சேவகர்கள் அவர்களுடைய இடங்களில் அசையாதவர்களாக நிற்க, அந்த கதவுகள் தானாகவே திறந்து, தனாகவே மூடிக்கொள்ளுகின்றன. (9)

உள்ளேயும் வெளியேயும் சேவகர்கள் நிற்கும் இரண்டாவது கதவைச் சமீபித்தனர். அவைகளும் முன்னையதைப்போலவே, கீல்களும் தாழ்களும் சத்தமின்றி திறந்து மூடுகின்றன. அதே விதமாக, அவர்கள் மூன்றாவது வாசலையும் கடந்து, வெளியே சென்று, முடிவில் தெருவுக்கு வந்துசேருகின்றனர். வார்த்தைகள் எதுவும் பேசப்படவில்லை. காலடி ஓசைகள் இல்லை. அந்தத் தூதன் கூசச்செய்யும் ஒளி சூழ்ந்தவனாகத் தாழப்பறந்து முன்செல்லுகிறான். பேதுரு திகைப்படைந்தவனாக தான் ஒரு கனவு காண்பதாக எண்ணிக்கொண்டு, அவனைப் பின்தொடருகிறான். இவ்விதமாக அவர்கள் தெருக்களுக்குப்பின் தெருக்களாகக் கடந்துசெல்லுகின்றனர். அதன் பின்னர் அந்த தூதனுடைய பணி முடிவடைந்துவிடவே, அவன் மறைந்துவிடுகிறான். (10)

அந்தப் பரலோக ஒளி மங்கிவிடவே, பேதுரு தான் ஒரு ஆழமான இருளில் இருப்பதாக உணர்ந்தான். ஆனால் மெதுவாக அந்த இருள் நீங்குவதுபோல் காணப்பட்டது. அதனுடன் பழக்கமானான். குளிர்ந்த காற்று தன் நெற்றியில்பட தான் ஒரு அமைதியான தெருவில் நிற்பதைக் கண்டான். இப்பொழுது அவன், தான் கண்டது ஒரு கனவோ அல்லது தரிசனமோ அல்ல என்பதை உணர்ந்தான். அந்த நகரத்தில் தனக்குப் பழக்கமான ஒரு பகுதியில் சுதந்திரமானவனாக அவன் இருந்தான். அந்த இடம் அடிக்கடி சந்தித்திருந்த இடம் என்றும், தனது மரணதண்டனையின் அரங்கேற்றத்திற்கு மறுநாள் காலையில் கடைசிமுறையாக அந்த இடத்தை அவன் கடந்து செல்லவேண்டியிருந்ததையும் அடையாளம் கண்டுகொண்டான். சில விநாடிகளுக்குமுன் நிகழ்ந்த சம்பவங்களை அவன் நினைவுக்குக் கொண்டுவரமுயன்றான். அவன் தனது காலணி, மேலாடை ஆகியவைகளைக் கழற்றிவைத்துவிட்டு, இரண்டு சேவகர்களுக்கு நடுவில் கட்டப்பட்டவனாக நித்திரை செய்திருந்ததை ஞாபகப்படுத்திக்கொண்டான். அவன் தன் சரீரத்தைப்பார்த்து, தான் முழுவதுமாக உடை அணிந்திருப்பதையும் இடையைக் கட்டிக்கொண்டிருப்பதையும் கண்டான். (11)

கொடூரமான இரும்புக் விலங்குகளினால் பூட்டப்பட்டு வீங்கியிருந்த அவனது மணிக்கட்டுகள் இப்பொழுது அந்த விலங்குகளிலிருந்து விடுதலைபெற்றிருப்பதையும் அவனது சுதந்திரம் பொய்த்தோற்றமாக இல்லாமல், ஆசீர்வாதமான உண்மையாக இருக்கிறது என்பதையும் அவன் உணர்ந்தான். அடுத்த நாளில் அவன் கொல்லப்படுவதற்கென்று கொண்டு செல்லப்பட வேண்டியவனாக இருந்தான்; ஆனால் இதோ ஒரு தூதன்

அவனைச் சிறைச்சாலையிலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுவித்திருக்கிறான். "பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது: ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன்" என்றான். (12)

## ஜெபத்திற்கான பதில்!

அந்த அப்போஸ்தலன், ஜெபம்செய்வதற்காக அவனுடைய சகோதரர்கள் ஒன்றுகூடியிருந்த விட்டைநோக்கி, நேராகச் சென்றான். அந்த நேரத்தில், அவர்கள் அவனுக்காக அக்கரையுடன் ஜெபித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். "பேதுரு வாசற்கதவைத் தட்டினபோது, ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள். அவள் பேதுருவின் சத்தத்தைஅறிந்து சந்தோஷத்தினால் கதவைத்திறவாமல், உள்ளேயோடி, பேதுரு வாசலுக்குமுன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள். அவர்கள்: நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவளோ அவர்தானென்று உறுதியாய்ச் சாதித்தாள். அப்பொழுது அவர்கள்: அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள். பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தான். அவர்கள் திறந்தபோது அவனைக் கண்டு பிரமித்தார்கள். அவர்கள் பேசாமலிருக்கும்படி அவன் கையமர்த்தி, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கினவிதத்தை அவர்களுக்கு விவரித்து, இந்தச் செய்தியை யாக்கோபுக்கும் சகோதரருக்கும் அறிவியுங்கள் என்று சொல்லி; புறப்பட்டு, வேறொரு இடத்திற்குப் போனான்." (13)

தேவன் விசுவாசிகளுடைய ஜெபங்களைக் கேட்டு, அவர்களுக்குப் பதிலளித்து, ஏரோதின் கரத்திலிருந்து பேதுருவை விடுவித்தபோது, உபவாசம்செய்து ஜெபித்துக்கொண்டிருந்த விசுவாசிகளின் இருதயங்கள் சந்தோஷத்தினாலும் துதியினாலும் நிறைந்தன. அந்த அப்போஸ்தலனின் மரணதண்டனை நிறைவேற்றப்படுவதைக் காண அந்தக் காலையில் மக்கள் ஒன்றுகூடியிருந்தனர். பேதுரு தப்பிச்சென்றுவிடக்கூடாது என்பதற்காகவும், அவனது அநுதாபிகளை மிரட்டுவதற்காகவும், தனது சொந்த வல்லமையை வெளிக்காட்டுவதற்காகவும், பேதுருவை கொண்டுவருவதற்கு பெரிய ஆயுதங்களுடனும் காவலாளர்களுடனும் அதிகாரிகளை அனுப்பினான். சிறைச்சாலை வாசலில் காவலர்கள் நின்றுகொண்டிருந்தனர்; சிறைச்சாலைக் கதவுகளின் கம்பிகளும் தாழ்ப்பாள்களும் இன்னும் பலமுள்ளவையாக பூட்டப்பட்டு உள்ளே காவல்பண்ணப்பட்டிருந்தன; இரண்டு சேவகர்களின் மணிக்கட்டுகளில் சங்கிலிகள் பிணைக்கப்பட்டிருந்தன; ஆனால் கைதியோ சென்றுவிட்டிருந்தான். (14)

## தேவன் வழங்கிய தண்டனை!

இந்தக் காரியங்களைப்பற்றிய அறிக்கை ஏரோதிடம் கொண்டுவரப் பட்டபோது, அவன் கடுங்கோபமுடையவனாகி, சிறைக் காவலர்களின்மீது விசுவாசமற்றவர்கள் என்ற குற்றத்தைச் சாட்டினான். அதற்காக, வேலைசெய்யும் இடத்தில் உறங்கின குற்றத்திற்காக அவர்கள் மரணதண்டனை அடைந்தனர்; ஆனால் அதே நேரத்தில், எந்த மனித வல்லமையும் பேதுருவை மீட்கவில்லை என்பதையும், ஏரோது அறிந்திருந்தான். ஆனால் அவனது கீழ்த்தரமான திட்டங்களைத் தோற்கடிப்பதற்கு ஒரு தெய்வீக வல்லமை செயலாற்றிக்கொண்டிருந்தது என்பதை ஒப்புக்கொள்ளாமலிருக்கும் தீர்மானத்துடன் இருந்தான். இவ்வாறாக, அவன் தன்னைத் தாழ்த்தாமல், மேலும் துணிகரமாக தேவனை எதிர்த்தான்! (15)

பேதுரு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பின், ஏரோது யூதேயாவிலிருந்து செசரியாவுக்குச் சென்று, அங்கு தங்கினான். அங்கு மக்களின் போற்றுதலையும் பாராட்டுதலையும் பெறும் நோக்கத்துடன் ஒரு பெரிய பண்டிகையை நடத்தினான். சகல இடங்களில் இருந்தும் சிற்றின்பத்தை நேசிப்பவர்கள் வந்துகூடியிருந்தனர். மதுவும், விருந்தும் மிகவும் அதிகமாக இருந்தது. ஏரோது மிகவும் பகட்டான உடைகளை அணிந்து, மக்களின்முன் தோன்றினான். பகட்டான அந்த ஆடையின் மடிப்புக்களில் சூரியக் கதிர்கள் படவே, அவை பார்ப்பவர்களின் கண்களைக் கூசச் செய்தது. பொன்னினாலும் வெள்ளியினாலும் உண்டுபண்ணப்பட்டிருந்த ஒரு மேலாடையை அவன் அணிந்திருந்தான். திரளானவர்களுக்குமுன் மிகுந்த ஆடம்பரத்துடனும் சடங்குகளுடனும் நின்று, அவர்களை மேட்டிமையுடன் நோக்கி, மிகுந்த பேச்சுத்திறனுடன் பேசினான். அவனுடைய தோற்றத்தின் மகத்துவம், தேர்ந்தெடுக்கப்பட்ட மொழியின் வல்லமை ஆகியவைகளின் செல்வாக்கு அங்கு கூடியிருந்தவர்களை அசைந்தாடச்செய்தது. விருந்து உண்டதினாலும் மதுவினாலும் ஏற்கனவே அவர்களுடைய புலன்கள் நெறிதவறினவையாக இருந்தன. கண்களைக் கூசச் செய்யக்கூடிய பிரகாசமான ஒளியை உடைய ஆடை அலங்காரங்களினால் கண்கள் கூச்சப்பட்டு, அவனுடைய பெரிய நடத்தையினாலும் பேச்சுத்திறனாலும் வசீகரிக்கப்பட்டு, உற்சாகத்தினால் தடுமாறி, சாவுக்குரிய மனிதனால் அப்படிப்பட்ட தோற்றத்தைத் தரமுடியாதென்றும், திடுக்கிடச் செய்யக்கூடிய விதத்தில் பேச்சுத்திறனுடையவனாக இருக்கமுடியாதென்றும், வார்த்தைகளால் புகழ்ந்து, அவனை தேவன் என்று அவர்கள் அறிவித்தனர். மேலும் அவனை இதுவரை ஒரு அதிபதியென்று மதித்தனரென்றும், இனிமேல் அவனை தெய்வமாக வணங்கப்போவதாகவும் அறிவித்தார்கள். (16)

இந்த விதமான துதிகள் போற்றுதல்கள் ஆகிய ஒன்றுக்குமே தான் தகுதியானவனல்ல என்பதை ஏரோது அறிந்திருந்தான். அப்படியிருந்தும் அவன் மக்களின் விக்கிரக ஆராதனையைக் கடிந்துகொள்ளாமல், அதைத் தனக்குரியது என்று ஏற்றுக்கொண்டான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷ சத்தமல்ல; இது தேவ சத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அப்பொழுது அவன் விரும்பியிருந்த அகந்தையின் பிரகாசம் அவனது முகத்தில் இருந்தது. ஒரு கீழ்த்தரமான பாவியை மகிமைப்படுத்திய அதே குரலுக்குரியவர்கள்தான் சில வருடங்களுக்கு முன், அவனை (கிறிஸ்துவை) சிலுவையில் அறைய வேண்டுமென்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுக் கத்தினார்கள். இந்த முகஸ்துதியையும் வழிபாட்டினையும் ஏரோது மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டான். அவனது இருதயம் வெற்றியினால் துடித்தது. ஆனால் திடீரென்று விரைவான ஒரு மாறுதல் அவன்மீது உண்டானது. அவனது முகம் மரித்தவனின் முகத்தைப்போல் வெளிரி, வேதனையால் விகாரமடைந்தது. அவனுடைய சருமத்துவாரங்களிலிருந்து வியர்வை பெரும் துளிகளாகப் புறப்பட்டது. வேதனையினாலும் பயத்தினாலும் அவன் சில விநாடிகள் நின்றிருந்த இடத்தில் அசையாமல் நின்றுவிட்டான். அதன்பின், தனது வெளிரி மங்கின நிறமாகிவிட்ட முகத்தை திகிலடைந்த அவனது நண்பர்களுக்குக் காட்டி, வெறுமையும் நம்பிக்கையற்றதுமான குரலில், நீங்கள் யாரை ஒரு தெய்வம் என்று உயர்த்தியிருக்கிறீர்களோ அவன் மரணத்தால் தாக்கப்பட்டிருக்கிறான் என்றான். (17)

துன்மார்க்கமான—களியாட்டு நிறைந்த காட்சியிலிருந்து அவன் மிகுந்த வேதனையுடன் வேறிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டான். ஒரு வினாடிக்குமுன் பெரும் கூட்டத்தினரின் துதியையும் தொழுகையையும் பெற்றுக்கொண்ட அகந்தைமிக்கவனாக இருந்தான். ஆனால் இப்பொழுது அவனைவிட வலிமைவாய்ந்த ஒருவரின் கரங்களில் இருப்பதை அவன் உணர்ந்தான். பாவத்திற்கான பட்சாதாபம் அவனைப்பற்றிக்கொண்டது. குற்றமற்றவனான யாக்கோபைக் கொலைசெய்யும்படிக் கட்டளையிட்டதை அவன் நினைவுகூர்ந்தான். கிறிஸ்துவின் அடியார்களை இரக்கமற்ற விதத்தில் உபத்திரவப்படுத்தினதையும், அவனுடைய கரத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டிருந்த அப்போஸ்தலனான பேதுருவைக் கொலைசெய்ய அவன் திட்டமிட்டதையும், காரணமற்ற அவனது பழிவாங்கும் எண்ணத்தினால் சிறைக்காவலர்களை இரக்கமற்றவிதத்தில் கொலைசெய்ததையும், அவன் நினைவுகூர்ந்தான். மரணத்திலிருந்து அப்போஸ்தலனை மீட்ட தேவன், இரக்கமற்றவிதத்தில் உபத்திரவம் செய்பவனாக இருந்த அவனுடன் இடைப்படுகிறார் என்பதை அவன் உணர்ந்தான். அவன், உடல் வேதனையிலிருந்தும் மனவேதனையிலிருந்தும் எவ்விதமான

நிவாரணத்தையும் காணவில்லை. அவன் எதையும் எதிர்பார்க்கவும் இல்லை. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்று கூறும் கற்பனையுடன் ஏரோது அறிமுகமானவனாக இருந்தான். மக்களின் தொழுகையை ஏற்றுக்கொள்ளுவதின்மூலம் அவன் தன் அக்கிரமத்தின் அளவை நிரப்பியிருந்து, தன்மீது தானே தேவனுடைய கோபத்தை வரவழைத்துக்கொண்டிருந்தான். (18)

பேதுருவை, உபத்திரவம் செய்திருந்தவனின் வல்லமையிலிருந்து மீட்பதற்காக ராஜரீகப் பிராகாரத்தைவிட்டுச் சென்றிருந்த அதே தூதன், ஏரோதின்மீது கோபத்தையும் நியாயத்தீர்ப்பையும் கொண்டுவருபவனாக இருந்தான். பேதுருவை நித்திரையிலிருந்து விழித்தெழச்செய்ய அந்த தூதன் அடித்தான்; ஆனால் துன்மார்க்கனான அந்த அரசனை அவன் அடித்தபோது, அது வேறுவிதமானதாக இருந்தது! அவன்மீது சாவுக்குரிய நோயைக் கொண்டுவருவதாக அது இருந்தது! ஏரோதின் அகந்தையின்மீது தேவன் அவமதிப்பை ஊற்றினார். தன்னைப் போற்றிக்கொண்டிருந்த மக்களுக்குமுன் ஒளிவீசும் ஆடைகளை அணிந்தவனாக காட்டியிருந்த அவனைப் புழுக்கள் தின்றுகொண்டிருக்க, அவன் உயிருடன் இருக்கும்போதே அழுகினவனானான். தேவகோபமாகிய நியாயத்தீர்ப்பின்கீழ், ஏரோது மிகுந்த மனவேதனையுடனும் உடல்வேதனையுடனும் மடிந்தான். (19)

இந்த தெய்வீக நியாயத்தீர்ப்பின் நடைமுறை விளக்கம் மக்களின்மீது பலத்த செல்வாக்கை ஏற்படுத்துவதாயிற்று. மரணம் என்னும் சிறையிலிருந்த கிறிஸ்துவின் அப்போஸ்தலன் அற்புதமான விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தபோது, அவனை உபத்திரவப்படுத்தினவன், தேவ சாபத்தினால் அடிக்கப்பட்டவனாக இருந்தான்! இந்தச் செய்தி எல்லா இடங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டு, அநேகரை கிறிஸ்துவை நம்பும்படிச் செய்து, அவர்களை கிறிஸ்துவிடம் கொண்டுவருவதற்கான கருவியாக அமைந்தது. (20) ★

# 41

# எல்லைகளுக்கும் அப்பால்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 301–309)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 13:1–4; 15:1–31.**

ஸ்தேவானின் இரத்தசாட்சியான மரணத்திற்குப்பின், உண்டான பயங்கரமான உபத்திரவத்தினால் எருசலேமைவிட்டுச் சென்றிருந்த அப்போஸ்தலர்கள், தங்களுடைய ஊழியங்களை எபிரெய—கிரேக்க—யூதர்களுக்கிடையில் மட்டுமாகச் சுருக்கிக்கொண்டு, அவைகளைச் சுற்றிலுமிருந்த நகரங்களில் கிறிஸ்துவைப் பிரசங்கித்திருந்தனர். "கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்"–அப்போஸ்தலர் 11:21.

எருசலேமிலிருந்த விசுவாசிகள் இந்த நல்ல செய்திகளைக் கேட்டபோது, களிகூர்ந்தனர். நல்லவனும் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாக இருந்த பர்னபா என்னப்பட்டவன், சீரியா நாட்டின் மாநகரமாக இருந்த அந்தியோகியாவுக்கு—அங்கிருந்த சபைக்கு—உதவும்படி அனுப்பப்பட்டான். அங்கு அவன் மிகுந்த வெற்றியுடன் ஊழியம் செய்தான், ஊழியம் அதிகரித்தபோது, அவன் பவுலின் உதவியை வரவேற்று, அதைப் பெற்றுக்கொண்டான். அந்த இருசீடர்களும் ஒன்று சேர்ந்து, ஒருவருடகாலம் மக்களுக்குப் போதனைசெய்துகொண்டும், கிறிஸ்துவின் சபைக்கு அங்கத்தினர்களை அதிகரித்துக்கொண்டும் அந்த மாநகரில் ஊழியம் செய்திருந்தனர். (2)

அந்தியோகியாவில் யூதர்களும் அதிகமானோர் இருந்தனர்; புறஜாதிகளும் அதிகமானோர் இருந்தனர். அதின் ஆரோக்கியமான நிலைமை, அழகிய காட்சிகள், செல்வச்செழிப்பு, பண்பாடு, தேர்ந்த தன்மை ஆகியவைகளினால், அந்த நகரம் சுகவாசத்தையும் வசதிகளையும் விரும்பியிருந்தவர்களுக்கான ஒரு பெரும் சுகவாசஸ்தலமாக இருந்தது. அதன் விசாலமான வியாபாரம், எல்லா நாட்டினரும் அங்கே காணப்படக்கூடிய ஒரு முக்கியமான இடமாக அதனை மாற்றியிருந்தது; எனவே அது ஒரு

ஆடம்பரமான தீயபழக்கமிக்க ஒரு நகரமாக இருந்தது. அந்தியோகியாவின் குடிமக்களின் துன்மார்க்கத்தினால், முடிவில், அதன்மீது தேவனுடைய கோபமான நியாயத்தீர்ப்பு வந்தது. (3)

இங்குதான் முதலாவதாக சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டிருந்தனர். கிறிஸ்துவே அவர்களது பிரசங்கத்திலும் போதனையிலும் உரையாடல்களிலும் கருப்பொருளாக இருந்ததினால், அவர்களுக்கு அந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது! அவருடன் நேரடியான கூட்டத்தினர்களாக இருக்கும்படி சீடர்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருந்ததினால், அந்த நேரத்திலிருந்த அவரது வாழ்க்கையின் சம்பவங்களை அவர்கள் தொடர்ந்து திரும்பத்திரும்ப கூறிக்கொண்டிருந்தனர். அவரது போதனைகள், நோயுற்றவர்களைச் சுகப்படுத்தியிருந்த அவரது அற்புதங்கள், பிசாசுகளைத் துரத்தியது, மரித்தவர்களை உயிருடன் எழுப்பியது ஆகிய நிகழ்ச்சிகளின்மீது அவர்கள் களைப்பில்லாமல் சஞ்சரித்திருந்தனர். தோட்டத்தில் அவர் அனுபவித்த வேதனை, அவர் காட்டிக்கொடுக்கப்பட்டது, விசாரணை, மரணதண்டனை, அவரது எதிரிகளால் அவர்மீது சுமத்தப்பட்ட அவமரியாதைகளையும் சித்திரவதைகளையும் அவர் சகித்துக்கொண்டது, அவரை உபத்திரவப்படுத்தினவர்களுக்காக அவர் தேவனைப்போன்ற இரக்கத்துடன் ஜெபித்தது ஆகியவைகளை நடுங்கும் உதடுகளுடனும் கண்ணீருடனும் அவர்கள் கூறினார்கள். அவருடைய உயிர்த்தெழுதல், அவர் பரமேறிச்சென்றது, விழுந்துபோன மனிதனின் மத்தியஸ்தராக அவர் பரலோகத்தில் செய்யும் ஊழியம் ஆகியவைபற்றிப் பேசுதல் ஆகியவைகளே அவர்களுக்கு மகிழ்ச்சிதரும் பேச்சுக்களாக இருந்தன. அவர்கள் கிறிஸ்துவைப் பிரசங்கித்து, தங்களுடைய ஜெபங்களை தேவனுக்கு அவர் மூலமாக ஏறெடுத்திருந்ததினால் புறஜாதியினர் அவர்களை நல்ல விதமாக கிறிஸ்தவர்கள் என்று அழைக்கலாயினர்! (4)

அந்தியோகியாப் பட்டணத்தில் ஊழியம் செய்வதற்கான ஒரு சிறப்பான பணிக்களம் இருப்பதை பவுல் கண்டான். அவனுடைய பெரும் கல்வியும் ஞானமும் வைராக்கியமும் இணைந்து, பண்பாடுமிக்க அந்த நகரத்தில் வாழ்ந்திருந்தவர்கள்மீதும், அந்த இடத்தில் அடிக்கடி சந்தித்திருந்தவர்கள்மீதும் வல்லமைமிக்க ஒரு செல்வாக்கை உண்டுபண்ணும் என்று அவன் எண்ணினான். (5)

அதே சமயத்தில், எல்லா மொழிகளையும் பேசக்கூடிய யூதர்கள் எல்லா நாடுகளிலிருந்தும் பண்டிகைகளின்போது தேவாலயத்தில் தொழுதுகொள்ளுவதற்காக எருசலேமிற்கு வந்திருந்தனர். அப்பொழுது அப்போஸ்தலர்களின் பணி எருசலேமை மையமாகக் கொண்டிருந்தது.

அப்படிப்பட்ட நேரங்களில், கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதானது அவர்களது உயிர்களுக்குத் தொடர்ச்சியான ஆபத்தை உண்டுபண்ணும் என்பதை அறிந்திருந்தபோதிலும், பின்வாங்காத தைரியத்துடன் கிறிஸ்துவைப் பிரசங்கம்செய்திருந்தனர். அநேகர் அவர்களுடைய விசுவாசத்திற்கு மாறினர்; இவர்கள் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள தங்களுடைய வீடுகளுக்குப் பரவிச்சென்று, சகல ஜாதியினருக்குள்ளும் சகல வகுப்பினருக்குள்ளும் சத்தியத்தின் விதையைப் பங்கிட்டுக்கொடுத்தனர். (6)

தங்களுடைய சொந்த நாட்டு மனிதர்களின் வீடுகளில், கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதற்குத் தங்களை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார் என்று, பேதுருவும் யாக்கோபும் யோவானும் நம்பிக்கையுடன் உணர்ந்திருந்தனர். ஆனால் பவுல் தேவாலயத்தில் ஜெபம் செய்துகொண்டிருந்தபோது, அவனது பரந்த ஊழியத்தின் பணிக்களம் அவனுக்கு முன்பாகக் குறிப்பாகக் காண்பிக்கப்பட்டு, அவன் தனது ஊழியத்தைப்பற்றிய கட்டளையை தேவனிடத்திலிருந்து பெற்றிருந்தான். விசாலமானதும் முக்கியமானதுமான பணிக்கு அவனை ஆயத்தப்படுத்த தேவன் அவனை அவருடன் நெருக்கமாகக் கொண்டுவந்து, அவனது தரிசனத்தில் பரலோகத்தின் அழகையும் மகிமையையும் காட்டினார். (7)

அந்தியோகியா சபையிலிருந்த பக்திமிக்க தீர்க்கதரிசிகளுடனும் ஆசிரியர்களுடனும் தேவன் தொடர்புகொண்டார். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காகப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்; எனவே அந்த அப்போஸ்தலர்கள் உபவாசம், ஜெபம்செய்தல், சிரசின்மேல் கைகளைவைத்தல் ஆகிய பக்திவிநயமான நியமத்தால் தேவனுக்கென்று பிரதிஷ்டைசெய்யப்பட்டு, புறஜாதியினர்களுக்கிடையில் ஊழியம்செய்திட, பணிக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தனர். (8)

## பவுல், பர்னபா ஆகியோரின் அபிஷேகம்!

பவுல், பர்னபா இருவரும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகப் பணியாற்றிக்கொண்டிருந்தனர். அவர்களது முயற்சிகளைத் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். ஆனால் அவர்களிருவருமே இதற்குமுன் சம்பிரதாயப்படி ஊழியத்திற்கென்று ஜெபத்தினாலும் கைகளை வைப்பதினாலும் அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கப்படவில்லை. பூரணமான பரலோக அதிகாரத்தினால் அதிகாரம் பெற்றிருந்த அவர்கள், சத்தியத்தைப் போதிப்பதுமட்டுமின்றி, ஞானஸ்நானம்கொடுக்கவும் சபைகளை ஏற்படுத்தும்

சுவிசேஷ ஊழியத்திற்காகவும் சபைகளால் நியமிக்கப்பட்டிருந்தனர். இது சபைக்கு ஒரு முக்கியமான காலக்கட்டமாக இருந்தது. கிறிஸ்துவின் மரணத்தினால், யூதர்களுக்கும் புறஜாதியினருக்குமிடையில் பகையாக நின்றிருந்த பிரிவினையாகிய நடுச்சுவர் தகர்க்கப்பட்டிருந்தபோதிலும், சுவிசேஷத்தின் சலுகைகளைப் புறஜாதியினர் அனுபவிக்கும்படிச்செய்வதற்கு, விசுவாசிகளாக இருந்த அநேக யூதர்களின் கண்களில் இருந்த திரை நீக்கப்படாமலிருந்தது. எனவே தேவகுமாரனால் நீக்கப்பட்டிருந்ததின் முடிவை அவர்களால் அறிந்துகொள்ளமுடியவில்லை. புறஜாதியினருக்கிடையில் வல்லமையுடன் ஊழியம்செய்யப்படவேண்டியதாக இருந்து, அதினால் —ஆத்துமாக்களைச் சேர்ப்பதின்மூலமாக சபை பலப்படுத்தப்படவேண்டியதாக இருந்தது. (9)

அப்போஸ்தலர்கள் இந்தக் காரியமான அவர்களது சிறப்பான பணிகளில், சந்தேகம், தவறான எண்ணம், பொறாமை, ஆகியவைகளுக்கு ஆளாகவேண்டியவர்களாக இருந்தனர். யூதர்களின் தனித்தன்மையை விட்டு, அவர்கள் விலகிச்சென்றதின் இயற்கையான பலனாக அவர்களது கோட்பாடுகளும் நோக்கங்களும் மதப்புரட்டு என்னும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகவே, சுவிசேஷத்தின் ஊழியக்காரர்கள் என்னும் நற்சாட்சிகள், வைராக்கியமிக்க யூத விசுவாசிகளால் கேள்விக்குட்படவேண்டியதாயிற்று. தேவன் அவருடைய ஊழியக்காரர்கள் அனுபவிக்கவேண்டிய துன்பங்களை முன்னறிந்து, அவரது ஞானமிக்க தெய்வீக ஏற்பாட்டினால், அவர்களுடைய சவாலுக்கு மேற்பட்டதாக இருக்கும்படி அமைக்கப்பட்டு, தேவனுடைய சபைக்கு மேலான கேள்விக்கிடமில்லாத அதிகாரத்தையும் அவர்களுக்குக் கொடுக்கும்படிச்செய்தார். (10)

பிற்காலத்தில் கைகளை வைப்பதினால் அபிஷேகம்செய்தல் பெருமளவிற்குத் தவறாக செயல்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட அபிஷேகம் பெற்ற உடனே, அபிஷேகம் பெற்றவர்களின்மீது ஒரு வல்லமை வந்தது என்றும், அது அவர்களைச் சகலவிதமான ஊழியப் பணிகளைச் செய்வதற்குத் தகுதிப்படுத்துகிறதென்றும், கைகளை வைக்கும் செயலில் சிறப்பு இருப்பதைப்போலத் தேவையற்ற முக்கியத்துவம் அதற்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு அப்போஸ்தலர்களின் வரலாற்றில் அவர்களது ஊழியங்களைக் கருத்தில்கொண்டு, கைகளை வைத்தல் என்பதைப்பற்றிய சாதாரணமான ஆதாரத்தைமட்டுமே நாம் உடையவர்களாக இருக்கிறோம். பவுல், பர்னபா இருவரும் ஏற்கனவே தேவனிடத்திலிருந்து கட்டளை பெற்றிருக்கின்றனர். எனவே கைகளை வைத்தல் என்னும் நியமத்தால் அதனுடன் புதிதான கிருபையையோ புண்ணியத்தையோ

தகுதியாகச் சேர்க்கவில்லை. அது தேவனுடைய பணியின்மீது சபை முத்திரையிடும் ஒரு சாதாரணச் செயலாக உள்ளது. அதாவது ஒரு குறிப்பிட்ட பதவியை ஒப்புக்கொள்வதன் அடையாளமாக உள்ளது. (11)

## முதலாவது பொதுக்குழுவின் கூட்டம்!

யூதேயாவிலிருந்து வந்த சில குறிப்பிடப்பட்ட யூதர்கள், புறஜாதியினரான விசுவாசிகளுக்கிடையில், விருத்தசேதனம் என்னும் கேள்வியை எழுப்பிக் குழப்பம்செய்தனர். விருத்தசேதனம் பெறாமலும் சடங்காச்சாரப் பிரமாணங்கள் முழுவதையும் கைக்கொள்ளாமலும் ஒருவராலும் இரட்சிக்கப்பட முடியாது என்று அவர்கள் பெரும் நிச்சயத்துடன் தங்கள் கருத்தை வற்புறுத்தினார்கள். (12)

சபையைப் பெரிய அளவில் பாதிக்கின்ற ஒரு முக்கியமான கேள்வியாக அது இருந்தது. பவுலும் பர்னபாவும் உடனே அந்தக் காரியத்தைப் புறஜாதியினரின்மீது அறிமுகப்படுத்துவதை எதிர்த்தார்கள். இந்தக் காரியத்தில் யூதேயாவிலிருந்து வந்தவர்களின் நிலையை ஆதரித்து, அந்தியோகியாவிலிருந்த விசுவாசிகளால் அவர்கள் (பவுலும் பர்னபாவும்) எதிர்க்கப்பட்டிருந்தனர். இந்தக் காரியம் அதிகமான வாக்குவாதத்தில் கொண்டுபோய்விட்டிருந்தது. சபையில் இசைவு இல்லாமலாயிற்று. அந்தக் கேள்விபற்றி மேற்கொண்டுள்ள விவாதம் அவர்களுக்குள் பிரிவினையை உண்டாக்கும் என்று பயந்த அந்தியோகியா சபை, முடிவில், அந்தியோகியாவிலுள்ள சில பொறுப்பான மனிதர்களுடன் சேர்த்து, பவுலையும் பர்னபாவையும் எருசலேமுக்கு அனுப்பி, அப்போஸ்தலர்களுக்கு முன் இந்தக் காரியத்தை வைப்பது என்று தீர்மானித்தனர். அங்கு அவர்கள் பல சபைகளிலிருந்தும் வந்துள்ள பிரதிநிதிகளையும், வருடாந்திரப் பண்டிகைகளை முன்னிட்டு வந்திருந்தவர்களையும் சந்திக்கவேண்டியவர்களானார்கள். அப்பொழுது சபையின் பொறுப்பிலுள்ள மனிதர்களால், ஒரு இறுதி முடிவு எடுக்கப்பட்டு, அதினால் சகலவிதமான முரண்பாடுகளும் இல்லாமலாக்கப்பட வேண்டியதாக இருந்தது. அதற்குப்பின் இந்த முடிவு, நாடு முழுவதிலும் பரவியிருந்த பல சபைகளிலும் மொத்தமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதாக இருந்தது. (13)

அந்தியோகியாவிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் எருசலேமிற்கு வந்தபின், சபைகளின் கூட்டத்தில், அவர்களுடைய ஊழியத்தினால் உண்டான வெற்றியையும், மாற்றமடைந்த சில பரிசேயர்கள் புறஜாதியினரிலிருந்து தங்களுடைய விசுவாசத்துக்கு மாறினவர்கள் இரட்சிக்கப்படுவதற்காக விருத்தசேதனம் பெறவேண்டுமென்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தை

அவர்கள் கைக்கொள்ளவேண்டுமென்றும் அறிவித்தது குழப்பத்தை உண்டுபண்ணியிருக்கிறது என்றும் எடுத்துக்கூறினார்கள். (14)

தெய்வீகம் ஏற்படுத்தியிருந்த தங்களது சடங்குகளின்மீது யூதர்கள் தங்களுக்குத்தாங்களே பெருமையுள்ளவர்களாக இருந்து, தேவன் ஒரு தடவை எபிரெயத் தொழுகை முறைகளைக் குறிப்பிட்டிருந்ததினால், அந்தக் குறிப்பிலிருந்துள்ள மாற்றத்தை அனுமதிப்பது என்பது ஒருபோதும் முடியாத காரியம் என்றும், அவர்கள் முடிவுசெய்தனர். (15)

கிறிஸ்தவமார்க்கம் தன்னை யூதமார்க்கத்தின் பிரமாணங்களுடனும் சடங்காச்சாரங்களுடனும் இணைத்துக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் முடிவுசெய்தனர். கிறிஸ்துவின் மரணத்தின்மூலமாக, நீக்கப்பட்டவைகளின் முடிவைப்பற்றி அறிந்துகொள்வதிலும், அவர்களுடைய சடங்காச்சாரங்கள் அனைத்தும் தேவகுமாரனுடைய மரணத்தை முன்குறித்திருந்ததென்பதையும், அதினால் நிழலானது நிஜத்தைச் சந்தித்து, யூத மதத்தில் தெய்வீகமாக ஏற்படுத்தப்பட்டிருந்த சடங்காச்சாரங்களும் பலிமுறைகளும், மதிப்பற்றவை யாகிவிட்டன என்பதையும், அறிவதற்கு அவர்கள் மந்தமானவர்களாக இருந்தனர். (16)

பவுல் அவனது கண்டிப்பான பரிசேயக் கொள்கையின்மீது பெருமை உடையவனாக இருந்திருந்தான்; ஆனால் தமஸ்குவிற்கு செல்லும் பாதையில் கிறிஸ்துவைச் சந்தித்தபின், இரட்சகரின் ஊழியம் புறஜாதியினரை மாற்றும் தனது சொந்த ஊழியம் ஆகியவை அவனது மனதில் வெளிப்படையாகத்தோன்றி, ஜீவனுள்ள விசுவாசம் செத்துப்போன சம்பிரதாயம் ஆகிய இரண்டிற்குமுள்ள வேற்றுமையை அவன் பூரணமாக அறிந்துகொண்டான். பவுல் தன்னை இன்னும் ஆபிரகாமின் பிள்ளைகளில் ஒருவன் என்று உரிமைபாராட்டியிருந்து, எழுத்தின்படியும் ஆவியின்படியும் அவன் கிறிஸ்தவனாக மாறுவதற்குமுன், எவ்விதமாக விசுவாசத்துடன் பத்துக்கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தானோ அதே விதமாகக் கைக்கொண்டிருந்தான். ஆனால் அடையாளங்களாக இருந்த சடங்குகள் மொத்தமாக இல்லாமலாகிவிடும் என்பதை அவன் அறிந்திருந்தான். அவைகள் எவைகளை நிழலாட்டமாக முன்காட்டியிருந்தனவோ, அவைகள் கடந்துசெல்லவேண்டியதாயிற்று. யூதமார்க்கத்தின்மீது அதின் பழமையான சடங்குகளுக்குப் புதிய முக்கியத்துவத்தைக் கொடுத்துக்கொண்டு, சுவிசேஷத்தின் மகிமையின் ஒளி அதின்மீது வீசிக்கொண்டிருந்தது என்பதையும் அவன் அறிந்திருந்தான். (17)

## கொர்நேலியுவின் அனுபவ சாட்சி!

இவ்விதமாக, அந்த ஆலோசனைச் சங்கத்தின் ஆலோசனைக்காகக் கொண்டுவரப்பட்டிருந்த கேள்வி, எந்தவிதமான ஒளியுடன் பார்த்தாலும், மேற்கொள்ளமுடியாத சங்கடங்களை முன்வைப்பதுபோல் காணப்பட்டது. ஆனால் உண்மையில் பரிசுத்தஆவியானவர் இந்தப் பிரச்சினைக்கு ஏற்கனவே தீர்வுகண்டிருந்தார். அந்த முடிவின்மீதுதான் கிறிஸ்தவ சபையின் செழுமையும் உயிரோட்டமும் சார்ந்திருந்தது. களைப்பூட்டும் இந்தக் கேள்விகளுக்கு ஒரு முடிவைக்கொண்டுவர அப்போஸ்தலர்களுக்கு ஞானமும் பரிசுத்தமாக நியாயம் தீர்க்கும் தன்மையும் கொடுக்கப்பட்டிருந்தது. (18)

விருத்தசேதனம் பெறாத புறஜாதியினர்மீதும், விருத்தசேதனம் பெற்றிருந்த யூதர்களின்மீதும், ஒரேவிதமான வல்லமையுடன். பரிசுத்த ஆவியானவர் இறங்கினதால், அவர் அந்தக் காரியத்திற்கு முடிவை உண்டுபண்ணியிருக்கிறார் என்ற நியாயத்தைப் பேதுரு காரணமாகக் காட்டினான். அவனுக்கு எல்லாவிதமான நான்கு கால்மிருகங்களும் அடங்கிய ஒரு துப்பட்டியை தேவன் காட்டி, அடித்துப் புசியென்று கட்டளையிட்ட தரிசனத்தையும், பொதுவானதாகவும் அசுத்தமானதாகவும் இருந்த எதையும் இதுவரை புசித்ததில்லையென்று கூறிமறுத்தபோது, “தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே” என்று தேவன் கூறியிருந்தார் என்று மீண்டும் வினவினான். (19)

“இருதயங்களை அறிந்திருக்கிற தேவன், நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல், அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்துச் சாட்சிகொடுத்தார். விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் இராதபடிச்செய்தார். இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?” என்று அவன் கூறினான். (20)

நியாயப்பிரமாணம் பாராட்டும் உரிமைக்கு எதிராக இது பத்துக் கற்பனைகளாகிய பிரமாணத்தினால் உண்டான நுகம் அல்ல. ஆனால் பேதுரு, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் இல்லாததாகவும் குறைவுள்ளதாகவும் ஆக்கப்பட்ட சடங்காச்சாரப் பிரமாணங்களையே இங்கு குறிப்பிட்டான். பேதுருவின் இந்தச் சொற்பொழிவு அந்தக் கூட்டத்திலிருந்தவர்களை புறஜாதியினருக்கு நடுவில் ஊழியம் செய்திருந்த பவுல், பர்னபா ஆகியோர் கூறியிருந்த அவர்களது அனுபவத்துடன் சேர்த்துக் கவனிக்கும்படிச்செய்தது. (21)

**தீர்மானம்!**

யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகள் அனைத்தையும் புறஜாதியினரும் அனுபவிக்கவேண்டுமென்பதற்காக அவர்களை உள்ளே கொண்டுவருவது தேவனுடைய திட்டம் என்று யாக்கோபு தனது சாட்சியையும் முடிவையும் கூறினான். சடங்காச்சாரப் பிரமாணங்களை புறஜாதியினரின்மீது சுமத்தாமலிருப்பது நல்லது என்று பரிசுத்த ஆவியானவர் கண்டார். அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் அந்தக் காரியத்தைப்பற்றிக் கவனமாக ஆராய்ந்தபின், அந்தக் காரியத்தை அதே ஒளியில் கண்டபோது, அவர்களது மனம் ஆவியானவரின் மனம்போல் ஆனது. யாக்கோபு அந்த ஆலோசனைச் சங்கத்திற்குத் தலைமை தாங்கி: "ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாது" என்ற அவனது இறுதி முடிவை அறிவித்தான். (22)

சடங்காச்சாரப் பிரமாணம், குறிப்பாக விருத்தசேதனம் என்னும் தற்காலிகப் பிரமாணமானது எந்த ஒரு காரணத்தைக்கொண்டும் புறஜாதியினரின்மீது அல்லது தங்களுடைய ஜனங்களின்மீது—யூதரின் மீது வற்புறுத்தப்படக்கூடாது என்பது அவனுடைய தீர்ப்பாக இருந்தது. புறஜாதியினர் விக்கிரக ஆராதனையிலிருந்து தேவனிடத்திற்குத் திரும்பினது அவர்களுடைய விசுவாசத்தில் பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. அவர்களுடைய மனங்கள் கலங்காமலிருக்கும்படி, அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் அதைரியமடைந்துவிடாமலிருக்கும்படியாக, அவர்களில் சந்தேகத்தை உண்டுபண்ணக்கூடிய கேள்விகளை எழுப்பாமலும், அவர்களைக் குழப்பக்கூடிய கேள்விகளைக் கேட்காமலும் இருப்பதற்கு (நாம்) மிகுந்த எச்சரிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்னும் உண்மையை சகோதரர்களின்மீது பதியச் செய்வதற்காக யாக்கோபு வகைதேடினான். (23)

எப்படியிருந்தாலும், புறஜாதியினர் அவர்களுடைய யூதச் சகோதரர்களின் கருத்துக்களுடன் முரண்படக்கூடிய நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாமலும் அல்லது அவர்களைப்பற்றிய தவறான எண்ணங்களை யூத சகோதரர்களின் மனங்களில் உண்டாகிவிடக்கூடிய விதத்தில் நடத்துகொள்ளாமலுமிருக்கவேண்டும். விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும் இரத்தத்திற்கும் நெருக்குண்டு செத்ததற்கும் வேசித்தனத்திற்கும் அவர்கள் விலகியிருக்கவேண்டும் என்று புறஜாதியினருக்கு ஒரு கடிதத்தின்மூலம் போதனைசெய்யவேண்டும் என்று அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் ஒப்புக்கொண்டனர். அவர்கள் கற்பனைகளைக் கைக்கொண்டு, பரிசுத்தமான வாழ்க்கை நடத்தவேண்டும் என்று அவசியப்படுத்தப்பட்டனர்.

புறஜாதியினர் விருத்தசேதனம் பெறவேண்டும் என்று வற்புறுத்தினவர்கள், அப்படிச்செய்வதற்கு அப்போஸ்தலர்களால் அதிகாரப்படுத்தப்படவில்லை என்று புறஜாதியினருக்கு வாக்குறுதிகொடுத்தனர். (24)

பவுலும் பர்னபாவும் தங்களுடைய உயிர்களைக் கர்த்தருக்கென்று அபாயத்திற்கு உட்படுத்தியிருந்தவர்களென்று சிபாரிசு செய்யப்பட்டனர். ஆலோசனை சங்கத்தினரின் வாயின் வார்த்தையினால் யூதாவும் சீலாவும் ஆலோசனை சங்கத்தின் முடிவைப் புறஜாதியினருக்கு அறிவிக்கும்படி இந்த அப்போஸ்தலர்களுடன் அனுப்பப்பட்டனர். எல்லாவிதமான முரண்பாடு களுக்கும் முடிவைக் கொண்டுவந்த நிருபத்துடனும் தூதுடனும் தேவனுடைய அந்த நான்கு ஊழியக்காரர்களும் அனுப்பப்பட்டிருந்தனர்; ஏனெனில், அது இந்த பூமியின் மிகவும் மேலான அதிகாரமுள்ளவரின் குரலாக இருந்தது. (25)

இந்தக் காரியத்தை முடிவுசெய்த ஆலோசனைச் சங்கம், யூதமார்க்கம், கிறிஸ்தவ சபைகள் ஆகியவைகளின் ஸ்தாபகர்களை உட்கொண்டதாக இருந்தது. எருசலேமிலிருந்துள்ள மூப்பர்களும் அந்தியோகியாவிலிருந்துள்ள பிரதிநிதிகளும் அங்கு இருந்தனர். மிகவும் செல்வாக்குள்ள சபைகளும் பிரதிநிதிகளாக இருந்தன. அந்த ஆலோசனைச் சங்கம் அதின் காரியங்களில் தவறாமையின்மீது உரிமைபாராட்டாமல், தேவனுடைய சித்தத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்த சபையின் மேன்மையுடனும் ஒளி அடைந்த நியாயத்தின் உத்தரவின்படியும் நடந்திருந்தது. பரிசுத்த ஆவியானவர் புறஜாதியினருடன் ஆதரவாக இருப்பதினால், இந்தக் கேள்விக்கான முடிவை தேவன்தாமே முடிவுசெய்திருக்கிறார் என்பதை அவர்கள் கண்டனர். எனவே, ஆவியின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவது அவர்களிடம் விட்டுவிடப்பட்டிருக்கிறது. (26)

இந்தக் கேள்வியின்மீது ஓட்டளிக்கும்படி கிறிஸ்தவ அமைப்பு முழுவதும் அழைக்கப்பட்டிருக்கவில்லை. செல்வாக்கையும் நியாயத்தையும் உடையவர்களாக இருந்த அப்போஸ்தலர்கள், மூப்பர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து, அந்தக் கட்டளையை எற்படுத்தினார்கள். அதற்குப்பின், அது பொதுவாகக் கிறிஸ்தவ சபைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது; அப்படியிருந்தாலும், இந்த முடிவுடன் எல்லாரும் சந்தோஷமுள்ளவர்களாக இருக்கவில்லை; தங்களுடைய வேலைக்கான பொறுப்பைத் தாங்களாகவே எடுத்துக்கொண்ட, தவறான சகோதரர்களின் ஒருகூட்டம் இருந்தது. கிறிஸ்துவின் கோட்பாட்டைப் போதிப்பதற்கென்று, தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்த, அனுபவமிக்க மனிதர்களின் பணியை, கீழே விழச்செய்ய வகைதேடி, முறுமுறுத்தலிலும் குற்றம் கண்டுபிடிப்பதிலும் புதிய திட்டங்களை முன்வைப்பதிலும் ஈடுபட்டனர். சபை அதின் ஆரம்பத்திலிருந்தே இப்படிப்பட்ட

தடைகளை உடையதாக இருந்திருக்கிறது; சபை, காலத்தின் முடிவுவரை இப்படிப்பட்ட தடைகளை உடையதாகவே இருக்கும்! (27) ★

# 42

# பவுலின் ஊழிய வருடங்கள்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 310–314)**
**திருவசன ஆதாரம் : பிலிப்பியர் 3:4–6.**

பவுல் ஒரு களைப்படைந்த ஊழியக்காரனாக இருந்தான். சில சமயங்களில் வரவேற்பு கிடைக்காத பிரதேசங்களிலும், சில சமயங்களில் தண்ணீர்மேலும் புயல்காற்றிற்கு ஊடாகவும் பவுல் தொடர்ச்சியாக இடம்விட்டு இடம் பயணம் செய்திருந்தான். அவன் தனது வேலைக்கு இடையூறுசெய்யும் எதையும் அனுமதிக்கவில்லை. அவன் தேவனுடைய ஊழியக்காரனாக இருந்து, அவரது சித்தத்தை நடப்பிக்கவேண்டும். தேவனுடைய சபைக்குப் பலத்தைக் கொண்டுவந்திருந்த ஒரு தூதை நிருபத்தின் வடிவிலும், வாயின் வார்த்தையினாலும் அவன் கொண்டுவந்திருந்தான். உலக வரலாற்றின் முடிவில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு, சபையைப் பயப்படுத்தும் அபாயங்களைப்பற்றியும், தேவனுடைய ஜனங்கள் சந்திக்கவேண்டியதாக உள்ள தவறான கோட்பாடுகளைப்பற்றியும் அவன் கொண்டுசென்றிருந்த தூது வெளிப்படையாகப் பேசுகிறது. (1)

கிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கித்துக்கொண்டும், சபைகளை அமைத்துக்கொண்டும், பவுல் நாட்டிலிருந்து நாட்டுக்கும், நகரங்களிலிருந்து நகரங்களுக்கும் சென்றிருந்தான். கேட்கக்கூடியவர்களைக் கண்ட போதெல்லாம், தவறுக்கு எதிராகச் செயல்படவும், ஆண்கள் பெண்களின் பாதங்களை சரியான பாதைக்குத் திருப்பவும் அவன் உழைத்திருந்தான். எந்த ஒரு இடத்தில் அவனது உழைப்பினால் மனிதர்கள் கிறிஸ்துவினிடத்திற்கு நடத்தப்பட்டார்களோ, அங்கெல்லாம் அவன் சபையை ஏற்படுத்தினான். அவர்களது எண்ணிக்கை எவ்வளவு சிறிதாக இருந்தபோதிலும், அதனைப் பொருட்படுத்தாமல், அது செய்யப்பட்டிருந்தது. இவ்விதமாக ஏற்படுத்தப்பட்ட சபைகளைப் பவுல் மறந்துவிடவில்லை. ஒரு சபை எவ்வளவுதான் சிறிதாக இருந்தபோதிலும், அது அவனது கரிசனையாகவும் விருப்பமுமிக்க பொருளாகவும் இருந்தது. (2)

தனது அன்றாட வாழ்க்கையின் தேவைகளுக்காகத் தனது கரங்களால் வேலைசெய்தல், சபைகளை ஏற்படுத்துதல், ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட சபைகளுக்குக் கடிதம் எழுதுதல், ஆகிய பலதரப்பட்ட பணிகளைப் பவுலின் அழைப்பு, அவனிடமிருந்து கோரியிருந்தது. அப்படியிருந்தும் பல்வேறுபட்ட இந்தப் பணிகளுக்கிடையிலிருந்துகொண்டு, “ஒன்று செய்கிறேன்” (பிலிப்பியர் 3:13) என்று அவன் அறிவித்தான். கிறிஸ்துவின் பெயரைத் தூஷித்து, தனது வல்லமைக்குள் இருந்த அனைத்தையும் பயன்படுத்தி அந்தப் பெயரை மற்றவர்களும் தூஷிக்கும்படி வற்புறுத்தியிருந்த அவனுக்கு, அவர் தம்மை வெளிப்படுத்தியிருந்தார். அப்படிப்பட்ட கிறிஸ்துவுக்கு விசுவாசமாக இருக்கவேண்டுமென்ற ஒரே குறிக்கோளை அவனது செயல்கள் அனைத்திலும் உறுதியாகக்கொண்டிருந்தான். ஒரு சமயத்தில் எவருடைய பெயர் அவனை, அவரைப்பற்றிய அவமதிப்பினால் நிரப்பியிருந்ததோ, அவருக்கென இப்பொழுது ஊழியம்செய்வதும் அவரைக் கனப்படுத்துவதும் அவனுடைய ஒரே நோக்கமாக இருந்தது. இரட்சகருக்காக ஆத்துமாக்களை ஆதாயம்செய்வது ஒன்றுமட்டுமே அவனது வாஞ்சையாக இருந்தது. யூதர்களும் புறஜாதியினரும் அவனை எதிர்த்து உபத்திரவப்படுத்தலாம்; ஆனால் அவனுடைய நோக்கத்திலிருந்து எதுவுமே அவனை வேறுபக்கமாகத் திருப்பமுடியாததாக இருந்தது. (3)

**பவுல் தனது அனுபவங்களைத் திருப்பிப் பார்க்கிறான்!**

பவுல் அவனுடைய மதமாற்றத்திற்கு முன்னும்பின்னும் உண்டான அவனது அனுபவத்தைக்குறித்து பிலிப்பியருக்கு எழுதும்போது: “மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால், நான் அதிகமாய் அப்படிச்செய்யலாம். நான் எட்டம் நாளில் விருத்தசேதனமடைந்தவன்; இஸ்ரவேல் வம்சத்தான்; பென்யமீன் கோத்திரத்தான்; எபிரெயரில் பிறந்த எபிரெயன்; நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்; பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன்; நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்” என்று எழுதினான். (4)

அவனுடைய மதமாற்றத்திற்குப்பின், அவனுடைய சாட்சி: “ஆகிலும், எனக்கு லாபமாக இருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணனேன், அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால்

வருகிறதும், விசுவாசத்தின் மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருக்கிறேன்” என்பதாக இருந்தது. (பிலிப். 3:7–9).

அவன் இதுவரை மிகமதிப்பு வாய்ந்ததாக எண்ணியிருந்த நீதி, இப்பொழுது அவனுடைய பார்வையில் மதிப்பற்றதாக இருக்கிறது. அவனுடைய ஆத்துமாவின் ஏக்கம் “இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின்வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன். நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்” என்பதாக இருந்தது. (பிலிப்பியர் 3:10–14) (6)

### ஒரு இசைவான ஊழியக்காரன்!

பிலிப்பிய நிலவறையில் வேதனையால் தாக்கப்பட்டிருந்த உடலுடன் இருந்திருந்தபோதிலும், அவனது துதியின் பாடல்கள் நடு இரவின் மௌனத்தைக் கலைப்பதைப் பாருங்கள்! பூமியதிர்ச்சி சிறையின் கதவுகளைத் திறந்தபின்னுங்கூட புறஜாதியானாக இருந்த அந்தச் சிறைக்காவலாளிக்கு உற்சாகத்தையூட்டும் வார்த்தைகளடங்கிய அவனது குரல் கேட்கப்படுகிறது. “நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம்” என்றான். அவன் இருந்த இடத்திலிருந்த ஒவ்வொரு கைதியும் ஒரு உடன் மனிதனால் கட்டுப்படுத்தப்பட்டவனாக இருக்கிறான். பவுலைத் தாங்குகின்ற, அவனுடைய விசுவாசத்தின் உண்மையைப்பற்றிய மன உணர்த்துதலை அடைந்த அந்தச் சிறைக்காவலன், இரட்சிப்பிற்கான வழியைப்பற்றி விசாரித்து, உபத்திரவப்படுத்தப்பட்டிருந்த சீடர்களின் முழுக்கூட்டத்தினருடனும், தனது முழுக்குடும்பமாக ஐக்கியப்பட்டுவிடுகிறான்! (7)

பவுல், அத்தேனே பட்டணத்தில் உள்ள ஆலோசனைச் சங்கத்தில் அகிரிப்பாவுக்கு முன்பாக, விஞ்ஞானத்துடன் விஞ்ஞானத்தையும், தர்க்க இயலுடன் தர்க்க இயலையும் தத்துவத்துடன் தத்துவத்தையும்

ஒப்பிடுவதைப் பாருங்கள்! தெய்வீக அன்பினால் உண்டான உபாயத்துடன், அவனது பேச்சைக் கேட்டிருந்தவர்கள் அவர்களுடைய அறியாமையினால் யெகோவாவை அறியப்படாத தேவன் என்று ஆராதித்திருந்ததை, அவர்களுடைய சொந்தக் கவிஞர் ஒருவர்—அவரைத் தகப்பனாகவும் அவர்களைப் பிள்ளைகளாகவும் சித்தரித்துப் பாடியிருப்பதை அவன் காட்டுவதையும் கவனியுங்கள். ஜாதி வேறுபாடுகள் நிலவியிருந்த அந்தக் காலத்தில் மனிதன் மனிதனாக இருக்கவேண்டும் என்னும் உரிமைகளின் அங்கீகாரம் இல்லாமலிருந்த அந்தக் காலத்தில், மனித சகோதரத்துவம் என்னும் பெரும் உண்மையை அவர்கள் முன்வைத்து, "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினால் தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்திருக்கிறார்" என்று அவன் கூறுவதைக் கேளுங்கள். அதன்பின் மனிதனுடனுள்ள சகலவிதமான இடைப்படுதலுக்கும் ஊடாக கிருபையும் இரக்கமுமாகிய அவரது நோக்கங்கள் ஒரு பொன் இழையைப்போல ஓடுவதை அவன் காட்டுகிறான். "கர்த்தராகிய தம்மை, அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே" என்றான். (8)

பெஸ்துவின் மன்றத்தில் அகிரிப்பா அரசன் சுவிசேஷத்தின் சத்தியத்தைப்பற்றிய மன உணர்த்துதலை அடைந்தவனாக, நான் கிறிஸ்தவனாவதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்று கூறியபோது, பவுல் தான் பிணைக்கப்பட்டிருக்கும் சங்கிலியைப்பற்றி எப்படிப்பட்ட மென்மையான உபச்சாரத்துடன் சுட்டிக்காட்டுகிறான் என்பதைப் பாருங்கள்: "நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக்கேட்கிற யாவரும், கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றான். (9)

அவனுடைய சொந்த வார்த்தைகளினால் கூறப்பட்டிருந்த விதமாக "அநேகந்தரம் பிராயணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும்" அவனது வாழ்க்கை கடந்துசென்றது. (2 கொரிந்தியர் 11:26,27) (10)

“வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்! தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்;” “துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்.” (1கொரிந்தியர் 4:12,13; 2கொரிந்தியர் 6:10). (11)

## சிறையில் ஊழியம்!

அதிகமாக, நீண்டகாலத்திற்கு அவன் சிறையில் கைதியாக வைக்கப்பட்டிருந்தபோதிலும், கர்த்தர் அவரது சிறப்பான பணியினை அவன் மூலமாக முன்கொண்டு சென்றார். கிறிஸ்துவைப்பற்றிய அறிவைப் பரப்புவதற்கும், இவ்வாறாக தேவனை மகிமைப்படுத்துவதற்கும் அவனது சிறையிருப்பும் கருவியாக இருக்கவேண்டியதிருந்தது. விசாரணைக்காக அவன் நகரத்திலிருந்து நகரத்திற்கு அனுப்பப்பட்டபோது, இயேசுவைப்பற்றிய காரியத்தில் அவர்களை சாக்குப்போக்குக் கூறமுடியாதவர்களாக்கியிருந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் அவர்மீது (இயேசுவின்மீது) விசுவாசம்வைத்து, அவரது நாமத்தில் களிகூர்ந்தார்கள். (12)

பவுலின் கடல் பிரயாணத்தில், தேவனுடைய சிறப்பான நோக்கம் நிறைவேறியது என்பதை நான் கண்டேன். பவுலின்மூலமாக, அந்தக் கப்பலில் வேலைசெய்திருந்தவர்கள் தேவனுடைய வல்லமையை அறிந்துகொள்ளவும், அஞ்ஞான மார்க்கத்தினரும்கூட இயேசுவின் பெயரைக் கேட்கவும், பவுலின் போதனையினாலும், அவன் செய்த அற்புதங்களைக் கண்டதினாலும் அநேகர் மாற்றமடைவதற்கும் தேவன் வகைசெய்தார். வைராக்கியத்துடனும், பரிசுத்தஆவியின் வல்லமையுடனும் பவுல் இயேசுவைப்பற்றியும், அவனது அனுபவத்திலிருந்த ஆர்வமிக்க சம்பவங்களைப்பற்றியும் பிரசங்கித்து, இயேசுதான் தேவகுமாரன் என்ற மனஉணர்த்துலை அவர்கள்மீது பிணைத்தபோது, அவனது பகுத்தறிவு வாதத்தினால் அரசர்களும் ஆளுநர்களுங்கூட ஈர்க்கப்பட்டிருந்தனர். (13) ★

# 43

# இரத்தசாட்சிகளான இருவர்! பவுல்—பேதுரு!!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 315–319)**
**திருவசன ஆதாரம் : அப்போஸ்தலர் 4:6–10**

பவுலின் பணி புறஜாதியினருக்குச் சுவிசேஷத்தைச் சுமந்து செல்லுவதாக இருந்தபோது, பேதுரு யூதர்களுக்கிடையில் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருந்தான். எனவே அவர்களிருவரும் பல வருடங்களாக வெகுதூரமாகப் பிரிந்திருந்தனர். ஆனால் தெய்வீக ஏற்பாட்டினால், இருவருமே உலகத்தின் மாநகரங்களில் கிறிஸ்துவுக்காகச் சாட்சிகூறவேண்டியவர்களாக இருந்து, அதன் மண்ணில் பரிசுத்தவான்கள் இரத்தசாட்சிகள் ஆகியோரின் பெரும் அறுவடைக்காக, இருவரும் தங்களுடைய இரத்தத்தை விதைகளாக விதைக்கவேண்டியவர்களாக, சிந்தவேண்டியவர்களாக இருந்திருந்தனர். (1)

பவுல் இரண்டாவது தடவையாகக் கைதுசெய்யப்படப்போகும் வேளையில், பேதுருவும் கைதுசெய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டிருந்தான். அவன் தனது வைராக்கியத்தினாலும், சுவிசேஷப் பணிக்கு இடையூறுசெய்யும்படி ரோம் நகருக்கு அவனைப் பின்தொடர்ந்த மாயவித்தைக்காரனாயிருந்த சீமோனின் வஞ்சகங்களை வெளிக்காட்டுவதில் வெற்றி அடைந்தவனாக இருந்ததாலும், அவன் குறிப்பாக அதிகாரிகளுக்கு அருவருப்பானவனாக இருந்தான். நீரோ மன்னன் மாயவித்தையில் நம்பிக்கை உள்ளவனாக இருந்து, சீமோனை அந்தப் பணியில் ஈடுபடுத்தியிருந்தான். இதனால் அப்போஸ்தலாகிய பேதுருவுக்கு எதிராக அதிகமாக அவன் தூண்டப்பட்டு இவ்வாறாக அவனைக் கைதுசெய்ய நெருக்கப்பட்டிருந்தான். (2)

பவுலின் முதலாவது சிறையிலிருப்பின்போது, அரச குடும்பத்தின் அங்கத்தினர்களும், சமுதாயத்தில் குறிப்பிடத்தக்கவகையில் மேலானவர்களாக இருந்தவர்களும் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது, பவுலுக்கு எதிரான அந்தப் பேரரசனின் கோபத்தை அதிகப்படுத்தியிருந்தது. இந்தக்

காரணத்திற்காக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் வாய்ப்பு அவனுக்கு அனுமதிக்கப்படாதவிதத்தில், இரண்டாவது தடவையான சிறையிருப்பை மிகவும் கடுமையாக்கினான். மேலும் அவனது வாழ்நாளைக் குறைப்பதற்குப் போதுமான பொய்க் குற்றச்சாட்டுகள் கிடைத்தவுடன் அப்படிச் செய்ய அவன் தீர்மானித்திருந்தான். அப்போஸ்தலனின்மீதான இறுதிகட்ட விசாரணையின்போது, நீரோவின் மனது மிகவும் உணர்த்தப்பட்டதினால் அவனை விடுதலை செய்வது அல்லது ஆக்கினைக்குட்படுத்துவது என்ற இரண்டிலும் ஒரு முடிவை எடுக்கமுடியாதவனாக அவன் இருந்தான். எனவே அந்தத் தண்டனை நிறுத்திவைக்கப்பட்டுமட்டுமே இருந்தது. அந்த முடிவு அறிவிக்கப்பட்டவுடன், பவுல் காலதாமதமின்றி இரத்தசாட்சியின் கல்லறைக்கு அனுப்பிவைக்கப்பட்டான். பவுல் ரோம் நாட்டின் மகனாக இருந்ததினால் அவனைச் சித்திரவதைக்குட்படுத்த முடியவில்லை; எனவே, சிரச்சேதம்பண்ணப்படும்படியான தண்டனையை அவன் அடைந்தான். (3)

பேதுரு ஒரு அயல்நாட்டு யூதனாக இருந்தபடியால், அவன் சவுக்கால் அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படும் தண்டனையை அடைந்தான். பயங்கரமான அவனுடைய மரணத்தின் காரியத்தில் கிறிஸ்துவைப்பற்றிய விசாரணையின்போது, அவரை மறுதலித்த பெரிய பாவத்தை நினைவுகூர்ந்து, அவனுடைய ஆண்டவர் மரித்த மிகப்பெரும் கனம்பெருந்திய அதேவிதத்தில் தான் மரிப்பதற்குத் தகுதியில்லாதவன் என்பது ஒன்றுமட்டுமே அவனது எண்ணமாக இருந்தது. அந்தப் பாவத்தைப்பற்றி பேதுரு உண்மையாக மனம் வருந்தியிருந்து, மந்தையின் ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் மேய்க்கின்ற பணிக்கு ஏற்படுத்தப்பட்டதினால், அவனால் ஒருபோதும் தன்னை மன்னிக்கமுடியவில்லை. பயங்கரமான கடைசிக் காட்சியின் வேதனையைப்பற்றிய எண்ணத்தினால்கூட அவனுடைய துயரம், மனந்திரும்புதல் ஆகியவைகளின் கசப்பைக் குறைக்கமுடியவில்லை. அவனுக்குக் காட்டக்கூடிய அனுகூலமாக, அவன் தலைகீழாகச் சிலுவையில் அறையப்படவேண்டும் என்று அவனது மரணதண்டனையை நிறைவேற்றுபவர்களிடம் கேட்டுக்கொண்டான்; அந்த வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டு, அதேவிதமாக அந்த மாபெரும் அப்போஸ்தலன் மரித்தான். (4)

### பவுலின் கடைசிச் சாட்சி!

பவுல், தான் மரணதண்டனை பெறும் இடத்திற்கு தனிப்பட்ட விதத்தில் நடத்திச் செல்லப்பட்டான். அவனுடைய செல்வாக்கினால் பயமடைந்திருந்த அவனது தண்டனையை நிறைவேற்றுபவர்கள் அவனது மரணத்தின் காட்சியினால்கூட, மனிதர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு

மதமாற்றமடைந்துவிடக்கூடும் என்று பயந்தனர். எனவே அவனது மரணதண்டனை நிறைவேற்றப்படும் இடத்தில், பார்வையாளர்களாக இருப்பதற்கு ஒரு சிலர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவனுடன் செல்வதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த கடினமான சேவகர்களோ அவன் மரணதண்டனைக்கென்று கொண்டுசெல்லப்படும்போதுகூடப் பேசியிருந்த அவனது வார்த்தைகளையும், மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் கண்டு வியந்தனர்! அவனுடைய இரத்தசாட்சிக்கு சாட்சிகளாக இருந்த சிலருக்கு, தன்னைக் கொலைசெய்பவர்களுக்கெதிராக அவன் கொண்டிருந்த மன்னிப்பின் ஆவியும், கடைசிவரை கிறிஸ்துவின்மீதிருந்த அசையாத நம்பிக்கையும், ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாக இருப்பதை மெய்ப்பித்தன. பவுல் பிரசங்கித்திருந்த இரட்சகரை அதற்குப்பின் அநேகர் ஏற்றுக்கொண்டு, தங்களுடைய இரத்தத்தினால் முத்திரையிட்டனர். (5)

பவுலின் வாழ்க்கை அவனது கடைசிநேரம்வரை அவனுடைய வார்த்தைகளிலுள்ள சத்தியத்திற்கு, “இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷங்களை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை; கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படி, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்” (2 கொரிந்தியர் 4:6—10) என்று கொரிந்தியருக்கு எழுதின இரண்டாவது நிருபத்தின் வார்த்தைகளின் வழியாக சாட்சி பகருகிறது. அவனுடைய தகுதி அவனுக்குள் இராமல், அவனுடைய ஆத்துமாவை நிரப்பியிருந்து ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்க்கொண்டுவந்திருந்த தெய்வீக ஆவியின் சமுகத்தால் உண்டாகியிருந்தது. அவன் அறிவித்திருந்த சத்தியத்தை வாழ்ந்துகாட்டியிருந்த அவனது சொந்த வாழ்க்கை, அவனுடைய பிரசங்கத்திற்கும் நடத்தைக்கும் நம்பவைக்கும் வல்லமையைக் கொடுத்திருந்தது. “உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்” (ஏசாயா 26:3) என்று தீர்க்கதரிசி கூறுகிறான். அவனது முகத்திலிருந்து வெளிக்காட்டப்பட்டிருந்த பரலோகத்திலிருந்துண்டான இந்தச் சமாதானம் சுவிசேஷத்திற்காக அநேக ஆத்துமாக்களை வென்றிருந்தது. (6)

அப்போஸ்தலனாகிய அவன் தூரத்திலிருந்த பெரியவைகளை நிச்சயமில்லாதவனாகவோ அல்லது பயத்துடனோ பார்க்காமல், மகிழ்ச்சிமிக்க நம்பிக்கையுடனும் ஏக்கமிக்க எதிர்பார்ப்புடனும் நோக்கியிருந்தான். அவன் இரத்தசாட்சியாக மரிக்கும் இடத்தில் நின்றிருந்தபோது, மரணதண்டனையை நிறைவேற்றுபவனிடமிருந்த பளபளக்கும் பட்டயத்தையோ அல்லது விரைவில் அவனது இரத்தத்தைப் பெற்றுக்கொள்ள இருந்த பசுமையான பூமியையோ அவன் பார்க்காமல், அந்த வேனில்காலநாளில் இருந்த அமைதிமிக்க நீலநிற வானத்திற்கு ஊடாக நித்தியவாசியானவரின் சிங்காசனத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஓ! ஆண்டவரே, நீரே எனது ஆறுதலும் பங்குமா யிருக்கிறீர். எப்பொழுது நான் உம்மைத் தழுவுவேன்? எனக்கும் உமக்கும் இடையிலுள்ள மங்கலான திரை நீக்கப்பட்டு, எப்பொழுது நான் உம்மைக் காண்பேன்? என்பது அவனது மொழியாக இருந்தது. (7)

பவுல் பூமியின்மீது பரலோகத்தின் சுற்றுச் சூழலை உடையவனாக வாழ்க்கை முழுவதிலும் வாழ்ந்திருந்தான். அவனுடன் சம்பந்தப்பட்டிருந்த அனைவரும், கிறிஸ்துவுடனும் தூதர்களின் தோழமையுடனும் கொண்டிருந்த உறவின் செல்வாக்கை உணர்ந்திருந்தனர். கற்பதினால் மட்டுமே உண்டாகாத, தன்னை அறியாத ஒரு பரிசுத்தமான வாழ்க்கையின் செல்வாக்கு, கிறிஸ்தவ மார்க்கத்திற்கு ஆதரவாகக் கொடுக்கப்படும் மிக அதிகமான மனநிறைவை உண்டுபண்ணும் போதனையாக இருக்கிறது. வாதங்கள் பதில்கூற முடியாதவைகளாக இருக்கும்போது, கோபத்தைமட்டுமேகூட எழுப்பிவிடலாம். ஆனால் தெய்வபக்தியுடனுள்ள ஒரு உதாரணம் முற்றிலுமாக எதிர்க்கமுடியாத விதத்திலுள்ள வல்லமையை உடையதாக இருக்கிறது. (8)

அந்த அப்போஸ்தலன் தன்னை நெருங்கிக்கொண்டிருக்கும் தனது பாடுகளைப்பற்றிய பார்வையை இழந்தவனாக, தான் விரைவில் விட்டுச்செல்லவேண்டியிருந்த சீடர்கள், தவறான எண்ணம், வெறுப்பு, உபத்திரவம், ஆகியவைகளைச் சமாளிக்க வேண்டுமே என்ற ஆழமான அக்கறையுள்ளவனாக இருந்தான். அவனுடைய மரணதண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்கு அவனுடன் வந்திருந்த சில கிறிஸ்தவர்களுக்கு, நீதிக்காக உபத்திரவப்படுகிறவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள மிகுந்த விலைமதிப்புமிக்க வாக்குத்தத்தங்களைத் திரும்பக்கூறுவதின்மூலம், அவர்களை பலப்படுத்தவும் தைரியப்படுத்தவும் அவன் செயலாற்றியிருந்தான். சோதிக்கப்பட்டும் விசுவாசமிக்கவர்களாக இருப்பவர்களைப்பற்றிக் கர்த்தர் கூறியிருந்தவைகளில் ஒன்றும் தவறாது என்று அவர்களுக்கு வாக்குறுதி அளித்தான். அவர்கள் எழும்பிப் பிரகாசிப்பார்கள். ஏனெனில்

கர்த்தருடைய ஒளி அவர்கள்மீது எழும்பிப் பிரகாசிக்கும்; கர்த்தருடைய மகிமை வெளிப்படும்போது, அவர்கள் தங்களுடைய அழகிய உடைகளை அணிந்துகொள்ளுவார்கள். பலவிதமான சோதனைகளினாலும் அவர்கள் சிறிது காலத்திற்குப் பாரமிக்கவர்களாக இருப்பார்கள். உலகம் தரும் வசதிகளில்லாமல் சிலகாலம் அவர்கள் அனாதைகளாக இருப்பார்கள். ஆனால் நான் யாரை விசுவாசித்திருக்கிறேன் என்பதை நான் அறிந்திருக்கிறேன் என்று கூறி, அவர்கள் தங்கள் இருதயங்களைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும்; அவருடைய நம்பிக்கைக்கு எவைகளை நான் ஒப்படைத்திருக்கிறேனோ, அவைகளைக் காத்துக்கொள்ள அவர் வல்லவராக இருக்கிறார்; அவருடைய கடிந்துகொள்ளுதல் ஒரு முடிவுக்குவந்து, சமாதானத்தின் மகிழ்ச்சிமிக்க காலையும் பூரணமான அந்த நாளும் வரும். (9)

நமது இரட்சிப்பின் சேனைத்தலைவர் பெரும் கடைசிப் போராட்டத்திற்காகத் தமது ஊழியக்காரனை ஆயத்தம் செய்திருந்தார். கிறிஸ்துவின் பலியினால் மீட்கப்பட்டு, அவரது இரத்தத்தினால் பாவம் கழுவப்பட்டு, அவருடைய நீதியின் ஆடையை அணிந்திருந்த பவுல், அவனுடைய மீட்பரின் பார்வையில் அவனுடைய ஆத்துமா மிகவும் விலையேறப்பெற்றது என்பதை தனக்குள்ளாகவே கண்டிருந்தான். அவனுடைய ஜீவன் கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது. மரணத்தின்மீது வெற்றிகொண்டவரான அவர், அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதைக் காத்துக்கொள்ள வல்லவராக இருக்கிறார் என்று அவன் நம்பியிருக்கிறான். "கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்" (யோவான் 6:40) என்னும் இரட்சகருடைய வாக்குத்தத்தத்தை அவன் மனம் பற்றிக்கொண்டிருக்கிறது. அவனது எண்ணங்களும் நம்பிக்கைகளும் கர்த்தருடைய இரண்டாம் வருகையை மையமாகக்கொண்டிருக்கிறது. கொலைஞனின் வாள் கீழே இறங்கினபோது, அந்த இரத்தசாட்சியின் ஆத்துமாவை மரணத்தின் இருள் சூழ்ந்துகொள்ளவிருந்தபோது, ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் மகிழ்ச்சிக்கு அவனை வரவேற்கப்போகிற ஜீவனளிப்பவரைச் சந்திப்பதற்காக எழும்பும் போது வரும் முதல் எண்ணத்தைப்போன்ற எண்ணங்கள் அவனது கடைசி எண்ணங்களாக எழும்பின. (10)

தேவ வசனத்திற்காகவும் கிறிஸ்துவின்மீதுள்ள சாட்சிக்காகவும் முதிர்வயதான பவுலார் தனது இரத்தத்தைச் சிந்தினபின், இருபது நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. இந்த பரிசுத்தமனிதனுடைய வாழ்க்கையின் இறுதிக்காட்சிகளை வரவிருக்கும் தலைமுறையினருக்காக எந்த ஒரு விசுவாசமிக்க கரமும் எந்த ஆவணத்தையும் எழுதிவைக்கவில்லை. ஆனால் ஆவியின் ஏவுதல் நமக்காக அவனுடைய மரண சாட்சியை

பாதுகாத்து வைத்திருக்கிறது. கிறிஸ்துவுக்காக ஆயிரக்கணக்கானவர்களை அதே தைரியத்தோடு எழும்பச்செய்தும், "ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்; இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்குமாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோத்தேயு 4:6—8) என்கிற அவனது மகிழ்ச்சிமிக்க வெற்றித்தொனியினால் துயரத்தில் மூழ்கியிருக்கும் ஆயிரக்கணக்கான இருதயங்களை எழுப்பிக் கொண்டும், அவனுடைய குரல் ஒரு எக்காளச் சத்தம்போல யுகங்களைக் கிழித்துக்கொண்டும் வந்திருக்கிறது. (11) ★

# 44

# பெரும் மருள விழுகை!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 320—325)**
**திருவசன ஆதாரம் : 2 தீமோத்தேயு 3:12**

எருசலேமின் அழிவைப்பற்றியும் இயேசுவின் இரண்டாம் வருகையின் காட்சிகளைப்பற்றியும் அவர் தமது சீடர்களுக்கு வெளிப்படுத்தினபோது, அவர்களிடத்திலிருந்து அவர் எடுத்துக்கொள்ளப்படும் காலம்முதல் அவர்களுடைய விடுதலைக்காக அவர் வல்லமையுடனும் மகிமையுடனும் திரும்பி வருகின்ற காலம்வரை உள்ள அவருடைய ஜனங்களின் அனுபவத்தைப்பற்றியும் அவர் முன்னுரைத்தார். அப்போஸ்தல சபையின் மீது வீசவிருக்கின்ற புயலையும், இன்னும் எதிர்காலத்திற்குள் ஆழமாகப் பிரவேசித்து, வரவிருக்கின்ற இருண்ட உபத்திரவ காலங்களில் அவர்களுடைய அடியார்களின்மீது வீசவிருக்கும் பாழாக்கும் புயலையும் இரட்சகர் ஒலிவ மலையில் இருக்கும்போது அவரது கண்கள் கண்டன. தேவனுடைய சபைக்கு இந்த உலகத்தின் அதிபதிகள் உண்டுபண்ணக் கூடியவைகளின் பங்கையும் அவர் முன்வைத்தார். அவர்களுடைய இரட்சகர் நடந்துசென்ற அவமானம், நிந்தை, பாடுகள் ஆகியவைகள் நிறைந்த பாதையில் கிறிஸ்துவின் அடியார்களும் நடந்துசெல்லவேண்டும். உலக மீட்பருக்கெதிராக வெடித்த பகைமை, அவரது நாமத்தின்மீது நம்பிக்கை உள்ள அனைவரின்மீதும் வெளிக்காட்டப்பட்டாக வேண்டும். (1)

ஆரம்பகால சபையின் வரலாறு இரட்சகருடைய வார்த்தைகளின் நிறைவேறுதலுக்குச் சாட்சிபகர்ந்தன. கிறிஸ்துவின் அடியார்களின் உருவில் உள்ள கிறிஸ்துவிற்கு எதிராக, பூமி, அந்தகாரம் ஆகியவைகளின் வல்லமைகள் அணி திரண்டுநின்றன. சுவிசேஷம் வெற்றி அடைந்தால், அஞ்ஞான மார்க்கத்தின் ஆலயங்களும் பலிபீடங்களும் அடித்துச் செல்லப்பட்டுவிடும் என்பதை அது முன்னதாகவே கண்டுகொண்டது. எனவே கிறிஸ்தவ மார்க்கத்தை அழிக்கவரும்படி, அது தன் படைகளுக்கு அழைப்பு விடுத்தது. பயங்கரமான உபத்திரவங்கள் எழுப்பிவிடப்பட்டன.

கிறிஸ்தவர்கள் தங்களுடைய உடைமைகளை இழந்தவர்களாக்கப்பட்டு, அவர்களது வீடுகளிலிருந்து விரட்டப்பட்டனர்; வாதிக்கப்பட்டனர்; வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள். (எபிரெயர் 11:36). பெரும் எண்ணிக்கையுள்ளவர்கள் தங்களுடைய சாட்சியைத் தங்களுடைய இரத்தத்தினால் முத்திரையிட்டார்கள். மேன்மக்கள்—அடிமைகள், செல்வந்தர்—தரித்திரர், கற்றோர்—கல்லாதவர் ஆகிய அனைவரும் ஒரேவிதமாக இரக்கமின்றிக் கொலைசெய்யப்பட்டனர். (2)

வன்முறையினால் கிறிஸ்துவின் சபையை அழித்துவிடும் சாத்தானின் முயற்சி வீணானதாக இருந்தது. விசுவாசத்துடன் தரத்தைத் தாங்கி நின்றிருந்தவர்கள், தங்களின் நிலைகளிலிருந்து விழுந்தபோது, இயேசுவின் சீடர்கள் தங்கள் உயிர்களை விட்டிருந்த அந்த மாபெரும் போராட்டம் நிற்கவில்லை. தோல்வியினால் அவர்கள் வெற்றி அடைந்தனர். தேவனுடைய ஊழியக்காரர்கள் கொலைசெய்யப்பட்டனர்; ஆனாலும் அவரது பணி உறுதியுடன் முன்சென்றது. சுவிசேஷம் பரவுவது தொடர்ந்தது; அதைப் பற்றிக்கொள்ளுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது; போய்ச்சேர முடியாதவைகள் என்று கருதப்பட்டிருந்த பிரதேசங்களுக்கெல்லாம் ரோம நாட்டின் மேலிடங்களுக்கூடாகவும் அது நுழைந்துசென்றது. உபத்திரப்படுத்தும்படி வற்புறுத்திக்கொண்டிருந்த அஞ்ஞான அதிபதிகளிடம் ஒரு கிறிஸ்தவன்: நீங்கள் எங்களைக் கொலைசெய்யவாம்; சித்திரவதை செய்யலாம்; ஆக்கினைக்குட்படுத்தலாம்; ... நாங்கள் குற்றமில்லாதவர்கள் என்பதற்கு உங்ளுடைய அநீதி சாட்சியாக இருக்கிறது! உங்களுடைய கொடூரத்தினால் ... உங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்று கூறினான். மேலும் நீங்கள் எங்களை எந்த அளவிற்கு வெட்டிவீழ்த்துகிறீர்களோ, அந்த அளவிற்கு நாங்கள் எண்ணிக்கையில் அதிகமாக வளருகிறோம் என்றும் கூறினான். கிறிஸ்தவர்களின் இரத்தம் விதையாக இருக்கிறது. (3)

ஆயிரக்கணக்கானவர்கள் சிறையிலிடப்பட்டுக் கொலைசெய்யப் பட்டனர். ஆனால் அவர்களுடைய இடங்களை நிரப்ப மற்றவர்கள் எழுந்தனர். தங்களுடைய விசுவாசத்திற்காக இரத்தசாட்சிகளானவர்கள் கிறிஸ்துவுடன் பிணைக்கப்பட்டு அவரால் வெற்றிவீரர்களாகக் கணக்கிடப்பட்டனர். அவர்கள் நல்ல போராட்டத்தைப் போராடி, கிறிஸ்துவின் வருகையின்போது, மகிமையின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் அனுபவித்திருந்த பாடுகள், கிறிஸ்தவர்களை ஒருவருக்கொருவர் சமீபமாகவும் தங்களுடைய மீட்பருடன் சமீபமாகவும் கொண்டுவந்தது. அவர்களுடைய வாழ்க்கையின் உதாரணமும், மரிக்கும்போதிருந்த

சாட்சியும், சத்தியத்திற்கான தொடர் சாட்சியாக இருந்தது. சாத்தானுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருந்தவர்கள், அவனுக்குச் சேவைசெய்வதை விட்டுவிட்டு, கிறிஸ்துவின் கொடியின்கீழ் சேர்ந்துகொண்டனர்! (4)

### அஞ்ஞான மார்க்கத்துடன் சமரசம்!

சாத்தான், தனது கொடியைக் கிறிஸ்தவ சபையில் நாட்டுவதினால் தேவ அரசாங்கத்திற்கெதிரான தனது போரை வெற்றிகரமாக நடத்தத் திட்டம் வரைந்தான். கிறிஸ்துவின் அடியார்களை வஞ்சித்து, தேவனுக்கு பிரியமின்மையை உண்டுபண்ணும்படி அவர்களை நடத்தினால் அப்பொழுது அவர்களுடைய பலம்—வைராக்கியம்—உறுதி ஆகியவைகள் தோற்றுவிடும்; அப்பொழுது அவர்கள் சாத்தானுக்கு எளிதான இரையாக விழுவார்கள் என்று அவன் கருதினான். (5)

வன்முறையினால் அடைந்துகொள்ள முடியாத ஆதாயத்தை, உபாயத்தின் மூலமாக அடைந்துகொள்ளலாம் என்று பெரும் எதிரியானவன் கிரியைசெய்தான். உபத்திரவம் இல்லாமலானது! அதன் இடத்தில் பயங்கரமான—கவர்ச்சிமிக்க—பூமிக்குரிய செழுமையும், உலகப் பிரகாரமான கனமும், மாற்றாக வைக்கப்பட்டன. விக்கிரகாராதனைக்காரர்கள் முக்கியமான மற்ற சத்தியங்களை நிராகரித்திருந்தபோது, கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ளும்படி நடத்தப்பட்டனர். அவர்கள் இயேசுவை தேவகுமாரனாக ஏற்றுக்கொள்ளுவதாகவும், அவருடைய மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளை நம்புவதாகவும் கூறிக்கொண்டனர்; ஆனால் அவர்களிடம் பாவத்தைப்பற்றிய மன உணர்த்துதல் இல்லாமல் இருந்ததுடன், மனந்திரும்புதல் அல்லது இருதயத்தில் மாற்றம் அவசியம் என்பதையும் உணரவில்லை. அவர்கள் தங்களுடைய பங்காகச் சில சலுகைகளைச்செய்து, அனைவரும் கிறிஸ்துவின்மீதுள்ள நம்பிக்கை என்னும் மேடையின்மீது ஒன்றுபடுவதற்காகக் கிறிஸ்தவர்களும் அவர்களது பங்காகச் சில சலுகைகளைக் காட்டவேண்டும் என்றனர். (6)

இப்பொழுது சபை பயங்கரமான ஆபத்தில் இருந்தது. இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சிறைவாசம்—சித்திரவதை—நெருப்பு—வாள் ஆகியவைகள் ஆசீர்வாதமானவைகளாக இருந்தன. கிறிஸ்தவர்களில் சிலர் தங்களால் சமரசம்செய்யமுடியாது என்று உறுதியாக நின்றிருந்தனர். ஆனால் மற்றவர்கள்: அவர்கள் இணங்கினால், அல்லது தங்களுடைய விசுவாசத்தில் உள்ள சில காரியங்களில் மாறுதல் செய்வதற்கு இணங்கி, கிறிஸ்தவ மார்க்கத்தின் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டுள்ளவர்களுடன் ஒன்றுபட்டால், அது அவர்கள் அனைவரும் மொத்தமாக மதம் மாறுவதற்கான

கருவியாக அமையும் என்று காரணம் காட்டினர். விசுவாசமிக்க கிறிஸ்துவின் அடியார்களுக்கு, அது ஆழமான மனவேதனையைத் தருகின்ற ஒரு நேரமாக இருந்தது. அவர்களுடைய விசுவாசத்தைக் கறைப்படுத்தவும், அவர்களுடைய மனங்களை சத்தியவார்த்தையிலிருந்து திருப்பவும், சாத்தான் சபைக்குள் தானாகவே மெல்லமெல்ல உட்புகுந்தான். (7)

இறுதியில் கிறிஸ்தவக் கூட்டத்தின் பெரும்பகுதியினர், தங்களுடைய தரத்தைத் தாழ்த்தவே, கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் அஞ்ஞான மார்க்கத்திற்கும் இடையில் ஐக்கியம் உண்டுபண்ணப்பட்டது. விக்கிரக ஆராதனைக்காரர்கள் மதம்மாறிவிட்டதாகக் கூறிக்கொண்டிருந்தபோதிலும், சபையுடன் ஐக்கியப்பட்டுவிட்டதாகக் கூறிக்கொண்டிருந்தபோதிலும், அவர்கள் இன்னும் தங்களுடைய விக்கிரக ஆராதனைமுறைமையை பற்றிக்கொண்டிருந்து, தங்களுடைய தொழுகையின் பொருட்களாக இருந்த விக்கிரகங்களை இயேசுவாகவும்—மரியாளாகவும்—பரிசுத்தவான்களாகவும்கூட மாற்றியிருந்தனர்; இவ்வாறாக, சபைக்குள் அறிமுகப்படுத்தப்பட்ட விக்கிரக ஆராதனை என்னும் துர்நாற்றமுடைய தீங்கு, அதின் அழிவுக்கேதுவாகிய வேலையைத் தொடர்ந்து செய்திருந்தது. தெளிவில்லாத கோட்பாடுகள், மூடநம்பிக்கைமிக்க ஆச்சாரங்கள், விக்கிரக ஆராதனைச் சடங்குகள் அவர்களுடைய விசுவாசத்திலும் தொழுகையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. கிறிஸ்துவின் அடியார்கள் விக்கிரக ஆராதனைக்காரர்களுடன் ஒன்றுபடவே, கிறிஸ்தவ மதம் கறையுள்ளதாகி, சபை அதின் தூய்மையையும் வல்லமையையும் இழந்துவிட்டது. இந்தப் பொய்த் தோற்றத்தினால் தவறாக நடத்தப்படாத சிலர் தொடர்ச்சியாக இருந்திருந்தனர். அவர்கள் இன்னும் தங்களுடைய மெய்யான பற்றை சத்தியத்தை ஆக்கியோனுக்குக் கொடுத்து, தேவனைமட்டுமே தொழுதிருந்தனர். (8)

தங்களைக் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களுக்கிடையில் எப்போதுமே இரு வகுப்பினர் இருந்துள்ளனர். ஒரு பகுதியினர் இரட்சகரின் வாழ்க்கையைப்பற்றி ஆராய்ந்து தங்களுடைய குறைபாடுகளைச் சீர்செய்து அவரைப்போலாவதற்கு முயலும்போது, அடுத்த வகுப்பினர் அவர்களுடைய தவறுகளை வெளிக்காட்டும் வெளிப்படையான நடைமுறைச் சத்தியங்களை விலக்குகின்றனர். சபை அதின் உன்னதமான நிலையில் இருந்தபோதும்கூட, முற்றிலுமாக உண்மை, தூய்மை, நேர்மை ஆகியவைகளை உடையவர்களைக் கொண்டிருக்கவில்லை. மனப்பூர்வமாகப் பாவத்திற்குள் இருப்பவர்களை சபை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று நமது இரட்சகர் போதித்தார். அப்படி இருந்தபோதிலும், சுபாவத்தில் தவறானவர்களாக இருந்தவர்களையும் அவர் தம்முடன் இணைத்திருந்து,

அவரது போதனைகளின் நன்மைகளையும் உதாரணத்தையும் அவர்கள் கண்டு தங்களுடைய சுபாவத்திலுள்ள தவறுகளைத் திருத்திக்கொள்ள அனுமதித்தார். (9)

ஆனால் ஒளியின் பிரபுவிற்கும் அந்தகாரப் பிரபுவிற்கும் இடையில் ஒற்றுமை இல்லை. அதைப்போலவே அவர்களது அடியார்களுக்கிடையிலும் ஒற்றுமை இருக்கமுடியாது. கிறிஸ்தவர்கள் அஞ்ஞானமார்க்கத்திலிருந்து ஐக்கியப்பட சம்மதித்தபோது, அவர்கள் சத்தியத்தைவிட்டு, மேலும் மேலும் விலகிச் செல்லுகின்ற ஒரு பாதையில் பிரவேசித்தனர். கிறிஸ்துவின் அடியார்களில் பெரும் எண்ணிக்கையில் உள்ளவர்களை வஞ்சிப்பதில் வெற்றியடைந்துவிட்டதற்காக சாத்தான் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான். அதற்குப்பின் அவன், தனது வல்லமையை அவர்கள் அதிகமாக முழு அளவிற்குப் பெற்றுக்கொள்ளும்படியும் தேவனுக்கு உண்மையாக இருப்பவர்களை உபத்திரவப்படுத்தும்படியும் ஏவினான். உண்மையான கிறிஸ்தவ விசுவாசத்தை எப்படி எதிர்ப்பது என்பதை, ஒரு சமயத்தில் சத்தியத்தின் பாதுகாவலாளர்களாக இருந்தவர்களைப்போல மற்றொருவ ராலும் புரிந்துகொள்ளமுடியாது. இந்த மருளவிழுந்துபோன கிறிஸ்தவர்கள், அரை அஞ்ஞான மார்க்கத்தினரான கிறிஸ்தவத் தோழர்களுடன் சேர்ந்துகொண்டு, கிறிஸ்துவின் முக்கியமான கோட்பாடுகளுக்கெதிரான தங்களுடைய யுத்தத்தை நடத்தினார்கள். (10)

ஆசாரிய உடையினால் தன்னை மறைத்துக்கொண்ட வஞ்சகங்களை சபைக்குள் அறிமுகம்செய்திருந்த அருவருப்புக்களுக்கெதிராக உறுதியாக நிற்பதற்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்தவர்கள், ஒரு துணிச்சலான போராட்டத்தை நடத்தவேண்டியது அவசியமாக இருந்தது. விசுவாசத்தின் தரமாக இருக்கும்படி வேதாகமம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மதச் சுதந்திரம் என்னும் கோட்பாடு, மதப்புரட்டு என்று கூறப்பட்டு, வேதாகமத்தை உயர்த்திப்பிடித்திருந்தவர்கள் அனைவரும் வெறுக்கப்பட்டுத் தடைசெய்யப்பட்டிருந்தனர்! (11)

### விசுவாசிகள் விலகிச்செல்லுதல்!

மருள விழுந்துபோன சபையானது தவறுகளிலிருந்தும் விக்கிரக ஆராதனையிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள மேலும் மறுத்ததால், பெரும் கடுமையான நீண்ட போராட்டத்திற்குப்பின், விசுவாசிகளாக இருந்த சிலர், அதனுடனிருந்த உறவைத் துண்டித்துக்கொள்ளுவதென்று முடிவுசெய்தனர். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டுமானால், பிரிவினை முற்றிலுமாக அவசியமானது என்பதை அவர்கள் கண்டனர்.

தங்களுடைய ஆத்துமாக்களுக்கு மரணத்தை உண்டுபண்ணக்கூடியவர்களாக இருந்து, தங்களுடைய பிள்ளைகளின் விசுவாசத்தையும், பிள்ளைகளுடைய பிள்ளைகள் விசுவாசத்தையும் ஆபத்துக்குட்படுத்தும்படியான உதாரணமாக தவறுகளை சகித்துக்கொள்ள அவர்கள் துணியவில்லை. சமாதானத்தையும் ஐக்கியத்தையும் காப்பதற்காக, அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாக இருக்கக்கூடிய, எந்தவிதமான சலுகையையும் செய்வதற்கு—விட்டுக்கொடுக்க அவர்கள் ஆயத்தமாக இருந்தனர். ஆனால் கொள்கையை பலியிட்டு, சமாதானத்தை உண்டுபண்ணுவதைவிட, கொள்கைகள் அருமையான விலைகொடுத்து வாங்கப்பட்டவைகள் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். சத்தியத்தையும் நீதியையும் விட்டுக்கொடுத்துச் சமரசம் செய்வதினால் தான் ஐக்கியம் காக்கப்படமுடியுமென்றால், அதைவிட வேற்றுமைகளும் யுத்ததங்களும்கூட உண்டாகட்டுமே! உறுதியாக நின்றிருந்த அந்த ஆத்துமாக்களின் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டால், தங்களை தேவனுடைய ஜனங்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களின் இருதயங்களில் எழுப்புதல் உண்டானால், அது சபைக்கு மிகவும் நன்மையானதாக இருக்கும். “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” (2 தீமோத்தேயு 3:12) என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிவிக்கிறான். அப்படியானால், உபத்திரவம் பெருமளவுக்கு நித்திரைசெய்துகொண்டிருப்பதுபோல் ஏன் காணப்படுகிறது? அதற்கான ஒரே காரணம் என்னவெனில், சபை தனது தரத்தை உலகத்துடன் இசைந்ததாக ஆக்கிக்கொண்டதும், அதனால் அது எதிர்ப்பைத் துயிலெழச் செய்யாமல் இருக்கிறது என்பதும்தான். தற்காலத்திலுள்ள நமது மதம், கிறிஸ்துவின் நாட்களிலும் அவரது அப்போஸ்தலர்களின் நாட்களிலும் குறிப்பிடப்பட்டிருந்ததுபோன்ற தூய்மையையும் பரிசுத்தமான தன்மையையும் உடையதாக இல்லை. பாவத்துடன் சமரசம்செய்துகொள்ளுகின்ற ஆவியே இதற்குக் காரணம்! தேவனுடைய வார்த்தையிலுள்ள பெரும் உண்மைகளைக் கருதாமலிருப்பதே, இதற்குக் காரணம்! சபையில் ஜீவாதாரமான தெய்வபக்தி இல்லாமலிருப்பதே இதற்குக் காரணம்! கிறிஸ்தவ மார்க்கம் பார்வைக்கு உலகத்துடன் பிரபலமானதாக இருப்பதே இதற்குக் காரணம்! ஆரம்பகால சபையில் இருந்த விசுவாசத்தின் எழுப்புதலும் வல்லமையும் சபையில் உண்டாகட்டும்; அப்பொழுது உபத்திரவம் செய்யும் ஆவியும் உபத்திரவத்தின் நெருப்பும் மறுபடியும் கொழுந்துவிட்டெறியத் தொடங்கும். (12) ★

# 45

# அக்கிரமத்தின் இரகசியம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 326–334)**
**திருவசன ஆதாரம் : 2 தெசலோனிக்கேயர் 2:3,4,7**

மாபெரும் மருளவிழுகையின் பலனாகப் போப்புமார்க்க வல்லமை ஸ்தாபிக்கப்படும் என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாவது நிருபத்தில் முன்னறிவித்திருந்தான். ஏனெனில், “விசுவாசத் துரோகம் முந்திநேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது, அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் எனப்படுவதெதுவோ ஆராதிக்கப்படுவதெதுவோ, அவை எல்லா வற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவனைப்போல் உட்கார்ந்து, தன்னைத்தான் தேவன் என்று காண்பிக்கிறவனாயும்” இருப்பான் என்றும், இது நிகழாதவரை கிறிஸ்துவின் நாள் வராது என்றும் அறிவித்தான். அதற்கும் மேலாக, அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது என்றும் அப்போஸ்தலன் தனது சகோதரரை எச்சரிக்கிறான் (2 தெசலோனிக்கேயர் 2:3,4,7) போப்பு மார்க்கம் முன்னேற்றமடைவதற்கான ஆயத்தமாக, தவறுகள் சபைக்குள் ஊர்ந்துவருவதை ஆரம்பகாலத்திலேயே அவன் கண்டான். (1)

ஆரம்பத்தில் மெல்லமெல்லத் திருட்டளவாகவும் மௌனமாகவும் பலமாகவும், மனிதர்களின் மனங்களைக் கட்டுப்படுத்துவதில் அதிகரித்தபின், வெளியரங்கமாக தேவதூஷணமுமான செயலை அது முன்கொண்டு சென்றது. ஏறத்தாழ உணர்ந்துகொள்ள முடியாதவிதத்தில் அஞ்ஞான மார்க்கத்தின் சம்பிரதாயங்கள் சபைக்குள்ளாக அவைகளின் பாதையைக் கண்டடைந்தன. அஞ்ஞானம் மார்க்கத்தின் பயங்கரமான உபத்திரவத்தைச் சகித்திருந்த சபையில், சமரசம் இசைந்திருத்தல் ஆகியவைகளின் ஆவி சிலகாலத்திற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் உபத்திரவம்செய்யப்படுதல் நின்றுபோனபின், கிறிஸ்தவமார்க்கம் அரசர்களின் பிராகாரங்களிலும் மண்டபங்களிலும் பிரவேசித்தபோது, அவள்—சபை—

அஞ்ஞானமார்க்க ஆசாரியர்கள் அதிபதிகளுடைய ஆடம்பரத்தையும் பெருமையையும் பற்றிக்கொள்ளுவதற்காக, கிறிஸ்துவுடைய மற்றும் அவரது அப்போஸ்தலர்களுடைய தாழ்மையையும் எளிமையையும் கீழே வைத்துவிட்டது. அவள்—சபை—மனிதக் கொள்கை விளக்கங்களையும் பாரம்பரியங்களையும் தேவன் இருக்கவேண்டிய இடத்தில், அவருக்குப் பதிலாக வைத்தாள். நான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காண்ஸ்டன்டைன் அரசன், பெயரளவில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிக்கொண்டது பெரும் களிகூருதலுக்குக் காரணமாயிற்று. நீதியின் மேலாடையை அணித்துகொண்டு, உலகம் சபைக்குள் நடந்தது. அப்பொழுது அழிவுக்குரிய வேலை வேகமாக முன்னேற்றமடைந்தது. இல்லாமலாகிவிட்டதுபோல் தோற்றமளித்துக்கொண்டிருந்த அஞ்ஞானமார்க்கம் வெற்றி அடைந்தாயிற்று. அவளுடைய ஆவி சபையைக் கட்டுப்படுத்தினது. அவளுடைய கோட்பாடுகள், சடங்காச்சாரங்கள், மூடநம்பிக்கைகள் ஆகியவைகள் கிறிஸ்துவின் அடியார்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களின் விசுவாசத்திலும் ஆராதனைமுறையிலும் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது! (2)

அஞ்ஞான மார்க்கத்திற்கும் கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் இடையில் உண்டான சமரசம் தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டபடி, தன்னைத்தான் உயர்த்துபவனாகவும் தன்னை தேவனென்று காண்பிக்கிறவனாகவும் உள்ள பாவமனுஷனின் முன்னேற்றம் உண்டாவதற்குப் பலனாயிற்று. மிகப் பிரம்மாண்டமான முறையில் உள்ள தவறான மதம் சாத்தானின் வல்லமையின் பெரும் செயலாகும். அவனுடைய சித்தத்தின்படியே உலகத்தை ஆட்சிசெய்வதற்கு அவனைச் சிங்காசனத்தில் உட்காரச்செய்யும் நினைவுச்சின்னமாக அது உள்ளது! உலகப்பிரகாரமான ஆதாயங்களையும் கனத்தையும் பெறுவதற்காக சபை, பூமியிலுள்ள பெரிய மனிதர்களின் ஆதரவையும் தாங்குதலையும் தேடிச்செல்லும்படி நடத்தப்பட்டது. இவ்வாறாக, கிறிஸ்துவை நிராகரித்து, அவள் சாத்தானின் பிரதிநிதியாக இருப்பவனின்—ரோம நாட்டின்—பேராயர் போப்புவின் உறவிற்கு இணங்கும்படி இழுக்கப்பட்டாள். (3)

உலகளாவிய கிறிஸ்துவின் சபைக்குக் காணக்கூடிய தலைவராகப் போப்பு இருக்கிறாரென்பதும், உலகத்தின் சகல பகுதிகளிலுமுள்ள பேராயர்கள், பிஷப்புகளின்மேல் மேலான அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் ரோமன் கத்தோலிக்க சபையின் தலையாய கோட்பாடுகளில் ஒன்றாக உள்ளது. இதற்கும் மேலாகப் போப்பு, தெய்வீகத்தின் பதவிப் பெயரைத் தனக்குச் சூட்டிக்கொண்டார். (4)

சாத்தானின் வஞ்சகங்களையும் வல்லமைகளையும் எதிர்த்து

நிற்பதற்கும் அறிந்துகொள்ளுவதற்கும், வேத வாக்கியங்கள் மனிதர்களைத் தகுதிப்படுத்தும் என்பதை சாத்தான் மிக நன்றாக அறிந்திருந்தான். அவனுடைய தாக்குதல்களை வேதவாக்கியங்களினால்தான் உலக இரட்சகரும்கூடத் தடுத்திருந்தார். “இப்படி எழுதியிருக்கிறதே” என்று கூறிக்கொண்டு, ஒவ்வொரு தாக்குதலின்போதும் அவர்—கிறிஸ்து—நித்திய சத்தியமாகிய கேடயத்தை முன்காட்டினார். எதிராளியின் ஒவ்வொரு கருத்தையும் தேவனுடைய வார்த்தையிலிருந்த ஞானத்தினாலும் வல்லமையினாலும் அவர் எதிர்த்தார். மனிதர்களை அடித்துச்செல்லுகின்ற சாத்தானின் தன்மையை தக்கவைத்துக்கொள்ளவும், ஆக்கிரமிப்புச்செய்யும் போப்பு மார்க்கத்தின் அதிகாரத்தை ஸ்தாபிக்கவும், அவன் அவர்களை வேதவாக்கியங்களைப்பற்றிய அறியாமையில் வைத்தாகவேண்டும். வேதாகமம் தேவனை உயர்த்தி, மனிதனை அவனது உண்மையான நிலையில் வைக்கிறது. எனவே அதின் பரிசுத்தமான சத்தியங்கள் மறைக்கப்பட்டு அமர்த்தப்பட்டாகவேண்டும். இந்தத் தற்கஇயல் ரோமன் கத்தோலிக்க சபையால் அனுசரிக்கப்பட்டிருந்தது. வேதாகமத்தைப் பரப்புவது குற்றமெனக் கூறப்பட்டு, நூற்றுக்கணக்கான வருடங்களாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. மக்கள் அதனை வாசிப்பதிலிருந்தும் அல்லது வீடுகளில் வைத்திருப்பதிலிருந்துங்கூட தடைசெய்யப்பட்டிருந்தார்கள். கொள்கையற்ற குருமார்கள் அதின் போதனைகளை தங்களது நிலையைத் தக்கவைத்துக்கொள்ளுவதற்காக வேதவாக்கியங்களின் போதனைக்கு யூகங்களான விளக்கங்களைக் கொடுத்திருந்தனர். இவ்விதமாக போப்பு, ஏறத்தாழ பூமியின்மீது தேவனின் பதிலாளி என்று உலகமனைத்திலும் உள்ளவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சபையின்மீதும் நாட்டின்மீதும் மேலான அதிகாரத்தை உடையவராக இருந்தார்! (5)

## காலங்களும் பிரமாணங்களும் மாற்றப்பட்டன!

தவறைக் கண்டுபிடிக்கும் கருவி நீக்கப்பட்டுவிடவே, சாத்தான் அவனுடைய சித்தத்தின்படி செயலாற்றினான். போப்புமார்க்கமானது: “காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைக்கும்” (தானியேல் 7:25) என்று தீர்க்கதரிசனம் அறிவித்திருந்தது. இந்த வேலையைச் செய்யும் முயற்சி மெதுவானதாக இருக்கவில்லை. அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மதம் மாறினவர்களுக்கு, அதற்குப் பதிலாக ஒரு வசதியைச் செய்துகொடுக்கவும் பெயரளவில் அவர்கள் கிறிஸ்தவமார்க்கத்தை ஏற்றுக்கொண்டதை முன்கொண்டுசெல்லவும், கிறிஸ்தவ ஆராதனைக்குள் விக்கிரக ஆராதனைசெய்தல், புனிதப் பொருட்களுக்கு ஆராதனைசெய்தல், என்பவைகள் மெதுவாக அறிமுகம் செய்யப்பட்டது. இறுதியில் ஒரு

பொது ஆலோசனைக்கூட்டமானது போப்பு மார்க்கத்தின் இந்த விக்கிரக ஆராதனை முறையை நிலை நாட்டியது. பரிசுத்தக்குலைச்சலாக்கும் இந்த வேலையைப் பூரணப்படுத்துவதற்காக, தேவனுடைய கற்பனையிலிருந்து விக்கிரக ஆராதனையைத் தடைசெய்யும் கற்பனையான—இரண்டாவது கற்பனையை நீக்கிவிடவும், பத்துக் கற்பனைகள் என்னும் எண்ணிக்கையைப் பாதுகாப்பதற்காக, பத்தாவது கற்பனையை இரண்டாகப் பிரிக்கவும் துணிகரம்கொண்டது. (6)

அஞ்ஞான மார்க்கத்திற்கு சலுகைசெய்யும் சாத்தானின் ஆவி, பரலோக அதிகாரத்தை மேலும் மதிக்காமலிருப்பதற்கான பாதையைத் திறந்து, நான்காவது கற்பனையின் ஊடாக இடையில் புகுந்து, நாசம் செய்ய முயன்று, தேவன் ஆசீர்வதித்தும் பரிசுத்தப்படுத்தியிருந்ததுமான பழமையான ஓய்வுநாளை ஒரு பக்கமான வைக்க முயன்று, அதற்குப் பதிலாக (அஞ்ஞானிகளின்) பக்திக்குரிய—சூரியனுடைய நாளைப் பண்டிகை நாளாக ஆசரிக்கும்படி முயற்சிசெய்தது; இந்த மாற்றம் ஆரம்பத்தில் வெளிப்படையாக முயற்சிக்கப்படவில்லை. (7)

முதலாம் நூற்றாண்டில் உண்மையான ஓய்வுநாள் சகல கிறிஸ்தவர்களாலும் ஆசரிக்கப்பட்டிருந்தது. அவர்கள் தேவனுடைய கனத்தின்மீது அக்கறை உள்ளவர்களாக இருந்தனர். அவரது பிரமாணம் மாறாதது என்று நம்பியிருந்து, வைராக்கியத்துடன் அதின் பரிசுத்தத் தன்மையைக் காவல்செய்திருந்தனர். ஆனால் சாத்தான் அவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, அவனது முகவர்களின்மூலமாக, மிகுந்த தந்திரத்துடன் செயலாற்றினான். ஞாயிற்றுக்கிழமையின்மீது மக்களுடைய கவனம் அழைக்கப்படும்படி, அது—கிறிஸ்து உயிர்த்தெழுந்தநாள் என்னும் ஒரு பண்டிகை நாளாகக் கனப்படுத்தப்பட்டது. அன்று மதசம்பந்தமான ஆராதனைகள் நடத்தப்பட்டன. அந்த நாள் ஒரு பொழுதுபோக்கு நாளாகக் கருதப்பட்டிருந்தபோது ஓய்வுநாள் பரிசுத்தமாக ஆசரிக்கப்பட்டிருந்தது. (8)

மேலும் அஞ்ஞானியாக இருந்த காண்ஸ்டன்டைன் அரசன் ரோமப் பேராசு முழுவதிலும், ஞாயிற்றுக்கிழமை ஒரு பொது விடுமுறை நாளாக ஆசரிக்கப்படவேண்டும் என்ற ஒரு அரச கட்டளையை விதித்தான். அவனுடைய மாற்றத்திற்குப் பின்னும் ஞாயிற்றுக்கிழமையைப் பலமாகப் பரிந்துரைசெய்யும் ஒருவனாக அவன் இருந்தான். அத்துடன் அவனது புதிய விசுவாசத்தின்மீதிருந்த பிரியத்தினால், அவனது அஞ்ஞான அரச கட்டளை வற்புறுத்தப்பட்டது. ஆனால் இந்த நாடுகளுக்குக் காட்டப்பட்ட கனத்தினால், கர்த்தருடைய பரிசுத்த நாளாக இருந்த ஓய்வுநாளைத் தடைசெய்வதற்குப் அது போதுமானதாக இருக்கவில்லை. தவறான ஓய்வுநாள் உண்மையான

ஓய்வுநாளுக்குச் சமமானதாக உயர்த்தப்படும்படி அடுத்த ஒரு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதாக இருந்தது. காண்ஸ்டன்டைனின் கட்டளைக்குச் சில வருடங்களுக்குப்பின் ரோம நகரின் ரோமன் கத்தோலிக்கப் பேராயர் ஞாயிற்றுக்கிழமைக்கு கர்த்தருடைய நாள் என்னும் பெயரைச் சூட்டினார். இவ்வாறாக, மக்கள் ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்த தன்மையுடைய ஒரு நாளாகக் கருதும்படி நடத்தப்பட்டனர்; இருந்தபோதிலும், ஆதியான ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டு வந்திருந்தது. (9)

தலைமை வஞ்சகன் (சாத்தான்) அவனது வேலையைப் பூர்த்திசெய்திருக்கவில்லை. அவன் கிறிஸ்தவ உலகத்தை அவனது கொடியின்கீழ் ஒன்று சேர்க்கவும், அவனது பதிலாளியாக இருந்து, கிறிஸ்துவின் பதிலாளி என்று உரிமை பாராட்டியிருந்த அகந்தைமிக்க போரயரின் மூலமாக தனது வல்லமையைச் செயல்படுத்தவும் அவன் தீர்மானித்திருந்தான். அரைகுறையாக மாறியிருந்த அஞ்ஞானிகள், பேராசைமிக்க குருமார்கள், உலகத்தை நேசிக்கும் சபை அங்கத்தினர்கள் ஆகியோரின் மூலமாக அவன் தனது நோக்கத்தை நிறைவேற்றினான். அவ்வப்போது பெரும் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் உலகனைத்திலுமிருந்த சபையின் மதிப்புவாய்ந்தவர்கள் கூடியிருந்தனர். ஏறத்தாழ ஒவ்வொரு ஆலோசனைக் கூட்டத்திலும் தேவன் ஏற்படுத்தியிருந்த ஓய்வுநாள் கொஞ்சங்கொஞ்சமாகக் கீழே தள்ளப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை அதற்கிணையாக உயர்த்தப்பட்டது. இவ்வாறாக, வேதாகம ஓய்வுநாள் யூதமார்க்கத்தின் புனிதச் சின்னமென்றும், அதனை ஆசரிப்பவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருந்த அதே நேரத்தில், அந்த அஞ்ஞானப் பண்டிகை தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்பதாக உயர்த்தப்பட்டது! (10)

அந்தப் பெரும் மாயக்காரன் தன்னைத்தான் உயர்த்துவதில் வெற்றியடைந்தான். "அவன் தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப் படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிற வனாயும்" இருப்பான் (2 தெசலோனிக்கேயர் 2:4). மனித இனம் முழுவதற்கும் எந்தவிதமான தவறுமின்றி மெய்யான ஜீவனுள்ள தேவனைச் சுட்டிக்காட்டியிருந்த அந்த தெய்வீகப் பிரமாணத்தின் கற்பனையை மாற்றுவதற்கு அவன் துணிந்தான். நான்காவது பிரமாணத்தில் தேவன் வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணின சிருஷ்டிகராகக் காட்டப்பட்டு, அதின் மூலமாக தவறான தெய்வங்களிலிருந்து அவர் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கிறார். மனிதனுடைய இளைப்பாறும் நாளாக இருக்கும்படி பரிசுத்தப்படுத்தப்பட்டிருந்த ஏழாம்நாள் படைப்பின் ஒரு நினைவுச்

சின்னமாக இருந்தது. மனிதர்கள் உயிர்வாழ்வதற்கும் தொழுகையின் பக்திக்கும் ஆதாரமான ஜீவனுள்ள தேவனை எப்பொழுதும் மனதின்முன் நிறுத்துவதற்காக அது—ஏழாம்நாள் ஓய்வுநாள் வடிவமைக்கப்பட்டிருந்தது. மனிதர்களைத் தேவனுடைய உறவிலிருந்தும் அவரது கற்பனைக்குக் கீழ்ப்படிவதிலிருந்தும் பிரிக்கும்படி சாத்தான் முயற்சி செய்கிறான். எனவே தேவனைச் சிருஷ்கர் என்று சுட்டிக்காட்டும் கற்பனைக்கெதிராக அவனது முயற்சிகளை அவன் மேற்கொள்ளுகிறான். (11)

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஞாயிற்றுக்கிழமை நடந்ததினால், அந்தநாள் கிறிஸ்தவர்களின் ஓய்வுநாளாக்கப்பட்டுவிட்டதென்று இப்போதும் புரொட்டஸ்டாண்டினர் வற்புறுத்துகின்றனர்; ஆனால் இதற்கான வேதவாக்கிய ஆதாரம் எதுவும் இல்லை. கிறிஸ்துவினாலோ அல்லது அப்போஸ்தலர்களாலோ, அந்த நாளுக்கு அப்படிப்பட்ட கனம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. ஞாயிறு ஆசரிப்பு கிறிஸ்தவர்களின் ஏற்பாடு என்று கூறுவதின் பிறப்பிடமானது அக்கிரமத்தின் இரகசியத்தில் இருக்கிறது. அவனது கிரியை பவுலின் நாட்களிலேயே ஆரம்பமாகியிருந்தது. போப்பு மார்க்கத்தின் இந்தப் பிள்ளையைக் கர்த்தர் எங்கு எப்போது சுவீகாரம் செய்தார்? வேதவாக்கியங்கள் மௌனமாக இருக்கும் இந்தக் காரியத்தின்மீது மதிப்பு உள்ள எந்தக் காரணத்தைக் கொடுக்கமுடியும்? (12)

பதினாறாம் நூற்றாண்டில் போப்பு மார்க்கம் அதனை உறுதியாக ஸ்திரப்படுத்தியது. அதன் வல்லமையின் இருக்கை—அரசனின் நகரம்—ரோமாபுரி என்று குறிக்கப்பட்டது. சபை முழுவதற்கும் ரோமாபுரியின் பேராயர்தான் தலையாயவர் என்று அறிவிக்கப்பட்டது. போப்புமார்க்கத்திற்கு அஞ்ஞானமார்க்கம் இடம் கொடுத்திருந்தது. “வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது” (வெளி. 13:2). இப்பொழுது தானியேல், யோவான் ஆகியோரின் தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப்பட்டிருந்த 1260 வருடப் போப்புமார்க்கத்தினாலான ஒடுக்குதல் ஆரம்பமாயிற்று (தானியேல் 7:25; வெளி 13:5–7). கிறிஸ்தவர்கள் ஒன்று தங்களுடைய நேர்மையை விட்டுவிட்டு போப்புமார்க்கத்தின் சடங்காச்சாரங்களையும் ஆராதனை முறைகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது நிலவறைகளிலும் கழுமரங்களிலும் நெருப்பிலும் அல்லது கோடரியால் வெட்டப்பட்டும் உயிரை இழப்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. “பெற்றோராலும் சகோதரராலும் மற்ற ஜனங்களாலும் சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள். உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள். என் நாமத்தினாலே எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்” என்று இயேசு கூறியிருந்த வார்த்தைகள் நிறைவேறின. (13)

## இருண்ட காலங்கள்!

ரோமன் கத்தோலிக்க சபை வல்லமையை அடைந்துகொள்ளும்படி உயர்த்தப்பட்டது, இருண்ட காலங்களின் ஆரம்பத்தைக் குறித்தது. அவனது வல்லமை அதிகரித்ததும் இருளானது காரிருளாயிற்று. உண்மையான அஸ்திவாரமாக இருந்த கிறிஸ்துவிலிருந்த விசுவாசம் ரோமன் கத்தோலிக்க சபையின் போப்புவுக்கு மாற்றப்பட்டது. பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காகவும் நித்திய இரட்சிப்பிற்காகவும் தேவகுமாரனை நம்புவதற்குப் பதிலாக, அதிகாரத்திலிருந்த போப்புவையும் குருமார்களையும் மக்கள் பார்த்தனர். போப்புதான் அவர்களது மத்தியஸ்தர் என்றும், போப்புவின் மூலமாகவன்றி ஒருவராலும் தேவனைச் சமீபிக்கமுடியாதென்றும், அதற்கும் மேலாக தேவனுக்குப் பதிலாக அவர் நின்றுகொண்டிருக்கிறார் என்றும், அவருக்கு வெளிப்படையாகக் கீழ்ப்படியவேண்டும் என்றும் மக்கள் போதிக்கப்பட்டிருந்தனர். அவர் கூறுபவைகளிலிருந்து விலகிச்செல்லும் விரோதமானவர்களின் சரீரம் ஆத்துமா ஆகியவைகளின்மீது கடுமையான தண்டனையைக் கொடுப்பதற்கு அது காரணமாக இருந்தது. (14)

இவ்வாறாக, மக்களுடைய மனங்கள் தேவனிடத்திலிருந்து திருப்பப்பட்டு, தவறுசெய்யக்கூடிய கொடுமைமிக்க மனிதர்களின்மீது மாற்றப்பட்டது; அதுவுமல்லாமல் இன்னும் அதிகமாக தலைவர்கள் மூலமாகச் செயலாற்றியிருந்த அந்தகாரப் பிரபுவினிடத்திற்கு அவர்களுடைய மனங்கள் திருப்பப்பட்டிருந்தது; பரிசுத்தம் என்னும் ஆடைக்குள் பாவம் மறைத்துவைக்கப்பட்டிருந்தது. வேதவாக்கியங்கள் தாழ்த்தப்பட்டு மனிதன் தன்னைத் தானே மேலானவன் என்று கருதத்தொடங்கும்போது, நாம் ஏமாற்றுதல், வஞ்சகம், கீழ்த்தரமாக்கக்கூடிய அக்கிரமம் ஆகியவைகளையே பார்க்கவேண்டியவர்களாகிறோம். மனிதர்களுடைய கற்பனைகளையும் பாரம்பரியங்களையும் உயர்த்துவதுடன் தேவனுடைய கற்பனையை ஒதுக்கிவைப்பதினால் உண்டாகும் அழிவு வெளிக்காட்டப்பட்டிருந்தது. (15)

## ஆபத்தான நாட்கள்!

அந்த நாட்கள் கிறிஸ்துவின் சபைக்கு ஆபத்தான நாட்களாக இருந்தன. விசுவாசத்தின் தரத்தைத் தாங்கியிருந்த உண்மையானவர்கள் சிலராகமட்டுமே இருந்திருந்தனர். சத்தியம் சாட்சிகளற்றதாக இல்லாமலிருந்தபோதிலும், சிலசமயங்களில் தவறும் மூடநம்பிக்கையும் காணப்பட்டிருந்தது. சுவிசேஷத்தைப்பற்றிய பார்வை இழக்கப்பட்ட அதே சமயத்தில், மதங்களின் வேஷங்கள் பெருகி, கடுமையான விதத்தில் பணம் வசூல்செய்யப்படுவதினால், மக்கள் பாரப்படுத்தப்பட்டிருந்தனர். (16)

மக்கள் போப்புவை அவரது மத்தியஸ்தராகப் பார்ப்பதுமட்டுமின்றி, தங்களுடைய பாவங்களுக்காகத் தங்களுடைய சொந்தக்கிரியைகளின்மீது நம்பிக்கைவைக்கும்படியும் நடத்தப்பட்டிருந்தனர். நீண்ட திருத்தலப் பயணங் கள், பாவப்பரிகாரச் செயல்கள், புனிதப் பொருட்களை வணங்குதல், ஜெப ஆலயக் கட்டிடங்களைக் கட்டுதல், சபைக்குப் பெருந்தொகையைச் செலுத்துதல், ஆகிய இவைகளையும் இவைபோன்ற செயல்களையும், ஆதரவைப் பெறுவதற்காக, தேவன் மனிதனைப்போல முரண்பாடுகளின்மீது கோபப்படுபவராகவும் பரிசளிப்புக்களினாலும் பாவப்பரிகாரச் செயல்களினாலும் சாந்தமடையக்கூடியவராகவும் இருப்பதாக எண்ணிச் செயலாற்றும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தன. (17)

ரோமன் கத்தோலிக்க சபையால் முன்வைக்கப்பட்டிருந்த கோட்பாடு களில் தவறுகள் அதிகரிப்பதை முன்நோக்கிச்சென்ற நூற்றாண்டுகள் சாட்சியாகக்கண்டன. போப்புமார்க்கம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பும்கூட சபை அஞ்ஞான தத்துவ சாஸ்திரிகளின் போதனைகளையும் செல்வாக்கையும் கவனத்தையும் பெற்றிருந்தது. மதமாற்றம் அடைந்துகொண்டதாகக் கூறியிருந்த அநேகர், தொடர்ந்து தங்களுடைய அஞ்ஞான தத்துவங்களை சரியெனப்பற்றிக்கொண்டிருந்து, அதின் ஆராய்ச்சியில் தொடர்ந்திருந்தது மட்டுமன்றி, அஞ்ஞானிகளுக்கு மத்தியில் தங்களுடைய செல்வாக்கை விசாலப்படுத்துவதற்காக அதனை மற்றவர்களின்மீது திணிக்கவும் செய்திருந்தனர். இவ்வாறாக, ஆபத்தான தவறுகள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. இயல்பான மனிதனின் அழியாமை, மரணத்தில் அவன் உணர்வுள்ளவனாக இருத்தல் ஆகியவை, இந்தத் தவறுகளில் முதன்மையானவையாக இருந்தன. ரோமன் கத்தோலிக்க சபை ஏற்படுத்தின இந்தக் கோட்பாடு பரிசுத்தவான்களை நோக்கி விண்ணப்பம் செய்தல், கன்னி மரியாளைத் துதித்தல் ஆகியவைகளுக்கு அஸ்திவாரமிட்டிருந்தது. ஆரம்பகாலத்தில் போப்புமார்க்கத்தின் விசுவாசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்து முடிவுவரைப் பாவமன்னிப்பைப் பெறாதவன், நித்தியகாலமாகத் தண்டனையை அனுபவித்துக்கொண்டே இருப்பான் என்னும் மதப்புரட்டும் இதிலிருந்து உண்டாயிருந்தது. (18)

பின்னர் எளிதில் நம்பிவிடுகின்ற மூடபக்தியுள்ளவர்களைப் பயமுறுத்து வதற்காக, அஞ்ஞான மார்க்கத்தின் கண்டுபிடிப்பாக இருந்து ரோமன் கத்தோலிக்க சபையால் உத்தரிக்கும் ஸ்தலம் என்று பெயரிடப்பட்ட மற்றொரு கண்டுபிடிப்பை அறிமுகப்படுத்தும் பாதை ஆயத்தம்செய்யப்பட்டது. மீளாத நரக தண்டனைக்கு உட்படாத ஆத்துமாக்கள், தங்களுடைய பாவங்களுக்காக உபத்திரவப்படும் ஸ்தலத்தில் தண்டனையை அனுபவித்து,

அங்கே, அவர்களுடைய மாசுமிக்க தன்மையிலிருந்து விடுதலைபெற்றதும், பரலோகத்தில் அனுமதிக்கப்படுவார்கள் என்று—இந்த மதப்புரட்டினால், உத்தரிக்கும் ஸ்தலம் என்று ஒரு இடம் உண்டு என்று உறுதிப்படுத்தியது. (19)

இதற்குமேலும் பயத்தினாலும் பழக்கங்களினாலும் தன்னைச் சார்ந்திருப்பவர்களின் லாபத்தை அடைய அவர்களைத் தகுதிப்படுத்துவதற்கு வேறொரு கற்பனையை உருப்படுத்துவது ரோமன் கத்தோலிக்க சபைக்கு அவசியமாயிற்று. சலுகைகளை வழங்குதல் என்னும் கோட்பாட்டினால், இது பூர்த்திசெய்யப்பட்டது. கடந்த காலம்—நிகழ்காலம்—எதிர்காலம் ஆகியவைகளிலான பாவங்களுக்கு மன்னிப்பும், அவைகளினால் உண்டாகும் வேதனைகள் தண்டனைகளிலிருந்து, போப்புவின் உலகப் பிரகாரமான ஆளுகைக்கு எதிரான போரில் போப்புவின் அணியில் தங்களைச் சேர்த்துக்கொள்ளுகிறவர்களுக்கும் அவரது விரோதிகளைத் தண்டிப்பவர்களுக்கும் அவருடைய ஆவிக்குரிய மேன்மையை மறுப்பவர்களை அழிப்பவர்களுக்கும் பாவமன்னிப்பு வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. சபைக்குப் பணம் கொடுப்பதினால் தங்களைப் பாவங்களிலிருந்து தாங்களாகவே விடுவித்துக்கொள்ளலாம் என்றும், அத்துடன் அக்கினி ஜுவாலையில் வேதனைப்படும் இறந்துபோன அவர்களது நண்பர்களின் ஆத்துமாக்களையும் விடுவிக்கலாம் என்றும் மக்கள் போதிக்கப்பட்டிருந்தனர்! இப்படிப்பட்ட உபாத்திகளின்மூலமாகத் தமக்குத் தலைசாய்க்க இடமில்லாதவராக இருந்தவரின் பிரதிநிதிகள் என்று தங்களைக் கூறிக்கொள்ளுபவர்கள் அவர்களுடைய மேலான வாழ்க்கை நிலையையும் ஆடம்பாரங்களையும் தீய பழக்கங்களையும் தாங்குவதற்காகத் தங்களுடைய கருவூலங்களை நிரப்பியிருந்தனர்! கர்த்தருடைய திருவிருந்து என்னும் வேதாகமச் சட்டமானது திருப்பலி என்னும் விக்கிரக ஆராதனையாக மாற்றம் கொண்டது. போப்பு மார்க்கக் குருமார்கள் அவர்களது அறிவற்ற கேலிக்கூத்தான சடங்கினால், சாதாரணமான அப்பத்தையும் திராட்சரசத்தையும் கிறிஸ்துவின் உண்மையான சரீரமாகவும் இரத்தமாகவும் மாற்றம் செய்வதாகப் போலியாகக் கூறிக்கொண்டனர். தங்களைப் படைத்தவரையே படைக்கும் வல்லமை உள்ளவர்களாகத் தங்களை சொல்லிக்கொள்ளும் தேவதூஷணத்தின்மீது அவர்கள் வெளிப்படையாக உரிமைபாராட்டியிருந்தனர். பரலோகத்தை அவமானப்படுத்தும் இந்தப் பயங்கரமான—கோரமான மதப்புரட்டின்மீது கிறிஸ்தவர்கள் அனைவரும் விசுவாசம்வைப்பதாக ஆணையிடவேண்டுமென்று, மரணதண்டனை வேதனையின் அடிப்படையில் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தனர். (20)

போப்புமார்க்கத்தின் நடுப்பகலானது உலக சன்மார்க்கத்தின் நடு இரவாக இருந்தது! மக்களுக்கு மட்டுமின்றி, குருமார்களுக்கும்கூட வேதவாக்கியங்களைப்பற்றின அறிவானது ஏறத்தாழ இல்லாமல் இருந்தது. பண்டைய பரிசேயர்களைப்போலவே, போப்புமார்க்கத் தலைவர்களும், தங்களுடைய பாவங்களை வெளிக்காட்டியிருந்த ஒளியை வெறுத்திருந்தனர். நீதியின் தரத்தைக் காட்டுகின்ற தேவனுடைய கற்பனை நீக்கப்பட்டுவிடவே, அவர்கள் எல்லையில்லாத வல்லமையை நடப்பித்து, கட்டுப்பாடில்லாமல் தீய பழக்கங்களை நடைமுறைப்படுத்தியிருந்தனர். ஏமாற்றுதல், பேராசை, தீயொழுக்கம் ஆகியவை நிகழ்ந்திருந்தன. செல்வத்தையும் பதவியையும் அடைவதற்காகக் குற்றங்களைச்செய்வதில் மனிதர்கள் பின்வாங்காதவர்களாக இருந்தனர். மிகவும் கீழ்த்தரமான செயல்கள் நடத்தப்படும் காட்சிகளை உடையதாக போப்புமார்கள், குருமார்கள் ஆகியோரின் அரண்மனைகள் இருந்தன. மதச்சார்பற்ற அதிபதிகளும்கூட, சபையின் மேலான அந்தஸ்தில் இருந்தவர்களை சிங்காசனங்களில் உட்கார்ந்திருக்கத் தகுதியற்றவர்கள் என்று அதிலிருந்து நீக்குவதற்கு முயலுமளவிற்கு, ஆளுகைசெய்திருந்த சில பேராயர்கள், கலகங்களை உண்டுபண்ணக்கூடிய விதத்தில், குற்றங்களைப்பற்றி தண்டனைக்குரியவர்களாக இருந்தனர். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கல்வியில் கலைகளில் அல்லது நாகரீகத்தில் முன்னேற்றம் எதுவும் உண்டாகவில்லை. கிறிஸ்தவத்தின்மீது, ஒரு சன்மார்க்க சம்பந்தமானதும் நுண்ணறிவு சம்பந்தமானதுமான பக்கவாதநோய் தாக்கி இருந்தது! (20)

★

# 46

# ஆரம்பகாலத்தில் வாழ்ந்திருந்த சீர்திருத்தவாதிகள்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 335–339)**
**திருவசன ஆதாரம் : சங்கீதம் 68:11**

போப்பு மார்க்கத்தின் மேலாண்மை நிலவியிருந்த நீண்டகாலத்தில், பூமியின்மீது துயரம் படிந்திருந்ததற்கு நடுவில், சத்தியத்தைப்பற்றிய ஒளியை முற்றிலுமாக அணைக்கமுடியாமலிருந்தது. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தராகக் கிறிஸ்து ஒருவர்மட்டுமே இருக்கிறாரென்று, கிறிஸ்துவின்மீது விசுவாசத்தைப் பேணியிருந்து, வாழ்க்கையின் சட்டம் வேதாகமம் ஒன்றில்மட்டுமே இருக்கிறது என்று கருதியிருந்து, உண்மையான ஓய்வுநாளை மகிமைப்படுத்தியிருந்த தேவனுடைய சாட்சிகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இருந்திருந்தனர். இந்த மனிதர்களுக்கு உலகம் எந்த அளவிற்கு அதிகமாகக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை எதிர்காலத்தில் உள்ளவர்கள் ஒருபோதும் அறியமாட்டார்கள். அவர்கள் மதப்புரட்டர்கள் என்று அறிவிக்கப்பட்டு, அவர்களது லட்சியங்கள் வெளியில் தெரியாதவண்ணம் நீக்கப்பட்டிருந்தது. அவர்களது சுபாவம் கேடு உண்டாக்குவதென்று அவதூறு செய்யப்பட்டிருந்தது. அவர்கள் எழுதியவைகள் அடக்கப்பட்டு, தவறாக எடுத்துக்கூறப்பட்டு அல்லது சேதப்படுத்தப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் அவர்கள் உறுதியுள்ளவர்களாக நின்றிருந்து, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தங்களுடைய விசுவாசத்தை வரவிருக்கும் தலைமுறையினருக்கு சுதந்திர வீதம்போல வைக்க, தூய்மையுடன் காத்திருந்தனர். (1)

வேதாகமத்திற்கெதிராக நடத்தப்பட்ட யுத்தம் கசப்பானதாக இருந்ததினால், சில சமயங்களில் ஒருசில வேதாகமங்களே இருந்திருந்தன. ஆனால் தேவனுடைய வார்த்தை முற்றிலுமாக அழிக்கப்படுவதற்குத் தேவன் அனுமதிக்கவில்லை. அதின் சத்தியங்கள் நிரந்தரமாக மறைத்துவைக்கப்பட முடியாததாக இருந்தது. சிறைக்கதவுகளை எளிதில் திறந்து, அதன்

தாழ்ப்பாள்களை இலகுவாக அவிழ்க்க முடிந்திருந்ததுபோல, அவரால் ஜீவ வார்த்தைகளின் விலங்கை எளிதில் அவிழ்க்கமுடியும். மறைந்திருக்கின்ற பொக்கிஷங்களைத் தேடுவதுபோல சத்தியத்தைத்தேடுவதற்கு ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளைச்சேர்ந்த மக்கள் தேவஆவியால் நெருக்கி ஏவப்பட்டனர். தெய்வீக ஏற்பாட்டினால் அவர்கள் வழிநடத்தப்பட்டு, பரிசுத்த வேதாகமங்களின் பரிசுத்தமான பக்கங்களைத் தீவிரமான ஆர்வத்துடன் ஆராய்ந்தனர். அவர்களுக்கு என்னநேர்ந்தாலும், ஒளியை ஏற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். எல்லாக் காரியங்களையும் தெளிவாகப் பார்க்காமலிருந்தபோதிலும், ஆழமாகப் புதைக்கப்பட்டிருந்த சத்தியங்களை உணருவதற்கு, கீழே இருந்த தவறுகள், மூட நம்பிக்கைகள் என்னும் சங்கிலிகளை தகர்த்துக்கொண்டும் இவ்வளவு காலமாக அடிமைகளாக இருந்தவர்களை எழுப்பி, அவர்களது சுதந்திரத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்தும்படியும், பரலோகத்தால் அனுப்பப்பட்ட தூதர்களைப்போல அவர்கள் சென்றிருந்தனர். (2,3)

## சீர்திருத்தத்தின் விடிவெள்ளி!

பல்வேறு நாடுகளிலுமிருந்த மக்களுக்கு அவர்களுடைய தாய்மொழிகளில் வேதவாக்கியங்களை மொழிபெயர்க்கின்ற நேரம் வந்திருந்தது. உலகம் அதின் நடுஇரவைக் கடந்திருந்தது. இருளின் நேரங்கள் கடந்துசென்றுகொண்டிருக்கவே, அநேக நாடுகளில் ஒளி வந்துகொண்டிருக்கும் அதிகாலையின் அடையாளங்கள் தோன்றின. (4)

சீர்திருத்தத்தின் விடிவெள்ளி பதினான்காம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் உதயமாயிற்று. இங்கிலாந்திற்காக மட்டுமாக இராமல், கிறிஸ்தவ சமுதாயம் முழுவதற்குமான சீர்திருத்தத்தைப் பறைசாற்றுபவராக ஜான் விக்ளி∴ப் இருந்தார். தூய்மையாளர்களின் மூதாதையராக அவர் இருந்தார். அவரது காலம் ஒரு பாலைவனச் சோலையாக இருந்தது. (5)

ஒருவருடைய உழைப்பிற்கு பண்பையும் மேலான தன்மையையும் அவருடைய நுண்ணறிவின் திறன் கொடுக்கும் என்பதைக் கர்த்தர் கண்டு, சீர்திருத்தத்தின் பணியை, ஒப்புவிப்பதற்கு அவர் தகுதியானவர் என்பதைப் பார்த்தார். இது அவமதிப்புச்செய்பவர்களின் குரலை மௌனப்படுத்தி, சத்தியத்திற்கு எதிரானவர்கள் அதைப் பரிந்துரைப்பவர்களின் தன்மையை பரிகசித்துச்சிரித்து அவமதிக்கின்ற முயற்சியைத் தடைசெய்தது. விக்ளி∴ப் தமது பள்ளிக் கல்வியில் முதுநிலையை அடைந்தபின், வேதவாக்கியங்களை ஆராய்வதில் பிரவேசித்தார். வேதவாக்கியங்களில் இதற்குமுன் எவைகளை வீணாகத்தேடியிருந்தாரோ, அவைகளை அவர் இப்பொழுது கண்டார்.

இங்கு இரட்சிப்பின் திட்டம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதையும், மனிதனுக்காகப் பரிந்துபேசுபவராகக் கிறிஸ்து ஒருவர்மட்டுமே ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் அவர் கண்டார். மனித பாரம்பரியங்களுக்காக ரோமன் கத்தோலிக்க மார்க்கம் வேதாகமப் பாதைகளைக் கைவிட்டுவிட்டிருந்ததையும் அவர் கண்டார். அவர் கிறிஸ்துவின் ஊழியத்திற்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து, தான் கண்டுபிடித்துள்ள சத்தியங்களை அறிவிக்கத் தீர்மானித்திருந்தார். (6)

வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தது அவரது வாழ்க்கையில் மிகப்பெரும் பணியாக இருந்தது. இதுவரை ஒருபோதும் மொழிபெயர்க்கப்படாமலிருந்த முதலாவதான ஒரு மொழிபெயர்ப்பாக அது இருந்தது. அச்சுப்பதிக்கும் முறை இன்னும் கண்டுபிடிக்கப்படாமலிருந்ததால், வேதாகமப் பிரதிகளைப் அதிகரிப்பதென்பது மெதுவானதாகவும் களைப்பூட்டும் வேலையாகவும் இருந்தது. அப்படியிருந்தபோதிலும், இந்தப் பணி செய்யப்படவே, இங்கிலாந்து மக்கள் தங்களுடைய தாய்மொழியில் வேதாகமத்தைப் பெற்றனர். இவ்வாறாக, இருளைக் குறுக்கும் நெடுக்குமாகக் கிழித்துக்கொண்டு, தேவனுடைய வார்த்தையாகிய ஒளி அதின் பிரகாசமிக்க கதிர்களைப் பரப்பத்தொடங்கியது. பெரும் சீர்திருத்தத்திற்கான ஒரு பாதையை தெய்வீகக் கரம் ஆயத்தம்செய்துகொண்டிருந்தது. (7)

போப்புமார்க்கத்தின் பிடிவாதமான கோட்பாடுகளுக்கு மந்தமாகக் கீழ்ப்படிந்திருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேண்டுகோள், அவர்களது பகுத்தறிவை விழித்தெழச் செய்தது. சமுதாயத்தின் மேல்வகுப்பில் இருந்தவர்கள்மட்டுமே அந்த நாட்களில் எழுத்தறிவுடையவர்களாக இருந்திருந்தனர். வேதவாக்கியங்கள், அவர்களால் மிகுந்த ஆதரவுடன் பெற்றுக்கொள்ளப்பட்டன. கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தினால் உண்டாகும் இரட்சிப்பு, வேதவாக்கியங்களின் தவறின்மைமிக்க தன்மையாகிய, புரொட்டஸ்டாண்டு மார்க்கத்தின் தனிப்பட்ட கொள்கைகளை இப்பொழுது விக்ளி·ப்போதித்தார். வேதாகமங்களை சுற்றுக்கு விடுவதிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் அவருடன் அநேக குருமார்கள் சேர்ந்துகொண்டனர். இந்த ஊழியங்களின் பலனும் விக்ளி·பின் எழுத்துக்களும் இங்கிலாந்து நாட்டின் ஏறத்தாழ பாதி மக்களால் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு மிகப் பெரியதாக இருந்தது. இருளின் இராஜ்ஜியம் நடுங்கினது! (8)

அவருடைய பணியை நிறுத்தவும் அவரை அழிக்கவும் அவரது எதிரிகள்செய்த முயற்சிகள் வெற்றிபெறாதவைகளாக இருந்தன. அவரது அறுபத்து ஓராவது வயதில் அவர் தேவனுடைய பீடத்தில் ஊழியம் செய்திருக்கையில் சமாதானத்துடன் மரணமடைந்தார். (9)

## சீர்திருத்தம் பரவுகிறது!

விக்ளி஀ப்ன் எழுத்துக்களின்மூலமாக பொஹேமியாவைச்சேர்ந்த **ஜான் ஹஸ்** என்பவர் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் அநேக தவறுகளை மறுத்து, சீர்திருத்தத்தின் பணியில் பிரவேசிக்க நடத்தப்பட்டார். ஹஸ், விக்ளி஀பைப் போலவே ஒரு மேன்மைமிக்க கிறிஸ்தவராகவும் கற்றறிந்தவராகவும் இருந்து, சத்தியத்தின்மீது அசையாத பக்தி உடையவராகவும் இருந்தார். வேதவாக்கியங்களை ஆராயும்படி அவர் விடுத்திருந்த வேண்டுகோள்களும் பாதிரிமார்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் சன்மார்க்க நெறியில்லாத வாழ்க்கைகளையும் பற்றிய அவரது வெளிப்படையான குற்றச்சாட்டுகளும், விசாலமாக—பரவலான ஆர்வத்தை உண்டுபண்ணி, மக்களைத் துயிலெழச்செய்தது. தூய்மையான விசவாசத்தை ஆயிரக்கணக்கானவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். இது போப், பேராயர்கள், குருமார்கள், துறவிகள் ஆகியோரின் சீற்றத்தைத் தூண்டிவிடவே, ஹஸ்ஸின்மீதான மதப்புரட்டு என்னும் குற்றச்சாட்டுக்குப் பதில்கூறும்படி அவர் கண்ஸ்டன்ஸ் ஆலோசனைச் சங்கத்தின்முன் தோன்றும்படி அழைக்கப்பட்டார். அவருடைய உயிருக்குப் பாதுகாப்பு, ஜெர்மானியப் பேரரசனால் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் கண்ஸ்டன்ஸ் ஆலோசனைச் சங்கத்திற்கு வருவதினால் அவருக்கு எந்தவிதமான அநீதியும் இழைக்கப்படமாட்டாது என்று போப் நேரடியான வாக்குறுதியும் கொடுத்தார். (10)

சத்தியத்தைத் தாங்கியிருந்த நீண்ட விசாரணைக்குப்பின், ஹஸ் தான் ஒப்புக்கொண்டிருந்த கோட்பாடுகளை மறுப்பது அல்லது மரண தண்டனையை அடைவது ஆகிய இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும்படி வற்புறுத்தப்பட்டார். அவர் இரத்தசாட்சியாக மரிப்பதைத் தெரிந்துகொண்டு, அவரது புத்தகங்கள் நெருப்பில் எரிக்கப்படுவதைப் பார்த்தபின், கட்டிவைக்கப்பட்டு, நெருப்பில் எரிக்கப்பட்டார். போப்பு மார்க்கத்தின் தலைமைப்பீடத்தின் ஊழல்களுக்கு எதிராகத் தனது பக்திவிநயமானதும் விசுவாசமிக்கதுமான மறுப்பை, தேவனுடைய ஊழியக்காரன், அங்கு கூடியிருந்த சபையின் மேன்மைமிக்கவர்களுக்கு முன் கூறினார். அவரது உயிருக்கான பாதுகாப்பைப்பற்றி பொதுஇடத்தில், மிகுந்த பக்திவிநயத்துடன் கொடுக்கப்பட்டிருந்த வாக்குத்தத்தத்தின் வெட்கக்கேடான மீறுதலுடன் நிறைவேற்றப்பட்ட அவரது மரணதண்டனை, ரோமன்கத்தோலிக்க மார்க்கத்தின் நம்பிக்கைத் துரோகமான கொடுமையை உலகம் முழுவதற்கும் எடுத்துக்காட்டினது. சத்தியத்தின் விரோதிகள் அதைப்பற்றி அறியாதவர்களாக இருந்தபோதிலும், அவர்கள் அழிக்கவேண்டும் என்று

வீணாக முயன்றிருந்த காரியத்தை முன்னேறும்படிசெய்துகொண்டிருந்தனர். (11)

உபத்திரவத்தின் சீற்றம் இருந்திருந்தபோதிலும், விக்ளி∴பின் மரணத்திற்குப்பின், அமைதியும் பக்தியும் அக்கறையும்மிக்க பொறுமையுள்ள ஒரு மறுப்புடன் மதவிசுவாசத்தில் நிலவியிருந்த ஒழுக்கக்கேடானவைகளை எடுத்துக்கூறுவது தொடரவேண்டியதாக இருந்தது. அப்போஸ்தலர்களின் நாட்களில் இருந்ததுபோல, கிறிஸ்துவின் காரியத்திற்காக அநேகர் தங்களுடைய உலகப்பிரகாரமான உடைமைகளைத் தாராளமாகத் தியாகஞ்செய்திருந்தனர். (12)

போப்புமார்க்கத்தின் வல்லமையைப் பரவச்செய்வதற்காக வலுவான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் போப்புமார்கள் இன்னும் தங்களைக் கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்று உரிமைபாராட்டிக்கொண்டிருந்தபோது, மக்களுக்கு வெறுப்பை உண்டுபண்ணக்கூடியவிதத்தில் ஊழல்கள் மலிந்ததாக அவர்களது வாழ்க்கைகள் இருந்தன. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டதின் உதவியுடன் வேதாகமங்கள் பரவலாக விநியோகிக்கப்பட்டன. அதினால் போப்பு மார்க்கத்தின் கொள்கைகள் வேதவாக்கியங்களால் தாங்கப்படவில்லை என்பதைக் காண்பதற்கு அநேகர் வழிநடத்தப்பட்டனர்! (13)

சத்தியத்தின் ஒளிவிளக்கைக் கீழே விழச்செய்யும்படி ஒரு சாட்சி வற்புறுத்தப்பட்டபோது, அவனது கரத்திலிருந்து வேறொருவன் அதைப் பற்றிக்கொண்டு, அசையாத தைரியத்துடன் உயர்த்திப் பிடித்திருந்தான். விடுதலையைப் பலனாக உண்டுபண்ணக்கூடிய போராட்டம், தனிமனிதர்கள் சபைகள் ஆகியவைகளில் மட்டுமின்றி, தேசங்களிலுங்கூடத் திறக்கப்பட்டது. (14)

விக்ளி∴பின் காலத்திலிருந்த லோலார்டுகளின் கரத்தைப் பற்றிக்கொள்ளுவதற்கு நூற்றாண்டுகளின் இடைவெளிக்குக் குறுக்காக மனிதர்கள் தங்களுடைய கரங்களை நீட்டியிருந்தனர். லுத்தரின் கீழ், ஜெர்மனியின் சீர்திருத்தம் ஆரம்பமானது. கால்வின் என்பவர் பிரான்ஸ் நாட்டில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். சுவிங்கிளி என்பவர் சுவிட்சர்லாந்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். காலங்காலமாக நித்திரையிலிருந்த உலகம் எழுப்பப்படவே, மதச் சுதந்திரம் என்னும் மந்திர வார்த்தையின் ஒலி நாட்டுக்கு நாடு எழுப்புதலடைந்தது! (15) ★

# 47

# போப்புவை எதிர்த்துப் புரட்சிசெய்த கத்தோலிக்க மதகுரு!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 340–345)**
**திருவசன ஆதாரம் : ரோமர் 1:17**

போப்பு மார்க்கத்தின் இருளிலிருந்து தூய்மையான விசுவாச ஒளிக்குள் நடத்தும்படி அழைக்கப்பட்டிருந்தவர்களுக்கு மத்தியில் மார்ட்டின் லுத்தர் முன்னணியில் நின்றிருந்தார். மத விசுவாசத்திற்கான அஸ்திவாரமாக வேதாகமத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்று ஒப்புக்கொண்ட பெரும் வைராக்கியம், ஆர்வம், பக்தி, தேவனுக்குப் பயப்படுதல் ஆகியவைதவிர வேறொன்றுக்கும் பயப்படாதவராக, அவரது காலத்தின் ஒப்பற்ற மனிதராக அவர் இருந்தார். சபையின் சீர்திருத்தத்திற்கும் உலகம் அறிவூட்டப்படுவதற்கும் அவர்மூலமாக தேவன் பெரும்பணியை நிறைவேற்றினார். (1)

பல்கலைக்கழக நூலகத்தில் ஒருநாள் மார்ட்டின்லுத்தர் புத்தகங்களைச் சோதித்துக்கொண்டிருந்தபோது, லத்தீன் மொழியிலுள்ள ஒரு வேதாகமத்தைக் கண்டுபிடித்தார். இதற்குமுன் அவர் சுவிசேஷத்தின் பகுதிகளைமட்டுமே கேட்டிருந்து, தேவனுடைய வார்த்தைகள் இவைகள் மட்டுமே என்பதுபோல எண்ணியிருந்தார். இப்பொழுது முதல் தடவையாக அவர் முழு வேதாகமத்தையும் பார்த்தார். திகைப்பும் வியப்பும் கலந்தவராக அதின் பரிசுத்தமான பக்கங்களைப் புரட்டினார். வேகமான நாடித்துடிப்புடனும், படபடக்கும் இருதயத்துடனும் அவர் தமக்கென்று ஜீவ வார்த்தைகளை வாசித்தார். ஓ! தேவன் இப்படிப்பட ஒரு வேதாகமத்தை எனக்குச் சொந்தமாகத் தரவேண்டும் என்று வியந்து கூவினார்! பரலோகத்தின் தூதர்கள் அவரது அருகில் இருந்தனர். தேவ சிங்காசனத்திலிருந்து உண்டான ஒளி அவர் புரிந்துகொள்ளும்படி சத்தியத்தின் பொக்கிஷங்களை அவருக்கு வெளிப்படுத்தியது. தேவனை எதிர்ப்பதற்கு அவர் எப்பொழுதும் பயந்திருந்தார். ஆனால் இதற்குமுன் ஒருபோதும் உணர்ந்திராதவிதத்தில்

இப்பொழுது தான் ஒரு பாவியாக இருக்கிறதைப்பற்றிய ஆழ்ந்த மன உணர்த்துதல் அவரைப் பற்றிக்கொண்டது. பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான அக்கறைமிக்க வாஞ்சையும் தேவனுடன் சமாதானத்தைக் காணவேண்டுமென்ற விருப்பமும், கடைசியாக, ஒரு சந்நியாச வாழ்க்கையில் பிரவேசித்து ஒரு தனி அறையிலிருந்து தியானம் செய்யும்படியாக அவரை வழிநடத்தினது. அவரது அன்றாட அலுவல்களிலிருந்து மீதப்படுத்தக்கூடிய ஒவ்வொரு வினாடியையும் சேமித்தும், நித்திரைசெய்யும் நேரத்தைக் குறைத்தும், உணவு உண்ணும் நேரத்தைக் குறைத்தும் வேதாகமத்தை வாசித்தார். மற்றெல்லாவற்றையும்விட தேவனுடைய வார்த்தையை வாசிப்பதில் அவர் மகிழ்ச்சியுள்ளவராக இருந்தார். மடாலயச் சுவரின்மீது சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த ஒரு வேதாகமத்தை அவர் கண்டு அடிக்கடி அதனிடம் சென்றிருந்தார். (2)

லூத்தர் ஒரு குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டு, தனி அறையிலிருந்து விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பதவிக்கு அழைக்கப்பட்டார். இங்கு அவர் வேதாகமத்தை அதின் மூலமொழிகளில் கற்பதில் தன்னை ஈடுபடுத்தினார். வேதாகமத்தைப்பற்றியும் சங்கீதப்புத்தகம், சுவிசேஷங்கள், நிருபங்கள் ஆகியவைகளைப்பற்றியும் அவர் பிரசங்கம் செய்யத் தொடங்கினபோது, அதை மகிழ்ச்சியுடன் கவனித்திருந்த கூட்டத்தினரின் புரிந்துகொள்ளுதலை அது திறந்தது. அவர் வேதவாக்கியங்களில் வல்லமை உள்ளவராக இருந்தார். தேவ கிருபை அவர்மீது தங்கியிருந்தது. அவரது பேச்சுத்திறன் அவரது பேச்சைக் கேட்டிருந்தவர்களின் இருதயங்களைக் கவர்ந்திருந்தது. அவர் தெளிவுடனும் வல்லமையுடனும் சத்தியத்தை முன்வைத்தது, அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மனநிறைவை உண்டுபண்ணியிருந்தது. அவரது ஆழ்ந்த ஆர்வம் அவர்களது உள்ளங்களைத் தொட்டது. (3)

## சீர்திருத்தங்களின் ஒரு தலைவர்!

தெய்வீக ஏற்பாட்டினால் ரோமாபுரியை சந்திக்க முடிவு செய்தார். பிலாத்துவின் படிக்கட்டுகள் என்று அறியப்பட்டிருந்ததின்மீது தங்களின் முழங்கால்களினால் ஏறுபவர்களுக்கு போப்புவால் ஒரு சலுகை வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்தது. லூத்தர் ஒரு நாள் இந்த நியமத்தைச் செய்துகொண்டிருந்தபோது, இடிமுழக்கம் போன்ற குரலில் "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்று திடீரென்று அவரிடம் கூறுவதுபோல் கேட்கப்பட்டது. அவர் வெட்கத்துடனும் வெறுப்புடனும் குதித்தெழுந்து நின்று, அவருடைய இந்தத் தவறான காட்சியிலிருந்து ஓடினார். அந்த வேதவாக்கியம் அதின் வல்லமையை அவரது ஆத்துமாவிலிருந்து ஒருபோதும் இழக்கவில்லை.

அந்த நேரத்திலிருந்து, இரட்சிப்பிற்காக மனிதனின் கிரியைகளின்மீது நம்பிக்கைவைப்பது தவறு என்பதையும், கிறிஸ்துவின் புண்ணியங்களின் மீது தொடர்ச்சியாக நம்பிக்கை வைப்பதின் அவசியத்தையும், இதற்குமுன் ஒருபோதும் இருந்திராதவிதத்தில் இப்போது மிகவும் தெளிவாகக் கண்டார். போப்பு மார்க்கத்தின்—சாத்தானின் பொய்த் தோற்றங்களுக்கு இனி ஒருபோதும் கூசாதபடி அவரது கண்கள் திறக்கப்பட்டிருந்தன! அவர் தமது முகத்தை ரோமாபுரியைவிட்டுத் திருப்பினபோது, அவர் இருதயத்தினாலும் திரும்பினவராக இருந்தார். அந்த நேரத்திற்குப்பின் போப்பு சபையுடனுள்ள சகல தொடர்புகளையும் துண்டிக்கும்வரை அந்தப் பிரிவினையானது அகலமாகிக்கொண்டே இருந்தது. (4)

லூத்தர் ரோம் நகரத்திலிருந்து திரும்பிவந்தபின், விட்டன்பர்க் பல்கலைக்கழகத்திலிருந்து “டாக்டர் ஆ.்.ப் டிவைனிட்டி” என்னும் பட்டத்தைப் பெற்றார். இப்பொழுது அவர் இதற்குமுன் ஒருபோதும் இருந்திராதவிதத்தில் அவர் நேசித்திருந்த வேத வாக்கியங்களை ஆராய்வதில் ஈடுபடச் சுதந்திரமுள்ளவரானார். அவர் தமது வாழ்நாள் முழுவதிலும் போப்புகள் சொல்லுவதையும் அவர்களது கோட்பாடுகளையும் பிரசங்கிக்காமல், வேதவாக்கியங்களைக் கவனமுடன் ஆராய்ந்து, தேவனுடைய வார்த்தையை நேர்மையுடன் பிரசங்கம் செய்வேன் என்ற ஒரு பக்திவிநயமான பொருத்தனையைச் செய்துகொண்டார். அதற்குப்பின், அவர் ஒரு துறவியாகவோ அல்லது பேராசிரியராகவோ இருக்காமல், வேதாகமத்தை அதிகாரப்பூர்வமாகப் பிரகடனம்செய்பவராகவே இருந்தார். சத்தியத்தின்மீது பசியும் தாகமும் மிக்கதாக இருந்த தேவனுடைய மந்தையைப் போஷிக்கும் ஒரு மேய்ப்பன் என்று அவர் அழைக்கப்பட்டிருந்தார். பரிசுத்த வேதவாக்கியங்களைச் சார்ந்துள்ள கோட்பாடுகளைத்தவிர வேறு கோட்பாடுகளைக் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் பெற்றுக்கொள்ளக்கூடாது என்று அவர் உறுதியாக அறிவித்தார். இந்த வார்த்தைகள் போப்பு மார்க்கத்தின் அஸ்திவாரத்தையே தாக்கியது. அவைகள் சீர்திருத்தத்தின் ஜீவாதாரக்கொள்கைகளை உடையவைகளாக இருந்தன. (5)

லூத்தர் இப்பொழுது சத்தியத்தின் ஒரு மாவீரனாக தைரியத்துடன் தமது பணியில் பிரவேசித்தார். அக்றையும் பக்திவிநயமுமிக்க எச்சரிப்புடன் அவரது குரல் இப்பொழுது பிரசங்கப்பீடத்திலிருந்து கேட்கப்பட்டது. பாவத்தின் தாக்குதல்மிக்க சுபாவத்தை அவர் மக்கள் முன்வைத்து, மனிதனால், அவனது சொந்தக் கிரியைகளினால், பாவத்தின் குற்றத்தைக் குறைப்பதற்கும் தண்டனையிலிருந்து தப்பிச்செல்லுவதற்கும் ஒருபோதும் முடியாது என்று அவர்களுக்குப் போதித்தார். தேவனிடத்திற்கு மனந்திரும்புவதும்

கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தையும்தவிர வேறெதுவும் பாவியை இரட்சிக்காது; கிறிஸ்துவின் கிருபையை விலைக்கு வாங்கமுடியாது; அது ஒரு இலவசமான ஈவு; பாவமன்னிப்புக்காகப் பொருட்களை வாங்காமல், சிலுவையில் அறையப்பட்ட மீட்பரைமட்டுமே பாருங்கள் என்று அவர் ஜனங்களுக்கு ஆலோசனை கூறினார். தாழ்மையினாலும் பாவப்பரிகாரச் செயலினாலும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வீணாக வகைதேடியிருந்த அவரது வேதனைமிக்க அனுபவத்தை அவர்களிடம் விவரித்து, தன்னைத்தான் பார்ப்பதைவிட்டுவிட்டு கிறிஸ்துவை நம்பினதினாலேயே அவர் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றுக்கொண்டதாகக் கூறினார். (6)

ஜெர்மனி முழுவதிலுமிருந்த சிந்தனையாளர்களின் மனங்களை லூத்தரின் போதனைகள் கவர்ந்தன. அவரது பிரசங்கங்களிலிருந்தும் எழுத்துக்களிலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்களை எழச்செய்யவும் ஒளிப்படுத்தவும் ஒளிக்கதிர்கள் புறப்பட்டுச்சென்றன. சபை இதுவரை பிடித்துவைத்திருந்த உயிரற்ற சம்பிரதாயங்களின் இடத்தை ஜீவனுள்ள விசுவாசம் பிடித்துக்கொண்டது. ரோமன் கத்தோலிக்க சபையின் மூடநம்பிக்கைகளின்மீது, மக்கள் நாள்தோறும் நம்பிக்கை இழந்துகொண்டிருந்தனர். தவறான எண்ணங்களாகிய தடைகள் விலகிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு கோட்பாட்டையும் ஒவ்வொரு உரிமையையும் சோதித்திருந்த தேவனுடைய வார்த்தை, மக்களுடைய இருதயங்களை ஊடுருவிச் செல்லும் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைப்போலிருந்தது. எங்கும் எழுப்புதலும் ஆவிக்குரிய முன்னேற்றமும் காணப்பட்டிருந்தது. அநேக காலங்களாக அறியப்படாமலிருந்த நீதியைப்பற்றிய பசியும் தாகமும் எங்கும் காணப்பட்டிருந்தது. மனிதச்சடங்குகளையும் மனித மத்தியஸ்தத்தையும் பார்க்கும்படி இவ்வளவு காலமாகத் திருப்பிவிடப்பட்டிருந்த மக்களுடைய கண்கள், இப்பொழுது பாவத்திற்கான வருத்தத்துடனும் விசுவாசத்துடனும் கிறிஸ்துவையும் சிலுவையிலறையப்பட்ட அவரையே நோக்கும்படியும் திருப்பப்பட்டிருந்தன. (7)

கிறிஸ்தவ உலகத்திலிருந்த ஒவ்வொரு நாட்டிற்கும் அந்த சீர்திருத்தவாதியின் எழுத்துக்களும் கோட்பாடுகளும் பரவிக்கொண்டிருந்தன. அந்தப் பணி சுவிட்சர்லாந்துக்கும் ஹாலந்துக்கும் பரவியது. அவரது எழுத்துக்களின் பிரதிகள் பிரான்சுக்கும் ஸ்பெயினுக்கும் சென்றன. இங்கிலாந்தில் அவருடைய போதனைகள் ஜீவ வார்த்தையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டன. பெல்ஜியம், இத்தாலி ஆகிய நாடுகளுக்கும் சத்தியம் பரவியது. மரணத்தைப் போலிருந்த மயக்கத்திலிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் மகிழ்ச்சிக்கும் விசுவாச வாழ்க்கையின்மீதுள்ள நம்பிக்கைக்கும் எழுந்துகொண்டிருந்தனர். (8)

**ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து லூத்தர் பிரிகிறார்!**

ரோமன் கத்தோலிக்க சபை லூத்தரை அழிக்கும் தீர்மானத்துடன் இருந்தது. ஆனால் தேவன் அவரது பாதுகாப்பாக இருந்தார். மடாலயங்கள் குடிசைகள் அரசர்களின் அரண்மனைகள் ஆகிய எங்கும் அவரது கோட்பாடுகள் கேட்கப்பட்டிருந்தன. அவரது முயற்சிகளைத் தாங்கிட மேன்மையான மனிதர்கள் எழுந்துகொண்டிருந்தனர். (9)

கிறிஸ்தவ சீர்திருத்தத்தின் சார்பில் ஜெர்மனியின் பேரரசனுக்கு அனுப்பின மேல்முறையீட்டில் போப்புவைப்பற்றி: "எந்த ஒரு பேரரசனும் தனக்குச் சமமாக இல்லை என்னும் விதத்தில் தன்னைக் கிறிஸ்துவின் பதிலாளி என்று காட்டிக்கொள்ளும் மனிதனைப் பார்ப்பது பயங்கரமான காரியமாக உள்ளது. இது தரித்திரராக இருந்த இயேசுவைப்போலவோ அல்லது தாழ்மையான பேதுருவைப்போலவோ இருக்கிறதா? போப்பு—உலகத்தின் ஆண்டவன் என்று அவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். யாருடைய பிரதிநிதி என்று தன்னைக் சொல்லிக்கொள்ளுகிறார்களோ அந்த கிறிஸ்து, 'என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல' என்று கூறினார். பதிலாளியாக இருப்பவரின் ஆளுகை தனக்கு மேலதிகாரியாக இருப்பவரையும் கடந்து பரவுமா?" என்று எழுதினார். (10)

பல்கலைக்கழகங்களைப்பற்றி: "அவர்கள் பரிசுத்த வேதவாக்கியங் களை விளக்குவதற்கு விழிப்புடன் உழைக்காவிட்டால், அவைகளை வாலிபர்களின் இருதயங்களில் பொறிப்பதற்குத் தவறிவிட்டால், பல்கலைக்கழகங்கள் நரகத்தின் வாசல்களாக இருக்கும் என்பதை மெய்ப்பிக்கும் என்று கூறுவதில் அச்சமுடையவனாக இருக்கிறேன். வேதவாக்கியங்கள் எங்கு முதலிடமாக ஆளுகை செய்யவில்லையோ, அந்த இடத்தில் ஒருவரும் தங்களுடைய பிள்ளைகளை வைக்கக்கூடாது என்று நான் ஆலோசனை கூறுகிறேன். வேதவாக்கியங்களுடன் ஓய்வில்லாதவிதமாக ஈடுபடாமல் எந்த அமைப்புக்களில் மனிதர்கள் இருக்கிறார்களோ, அந்த இடம் கறைபடிந்ததாகத்தான் இருக்கும்" என்றார். (11)

இந்த மேல்முறையீடு ஜெர்மனி முழுவதிலும் விரைவாகச் சுற்றுக்கு விடப்பட்டு மக்களின்மீது தனது வல்லமைமிக்க சொல்வாக்கைச் செயலாற்றியது. சீர்திருத்தத்தின் தரத்தைச் சூழ்ந்துநிற்கும்படி நாடு முழுவதும் எழுப்பப்பட்டது. லூத்தரின் எதிரிகள் அவரைப் பழிவாங்கவேண்டுமென்ற பற்றியெரியும் விருப்பத்துடன் லூத்தருக்கெதிரான முடிவான நடவடிக்கையை எடுக்கும்படி போப்புவை வற்புறுத்தினர். உடனடியான அவருடைய கோட்பாடுகள் குற்றப்படுத்தப்பட்டுள்ளது என்னும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. சீர்திருத்தவாதிக்கும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் அவர்கள் தங்கள்

கொள்கைகளை மறுப்பதற்கு அறுபது நாட்கள் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதற்குள்ளாக அவர்கள் மறுக்காவிட்டால், அவர்கள் அனைவரும் புறம்பாக்கப்படவேண்டியவர்களாக இருந்தனர். (12)

போப்புவின் கட்டளை லுத்தரை அடைந்தபோது, அவர் அதனை "நான் பக்தியற்றதாகவும் தவறானதாகவும் அவமதித்துத் தாக்குகிறேன்" என்று கூறினார். "அங்கு கிறிஸ்துதாமே ஆக்கினைக்குட்படுத்தப்பட்டார்; நல்ல காரியங்களுக்காக இப்படிப்பட்ட தீமைகளைச் சகித்துக்கொள்ளுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்; பெரும் சுயாதீனத்தை நான் ஏற்கனவே எனது இருதயத்தில் உணருகிறேன்; ஏனெனில், முடிவில் போப்புதான் அந்திக்கிறிஸ்து என்பதையும், அவருடைய சிங்காசனம் சாத்தானின் சிங்காசனமாக இருக்கிறதென்பதையும் நான் அறிந்திருக்கிறேன்" என்றார். (13)

இருந்தபோதிலும், ரோமன் கத்தோலிக்கப் போப்புவின் வார்த்தை வல்லமையுடையதாக இருந்தது. கீழ்ப்படிவதை வற்புறுத்துவதற்குச் சிறை, பட்டயம் ஆகியவை வலிமை உள்ளவைகளாக இருந்தன. சீர்திருத்தவாதியின் பணி முடிவடையப்போவதுபோல் ஒவ்வொரு காரியமும் அடையாளம் காட்டியிருந்தது. போப்புவின் கட்டளைக்குமுன் பலவீனமானவர்களும் மூடநம்பிக்கையுள்ளவர்களும் நடுங்கினார்கள். லுத்தரின்மீது பொதுவான அனுதாபம் இருந்தபோதிலும் சீர்திருத்தத்தின் காரியத்தில் உயிரை ஆபத்திற்குள்ளாக்குவதற்கு உயிர் அருமையானதாக இருந்தது. (14) ★

# 48

# சீர்திருத்தத்தின் முன்னேற்றம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 340–345)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 12:14–17**

ஜெர்மனியின் புதிய பேரரசனாக ஐந்தாவது சார்லஸ் சிங்காசனமேறினான். அவனுக்கு வாழ்த்துக்கைளத் தெரிவிக்கும்படி ரோமச் சபையின் பிரதிநிதிகள் விரைந்துசென்று சீர்திருத்தத்திற்கு எதிராக அவன் தனது வல்லமையைப் பயன்படுத்தவேண்டுமென்று தூண்டினார்கள். ஆனால் மறுபக்கத்தில் சாக்சோனியத் தேர்தல் அதிகாரிக்கு, தன்னை மன்னனாகத் தேர்ந்தெடுத்ததற்காக—தனது கிரீடத்திற்காக ஐந்தாவது சார்லஸ் கடமைப்பட்டிருந்தான். சாக்சோனியத் தேர்தல் அதிகாரி, லுத்தரின்மீது விசாரணைசெய்யாமல் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டான். (1)

ஐந்தாவது சார்லஸ் பேரரசனின்மீதும் ஜெர்மன் நாட்டுச் சட்டசபையின்மீதும் அனைத்துக்கட்சிகளின் கவனமும் திரும்பியது. சார்லஸ் பேரரசனானதும் இந்தச் சட்டசபை வோம்ஸ் நகரில் கூடியது. இந்த தேசியமன்றத்தில் ஆலோசிக்கப்படவேண்டிய அரசியல் கேள்விகளும் மற்ற காரியங்களும் இருந்தன. ஆனால் விட்டன்பர்க் துறவியின் காரியத்துடன் ஒப்பிடும்போது இவை முக்கியமல்லாதவைபோல் தோன்றின. (2)

சார்லஸ் பேரரசன் முன்னதாக தேர்தல் அதிகாரியிடம், அவரோடுகூட லுத்தரை சட்டசபைக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்றும், சகலவிதமான வன்முறைகளிலிருந்தும் அவர் பாதுகாக்கப்படுவாரென்றும் வாதத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பொருள்பற்றி தகுதிவாய்ந்தவர் களிடம் நிபந்தனைகள் இல்லாமல் சுதந்தரமாகப் பேசுவதற்கு அனுமதிக்கப்படுவார் என்றும் உறுதி கூறியிருந்தான். பேரரசனின்முன் தோன்றுவதற்கு லுத்தர் ஆவலுள்ளவராக இருந்தார். லுத்தரின் நண்பர்கள் திகிலும் துயரமுமடைந்தனர். லுத்தருக்கு எதிராக இருந்த பகைமையையும்

தவறான எண்ணத்தையும் அறிந்திருந்த அவர்கள், அவருடைய பாதுகாப்பிற்கான உத்தரவாதம் மதிக்கப்படாமல் போய்விடுமென்று அஞ்சுவதாகவும், அதனால் அவர் தமது உயிரை ஆபத்துக்குள்ளாக்கிக்கொள்ளக்கூடாது என்றும் அவரிடம் கெஞ்சிக்கேட்டார்கள். “என்னைக் குற்றவாளியாக்கவும் மரணத்திற்குட்படுத்தவும் விரும்புவதைத்தவிர நான் வோம்ஸ் நகரத்திற்கு வருவதை போப்பு மார்க்கத்தினர் விரும்பவில்லையென்று அவர் பதில் கூறினார். அது காரியமல்ல. எனக்காக ஜெபிக்காமல், தேவனுடைய வார்த்தைக்காக ஜெபியுங்கள்” என்றார். (3,4)

### சட்டசபைக்கு முன்பாக லூத்தர்!

இறுதியில் லூத்தர் சட்டசபையின் முன் நின்றார். பேரரசன் சிங்காசனத்தில் அமர்ந்திருந்தான். அந்தப் பேரரசில் இருந்த புகழ்மிக்க மனிதர்களால் அவன் சூழப்பட்டிருந்தான். மார்ட்டின் லூத்தர் தனது விசுவாசத்தைக்குறித்துப் பதில்கூறும்படியாக நின்றிருந்த அந்தக் கூட்டத்திற்குமுன்பு, வேறு எந்த மனிதனும் ஒருபோதும் நின்றிருந்ததில்லை. (5)

அந்தத் தோன்றுதலின் உண்மையே, சத்தியத்திற்கான வெற்றியின் அடையாளமாக இருந்தது. போப்பு ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்த ஒரு மனிதன், வேறொரு நியாயசங்கத்தால் விசாரிக்கப்படுவது என்பது போப்புவின் மேலான அரிகாரத்தை மறுப்பதாக இருந்தது. தடையின்கீழிருந்து, மனித உறவுகளிலிருந்து போப்புவால் தடைசெய்யப்பட்டிருந்த அந்தச் சீர்திருத்தவாதிக்கு பாதுகாப்பு வாக்குறுதி செய்யப்பட்டிருந்ததுடன், நாட்டின் மேலானவர்களால் விசாரிக்கப்படுவதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. அவர் பேசக்கூடாது என்று ரோமாபுரி கட்டளையிட்டிருந்தது. ஆனால் கிறிஸ்தவ உலகத்தின் சகல பகுதிகளிலுமுள்ள ஆயிரக்கணக்கானவர்களுக்கு முன்னர் அவர் பேசவேண்டியதாக இருந்தது. பூமியின் பெரியவர்களுக்கு முன் அவர் தேவனுடைய பிரதிநிதியாக, அமைதியும் சாமாதானமும் மிக்கவராக, அதே நேரத்தில் பெரிய அளவிற்கு கம்பீரமும் தைரியமும் மேன்மையுமிக்கவராக அவர் நின்றார். பலாத்காரமும் கட்டக்கடங்காத உணாச்சியும் இல்லாத, தாழ்ந்த தாழ்மையான குரலில் லூத்தர் அவரது பதிலைக் கூறினார். அவரது நடத்தை தனது சுயத்தில் நம்பிக்கையற்றதாகவும் மரியாதை உள்ளதாகவும் இருந்தது. இருந்தபோதிலும், அந்த சபை ஆச்சரியப்படும்விதத்தில் அவர் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் வெளிக்காட்டியிருந்தார். (6)

வெளிச்சத்தை காண்பதற்கு பிடிவாதமாகத் தங்களது கண்களை மூடிக்கொண்டிருந்து, சத்தியத்தினால் மனநிறைவு அடைந்துவிடக்கூடாது என்று தீர்மானித்திருந்தவர்கள் லூத்தருடைய வார்த்தைகளினால்

கோபாவேசமடைந்திருந்தனர். அவர் தனது பேச்சை நிறுத்தியதும் பன்னாட்டுக் கூட்டமைப்பு மன்றத்தில் பேச்சாளராக இருந்தவர் கோபத்துடன்: “உன்னிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு நீ பதில் சொல்லவில்லை; நீ மிகவும் தெளிவாக—மிகச் சரியான பதிலைக்கூறும்படி அவசியப்படுத்தப்படுகிறாய்; நீ கூறியிருந்தவைகளை மறுப்பாயா அல்லது மறுக்கமாட்டாயா?” என்று கேட்டார். (7)

அமைதிமிகுந்தவரும் மகத்துவமிக்கவரும் வல்லமைமிக்கவருமான நீர், என்னிடமிருந்து தெளிவான—எளிமையான—மிகச்சரியான பதிலை கேட்பதினால் நான் ஒன்று கூறுவேன். அது: “அவர்கள் (போப்பு மார்க்கத்தினர்) அடிக்கடி தவறு செய்து, ஒருவருக்கொருவர் முரண்பட்டிருந்தது பகலைப்போலத் தெளிவாக இருப்பதினால், என்னுடைய விசுவாசத்தை என்னால் போப்புவிற்கோ அல்லது ஆலோசனைச்சங்கங்களுக்கோ கீழ்ப்படுத்தமுடியாது! வேத வாக்கியங்களின் சாட்சியில் அல்லது தெளிவான பகுத்தறிவில் நான் மனநிறைவு அடையாதவரை, நான் குறிப்பிட்டிருந்த வார்த்தைகளிலிருந்து நான் மேற்கொள்ளப்படாதவரை, இவ்வாறாக அவைகள் எனது மனச்சாட்சியை தேவனுடைய வார்த்தையினால் கட்டாதவரை, என்னால் பின்வாங்கமுடியாது; நான் பின்வாங்கவும் மாட்டேன். ஏனெனில், தனது மனசாட்சிக்கு விரோதமாகப் பேசுவது என்பது ஒரு கிறிஸ்தவனுக்குப் பாதுகாப்பில்லாதது; நான் இங்கே நிற்கிறேன். என்னால் வேறு ஒன்றும் செய்யமுடியாது; தேவன் எனக்கு உதவுவாராக; ஆமென்” என்றார். (8)

இவ்வாறாக, வேதவாக்கியம் என்னும் அஸ்திவாரத்தின்மீது நீதிமானான அந்த மனிதர் நின்றிருந்தார். பரலோகத்தின் ஒளி அவரது முகத்தைப் பிரகாசிக்கச் செய்திருந்தது. தவறின் வல்லமைக்கெதிராகவும் உலகத்தை ஜெயிக்கிற விசுவாசத்தின் வல்லமையுடனும் அவர் சாட்சி கொடுத்தபோது, அவரது பெரிய தன்மையும், சுபாவத்தின் தூய்மையும், அவரது சமாதானமும், இருதயத்தின் மகிழ்ச்சியும் வெளிக்காட்டப்பட்டது. (9)

உலகத்தின் பயங்கரமான வல்லமைகள் என்னும் அலைகள் அவர்மீது மோதியடித்தபோது, அவர் கன்மலையைப்போன்று உறுதியாக நின்றார். அவரது வார்த்தைகளில் இருந்த எளிமையான வல்லமை, அச்சமற்ற அவரது நடத்தை, அமைதியைப் பேசும் கண்கள், ஒவ்வொரு வார்த்தையிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த மாற்றமுடியாத தீர்மானம் ஆகியவை அந்த மன்றத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. வாக்குத்தத்தங்களினாலோ அல்லது ரோமாபுரியின் கட்டடைகளினாலோ அவரைத் தூண்டிச் செயலாற்றச்செய்வது என்பது முடியாத செயல் என்றும் காணப்பட்டது. (10)

நண்பர்களும் விரோதிகளும் திகைத்து வியக்கும்படி அந்த நேரத்தில் ஏவப்படும்படி, மிகுந்த வல்லமையுடனும் கம்பீரத்துடனுமான லுத்தரின் சாட்சியின்மூலமாகக் கிறிஸ்து பேசியிருந்தார். தேவ ஆவியின் பிரசன்னம் அந்த ஆலோசனைச்சங்கத்தில் பேரரசின் தலைமையானவர்களின் இருதயங்களை உணர்த்திக்கொண்டிருந்தது. லுத்தரின் காரியத்தில் இருந்த நியாயத்தை இளவரசர்களில் அநேகர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டனர். அநேகர் சத்தியத்தைப்பற்றின மனநிறைவைப் பெற்றார்கள். ஆனால் சிலரில் அவர்கள் பெற்றுக்கொண்ட உணர்த்துதல்கள் நீடித்திருக்கவில்லை. தங்களது மன உணர்த்துதலை அந்த நேரத்தில் வெளிப்படுத்தாமலிருந்த வேறொரு வகுப்பினர் அங்கு இருந்திருந்தனர். அவர்கள் வேதவாக்கியங்களைத் தங்களுக்கென்று ஆராய்ந்திருந்து பிற்காலத்தில் சீர்திருத்தத்தை மிகவும் தைரியமாக அறிவித்திருந்தனர். (11)

விவாத மன்றத்திற்குமுன் லுத்தர் தோன்றுவதை தேர்தல் அதிகாரியாக இருந்த ஃப்ரெட்ரிக் என்பவர் மிகுந்த கவலையுடன் எதிர்பார்த்திருந்து, ஆழ்ந்த உணர்வுகளுடன் லுத்தரின் பேச்சை கவனித்தார். அந்த முனைவரின் தைரியம், உறுதி, தன்னடக்கம் ஆகியவைகளில் அவர் மகிழ்ந்து, அவருக்குப் பாதுகாவலராக இருப்பதில் பெருமைப்பட்டுக்கொண்டார். போட்டியிடும் காட்சிகளை அவர் ஒப்பிட்டு சத்தியத்தின் வல்லமையினால் போப்புமார்கள் அரசர்கள் குருமார்கள் ஆகியோரின் ஞானம் இல்லாமலாக்கப்பட்டதை அவர் கண்டார். சகல நாடுகளுக்கும் காலங்களுக்கும் மத்தியில் உணரப்பட்ட தோல்வியைப் போப்புமார்க்கம் பெற்றுக்கொண்டது. (12)

ஒரு காரியத்திலாவது சீர்திருத்தவாதி இணங்கியிருந்தால் சாத்தானும் அவனது சேனையும் வெற்றியடைந்திருக்கும், ஆனால் அவரது அசையாத உறுதி சபையை விடுதலைசெய்கின்ற கருவியாகவும், ஒரு புதியதும் மேன்மைமிக்கதுமான யுகத்தை ஆரம்பிப்பதாகவும் இருந்தது. மத சம்பந்தப்பட்ட செயல்களில் தனக்கென்று சிந்திக்கவும் செயல்படவும் துணிந்த இந்த ஒரு மனிதனின் செல்வாக்கு, சபையையும் உலகத்தையும் தனது சொந்தக்காலத்தில் மட்டுமின்றி எதிர்காலத்திலும் தலைமுறைகளை மாற்றக்கூடியதாக இருந்தது. அப்படிப்பட்ட அனுபவத்திற்கு ஊடாகக் காலத்தின் முடிவில் கடந்துசெல்லவிருக்கும் அனைவரையும் அவரது உறுதியும் மெய்ப்பற்றும் பலப்படுத்தும். மனிதர்களின் ஆலோசனைகளுக்கும் சாத்தானின் பலத்த வல்லமைக்கும் மேலாக, தேவனுடைய வல்லமையும் மகத்துவமும் இடைப்பட்டது. (13)

பாவத்தைக் கடிந்துகொள்ளுவதிலும் சத்தியத்திற்காகப் பரிந்துரைசெய்வதிலும் லுத்தர் ஆர்வமிக்கவராக—வைராக்கிமிக்கவராக

அஞ்சாதவராக தைரியமாக இருப்பதை நான் கண்டேன்! அவர் துன்மார்க்கருக்காகவோ பிசாசுகளுக்காகவோ கவலைப்படவில்லை. அவர்களெல்லாரையும்விட அதிக வல்லமையுள்ளவரான ஒருவர் தன்னுடன் இருப்பதை அறிந்திருந்தார். லுத்தர், வைராக்கியமும் தைரியமும் துணிவும் உள்ளவராக இருந்து, சில நேரங்களில் உச்சகட்டத்திற்கு போய்விடும் ஆபத்தில் இருந்தார். ஆனால் அவருக்கு எதிரான குணமுடைய மெலாங்தன் என்பவரை சீர்திருத்தத்தின் பணிகளை நடத்திச்செல்ல லூத்தருக்கு உதவியாக இருக்கும்படி தேவன் எழுப்பினார். மெலாங்தன் அச்சமும் பயமும் எச்சரிக்கையும் கொண்டவராக இருந்து, அதிக பொறுமையுள்ளவராகவும் இருந்தார். வேதவாக்கியங்களைப்பற்றிய அவரது அறிவு, நிதானம், ஞானம் ஆகியவை மிக மென்மையானவையாக இருந்தன. தேவனுடைய காரியத்தின்மேல் அவருக்கிருந்த நேசம், லுத்தருக்குச் சமமானதாக இருந்தது. இவர்களுடைய இருதயங்கள் ஒன்றாக பிணைந்திருந்தன. மெலாங்தன் பயந்த—பின்தங்கினவராக இருந்தபோது, லுத்தர் அவருக்குப் பெரும் உதவியாக இருந்தார். லுத்தர் அதிவேகம் என்னும் ஆபத்தில் இருந்தபோது, மெலாங்தன் அவருக்கு உதவியாக இருந்தார். (14)

இறைப்பணி லுத்தரிடம் மட்டுமே விடப்பட்டிருந்தால் அப்பணியின்மீது உண்டாயிருக்கக்கூடிய இடையூறுகளை மெலாங்தனின் தொலைநோக்கும் எச்சரிக்கையும் அடிக்கடி தொடர்ந்து தவிர்த்திருந்தன. அதேவிதமாக அது மெலாங்தனிடம் மட்டுமே விட்டுவிடப்பட்டிருந்தால், முன்னோக்கித் தள்ளப்பட்டிருந்திருக்காது. சீர்திருத்தப்பணியை முன் கொண்டு செல்லும் இந்த இரண்டு மனிதர்களையும் தெரிந்தெடுத்த தேவனுடைய ஞானம் எனக்குக் காட்டப்பட்டது! (15)

## இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் ஒளியை அடைகின்றன!

ஜெர்மனியின் மக்களுக்கு மூடியிருந்த ஒரு வேதாகமத்தை லுத்தர் திறந்துகொண்டிருந்தபோது, அதே பணியை இங்கிலாந்து நாட்டுக்காகச் செய்யும்படியாக திண்டேல் என்பவர் தேவ ஆவியால் நடத்தப்பட்டார். அவர் வேதவாக்கியங்களில் அக்கறையுள்ள மாணவராக இருந்து, சத்தியத்தைப்பற்றிய அவரது மன உணர்த்துதலை பயமின்றிப் பிரசங்கம் செய்து, சகல கோட்பாடுகளும் வேதவாக்கியங்களால் சோதிக்கப்படுவதற்குக் கொண்டுவரப்படவேண்டுமென்று வற்புறுத்தினார். அவருடைய ஆர்வம் போப்பு மார்க்கத்தினரிடமிருந்து எதிர்ப்பைக் கொண்டுவந்தது. “போப்புவின் கட்டளைகள் இல்லாதவர்களாக நாம் இருப்பதைவிட, தேவனுடைய கற்பனைகள் இல்லாதவர்களாக இருப்பது மிக நன்றாக இருக்கும்” என்று கற்றறிந்த ஒரு முனைவர் கூறினார். அதற்கு நான் “போப்புவையும்

அவரது சட்டங்களையும் எதிர்த்து நிற்கிறேன்; தேவன் எனக்கு அதிகமான ஆயுளைக் கொடுத்தால், நீங்கள் வேதவாக்கியங்களை அறிந்திருப்பதைவிட, கலப்பையைப் பிடித்துச்செல்லும் ஒரு சிறுவனை அதிகமான வேத வாக்கியங்களை அறியும்படிச் செய்வேன்" என்றார். (16)

புதிய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை அவரது மக்களுக்கு அவர்களது தாய்மொழியில் கொடுக்கவேண்டும் என்று அவர் பேணியிருந்த நோக்கம் இப்பொழுது உறுதிசெய்யப்பட்டு, அவர் உடனே அந்தப் பணியில் தம்மை ஈடுபடுத்தினார். இங்கிலாந்து முழுவதும் அவருக்கெதிராக மூடப்பட்டிருப்பதுபோல் காணப்படவே, அவர் ஜெர்மனியில் அடைக்கலம் தேடத் தீர்மானித்தார். இங்கு புதிய ஏற்பாட்டை ஆங்கில மொழியில் அச்சிட ஆரம்பித்தார். முதலில் மூவாயிரம் புதிய ஏற்பாட்டுப் பிரதிகள் விரைவில் அச்சிடப்பட்டன. அதைத் தொடர்ந்து அதே வருடத்தில் இரண்டாவது பதிப்பும் அச்சிடப்பட்டது. (17)

முடிவில் அவர் தமது விசுவாசத்திற்காக இரத்தசாட்சியின் மரணத்தைச் சந்தித்தார். ஆனால் அவர் ஆயத்தம் செய்திருந்த ஆயுதங்கள் நூற்றாண்டுகள் நெடுகிலும் நமது காலத்தாலுங்கூட மற்ற வீரர்களைப் போர்செய்வதற்குத் தகுதிப்படுத்தின. (18)

ஸ்காட்லாந்து நாட்டில் **ஜான் நாக்ஸ்** என்னும் வீரனைச் சுவிசேஷம் கண்டது. உண்மையான இருதயம் உடையவராக இருந்த இந்த சீர்திருத்தவாதி, மனிதனின் முகத்தைக் கண்டு அஞ்சவில்லை. இரத்தசாட்சியாகும்படி அவரைச் சூழ்ந்த அக்கினி ஜுவாலைகள், அவருடைய வைராக்கியத்தின் வலிமையை அதிகப்படுத்தவே உதவியது. கொடுங்கோலனின் கோடாரி கேடான விதத்தில் அவரது தலைக்கு மேலாக உயர்த்தப்பட்டிருந்தபோது, அவர் தமது கொள்கைகளில் நின்று, விக்கிரக ஆராதனையை இடித்து வீழ்த்துவதற்காக அவருடைய வலது கரத்திலும் இடது கரத்திலும் பலத்த அடிகளைத் தாங்கிக்கொண்டிருந்தார். இவ்வாறாக, ஸ்காட்லாந்து நாடு விடுதலைபெறும்வரையில் அவர் தமது வாக்குத்தத்தத்தைக் காத்துக்கொண்டு, கர்த்தருடைய யுத்தங்களில் போராடியிருந்தார். (19)

இங்கிலாந்து நாட்டில் லாட்டிமர் என்பவர் வேதாகமம் மக்களுடைய தாய்மொழியில் வாசிக்கப்பட்டாக வேண்டும் என்று பிரசங்கபீடத்திலிருந்து முழங்கினார். "பரிசுத்த வேதவாக்கியங்களின் ஆக்கியோன் தேவனாகவே இருக்கிறார். இந்த வேதவாக்கியங்கள் அதன் ஆக்கியோனின் நித்தியத்துவத்திலும் வல்லமையிலும் பங்குபெறுவதாக உள்ளது. அரசனென்றும் இல்லை, பேரரசனென்றும் இல்லை, நீதிபதியென்றுமில்லை;

அனைவரும் அவருடைய பரிசுத்த வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டியவர்களாக உள்ளனர். நாம் மாற்றுப் பாதைகளில் செல்லாதவர்களாக இருப்போமாக. தேவனுடைய வார்த்தை நம்மை நடத்தட்டும்; நாம் நமது முற்பிதாக்களைப் பின்பற்றி நடக்காமல், அவர்கள் எதைச் செய்திருந்திருக்கவேண்டுமோ அதைச் செய்பவர்களாக இருப்போமாக" என்றார். (20)

திண்டேலின் விசுவாசமிக்க நண்பர்களாக இருந்த **பார்ன்ஸ், ஃபிரித்** என்பவர்கள் சத்தியத்தின் பாதுகாப்பாளர்களாக நிற்க எழுந்தனர். **ரிட்லீய்ஸ், கிரான்மர்** ஆகியோர் அவரைப் பின்தொடர்ந்தனர். ஆங்கில நாட்டுச் சீர்திருத்தத்தின் தலைவர்கள் கற்றறிந்த மனிதர்களாகவும் அவர்களில் அநேகர் தங்களுடைய வைராக்கியம் அல்லது பக்திக்காக ரோமன் கத்தோலிக்க சமுதாயத்தால் மிகவும் மதிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். போப்புமார்க்கத்தின் தவறுகளைப்பற்றிய அவர்களது அறிவின் பலன், போப்பு மார்க்கத்தின்மீதான அவர்களது எதிர்ப்பாக மாறினது. பாபிலோனின் இரகசியங்களுடனான அவர்களது அறிமுகம் அவளுக்கு—ரோம மார்க்கத்துக்கு எதிரான அவர்களுடைய சாட்சிகளின் பெரும் வல்லமையாக இருந்தது. (21)

திண்டேல், லாட்டிமர், ஃப்ரித், ரிட்லீய்ஸ் ஆகியோர்களால் பராமரிக்கப்பட்டிருந்த பெரும் கொள்கைகள் பரிசுத்த வேதவாக்கியங்களின் தெய்வீக அதிகாரம் தன்நிறைவு ஆகியவையாக இருந்தன. மதவிசுவாசம் சம்பந்தப்பட்ட காரியங்களில் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்த, போப்புமார்கள் ஆலோசனைச் சங்கங்கள் பிதாக்கள் ஆகியோர் யூகமாக அதிகாரத்தை எடுத்துக்கொண்டு ஆளுகைசெய்வதை அவர்கள் நிராகரித்தனர். வேதாகமம் அவர்களுடைய தரமாக இருந்தது. அவர்கள் எல்லாக் கோட்பாடுகளையும் உரிமைகளையும் அதனிடம் கொண்டுவந்திருந்தனர். இந்தப் பரிசுத்தமான மனிதர்களை, தேவன்மீதும் அவரது வார்த்தைகளின்மீதும் கொண்டிருந்த விசுவாசம் தாங்கியிருந்தது. (22) ★

# 49

# முன்னேறத்தவறியதின் தோல்வி!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 353–355)**
**திருவசன ஆதாரம் : 2 கொரிந்தியர் 2:11**

அநேகர் நினைப்பதுபோல் சீர்திருத்தம் லுத்தருடன் முடிந்துவிடவில்லை. இந்த உலக வரலாற்றின் முடிவுவரை அது தொடர்ந்து செல்லவேண்டியதாக உள்ளது. லுத்தர் தன்மீது பிரகாசிக்கும்படி தேவன் அனுமதித்திருந்த ஒளியை மற்றுள்ளவர்களுக்கும் பிரதிபலிக்கின்ற ஒரு பெரும் பணியை உடையவராக இருந்தார். இருந்தபோதிலும் உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய முழு ஒளியையும் அவர் பெற்றிருக்கவில்லை. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை புதிய ஒளி வேதவாக்கியங்களின்மீது தொடர்ச்சியாக வீசிகொண்டும் புதிய சத்தியங்கள் தொடர்சசியாக வெளியாகிக்கொண்டும் இருக்கின்றன. லுத்தரும் அவரது உடன் வேலையாட்களும் தேவனுக்கென்று ஒரு மேன்மையான பணியைச் செய்திருந்தனர். ஆனால் ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து, அதன் கோட்பாடுகளை நம்பியிருந்து, அதற்காகப் பரிந்துபேசியிருந்த அவர்கள், இந்தத் தவறுகளையெல்லாம் அறிந்தவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியாததாக இருந்தது. ரோமன் கத்தோலிக்க சபையின் விலங்குகளை முறித்து உலகத்திற்கு வேதாகமத்தைக் கொடுப்பது அவர்களது பணியாக இருந்தது. அப்படியிருந்தபோதிலும் அவர்கள் கண்டுபிடிக்கத் தவறியிருந்த முக்கியமான சத்தியங்களும் அவர்கள் மறுக்காமலிருந்த சாவுக்கேதுவான தவறுகளும் இருந்திருந்தன. அவர்களில் அநேகர் போப்புமார்க்கத்தின் மற்ற பண்டிகைகளுடன் சேர்த்து ஞாயிற்றுக்கிழமையையும் ஆசரித்திருந்தனர். அது தெய்வீக அதிகாரத்தையுடையதாக இருக்கிறதென்பதை அவர்கள் உண்மையில் கருதாமலிருந்தபோதிலும், அதனைப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழுகையின் நாளாக ஆசரிக்கவேண்டும் என்று நம்பியிருந்தனர். ஆயினும் அவர்களிலும் நான்காவது கற்பனையின் ஓய்வுநாளை மேன்மைப்படுத்திருந்த சிலர் இருந்தனர்! (1)

புரொட்டஸ்டாண்டுகளாலும் பொதுவாக அறியப்படாமலிருந்த சத்தியத்தையும், நான்காவது கற்பனைக்குள்ள மதிப்பையும் ஓய்வுநாளின் கடமைப்பாட்டையும் மெய்ப்பிக்க நின்றிருந்தவர்களுக்குச் சபையிலிருக்கும் சீர்திருத்தவாதிகளுக்குமிடையில் ஒரு கனமிக்க இடம் கொடுக்கப்படவேண்டும். கிறிஸ்தவ உலகம் முழுவதின்மீதும் தங்கியிருந்த இருளை சீர்திருத்தம் அடித்து விரட்டியபோது, அநேக நாடுகளில் ஓய்வுநாளை ஆசரித்திருந்தவர்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தனர். (2)

சீர்திருத்தம் என்னும் பெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்த மக்கள், லூத்தர் மிகுந்த மேன்மையுடன் பிரவேசித்திருந்த பாதையில் முன்னேறிச் செல்லவில்லை. புதிய சத்தியத்தையும் நீண்டகாலமாகப் பேணப்பட்டிருந்த தவறுகளையும் வெளிக்காட்டுவதற்குச் சில விசுவாசமிக்க மனிதர்கள் வேளாவேளையில் எழும்பியிருந்தனர். ஆனால் கிறிஸ்துவின் நாட்களில் இருந்த யூதர்களைப்போலவும், அல்லது லூத்தரின் காலத்திலிருந்த போப்புமார்க்கத்தினரைப் போலவும் பெரும்பான்மையானவர்கள் தங்களுடைய பிதாக்கள் நம்பியிருந்தவைகளில் நம்பிக்கை உடையவர்களாக இருந்து, தங்களுடைய பிதாக்கள் வாழ்ந்திருந்ததைப்போலவே வாழ்ந்திருந்து, அவைகளில் மனநிறைவுள்ளவர்களாக இருந்தனர். எனவே மறுபடியும் மதம் என்பது சம்பிரதாயமாக மாறிச் சீரழிந்துபோனது. தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நடப்பதற்குத் தொடர்ந்திருந்து அவைகளைப் பராமரித்துப் பேணியிராததால், லூத்தரின் காலத்தில் ரோமன் கத்தோலிக்க சபையில் சீர்திருத்தம் உண்டானதுபோல புரொட்டஸ்டாண்டு சபைகளில் பெரும் சீர்திருத்தத்தின் அவசியம் ஏறத்தாழ உண்டாகுமளவிற்கு சீர்திருத்தத்தினால் உண்டான ஆவி படிப்படியாகச் செத்துப்போயிருந்தது. ஆவிக்குரிய அதே மயக்கம், மனிதர்களின் கருத்துக்கான அதேவிதமான மதிப்பு உலகப்பிரகாரமான அதே ஆவி தேவனுடைய வார்த்தைகளுக்குப் பதிலாக அதேவிதமான மனிதக்கொள்கைகளின் ஏற்பாடு ஆகியவைகள் இருந்திருந்தன. மதம் என்னும் போர்வையின் அடியில் அகந்தையும் உதாரித்தனமும் விருப்பத்துடன் வளர்க்கப்பட்டிருந்தன. உலகத்துடன் சேர்ந்துவிட்டதினால் சபைகள் கறைபடிந்தவைகளாயின. இவ்விதமாக, லூத்தரும் அவரது உடன் வேலையாட்களும் எந்தக் கொள்கைகளுக்காக உழைத்தும் பாடனுபவித்தும் இருந்தனரோ அவைகளின் தரம் தாழ்த்தப்பட்டன! (3)

உபத்திரவத்தின்மூலமாக சத்தியத்தை நொறுக்குவதில் தோல்வி அடைந்ததைக் கண்ட சாத்தான் ரோமன் கத்தோலிக்க சபை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்த பெரும் மருளவிழுகைக்கு நடத்தியிருந்து, சமரசம் என்னும்

திட்டத்தை நடப்பிக்க மறுபடியும் செயல்பட்டான். இப்பொழுது கிறிஸ்தவர்கள் அஞ்ஞான மார்க்கத்தினருடன் உறவாடாமல், எவர்கள் இந்த உலகத்தின் தேவனைத் தொழுதுகொள்ளுவதினால் தங்களை உண்மையாகவே விக்கிரக ஆராதனைக்காரர்கள் என்பதை மெய்ப்பித்திருக்கிறார்களோ அவர்களுடன் உறவாடினார்கள். (4)

சாத்தானால் இதற்குமேல் வேதாகமத்தை விலக்கிவைக்க முடியவில்லை. அது அனைவருக்கும் கிடைக்கக்கூடிய நிலையில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் தங்களுக்கென்று தாங்களே சத்தியத்தைக் கற்பதற்காக வேத வாக்கியங்களை ஆராயாமல், தவறான விளக்கங்களையும் பலமில்லாத கொள்கை விளக்கங்களையும் ஏற்றுக்கொள்ளும்படியாக ஆயிரக்கணக்கானவர்களை நடத்தினான். அவன் வேதாகமக் கோட்பாடுகளைக் கறைப்படுத்தியிருந்ததினால் இலட்சக்கணக்கானவர்களைப் பாழாக்குகின்ற பாரம்பரியங்கள் ஆழமாக வேரூன்றிக்கொண்டிருந்தன. பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்டிருந்த விசுவாசத்திற்காகப் போராடுவதற்குப் பதிலாக, சபை பாரம்பரியங்களை உயர்த்திப்பிடித்து, அவைகளைப் பாதுகாத்திருந்தது. தம்முடைய நிலையையும் தங்களுடைய ஆபத்தையும்பற்றிய உணர்வில்லாமலிருந்த நிலையில் சபையும் உலகமும் உலகவரலாற்றின் பக்திவிநயமான நிகழ்ச்சியின் காலக்கட்டத்தை நோக்கி— தேவகுமாரனின் வெளிப்படுத்தல் நிகழ்கின்ற காலக்கட்டத்தை நோக்கி, வெகு வேகமாகத் தொடர்ந்துகொண்டிருந்தது. (5) ★

# 50

# முதலாம் தூதனின் தூது!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 356–363)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 14:7**

வெளிப்படுத்தின விசேஷம் 14–ம் அதிகாரத்தின்மூலமாகப் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள முதலாவது தூதனின் தூதைப் பற்றிய பார்வை, அதன் நிறைவேறுதலை 1840–1844–ம் வருடங்களில் நிகழ்ந்த வருகையின் இயக்கத்திலே கண்டிருந்தது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருந்த விசுவாசமும் ஜெபமுமிக்க மனிதர்களின் கவனம் தீர்க்கதரிசனங்களுக்கும் ஆவியின் ஏவுதலினால் உண்டான ஆவணத்தை—வேதாகமத்தை ஆராய்வதற்கும் முனைந்தபோது, சகல காரியங்களுக்கும் முடிவு சமீபமாயிருக்கிறது என்பதற்கான மனநிறைவைத் தரும் சான்றுகளை கண்டதினால் அவர்கள் ஆழமாக அசைக்கப்பட்டனர். எச்சரிக்கையைக் கொடுக்கும்படி தேவ ஆவியானவர் அவருடைய ஊழியக்காரர்களை நெருக்கி ஏவினார். “தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது” (வெளி. 14:7) என்னும் நித்திய சுவிசேஷத்தின் தூது அதிக தூரத்திற்கு விசாலமாகப் பரவவும் செய்திருந்தது. (1)

மிஷனரிமார்கள் எங்கெல்லாம் பிரவேசித்திருந்தார்களோ அங்கெல்லாம் கிறிஸ்துவின் அதிசீக்கிரமான “இயேசு மீண்டும் வரப்போகிறார்” என்ற செய்தி சென்றிருந்தது. வெவ்வேறு நாடுகளில் பிரிந்திருந்த கிறிஸ்தவ சபைகள், முற்றிலுமாக தங்களுடைய வேதவாக்கிய ஆராய்ச்சிகளினால் இரட்சகரின் வருகை சமீபம் என்னும் நம்பிக்கைக்கு ஒருமனப்பட்டிருந்தனர். வருகையின் கோட்பாட்டைப்பற்றிய பிரசங்கம் தடைசெய்யப்பட்டு, சட்டங்களின்மூலமாக ஒடுக்கப்பட்டிருந்த ஐரோப்பாவின் சில பகுதிகளில் அதனை அறிவிக்கும்படியாக சிறுபிள்ளைகள் (ஆவியானவராலே) தூண்டப்படவே பக்திவிநயமான அந்த எச்சரிப்பை அநேகர் கவனித்திருந்தனர். (2)

அமெரிக்காவில் இந்தத் தூதைப் பிரசங்கிக்கும்படியான வேலை மில்லருக்கும் அவரது உடன் ஊழியக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்களால் ஏற்றிவைக்கப்பட்ட ஒளி தூரமான இடங்களிலும் பிரகாசித்தது. வேதாகமத்தின்மீது நம்பிக்கையில்லாமலிருந்த மனிதனை அசைக்கவும், அவன் தீர்க்கதரிசனங்களை ஆராயும்படி நடத்தப்படுவதற்கும் தேவன் அவரது தூதனை அனுப்பினார். தேவனுடைய ஜனங்களுக்கு எப்பொழுதும் இருளாக இருந்திருந்த தீர்க்கதரிசனங்களை வில்லியம் மில்லருக்குப் புரியவைப்பதற்காக, அவரது மனதுக்கு விளக்கிக்காட்டவும் அவரது புரிந்துகொள்ளுதலைத் திறக்கவும் தெரிந்துகொள்ளப்பட்டிருந்த தூதர்கள்—வில்லியம் மில்லரை அடிக்கடி சந்தித்திருந்தனர். சத்தியத்தின் சங்கிலியின் ஆரம்பம் அவரிடம் கொடுக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தையை அவர் ஆச்சரியத்துடன் கண்டு போற்றுகின்றவரை, கண்ணிகளுக்குப்பின் கண்ணிகளாகத் தேடும்வரை நடத்தப்பட்டார். சத்தியத்தின் ஒரு முழுமையான சங்கிலி அங்கு இருப்பதை அவர் கண்டார். எந்தவிதமான ஏவுதலும் இல்லாதது என்று அவர் கருதியிருந்த அந்த வார்த்தை இப்பொழுது அவரது பார்வையில் அதின் அழகிலும் மகிமையிலும் திறக்கப்பட்டிருந்தது. வேத வாக்கியத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு விளக்கம் தருவதையும் அவரது புரிந்துகொள்ளுதலுக்கு ஒரு பகுதி மூடப்பட்டிருந்தபோது, வேதாகமத்தின் வேறொரு பகுதியில் அதன் விளக்கம் இருப்பதையும் கண்டார். பரிசுத்த வார்த்தையை மகிழ்ச்சியுடனும்—ஆழ்ந்த மதிப்புடனும், வியப்புடனும் கருதினார். (3)

அவர் தீர்க்கதரிசனங்களைப் பின்தொடர்ந்து சென்றபோது, பூமியின் குடிகள் இந்த உலக வரலாற்றின் கடைசிக் காட்சியில் வாழ்ந்து கொண்டிருப்பதை அவர் கண்டார். அப்படியிருந்தபோதும் அவர்கள் அதனை அறிந்திருக்கவில்லை.! அவர் சபைகளைப் பார்த்து, அவைகள் கறைபடிந்தவைகளாக இருந்ததைக் கண்டார். அவர்கள் தங்களுடைய விருப்பங்களை இயேசுவிடமிருந்து விலக்கி, உலகத்தின்மீது வைத்திருந்தனர். உன்னதத்திலிருந்து வருகிற மேன்மையை அவர்கள் தேடாமல், உலகப்பிரகாரமான மேன்மைகளை தேடியிருந்தனர். பரலோகத்தில் தங்களுடைய பொக்கிஷங்களைச் சேர்த்துவைப்பதற்குப்பதிலாக, உலகப்பிரகாரமான ஐசுவரியங்களைப் பற்றிக்கொண்டிருந்தனர். பாசாங்கு, இருள், மரணம் ஆகியவகைள் எங்கும் இருப்பதை அவரால் காணமுடிந்தது. அவருக்குள் அவருடைய ஆவி கலங்கியது. எலிசாவை அவனுடைய காளைகளையும் வேலைசெய்திருந்த களத்தையும் விட்டு எலியாவைப் பின்தொடரும்படி கூறியிருந்ததுபோல, வில்லியம் மில்லரை அவரது பண்ணையைவிட்டு வரும்படி தேவன் அழைத்தார்! (4)

வில்லியம் மில்லர் தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியங்களை மக்களுக்கு நடுக்கத்துடன் விளக்கத்தொடங்கி, அவரது பேச்சைக் கேட்டிருந்தவர்களுக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரையுள்ள தீர்க்கதரிசனங்களை விவரித்தார். 1843–ல் கிறிஸ்துவின் வருகை இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டியிருந்த வேத வாக்கியங்களின் சாட்சி, மக்களின் ஆர்வத்தை மிகப்பரவலாக எழுப்பினது. தீர்க்கதரிசன காலங்களிலிருந்துள்ள வாதங்கள் சரியானவை என்ற மனநிறைவை அநேகர் அடைந்திருந்தனர். அவர்கள் தங்களுடைய அகந்தையான எண்ணங்களைத் தியாகம்செய்துவிட்டு, சத்தியத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். சில ஊழியக்காரர்கள் அவர்களுடைய பாகுபாடான பார்வைகளை விட்டுவிலகி, தங்களுடைய சம்பளங்களையும் சபைகளையும் விட்டுவிலகி, இயேசுவின் இரண்டாம் வருகையை அறிவிப்பதில் ஒன்றுபட்டனர். (5)

அப்படியிருந்தபோதுங்கூட, இந்தத் தூதை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஊழியக்காரர்கள் சிலராக மட்டுமே இருந்தனர். எனவே இது மிகவும் தாழ்மையான கூயாதீன அங்கத்தினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. விவசாயிகள் தங்களுடைய நிலங்களைவிட்டு வெளியேறினர். இயந்திரங்களில் பழுது நீக்குகிறவர்கள் தங்களுடைய கருவிகளை விட்டுவிட்டனர். வியாபாரிகள் தங்களுடைய வியாபாரத்தை விட்டுவிட்டனர். தொழில்களிருந்த மனிதர்கள் தங்களுடைய தொழில்களை விட்டுவிட்டனர். அப்படியிருந்துங்கூட நிறைவேற்றப்படவேண்டிய வேலையுடன் ஒப்பிடும்போது, ஊழியக்காரர்களின் எண்ணிக்கை சிறிதளவாகவே இருந்தது. சபையின் நிலைமை பக்தியற்றதாகவே இருந்தது. உலகம் துன்மார்க்கத்தில் மூழ்கியிருந்தது. இவை மெய்யான காவல்காரர்களின் ஆத்துமாக்களைப் பாரப்படுத்தியது. மனிதர்கள் இரட்சிக்கப்படும்படி மனந்திரும்பவேண்டும் என்று அழைப்பதற்காக அவர்கள் மனப்பூர்வமாக உழைத்தும் தனிமையை அனுபவித்தும் பாடுகளைச் சகித்தும் இருந்தனர். சாத்தானிடமிருந்து எதிர்ப்பு உண்டாகியிருந்தபோதிலும் அந்தப் பணி சீராக முன்செல்லவே, வருகையின் சத்தியம் ஆயிரக்கணக்கானவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது! (6)

## ஒரு பெரும் சமய எழுப்புதல்!

வரவிருக்கும் கோபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள பாவிகள் உலகப்பிரகாரமானவர்களாகி இரு சாராருக்கும் ஆராயும் சாட்சியான எச்சரிப்பு எங்கும் கேட்கப்பட்டது. கிறிஸ்துவிற்கு முன்னோடியாக இருந்த யோவான் ஸ்நானனைப்போல, பிரசங்கிமார்கள் மரத்தின் வேர்மீது கோடாரியை வைத்து, மனந்திரும்புதலுக்கேற்ற கனிகொடுக்கும்படி

அனைவரையும் வற்புறுத்தினார்கள். பிரசித்தமான பிரசங்க மேடைகளிலிருந்து கேட்கப்பட்டிருந்த சமாதானம், பாதுகாப்பு என்னும் வாக்குறுதிகளுடன் கலக்கும் வேண்டுகோள்கள் ஒப்பிடப்படும்போது, எங்கெல்லாம் அந்தத் தூது கொடுக்கப்பட்டிருந்ததோ அங்கெல்லாம் அவை மக்களை அசைத்தன! (7)

பரிசுத்த ஆவியின் வல்லமையினால் உள்ளத்திற்குள் வைக்கப்பட்ட வேதவாக்கியங்களின் எளிமையும் நேரடியுமான சாட்சி, ஒரு சிலரால் மட்டுமே தடுக்கப்படக்கூடியதாக இருந்த மனஉணர்த்துதலின் பாரத்தைக் கொண்டுவந்திருந்தது. தங்களுடைய தவறான பாதுகாப்பிலிருந்து இறையியல் பேராசிரியர்கள் எழுப்பப்பட்டனர். அவர்கள் தங்களுடைய பின்னிட்டுவிழுதலையும், தங்களுடைய உலகப்பிரகாரமான தன்மையையும் அவநம்பிக்கை, அகந்தை, சுயநலம் ஆகியவைகளையும் கண்டனர். மனந்திரும்புதலுடனும் தாழ்மையுடனும் அநேகர் கர்த்தரைத் தேடினார்கள். இதுவரை அவர்கள் உலகப்பிரகாரமான பொருட்களின்மீது வைத்திருந்த பற்றை இப்பொழுது பரலோகத்தின்மீது பதித்தனர். தேவ ஆவி அவர்கள்மீது தங்கவே, மென்மையையும் தாழ்மையையும் அடைந்த இருதயங்களுடன் அவர்கள் "தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது" (வெளி. 14:7) என்னும் தூதை எழுப்ப ஒன்று சேர்ந்தனர். (8)

"இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று பாவிகள் அழுகையுடன் விசாரித்தனர். எவர்களுடைய வாழ்க்கை நேர்மையற்ற தன்மைகளினால் குறிக்கப்பட்டிருந்ததோ, அவர்கள் திரும்ப எடுத்துக்கட்டப்படுவதற்குக் கவலையுள்ளவர்களாக இருந்தனர். கிறிஸ்துவில் சமாதானத்தைக் கண்டடைந்த அனைவரும் அந்த ஆசீர்வாதத்தை மற்றவர்களும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஏக்கமுடையவர்களாக இருந்தனர். பெற்றோர்களின் இருதயங்கள் பிள்ளைகளிடத்திற்கும் பிள்ளைகளின் இருதயங்கள் பெற்றோர்களிடத்திற்கும் திருப்பப்பட்டன. அகந்தை, தனித்தன்மை என்னும் தடைச்சுவர்கள் உடைக்கப்பட்டு நீக்கப்பட்டடிருந்தன. இருதயப்பூர்வமான பாவ அறிக்கைகள் செய்யப்பட்டு, குடும்ப அங்கத்தினர்கள் தங்களுடைய அயலார்கள் அருமையானவர்கள் ஆகியோரின் இரட்சிப்பிற்காக உழைத்தனர். (9)

அக்கறைமிக்கப் பரிந்துபேசுதலின் (ஜெபம்) ஓசை அடிக்கடி கேட்கப்பட்டிருந்தது. ஆழ்ந்த மனத்துயரத்துடன் தேவனிடம் மன்றாடுகின்ற ஆத்துமாக்கள் எங்கும் இருந்தன. தங்களுடைய சொந்தப் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்னும் நிச்சயத்தை அடைந்துகொள்வதற்காகவும், தங்களுடைய உறவினர்கள் அல்லாத

அயலார்கள் மனந்திரும்புவதற்காகவும் அநேகர் இரவு முழுவதிலும் ஜெபத்தில் போராடியிருந்தனர். அந்த அக்கறைமிக்க தீர்மானமான விசுவாசம் அதின் நோக்கத்தை அடைந்திருந்தது. இதைப்போலவே தேவனுடைய மக்கள் ஜெபத்தில் ஓயாது கெஞ்சிக் கேட்பவர்களாகத் தொடர்ந்திருப்பார்கள் என்றால் தங்களுடைய விண்ணப்பங்களை கிருபாசனத்தை நோக்கி வற்புறுத்தியிருந்திருப்பார்களானால் இப்பொழுது அவர்கள் இருப்பதைவிட, மிக மேலான அனுபவத்தை உடையவர்களாக இருந்திருப்பார்கள். ஜெபம் மிகக்குறைவானதாக இருக்கிறது. பாவத்தைப்பற்றிய மனஉணர்த்துதலும் மிகக் குறைவாக இருக்கிறது. ஜீவனுள்ள விசுவாசமின்மையின் காரணமாக, நமது மீட்பரால் மிகவும் தாராளமானவிதத்தில் ஏற்படுத்திவைக்கப்பட்டுள்ள கிருபையை அநேகர் இழந்தவர்களாக உள்ளனர். (10)

அட்வெந்துக்கள் (ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகையை அறிவிப்பவர்கள்) நடத்தின கூட்டங்களுக்கு எல்லா வகுப்பினர்களும் வந்திருந்தனர். இரண்டாம் வருகையைப்பற்றிய கோட்பாட்டைத் தங்களுக்கென்று கேட்பதற்காக, பலவிதமான காரணங்களுடன் கவலை உள்ளவர்களான செல்வந்தர்கள்—ஏழைகள், உயர்ந்தவர்கள்—தாழ்ந்தவர்கள், ஆகியோர் கூடியிருந்தனர். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய விசுவாசத்திற்கான காரணங்களை விளக்கியிருந்தபோது, எதிர்ப்பின் ஆவியைக் கர்த்தர் தடைசெய்திருந்தார். சில சமயங்களில் அந்தக் கருவி மிகவும் பலவீனமானதாக இருந்தது. ஆனால் தேவனுடைய ஆவியானவர் அவருடைய சத்தியத்திற்கு வல்லமையைக் கொடுத்திருந்தார். இந்தக் கூட்டங்களில் பரிசுத்த தூதர்களின் பிரசன்னம் உணரப்பட்டிருந்தது. விசுவாசிகளின் கூட்டத்தில் நாள்தோறும் அநேகர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையைப்பற்றி திரும்பத் திரும்பக் கூறப்பட்டபோது, அந்த பக்திவிநயமான வார்த்தைகளைக் கவனிப்பதற்காக, மூச்சுவிடாத மௌனத்துடன் திரளான கூட்டத்தினர் கூடியிருந்தனர். பரலோகமும் பூமியும் ஒன்றையொன்று நெருங்குவதுபோல் காணப்பட்டது. முதியோர் வாலிபர் மத்திய வயதுடையோர் ஆகிய அனைவர்மீதும் தேவனுடைய வல்லமை உணரப்பட்டது. துதியின் உதடுகளுடன் மனிதர்கள் தங்களுடைய வீடுகளைத் தேடிச்சென்றிருந்தபோது, அமைதிமிக்க இரவின் காற்றில் இந்த மகிழ்ச்சியான செய்திகளின் ஒலி ஒலித்துக்கொண்டிருந்தது. ஆழ்ந்த ஆர்வத்தை உண்டுபண்ணியிருந்த அந்தக் காட்சிகளை அந்தக் கூட்டங்களில் கலந்திருந்த ஒருவராலும் மறக்கமுடியாமலிருந்தது. (11)

## எதிர்ப்பு!

பிரசங்க பீடத்தின்மீதிருந்த ஊழியக்காரரினிலிருந்து, பரலோகத்தை எதிர்க்கத் துணிவதின் விளைவுகளைப்பற்றி அஞ்சாத பாவிவரை உள்ள அநேக வகுப்பினரிடமிருந்தும் கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய குறிப்பிட்ட காலக்குறிப்பு பெரும் எதிர்ப்பை அழைத்திருந்தது. “அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர வேறொருவனும் அறியான்” என்பது மாயக்காரனான ஊழியக்காரன் துணிச்சலுடன் ஏளனம் செய்வன் ஆகிய இருவரிடமிருந்தும் கேட்கப்பட்டது. தீர்க்கதரிசனக் காலங்களின் முடிவைச் சுட்டிக்காட்டியிருந்ததும் கிறிஸ்து தாமே முன்னறிவித்திருந்ததுமான அவரது வருகையின் அடையாளங்களைக்குறித்து மிகவும் இசைவாக இருந்த மிகத்தெளிவான வேதவாக்கியங்களுக்கும் அவர்கள் தங்களுடைய செவிகளை மூடிக்கொண்டனர். (12)

இரட்சகரை நேசிப்பதாகக் கூறிக்கொண்டிருந்த அநேகருக்கு அவரது வருகையைப்பற்றிய பிரசங்கத்தில் எதிர்ப்பு எதுவும் இல்லையென்றும் ஆனால் நேரத்தைக் குறிப்பிடுவதைமட்டும் எதிர்ப்பதாகவும் அறிவித்தனர். எல்லாவற்றையும் பார்க்கின்ற தேவனுடைய கண்கள் அவர்களுடைய இருதயங்களை வாசித்தது. நீதியுடன் இந்த உலகத்தை நியாயம் தீர்ப்பதற்காக கிறிஸ்து வருகிறார் என்பதைக் கேட்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. விசுவாசமில்லாத ஊழியக்காரர்களாக அவர்கள் இருந்திருந்தனர். இருதயத்தை ஆராயும் தேவனுடைய சோதனையை அவர்களுடைய கிரியைகள் தாங்காது. எனவே தங்களுடைய கர்த்தரைச் சந்திக்க அவர்கள் பயந்தனர். கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது, அவரை வரவேற்க ஆயத்தம் இல்லாதவர்களாகவே இருந்த யூதர்களைப்போல இவர்களும் ஆயத்தமில்லாதவர்களாக இருந்தனர். நாங்கள் கிறிஸ்துவினுடையவர்கள் என்று கூறிக்கொண்டிருந்தவர்கள் அவர்மீது அன்பில்லாதவர்களாக இருந்து, அவர் தரிசனமாவதை விரும்பாதவர்களாக இருந்ததைப்பற்றி சாத்தானும் அவனது தூதர்களும் வெற்றிச்சிரிப்புச் சிரித்து, இகழ்ச்சியான பேச்சுக்களை இயேசுவின் முகத்தின்மீதும் அவரது தூதர்களின் முகங்கள்மீதும் வீசியெறிந்தனர். தேவனுடைய பணி முன்னேற்றமடைவதற்கு விசுவாசமில்லாத காவலாளிகள் இடையூறு செய்தனர். மக்கள் எழுப்பப்பட்டு, இரட்சிப்பிற்கான பாதையைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினபோது, இந்தத் தலைவர்கள் அவர்களுக்கும் சத்தியத்திற்கும் இடையில் வேதவாக்கியங்களுக்குத் தவறான விளக்கம் கொடுத்திருந்தனர். தேவன் சமாதானத்தைப்பற்றிப் பேசாமலிருந்தபோது, சமாதானம்! சமாதானம்!! என்று குரல்கொடுக்கும் வேலையில் சாத்தானும் தங்களை அர்ப்பணம் செய்யாத ஊழியக்காரர்களும் ஒன்றுபட்டனர். கிறிஸ்துவின் நாளில் பரலோகத்தில்

பிரவேசிக்கத் தாங்களாகவே மறுத்திருந்த பரிசேயர்களைப்போல இருந்து, பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க முயன்றவர்களுக்கு அவர்கள் இடையூறு செய்திருந்தனர். இந்த ஆத்துமாக்களின் இரத்தம் அவர்களுடைய கரங்களிலிருந்து கேட்கப்படும். (13)

சத்தியத்தின் தூது எங்கெல்லாம் அறிவிக்கப்பட்டதோ அங்கெல்லாம் சபைகளில் மிகவும் தாழ்மையானவர்களாகவும் பக்தியுள்ளவர்களாகவும் இருந்தவர்கள் முதலில் அதைப் பெற்றுக்கொள்ளுபவர்களாக இருந்தனர். எவர்களெல்லாம் வேதவாக்கியங்களைத் தங்களுக்கென்று ஆராய்பவர்களாக இருந்தார்களோ அவர்களெல்லாராலும் தீர்க்கதரிசனத்தைப்பற்றிய ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் பிரசித்தமான பார்வை, வேதவாக்கிய ஆதாரமற்ற தன்மை உடையதாக இருப்பதைக் காணமுடிந்தது. விசுவாசத்தைப்பற்றித் தவறாகக்கூறி, அதை திரித்துப்போட முயற்சிசெய்த போதகர்களின் முயற்சியில் எங்கெல்லாம் மக்கள் வஞ்சிக்கப்படமுடியாதவர்களாக இருந்தார்களோ அங்கெல்லாம், எவர்கள் வேதவாக்கியங்களைத் தங்களுக்கென்று தாங்களே ஆராய்ந்திருப்பார்களோ அங்கெல்லாம், அட்வெந்துக் கோட்பாடு அதன் தெய்வீக அதிகாரத்தை நிலைநாட்ட, வேதவாக்கியங்களை வேதவாக்கியங்களுடன் ஒப்பிடுவது ஒன்று மட்டுமே அவசியமானதாக இருந்தது. (14)

விசுவாசமில்லாத தங்களுடைய சகோதரர்களால் அநேகர் உபத்திரவப்படுத்தப்பட்டனர். சபையிலுள்ள தங்களுடைய ஸ்தானத்தை தக்கவைத்துக்கொள்ளுவதற்காக சிலர் தங்களுடைய நம்பிக்கையைப் பற்றிய காரியத்தில் மௌனமாக இருந்தனர். ஆனால் மற்றவர்கள் தேவனால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த சத்தியத்தை இவ்விதமாக மறைத்துவைப்பதை தேவனின்மீதுள்ள இராஜவிசுவாசம் தடைசெய்கிறது என்பதை உணர்ந்தனர். வேறு எந்தவிதமான காரணமும் இல்லாமல், கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய தங்களது நம்பிக்கையை வெளிக்காட்டின ஒரே காரணத்திற்காக மட்டுமே சபையிலிருந்த நீக்கப்பட்டவர்கள் சிலராக மட்டும் இருக்கவில்லை! “என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்” (ஏசாயா 66:5) என்னும் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் தங்களுடைய விசுவாசத்திற்கான விசாரணையைத் தாங்கியிருந்தவர்களுக்கு மிகவும் விலைமதிப்பு வாய்ந்தவையாகவும் இருந்தன. (15)

எச்சரிக்கையின் பலன்களைத் தூதர்கள் ஆழமான ஆர்வத்துடன் கவனித்திருந்தனர். சபைகள் ஒரு சரீரமாக அந்தத் தூதை நிராகரித்தபோது தூதர்கள் வருத்தத்துடன் அவர்களைவிட்டுப் பிரிந்துசென்றிருந்தனர். அப்படியிருந்தபோதிலும் அட்வெந்து சத்தியத்தைப்பற்றி இன்னும் சோதிக்கப்படாதவர்களாக சபைகளில் அநேகர் இருந்தனர். அட்வெந்துக்களால் உபதேசிக்கப்படுகின்ற மதப் புரட்டுக்களைக் கவனிப்பதுகூடப் பாவம் என்று அநேகர் கணவர்களாலும் மனைவிகளாலும் பெற்றோர்களாலும் அல்லது பிள்ளைகளாலும் வஞ்சிக்கப்பட்டிருந்தனர். இந்த ஆத்துமாக்களை விசுவாசத்துடன் கண்காணிக்கும்படி தூதர்கள் கட்டளையிடப்பட்டிருந்தனர். ஏனெனில் இன்னும் வேறொரு ஒளி தேவசிங்காசனத்திலிருந்து அவர்கள்மீது பிரகாசிக்கவேண்டியதாக இருந்தது. (16)

## கர்த்தரைச் சந்திக்க ஆயத்தப்படுதல்!

அந்தத் தூதைப் பெற்றிருந்தவர்கள் சொல்லிமுடியாத வாஞ்சையுடன் தங்களுடைய இரட்சகரின் வருகையைக் கவனித்திருந்தனர். அவரைச் சந்திப்பதற்காக அவர்கள் எதிர்பார்த்திருந்த நேரம் சமீபமாக இருந்தது. அமைதியான பக்திவிநயத்துடன் அந்த நேரத்தை அவர்கள் சமீபித்தனர். வரவிருக்கின்ற பிரகாசமிக்க எதிர்காலம்பற்றிய அக்கறைமிக்க சமாதானத்துடன் தேவனுடனுள்ள இனிய தொடர்பில் அவர்கள் இளைப்பாறியிருந்தனர். இந்த நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அனுபவித்திருந்தவர்களில் ஒருவராலும் காத்திருப்பின் விலையேறப்பெற்ற நேரத்தை மறக்கமுடியாது. சில வாரங்களாக அதிகப்படியான அளவிற்கு உலகப்பிரகாரமான அலுவல்கள் ஒரு பக்கமாக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தன. விசுவாசிகள் தங்களுடைய மரணப்படுக்கைகளின்மேல் இருப்பதைப்போலவும், உலகப்பிரகாரமான காட்சிகளுக்குத் தங்களுடைய கண்களை சில மணி நேரங்களுக்குள் மூடப்போவதைப்போலவும் தங்களுடைய இருதங்களின் சிந்தனைகள் மனக்கிளர்ச்சிகள் ஆகியவைகள் ஒவ்வொன்றையும் மிகக் கவனமாக சோதித்திருந்தனர். பரமேறும் ஆடைகளை ஒருவரும் தயாரிக்காதவர்களாக இருந்து தங்களுடைய இரட்சகரைச் சந்திப்பதற்கு ஆயத்தமாக இருந்தனர் என்பதற்கான உடனடியான சான்றின் அவசியத்தை உணர்ந்திருந்தனர். ஆத்துமாவின் தூய்மையும், பாவ நிவர்த்திசெய்யும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட சுபாவமும் அவர்களுடைய வெண்வஸ்திரங்களாக இருந்தன. (17) ★

# 51

# இரண்டாம் தூதனின் தூது!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 364–368)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 14:8; ஆபகூக் 2:2,3**

முதலாம் தூதனின் தூதைப் பெற்றுக்கொள்ள மறுத்த சபைகள் பரலோகத்திலிருந்து வந்த ஒளியை நிராகரித்திருந்தன. அந்தத் தூது, அவர்கள் தங்களுடைய உண்மையான உலகப்பிரகாரமான நிலைமையையும் மருள விழுகையையும் பார்த்து, தங்களுடைய கர்த்தரைச் சந்திப்பதற்கு ஆயத்தஞ்செய்யவேண்டும் என்ற இரக்கத்தினால் அனுப்பப்பட்டிருந்தது. (1)

உலகப்பிரகாரமான செல்வாக்குகளிலிருந்து கிறிஸ்துவின் சபை விலகவேண்டும் என்பதற்காக முதலாம் தூதுனுடைய தூது கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் திரளானவர்களில், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் திரளானவர்களில், உலகத்துடன் அவர்களைச் சேர்த்துக் கட்டியிருந்த கட்டுகள் பரலோகத்தை நோக்கிய கவர்ச்சிகளைவிடப் பலம் பொருந்தியவையாக இருந்தன. இருதயத்தை ஆராய்கிற சத்தியத்தின் தூதைவிட்டுத் திரும்பி, உலகஞானத்தின் குரலை கவனிப்பதை அவர்கள் தெரிந்துகொண்டனர். (2)

நிந்திப்பதற்காகவும் நிராகரிப்பதற்காகவும் தேவன் ஒளியைக் கொடுக்காமல், பேணுவதற்காகவும் கீழ்ப்படிவதற்காகவும் கொடுக்கிறார். அவர் அனுப்பும் ஒளியை ஒரு பொருட்டாக எண்ணாமல் இருப்பவர்களுக்கு அது இருளாக மாறிவிடுகிறது. தேவனுடைய ஆவி மனிதரின் இதயங்களில் சத்தியத்தை உணர்த்துவதை நிறுத்திவிடும்போது கேட்பதனைத்தும் வீணே; பிரசங்கங்களனைத்துங்கூட வீண்தான். (3)

அட்வெந்து தூதை நிராகரிப்பதின்மூலம், சபைகள் தேவனுடைய ஆலோசனையை வெறுத்து ஒதுக்கினபோது கர்த்தர் அவர்களை நிராகரித்தார். “பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே!”

(வெளிப்படுத்தல் 14:8) என்று அறிவிக்கும் இரண்டாவது தூதன் முதலாம் தூதனைப் பின்தொடர்ந்தான். முதலாவது தூதை நிராகரித்ததின் பலனாக சபைகளில் உண்டான சன்மார்க்க வீழ்ச்சியை இது அறிவிக்கிறது என்று அட்வெந்துக்கள் இதைப் புரிந்துகொண்டிருந்தனர். 1844–ம் ஆண்டின் வேனில் காலத்தில் பாபிலோன் விழுந்தது என்னும் அறிவிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. இதன் பலனாக, ஏறத்தாழ ஐம்பதினாயிரம்பேர்கள் இந்த சபைகளிலிருந்து விலகினார்கள். (4)

முதலாம் தூதைப் பிரசங்கித்தவர்களிடம் சபைகளில் பிரிவினை களை உண்டுபண்ணவேண்டும் என்ற எந்தவிதமான நோக்கமும் எண்ணமும் இருக்கவில்லை. “ஏற்கனவே இருக்கின்ற சபைகளைப் பிரிந்து, வேறொரு சபையை உண்டுபண்ணவேண்டுமென்ற அல்லது ஒரு சபையின் செலவில் வேறொரு சபை ஆதாயமடையவேண்டுமென்ற விருப்பமோ அல்லது எண்ணமோ என்னிடம் ஒருபோதும் இருக்கவில்லை. எல்லாரும் நன்மையடையவேண்டும் என்று நான் எண்ணினேன். சகல கிறிஸ்தவர்களும், கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய நல்நம்பிக்கையில் களிகூருவார்களென்றும், நான் கண்டதைப்போலக் காணமுடியாதவர்கள் இந்த கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளுபவர்களை குறைவாக நேசிக்கமாட்டார்கள் என்றும் நினைத்ததால், இவர்களுக்கென்று தனிக் கூட்டத்தை நடத்தவேண்டிய அவசியம் இருக்கும் என்ற எண்ணம் எனக்குள் உருவாகவில்லை. தேவனுக்கென்று ஆத்துமாக்களை மாற்றுவதும், வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைக்குறித்து உலகத்திற்கு எச்சரிப்பைக் கொடுப்பதும், தங்களுடைய தேவனைச் சமாதானத்துடன் சந்திப்பதற்கு எனது உடன் மனிதர்கள் தங்கள் இருதயங்களை ஆயத்தம்பண்ணும்படி அவர்களை தூண்டிச்செயலாற்றச் செய்வதுமே எனது முழுநோக்கமும் விருப்பமுமாக இருந்தது. என்னுடைய உழைப்பின்கீழ் மாற்றம் செய்யப்பட்ட பெரும் பகுதியினர் ஏற்கனவே இருந்த பல்வேறுபட்ட சபைகளில் ஐக்கியமடைந்தனர். தனிப்பட்டவர்கள் அவர்கள் செய்யவேண்டிய கடமையைப்பற்றி என்னிடம் விசாரிக்க வந்தபோது, அவர்கள் எந்த சபையில் சேர்ந்தால் அவர்களுடைய வீட்டில் இருப்பதுபோல் உணருவார்களோ அந்தச் சபைக்குச் செல்லும்படி நான் எப்பொழுதும் கூறியிருந்தேன். சத்தியத்தைப்பற்றிய எனது உபதேசத்தில் நான் எந்தவொரு தனிப்பட்ட சபையையும் ஆதரிக்கவில்லை” என்று வில்லியம் மில்லர் கூறினார். (5)

சிறிது காலத்திற்கு அநேக சபைகள் அவரது ஊழியத்தை வரவேற்றன. ஆனால் அவர்கள் அட்வெந்து சத்தியத்திற்கு எதிராக முடிவுசெய்தபோது, அந்த விஷயம்பற்றிய எல்லாக் கலக்கங்களையும் அடித்தமர்த்த விரும்பினார்கள். அந்தக் கோட்பாட்டை ஏற்றிருந்தவர்கள்

இவ்வாறாக, பெரும் சோதனையும் குழப்பமுமிக்க நிலைமையில் வைக்கப்பட்டார்கள். அவர்கள் தங்களுடைய சபைகளை நேசித்து, அவைகளிலிருந்து பிரிந்துசெல்லுவதற்குத் தயங்கியிருந்தனர். ஆனால் அவர்கள் பரிகசிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தங்களுடைய நம்பிக்கையைப்பற்றிப் பேசுவதற்கும் கர்த்தருடைய வருகையைப்பற்றிய பிரசங்கங்களை கேட்க செல்லுவதற்குமான சலுகைகள் மறுக்கப்பட்டபோது, கடைசியில் அவர்களில் அநேகர் தங்கள்மீது சுமத்தப்பட்டிருந்த நுகத்தைத் தூக்கி வீசியெறிந்துவிட்டனர். (6)

இந்த சபைகள் தேவனுடைய வார்த்தையின் சாட்சியை நிராகரித்து விட்டதைக்கண்ட அட்வெந்துக்களால், அவைகளை இனி "சத்தியத்தின் தூணும் ஆதாரமுமான" கிறிஸ்துவின் சபையாக காண இயலவில்லை. "பாபிலோன் விழுந்தது" என்னும் தூது அறிவிக்கப்பட துவங்கினபோது, தங்களுடைய முந்தைய உறவிலிருந்து விலகுவதை அவர்கள் நியாயமென்று உணர்ந்தனர். (7)

முதலாம் தூது நிராகரிக்கப்பட்டதிலிருந்து சபைகளில் ஒரு துயரமிக்க மாறுதல் உண்டாகியிருக்கிறது. சத்தியம் வெறுத்து ஒதுக்கப்படும்போது தவறுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பேணப்படுகின்றன. தேவன்மேலுள்ள அன்பும் அவருடைய வார்த்தையின்மீதுள்ள விசுவாசமும் குளிர்ந்துவிடுகின்றது தேவனுடைய ஆவியை சபைகள் துக்கப்படுத்தின. அது பெருமளவிற்கு திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டது. (8)

## தாமதமாகும் காலம்!

1843–ம் வருடம் முழுவதும் கிறிஸ்துவின் வருகை நிகழாதுபோகவே, அவரது வருகைக்காக விசுவாசத்துடன் எதிர்பார்த்திருந்தவர்கள் சிறிது காலத்திற்கு சந்தேகத்திலும் குழப்பத்திலும் விட்டுவிடப்பட்டிருந்தனர். ஆனாலும் அவர்களுடைய ஏமாற்றத்துடன்கூட தங்களுடைய விசுவாசத்தைப்பற்றிய சான்றினைப் புதுப்பித்துக்கொள்ளுவதற்காக தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்துகொண்டும் இருந்தனர். அவர்களுடைய நிலையைத் தாங்குவதற்கென்று கொடுக்கப்பட்டிருந்த வேதாகமத்தின் சாட்சி தெளிவானதாகவும் முடிவானதாகவும் இருப்பதுபோல் காணப்பட்டது. தவறான விதத்தில் எடுத்துக்கொள்ளமுடியாத அடையாளங்கள், கிறிஸ்துவின் வருகை சமீபம் என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தது. விசுவாசிகளால் அவர்களது ஏமாற்றத்திற்கான காரணங்களை விளக்கமுடியவில்லை. இருந்தபோதும் அவர்களுடைய கடந்தகால அனுபவத்தில் தேவன் அவர்களை நடத்தியிருந்தார் என்னும் நிச்சயத்தை அவர்கள் உணர்ந்திருந்தனர். (9)

தாமதமாகுதலின் ஒருகாலத்தைச் சுட்டிக்காட்டியிருந்த வேத வாக்கியங்கள் நேரடியாகவும் வலிமையுடனும் பொருந்தினதைப் பார்த்தபோது, அவர்களுடைய விசுவாசமானது பெரிய அளவில் பலப்படுத்தப்பட்டிருந்தது. ஒரு தீர்க்கதரிசன வரைபடத்தை வரையும்படி 1842–ம் ஆண்டிலேயே தேவனுடைய ஆவி **சார்லஸ் பிட்ச்** என்பவரை அசைத்திருந்தது. இது பொதுவாக அட்வெந்துக்களால் “தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகைகளிலே தீர்க்கமாக வரை” என்று ஆபகூக் தீர்க்கதரிசிக்குக் கொடுக்கப்பட்டிருந்த கட்டளையின் நிறைவேறுதல் என்று கருதப்பட்டிருந்தது. என்றபோதும் தீர்க்கதரிசனம் பார்வைக்குக் கொண்டுவந்திருந்த **தாமதமாகும் காலத்தை** ஒருவரும் அப்போது காணவில்லை. ஏமாற்றத்திற்குப்பின் இந்த வேத வாக்கியத்தின் முழு அர்த்தமும் வெளியரங்கமாயிற்று. தீர்க்கதரிசி: “நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை. குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை” (ஆபகூக் 2:2,3) என்று கூறுகிறார். (10)

முடிவிலிருந்து ஆரம்பம்வரையிலும் உள்ளவைகளை அறிந்திருப்பவர் காலங்களின் ஊடாகப் பார்த்து, அவர்களுடைய ஏமாற்றத்தை முன்னதாகவே கண்டு, அவர்களுக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கக்கூடிய வார்த்தைகளைக் கொடுத்திருந்தார் என்பதாகக் காத்திருந்தவர்கள் உணர்ந்து மகிழ்ந்தார்கள். அவர்கள் சரியான பாதையில் உள்ளனர் என்பதைக் காட்டுகின்ற பகுதிகள் வேதவாக்கியங்களில் இல்லாமலிருந்தால் சோதிக்கப்பட்டிருந்த அந்த நேரத்தில் அவர்களுடைய விசுவாசம் தோல்வியை அடைந்திருக்கும். (11)

மத்தேயு 25–ம் அதிகாரத்திலுள்ள கீழ்த்திசை நாட்டுத் திருமண நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் பத்துக் கன்னிகைகளைப்பற்றிய உவமையால், அட்வெந்துக்களின் அனுபவமானது சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது. “அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.” “மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.” (12)

முதலாம் தூதனின் தூதின் அறிவிப்பின்கீழ் விசாலமாகப் பரவின இயக்கம், கன்னிகைகள் செல்லுவதின் விளக்கமாகவும், எதிர்பார்த்திருந்தநேரம் கடந்துசெல்லுவது, ஏமாற்றம், மணவாளன்

வரத்தாமதம் ஆகியவை மணவாளன் வர தாமதிப்பதை குறிப்பதாகவும் உள்ளது. நிச்சயமான நேரம் கடந்தபிறகும் எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாக இருக்கிறது என்னும் நம்பிக்கையில் உண்மையான விசுவாசிகள் இன்னும் ஒன்றுபட்டவர்களாக இருந்தனர். என்றாலும் விரைவில் அவர்களுடைய ஆர்வத்தையும் பக்தியையும் இழந்து, காத்திருந்த நேரத்தில் கன்னிகைகள் நித்திரைசெய்ததாக உவமையில் காட்டப்பட்டிருந்த நிலைக்குச் சென்றது காணக்கூடியதாக இருந்தது. (13)

இந்த நேரத்தில்தான் மதவெறியானது தோன்றத் தொடங்கியது. அந்தத் தூதின்மீது ஆர்வமிக்க வைராக்கியம் உடையவர்களாக இருப்பதாகக் கூறிக்கொண்டிருந்த சிலர், தவறாத ஒரு வழிகாட்டியாக இருந்த தேவனுடைய வார்த்தையை நிராகரித்து, ஆவியினால் நடத்தப்படுவதாக உரிமைபாராட்டிக்கொண்டிருந்து, அவர்களுடைய சொந்த உணர்ச்சிகளின் கட்டுப்பாட்டிற்கும் உணர்த்துதல்களுக்கும் கற்பனைகளுக்கும் விட்டுக்கொடுத்திருந்தனர். தங்களுடைய போக்கை அனுமதிக்க மறுத்திருந்தவர்களை வெளிப்படையாகக் குற்றம்சாட்டியிருந்த குருட்டுத்தனமான ஆர்வத்தையும் மத விரோதத்தையும் உடையவர்களாக சிலர் இருந்தனர். பெரும் அமைப்பாக இருந்த அட்வெந்துக்களிடத்திலிருந்து அவர்களுடைய மதவெறிமிக்க யோசனைகளும் செயல்பாடுகளும் அனுதாபத்தைச் சந்திக்கவில்லை. அப்படியிருந்தும் சத்தியத்தின்மீது நிந்தையைக் கொண்டுவர அவை ஏவப்பட்டன. (14)

1843–ல் பிரசங்கிக்கப்பட்ட முதலாம் தூதும், 1844–ல் உண்டான நடுராத்திரியின் சத்தமும் மதவெறியையும் பிரிவினையையும் நேரடியாக ஒடுக்குவதற்கு நடத்தினது. பக்திவிநயமான இந்த இயக்கத்தில் பங்கு பெற்றிருந்தவர்கள் இசைவுள்ளவர்களாக இருந்தனர். அவர்களுடைய இருதயங்கள் ஒருவரின்மீது மற்றொருவரின் அன்பினாலும் அவர்களது கண்கள் விரைவில் காணவிருக்கும் இயேசுவின்மீதுள்ள அன்பினாலும் நிறைந்திருந்தன. ஒரே விசுவாசம் ஆசீர்வதமான ஒரே நம்பிக்கை ஆகியவை சகலவிதமான மனிதக் கட்டுப்பாட்டின் செல்வாக்கிற்கும் மேலாக அவர்களை உயர்த்தி, சாத்தானின் தாக்குதலுக்கு எதிரான கேடயமாக இருப்பதை மெய்ப்பித்தது. (15) ★

# 52

# நடுராத்திரியின் சத்தம்!

**(மூலநூல் : The Story of Redemptionஇ பக்கம்: 369–374)**
**திருவசன ஆதாரம் : மத்தேயு 25:5–7**

“மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது, அந்தச் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்” –மத்தேயு 25: 5–7. (1)

1844–ம் வருடம் கோடை காலத்தில் அட்வெந்துக்கள் அவர்களுடைய தீர்க்கதரிசனக் காலக்கணக்கிலுள்ள தவறைக் கண்டுபிடித்து, சரியான நிலைக்கு வந்துசேர்ந்தனர். தானியேல் 8:14–லுள்ள, கிறிஸ்துவின் வருகைவரை செல்லும் என்று நம்பியிருந்த 2300 நாள், 1844–ன் வசந்த காலத்தில் முடிவடையும் என்று எண்ணப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது அது, அதே வருடத்தின் கனிகாலம் வரைசெல்லும் என்பது காணப்பட்டு, இந்தக் கட்டத்தில்தான் கர்த்தரின் வருகை இருக்குமென்று, அவர்களின் மனங்கள் அதன்மீது பதிந்தது. காலத்தை அறிவிக்கும் இந்தத் தூது, திருமணம்பற்றிய உவமையின் நிறைவேறுதலின் அடுத்த ஒரு படிக்கட்டாக இருந்து, அட்வெந்துக்களின் அனுபவத்திற்குப் பொருந்துவதாக இருந்தது என்பது தெளிவாகக் காணப்பட்டிருந்தது. (2)

உவமையில், மணவாளன் வந்துகொண்டிருக்கிறார் என்னும் குரல் நடுராத்திரியில் எழுப்பப்பட்டதைப்போல, அதன் நிறைவேறுதலில், 1844–ம் ஆண்டின் வசந்த காலத்தில் 2300 நாட்கள் முடிவடையவேண்டும் என்று முதலில் கணக்கிடப்பட்டு, பின்னர் கனிகாலத்தில் முடியும் என்று கணக்கிடப்பட்ட அந்த காலத்தில், “இதோ, மணவாளன் வருகிறார் அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்” என்கிற சத்தம் உண்டாயிற்று. (3)

பெரும் அலையைப்போல இந்த இயக்கம் நாடுமுழுவதையும் அடித்துச் சென்றது. அது நகரத்திலிருந்து நகரத்திற்கும், கிராமத்திலிருந்து கிராமத்திற்கும், தேவனுக்காகக் காத்திருக்கும் ஜனங்கள் முழுமையாக எழுப்புதல் அடையும்வரை மூலை முடுக்கிற்கெல்லாம் சென்றது. அதிகாலையில் உதிக்கின்ற சூரியனுக்குமுன் பனி மறைவதுபோல, இந்த அறிவிப்பிற்குமுன் மதவெறி மறைந்துவிட்டது. விசுவாசிகள் மறுபடியும் ஒரு முறை தங்களுடைய நிலையைக் கண்டுவிடவே, நம்பிக்கையும் தைரியமும் அவர்களது இருதயங்களை அசையச்செய்தன. (4)

தேவனுடைய வார்த்தை, ஆவி ஆகியவைகளின் கட்டுப்படுத்தும் செல்வாக்கு இல்லாதபோது, மனித எழுச்சிகள் எப்பொழுதும் வெளிக்காட்டுகின்ற—வரம்புகளை மீறுவதிலிருந்து அந்தப் பணி விடுபட்டிருந்தது. தேவனுடைய ஊழியக்காரர்களிடமிருந்து கொடுக்கப்பட்ட கடிந்துகொள்ளுதலின் தூதைப் பின்தொடர்ந்து பண்டைய இஸ்ரவேலர்கள் கர்த்தரிடத்திற்குத் திரும்பியிருந்த காலங்களைப்போன்றதாக அது இருந்தது. ஒவ்வொரு காலத்திலும் தேவனுடைய கிரியையை அடையாளப்படுத்துகின்ற குணங்களை அது பெற்றிருந்தது. அங்கு மெய்மறந்த மகிழ்ச்சி சிறிதளவாகவே இருந்தது. ஆனால் அதைவிட ஆழமாக இருதயத்தைத் தேடுதலும் பாவத்தை அறிக்கைசெய்தலும் உலகத்தை விட்டு விலகுதலும் இருந்தது. கர்த்தரைச் சந்திப்பதற்கான ஒரு ஆயத்தம் மனவேதனைமிக்க ஆத்துமாக்களின் பாரமாக இருந்தது. முயற்சிமிக்க ஜெபமும் தேவனுக்கென்று தடங்கலற்ற அர்ப்பணமும் இருந்தது. (5)

வேதவாக்கியச் சான்று முடிவானதாக இருந்தபோதிலும் நடுராத்திரியின் சத்தம் வாதங்களினால் அடித்துச்செல்லப்படாமல் இருந்தது. அதனுடன் சேர்ந்து ஆத்துமாக்களை அசைத்து உந்துகின்ற ஒரு வல்லமை சென்றிருந்தது. சந்தேகமும் கேள்வியும் இருக்கவில்லை. கிறிஸ்துவின் வெற்றிகரமான எருசலேமின் நுழைவின்போது, பண்டிகையைக் கொண்டாடுவதற்காக சகல இடங்களிலிருந்தும் மக்கள் ஒலிவ மலையின்மீது கூடியிருந்த நேரத்தில் இயேசுவைச் சூழ்ந்திருந்தவர்கள், அந்தக் கூட்டத்தினருடன் கலந்து அந்த நேரத்திற்கான ஆவியின் ஏவுதலை பற்றிக்கொண்டது, “கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்” (மத்தேயு 21:9) என்னும் சத்தத்தைப் உயர்த்த உதவினது. அதேவிதமாக தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆசையினாலும், பரிகசித்துச் சிரிப்பதற்காகவும், அட்வெந்து கூட்டங்களில் கலந்திருந்த விசுவாசமில்லாதவர்களில் சிலர் இதோ மணவாளன் வருகிறார் என்பதை அறிவித்திருந்த கூட்டத்தில் இருந்த, மனநிறைவை உண்டுபண்ணுகின்ற வல்லமையை உணரவும் செய்திருந்தனர். (6)

அந்த நேரத்தில் ஜெபத்திற்குப் பதில் கொண்டுவந்த விசுவாசம்—ஈடுசெய்யும் வெகுமதியை மதித்த விசுவாசமயிருந்தது. தாகமுள்ள பூமியின் மீது பெய்யும் மழையைப்போல, அக்கறையுடன் தேடியிருந்தவர்களின்மீது கிருபையின்ஆவி இறங்கியது. தங்களுடைய மீட்பருக்குமுன் முகமுகமாக விரைவில் நிற்கப்போவதை எதிர்பார்த்திருந்தவர்கள் சொல்லிமுடியாத பக்திவிநயமான மகிழ்ச்சியை உணர்ந்திருந்தனர். தேவமகிமையின் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்து, விசுவாசமும் நம்பிக்கையும் உள்ளவர்களை இழுத்துச்செல்லவே, மென்மைப்படுத்தும்—சாந்தப்படுத்தும் பரிசுத்தஆவியின் வல்லமை இருதயங்களை உருகச்செய்தது. (7)

அந்தத் தூதை கவனத்துடனும் பக்திவிநயத்துடனும் பெற்றிருந்தவர்கள், தங்களுடைய கர்த்தரை எதிர்பார்த்திருந்த நேரத்திற்குத்தக்கதாக எழும்பியிருந்தனர். தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறேன் என்ற சான்றினைப் பொறுவதே தங்களுடைய முதல்வேலையென்று ஒவ்வொருநாள் காலையிலும் அவர்கள் உணர்ந்திருந்தனர். அவர்களுடைய இருதயங்கள் நெருக்கமாக ஐக்கியப்பட்டிருந்ததினால் அவர்கள் தங்களுக்காகவும் ஒருவருக்கொருவருமாக ஜெபித்திருந்தனர். தேவனுடன் தொடர்புகொள்ளுவதற்காக அவர்கள் அடிக்கடி தனிமையான இடங்களில் ஒன்றுகூடியிருந்தனர். வயல்வெளிகளிலிருந்தும் தோப்புகளிலிருந்தும் ஏறெடுக்கப்பட்டிருந்த விண்ணப்பத்தின் குரல்கள் பரலோகத்திற்கு உயர்ந்துசென்றிருந்தது. இரட்சகரின் அங்கீகாரத்தின் நிச்சயம் அன்றாட உணவைவிட அவர்களுக்கு அதிக அவசியமாக இருந்தது. அவர்களுடைய மனங்களை ஒரு மேகம் இருளடையச் செய்திருந்ததால், அது அடித்துச்செல்லப்படும்வரை—நீக்கப்படும்வரை அவர்கள் ஓய்ந்திருக்கவில்லை. மன்னிக்கும் கிருபையின் சான்றினை அவர்கள் உணர்ந்தபோது, அவர்களுடைய ஆத்துமாக்கள் நேசித்தவரைக் காண்பதற்காக அவர்கள் ஏக்கமுடையவர்களாக இருந்திருந்தனர். (8)

## ஏமாற்றம்—ஆனால் கைவிடப்படவில்லை!

மேலும் அவர்கள் மனமடிவுக்கு விட்டுவிடப்பட்டிருந்தனர். எதிர்பார்த்திருந்த நேரம் கடந்துசென்றது. ஆனால் அவர்களுடைய இரட்சகர் தோன்றவில்லை. அவருடைய வருகையை அவர்கள் ஆசையாக நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தனர். இப்பொழுது இரட்சகரின் கல்லறையினிடத்திற்கு வந்து, அது வெறுமையாக இருப்பதைக் கண்டதும் “என் ஆண்டவரை எடுத்துக்கொண்டுபோய் விட்டார்கள். அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை” என்று அழுதுகொண்டு கூறியிருந்த மரியாளைப்போல அவர்களும் உணர்ந்திருந்தனர். (9)

ஒரு திகைப்பின் உணர்வும், அந்தத் தூது உண்மையாக இருக்கலாம் என்னும் பயமும், நம்பிக்கையில்லாத உலகத்தின்மீது அந்த நேரத்திற்கு ஒரு கட்டுப்பாட்டை உண்டுபண்ணியிருந்தது. அந்த நேரம் கடந்துசென்றவுடனே அது மறைந்துபோகவில்லை. ஏமாற்றமடைந்தவர்களின்மீது வெற்றியைக்காட்டிட அவர்கள் துணியவில்லை. ஆனால் தேவனுடைய கோபத்தின் அடையாளம் காணப்படாதபோது, அவர்கள் தங்களுடைய பயத்திலிருந்து விடுபட்டு மறுபடியும் நிந்திக்கவும் பரிகசிக்கவும் தொடங்கினார்கள். கிறிஸ்துவின் விரைவான வருகையின்மீது நம்பிக்கையுள்ளவர்களாக கூறிக்கொண்டிருந்த ஒரு பெரும் வகுப்பினர் தங்களுடைய விசுவாசத்தை மறுதலித்தனர். அதிகமான நம்பிக்கையை வைத்திருந்தவர்களில் சிலர், அவர்களுடைய பெருமையில் ஆழமாகக் காயமடைந்து, கர்த்தருடைய சமுகத்தைவிட்டு ஓடிப்போவதைப்போல உணர்ந்து யோனாவைப்போல தேவனைக் குறைகூறி, ஜீவனைவிட மரணத்தைத் தெரிந்துகொண்டனர். தேவனுடைய வார்த்தையின்மீது விசுவாசம் வைக்காமல் பிறரின் அபிப்பிராயங்களை அடிப்படையாகக்கொண்ட விசுவாசத்தை வைத்திருந்தவர்கள் இப்பொழுது தங்களுடைய கருத்துக்களை மாற்றிக்கொள்ள மறுபடியும் தயாராயிருந்தனர். பலவீனர்களையும் கோழைகளையும் ஏளனம் செய்பவர்கள் தங்களுடைய அணியில் சேர்த்துக்கொண்டனர். இனிமேல் எந்தவிதமான பயங்களும் எதிர்பார்த்தலும் இருக்காது என்று அறிவிப்பதில் அனைவரும் ஒன்றுபட்டனர். காலம் கடந்துசென்றுவிட்டது! கர்த்தர் வரவில்லை! உலகம் இதேவிதமாக—ஆயிரக்கணக்கான வருடங்களுக்கும்—அப்படியேதான் இருக்கும் என்று அவர்கள் நம்பினார்கள்! (10)

அக்கறையும் உண்மையுமிக்க விசுவாசிகள் கிறிஸ்துவுக்காக எல்லவற்றையும் விட்டுவிட்டு, இதற்குமுன் ஒருபோதும் இருந்திராதவிதத்தில் அவருடைய பிரசன்னத்தில் பங்குபெற்றிருந்தனர். அவர்கள் நம்பியிருந்த விதமாக உலகத்துக்கான கடைசி எச்சரிப்பை கொடுத்திருந்தனர். தங்களுடைய தெய்வீக எஜமான் பரலோக தூதர்கள் ஆகியோரின் சமுதாயத்தில் விரைவில் ஏற்றுக்கொள்ளப்படுவதை எதிர்பார்த்து, நம்பிக்கையில்லாதவர்களாக இருந்த திரளானவர்களைவிட்டுப் பெருமளவில் விலகியிருந்தனர். “கர்த்தராயிருக்கிற இயேசுவே, சீக்கிரமாக வாரும்” என்று அவர்கள் வலிமைமிக்க வாஞ்சையுடன் ஜெபித்திருந்தனர். ஆனால் அவர் வரவில்லை! இப்பொழுது வாழ்க்கையின் கவனங்கள், குழப்பங்கள் ஆகிய சுமையை மறுபடியும் சுமப்பதும், உலகத்தின் ஏளனம் செய்பவர்களின் ஏளனங்களையும் உறுமல்களையும் சகிப்பதும் விசுவாசம் பொறுமைபற்றிய ஒரு பயங்கரமான சோதனையாக இருந்தது. (11)

இருந்தபோதிலும், கிறிஸ்துவின் முதலாம் வருகையின் நேரத்தில் சீஷர்கள் அனுபவித்திருந்த ஏமாற்றத்தைவிட இது பெரிதாக இருக்கவில்லை. இயேசு எருசலேமிற்குள் வெற்றிகரமாக பவனி சென்றிருந்தபோது, அவர் தாவீதின் சிங்காசனத்தின்மீது அமர்ந்து, அவர்களை ஒடுக்குபவர்களிடத்திலிருந்து அவர்களை விடுதலை செய்யப்போகிறாரென்று அவரது அடியார்கள் நம்பியிருந்தனர். மேலான நம்பிக்கைகளுடனும் மகிழ்ச்சிகரமான எதிர்பார்ப்புக்களுடனும் தங்களுடைய அரசரின்மீதுள்ள கனத்தைக் காட்டுவதற்காக, அவர்கள் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டிருந்தனர். அநேகர் தங்களுடைய வஸ்திரங்களை, அவரது பாதையில் கம்பளங்களாக விரித்திருந்தனர். பேரீச்ச மரக்கிளைகளை அவருக்குமுன் பரப்பியிருந்தனர். தங்களுடைய உற்சாகமிக்க மகிழ்ச்சியில் "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!" என்று மகிழ்ச்சியுடன் ஒன்றுபட்டு ஆர்ப்பரித்தனர். (12)

இவ்வாறான களிகூருதலின் சத்தத்தினால் பரிசேயர்கள் தொல்லையும் கோபமும் அடைந்தபோது, இயேசு தமது சீஷர்களைக் கடிந்துகொள்ளவேண்டும் என்று அவர்கள் விரும்பினபோது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: "இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்" (லூக்கா 19:40) என்று பதில் கூறினார். தீர்க்கதரிசனம் நிறைவேறியாகவேண்டும். சீஷர்கள் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டிருந்தனர். இருந்தபோதும், கசப்பான ஏமாற்றத்திற்குள் அவர்கள் வீழ்ந்திருந்தனர். ஆனால் இரட்சகரின் வேதனைமிக்க மரணத்திற்கு சாட்சிகளாக இருந்து, அவரைக் கல்லறையில் வைத்து சிலநாட்கள் கழிந்திருந்தன. குறிப்பிட்ட ஒரு காரியத்தில் அவர்களுடைய எதிர்பார்ப்புகள் நிகழாமல்போகவே, அவர்களுடைய நம்பிக்கைகள் இயேசுவுடன்கூட மரித்தது. அவர்களுடைய கர்த்தர் வெற்றிகரமாகக் கல்லறையிலிருந்து வெளியே வரும்வரை, தீர்க்கதரிசனத்தினால் முன்னுரைக்கப்பட்ட யாவும் நிறைவேறவேண்டும் என்பதை அவர்களால் உணரமுடியவில்லை. "கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து திருஷ்டாந்தப்படுத்தினான்"—அப்போஸ்தலர் 17:3. இதே விதமாக, முதலாம், இரண்டாம் தூதர்களால் வந்த தூதுகள் நிறைவேறியிருந்தன. அவைகள் சரியான நேரத்தில் கொடுக்கப்பட்டு, நிறைவேறவேண்டுமென்று தேவன் திட்டம் செய்திருந்தபடியே அந்தப் பணி நிறைவேறியது. (13)

இயேசு வராமல் காலம் கடந்துசென்றுவிட்டால், அட்வெந்து முறையே முற்றிலுமாகக் கைவிட்டுவிடப்படும் என்பதை எதிர்பார்த்து,

உலகம் அதனை நோக்கியிருந்தது. ஆனால் பலத்த சோதனையின்கீழ் அநேகர் தங்களுடைய விசுவாசத்தை விட்டுவிட இணங்கினபோது, உறுதியாக நின்றிருந்த சிலர் இருந்திருந்தனர். அவர்களால் தங்களுடைய தீர்க்கதரிசனக்கணக்கில் எந்தவிதமாக தவறையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களுடைய நிலையைக் கவிழ்ப்பதற்கு அவர்களுடைய எதிரிகளில் மிகவும் திறமையானவர்களாலும் வெற்றிபெறமுடியாமலிருந்தது. எதிர்பார்த்திருந்த சம்பவத்தில் ஒரு தோல்வி இருந்தது என்பது உண்மைதான். ஆனால் அதனால்கூட அவர்கள் தேவனுடைய வாரத்தையின்மீது கொண்டிருந்த விசுவாசத்திலிருந்து அவர்களை அசைக்கமுடியவில்லை. தேவன் அவருடைய ஜனங்களைக் கைவிட்டுவிடவில்லை. அவர்கள் பெற்றிருந்த ஒளியைக் கண்மூடித்தனமாக மறுக்காமலிருந்து, அடவெந்து இயக்கத்தின்மீது வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டாமலிருந்தவர்களிடம ஆவி இன்னும் தங்கியிருந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் காலங்களின் ஊடாகப் பார்த்து, அந்த நெருக்கடியிலும் சோதிக்கப்பட்டுக் காத்திருந்தவர்களுக்கு தைரியத்தையும் எச்சரிப்பையும் கொடுக்கக்கூடிய வார்த்தைகளை எழுதியிருந்தான். “ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்”—எபிரெயர் 10:35–39. (14)

தேவனிடத்திலிருந்து அவர்கள் ஏற்கெனவே பெற்றுக்கொண்டிருந்த ஒளியைப் பேணுவது, அவரது வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்ளுவது, வேதவாக்கியங்களை ஆராய்வதில் தொடர்ந்திருப்பது, அதிகப்படியான ஒளியைப் பெறுவதற்காகப் பொறுமையுடன் காத்திருப்பது, விழித்திருப்பது மட்டுமே அவர்களுடைய ஒரே பாதுகாப்பான பாதையாக இருந்தது. (15) ★

# 53

# பரிசுத்தஸ்தலம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 375–378)**
**திருவசன ஆதாரம் : தானியேல் 8:14; எபிரெயர் 9:23–24**

“இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்” (தானியேல் 8:14) என்னும் வேதவாக்கிய அறிவிப்பு மற்றெல்லாவற்றையும்விட அட்வெந்து சத்தியத்தின் அஸ்திவாரமாகவும் மையத்தூணாகவும் இருந்தது. கர்த்தருடைய விரைவான வருகையின்மீது நம்பிக்கையுள்ளவர்களின் வழக்கமான வார்த்தையாக அது இருந்தது. ஆயிரக்கணக்கானவர்களின் உதடுகளிலிருந்த இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகள் அவர்களுடைய விசுவாசத்தின் சங்கேத வார்த்தைகளாக மகிழ்ச்சியுடன் திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருந்தன. காணும்படியாக அதில் கொண்டுவரப்பட்டிருந்த சம்பவங்கள் அவர்களது ஒளிமிக்க எதிர்பார்ப்புகளின்மீதும் அதிகமாகப் பேணியிருந்த நம்பிக்கையின்மீதும் சார்ந்ததாக இருந்தது என்பதை அனைவரும் உணர்ந்தனர். இந்தத் தீர்க்கதரிசனமானது 1844–ன் இலையுதிர் காலத்தில் முடிவடைவதாக இருந்தது என்பது காண்பிக்கப்பட்டிருந்தது. உலகப்பிரகாரமான மற்ற கிறிஸ்தவர்களுடன் பொதுவாகச் சேர்ந்து இந்த பூமி அல்லது அதின் சில பகுதி பரிசுத்தஸ்தலமாக இருந்தது என்றும், அந்தப் பரிசுத்தஸ்தலத்தைச் சுத்திகரிப்பது என்பது கடைசிப் பெரும் நாளில் பூமியை நெருப்பினால் சுட்டெரிப்பதாகும் என்றும், இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும் என்றும் அவர்கள் புரிந்திருந்தனர். எனவே 1944–ல் கிறிஸ்து மீண்டும் வந்தாகவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டிருந்தது. (1)

ஆனால் குறிக்கப்பட்டிருந்த நேரம் வந்தது. கர்த்தர் வரவில்லை. தேவனுடைய வார்த்தைகள் தவறக்கூடியவை அல்ல என்பதை விசுவாசிகள் அறிந்திருந்தனர். எனவே, தீர்க்கதரிசனத்தைப்பற்றிய அவர்களது விளக்கம் தவறானதாக இருக்கக்கூடும்! ஆனால் அந்தத் தவறு எங்கே இருந்தது? 2300 நாட்கள் 1844–ல் முடிவடைந்தன என்பதை மறுப்பதினால் அந்தச் சிக்கலின்

முடிச்சை அவிழ்க்க அநேகர் அவசரப்பட்டனர். அவர்கள் எதிர்பார்த்திருந்த நேரத்தில் கிறிஸ்து வரவில்லை என்பதைத்தவிர, இதற்கு வேறு காரணம் கொடுக்கமுடியவில்லை. தீர்க்கதரிசனநாட்கள் 1844–ல் முடிவடைந்திருந்தால், உலகத்தை அக்கினியால் தூய்மைப்படுத்துவதின்மூலமாக, பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிக்க கிறிஸ்து வந்திருக்கவேண்டும்; அவர் வராததால், அந்த நாட்கள் முடிவடைந்திருக்காது என்று அவர்கள் வாதம்செய்தனர். (2)

முன்னர் கணக்கிடப்பட்டிருந்த தீர்க்கதரிசனக் காலக்கணிப்புகளை விட்டுவிட்டு, அதன் அடிப்படையிலான அந்த இணக்கத்தின்சரியான தன்மையை அநேகர் மறுத்தபோதிலும், சிலர் வேதவாக்கியங்களினாலும், தேவாவியின் சாட்சியினாலும் தாங்கப்பட்டிருந்த விசுவாசத்தையும் அனுபவத்தையும் மறுக்க மனமற்றவர்களாக இருந்தனர். வேதவாக்கியங்களைப்பற்றின ஆராய்ச்சிகளின்போது, அவர்கள் சரியான விளக்கக் கொள்கைகளைப் பின்பற்றினதாகவும், ஏற்கனவே கண்டறியப்பட்டிருந்த உண்மைகளை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கவேண்டியது அவர்களது கடமையென்றும், அதே கொள்கையை இனிமேலும் தொடரவேண்டுமென்றும் நம்பினார்கள். வாஞ்சைமிக்க ஜெபத்துடன் தங்கள் நிலையை அவர்கள் திரும்பிப்பார்த்து, தவறு எங்கே இருக்கிறது என்பதைக் கண்டறிய வேதவாக்கியங்களை ஆராய்ந்தனர். அவர்களது காலக்கணக்குகளில் தவறைக் காணமுடியாதவர்களாக இருந்தபோது, பரிசுத்தஸ்தலம் என்னும் பொருளைக்குறித்து மிக அதிகமாக சோதித்தறியும்படி அவர்கள் நடத்தப்பட்டனர். (3)

அவர்களது சோதனையில், தேவனுடைய கட்டளையின்படி மோசே யினால் கட்டப்பட்டிருந்த, மலையிலே காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியேயான பரிசுத்தஸ்தலம், காணிக்கைகளும் பலிகளும் செலுத்தப்பட்டுவந்த இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனை எனவும், அதின் இரண்டு பரிசுத்த பகுதிகளும் "பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள்" எனவும் அறிந்துகொண்டனர். மேலும், கிறிஸ்து, "பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷ ரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிற பிரதான ஆசாரியராக" "மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே (கிறிஸ்துவானவர்) பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" என்றும் அறிந்துகொண்டனர். (எபிரெயர் 9:9,23; 8:5; 9:24.) (4)

## பூலோக—பரலோக பரிசுத்தஸ்தலங்கள்!

இயேசு நமக்காக ஊழியம் செய்யும் பரலோகத்திலுள்ள பரிசுத்தஸ்தலம் பெரும் மெய்யான கூடாரமாகவும், மோசே அமைத்த பரிசுத்தஸ்தலம் அதன் நகலாகவும் இருக்கிறது. பூமியிலிருந்த ஆசரிப்புக் கூடாரத்தில் பரிசுத்தஸ்தலம் மகா பரிசுத்தஸ்தலம் என்னும் இரு பகுதிகள் இருந்துபோல, பரலோகத்திலும் இரண்டு பரிசுத்தஸ்தல பகுதிகள் உள்ளன. தேவனுடைய பிரமாணங்கள் உள்ளே வைக்கப்பட்டுள்ள உடன்படிக்கைப்பெட்டி, தூபபீடம் மற்றும் ஆசரிப்புக்கூடார ஆராதனை முறைகளுக்காக உண்டுபண்ணப்பட்டிருந்த கருவிகள் பூமியிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தில் உள்ளன. பரிசுத்த தரிசனத்தில் அப்போஸ்தலனாகிய யோவான் பரரேலாகத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டான். அங்கு தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டபோது, குத்துவிளக்கையும் தூபபீடத்தையும் அவரது உடன்படிக்கைப்பெட்டியையும் அவன் கண்டான்.(வெளிப்படுத்தல் 4:5; 8:3; 11:19). (5)

இவ்வாறாக, இப்பொருள்பற்றி ஆராய்ந்தவர்கள், பரலோகத்தில் ஒரு பரிசுத்த ஸ்தலம் இருப்பதன் சான்றை வாக்குவாதம் செய்வதற்கு இடமின்றிக் கண்டனர். மோசே அவனுக்குக் காட்டப்பட்டதின் மாதிரியின்படியே பூமிக்குரிய ஆசரிப்புக்கூடாரத்தை உண்டுபண்ணினான். அதன் உண்மையான வடிவு, பரலோகத்திலுள்ள மெய்யான பரிசுத்தஸ்தலம் போன்றதென்று பவுல் அறிவிக்கிறான். அதை பரலோகத்தில் கண்டதாகவும் யோவான் சாட்சி பகருகிறான். (6)

2300 நாட்களின் முடிவில்—1844–ல், பூமியில் பரிசுத்தஸ்தலம் அநேக நூற்றாண்டுகளாக இல்லை. எனவே, “இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்” (தானியேல் 8:14) என்பதால் காட்சிக்குக் கொண்டுவரப்பட்ட பரிசுத்தஸ்தலம், கேள்விக்கிடமற்றவிதத்தில், பரலோகத்திலுள்ள பரிசுத்தஸ்தலமாகவே இருக்கவேண்டும். ஆனால், பரலோகத்திலுள்ள இந்தப் பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படுவதற்கான அவசியம் என்ன? அந்த சுத்திகரிக்கப்படுதல் என்பது, இயல்பான அசுத்தங்களைத் தூய்மைப்படுத்துவதாயிராமல், இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுகிறதான, பாவத்தை நீக்குவதையே குறிக்கிறது என்பதை மறுபடியும் வேத வாக்கியங்களைத் திருப்பிப்பார்த்த தீர்க்கதரிசன மாணவர்கள் அறிந்துகொண்டனர். “ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே” என்று பவுல் கூறுகிறான். (எபிரெயர் 9:23). (7)

**பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படுதல்!**

முந்தின காலங்களில் மக்களுடைய பாவங்கள் பாவநிவாரண பலியின் இரத்தத்தினால், உருவகமாக, பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுபோல, நமது பாவங்கள் உண்மையில் கிறிஸ்துவின் இரத்தத்தின்மூலம் பரலோக பரிசுத்தஸ்தலத்திற்கு மாற்றப்படுகிறது. பாவங்களினால் மாசுபடுத்தப்பட்டிருந்த பூமிக்குரிய பரிசுத்தஸ்தலம் உருவகமாகப் பாவங்களை நீக்குவதின்மூலம் சுதிகரிக்கப்பட்டிருந்ததுபோல, பரலோக பரிசுத்தஸ்தலம் சுததிகரிக்கப்படுவது என்பது, அங்கு பதிவுசெய்துவைக்கப்பட்டுள்ள ஆவணங்களிலிருந்து பாவங்களை நீக்குவதாக உள்ளது. (குலைத்துப்போடுவதாக உள்ளது). பாவத்திற்காக மனம் வருந்தினதின்மூலமாகவும், கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தின்மூலமாகவும், அவருடைய பாவ நிவாரணத்தின் நன்மைகளைப் பெறுவதற்கு எவர்கள் தகுதிபெற்றுள்ளனர் என்பதைச் சோதிப்பதை இது அவசியப்படுத்துகிறது. எனவே பரிசுத்தஸ்தலத்தை சுத்திகரிப்பதில் ஒரு நுட்ப நியாயவிசாரணை சம்பந்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்து அவருடைய ஜனங்களை மீட்டுக்கொள்வதற்காக வருமுன், இந்த வேலை நடைபெறவேண்டியதாக உள்ளது. ஏனெனில் அவர் வரும்போது, அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வரும் (வெளிப்படுத்தல் 22:12). (8)

இவ்வாறாக, 1844–ல் முடிவடைந்த 2300 நாட்களின் முடிவில் கிறிஸ்து இந்த பூமிக்கு வருவதற்குப் பதிலாக பரலோக மகா பரிசுத்தஸ்தலத்திற்குள், தேவனுடைய சமுகத்திற்குமுன் தமது வருகைக்கான ஆயத்தமாக பாவநிவாரணத்தின் இறுதி ஊழியத்தைச் செய்ய தேவ சமுகத்தில் பிரவேசித்திருக்கிறார் என்பதை தீர்க்கதரிசன வார்த்தையின் முன்னேறிச்செல்லும் ஒளியைப் பின்தொடர்ந்தவர்கள் கண்டார்கள். (9) ★

# 54

# மூன்றாம் தூதனின் தூது!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம்: 379–384)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 14:12; யாத்திராகமம் 20:8; வெளிப்படுத்தல் 13:16–17**

பரலோக மகா பரிசுத்தஸ்தலத்தில் பாவ நிவாரண ஊழியத்தின் கடைசிப்பகுதியைச் செய்வதற்காக இயேசு பிரவேசித்தபோது உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய இரக்கத்தின் தூதை அவர் தமது ஊழியக்காரர்களிடம் ஒப்படைத்தார். வெளிப்படுத்தின விசேஷம் 14–ம் அதிகாரத்திலுள்ள எச்சரிப்பு அப்படிப்பட்டதாக உள்ளது. அதின் அறிவிப்பை உடனே பின்தொடர்ந்து உலகத்தின் அறுவடையை நடப்பிப்பதற்காக மனுஷகுமாரன் வருவது தீர்க்கதரிசியால் காணப்பட்டுள்ளது. (1)

வேத வாக்கியங்களில் முன்னுரைக்கப்பட்டிருந்தபடி, 1844–ல் தீர்க்கதரிசன நாட்கள் முடிவடைந்தபோது, பரலோக மகா பரிசுத்தஸ்தலத்தில் கிறிஸ்துவின் ஊழியம் ஆரம்பமானது. இந்த நேரத்திற்கு வெளிப்படுத்தல்காரனின் வார்த்தைகள் பொருந்துகின்றன. “அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின்பெட்டி காணப்பட்டது” (வெளிப்படுத்தல் 11:19). தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி பரிசுத்தஸ்தலத்தின் இரண்டாவது பகுதியில்—மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறது. பாவியின் சார்பில் ஊழியஞ்செய்வதற்காகக் கிறிஸ்து இதற்குள் பிரவேசித்தபோது, மகா பரிசுத்தஸ்தலம் திறக்கப்படவே, தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி காட்சிக்குக் கொண்டுவரப் பார்த்தவர்களுக்கு அவருடைய மகத்துவமும் வல்லமையும் வெளிப்படுத்தப்பட்டது. அவருடைய மகிமையின் பெருக்கு ஆலயத்தை நிரப்பினபோது, மகா பரிசுத்தஸ்தலத்திலிருந்து வந்த ஒளி, பூமியின்மீது காத்திருந்த அவரது ஜனங்களின்மீது வீசப்பட்டது. (2)

அவர்கள் தங்களுடைய பிரதான ஆசாரியரை விசுவாசத்தினால் பரிசுத்தஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்தஸ்தலத்திற்குப் பின்தொடர்ந்திருந்தனர்.

அவர் தமது இரத்தத்துடன் உடன்படிக்கைப்பெட்டிக்குமுன் நின்று பரிந்துபேசுவதை அவர்கள் கண்டனர். சீனாய் மலையின்மீது இடி முழக்கங்களுக்கிடையில் தேவனால் பேசப்பட்டிருந்த கற்பலகைகளின்மீது அவரது சொந்த விரலினால் எழுதப்பட்டிருந்த பிதாவின் கற்பனை, உடன்படிக்கைப்பெட்டிக்குள் இருந்தது. ஒரு கற்பனைகூட மதிப்பற்றதாகிவிடவில்லை. ஒரு வார்த்தையோ அல்லது ஒரு எழுத்தின் உறுப்போ, அதிலிருந்து மாற்றப்படவில்லை. தேவன் மோசேக்கு அவரது நியாயப்பிரமாணத்தின் ஒரு பிரதியைக் கொடுத்திருந்தபோது, அதின் மூலப்பிரதியை (Original) மேலே உள்ள பரிசுத்தஸ்தலத்தில் பாதுகாத்து வைத்திருந்தார். சத்தியத்தைத் தேடியிருந்தவர்கள் பத்துக்கற்பனைகளை ஒவ்வொன்றாகத் தேடியிருந்தபோது, அந்தக் கற்பனைகளின் மையத்தில்—இருதயத்தில்: "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்." (யாத்திராகமம் 20:8–11) என்று முன்னே அறிவிக்கப்பட்டிருந்ததைப்போல நான்காவது கற்பனை இருப்பதைக் கண்டார்கள். (3)

வேதவாக்கியங்களின் மாணவர்களாக இருந்த இவர்களது இருதயங்களை தேவ ஆவியானவர் உணர்த்தினார். அவர்கள் தங்களுடைய அறியாமையினால், சிருஷ்டிகரின் நாளைக் கருதலாமலிருந்ததினால் நான்காவது பிரமாணத்தை மீறியிருந்தனர் என்னும் மன உணர்த்துதல் அவர்கள்மீது வற்புறுத்தப்பட்டிருந்தது. தேவன் பரிசுத்தப்படுத்தியிருந்த நாளை ஆசரிப்பதற்குப் பதிலாக வாரத்தின் முதல் நாளை ஆசரித்திருந்ததற்கான காரணங்களைச் சோதிக்க ஆரம்பித்தனர். நான்காவது பிரமாணம் நீக்கப்பட்டுவிட்டது அல்லது ஓய்வுநாள் நீக்கப்பட்டுவிட்டது என்பதற்கான எந்தச் சான்றையும் அவர்களால் காணமுடியவில்லை. ஏழாவது நாளை முதலில் பரிசுத்தப்படுத்தியிருந்த ஆசீர்வாதம் ஒருபோதும் நீக்கப்பட்டிருக்கவில்லை. தேவனுடைய சித்தத்தை அறியவும் அதன்படிச் செய்யவும் அவர்கள் நேர்மையுடன் வகைதேடியிருந்தனர். இப்பொழுது அவர்கள் தாங்களே நியாயப்பிரமாணத்தை மீறினவர்களாக இருப்பதைக் காணவே, துயரம்

அவர்களது இருதயங்களை நிரப்பியது ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிப்பதின்மூலம் தேவன்மீதுள்ள தங்களுடைய இராஜவிசுவாசத்தைத் தெளிவாகக் காட்டுவதற்கு அவர்கள் முதிர்ந்தனர். (4)

அவர்களுடைய விசுவாசத்தைக் கவிழ்ப்பதற்கு அநேக அக்கறைமிக்க முயற்சிகள் செய்யப்பட்டிருந்தன. பூலோக பரிசுத்தஸ்தலம் பரலோக பரிசுத்தஸ்தலத்தின் ஒரு மாதிரியாக இருந்தால் பூமியிலுள்ள உடன்படிக்கைப்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த நியாயப்பிரமாணம் பரலோகத்திலுள்ள உடன்படிக்கைப்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் நியாயப்பிரமாணத்தின் மாற்று எழுத்தாக இருக்கும். பரலோகத்தின் பரிசுத்தஸ்தலத்தில் உள்ள சத்தியத்தை ஏற்றுக்கொள்வது என்பது தேவனுடைய நியாயப்பிரமாணம் பாராட்டும் உரிமையையும் நான்காவது கற்பனையிலுள்ள கடமையையும் ஒப்புக்கொள்வதாகும் என்பதை யாராலும் கண்டுகொள்ளாமலிருக்க முடியாது. (5)

கிறிஸ்துவின் மத்தியஸ்தம் பிரமாணங்களின் நித்தியத்துவம் ஆகியவைபற்றிய ஒளியை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள், மூன்றாம் தூதனின் தூதினால் பார்வைக்குக்கொண்டுவரப்பட்டிருந்த சத்தியங்கள் இவையாக இருந்தன என்று கண்டனர். “தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிற பரிசுத்தவான்கள்” இங்கே உள்ளனர் (வெளிப்படுத்தல் 14:12) என்று தூதன் அறிவிக்கிறான். பக்திவிநயமும் பயங்கரமுமான ஒரு எச்சரிப்பு இந்த அறிக்கைக்குமுன் கொடுக்கப்பட்டுள்ளது. “மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.” (வெளி. 14:9,10). இந்தத் தூதைப் புரிந்துகொள்ளுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களைப்பற்றிய ஒரு விளக்கம் அவசியமானதாயிருந்தது. மிருகம்—சொரூபம்—முத்திரை என்பவைகளால் என்ன எடுத்துக்காட்டப்பட்டிருந்தது? சத்தியத்தைத் தேடியிருந்தவர்கள், மறுபடியும் தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்திடத் திரும்பினார்கள். (6)

## மிருகமும் அதின் சொரூபமும்!

தனக்கு எதிராக மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கும் அனைவரையும் தண்டிக்கும் அரசியல் அதிகாரம் என்னும் உடையை அணிந்துகொண்டிருக்கும் ஒரு மதச்சம்பந்தமான அமைப்பாக முதலாம் மிருகத்தினால் ரோமன் கத்தோலிக்க சபை எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அதேவிதமான வல்லமைகளை அணிந்துகொண்டுள்ள மதச்சம்பந்தமான வேறொரு அமைப்பைச் சொரூபம் எடுத்துக்காட்டுகிறது. இந்தச் சொரூபம் உண்டுபண்ணப்படுதல் என்பது மிருகத்தின் வேலையாக உள்ளது. மிருகத்தின் அமைதியான வளர்ச்சியும் அதன் மென்மையான நடத்தைகளும், அது அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சுட்டிக்காட்டுகின்ற பொருத்தமான ஒரு அடையாளமாக உள்ளது. போப்பு மார்க்கத்தின் ஒரு சொரூபம் இங்கே காணப்படவேண்டியதாக இருக்கிறது. நமது நாட்டின் (USA) சபைகள் தங்களுடைய பொது விசுவாச விஷயங்களின் அடிப்படையில் ஒற்றுமைப்படும்போது அவைகளின் கட்டளைகளை வற்புறுத்தவும் அவைகளின் அமைப்புக்களைத் தாங்கவும் செய்யும்படி, அமெரிக்க நாட்டின்மீது தனது செல்வாக்கைப் பயன்படுத்தும்போது, ரோமன் கத்தோலிக்க மதத் தலைமைக்கு புரொட்டஸ்டாண்டு அமெரிக்கா ஒரு சொரூபத்தை உண்டுபண்ணியிருக்கும். அப்பொழுது தேவனுடைய பண்டைய ஜனங்கள் உபத்திரவப்படுத்தப்பட்டிருந்ததுபோல, உண்மையான சபை உபத்திரவத்தினால் தாக்கப்படும். (7)

ஆட்டுக்குட்டியைப்போன்ற கொம்புகளுடைய மிருகம் “அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன்தவிர வேறொருவனும்கொள்ளவும்விற்கவுங்கூடாதபடிக்கும்” (வெளிப்படுத்தல் 13:16,17) கட்டளையிடுகிறது. இதுதான் மூன்றாம் தூதன் தனது எச்சரிக்கையைக் கொடுக்கும் முத்திரையாக உள்ளது. இது முதலாம் மிருகத்தின் அல்லது போப்புமாக்கத்தின் முத்திரையாக இருக்கிறது. எனவே அந்த வல்லமையின் தனித்தன்மைவாய்ந்த குணங்களுக்கிடையே இதைத் தேடவேண்டியதாக உள்ளது. சின்னக்கொம்பினால் குறிப்பிடப்பட்டிருந்த ரோமன் கத்தோலிக்க சபை காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைக்கும் என்று தானியேல் அறிவித்தான் (தானியேல் 7:25). பவுல் அதனைத் தன்னைத்தான் தேவனுக்கு மேலாக உயர்த்துகின்ற பாவமனுஷன் என்று அடையாளப்படுத்தினான். (2 தெசலோனிக்கேயர் 2:3,4). தேவனுடைய பிரமாணத்தை மாற்றினதால்மட்டுமே அதினால் தன்னை தேவனுக்கு மேலாக

உயர்த்தமுடியும். இவ்விதமாக மாற்றப்பட்ட பிரமாணத்தை எவர்களெல்லாம் புரிந்துகொண்டவர்களாக கைக்கொள்ளுகின்றனரோ, அவர்கள் எந்தவொரு வல்லமையினால் அந்த மாற்றம் உண்டுபண்ணப்பட்டதோ, அதற்கு மேலான கனத்தைக் கொடுக்கின்றவர்களாக இருப்பார்கள். (8)

ரோமன் கத்தோலிக்க சபையால் மாற்றிவைக்கப்படும்படி முயலப்பட்ட நான்காவது கற்பனைமட்டுமே வானத்தையும் பூமியையும் படைத்த சிருஷ்டிகரைச் சுட்டிக்காட்டுகின்ற பத்துக்கற்பனைகளில் ஒன்றாக இருந்து, இவ்விதமாக மற்ற தவறான எல்லா தெய்வங்களிலிருந்தும் மெய்யான தேவனை வெளிப்படுத்திக் காட்டுகிறது! சிருஷ்டிப்பை நினைவுகூரும்படி, ஓய்வுநாள் ஏற்படுத்தப்பட்டு, இவ்விதமாக மனிதர்களின் மனங்களை உண்மையும் ஜீவனுமுள்ள தேவனிடத்திற்குத் திருப்புகிறது. இஸ்ரவேலின் தேவன்தான் மற்றெல்லா அஞ்ஞான தெய்வங்களையும்விட மேலானவராக இருக்கிறார் என்பதின் சான்றாக, வேதவாக்கியங்கள் முழுவதிலும் அவரது படைக்கும் வல்லமையைப்பற்றிய உண்மை குறிப்பிடப்பட்டுள்ளது. யுகம்நெடுகிலும் எப்பொழுதும் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டு வந்திருந்தால், மனிதனுடைய எண்ணங்களும் பற்றுகளும் பக்திக்கும் தொழுகைக்குமுரிய ஒருவராக உள்ள அவனது சிருஷ்டிகரிடம் நடத்தப்பட்டிருக்கும்; ஒரு விக்கிரக ஆராதனைக்காரனோ, நாஸ்திகனோ அல்லது சந்தேகவாதியோ ஒருபோதும் இருந்திருக்கமாட்டான்! (9)

தேவனை சிருஷ்டிகர் என்று சுட்டிக்காட்டும் அந்த ஏற்பாடு, அவர் படைத்தவர்களின்மீதுள்ள அவரது உரிமையுள்ள அதிகாரத்தின் ஒரு அடையாளமாக இருக்கிறது. ஓய்வுநாளை மாற்றினதை ரோமன் கத்தோலிக்க சபையின் முத்திரையாக அல்லது அதிகாரமாகப் புரிந்துகொண்ட எவர்கள் உண்மையான ஓய்வுநாளுக்குப் பதிலாக தவறான ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதைத் தெரிந்துகொள்ளுகிறார்களோ அவர்கள் அதனால் எந்த வல்லமை அந்தக் கட்டளையைக் கொடுத்ததோ, அதற்கு வழிபாடு செய்பவர்களாக இருப்பார்கள். (10)

### பக்திவிநயமான ஒரு தூது!

அழிவுக்கு உரியவர்களுக்கு எதிராகக் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்புக்களில் மிக அதிக பயங்கரமான எச்சரிப்பு, மூன்றாம்தூதனின் தூதில் அடங்கியுள்ளது. இரக்கம் கலவாத தேவனுடைய கோபத்தை கீழே அழைக்கும் பயங்கரமான பாவமாக அது இருந்தாகவேண்டும். முக்கியமான இந்தக் காரியம்பற்றி மனிதர்கள் இருளில் விட்டுவிடப்படக்கூடாது. அவர்கள் ஏன் துன்பப்படவுள்ளனர் என்பதை அறிந்துகொள்ளவும், அவைகளிலிருந்து

தப்பித்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும், தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடைபெறுவதற்குமுன், பாவத்திற்கெதிரான இந்த எச்சரிப்பு உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டியதாக உள்ளது. (11)

இந்த மாபெரும் போட்டியின் காரியத்தில் தெளிவான ஒன்றுக்கொன்று எதிரான இரு வேறுபட்ட வகுப்புகள் வளர்ந்துள்ளன. ஒரு வகுப்பினர் மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கி, அதின் முத்திரையைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். இவ்வாறாக, மூன்றாம் தூதனால் அச்சுறுத்தப்பட்ட பயங்கரமான நியாயத்தீர்ப்பை தங்கள்மீது தாங்களாகவே கொண்டுவருகின்றனர். உலகத்துடன் ஒப்பிடப்படும்போது அடுத்த வகுப்பினர் தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாக உள்ளனர். (வெளிப்படுத்தல் 14:12). மூன்றாம் தூதனுடைய தூதைப் பெற்றுக்கொண்டவர்கள்முன் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த சத்தியங்கள் திறக்கப்பட்டிருந்தன. இரண்டாம் வருகையைப்பற்றி அவர்கள் முதலில் அறிவித்ததிலிருந்து, 1844–ல் கடந்துசென்றிருந்த காலம்வரையுள்ள அவர்களது அனுபவங்களை அவர்கள் திருப்பிப்பார்த்தபோது, அவர்களுடைய ஏமாற்றம் விளக்கப்பட்டிருந்ததை கண்டனர். அதினால் நம்பிக்கையும் சந்தோஷமும் அவர்களது இருதயங்களை அசையச்செய்தன. கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவைகளைப்பற்றி பரிசுத்தஸ்தலத்திலிருந்து பிரகாசித்த ஒளியானது அவர்களை ஒளிபெறச்செய்தது. தேவன் தமது தவறாத தெய்வீக ஏற்பாட்டினால் அவர்களை நடத்தியிருந்தார் என்பதை அவர்கள் அறிந்தனர். இப்பொழுது மூன்றாம் தூதனின் எச்சரிப்பைக் கொடுக்க அவர்கள் புதிய தைரியத்துடனும் உறுதியான விசுவாசத்துடனும் ஒன்றுபட்டனர். மூன்றாம் தூதனின் தூதின் நிறைவேறுதலாக 1844–லிலிருந்து உண்மையான ஓய்வுநாளைப்பற்றிய கவனத்திற்கு உலகம் அழைக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய பரிசுத்தநாளை ஆசரிப்பதற்கு தொடர்ச்சியான எண்ணிக்கையில் அதிகமானவர்கள் திரும்பிவந்துகொண்டிருக்கின்றனர். (12) ★

# 55

# ஒரு உறுதியான மேடை!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 385–387)**
**திருவசன ஆதாரம் : மத்தேயு 27:51; 2 பேதுரு 3:3–4.**

ஏற்படுத்தப்பட்டிருந்த அமைப்பின் விசுவாசத்தைச் சீர்குலைக்க முயன்றிருந்தவர்களுக்குத் தங்களுடைய முகத்தைக் காட்டாமல் ஒரு கூட்டத்தினர் தங்களை நன்றாகக் காத்துக்கொண்டவர்களாகவும் உறுதி உள்ளவர்களாகவும் இருந்ததை நான் கண்டேன். ஆதரவுடன் தேவன் அவர்களை நோக்கினார். முதலாம் இரண்டாம் மூன்றாம் தூதுகள் என்னும் மூன்று படிகளை நான் கண்டேன். இந்தத் தூதுகளின் ஒரு பகுதியை நீக்கவோ, அசைக்கவோ அல்லது ஊசிமுனையளவுகூட குழப்பவோ முயல்பவனுக்கு ஐயோ! இந்தத் தூதுகளை உண்மையாகப் புரிந்து கொள்ளுதல் ஜீவாதாரமான முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது. அவைகளை மனிதர்கள் பெற்றுக்கொள்ளும்விதத்தில் அவர்களுடைய முடிவு அமையும் என்று என்னுடனிருந்த தூதன் கூறினான். (1)

இந்தத் தூதுகளின் மூலமாக, நான் கீழே கொண்டுவரப்பட்டு, தேவனுடைய ஜனங்கள் விலைகொடுத்து வாங்கியிருந்த அனுபவங்கள் எவ்வளவு அருமையானவை என்பதைக் கண்டேன். மிகுந்த பாடுகள், கடுமையான போராட்டம் ஆகியவைகளின்மூலமாக, அது அடையப் பட்டிருந்தது. அவர்கள் அசையாத ஒரு உறுதியான மேடையின்மீது நிற்கும்வரை, தேவன் அவர்களைப் படிப்படியாக நடத்தியிருந்தார். தனிப்பட்டவர்கள் அந்த மேடையைச் சமீபித்து, அதன் அஸ்திவாரத்தை சோதிப்பதை நான் கண்டேன். சிலர் உடனே களிகூர்தலுடன், அதின்மேல் தவறுகாண ஆரம்பித்தனர். அந்த மேடையில் முன்னேற்றம் செய்யப்பட்டால், அது அதிகமாகப் பூரணமாயிருக்கும், மக்களும் அதிகமான மகிழ்ச்சியை உடையவர்களாக இருப்பார்கள் என்று அவர்கள் விரும்பினார்கள். (2)

சிலர் அந்த மேடையை சோதிப்பதற்காக அதைவிட்டுக் கீழே இறங்கிச் சென்று, அது தவறாகப் போடப்பட்டிருக்கிறது என்று அறிவித்தனர். ஆனால்

மேடையின்மீது ஏறத்தாழ, உறுதியாக நின்றிருந்தவர்கள் அதைவிட்டுக் கீழே இறங்கினவர்களிடம், அவ்வாறு குறைகூறுவதை விட்டுவிடவேண்டும் என்று கூறினதை நான் கண்டேன். ஏனெனில் தேவன் அதனைக் கட்டினவராக இருந்தார்; அவர்கள் அவருடன் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர்! அவர்களை உறுதியான மேடைக்கு நடத்தியிருந்த தேவனுடைய ஆச்சரியமான செயலைத் திரும்பவும் எண்ணி, அவர்கள் ஒன்றுபட்டு, தங்களுடைய கண்களை வானத்திற்கு நேராக உயர்த்தி, உரத்த குரலுடன் தேவனை மகிமைப்படுத்தினார்கள். குறைகூறி அந்த மேடையை விட்டுச் சென்றிருந்த சிலரை இது பாதிக்கவே, அவர்கள் தாழ்மையான பார்வையுடன் மறுபடியும் அதன்மீது ஏறினார்கள். (3)

**யூதர்களின் அனுபவம் திரும்பவும் நடைபெறுகிறது!**

கிறிஸ்துவின் முதலாம் வருகையைப்பற்றிய அறிவிப்பைப் பார்க்கும்படி நான் பின்னாகச் சுட்டிக்காட்டப்பட்டேன். இயேசுவிற்கான பாதையை ஆயத்தம்செய்யும்படி யோவான், எலியாவின் ஆவியுடனும் வல்லமையுடனும் அனுப்பப்பட்டிருந்தான். யோவானின் போதனைகளை நிராகரித்தவர்கள் இயேசுவின் போதனைகளினால் பயன்பெறாதவர்களாக இருந்தனர். அவருடைய வருகையை முன்னிறிவித்திருந்த தூதுக்கு அவர்கள் காட்டியிருந்த எதிர்ப்பினால், அவர்தான் (இயேசுதான்) மேசியா என்னும் பலத்த சான்றினை உடனே அவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. யோவானின் தூதை நிராகரித்தவர்களை, இன்னும் மேலாகச் சென்று இயேசுவை நிராகரித்துக் கொலைசெய்யும்படிச் சாத்தான் நடத்தினான். இதை அவர்கள் செய்ததினால், பரலோக பரிசுத்தஸ்தலத்திற்கான பாதையைப்பற்றி அவர்களுக்குப் போதித்திருந்திருக்கக்கூடிய பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாத இடத்தில் அவர்களை அவர்களாகவே வைத்தனர். (4)

தேவாலயத்தின் திரைச்சீலை கிழிக்கப்பட்டது, யூத பலிமுறைகளும் (தற்காலிகமாயிருந்த) சட்டதிட்டங்களும் இனிமேல் செய்யப்படவேண்டிய அவசியம் இல்லை என்பதைக் காட்டியது. பெரும் தியாகபலி செலுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டாகிவிட்டது. பெந்தெகொஸ்தே நாளில் கீழே இறங்கியிருந்த பரிசுத்தஆவி, சீஷர்களின் மனங்களைப் பூலோக பரிசுத்தஸ்தலத்திலிருந்து, இயேசுவின் பாவநிவாரணத்தின் நன்மைகள் அவரது சீஷர்களின்மீது பொழியப்படும்படி கிறிஸ்து தமது சொந்த இரத்தத்துடன் பிரவேசித்திருந்த பரலோக பரிசுத்தஸ்தலத்திற்கு எடுத்துச் சென்றிருந்தது. ஆனால் யூதர்கள் மொத்தமான இருளுக்குள் விட்டுவிடப்பட்டு இருந்தனர். இரட்சிப்பின் திட்டத்தின்மீது அடைந்திருக்கக்கூடிய முழு

ஒளியையும் அவர்கள் இழந்துவிடவே, தொடர்ச்சியாக அவர்களது பயனற்ற பலிமுறைகளின்மீதும் சடங்காச்சாரங்களின்மீதும் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்திருந்தனர். பூலோக பரிசுத்தஸ்தலத்தின் இடத்தைப் பரலோக பரிசுத்தஸ்தலம் எடுத்துக்கொண்டது. ஆனாலும் இந்த மாறுதலைப்பற்றிய அறிவே இல்லாதவர்களாக அவர்கள் இருந்திருந்தனர். ஆகையால் பரிசுத்தஸ்தலத்தில் நடைபெற்றிருந்த கிறிஸ்துவின் மத்தியஸ்தத்தினால் உண்டாகக்கூடிய நன்மைகளை அவர்களால் அடைந்து கொள்ளமுடியவில்லை. (5)

யூதர்கள் கிறிஸ்துவை நிராகரித்துச் சிலுவையில் அறைந்ததை அநேகர் ஆழ்ந்த வெறுப்புடன் பார்க்கின்றனர். வெட்கக்கேடான அந்த அத்துமீறல்களைப்பற்றிய வரலாற்றை அவர்கள் வாசிக்கும்போது, அவரை நேசிப்பதாக நினைத்துக்கொண்டு பேதுரு அவரை மறுதலித்ததுபோல, தாங்கள் அவரை மறுதலித்திருந்திருக்க மாட்டார்களென்றும், அல்லது யூதர்கள் அவரைச் சிலுவையில் அறைந்ததுபோல தாங்கள் செய்யமாட்டார்களென்றும் நினைக்கின்றனர். (6)

ஆனால் இயேசுவின்மீதுள்ள அன்பை உணருவதாக அவர்கள் கூறிக்கொள்ளுவதை எல்லாருடைய இருதயங்களையும் சோதிக்கும் தேவன் சோதனைக்குக் கொண்டுவந்தார். முதலாம் நூற்றாண்டின் தூது வரவேற்கப்படுவதைப் பரலோகம் முழுவதும் ஆழ்ந்த விருப்பத்துடன் கவனித்திருந்தது. ஆனால் இயேசுவை நேசிப்பதாகக் கூறிக்கொண்டிருந்து, சிலுவையின் கதையை வாசித்தபோது கண்ணீர்விட்டிருந்த அநேகர், அவரது வருகையைப்பற்றிய நற்செய்தியைக்கேட்டபோது ஏளனமாகச் சிரித்தனர். மகிழ்ச்சியுடன் அந்தத் தூதைப் பெற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக, அது ஒரு பொய்த்தோற்றம் என்று அவர்கள் அறிவித்தனர். அவரது வருகையை நேசித்திருந்தவர்களை அவர்கள் வெறுத்து, சபைகளிலிருந்து அவர்களை வெளியில்விட்டு அடைத்திருந்தனர். முதலாவது தூதை நிராகரித்தவர்களால், இரண்டாவது தூதின் நன்மைகளை அடையமுடியவில்லை. பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்தஸ்தலத்திற்கு விசுவாசத்துடன் இயேசுவுடனேகூடப் பிரவேசிப்பதற்கு ஆயத்தம்செய்வதாக இருந்த நடுராத்திரியின் சத்தத்தினாலும் அவர்கள் நன்மை அடையவில்லை. முந்தின இரண்டு தூதுகளையும் அவர்கள் நிராகரித்ததினால், அவர்களுடைய புரிந்துகொள்ளுதல் இருளடைந்துவிடவே, மகா பரிசுத்தஸ்தலத்திற்கான பாதையைக் காட்டுகின்ற மூன்றாம் தூதில் அவர்களால் ஒளியைக் காணமுடியவில்லை. (7) ★

# 56

# சாத்தானின் தந்திரங்கள்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 388–392)**
**திருவசன ஆதாரம் : எசேக்கியேல் 18:4.**

சாத்தான் அவனுடைய வஞ்சகத்தை ஏதேனில் ஆரம்பித்தான்! "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று அவன் ஏவாளிடம் கூறினான். "ஆத்துமா அழியாது" என்னும் சாத்தானின் முதல் பாடமாக அது இருந்தது. அவன் இந்த வஞ்சகத்தை அந்த நேரத்திலிருந்து நிகழ்காலம்வரை தொடர்ந்து கொண்டுசென்றிருக்கிறான். தேவனுடைய ஜனங்களின் அடிமைத்தனம் திருப்பப்படும்வரை, அவன் இதனைத் தொடர்ந்து கொண்டுசெல்லுவான். ஏதேனிலிருந்த ஆதாமும் ஏவாளும் எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டனர். விலக்கப்பட்டிருந்த மரத்தில் அவர்கள் பங்குபெற்றனர். அப்பொழுது, அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து, அழிவில்லாத பாவிகளாக இருந்துவிடக்கூடாது என்பதற்காக அந்தத் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டனர். ஜீவவிருட்சத்தைச் சுற்றிக் காவல்செய்யும்படி வீசிக் கொண்டிருக்கிற சுடரொளிப்பட்டயம் வைக்கப்பட்டது. அந்த மரத்தின் கனி அழிவில்லாமையைத் தரக்கூடியதாய் இருந்தது. ஆதாமின் குடும்பத்தில் எவர்களாவது அந்த சுடரொளிப் பட்டயத்தைக் கடந்துசென்று, ஜீவவிருட்சத்தின் கனியில் பங்குபெற்றுள்ளனரா? என்று ஒரு தேவதூதன் மற்றொரு தூதனிடம் வினவியதை நான் கேட்டேன்; அதற்கு மறுமொழியாக: ஆதாம் குடும்பத்தைச் சேர்ந்த எந்த ஒரு நபரும் சுடரொளிப் பட்டயத்தைக் கடந்துவந்து, ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து, மரணமில்லாத நித்திய பாவியாக இருக்கவில்லை என்று கூறினான்; எனவே, சாவாமை உடைய ஒரு பாவியும் இல்லை. பாவம் செய்கிற ஆத்துமா நித்திய மரணத்தை அடையும்; உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கையில்லாத ஒரு மரணமாக அது இருக்கும். அப்பொழுது தேவகோபம் சமாதானப்படுத்தப்படும். பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக்கியேல் 18:4) என்ற தேவனுடைய வார்த்தையை, பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாவதில்லை, அது நித்தியகாலமாகத் துன்பத்திற்குள் இருக்கும் என்று நம்பும்படிச் செய்வதில்

சாத்தான் வெற்றியடைந்திருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. வேதனையுடனானாலும் சரி, மகிழ்ச்சியுடனானாலும் சரி, ஜீவன் என்பது ஜீவனாகவே இருக்கிறது. மரணம் என்பது வேதனையும் சந்தோஷமும் வெறுப்பும் இல்லாததாக இருக்கிறது என்று தேவதூதன் கூறினான். (1)

நீங்கள் சாகவே சாவதில்லையென்று ஏதேனிலிருந்த ஏவாளிடம் கூறியிருந்த அதே பொய்யை, மீண்டும் மீண்டும் பரப்பும்படி சாத்தான் அவனுடைய தூதர்களிடம் கூறினான். அந்தத் தவறு மக்களால் பெற்றுக்கொள்ளப்பட்டபோது, மனிதன் சாவாமை உடையவனாக இருக்கிறான் என்றும், பாவி நித்திய காலமாகத் துன்பத்திற்குள் வாழ்ந்துகொண்டிருப்பான் என்றும் நம்பும்படி சாத்தான் அவர்களை நடத்தினான். அதன்பின் தேவனை பழிவாங்கும் ஒரு கொடுங்கோலனாகவும், அவரைப் பிரியப்படுத்தாத அனைவரையும் நரகத்தில் மூழ்கச்செய்கிறவராகவும், அவருடைய கோபத்தை அவர்கள் எப்பொழுதும் உணரும்படிச்செய்பவராகவும், சொல்லிமுடியாத வேதனையை அவர்கள் அனுபவித்து, அக்கினி ஜுவாலையில் நெளியும்போது, அவர்களை திருப்தியுடன் பார்ப்பவராகவும் தனது தூதர்களின்மூலமாகக் காட்டும்படிச் செய்கின்ற பாதை சாத்தானால் ஆயத்தம் செய்யப்பட்டது. இந்தத் தவறு ஏற்றுக்கொள்ளப்படுமானால், நேசிக்கப்பட்டுப் போற்றப்படுவதற்குப் பதிலாக, அநேகரால் தேவன் வெறுக்கப்படுவார். இப்படியாக தேவனுடைய வார்த்தையில் காணப்படும் அச்சுறுத்தல்கள் எழுத்தின்படி நிறைவேறாது என்று நம்பும்படி நடத்தப்படுவார்கள். ஏனெனில் அவரால் படைக்கப்பட்டவர்களை நித்திய வேதனைக்குள் மூழ்கடிப்பது என்பது அனுதாபமும் அன்பும்மிக்க அவரது சுபாவத்திற்கு எதிரானது என்று நம்பும்படி நடத்தப்படுவார்கள் என்பதைச் சாத்தான் அறிந்திருந்தான். (2)

தேவனுடைய நியாயத்தீர்ப்பு, அவரது வார்த்தையில் உள்ள அச்சுறுத்தல்கள் ஆகியவைகளை முற்றிலுமாகக் கவனிக்காதவர்களாக இருக்கும்படி மக்களை நடத்துவதும், அவரைப் பூரணமாக இரக்கம் உள்ளவராக எடுத்துக்காட்டி, அதினால் பரிசுத்தவான்களும் பாவிகளுமாகிய ஒருவரும் அழியாமல் கடைசியில் அவருடைய இராஜ்ஜியத்தில் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள் என்று நம்பும்படிச் செய்வதும் சாத்தானின் மற்றொரு வரம்புகடந்த செயலாக உள்ளது. (3)

ஆத்துமா அழியாது, துன்பங்கள் முடிவில்லாதவையாக இருக்கும் என்னும் பிரபலமான தவறுகளின் பலனால், மற்றொரு வகுப்பினரைச் சாத்தான் தனக்கு அனுகூலமாக எடுத்துக்கொண்டு, வேதாகமம் ஏவுதலினால் உண்டாக்கப்படாத ஒரு புத்தகம் என்று கருதும்படிக்கு அவர்களை நடத்துகிறான். அது அநேக நல்ல காரியங்களைப் போதிக்கிறது; ஆனால் அது

நித்தியமான துன்பம் என்னும் கோட்பாட்டை அறிவிப்பதினால் அவர்களால் அதனை நம்பவும் நேசிக்கவும் முடியாது என்று நினைக்கின்றனர். (4)

தேவன் இருப்பதையே நம்பாதவர்களாக இருக்கும்படி இன்னொரு வகுப்பினரை சாத்தான் நடத்துகிறான். மனித குடும்பத்தின் ஒரு பகுதியினரின்மீது தேவன் நித்திய காலமான—சகிக்கமுடியாத—சித்திரவதையை உண்டுபண்ணுவாரானால், வேதாகமத்தில் காணப்படும் தேவனின் சுபாவத்தில் அவர்களால் முரண்பாடற்ற தன்மையைக் காணமுடிவதில்லை. எனவே அவர்கள் வேதாகமத்தையும் அதின் ஆக்கியோனையும் மறுத்து, மரணம் என்பது நித்திரை என்று கருதுகின்றனர். (5)

மேலும் பயப்படுகிறவர்களும் கோழைகளுமாக உள்ள வேறொரு வகுப்பினர் உள்ளனர். இவர்களைப் பாவம்செய்யும்படி சாத்தான் சோதித்து, பாவம்செய்தபின், அவர்கள்முன் பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை எடுத்துக்காட்டாமல், நித்தியகாலமாக அனுபவித்தாகவேண்டிய அதிபயங்கரமான சித்திரவதை அது என்று எடுத்துக்காட்டுகிறான். (6)

இவ்வாறாக, முடிவில்லாத நரகத்தின் பயங்கரங்களை பலவீனமான அவர்களது மனங்களுக்குப் பெரிதுபடுத்திக்காட்டுவதற்குமுன், அவர்களது மனங்களை அவன் கைப்பற்றிக்கொண்டுவிடவே, அவர்கள் தங்களுடைய காரண—காரியங்களை அறிகின்ற அறிவை இழந்துவிடுகின்றனர். அப்பொழுது சந்தேகப்படுபவர்களும் நாஸ்திகர்களும் கிறிஸ்தவத்தின்மீது நிந்தனையை வைக்க ஒன்று சேரும்போது சாத்தானும் அவனது தூதர்களும் வெற்றிச் சிரிப்பு சிரிக்கின்றனர். பிரசித்தமான மதப்புரட்டுகளை ஏற்றுக்கொண்டதின் பலனாக இவைகள் இருக்கும்போது, வேதாகமத்தையும் அதன் ஆக்கியோனையும் நம்பினதால் உண்டான தீமைகள் இவைகள் என்று உரிமை பாராட்டுகின்றனர். (7)

## வேத வாக்கியங்களே நல்லதொரு பாதுகாப்பு!

சாத்தானின் இந்தத் துணிகரமான செயலைக்கண்டு, பரலோக சேனைகள் கோபத்தால் நிறைந்தவர்களானதை நான் கண்டேன். தூதர்கள் வல்லமை உள்ளவர்களாக இருக்கும்போது, அனுமதிக்கப்பட்டால் அவர்கள் எதிரியின் வல்லமையை எளிதில் தகர்க்கக்கூடியவர்களாக இருக்கும்போது, மனிதர்களின் மனங்களின்மீது இந்தப் பொய்த் தோற்றங்களெல்லாம் ஏன் அனுமதிக்கப்படவேண்டும் என்று நான் விசாரித்தேன். மனிதனை அழிப்பதற்காகச் சாத்தான் தன் தந்திரங்கள் ஒவ்வொன்றையும் முயற்சிசெய்துபார்ப்பான் என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார் என்பதை அப்பொழுது நான் கண்டேன்; எனவே அவரது வார்த்தையை அவர்

எழுதப்படும்படிச் செய்தார். மிகவும் பலவீனமானவனுங்கூடத் தவறாமல் இருக்கும்படியான மனித இனத்தைப்பற்றிய அவரது நோக்கங்களை அவர் வெளிப்படுத்தியிருந்தார். அவர் தமது வார்த்தையை மனிதனுக்குக் கொடுத்தபின், சாத்தானாலோ அல்லது அவனது தூதர்களினாலோ அல்லது அவனது முகவர்களினாலோ அல்லது பிரதிநிதி களினாலோ அழிக்கப்படுவதிலிருந்து அவர் அதனைக் கவனமாகப் பாதுகாத்திருந்தார். மற்ற புத்தகங்கள் அழிக்கப்படநேரிடும்போது, இது அழியாமையுடையதாக இருக்கவேண்டியதாக இருந்தது. காலத்தின் முடிவின் சமீபத்தில் சாத்தானின் பொய்த்தோற்றங்கள் அதிகரிக்கும்போது, தங்களுக்கு வேதாகமத்தின் ஒரு பிரதி வேண்டுமென்று விரும்புபவர்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியவிதத்தில் அது அதிகரிக்கப்படவேண்டியதாக இருந்தது. அவர்கள் விரும்பினால், அற்புதங்களுக்கும் எதிராக அதினால் தங்களை ஆயுதமணிந்தவர்களாக்கிக்கொள்ளலாம். (8)

தேவன் சிறப்பான விதத்தில் வேதாகமத்தைப் பாதுகாத்திருந்தார் என்பதை நான் கண்டேன். அதன் பிரதிகள் சிலவாக மட்டும் இருந்திருந்தபோதிலும், கற்றறிந்த மனிதர்கள் அதனை மிகவும் தெளிவிக்கிற ஒன்றாக நினைத்துக்கொண்டு, உண்மையில் தெளிவானவைகளாக இருந்தவைகளை இரகசியமானவைகளாகும்படியும் பாரம்பரியங்களினால் ஆளப்பட்டிருந்த அவர்களது பார்வையை திகைக்கச்செய்யும்படியும் அதை இருக்கச்செய்து, சில எடுத்துக்காட்டுகளில் அதன் வார்த்தைகளை மாற்றியிருந்தனர். ஆனால் தேவனுடைய வார்த்தை மொத்தத்தில் ஒரு முழுமையான சங்கிலியைப் போலிருப்பதையும் நான் கண்டேன். சத்தியத்தை உண்மையாகத் தேடுபவர்கள் தவறவேண்டிய அவசியம் இல்லை; ஏனென்றால், தேவனுடைய வார்த்தை, வாழ்க்கையின் பாதையை அறிவிப்பதில் எளிமையானதாகவும் வெளிப்படையானதாகவும் இருப்பதுமட்டுமன்றி, அதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வாழ்க்கையின் பாதையைப் புரிந்துகொள்ளுவதில் வழிகாட்டியாகவும் இருக்கும்படி பரிசுத்தஆவியானவர் கொடுக்கப்பட்டிருக்கிறார். (9)

சித்தத்தைக் கட்டுப்படுத்துபவர்களாக தேவதூதர்கள் ஒருபோதும் இருக்கக்கூடாது என்பதை நான் கண்டேன். மனிதனுக்கு முன் ஜீவனையும் மரணத்தையும் தேவன் வைக்கிறார். அவனால் அவனது விருப்பத்தின்படி தெரிந்துகொள்ளமுடியும். அநேகர் ஜீவனை விரும்புகின்றனர்; ஆனால் அவர்கள் விசாலமான பாதையில் நடக்கின்றனர். தேவன் தமது பெரும் இரக்கத்தினாலும் மன உருக்கத்தினாலும் அவர்களுக்காகத் தமது குமாரனை மரிக்கும்படி கொடுத்திருந்தும்கூட, அவர்கள் தேவ அரசாங்கத்திற்கெதிராகக்

கலகம் செய்வதைத் தெரிந்துகொண்டுள்ளனர். இவ்வளவு அருமையான விலைகொடுத்து வாங்கப்பட்டுள்ள இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளுவதைத் தெரிந்துகொள்ளாதவர்கள் தண்டிக்கப்பட்டாகவேண்டும். ஆனால் தேவன் அவர்களை முடிவில்லாத துன்பதை அனுபவிக்கும்படி நரகத்தில் மூடிவிடவுமாட்டார்; பரலோகத்திற்கு அழைத்துச் செல்லவுமாட்டார் என்பதை நான் கண்டேன். ஏனெனில் மாசற்றவர்கள் பரிசுத்தவான்கள் ஆகியோரின் கூட்டத்திற்குள் பாவிகள் கொண்டுவரப்பட்டால், அது அவர்களுக்கு அதிகமான துன்பத்தை உண்டுபண்ணும்; ஆகையால் அவர்கள் இல்லாதவர்களைப் போலாகும்படி முற்றிலுமாக அழித்துப்போடுவார். அப்பொழுது அவருடைய நீதி திருப்தியடையும். அவர் பூமியின் மண்ணிலிருந்து அவனை உருவாக்கினார். கீழ்ப்படியாதவர்களையும் பரிசுத்தமில்லாதவர்களையும் அவர் நெருப்பினால் சுட்டெரித்து, மறுபடியும் மண்ணுக்குத் திரும்பச்செய்வார். இந்தக் காரியத்தில் உள்ள தேவனுடைய அனுதாபமும் மன உருக்கமுமிக்க சுபாவத்தைப் புகழவும் அவருடைய பரிசுத்த நாமத்தைப் போற்றவும் அனைவரும் நடத்தப்படவேண்டும் என்பதை நான் கண்டேன். துன்மார்க்கர்கள் அனைவரும் பூமியிலிருந்து அழித்து நீக்கப்படும்போது, பரலோக சேனைகள் யாவும் “ஆமென்” என்று சொல்லும். (10)

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டிருந்து, ஆனால் சாத்தான் ஆரம்பித்த பொய்த்தோற்றங்களை நெருக்கமாகப் பற்றிக்கொண்டிருப்பவர்களை மன நிறைவுடன் சாத்தான் பார்க்கிறான். புதிய பொய்த்தோற்றங்களை மேலும்மேலும் உண்டாக்குவதும் அவனது வல்லமையையும் தந்திரங்களையும் இந்தத் திசையில் தொடர்ச்சியாக அதிகரிக்கச்செய்வதும், சாத்தானின் வேலையாக உள்ளது. அவனுடைய பிரதிநிதிகளாக இருந்த போப்புமார்களையும் பேராயர்களையும் தங்களைத் தாங்களே உயர்த்திக்கொள்ளும்படிச்செய்து, அவனுடைய பொய்த்தோற்றங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களை கடுமையான விதத்தில் உபத்திரவப்படுத்தி அழிக்க அவன் நடத்தினான். ஓ! விலைமதிப்புமிக்க கிறிஸ்துவின் அடியார்கள் அனுபவிக்கும்படி நடத்தப்பட்டிருந்த பாடுகளும் வேதனைகளும் எப்படிப்பட்டவையாக இருந்தன! இவர்களனைவரையும்பற்றிய ஆவணங்களைத் தேவதூதர்கள் விசுவாசத்துடன் பதிவுசெய்துவைத்துள்ளனர். சாத்தானும் அவனுடைய பொல்லாத தூதர்களும், பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் இந்தப் பரிசுத்தவான்களுக்கு ஊழியம்செய்துகொண்டிருக்கும் தூதர்களை வெற்றிச் சிரிப்புடன் நோக்கி: பூமியின்மீது ஒரு கிறிஸ்தவன்கூட இல்லாமலாகும்படி அவர்களனைவரும் கொல்லப்படவேண்டும் என்று கூறினார்கள். அப்பொழுது தேவனுடைய சபை மாசற்றதாக இருந்தது என்பதை நான் கண்டேன்.

கறைபடிந்த இருதயங்களையுடைய மனிதர்கள் அதற்குள் (சபைக்குள்) இருக்கும் அபாயம் இருக்கவில்லை; தன்னுடைய விசுவாசத்தை அறிக்கைசெய்யத் துணிந்திருந்த உண்மையான கிறிஸ்தவன் சாத்தானாலும் அவனுடைய தூதர்களாலும் அல்லது மனிதனின் மனதை ஏவினதால் கண்டுபிடிக்கப்பட்ட சித்திரவதைக் கருவி, கழுமரம் ஆகியவைகளாலும் உண்டான ஆபத்தில் இருந்தனர். (11) ★

57

# ஆவி மார்க்கம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 393–398)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 13:13.**

இயற்கையான அழியாத்தன்மை (ஆத்துமா அழியாதது!) என்னும் கோட்பாடு, நவீனகால ஆவிமார்க்கத்திற்கான பாதையை ஆயத்தம்செய்திருக்கிறது. தேவதூதர்களும் தேவனும் இருக்கக்கூடிய இடத்திற்கு மரித்தவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர் என்றால், அவர்கள் இதற்குமுன் இருந்த அறிவைவிட இப்பொழுது அதிகமான அறிவை உடையவர்களாகும் சலுகையை உடையவர்களாகிவிட்டிருந்தால், உயிருடன் இருப்பவர்களுக்கு அறிவூட்டும் போதனை செய்வதற்காக அவர்கள் ஏன் பூமிக்குத் திரும்பிவரக்கூடாது? மரணத்தில் மனிதன் உணர்வுடையவனாக இருக்கிறான் என்று நம்புபவர்களால் மகிமைப்படுத்தப்பட்ட ஆவிகளிடத்தி லிருந்து தகவல்தொடர்பாக வரக்கூடிய தெய்வீக ஒளி என்று கூறிக்கொள்ளக்கூடியவைகளை எப்படி நிராகரிக்கலாம்? சாத்தான் தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும்படி செயல்படுகின்ற, பரிசுத்தமானது என்று கருதப்படுகின்ற ஒரு பாதை இங்கு இருக்கிறது. அவனது கட்டளையைச் செயல்படுத்தும் விழுந்துபோன தூதர்கள், ஆவி உலகத்திலிருந்து அனுப்பப்படும் தூதுவர்களைப்போல் தோற்றமளிக்கின்றனர். உயிருள்ளவர்கள் மரித்தவர்களுடன் தொடர்புகொள்ளலாம் என்று கூறிக்கொண்டு, அவர்களது மனங்களின்மீது சாத்தான் தனது மயக்கும் செல்வாக்கைச் செயல்படுத்துகிறான்! (1)

அவன் தங்களது இறந்துபோன நண்பர்களின் உருவத்தைக்கூட மனிதர்களின்முன் தோன்றச்செய்யக்கூடிய வல்லமையை உடையவனாக இருக்கிறான். அந்தப் போலி திறமையானதாக உள்ளது. பழக்கமான பார்வை, வார்த்தைகள், குரலின் தன்மை ஆகியவை ஆச்சரியப்படும்படியான விதத்தில், மிகவும் குறிப்பான விதத்தில், திரும்ப உண்டுபண்ணப்படுகிறது. அநேகர் தங்களால் நேசிக்கப்பட்டிருந்தவர்கள் பரலோகத்தின் பேரின்பத்தை

மகிழ்ச்சியுடன் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர் என்னும் நிச்சயத்தினால் ஆறுதலடைந்து, ஆபத்தைப்பற்றிய சந்தேகமின்றி, வஞ்சக ஆவிகளுக்கும் பிசாசுகளின் கோட்பாடுகளுக்கும் செவிகொடுக்கின்றனர். (2)

மரித்தவர்கள் தங்களுடன் தொடர்புகொள்ள உண்மையிலேயே வருகின்றனர் என்று அவர்கள் நம்பும்படி நடத்தப்பட்டிருக்கும்போது, ஆயத்தமற்றவர்களாகக் கல்லறைக்குச் சென்றிருந்தவர்களைபோலச் சாத்தான் தோன்றச்செய்கிறான். அவர்கள் பரலோகத்தில் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், மேலான பதவிகளைக்கூட அங்கு வகித்துவருவதாகவும் உரிமைபாராட்டுகின்றனர்; இவ்வாறாக, நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் இடையில் வேற்றுமை உண்டுபண்ணப்பட்டிருக்கவில்லை என்னும் தவறு, பரவலாக எங்கும் போதிக்கப்படுகிறது. ஆவி உலகத்திலிருந்து வருபவர்கள்போல் தோன்றுபவர்கள் (போலியான வேஷதாரிகள்) சில சமயங்களில் சரியானது என்று மெய்ப்பிக்கக்கூடிய எச்சரிக்கைகளையும் கொடுக்கின்றனர். இவ்வாறாக நம்பிக்கையை உண்டுபண்ணினபின், வேதவாக்கியத்திலுள்ள விசுவாசத்தைத் தகர்க்கின்ற கோட்பாடுகளை அவர்கள்முன் வைக்கின்றனர். பூமியிலுள்ள தங்களுடைய நண்பர்களின் நல்வாழ்வின்மீதுள்ள ஆழ்ந்த விருப்பத்தின் தோற்றத்துடன் அவர்கள் பயங்கரமான தவறுகளை உள்ளே கொண்டுவருகின்றனர். அவர்கள் சில சத்தியங்களைக் கூறுகின்றனர் என்ற உண்மையும், எதிர்கால சம்பவங்களை முன்னறிவிக்கின்ற திறமையை உடையவர்களாக அவர்கள் இருப்பதும், அவர்களது அறிக்கைகள் நம்பக்கூடியவை என்னும் தோற்றத்தைத் தருகின்றது. திரளானவர்களால் அவர்களுடைய தவறான போதனைகள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவை வேதாகமத்தின் பரிசுத்தமான சத்தியங்களை உள்ளடக்கியிருப்பதாக நம்பப்படுகின்றன. தேவனுடைய கற்பனை ஒருபக்கமாக ஒதுக்கி வைக்கப்படுகிறது! கிருபையின் ஆவி அவமதிக்கப்படுகிறது! உடன்படிக்கையின் இரத்தம் பரிசுத்தமில்லாத ஒருபொருளாகக் கருதப்படுகிறது! இந்த ஆவிகள் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுத்து, சிருஷ்டிகரை அவைகளுக்குச் சமமான அந்தஸ்தில் வைக்கின்றன. இவ்வாறாகப் பரலோகத்தில் ஆரம்பித்து பூமியின்மீது ஆறாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்துவரும் தேவனுக்கெதிரான அவனது யுத்தத்தை பெரும் கலகக்காரன் புதிய வடிவத்துடன் மேலும் மேலும் முன்னேற்றிக்கொண்டிருக்கிறான். (3)

ஆவிகளினால் வெளிக்காட்டப்படுபவைகளை அநேகர் அதைச் செய்பவரின் கைவேலைத்திறன் என்று கணக்கிட்டு, அதனை முற்றிலுமான ஏமாற்றுவித்தை என்று கூறிட முயலுகின்றனர். தந்திரச்செயல்களின்

பலன்கள் உண்மையான வெளிக்காட்டல்கள் என்று இலகுவாக விட்டுவிடுவது உண்மைதான் என்றபோதிலும், இயற்கைக்கு மேலான வல்லமைகளின் வெளிக்காட்டல்களும் நடைபெற்றிருந்திருக்கின்றன. நவீன ஆவி மார்க்கத்துடன் ஆரம்பமான இரகசியமான தொடர்புகள் மனித உபாயங்களினாலும் தந்திரங்களினாலும் உண்டானவையாக இராமல், ஆத்துமாவை அழிப்பதற்கென்று, வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்ட பொல்லாத தூதர்களின் பொய்த்தோற்றமான நேரடியான செயல்களாக உள்ளன. ஆவி மார்க்கம் மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட, பிறர்போன்று தோன்றும் வஞ்சகமான ஒன்று என்னும் நம்பிக்கையின்மூலமாக, அநேகர் கண்ணியில் அகப்படுத்தப்படுவார்கள். வெளிக்காட்டல்களானது முகமுகமாகக் கொண்டுவரப்படும்போது, அவர்களால் அது இயற்கைக்கு மேலானது என்று கருதும்படிச்செய்யப்பட்டு, அவைகளைத் தேவனுடைய பெரும் வல்லமை என்று ஏற்றுக்கொள்ளும்படி வஞ்சிக்கப்படுவார்கள். (4)

சாத்தானாலும் அவனது உடனாளிகளினாலும் செய்யப்படுகின்ற ஆச்சரியமானவைகளைப்பற்றிய வேதவாக்கியங்களின் சாட்சியைப் பார்க்காமல் மனிதர்கள் விட்டுவிடுகின்றனர். சாத்தானின் உதவியினால் தேவனுடைய செயலுக்கு எதிராகப் போலியான ஒன்றைச்செய்வதற்கு பார்வோனின் மந்திரவாதிகள் தகுதிப்படுத்தப்பட்டனர். கடைசி நாட்களில் வெளிக்காட்டப்படக்கூடிய அற்புதங்களைச் செய்கின்ற வல்லமையைப்பற்றி விவரிக்கும்போது, அப்போஸ்தலனாகிய யோவான்: “அன்றியும், அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று”(வெளி. 13:13–14) என்று அறிவிக்கிறான். சாதாரணமான போலித்தோற்றம் எதுவும் இங்கு காட்சிக்குக் கொண்டுவரப்படவில்லை. அவர்கள் போலியானவைகள் என்று கருதுபவைகளால் நடவாமல், சாத்தானின் எடுபிடிகளிடமுள்ள அற்புதங்களைச் செய்யும் வல்லமையினால் மனிதர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர். (5)

## நவீன வடிவில் உள்ள மந்திரவாதம்!

மந்திரவாதம் என்னும் அந்தப் பெயரே இப்பொழுது இகழ்ச்சிக்கு உள்ளாகி உள்ளது. மனிதர்களால் பொல்லாத ஆவிகளுடன் தொடர்புகொள்ளமுடியும் என்ற உரிமைபாராட்டுதல், இருண்ட காலத்தின் கட்டுக்கதைகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் ஆவிமார்க்கத்திற்குள் மாற்றம் செய்யப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை நூறாயிரங்களாக

லட்சங்களாக உள்ளன. இது சபைகளை ஜெயித்திருக்கின்றது. சட்டசபைகளின் ஆதரவையும் அரசவைகளின் ஆதரவையுங்கூடக் கண்டிருக்கிறது. இப்பெரு வஞ்சகம் முன்பு ஆக்கினைக்குட்படுத்தப்பட்டும் தடைசெய்யப்பட்டுமிருந்த மந்திரவாதத்தின் புதிய தோற்றத்திலுள்ள எழுப்புதலாக உள்ளது. (6)

தடைசெய்யப்பட்டிருந்த அறிவை அடைந்துகொள்ளும்படியான வாஞ்சையை ஏதேனிலிருந்த ஏவாளிடம் தூண்டிவிடுவதற்காக: “நீங்கள் நன்மை தீமை அறிந்து, தேவர்களைப்போல் இருப்பீர்கள்” என்று சர்ப்பத்தின் மாற்றுருவிலிருந்த சாத்தான் கூறினான். ஆனால் ஆவிமார்க்கம் உண்டுபண்ணும் ஞானத்தைப்பற்றி, “இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்திற்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்துமாயிருக்கிறது” (யாக்கோபு 3:15) என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு விவரித்திருக்கிறான். (7)

அந்தகாரப் பிரபு பெரும் சிந்தனை உள்ளவனாக இருந்து, வெவ்வேறு நிலைமைகளிலும் சுபாவங்களிலும் உள்ளவர்களுக்கு ஏற்றபடி தனது சோதனைகளை சாமர்த்தியமாகப் பொருத்துகிறான். மனிதர்களின் கட்டுப்பாட்டை ஆதாயம்செய்வதற்காக, அநீதியினால் உண்டாகும் வஞ்சகங்களுடன் செயலாற்றுகிறான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவனது சோதனைகளுக்கு இணங்கும்போதுமட்டுமே, அவன் தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுகிறான். தங்களுடைய தீயசுபாவங்களை நடப்பிப்பதினால், அவனுடைய வல்லமைக்குத் தங்களை இணங்கச்செய்யும்படி வைப்பவர்கள், அவர்களுடைய நடத்தை எங்குசென்று முடியுமென்பதை உணராதவர்களாக உள்ளனர். சோதனைக்காரன் அவர்களுடைய பாழ்க்கடிப்பை நிறைவேற்றியபின்னர் மற்றவர்களை அழிப்பதற்கும் அவர்களை பயன்படுத்துகிறான். (8)

### ஒருவரும் வஞ்சிக்கப்படவேண்டிய அவசியம் இல்லை!

ஆனால் ஆவிமார்க்கத்தின் பொய்யான உரிமைபாராட்டுதல்களினால் ஒருவரும் வஞ்சிக்கப்படவேண்டிய அவசியம் இல்லை. அந்தக் கண்ணியைக் கண்டுபிடிப்பதற்கு தகுதியடையும்படி போதுமான ஒளியைத் தேவன் கொடுத்திருக்கிறார். நீதிக்கும் பாவத்திற்கும் கிறிஸ்துவின் தூய்மையான அப்போஸ்தலர்களில் மேன்மைமிக்கவர்களுக்கும், மிகவும் கறைபடிந்த சாத்தானின் வேலைக்காரனுக்கும் இடையில், ஆவிகள் வேற்றுமையை உண்டுபண்ணாமலிருந்தாலும், கிறிஸ்தவனுக்கு அது (பரலோகத்தின் ஒளியான வேதாகமம்—வேதவாக்கியங்கள் மட்டுமே) போதுமானதாக உள்ளது. (9)

மிகமோசமானவர்கள், பரலோகத்தில் மிகவும் மேலான நிலையில் இருப்பதாக எடுத்துக்காட்டுவதினால், சாத்தான் நீங்கள் எப்படிப்பட்ட துன்மார்க்கர்களாக இருந்தாலும்சரி, தேவனையும் வேதாகமத்தையும் நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும்சரி, அவை காரியமல்ல என்று உலகத்திற்கு அறிவிக்கிறான். உங்கள் விருப்பப்படி வாழுங்கள்; பரலோகம் உங்களுடையது என்றும் கூறுகிறான். (10)

இதற்கும்மேலாகப் பொய்யின் இந்த ஆவிகள் அப்போஸ்தலர் களைப்போலத் தோற்றமளிக்கின்றன. அப்போஸ்தலர்கள் பூமியில் இருந்தபோது பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினவைகளுடன் முரண்பட்டு, வேதாகமத்தின் தெய்வீகப் பிறப்பை மறுத்து, இவ்விதமாகக் கிறிஸ்தவ அஸ்திவாரத்தின் நம்பிக்கையைக் கிழித்தெறிந்து, பரலோகத்தின் பாதையை வெளிப்படுத்தும் ஒளியை அணைத்துவிடுகின்றன. (11)

வேதாகமம் கற்பனையானது என்று உலகத்தை நம்பவைக்க சாத்தான் செயலாற்றுகிறான்; அல்லது குழந்தைப் பருவத்திலிருந்த உலகத்திற்குத் தான் அது பொருத்தமானதாக இருந்தது என்றும், இப்பொழுது சாதாரணமானதாகக் கருதப்படவேண்டியதாகவும், அல்லது பயனற்றது என்று கருதி ஒரு பக்கமாக வைக்கவேண்டியதாகவும் உள்ளது என்றும் நம்பும்படிச் செய்கிறான். தேவனுடைய வார்த்தையின் இடத்தைப் பிடித்துக்கொள்ளுவதற்காக அவன் (பொய்யான) ஆவிக்குரிய வெளிக்காட்டல்களைத் தூக்கிப்பிடிக்கிறான். அவனுடைய கட்டுப்பாட்டின் கீழுள்ள ஒரு பாதை இங்கு உள்ளது. இந்த உபாயங்களில் அவன் எதை விரும்புகிறானோ அதை உலகத்தால் நம்பவைக்க அவனால் முடியும். (12)

அவனையும் அவனைப் பின்பற்றுபவர்களையும் நியாயந்தீர்க்க இருக்கின்ற புத்தகத்தை (வேதாகமத்தை) அது எங்கே இருக்கவேண்டுமென்று அவன் விரும்புகிறானோ, அந்த இருளில் அவன் மறைத்துவைத்து, இந்த உலகத்தின் இரட்சகரை, அவர் ஒரு சாதாரண மனிதனுக்கும் மேலானவரல்ல என்று நம்பச் செய்கிறான். இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பொய்யென்று காட்டும்படி தவறான அறிக்கைகளைப் பரப்பும் வார்த்தைகளை ரோம நாட்டுக் காவலாளிகளின் வாயில் ஆசாரியர்களும் மூப்பர்களும் வைத்ததைப்போலவே, இரட்சகரின் வாழ்க்கையிலிருந்த சூழ்நிலைகளில் அற்புதம் எதுவுமில்லையென்று தோன்றச்செய்யும்படி ஆவிமார்க்க வெளிக்காட்டுதல்களின்மீது நம்பிக்கை உள்ளவர்கள் முயற்சிசெய்கின்றனர்; இவ்வாறாக, இயேசுவைப் பின்னாகத் தள்ளிவைத்தபின்னர், அவர்களுடைய சொந்த அற்புதங்களைக் கவனிக்கும்படி அழைத்து, இவைகள் கிறிஸ்து செய்த காரியங்களையும் மிஞ்சியவைகள் என்று அறிவிக்கின்றனர். (13)

“அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம்பார்க்கிறவர்களிடத்திலும் முணுமுணென்று ஒதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டிய தல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை”(ஏசாயா 8:19,20) என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறான். “மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்” என்று வேதாகமத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களிலுள்ள சத்தியங்களைப் பெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்களாக மனிதர்கள் இருந்திருந்தால், ஆவிமார்க்கத்தின் உரிமைபாராட்டுதல்களும் வெளிக்காட்டுதல்களும் சாத்தானின் வல்லமை யினாலும் அடையாளங்களினாலும் பொய்யான அற்புதங்களினாலும் நடைபெறுபவை என்பதைக் காண்பார்கள். மாம்ச சிந்தைக்கு சுயாதீனத்தை இணங்கச்செய்யாமலிருந்து, அவர்கள் நேசித்திருக்கும் பாவங்களை விட்டுவிலகுவதைவிட, திரளானவர்கள் ஒளிக்குத் தங்களுடைய கண்களை மூடிக்கொண்டு, எச்சரிப்புக்களைக் கருத்தில்கொள்ளாமல் நேராக நடந்துசென்று, அவனுக்கு இரையாகின்றனர். “இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால், அப்படி நடக்கும். ஆகையால் அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார்” (2 தெசலோனிக்கேயர் 2:10,11). (14)

ஆவி மார்க்கத்தின் போதனைகளுக்கு எதிராகப் போர்செய்பவர்கள் மனிதர்களிடம் மட்டுமின்றி, சாத்தானுடனும் அவனது தூதர்களுடனும் போர்செய்கின்றனர். துரைத்தனங்களோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் போர் செய்கின்றனர். பரலோக தூதர்களின் வல்லமையினால் பின்னிட்டுச்செல்லும்படி துரத்தப்பட்டாலன்றி, சாத்தான் ஒரு அங்குலத்தைக்கூட விட்டுக்கொடுக்கமாட்டான். “என்று எழுதியிருக்கிறதே” என்னும் வார்த்தைகளுடன் நமது இரட்சகர் செய்ததுபோல தேவனுடைய ஜனங்கள் அவனைச் சந்திப்பதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் காலத்தில் நடந்ததைப்போல, சாத்தானால் வேதவாக்கியங்களைக் குறிப்பிட்டுக்காட்ட முடியும். தனது பொய்த் தோற்றங்களைத் தாங்குவதற்காக, வேதவாக்கியங்களின் போதனைகளைத் திரிபுசெய்வான். ஆனால் வேதாகமத்திலுள்ள வெளிப்படையான அறிக்கைகள், வல்லமையுள்ள ஆயுதங்களை ஒவ்வொரு போரின் சமயத்திலும் நமக்கு வழங்கும். (15)

அபாய காலத்தில் நிற்கக்கூடியவர்கள் மனிதன் படைக்கப்பட்ட விதத்தையும், மரணத்தில் மனிதனின் நிலைமையையும்பற்றிய வேத வாக்கியங்களின் சாட்சியைப் புரிந்தவர்களாக இருக்கவேண்டும்; ஏனெனில், விரைவில் வரவுள்ள எதிர்காலத்தில், நேசிக்கப்பட்டிருந்த உறவினர்கள் அல்லது நண்பர்களின் மாற்றுருவில் பிசாசுகளின் ஆவிகள் தோன்றி, பயங்கரமான மதப்புரட்டுக்களை அறிவிக்கும்போது, அநேகர் அவைகளுடன் போராடவேண்டியவர்களாக இருப்பார்கள். இப்படி சந்திப்பவைகள் நமது மென்மையான அனுதாபங்களைப் பெறுவதற்காக வேண்டுகோள்கள்விடுத்து, தங்களது போலிக்கூற்றைத் தாங்குவதற்காக அற்புதங்களைச்செய்யும். மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இவ்வாறாகத் தோன்றுபவைகள் பிசாசுகளின் ஆவிகள் என்று அறிவித்து, நாம் அவைகளை எதிர்த்துநிற்கும்படி, வேதாகமச் சத்தியத்தை உடையவர்களாக ஆயத்தமாக இருக்கவேண்டும். உலகத்தை வஞ்சிக்கும் அவனுடைய கடைசி முயற்சியில் நீண்ட நாட்களாக சாத்தான் ஈடுபட்டிருக்கிறான். “நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே, உங்கள் கண்கள் திறக்கப்படும்; நீங்கள் நன்மை தீமை இன்னதென்றறிந்து, தேவர்களைப் போல் இருப்பீர்கள்” (ஆதியாகமம் 3:4,5) என்று அவன் ஏதேனில் கொடுத்த வாக்குறுதியில் ஆவிமார்க்கத்தை முன்னேறச்செய்யும் அவனது பெரும் வஞ்சகத்தை அவன் கொஞ்சம் கொஞ்சமாக ஆயத்தஞ்செய்திருந்தான். அவனது திட்டத்தை முழுவதுமாக நிறைவேற்றுகின்ற நிலையை அவன் இன்னும் அடையவில்லை. ஆனால் கடைசி மீதியான நேரத்தில், அது வந்துசேரும். அப்பொழுது உலகம் பொய்த்தோற்றத்தினால் அடித்துச்செல்லப்படும். தேவனுடைய கோபாக்கினை ஊற்றப்படுவதினால்மட்டுமே, விழித்தெழக்கூடிய வகையில் சாவுக்கேதுவான பாதுகாப்பில், அவர்கள் வேகமாகத் தாலாட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். (16) ★

# 58

# உரத்த சத்தம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 399–401)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 18:4.**

முக்கியமான சில சம்பவங்களை நிறைவேற்ற ஆயத்தம் செய்வதற்காகப் பரலோகத்திலிருந்து ஒரு தூதன் விரைவாக பூமிக்கு இறங்குவதையும், பூமியிலிருந்து பரலோகத்திற்கு ஏறுவதையும் நான் கண்டேன். அதன்பின் வல்லமையான ஒரு தூதன் தன்னுடைய தூதுக்கு வல்லமையையும் வலிமையையும் கொடுப்பதற்காக, மூன்றாம் தூதனுடன் ஒன்றுசேர்ந்துகொள்ளுவதற்காக பூமிக்கு இறங்கும்படி அனுப்பப்பட்டதை கண்டேன். அந்தத் தூதனுக்குப் பெரும் வல்லமையும் மகிமையும் கொடுக்கப்பட்டிருந்தது. அதனால் அவன் கீழே இறங்கினபோது, அவனது மகிமையினால் பூமி பிரகாசமடைந்தது. "மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்தஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று" (வெளி. 18:2) என்று உரத்த குரலில் சத்தமிட்டபோது, அவன்மீதிருந்த ஒளி எங்கும் நுழைந்துசென்றது. (1)

இரண்டாம் தூதனால் கொடுக்கப்பட்ட பாபிலோன் விழுந்தது என்னும் தூது, 1844–ல் இருந்து, சபைகளுக்குள் நுழைந்துகொண்டிருந்த மூன்றாம் தூதனுடைய தூதின் கடைசிப் பெரும் பணியான நேரத்தில் வருகிறது. தேவனுடைய மக்கள் விரைவில் சந்திக்கவேண்டியதாக இருக்கிற இந்தச் சோதனையின் நேரத்தில் நிற்கும்படி, அவர்கள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளனர். ஒரு பெரும் ஒளி அவர்கள்மீது தங்கியிருப்பதையும், மூன்றாம் தூதனுடைய தூதை அவர்கள் பயமின்றி அறிவிப்பதையும் நான் கண்டேன். அந்த பலத்த தூதனுக்கு உதவும்படி பரலோகத்திலிருந்து தூதர்கள் அனுப்பப்பட்டிருந்தனர். "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது; அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார்"

(வெளி. 18:4,5) என்னும் குரல்கள் எங்கும் ஒலிப்பதுபோல் காணப்பட்டதை நான் கண்டேன். நடுராத்திரியின் சத்தம் இரண்டாம் தூதுடன் 1844–ல் இணைந்ததுபோல, இந்தத் தூதும் மூன்றாம் தூதுடன் சேர்க்கப்பட்ட ஒன்றுபோல் காணப்பட்டது. பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்த பரிசுத்தவான்களின்மீது தேவ மகிமை தங்கியது. அவர்கள் பாபிலோனின் விழுகையைப்பற்றிய செய்தியைத் தீவிரமாகப் பயமின்றிக்கொடுத்து, அவளுக்கு உண்டாகக்கூடிய பயங்கரமான அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படியாக, அவளைவிட்டு வெளியேவரும்படி, தேவனுடைய ஜனங்களை அழைத்தார்கள். (2)

காத்துக்கொண்டிருந்தவர்களின்மீது பிரகாசித்துக்கொண்டிருந்த ஒளி எங்கும் நுழைந்தது. கொஞ்சம் ஒளியை உடையவர்களாகச் சபைகளில் இருந்தவர்கள், மூன்றாம் தூதனின் தூதைக் கேட்காமலும் அதனை நிராகரிக்காமலும் இருந்தவர்கள், அந்த அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து விழுந்துபோன சபைகளைவிட்டு வெளியேறினார்கள். இந்தத்தூது கொடுக்கப்பட்டதிலிருந்து—ஒளி அவர்கள்மீது பிரகாசித்ததிலிருந்து கணக்குக் கொடுக்கவேண்டியவர்களாக அநேகர் இருந்தனர். ஜீவனையோ அல்லது மரணத்தையோ தெரிந்துகொள்ளும்படியான வாய்ப்பினை அவர்கள் பெற்றிருந்தனர். சிலர் ஜீவனைத் தெரிந்துகொண்டு, கர்த்தருடைய கற்பனைகள் அனைத்தையும் கைக்கொண்டு, அவருக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களுடன் தங்களை இணைத்துக்கொண்டனர். மூன்றாம் தூது அதின் வேலையைச் செய்யவேண்டியதாக இருந்தது. அதினால் அனைவரும் சோதிக்கப்பட வேண்டியவர்களாக இருந்தனர். மதசம்பந்தமான அமைப்புகளிலிருந்து வெளியே வரும்படி மிகவும் சிறப்புமிக்கவர்களாக அழைக்கப்பட வேண்டியவர்களாக இருந்தனர். (3)

தேவஆவி தங்கள்மீது செயலாற்றுவதை உணர்ந்திருந்தவர்களுக்கு இடையூறுசெய்யத் துணிவும் வல்லமையுங்கொள்ளாதபடி அவர்களது உறவினர்கள், நண்பர்கள்மீது தேவஆவியின் வல்லமையின் வெளிக்காட்டுதல் பயத்தையும் தடையையும் கொண்டுவந்தபோது, நேர்மையானவர்களை ஒரு வற்புறுத்தும் வல்லமை அசைத்தது. ஏழைகளான அடிமைகளிடத்திற்குங்கூட கடைசி அழைப்பு சுமந்துசெல்லப்பட்டது. மகிழ்ச்சிமிக்க அவர்களது விடுதலை என்னும் வெற்றி வாய்ப்பு நிலையில் அவர்களுக்கிடையில் இருந்தவர்கள் அவர்களது பேரானந்தம்மிக்க மகிழ்ச்சியைப் பாடல்களாக ஊற்றினார்கள். அவர்களது எஜமானர்களால் அவர்களைத் தடைசெய்யமுடியவில்லை. பயமும் வியப்பும் அவர்களை மௌனமாக்கின. பலத்த அற்புதங்கள் செய்யப்பட்டன. நோயாளிகள் சுகப்படுத்தப்பட்டனர். அடையாளங்களும் அற்புதங்களும் விசுவாசிகளைப் பின்தொடர்ந்தன. தேவன் அவருடைய

பணியில் இருந்தார். பலன்களைப்பற்றிய பயமில்லாத பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் தமது மனச்சாட்சியின் மன உணர்த்துதலைப் பின்பற்றி, தேவனுடைய கற்பனைகள் அனைத்தையும் கைக்கொள்ளுகிறவர்களுடன் ஒன்றுசேர்ந்தனர். மூன்றாம் தூதை அவர்கள் வல்லமையுடன் எங்கும் ஒலித்தனர். இந்தத் தூது நடுராத்திரியின் சத்தத்தையும் மிஞ்சின வல்லமையுடனும் பலத்துடனும் முடிவடையும் என்பதை நான் கண்டேன். (4)

உன்னதத்திலிருந்துள்ள வல்லமையினால் நிரப்பப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய முகங்கள் ஒளி அடைய பரிசுத்தமான அர்ப்பணிப்புடன் பரலோகத்திலிருந்துண்டான தூதைக் கொடுப்பதற்காக முன்சென்றனர். இந்த அழைப்பிற்கு மத அமைப்புகள் அனைத்திலும் சிதறியிருந்த ஆத்துமாக்கள் மறுமொழி கொடுத்தனர். சோதோமின் அழிவுக்குமுன் லோத்து அதைவிட்டு அவசரமாக வெளியேறினதைப்போல, விழுந்துபோன சபைகளிலிருந்து விலைமதிப்புமிக்க ஆத்துமாக்கள் வேகமாக வெளியேறினார்கள். தங்கள்மீது தங்கியிருந்த மேலான ஒளியினால் தேவனுடைய ஜனங்கள் பலப்படுத்தப்பட்டனர். அது சோதனையின் நேரத்தைச் சகிக்கும்படி அவர்களை ஆயத்தப்படுத்தியிருந்தது. “தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்” (வெளிப்படுத்தல் 14:12) என்று எங்கும் திரளான குரல்கள் கூறுவதை நான் கண்டேன். (5) ★

# 1

# தவணையின் காலத்தின் முடிவு!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 402–405)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 22:11**

மூன்றாம் தூதனின் தூது முடிவடைகின்ற காலம் எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. தேவனுடைய மகிமை அவரது ஜனங்களின்மீது தங்கியிருந்தது. அவர்கள் தங்களுடைய வேலையை நிறைவேற்றியவர்களக தங்களுக்கு முன்னிருந்த சோதனையின் நேரத்திற்காக ஆயத்தமாயிருந்தனர். பின்மாரியை அல்லது கர்த்தருடைய சமுகத்திலிருந்து உண்டாகும் இளைப்பாறுதலை அவர்கள் பெற்றிருந்தனர். ஜீவனுள்ள சாட்சி எழுப்புதலை அடைந்திருந்தது; இறுதி எச்சரிப்பு எங்கும் ஒலிக்கப்பட்டிருந்தது; அதைப் பெற்றுக்கொள்ளாத பூமியின் குடிகளை அது கோபாவேசப்படுத்தியிருந்தது. (1)

பரலோகத்தில் தூதர்கள் அங்குமிங்குமாக விரைந்து கொண்டிருந்ததை நான் கண்டேன்; தன்னுடைய அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருந்தவனான ஒரு தூதன் பூமியிலிருந்து திரும்பிவந்து, அவனுடைய வேலைமுடிந்துவிட்டதென்றும், பரிசுத்தவான்கள் எண்ணப்பட்டு, முத்திரையிடப்பட்டுவிட்டனரென்றும் இயேசுவிடம் அறிவித்தான். அப்பொழுது பத்துக்கற்பனைகள் அடங்கியிருந்த உடன்படிக்கைப்பெட்டிக்கு முன்பாக நின்று ஊழியம்செய்திருந்த இயேசு, அவரது கரத்திலிருந்த தூபகலசத்தைக் கீழே வைத்ததை நான் கண்டேன். அவர் தமது கரங்களை உயர்த்தி, "முடிந்தது" என்று உரத்த குரலில் கூறினார். "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்த முள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" (வெளிப்படுத்தல் 22:11) என்னும் பக்திவிநயமான அறிவிப்பை இயேசு அறிவித்தபோது, பரலோக சேனைகள் அனைத்தும் தங்கள் கிரீடங்களை இயேசுவின் பாதத்தில் வைத்தன! (2)

ஜீவனுக்கென்றோ அல்லது மரணத்திற்கென்றோ ஒவ்வொரு வழக்கும் முடிவுசெய்யப்பட்டிருந்தது. இயேசு பரிசுத்தஸ்தலத்தில் ஊழியம்

செய்துகொண்டிருந்தபோது, மரித்த நீதிமான்களைப்பற்றிய நியாயத்தீர்ப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது; அதன்பின், உயிருள்ள நீதிமான்களைப்பற்றிய நியாயத்தீர்ப்பு நடைபெற்றிருந்தது; கிறிஸ்து அவருடைய ஜனங்களுக்காகப் பாவநிவாரணம்செய்து, அவர்களுடைய பாவங்களை நீக்கி, தம்முடைய இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டார். அவருடைய இராஜ்யத்தின் குடிமக்களின் எண்ணிக்கை நிறைவடைந்துவிட்டது. ஆட்டுக்குட்டியானவரின் திருமணம் நடந்துவிட்டது. இராஜ்யமும் வானத்தின் கீழெங்குமுள்ள இராஜ்யங்களின் மேன்மையும் இயேசுவுக்கும் இரட்சிப்பின் சுதந்திரவாளிகளுக்கும் கொடுக்கப்பட்டுவிட்டது. இயேசு ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் அரசாளவேண்டியவராக இருந்தார். (3)

மகா பரிசுத்தஸ்தலத்திலிருந்து இயேசு வெளியேறியபோது அவரது வஸ்திரத்திலிருந்த மணிகள் ஒலிப்பதை நான் கேட்டேன். அவர் அதைவிட்டு வெளியேறியதும் பூமியின் குடிகளை ஒரு இருண்ட மேகம் மூடிக்கொண்டது. அதற்குப்பின், பாவமுள்ள மனிதனுக்கும் கோபமிக்க தேவனுக்கும் இடையில் ஒரு மத்தியஸ்தர் இருக்கவில்லை! பாவமுள்ள மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் இயேசு நின்றிருந்தபோது, ஜனங்களின்மீது ஒரு தடை இருந்தது. ஆனால் மனிதனுக்கும் பிதாவுக்கும் இடையிலிருந்து அவர் கீழே இறங்கினபோது, அந்தத் தடை நீக்கப்பட்டுவிடவே, இறுதியாகப் பாவத்திற்கென்று மனம் வருந்தாதவர்களாக இருந்தவர்களின்மீது முழுக் கட்டுப்பாட்டையும் உடையவனாக சாத்தான் இருந்தான்! இயேசு பரலோக மகா பரிசுத்தஸ்தலத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது, வாதைகளை ஊற்றுவது முடியாததாக இருந்தது. ஆனால் அங்குள்ள அவரது ஊழியம் முடிந்ததும், அவரது பரிந்துபேசுதல் முடிந்ததும் தேவனுடைய கோபத்தைத் தடைசெய்து நிறுத்துவதற்கு ஒன்றுமிருக்கவில்லை. எனவே அடைக்கலமற்ற குற்றமுள்ளவனான பாவியின்மேல், இரட்சிப்பை அசட்டைசெய்து கடிந்துகொள்ளுதலை வெறுத்தவனின் தலையின்மீது அது கோபத்துடன் விழுகிறது. இயேசுவின் மத்தியஸ்தம் முடிவடைந்தபின்பு, அந்தப் பயங்கரமான நேரத்தில் ஒரு பரிசுத்தமான தேவனின் முன் ஒரு பரிந்துபேசுபவர்—மத்தியஸ்தர் இல்லாமல், பரிசுத்தவான்கள் வாழ்ந்துகொண்டிருந்தனர். ஒவ்வொரு வழக்கும் முடிவுசெய்யப்பட்டிருந்தது; ஒவ்வொரு ஆபரணமும் எண்ணப்பட்டிருந்தது; பரலோக பரிசுத்தஸ்தலத்தின் வெளிப்பிரகாரத்தில் இயேசு சில விநாடிகள் தங்கியிருந்தார். அவர் பரலோக மகா பரிசுத்தஸ்தலத்தில் இருந்தபோது, அறிக்கை செய்துவிடப்பட்டிருந்த பாவங்கள் அனைத்தும் பாவத்திற்குக் காரணமான, அவர்களுடைய தண்டனையை அனுபவிக்கவேண்டியவனாக இருந்த சாத்தானின்மீது வைக்கப்பட்டன! (4)

**மிகுந்த காலதாமதம்! மிகுந்த காலதாமதம்!**

அதன்பின் இயேசு தமது ஆசாரிய உடையைக் கழற்றிவைத்துவிட்டு, தமது ராஜ வஸ்திரங்களை அணிந்துகொள்ளுவதை நான் கண்டேன். அவரது சிரசின்மீது கிரீடத்திற்குள் கிரீடமாக அநேக கிரீடங்கள் இருந்தன. தேவதூதர்கள் புடைசூழ அவர் பரலோகத்தைவிட்டுப் புறப்பட்டார். பூமியின் குடிகளின்மீது வாதைகள் விழுந்துகொண்டிருந்தன. சிலர் தேவனை பகிரங்கமாகக் குற்றம்சாட்டி, அவரை சபித்துக்கொண்டிருந்தனர். மற்றவர்கள் தேவனுடைய ஜனங்களிடத்திற்கு விரைந்துசென்று, தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ளுவது எப்படி என்று விசாரித்தனர். அவர்களுக்காகப் பரிசுத்தவான்களிடம் எதுவும் இல்லை. பாவிகளுக்கான கடைசிக் கண்ணீர் விடப்பட்டிருந்தது; கடைசிச் சுமை சுமக்கப்பட்டிருந்தது; வேதனைமிக்க கடைசி ஜெபம் ஏறெடுக்கப்பட்டிருந்தது; கடைசி எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருந்தது; இரக்கத்தின் இனிய குரல் இனிமேல் அவர்களை அழைக்காது; பரிசுத்தவான்களும் பரலோகம் முழுவதும் அவர்களுடைய இரட்சிப்பின்மீது வாஞ்சை உள்ளதாக இருந்தபோது, அவர்கள் தங்களுக்கென்று வாஞ்சை உள்ளவர்களாக இருக்கவில்லை. ஜீவனும் மரணமும் அவர்களுக்காக அவர்கள்முன் வைக்கப்பட்டிருந்தது. அநேகர் ஜீவனை விரும்பினார்கள்; ஆனால் அதைப்பெற முயற்சிசெய்யவில்லை. அவர்கள் ஜீவனைத் தெரிந்துகொள்ளவில்லை. இப்பொழுது குற்றவாளியைச் சுத்திகரிப்பதற்கான பாவ நிவாரண இரத்தம் இருக்கவில்லை. “விட்டுவையுங்கள்! பாவியை இன்னும் கொஞ்சகாலத்திற்கு விட்டுவையுங்கள்!” என்று அவர்களுக்காக மன்றாடி அழுகின்ற மனஉருக்கமிக்க இரட்சகர் இருக்கவில்லை. அது செய்யப்பட்டாகிவிட்டது; அது “முடிந்துவிட்டது” என்னும் பயங்கரமான வார்த்தைகளைக் கேட்டபோது, பரலோகம் முழுவதும் இயேசுவுடன் ஒன்றுபட்டது. இரட்சிப்பின் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது; ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளுவதைச் சிலர்மட்டுமே தெரிந்துகொண்டிருந்தனர். இரக்கத்தின் இனிய குரல் இல்லாமலானபோது, துன்மார்க்கரைப் பயமும் பயங்கரங்களும் பற்றிக்கொண்டன. மிகுந்த கால தாமதம்! மிகுந்த கால தாமதம்! (மிகவும் பிந்திவிட்டீர்கள்) என்னும் வார்த்தைகளை அவர்கள் மிகுந்த தெளிவுடன் கேட்டனர். (5)

தேவனுடைய வார்த்தையை மதிக்காமலிருந்தவர்கள் அங்குமிங்குமாகக் கடலிலிருந்து கடலுக்கும், வடக்கிலிருந்து கிழக்கிற்கும் தேவனுடைய வார்த்தையைத் தேடுவதற்கு அலைந்து திரிந்தனர். அவர்கள் அதனைக் கண்டுபிடிக்கமாட்டார்கள்; “இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும். ஆகாரக் குறைவினால் உண்டான

பஞ்சமல்ல; ஜலக்குறைவினால் உண்டான தாகமுமல்ல; கர்த்தருடைய வசனம் கேட்கக்கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன்!" தேவனிடத்திலிருந்து அங்கீகாரமான ஒரு வார்த்தை கிடைப்பதற்காக அவர்கள் எதைத் தராமலிருப்பார்கள்! ஆனால் அப்படியல்ல! அவர்கள் பசியுடனும் தாகத்துடனும் இருக்கவேண்டும். காலங்காலமாக தொடர்ந்து அவர்கள் இரட்சிப்பை அசட்டைசெய்திருந்தனர். பரலோகப் பொக்கிஷத்தையும் அல்லது அதை விரும்பிச்செயலாற்றுவதையும்விட, உலகப்பிரகாரமான செல்வங்களை மதித்து, பூமியின் இன்பங்களை மேலானதாக மதித்து, இரட்சிப்பை அசட்டைசெய்திருந்தனர். அவர்கள் இயேசுவை நிராகரித்து, அவரது பரிசுத்தவான்களை நிந்தித்திருந்தனர். அசுத்தமானவர்கள் என்றைக்கும் அசுத்தமானவர்களாக இருந்தாகவேண்டும் என்று அந்த தேவதூதன் கூறினான். (6)

வாதைகளின் பலன்களை அனுபவித்தபோது துன்மார்க்கரில் அநேகர் சீற்றமடைந்தனர். அது பயங்கரமான சரீர வேதனைகளின் காட்சியாக இருந்தது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளையும், சகோதரிகள் தங்கள் சகோதரர்களையும், சகோதரர்கள் தங்கள் சகோதரிகளையும், கசப்பான விதத்தில் நிந்தித்திருந்தனர். இந்தப் பயங்கரமான நேரத்திலிருந்து என்னைக் காப்பாற்றியிருந்திருக்கக்கூடிய சத்தியங்களைப் பெற்றுக்கொள்ளுவதிலிருந்து என்னை நீதான் தடுத்தாய் என்று மார்பிலடித்துக்கொண்டு அழுகின்ற உரத்த குரல் எல்லாத் திசைகளிலிருந்தும் கேட்கப்பட்டிருந்தன. மக்கள் தங்களுடைய போதகர்களின்மீது கசப்பான நிந்தைகளுடன் திரும்பி, நீங்கள் எங்களை எச்சரிக்கவில்லை. உலகம் முழுவதும் மாறும் என்று நீங்கள் எங்களிடம் கூறி, எழுப்பப்பட்டிருந்த பயத்தை அமைதிப்படுத்துவதற்காக, சமாதானம்! சமாதானம்! என்று சத்தமிட்டீர்கள். இந்த நேரத்தைப்பற்றி நீங்கள் எங்களிடம் கூறவில்லை; எங்களை எச்சரித்தவர்களை மதவெறியர்களென்றும், எங்களைக் கெடுத்துவிடக்கூடிய பொல்லாத மனிதர்களென்றும் கூறினீர்கள்; ஆனால் அவ்வாறு தடுத்த அந்த ஊழியக்காரர்களும் தேவனுடைய கோபத்திலிருந்து தப்பவில்லை என்பதை நான் கண்டேன். அவர்களுடைய பாடுகள், அவர்களுடைய ஜனங்களின் பாடுகளைவிடப் பத்துமடங்கு அதிகமாக இருந்ததை நான் கண்டேன். (7) ★

# 60

# யாக்கோபின் இக்கட்டுக்காலம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 406–408)**
**திருவசன ஆதாரம் : மத்தேயு 24:38-39; லூக்கா 17:26-27.**

பரிசுத்தவான்கள் நகரங்களையும் கிராமங்களையும் விட்டு வெளியேறி, குழுக்களாக ஒன்றுசேர்ந்து, மிகவும் தனிமையான இடங்களில் வாழுவதை நான் கண்டேன். துன்மார்க்கர்கள் பசியினாலும் தாகத்தினாலும் துன்பப்பட்டுக்கொண்டிருந்தபோது, அவர்களுக்கு (பரிசுத்தவான்களுக்கு) தூதர்கள் உணவும் தண்ணீரும் ஏற்பாடு செய்திருந்தனர். அப்பொழுது உலகத்தின் தலைவர்களாக இருந்த மனிதர்கள் ஒன்றுகூடி ஆலோசனை செய்திருந்ததையும், சாத்தானும் அவனது தூதர்களும் அவர்களைச்சுற்றித் தீவிரமாக இருந்ததையும் நான் கண்டேன். பரிசுத்தவான்கள் அவர்களுடைய தனித் தன்மை வாய்ந்த விசுவாசத்தை விட்டுவிட இணங்காவிட்டால், ஓய்வுநாளை விட்டுவிட்டு, வாரத்தின் முதல்நாளை ஆசரிக்க இணங்காவிட்டால், சிறிது காலத்திற்குப் பின்பு அவர்களை மரணத்திற்குட்படுத்த (கொலைசெய்ய), மனிதர்கள் சுதந்திரமுள்ளவர்களாக உள்ளனர் என்னும் துண்டுப் பிரசுரங்களையும் அவைகளின் பிரதிகளையும் நாட்டின் பல இடங்களிலும் விநியோகித்ததையும் நான் கண்டேன். ஆனால் சோதனையான இந்த நேரத்தில், பரிசுத்தவான்கள் தேவனின்மீது நம்பிக்கைவைத்து, அமைதியாக இருந்து, அவரது வாக்குத்தத்தத்தைச் சார்ந்திருந்து, அவர்கள் தப்புவதற்கான ஒரு பாதை ஏற்படுத்தப்படும் என்று நம்பியிருந்தனர். (1)

சில இடங்களில் அந்த கட்டளை நிறைவேற்றப்படவேண்டிய நேரத்திற்குமுன் பரிசுத்தவான்களைக் கொலைசெய்யும் துன்மார்க்கர்கள் அவர்கள்மீது பாய்ந்தனர்; ஆனால் சேனை வீரர்கள் போலிருந்த தேவதூதர்கள் அவர்களுக்காகப் போரிட்டிருந்தனர். உன்னதமானவரின் பரிசுத்தவான்களை அழிக்கும் சலுகை தனக்குக் கிடைக்கவேண்டும் என்று சாத்தான் விரும்பியிருந்தான்; ஆனால் இயேசு, அவர்களைக் காக்கும்படி, தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டார். தங்களைச்

சுற்றியுள்ள அஞ்ஞானிகளின் பார்வையில் தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளுபவர்களுடனுள்ள ஒரு உடன்படிக்கையினால் தேவன் கனப்படுத்தப்படுவார். விசுவாசமுள்ளவர்களாக இருந்து, அவரை இவ்வளவு காலமாக எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள், மரணத்தைக் காணாதவர்களாக மறுரூபப்படுத்தப்படுவதினால் இயேசு மகிமைப்படுத்தப்படுவார். (2)

பரிசுத்தவான்கள் பெரும் மனவேதை அடைவதை நான் கண்டேன். பூமியின் துன்மார்க்கமான குடிகளினால் அவர்கள் சூழப்பட்டிருந்ததுபோல் காணப்பட்டிருந்தனர். ஒவ்வொரு காட்சியும் அவர்களுக்கு எதிரானதாக இருந்தது. துன்மார்க்கரின் கரங்களினால் மரிக்கும்படி தேவன் கடைசியில் தங்களை விட்டுவிட்டார் என்று சிலர் பயப்பட ஆரம்பித்தனர். ஆனால் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டிருந்தால், தூதர்களால் சூழப்பட்டிருப்பதை அவர்கள் பார்த்திருப்பார்கள். அடுத்தபடியாகப் பரிசுத்தவான்களைக் கொலைசெய்யக் கோபமிக்க துன்மார்க்கரும், அதற்கடுத்தபடியாகத் துன்மார்க்கரை அவசரப்படுத்தும் பொல்லாத தூதர்களின் ஒரு கூட்டமும் வந்தன; ஆனால் அவர்கள் தேவனுடைய ஜனங்களைச் சமீபிப்பதற்கு முன்பு முதலில் வல்லமைமிக்க இந்த தூதர்களின் கூட்டத்தைக் கடந்தாகவேண்டும்! அது முடியாததாக இருந்தது. தூதர்கள் அவர்களைப் புறமுதுகிட்டுச் செல்லும்படிச் செய்ததுடன், பரிசுத்தவான்களை நெருக்கியிருந்த பொல்லாத தூதர்களையும் பின்னிட்டுவிழச்செய்தனர்!

### கண்ணீர் களிப்பாக மாறியது!

பரிசுத்தவான்களுக்கு அது ஒரு பயங்கரமான மனவேதனைமிக்க நேரமாக இருந்தது. விடுதலைக்காக அவர்கள் இரவும் பகலும் தேவனை நோக்கி அழுதனர். வெளித்தோற்றத்திற்கு அவர்கள் தப்பிச்செல்லும் வாய்ப்புகள் எதுவும் காணப்பட்டிருக்கவில்லை. உங்களுடைய தேவன் உங்களை எங்களுடைய கரங்களிலிருந்து ஏன் விடுவிக்காமலிருக்கிறார்? நீங்கள் மேலே சென்று, உங்கள் ஜீவனை ஏன் காப்பாற்றிக்கொள்ளக்கூடாது? என்று சத்தமிட்டுக்கொண்டு துன்மார்க்கர் ஏற்கனவே வெற்றியை ஆரம்பித்திருந்தனர். ஆனால் பரிசுத்தவான்கள் அவர்கள் கூறியவைகளுக்குச் செவிசாய்க்கவில்லை. யாக்கோபைப்போல் அவர்கள் தேவனுடன் தீவிரமாகப் போராடிக்கொண்டிருந்தனர். தூதர்கள் அவர்களை விடுவிக்க ஏங்கியிருந்தனர். ஆனால் அவர்கள் இன்னும் சற்றுநேரம் காத்திருக்க வேண்டும். தேவனுடைய ஜனங்கள் பாத்திரத்தில் பானம்பண்ணி, ஸ்நானத்தில் ஸ்நானம் செய்யப்பட்டாகவேண்டும். தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததின்மீது விசுவாசமுள்ளவர்களாக இருந்த தூதர்கள் காவல்செய்வதைத் தொடர்ந்திருந்தனர். அஞ்ஞானிகளுக்கிடையில்

தமது நாமம் நிந்திக்கப்படுவதற்கு தேவன் அனுமதிக்கமாட்டார். தமது பலத்த வல்லமையை வெளிக்காட்டி, அவரது பரிசுத்தவான்களை மகிமையுடன் விடுதலைசெய்வதற்கான நேரம் சமீபமாக வந்துவிட்டது. ஏனெனில் அவர் தமது நாமத்தின் மகிமைக்காக அவருக்காகப் பொறுமையுடன் காத்திருக்கும் ஒவ்வொருவரையும்—புத்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்களாக இருக்கும் ஒவ்வொருவரையும் விடுவிப்பார்! (4)

கடந்த காலத்திலிருந்த விசுவாசமிக்க நோவா எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டான். மழை பெய்து ஜலப்பிரளயம் வந்தபோது, நோவாவும் அவனது குடும்பத்தினரும் பேழைக்குள் பிரவேசித்தனர். தேவன் அவர்களை உள்ளே வைத்து மூடியிருந்தார். ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த பூமியின் குடிகள் நோவாவைப் பரிகசித்து ஏளனம் செய்திருந்தபோது, நோவா விசுவாசத்துடன் அவர்களை எச்சரித்திருந்தான். பூமியின்மீது தண்ணீர் இறங்கினபோது, ஒருவருக்குப்பின் ஒருவர் மூழ்கிக்கொண்டிருந்தபோது, அவர்கள் மிகவும் வேடிக்கையாகப் பேசியிருந்த அந்தப் பேழையானது, விசுவாசமிக்க நோவாவையும் அவனது குடும்பத்தையும் பாதுகாப்பாகச் சுமந்துகொண்டு செல்லுவதை அவர்கள் கண்டனர்; அதேவிதமாக, வரவிருக்கும் தேவனுடைய கோபத்தைப்பற்றிய விசுவாசத்துடன் உலகத்தை எச்சரித்திருந்த தேவனுடைய ஜனங்கள் விடுதலைசெய்யப்படுவார்கள் என்பதை நான் கண்டேன். மிருகத்தை வணங்கி, அதின் முத்திரையைப் பெற்றுக்கொள்ள மறுத்து, மறுரூபமடைவதை எதிர்பார்த்துக்கொண்டு இருப்பவர்களை துன்மார்க்கர் கொலைசெய்யும்படி அனுமதிக்கப்பட்டால், சாத்தானும் அவனது சேனைகளனைத்தும், தேவனை வெறுப்பவர்கள் அனைவரும் மனநிறைவடைவார்கள். ஓ! அவர்கள் நேசித்திருந்தவரைப் பார்க்கும்படி இவ்வளவு காலமாகக் காத்திருந்தவர்களின்மீதுள்ள முடிவான இறுதிப் போரில், சாத்தான் வெற்றிபெறுவது என்பது அவனுக்கு எப்படிப்பட்ட மகத்துவமாக இருக்கும்! பரிசுத்தவான்கள் உயரே செல்லுவார்கள் என்ற யோசனையைப் பரிகசித்திருப்பவர்கள் தேவனுடைய ஜனங்களின்மீதுள்ள அவரது கரிசனையையும் அவர்களது மகிமைமிக்க விடுதலையையும் சாட்சியாகக் காண்பார்கள். (5)

பரிசுத்தவான்களைக் கொலைசெய்யும்படி துன்மார்க்கர்கள் அவர்களைப் பின்தொடர்ந்துபோது, பரிசுத்தவான்கள் நகரங்களையும் கிராமங்களையும்விட்டு வெளியேறினார்கள். ஆனால் தேவனுடைய ஜனங்களைக் கொலைசெய்வதற்காகப் பட்டயங்கள் உயர்த்தப்பட்டபோது, அவை ஒடிந்து, சத்தியில்லாதவைகளாகி, வைக்கோலைப்போலக் கீழே விழுந்தன. பரிசுத்தவான்களுக்கு தூதர்கள் கேடயங்களாக இருந்து,

அவர்களைக் காத்தனர். விடுதலைக்காக அவர்கள் இரவும் பகலும் அழுதபோது, அவர்களுடைய அழுகையின் குரல்கள் கர்த்தருடைய சமுகத்திற்குமுன் வந்தது! (6) ★

# 61

# பரிசுத்தவான்களின் விடுதலை!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 409–412)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 6:11-17**

தேவன் அவருடைய ஜனங்களை நடுஇரவில் விடுதலை செய்வதைத் தெரிந்துகொண்டிருந்தார். துன்மார்க்கர் அவர்களைச் சூழ்ந்துகொண்டு பரிகாசம்செய்துகொண்டிருந்தபோது, திடீரென்று சூரியன் அதின் வல்லமையுடன் ஒளிர்ந்தது; சந்திரன் அசையாமல் நின்றுவிட்டது! பரிசுத்தவான்கள் அவர்களுடைய விடுதலையின் அடையாளங்களைப் பக்திவிநயமான மகிழ்ச்சியுடன் பார்த்தபோது, துன்மார்க்கர் அந்தக் காட்சியை வியப்புடன் பார்த்தனர். அடையாளங்களும், ஆச்சரியங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன. அனைத்தும் அவைகளின் இயற்கையான சுழற்சியைவிட்டு விலகியிருப்பதுபோல் காணப்பட்டது. நீரோட்டங்கள் ஒழுகாமல் நின்றுவிட்டன. கனமான இருண்ட மேகங்கள் மேலெழும்பி ஒன்றையொன்று மோதிக்கொண்டன. ஆனால் மகிமைமிக்க ஓரிடம் இருந்தது. அதிலிருந்து பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போல வானத்தையும் பூமியையும் அசைக்கின்ற தேவனுடைய குரல் வந்தது. ஒரு பலத்த பூமியதிர்ச்சி உண்டானது; கல்லறைகள் திறக்கப்பட்டன; முத்தூதுகளின் அடிப்படையில், ஓய்வுநாளை ஆசரித்திருந்து, விசுவாசத்துடன் மரித்து பூமியின் தூளான தங்களுடைய படுக்கைகளில் கிடந்தப்பட்டிருந்தவர்கள், கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தவர்களுடன் தேவன் செய்ய இருக்கும் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கேட்பதற்காக மகிமையடைந்தவர்களாக வெளியே வந்தனர்! உயிர்த்தெழுந்தனர்! (1)

வானம் திறந்தும் மூடியும் அமைதியற்ற சத்தத்துடன் இருந்தது. காற்றில் ஆடும் நாணலைப்போல மலைகள் அசைந்து, உடைந்து, பாறைகள் சிதறின; பானையைப்போல் கடல் கொந்தளித்தது; கற்களை வெளியே வீசியது. இயேசுவின் வருகையின் நாளையும் நேரத்தையும் தேவன் கூறி, தமது ஜனங்களுக்கு நித்திய உடன்படிக்கையைக்

கொடுத்தபோது, அவர் ஒரு சொற்றொடரைப் பேசி, அது பூமியெங்கும் கடந்துசெல்லும்வரைப் பேசாமலிருந்தார். மேலே பதித்த கண்களுடன் தேவனுடைய இஸ்ரவேலர்கள் நின்று, பெரும் இடிமுழக்கங்களைப் போன்று பூமியெங்கும் சென்றிருந்த யேகோவாவின் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளைக் கவனித்திருந்தனர். அது திகைக்கவைக்கும் பக்திவிநயமானதாக இருந்தது. ஒவ்வொரு சொற்றொடரின் முடிவின்போதும், பரிசுத்தவான்கள் மகிமை! அல்லேலூயா! என்று சத்தமிட்டனர். தேவனுடைய மகிமையினால், அவர்களுடைய முகங்கள் ஒளிப்படுத்தப்பட்டிருந்தன. மோசே சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கிவந்தபோது, அவனுடைய முகம் பிரகாசித்திருந்ததைப்போல, அவர்களுடைய முகங்கள் மகிமையினால் பிரகாசித்திருந்தன. அந்த மகிமையின் காரணமாக துன்மார்க்கரால் அவர்களைப் பார்க்கமுடியவில்லை. ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரித்து தேவனைக் கனப்படுத்தியிருந்தவர்களின்மீது முடிவில்லாத ஆசீர்வாதம் அறிவிக்கப்பட்டபோது, மிருகத்தின்மீதும் அதின் சொரூபத்தின்மீதும் அடைந்த வெற்றிக்காக ஒரு பலத்த வெற்றியின் முழக்கம் உண்டானது. அப்பொழுது தேசம் இளைப்பாறவேண்டிய யூபிலி ஆரம்பமாயிற்று. பக்தியுள்ள அடிமையின் துன்மார்க்கமான எஜமான் என்ன செய்வதென்று அறியாமல் குழப்பத்தில் இருந்தபோது, அந்த அடிமை வெற்றியுடன் எழுந்து, தன்னைக் கட்டியிருந்த சங்கிலியை உதறிப்போட்டுவிட்டதை நான் கண்டேன். ஏனெனில், துன்மார்க்கரால் தேவனுடைய குரலின் வார்த்தைகளைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. (2)

விரைவில், மனித குமாரன் அமர்ந்திருந்த வெண்மேகம் தோன்றியது. முதலில் தூரத்தில் தோன்றினபோது, அந்த மேகம் மிகவும் சிறியதாகக் காணப்பட்டது; அது மனுஷகுமாரனுடைய அடையாளம் என்று தூதன் கூறினான். அந்த மேகம் பூமியைச் சமீபித்தபோது, இயேசு வெற்றி வீரராகப் பவனிவருகின்ற அவரது மேலான மகிமையையும் மகத்துவத்தையும் எங்களால் காணமுடிந்தது. ஒளிமிக்க ஜொலிக்கும் கிரீடங்களைத் தங்களது சிரங்களின்மேல் அணிந்தவர்களாக பரிசுத்த தூதர்களின் பெரும் கூட்டமானது அவரது பாதையில் அவரைச் சூழ்ந்துவந்தனர்! (3)

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை!

அந்தக் காட்சியின் மகிமையை எந்த மொழியிலும் விவரிக்க இயலாது. மகத்துவமிக்க—உயிரோட்டமுள்ள அந்த வெண்மேகம் தனது மேற்கொள்ளமுடியாத மகிமையுடன் மேலும் அருகில் வந்தபோது, எங்களால் அழகிய இயேசுவைக் காணமுடிந்தது. அவர் தமது சிரசின் மேல் முள்முடியை அணிந்திருக்கவில்லை—மகிமையின் ஒரு கிரீடம்

அவரது பரிசுத்த நெற்றிக்குமேல் இருந்தது! அவரது உடையின்மீதும் தொடையின்மீதும் "இராஜாதிஇராஜா கர்த்தாதிகர்த்தா" என்னும் பெயர் எழுதப்பட்டிருந்தது. அவரது முகம் நடுப்பகலில் பிரகாசிக்கின்ற சூரியனைப்போல் பிரகாசமாயிருந்தது. கண்கள் அக்கினி ஜுவாலையைப் போல் இருந்தன. அவரது பாதங்கள் சுத்தமான வெண்கலத்தைப்போலிருந்தன. அநேக இசைக் கருவிகளின் ஒலியைப்போல, அவரது குரல் இனிமையாக இருந்தது. அவருக்கு முன்பாக பூமி நடுங்கினது. வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாயிற்று. ஒவ்வொரு மலையும் தீவுகளும் அவைகளின் இடங்களைவிட்டுப் பெயர்ந்தன. "பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும் பர்வதங்களின் குகைகளிலும், கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது; யார்நிலைநிற்கக்கூடும் என்றார்கள்" (வெளிப்படுத்தல் 6:15–17). (4)

தேவனுடைய விசுவாசமிக்க பிள்ளைகளை பூமியிலிருந்து சற்று நேரத்திற்குமுன் அழித்திருந்திருக்கக்கூடியவர்கள், இப்பொழுது அவர்கள்மீது தங்கியிருந்த தேவனுடைய மகிமையைக் கண்டனர். அவர்களுடைய திகிலுக்கிடையில், "இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவர் நம்மை இரட்சிப்பார்" (ஏசாயா 25:9) என்று மகிழ்ச்சியான குரலில் கூறும் பரிசுத்தவான்களின் குரல்களையும் அவர்கள் கேட்டனர். (5)

## முதலாம் உயிர்த்தெழுதல்!

நித்திரைசெய்துகொண்டிருந்த பரிசுத்தவான்களை வெளியே வரும்படி அழைத்தபோது, பூமி பலமாக அசைந்தது. அந்த அழைப்பிற்கு அவர்கள் பதில்கொடுத்து, மகிமைமிக்க அழியாமையை அணிந்தவர்களாக, "வெற்றி, வெற்றி! மரணத்தின்மீதும் கல்லறையின்மீதும் வெற்றி! மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1கொரி. 15:55) என்று கூறிக்கொண்டு வெளியே வந்தனர். அதன்பின், உயிருள்ள பரிசுத்தவான்களும் மரணமடைந்து எழுப்பப்பட்டிருந்த பரிசுத்தவான்களும் சேர்ந்து, வெற்றியின் முழக்கத்தைத் தொடர்ந்து எழுப்பிக்கொண்டிருந்தார்கள். நோய், மரணம் ஆகியவைகளின் அடையாளங்களுடன் கல்லறைக்குள் சென்றிருந்தவர்கள்

அழிவில்லாமையையும் சுறுசுறுப்பையும் உடைய தேகத்துடன் வெளியே வந்தனர். நொடிப்பொழுதில் கண்ணிமைக்கும் நேரத்தில்—உயிரோடிருந்த பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்பட்டு, உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுடன் சேர்ந்து—அவர்கள் ஒன்றுசேர்ந்து, உயரே எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆகாயத்தில் தங்களுடைய கர்த்தரைச் சந்திக்கின்றனர். ஓ! அது எப்படிப்பட்ட மகிமையான சந்திப்பு! மரணத்தினால் பிரிக்கப்பட்டிருந்த நண்பர்கள் இனி ஒருபோதும் பிரியாவண்ணம் ஒன்றுசேருகின்றனர்! (6)

அந்த மேக இரதத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இறக்கைகளும் அதன்கீழ் ஜீவனுள்ள சக்கரங்களும் இருந்தன. அந்த இரதம் மேலே உயர்ந்தபோது, அந்தச் சக்கரங்கள் "பரிசுத்தம்" என்று குரல் கொடுத்தன. அந்த மேகத்தைச் சுற்றிலுமிருந்த தூதர்களின் கூட்டமும் "சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்!" என்றது. அந்த மேகத்திலிருந்த பரிசுத்தவான்களும் "மகிமை! அல்லேலூயா!" என்று உரத்த குரலில் கூறினார்கள். அந்த இரதம் பரிசுத்த நகரத்தை நோக்கி, உயரே எழுந்துசென்றது. நகரத்திற்குள் பிரவேசிக்குமுன், பரிசுத்தவான்கள் மத்தியில் இயேசு நடுநாயகமாக நிற்கும் விதத்தில்—சீரான வகையில்—சதுர வடிவில் நிறுத்தப்பட்டனர்! அவர் (இயேசு) பரிசுத்தவான்கள், தூதர்கள் ஆகியோரின் தோள்களுக்கும் தலைகளுக்கும் மேலாக உயர்ந்தவராக நின்றார். அந்த சதுரத்தில் இருந்த அனைவராலும் அவரது மகத்துவமும் வசீகரமுமிக்க முகத்தைக் காணமுடிந்தது. (7) ★

# 62

# பரிசுத்தவான்களுக்குப் பரிசு!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 413–414)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 22:14**

அதற்குப்பின் பெரும் எண்ணிக்கையிலுள்ள தேவதூதர்கள் அந்த நகரத்திலிருந்து ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் அவனது பெயர் பொறிக்கப்பட்ட ஒரு கிரீடம் என்ற விகிதத்தில் மகிமைமிக்க கிரீடங்களை கொண்டுவருவதை நான் கண்டேன். அந்தக் கிரீடங்களைக் கொண்டுவரும்படி இயேசு அழைத்தபோது, தூதர்கள் அவைகளை அவரிடம் கொடுத்தனர். அழகிய இயேசு தமது சொந்த வலது கரத்தினால், பரிசுத்தவான்களின் தலைகளின்மீது அந்தக் கிரீடங்களை வைத்தார். அதே விதமாக, அந்த தூதர்கள் வீணைகளையும் கொண்டுவந்தனர். இயேசு அவைகளையும் பரிசுத்தவான்களுக்குக் கொடுத்தார். தலைமைதாங்கியிருந்த தூதர்கள் முதலில் ஒரு பாடலின் பல்லவியை இசைத்தார்கள். அதைத்தொடர்ந்து, நன்றியையும் மகிழ்ச்சிமிக்க துதியையும் ஒவ்வொரு குரலும் உயர்த்தினபோது, ஒவ்வொரு கரமும் திறமையுடன் வீணைக் கம்பிகளை மீட்டி, மேலான இசைந்த ராகத்தில் இனிமையான இசையை எழுப்பின! அதற்குப்பின் இயேசுபெருமான் மீட்கப்பட்டவர்களை பொன்நகரத்தின் வாசலுக்கு நடத்திச்செல்வதை நான் கண்டேன். அவர் அந்த வாசல் கதவைப் பிடித்து, அதன் ஜுவாலிக்கும் கீல்கள் பின்செல்லுமாறு கதவைத் திறந்து, சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற ஜாதிகளை உள்ளே பிரவேசிக்கக் கட்டளையிட்டார். அந்த நகரத்திற்குள் கண்களுக்கு விருந்தளிக்கும் அனைத்தும் இருந்தன. அவர்கள் எங்கும் விவரிக்க முடியாத மகிமையைக் கண்டிருந்தனர். அதன்பின் இயேசு அவருடைய மீட்கப்பட்ட பரிசுத்தவான்களைப் பார்த்தார். அவர்களுடைய முகங்கள் மகிமையினால் பிரகாசமடைந்திருந்தன. அன்புமிக்க அவரது கண்களை அவர்கள்மீது அவர் பதித்தபோது, அவர் தமது இனிய குரலில் அவர்களை நோக்கி: "நான் என் ஆத்தும வருத்தத்தின் பாரத்தைக்கண்டு திருப்தியடைந்திருக்கிறேன்; நித்திய காலமாக நீங்கள் அனுபவிக்க வேண்டிய மேலான மகிமை உங்களுடையதாக இருக்கிறது. உங்களுடைய துயரங்கள்

முடிவடைந்துவிட்டன. இனி மரணமுமில்லை, அழுகையும் கண்ணீரும் வேதனையும் இல்லை” என்று கூறினார். மீட்கப்பட்ட கூட்டத்தினர்கள் குனிந்து, ஜுவாலிக்கும் அவர்களுடைய கிரீடங்களை இயேசுவின் பாதத்தில் வைத்ததையும், அதன்பின் அழகிய இயேசு தமது கரங்களால் அவர்களைத் தூக்கிநிறுத்தினதையும், அவர்கள் தங்களுடைய தங்க வீணைகளை மீட்டி, பரலோகம் முழுவதையும் அவர்களுடைய இனிய இசையால் நிரப்பும்படி, ஆட்டுக்குட்டியானவரின் பாடலைப் பாடினதையும் நான் கண்டேன். (1)

அதன்பின் இயேசு அவருடைய ஜனங்களை ஜீவவிருட்சத்திற்கு நடத்துவதையும், அழிவுக்குரிய செவிகளில் இதுவரை கேட்டிராத இனிமையான இசைபோன்ற குரலில்: “இந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள்; நீங்களனைவரும் அதனைப் புசியுங்கள்” என்று கூறியதை நான் கண்டேன். ஜீவவிருட்சத்தின்மீது தாராளமாகப் பங்குபெறக்கூடிய மிகவும் அழகிய கனிகள் இருந்தன. அந்த நகரத்தில் மகிமைமிக்க ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது; அதிலிருந்து பளிங்கைப்போன்ற ஜீவத்தண்ணீருள்ள ஜீவநதி புறப்பட்டிருந்தது; அந்த நதியின் இரு கரையிலும் ஜீவவிருட்சம் இருந்தது. அந்த நதியின் கரையில் உணவுக்கு உகந்த கனிகளையுடைய மற்ற மரங்களும் இருந்தன! பரலோகத்தைப்பற்றிய வர்ணனையை விவரிப்பதற்கு மொத்தத்தில் மொழி பலவீனமானதாக இருக்கிறது. அந்தக் காட்சி என் முன் எழும்பும்போது, நான் வியப்பினால் என்னை இழக்கிறேன். மேம்பாடான சிறப்பினாலும் மேலான மகிமையினாலும் அழைத்துச்செல்லப்பட்ட நான், எனது எழுதுகோலைக் கீழே வைத்துவிட்டு, ஓ! எப்படிப்பட்ட அன்பு! எப்படிப்பட்ட ஆச்சரியமான அன்பு! என்று வியந்து கூவுகிறேன். பரலோகத்தின் மகிமையையும் ஈடுஇணையற்ற அன்பின் ஆழத்தையும் விவரிக்க மிகமேலான எந்த மொழியும்கூடத் தோற்றுவிடுகிறது! (2) ★

# 1

# ஆயிரம் வருட ஆளுகை!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 415–417)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 20:1–7**

மறுபடியும் எனது கவனம் பூமியை நோக்கித் திருப்பப்பட்டது. துன்மார்க்கர் அழிக்கப்பட்டு, அவர்களுடைய மரித்த உடல்கள் பூமியின் மேற்பரப்பில் கிடந்திருந்தன. தேவனுடைய கோபமாகிய ஏழு வாதைகள் பூமியின் குடிகளைச் சந்தித்திருந்தது; அது அவர்களை வேதனையினால் நாக்குகளைக் கடித்துக்கொண்டு, தேவனைச் சபிக்கச்செய்திருந்தது. தவறான மேய்ப்பர்கள் தேவனுடைய கோபத்தின் இலக்காக இருந்திருந்தனர். அவர்கள் தங்களுடைய பாதங்களின்மீது நின்றிருந்தபோது, அவர்களுடைய கண்கள் அவைகளின் குழிகளில் அழுகிவிட்டிருந்தன. அவர்களுடைய வாய்களில் அவர்களுடைய நாக்குகள் அழுகிவிட்டிருந்தன. தேவனுடைய குரலினால் பரிசுத்தவான்கள் விடுதலையடைந்தபின், திரளான துன்மார்க்கர்கள் தங்களுடைய கடுங்கோபத்தை ஒருவர்மீது ஒருவர் திருப்பினார்கள். பூமி இரத்தவெள்ளத்தில் இருந்ததுபோல் காணப்பட்டது. பூமியின் ஒரு முனைமுதல் மறுமுனைவரை மரித்தவர்களின் உடல்கள் கிடந்திருந்தன. பூமி பாழடைந்த ஒரு வனாந்தரம்போல் காணப்பட்டிருந்தது. பூமியதிர்ச்சியினால் அசைக்கப்பட்டு விழுந்திருந்த நகரங்களும் கிராமங்களும் மண்மேடுகளாகக் கிடந்தன. கடலிலிருந்து முரட்டுத்தனமாக வீசியெறியப்பட்ட பாறைகள் பூமியின்மீதே அதின் மேற்பரப்பு எங்கிலும் சிதறியடிக்கப்பட்டிருந்தன. பெரும் மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டு, தரையின்மீது பின்னிக்கிடந்தன. இந்த பூமியே சாத்தானுக்கும் அவனது பொல்லாத தூதர்களுக்கும், ஆயிரம் வருடங்களுக்கு வீடாக இருக்கவேண்டியதாக இருக்கிறது! உருக்குலைந்து போன பூமியின் மேற்பரப்பின்மீது அவன் அடைக்கப்பட்டு, மேலும் கீழுமாக அலைந்துதிரிந்து, தேவனுடைய கற்பனைகளுக்கு எதிராக அவன் செய்த கலகத்தின் பலன்களைப் பார்ப்பான். பாவத்திற்குக் காரணமாக இருந்த அதன் சாபத்தின் துன்பங்களை ஆயிரம் வருடங்கள் அனுபவிப்பான். (1)

மற்ற கிரகங்களுக்குச் சென்று, அங்கு விழுந்துபோகாதிருப்பவர்களை சோதிக்கவும் தொல்லைப்படுத்தவும் முடியாதபடி, சலுகைகளை இழந்தவனாக, இந்த பூமியில்மட்டுமே இருப்பதற்கென்று மட்டுப்படுத்தப்பட்டவனாக, அவன் இருப்பான். இந்த நேரத்தில் அவன் அதிகமான பாடுகளை அனுபவிக்கிறான். அவனது விழுகையிலிருந்து அவனது தீய சுபாவங்கள் தொடர்ச்சியாகச் செயலாற்றப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் இப்பொழுதோ அவன் தனது வல்லமைகள் நீக்கப்பட்டவனாக, விழுகையிலிருந்து அவன் செய்திருந்த காரியங்களைத் திரும்பிப்பார்க்கும்படியும், அவன் செய்திருந்த தீங்குகள் அனைத்திற்காகவும், மற்றவர்களை செய்யவைத்த தீங்குகளுக்காகவும் தண்டிக்கப்படவிருக்கிற பயங்கரமான எதிர்காலத்தை நடுக்கத்துடனும் திகிலுடனும் பார்க்கவும் விட்டுவிடப்பட்டிருக்கிறான்! (2)

இனி ஒருபோதும் சாத்தானால் சோதிக்கப்படவும் தொல்லைப்படுத்தப் படவும் முடியாதவர்களாக அவர்கள் இருந்ததினாலும், அவனுடைய பிரசன்னத்திலிருந்தும் அவனுடைய சோதனைகளிலிருந்தும், மற்ற உலகங்களின் குடிகள் விடுதலைசெய்யப்பட்டிருப்பதினாலும், பதினாயிரங்களான இசைக் கருவிகளின் சத்தத்தில், வெற்றியின் சத்தங்கள் மீட்கப்பட்டவர்களிடத்திலிருந்தும் தூதர்களிடத்திலிருந்தும் உண்டானதை நான் கேட்டேன். (3)

அதன்பின், நான் சிங்காசனங்களைக் கண்டேன். அவைகளின் மீது இயேசுவும் மீட்கப்பட்டவர்களும் உட்கார்ந்தார்கள். பரிசுத்தவான்கள் தேவனுக்கு முன்பாக அரசர்களாகவும் ஆசாரியர்களாகவும் ஆளுகை செய்ததை நான் கண்டேன். கிறிஸ்து அவரது ஜனங்களுடன் சேர்ந்து, நியாயப்பிரமாணப் புத்தகமாகிய தேவனுடைய வார்த்தையுடன் துன்மார்க்கருடைய செயல்களை ஒப்பிட்டு, சரீரத்தில் செய்த ஒவ்வொரு செய்கைக்கும் தக்கபடி நியாயத்தீர்ப்புச் செய்ததை நான் கண்டேன். அதன் பின்னர் துன்மார்க்கர் அவர்களது செயல்களுக்குத்தக்கதாக அடையவேண்டிய தண்டனையை பரிசுத்தவான்கள் முடிவுசெய்தனர். அவை அவர்களது பெயர்களுக்கு எதிராக மரணப்புத்தகத்தில் எழுதப்பட்டன. சாத்தானும் அவனுடைய தூதர்களும்கூட இயேசுவினாலும் பரிசுத்தவான்களினாலும் நியாயந்தீர்க்கப்பட்டனர். சாத்தான் எவர்களையெல்லாம் வஞ்சித்திருந்தானோ, அவர்களையெல்லாம்விட அதிகமான தண்டனையை அடையும்படித் தீர்ப்புச்செய்யப்பட்டான். அவர்களுடைய வேதனைகளுடன் ஒப்பிடமுடியாத அளவிற்கு அதிகமானதாக அவனுடைய வேதனைகள் இருக்கும். சாத்தான் எவர்களையெல்லாம் வஞ்சித்திருந்தானோ, அவர்களெல்லாம் மரித்திருந்தனர். சாத்தான் அதிக காலம் உயிருடனிருந்து, அதிக காலமாகப் பாடுகளை அனுபவிக்கவேண்டியவனாக இருந்தான். (4)

மரித்த துன்மார்க்களுக்கான நியாயத்தீர்ப்பு முடிவடைந்தபின், ஆயிரம் வருடங்களின் முடிவில், இயேசு அந்த நகரத்தைவிட்டு வெளியேறினார். பரிசுத்தவான்களும் தூதர்களின் கூட்டமும் அவரைப் பின்தொடர்ந்தனர். இயேசு ஒரு பெரிய மலையின்மீது இறங்கினார். அவரது பாதங்கள்பட்டதும் அந்த மலை இரண்டாகப் பிளந்து, ஒரு பெரிய சமவெளி உண்டாயிற்று. அதன்பின் நாங்கள் மேலே பார்த்து, பன்னிரண்டு அஸ்திவாரங்களையும், பக்கத்திற்கு மூன்றாக உள்ள பன்னிரண்டு வாசல்களையும் ஒவ்வொரு வாசலிலும் ஒரு தேவதூதனையும் கண்டோம். அந்த நகரம்—அந்தப் பெரிய நகரம் தேவனிடத்திலிருந்து—பரலோகத்திலிருந்து இறங்கி வருகிறது என்று நாங்கள் சத்தமிட்டோம். அதின் முழு அலங்காரத்துடனும் மகிமையுடனும் அது கீழே இறங்கிவந்து, அதற்கென்று இயேசு ஆயத்தம்செய்திருந்த மிகப்பெரிய சமவெளியில் நிலைகொண்டது. (5) ★

# 1

# இரண்டாம் உயிர்த்தெழுதல்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 418–420)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 1:7; 20:4–8**

அதன்பின் இயேசுவும் பரிசுத்த தூதர்களின் கூட்டம் அனைத்தும் மீட்கப்பட்டவர்களுடன் பொன் நகரத்தைவிட்டுப் புறப்பட்டனர். இந்த தூதர்கள் அவர்களது சேனைத் தலைவரைச் சூழ்ந்து அணிவகுத்து அவரது பாதையில் சென்றனர். மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டம் பின்தொடர்ந்தது. அதற்குப்பின் பயங்கரமான அச்சமூட்டும் மகத்துவத்துடன், மரித்த துன்மார்க்கரை வெளியேவரும்படி இயேசு அழைத்தார். அவர்கள் கல்லறைக்குள் சென்றிருந்த அதே பலவீனமும் நோய்வாய்ப்பட்டதுமாயிருந்த சரீரங்களுடன் வந்தனர். எப்படிப்பட்ட ஒரு பார்வை! எப்படிப்பட்ட ஒரு காட்சி! முதலாம் உயிர்த்தெழுதலில் அழியாமை என்னும் மலர்ச்சியுடன் அனைவரும் வந்திருந்தனர்; ஆனால் இரண்டாம் உயிர்த்தெழுதலில் அனைவர்மீதும் சாபத்தின் அடையாளங்கள் காணப்பட்டிருந்தன! அரசர்களும் பூமியின் மேன்மைமிக்க மனிதர்களும் கேவலமானவர்களும் கீழ்த்தரமானவர்களும் கற்றவர்களும் கல்லாதவர்களும் ஒன்று சேர்ந்து வருகின்றனர். அவரை நிந்தித்துப் பரிகசித்தவர்களும், அவரது பரிசுத்தமான சிரசின்மீது முள்முடியை அணிவித்து, அவரைக் கோலால் அடித்த அனைவரும், மனுஷகுமாரனை அவரது சகல மகத்துவங்களுடன் காணுகின்றனர். அவரது விசாரணையின் நேரத்தில், அவரது முகத்தில் துப்பினவர்கள், இப்பொழுது துளைக்கும் அவரது பார்வையிலிருந்தும் அவரது முகத்தின் மகிமையிலிருந்தும் அவர்களுடைய முகங்களைத் திருப்பிக்கொள்ளுகின்றனர். அவரது கரங்களிலும் பாதங்களிலும் ஆணி அறைந்தவர்கள், அவர் சிலுவையில் அறையப்பட்டதின் தழும்புகளைப் பார்க்கின்றனர். அவர்களால் குத்தப்பட்டவரும், மரணவேதனையின்போது பரிகசிக்கப்பட்டவரும் இவர்தான் என்பதை அவர்கள் அறிகின்றனர். இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமான அவரது சமுகத்திலிருந்து மறைந்து

கொள்ளும்படி ஓடும்போது உடலை நெளியச்செய்யும் வேதனையுடன் புலம்பும் காட்சி அதிகமாகின்றன. (1)

ஒரு சமயத்தில் தாங்கள் நிந்தித்திருந்த அவரின் பயங்கரமான மகிமையிலிருந்து தங்களை மறைக்கும்படி பாறைகளின் மறைவில் ஒளிந்துகொள்ள அனைவரும் வகைதேடுகின்றனர். அவரது மகத்துவத்தி னாலும் மிக அதிகமான மகிமையினாலும் பேசமுடியாதவர்களும் திகைப்படைந்தவர்களும் வேதனையடைந்தவர்களும் ஒன்றுசேர்ந்து, கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்ற ஓசையை பயங்கரமான—நடுங்கும் குரலில்—தெளிவுடன் எழுப்புகின்றனர். (2)

அதன்பின், பரிசுத்த தூதர்களும் சகல பரிசுத்தவான்களும் பின்தொடர, இயேசு நகரத்திற்குள் செல்லுகின்றார். அழிவதற்கென்று விழுந்துபோன துன்மார்க்கர்களின் கசப்பான புலம்பல்கள் ஆகாயத்தை நிரப்புகின்றன. அதற்குப்பின் சாத்தான் மறுபடியும் அவனுடைய வேலையைத் தொடங்கினதை நான் கண்டேன். அதன்பின் சாத்தான் அவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களைச் சுற்றிவந்து, பலவீனமாக இருந்தவர்களைப் பலப்படுத்தி, அவனும் அவனுடைய தூதர்களும் வல்லமை உள்ளவர்கள் என்று கூறினான். எழுப்பப்பட்டிருந்த எண்ணிலடங்காத லட்சக்கணக்கானவர்களை அவன் சுட்டிக்காட்டினான். போரில் மிகவும் திறமைவாய்ந்தவர்களும் இராஜ்யங்களை வென்ற வீரர்களும் அரசர்களும் அந்தக்கூட்டத்தில் இருந்தனர். போரில் ஒரு போதும் தோல்வியடையாத இராட்சதர்களும் வீரமிக்க மனிதர்களும் அங்கு இருந்தனர். தனது வருகையினால் இராஜ்யங்களை நடுங்கச்செய்திருந்த, அகந்தையும் வெற்றியின்மீது நம்பிக்கையும்கொண்டிருந்த நெப்போலியன் அங்கு இருந்தான்! வெற்றிபெறவேண்டுமென்னும் தாகத்தோடிருந்து, ஆனால் தோல்வியடைந்திருந்த மிக உயரமான உருவத்தையும் மேலான தோற்றத்தையும் உடையவர்களான மனிதர்கள் அங்கு இருந்தனர். (3)

அவர்கள் தங்களுடைய கல்லறைகளிலிருந்து வெளியே வந்தபோது, மரணத்தின்போது நின்றுபோயிருந்த அவர்களது எண்ணத்தின் ஓட்டத்தைத் மீண்டும் தொடர்ந்தவர்களாக உள்ளனர். அவர்கள் விழுந்தபோது, வெற்றியடையவேண்டும் என்ற எண்ணம் அவர்களை ஆண்டிருந்தது. இப்பொழுதும் அதே வாஞ்சையை உடையவர்களாக அவர்கள் உள்ளனர். சாத்தான் அவனுடைய தூதர்களுடனும் அதன்பின் அந்த அரசர்களுடனும் வெற்றி வீரர்களுடனும் ஆலோசனை செய்கிறான். அதற்குப்பின், அவன் அந்த மிகப்பெரும் சேனையைப் பார்க்கிறான். அவர்களைப் பார்த்து: அந்த நகரத்திற்குள் இருக்கும் கூட்டத்தினர்கள் கொஞ்சமானவர்களும் பலவீனமானவர்களும் எனவும், அவர்களை வெளியே துரத்திவிட்டு, அதின்

செல்வங்களையும் மகிமைகளையும் தங்களுடையதாக்கிக்கொள்ளலாம் எனவும் கூறுகிறான். (4)

அவர்களை வஞ்சிப்பதில் சாத்தான் வெற்றியடைந்துவிடவே, அனைவரும் உடனே தங்களை யுத்தத்திற்கென்று ஆயத்தஞ்செய்கின்றனர். அந்த மகாப் பெரிய சேனையில் திறமைவாய்ந்த மனிதர்கள் உள்ளனர். அவர்கள் போருக்கான சகலவிதமான கருவிகளையும் உருவாக்குகின்றனர். அதன்பின் சாத்தானைத் தங்களுடைய தலைவனாகக்கொண்டு, அந்த சேனை முன்னோக்கிச் செல்லுகிறது. அரசர்களும் வீரர்களும் சாத்தானுக்குப் பின்னால் நெருக்கமாகச் செல்லுகின்றனர். அதைத் தொடர்ந்து, திரளானவர்கள் அணிஅணியாகப் பின்செல்லுகின்றனர். அவர்கள் பரிசுத்த நகரத்தை நோக்கி, உருக்குலைந்து கிடக்கும் பூமியின் மேற்பரப்பின்மீது செல்லும்போது, ஒவ்வொரு சேனைப்பகுதியும் அதின் தலைவனோடு கிரமமாக நடந்துசெல்லுகின்றது. இயேசு நகரத்தின் வாசலை அடைக்கிறார். இந்தப் பெரும் சேனை அதனைச் சூழ்ந்து, ஒரு பெரும் தீவிரமான யுத்தத்தை எதிர்நோக்கி அணிவகுத்து நிற்கின்றது. (5) ★

# 1

# கிறிஸ்து முடிசூட்டப்படுதல்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 421–426)**
**திருவசன ஆதாரம் : வெளிப்படுத்தல் 7:9–10; மத்தேயு 25:31**

இப்பொழுது கிறிஸ்து அவரது எதிரிகளுக்குமுன் மறுபடியும் தோன்றுகிறார். புடமிடப்பட்ட பொன்னாலான அஸ்திவாரத்தை உடைய அந்த நகரத்திலிருந்து மிக உயரத்தில் ஒரு சிங்காசனம் உயர்த்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சிங்காசனத்தின்மீது தேவகுமாரன் அமர்ந்திருக்கிறார். அவரது இராஜ்யத்தின் பிரஜைகள் அவரைச் சுற்றிலும் உள்ளனர். கிறிஸ்துவின் வல்லமையையும் மகத்துவத்தையும் எந்த மொழியினாலும் வர்ணிக்கமுடியாது; எந்த எழுதுகோலினாலும் சித்தரிக்கமுடியாது; நித்திய பிதாவின் மகிமை அவரது குமாரனை மூடியிருக்கிறது. அவரது பிரசன்னத்தின் ஒளி தேவனுடைய நகரத்தை நிரப்பி, அதின் வாசல்களையும் கடந்துசென்று, பூமி முழுவதையும் அதின் ஒளியினால் நிரப்புகிறது. (1)

ஒரு சமயத்தில் சாத்தானின் காரியங்களில் மிகவும் வைராக்கியமாக இருந்து, எரிகின்ற அக்கினியிலிருந்து பிடுங்கப்பட்ட கொள்ளிகளைப்போல இருந்தவர்கள், ஆழமும் வலிமையுமிக்க பக்தியுடன் அவர்களுடைய இரட்சகரைப் பின்தொடர்ந்திருந்தவர்கள் சிங்காசனத்திற்கு மிக அருகில் இருக்கின்றனர். அதையடுத்து தவறான தன்மையும் சந்தேகமும் உள்ளவர்களுக்கு நடுவிலிருந்து கிறிஸ்தவ சுபாவத்தில் பூரணப்பட்டவர்கள் இருக்கின்றனர். கிறிஸ்தவ உலகம் நியாயப்பிரமாணத்தில் பிளவு (குறைபாடு) இருக்கிறதென்று கூறிக்கொண்டிருக்கும்போது, தேவனுடைய பிரமாணங்களைக் கனப்படுத்தினவர்களும், தங்களுடைய விசுவாசத்துடன் யுகங்கள் நெடுகிலும் இரத்தசாட்சிகளான இலட்சக்கணக்கானவர்களும் உள்ளனர். “இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப்

பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்" (வெளிப்படுத்தல் 7:9) இந்தக் கூட்டத்தினர் அவர்களுக்கு அடுத்த வரிசையில் இருந்தனர். (2)

அவர்களுடைய யுத்தம் முடிவடைந்திருக்கிறது. அவர்கள் வெற்றியடைந்துள்ளனர். அவர்கள் தங்களுடைய ஓட்டத்தை முடித்து, அவர்களுடைய பரிசை அடைந்துள்ளனர். அவர்களுடைய கரங்களில் உள்ள குருத்தோலைகள் அவர்களுடைய வெற்றியின் அடையாளமாக உள்ளது. கிறிஸ்துவின் கறையற்ற நீதியின் அடையாளமாக உள்ள வெண்ணங்கி இப்பொழுது அவர்களுடையதாக உள்ளது. (3)

பரலோகத்தின் அறைகளில் மறுபடியும் மறுபடியும் எதிரொலிக்கும் ஒரு துதியின் பாடலை மீட்கப்பட்டவர்கள் பாடுகின்றனர். "இரட்சிப்பு சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற நம்முடைய தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உரியது." தூதர்கள் சேராபீன்கள் ஆகியோரின் குரல்கள் துதித்தலில் ஒன்றுபடுகின்றன. சாத்தானின் வல்லமையையும் அவனது தீய நோக்கத்தையும் மீட்கப்பட்டவர்கள் இதற்குமுன் ஒருபோதும் இல்லாதவிதத்தில் கண்டபோது, கிறிஸ்துவின் வல்லமையைத்தவிர வேறொன்றும் அவர்களை ஜெயங்கொண்டவர்களாக செய்திருக்கமுடியாது என்பதைக் காண்கின்றனர். ஒளிவீசும் அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களில் ஒருவர்கூடத் தங்களுடைய சொந்த வல்லமையினாலும் நல்ல தன்மையினாலும்மட்டுமே மேற்கொண்டதாகக் கூறக்கூடியவர்களாக இருக்கவில்லை! அவர்கள் செயலாற்றியதைப்பற்றியோ அல்லது பாடுகளை அனுபவித்ததைப்பற்றியோ ஒன்றும் பேசப்படவில்லை; மாறாக, அவர்கள் மகா சத்தமிட்டு, "இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக" என்று ஆர்ப்பரித்தார்கள் (வெளிப்படுத்தல் 7:10); அது ஒன்றுமட்டுமே அவர்களது ஒவ்வொரு பாடலின் முகவுரையாகவும் இருந்தது. (4)

கூடியிருந்த பூமியின் குடிகளுக்கும் பரலோகத்தின் குடிகளுக்கும் முன்னால் தேவகுமாரனுடைய இறுதி முடிசூட்டுவிழா நடைபெறுகிறது. இப்பொழுது மேலான மகத்துவத்தையும் வல்லமையையும் அடைந்துகொண்டுள்ள இராஜாதி இராஜாவானவர் அவருடைய அரசாங்கத்திற்கு எதிராகக் கலகம்செய்து, அவரது கற்பனையைமீறி, அவரது ஜனங்களை ஒடுக்கினவர்களின்மீது, தமது நியாயத்தீர்ப்பைச் செயல்படுத்துகிறார். "பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" என்று தேவனுடைய தீர்க்கதரிசி கூறுகிறான் (வெளிப்படுத்தல் 20:11,12) (5)

பதிவுசெய்யப்பட்டுள்ள ஆவணங்களின் புத்தகங்கள் திறக்கப் பட்டவுடன், இயேசுவின் கண்கள் துன்மார்க்கரைப் பார்க்கின்றன. அவர்கள் இதுவரை எப்பொழுதும் செய்திருந்த ஒவ்வொரு பாவத்தைப்பற்றியும் ஞாபகம் உடையவர்களாக உள்ளனர். தூய்மை பரிசுத்தம் ஆகியவை களின் பாதையிலிருந்து அவர்களுடைய பாதங்கள் எப்பொழுது விலகிச்சென்றன என்பதையும், தேவனுடைய பிரமாணங்களை மீறுவதற்கு எவ்வளவுதூரம் அவர்களுடைய அகந்தையும் கலகமும் அவர்களை நடத்தியுள்ளன என்பதையும், அவர்கள் காண்கின்றனர். பாவத்தில் நடக்கும்படி அவர்களை ஊக்குவித்த மயக்கந்தரும் சோதனைகள், திரிபுசெய்யப்பட்ட ஆசீர்வாதங்கள், முரட்டாட்டத்தின் அலைகள், மனம்வருந்தாத இருதயம் ஆகியவை அனைத்தும் நெருப்பினால் எழுதப்பட்ட எழுத்துக்களைப்போல் தோன்றுகின்றன! (6)

## பெரும் போரைப்பற்றிய ஒரு பரந்த காட்சி!

அந்த சிங்காசனத்தின் மேலாகச் சிலுவை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதாமுக்கு உண்டான சோதனை, அதைத்தொடர்ந்துள்ள பெரும் இரட்சிப்பின் திட்டத்திலுள்ள படிகள் ஆகியவைகளின் பரந்த காட்சிகள் தோன்றுகின்றன. இரட்சகரின் தாழ்மையான பிறப்பு, எளிமையும் கீழ்ப்படிதலுமுள்ள அவரது ஆரம்பகால வாழ்க்கை, யோர்தானில் அவரது ஞானஸ்நானம், வனாந்தரத்தில் நடத்தின உபவாசம், சோதனை, அவரது பொது ஊழியம், பரலோகத்தின் அதிக விலைமதிப்புமிக்க ஆசீர்வாதங்களை மனிதர்களுக்கு விவரித்துக்காட்டுதல், அன்பு இரக்கம் ஆகிய செயல்களால் நிறைந்த நாட்கள், ஜெப இரவுகள், மலைகளின்மீது தனிமையாக விழித்திருந்தது, விரோதம் வெறுப்பு சதிகள் உலகத்தின் பாவப்பாரம் இவைகளின்கீழ் கெத்சமெனெயில் நிகழ்ந்த திகிலூட்டும் இரகசியமான வேதனை, கொலைசெய்பவர்களான கூட்டத்தினரின் கரங்களில் அவர் காட்டிக்கொடுக்கப்பட்டது, பயங்கரமான அந்த இரவில் நடந்த சம்பவங்கள், எதிர்ப்பில்லாத கைதிபோல இயேசு தம்மை ஒப்படைத்தல், தாம் மிகவும் நேசித்திருந்தவர்களால் கைவிடப்பட்டது! வெற்றிச்சிரிப்புடன் சூழ்ந்திருந்த மனிதர்களுக்கிடையில், அன்னாவின் முன்னும் பிரதான ஆசாரியனின்

அரண்மனையிலும் பிலாத்துவின் நியாயவிசாரணைமன்றத்திலும், கோழையும் கொடூரமிக்கவனுமான ஏரோதின் முன்னும் தேவகுமாரன் இழுத்துச்செல்லப்பட்டது, பரிகசிக்கப்பட்டது, அவமானப்படுத்தப்பட்டது, சித்திரவதை செய்யப்பட்டது, மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டது ஆகியவைகளின் ஒரு பரந்த காட்சி சித்தரித்துக் காட்டப்படுகின்றன. (7)

இப்பொழுது அசைந்தாடிக்கொண்டிருக்கும் திரளானவர்களுக்குமுன், இறுதிக்காட்சிகள் வெளிக்காட்டப்படுகின்றன. பொறுமையாகப் பாடுகளை அனுபவிப்பவர் கல்வாரியின் பாதையில் தள்ளாடிச் செல்லுகிறார். பரலோகத்தின் இளவரசர் சிலுவையில் தொங்குகிறார். அகந்தைமிக்க ஆசாரியர்களும், பரிகாசம் செய்யும் கீழ்மக்களும் மடிந்துகொண்டிருக்கும் அவரது மரணவேதனையில் அவரைப் பரிகாசம் செய்கின்றனர். இயற்கைக்கு மேலான இருள், உயரவும் தாழவும் செய்கின்ற நிலப்பரப்பு, உடைந்த கற்பாறைகள், திறக்கப்பட்ட பிரேதக்குழிகள் ஆகியவை உலக மீட்பர் தமது ஜீவனைவிட்ட விநாடியைச் சுட்டிக்காட்டியிருந்த அந்தக் காட்சியைத் திரும்பவும் பார்க்கின்றனர். (8)

திகில் மிக்க அந்தக் காட்சி அது இருந்தவிதமாகத் தோன்றுகிறது. சாத்தானும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களும் அவர்களது சொந்தக் கிரியைகள் நிறைந்த காட்சியைவிட்டுத் திரும்பும் வல்லமை அற்றவர்களாக உள்ளனர். ஒவ்வொரு நடிகனும் தான் நடித்திருந்த பாத்திரத்தைத் திரும்பப்பார்க்கிறான். இஸ்ரவேலின் அரசரை அழிக்கவேண்டும் என்பதற்காக, பெத்லகேமின் களங்கமில்லாத குழந்தைகளைக் கொன்ற ஏரோது, யோவான் ஸ்நானகனின் இரத்தத்தின் குற்றத்தைச் சுமந்த ஏரோதியாள், பலவீனமான சந்தர்ப்பவாதியாக இருந்த பிலாத்து, பரிகசிக்கும் இராணுவவீரர்கள், “அவனுடைய இரத்தப்பழி எங்கள்மீதும் எங்கள் பிள்ளைகளின்மீதும் இருக்கட்டும்” என்று கூறிய வெறித்தனமான ஆசாரியர்கள், அதிபதிகள் கூட்டத்தினர் ஆகிய இவர்களனைவரும் அவர்களுடைய குற்றத்தின் பெரும் அளவைக் காணுகின்றனர். மீட்கப்பட்டவர்கள் தங்களுடைய கிரீடங்களை அவரது பாதங்களின்மீது வைத்து, அவர் எனக்காக மரித்தார் என்று வியந்து கூறியபோது, அவர்கள் (துன்மார்க்கர்) சூரியனின் ஒளியைவிட அதிகமான ஒளியை உடைய அவரது முகத்தின் தெய்வீக மகத்துவத்திலிருந்து தங்களை மறைத்துக்கொள்ள வீணாக வகைதேடுகின்றனர்! (9)

நகரத்தின் சுவர்களுக்கு வெளியே வெறுக்கத்தக்கதும் அருவருக்கத்தக்கதும் பயங்கரமான காட்சிகளின் மத்தியில் பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தி சிறைவைத்து கொலைசெய்த துன்மார்க்கர் இருக்கும்போது, நகரத்திற்குள்ளே, வீரமிக்கவரான பவுலும், ஆர்வமிக்க

பேதுருவும், நேசிக்கப்பட்டவனும் அன்பான சீடனுமான யோவானும், உண்மையான இருதயங்களையுடைய அவர்களது சகோதரர்களும், அவர்களுடன் பெரும் இரத்தசாட்சிகளின் சேனையும் மீட்கப்பட்டவர்களின் கூட்டத்திற்கு மத்தியில் இருக்கின்றனர். ஒரு சமயத்தில் அந்தக் கொடூரமான இராட்சதனான நீரோ மன்னன் எவர்களைச் சித்திரவதைசெய்திருந்தானோ, எவர்களுடைய அளவுக்கு மிஞ்சிய வேதனையில் அவன் பேய்த்தனமான மகிழ்ச்சியைக் கண்டிருந்தானோ, அவர்களது (பரிசுத்தவான்களின்) மகிழ்ச்சியையும் மகிமையான நிலையையும் காண்கிறான். தனது மகனிடத்திற்கு மாற்றப்பட்டிருந்த அவளுடைய தீய சுபாவத்தின் முத்திரை, அவளது செல்வாக்கினாலும் உதாரணத்தினாலும் தைரியப்படுத்தப்பட்டு முன்னேற்றமடையச் செய்யப்பட்டிருந்த கட்டுக்கடங்காத உணர்ச்சிகள், உலகத்தை நடுங்கச்செய்யும் குற்றங்களாகக் கனிகொடுத்திருப்பதை அவனது தாய் காணும்படிக்கு அங்கு இருக்கிறாள்! (10)

மக்களின் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்துவதற்காகச் சித்திரவதைக் கருவிகளையும் நிலவறைகளையும் கழுமரங்களையும் பயன்படுத்தியிருந்து, தங்களைத் தாங்களே தேவனுக்கு மேலாக உயர்த்தி, தேவனுடைய கற்பனைகளை மாற்றத் துணிந்திருந்த பேராயர்களும் அங்குஉள்ளனர். தங்களைச்சபைகளின்பிதாக்கள்என்றுகூறிக்கொண்டிருந்தவர்கள்தேவனுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியவர்களாக இருந்தனர். அவர்களுக்குச் சாக்குப்போக்கு சொல்ல இடம் இல்லை. சர்வஞானமுள்ளவராகிய ஒருவர் அவரது பிரமாணத்தின்மீது வைராக்கியமுள்ளவராக இருக்கிறார் என்பதைக் காண்பதற்கு மிகத் தாமதமானவர்களாக அவர்கள் உள்ளனர். அவர் குற்றவாளியை ஒருபோதும் தப்பவிடமாட்டார். பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் கிறிஸ்துவின் ஜனங்களின்மீது அவர் வாஞ்சை உள்ளவராக இருக்கிறார் என்பதை அவர்கள் இப்பொழுது அறிந்துகொண்டு அவரது வார்த்தைகளின் வலிமையை உணருகின்றனர். “மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்” (மத்தேயு 25:45) என்னும் வார்த்தைகளின் வலிமையை உணருகின்றனர். (11)

### நியாய விசாரணை மன்றத்தில்!

பரலோக அரசாங்கத்திற்கு எதிராக இராஜதுரோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டுடன் துன்மார்க்கர் உலகம் முழுவதும் தேவனுடைய நியாயவிசாரணை மன்றத்தில் பழிசுமத்தப்பட்டவர்களாக நிற்கின்றனர். அவர்களுடைய வழக்கு சம்பந்தமாகப் பரிந்து பேசுவதற்கு ஒருவரும்

இல்லை. அவர்கள் சாக்குப்போக்குக் கூறமுடியாதவர்களாக உள்ளனர். நித்திய மரணம் என்னும் தண்டனை அவர்கள்மீது கூறப்படுகிறது. (12)

அப்பொழுது, பாவத்தின் சம்பளம் மேன்மைமிக்க சுதந்திரமும் நித்திய ஜீவனுமாக இராமல், அடிமைத்தனமும்—பாழ்க்கடிப்பும் மரணமுமாக உள்ளது என்பது கண்கூடாகத் தெரிகிறது. துன்மார்க்கர் இப்பொழுது தங்களுடைய கலகமிக்க வாழ்க்கையினால் இழக்கப்பட்டவர்களாக இருப்பதை காணுகின்றனர். மிகமிக அதிகமானதாக இருந்த நித்திய மகிமையின் கனம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டபோது, அவர்கள் அதனை இகழ்ந்திருந்தனர். ஆனால் இப்பொழுது அது, எப்படி விரும்பக்கூடியதாகத் தோற்றமளிக்கிறது? இவைகள் அனைத்தையும் என்னால் அடைந்திருக்கமுடியும்; ஆனால் இந்தப் பொருள்களை என்னைவிட்டுத் தூரமாக வைப்பதை நான் தெரிந்துகொண்டிருந்தேன். ஓ! மாறுபட்ட ஆசை! துர்ப்பாக்கியம், இகழ்ச்சி, நம்பிக்கையின்மை ஆகியவைகளுக்கு, நான் சமாதானம் சந்தோஷம், கனம் ஆகியவைகளைப் பண்டமாற்றம்செய்துகொண்டேனே! என்று இழக்கப்பட்டுப்போன ஆத்துமா கதறுகிறது! பரலோகத்திலிருந்து அவர்கள் தவிர்க்கப்பட்டது நியாயமானது என்பதை அனைவரும் காண்கின்றனர். எங்களுடைய வாழ்க்கையில் இந்த இயேசு எங்கள்மீது ஆளுகைசெய்யும்படி அனுமதிக்கமாட்டோம் என்று அவர்கள் அறிவித்திருந்தனர். (13)

தேவகுமாரனின் முடிசூட்டுதலை அனைவரும் மந்திரத்தால் கட்டுண்டவர்களைப்போலப் பார்க்கின்றனர். அவர்கள் நிந்தித்து மீறியிருக்கின்ற தெய்வீகக் கற்பனைகள் எழுதப்பட்ட கற்பலகைகளை அவரது கரங்களில் பார்க்கின்றனர். இரட்சிக்கப்பட்டவர்களிடமிருந்து உண்டான ஆச்சரியத்தின் வெளிக்காட்டல், பேரானந்தம், போற்றுதல் ஆகியவைகளை அவர்கள் காண்கின்றனர். இனிய இசையின் அலைகள் நகரத்திற்கு வெளியில் இருப்பவர்களிடம் பாய்ந்துசெல்லும்போது, அனைவரும் ஒரே குரலில்: "சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளிப்படுத்தல் 15:3) என்று குரலெழுப்பி, ஜீவாதிபதியின் முன்பாகபாக, சாஷ்டாங்கமாகவிழுந்து தொழுகின்றனர். (14) ★

# 1

# இரண்டாம் மரணம்!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 427–429)**
**திருவசன ஆதாரம் : ஏசாயா 34:2; மல்கியா 4:1**

கிறிஸ்துவின் மகிமையையும் மகத்துவத்தையும் சாத்தான் பார்க்கும்போது, செயலற்றவனாகிவிட்டதுபோல் காணப்படுகிறான். ஒரு காலத்தில் காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்டவனாக இருந்த அவன், எந்த இடத்திலிருந்து எவ்விதமாக விழுந்திருக்கிறான் என்பதை நினைக்கிறான். ஒளிமிக்கவனாக இருந்த ஒரு கேரூப், அதிகாலையில் மகன் எப்படி மாறியிருக்கிறான்! எப்படிக் கீழான நிலைக்கு மாறியிருக்கிறான்!! (1)

சாத்தான், அவன் தானாகச் செய்த கலகத்தினால் பரலோகத்திற்குத் தகுதியற்றவனாக இருப்பதைக் காண்கிறான். தேவனுக்கு எதிராகப் போர்செய்யும்படி அவனுடைய வல்லமையைப் பயிற்றுவித்திருக்கிறான். தூய்மை பரலோகத்தின் சமாதானம் ஆகியவை அவனுக்கு மிக அதிகமான சித்திரவதையாக இருக்கும். தேவனுடைய இரக்கம், நீதி ஆகியவைகளைப்பற்றிய அவனது குற்றச்சாட்டு இப்பொழுது மௌனமடைந்திருக்கிறது. யேகோவாவின்மீது அவன் சுமத்த முயன்றிருந்த நிந்தனை முற்றிலுமாக அவன்மீதே சுமந்திருக்கிறது. இப்பொழுது சாத்தான் அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தண்டனையின் நீதியை அறிக்கை செய்கிறான்! (2)

சத்தியம், தவறு ஆகியவைபற்றிய கேள்வியின்மீது நீண்ட காலமாக நடத்திருந்த போர் வெளிப்படையாக்கப்பட்டிருக்கிறது; தேவனுடைய நீதி முழுமையாக மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மனிதனின் சார்பில் பிதாவும் குமாரனும் செய்த பெரும் தியாகம் உலகத்திற்கு முன்பாக மிகத் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது! கிறிஸ்து அவருக்கு உரிமையான ஸ்தானத்தைப் பெற்றுக்கொண்டு, துரைத்தனங்களுக்கும் வல்லமைகளுக்கும் மேலாகவும் பெயரிடப்பட்டுள்ள ஒவ்வொரு நாமத்திற்கும் மேலாகவும் உயர்த்தப்படுகின்ற நேரம் வந்திருக்கிறது. (3)

தேவனுடைய நீதியை ஒப்புகைசெய்யும்படியும், கிறிஸ்துவின் மேலாண்மைக்குமுன் பணியும்படியும், நெருக்கி ஏவப்பட்டிருந்தபோதுங்கூட அவனது சுபாவம் மாறாததாக இருக்கிறது. (4)

ஒரு பலத்த மழை சொரிவதைப்போலக் கலகத்தின் ஆவி மறுபடியும் வெடிக்கின்றது. முரட்டுத்தனமான எழுச்சியினால் நிரப்பப்பட்ட அவன் மாபெரும் போராட்டத்தில் இணங்கக்கூடாது என்ற தீர்மானத்தில் இருக்கிறான். பரலோகத்தின் அரசருக்கெதிரான நம்பிக்கையற்ற ஒரு யுத்தத்தை நடத்தவேண்டிய நேரம் வந்திருக்கிறது. அவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பவர்களுக்கு நடுவில், அவன் தனது கோபத்துடன் விரைந்து சென்று, உடனடியான ஒரு யுத்தம் செய்வதற்கு எல்லோரையும் எழுப்பிவிடுகிறான். கலகம்செய்யும்படி கவர்ந்திழுக்கப்பட்டிருந்த எண்ணிலடங்காத இலட்சக்கணக்கானவர்களில் இப்பொழுது அவனுடைய மேலாதிக்கத்தை ஒப்புகைசெய்ய ஒருவரும் இல்லை! சாத்தானைத் தூண்டுகின்ற, தேவன்மீதுள்ள அதே வெறுப்பு நிறைந்தவர்களாகத் துன்மார்க்கரும் உள்ளனர். ஆனால் யேகோவாவை அவர்களால் மேற்கொள்ளமுடியாது என்பதையும் அவர்கள் காண்கின்றனர். அவர்களுடைய சீற்றம் சாத்தானின்மீதும் வஞ்சகம் செய்வதில் அவனுடைய கையாட்களாக இருந்தவர்களின்மீதும் பற்றியெரிகிறது. பேய்த்தனமான கோபத்துடன் அவர்கள்மேல் திரும்பும்போது, உலகளாவிய ஒரு கலகத்தின் காட்சி பின்தொடருகிறது. (5)

## வானத்திலிருந்து அக்கினி!

அப்பொழுது தீர்க்கதரிசியின் வார்த்தைகள் நிறைவேறுகின்றன. “சகல ஜாதிகளின்மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும், அவைகளுடைய சகல சேனைகளின்மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது; அவர்களைச் சங்காரத்துக்கு நியமித்து, கொலைக்கு ஒப்புக்கொடுக்கிறார்” (ஏசா. 34:2). “துன்மார்க்கர்மேல் கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்; அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு” (சங்கீதம் 11:6). தேவனிடத்திலிருந்து அக்கினி வானத்திலிருந்து இறங்கிவருகிறது. பூமி திறந்திருக்கிறது அதின் ஆழத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் வெளியே வருகின்றன. பிளந்திருக்கும் ஒவ்வொரு பிளவிலிருந்தும் சுட்டு எரிக்கும் அக்கினித் தழல்கள் புறப்படுகின்றன. பாறைகள் நெருப்பாக எரிகின்றன. “சூளையைப்போல் எரிகிற நாள்” (மல்கியா 4:1) வந்திருக்கிறது, பூதங்கள் வெந்து உருகுகின்றன; பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிகின்றன. (2 பேதுரு 3:10); அரசனும் தலைவனுமாக இருப்பவனுக்காக, ஏற்கனவே “தோப்பேத் ஆயத்தமாக்கப்பட்டுள்ளது. அதை ஆழமும் விசாலமுமாக்கினார்;

வேகும்படி அக்கினியும் மிகுந்த விறகுமுண்டு; கர்த்தரின் சுவாசம் கந்தகத் தீயைப்போல அதைக் கொளுத்தும்" (ஏசாயா 30;33). பூமியின் மேற்பரப்பு எரியும் அக்கினிக்குழம்பாக இருக்கிறது; சீறும் அக்கினிக் கடலாக உள்ளது; பக்தி இல்லாத மனிதர்களின்மீதான நியாயத்தீர்ப்பு, அழிவு ஆகியவைகளின் கலமாக அது உள்ளது. "அது கர்த்தர் பழிவாங்கும் நாள்; சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்" (ஏசாயா 34:8) என்பதாக அது உள்ளது. (6)

துன்மார்க்கர் அவர்களுடைய பரிசை பூமியின்மேல் பெற்றுக்கொள்ளுகின்றனர். "வரப்போகிற அந்தநாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல்கியா 4:3). பலர் அநேக நாட்களாகப் பாடுகளை அனுபவிக்கும்போது, சிலர் விநாடி நேரத்தில் அழிக்கப்படுகின்றனர். அனைவரும் அவரவரின் கிரியைகளுக்குத் தக்கதாகத் தண்டிக்கப்படுகின்றனர். பாவத்திற்கு மூலகாரணமானவனாக இருக்கும் சாத்தானின்மீது பரிசுத்தவான்களின் பாவங்கள் மாற்றப்படுகின்றன. அவர்களின் தண்டனையை அவன் சுமந்தாக வேண்டும். இவ்வாறாக, அவன் தன்னுடைய பாவத்திற்குமட்டுமின்றி, தேவனுடைய ஜனங்களைப் பாவம்செய்யவைத்த அவர்களது பாவங்கள் அனைத்திற்காகவும் பாடுகளை அடையும்படி தண்டிக்கப்படுகின்றான். அவன் எவர்களையெல்லாம் வஞ்சித்திருந்தானோ, அவர்களுடைய தண்டனையைவிட அவனுடைய தண்டனை மிகவும் அதிகமானதாக இருக்கிறது. அவனுடைய வஞ்சகத்தில் விழுந்த யாவரும் தண்டிக்கப்பட்டபின், அவன் இன்னும் உயிருடனிருந்து, வேதனை அனுபவிக்கவேண்டியவனாக இருக்கிறான். சுத்திகரிக்கும் அக்கினி ஜுவாலையில் துன்மார்க்கர் யாவரும் வேரும், கொப்பும்—வேராகிய சாத்தானும், கொப்புகளாகிய அவனது அடியார்களும் அழிக்கப்பட்டு சாம்பலாக்கப்படுகின்றனர். தேவனுடைய நீதி திருப்தியடைகின்றது. பரிசுத்தவான்களனைவரும் உரத்தகுரலில் ஆமென் என்கின்றனர். (7)

தேவனுடைய பழிவாங்குதல் என்னும் நெருப்பில் பூமி மூடப்பட்டிருக்கும்போது, நீதிமான்கள் பரிசுத்த நகரத்தில் பாதுகாப்பாக உள்ளனர் (வெளிப்படுத்தல் 20:6). முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுபவர்களின்மீது இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை (வெளிப்படுத்தல் 20:6). தேவன் துன்மார்க்கர்களுக்கு ஒரு பட்சிக்கிற அக்கினியாக இருக்கும்போது, அவர்களுடைய ஜனங்களுக்கு அவர் ஒரு சூரியனாகவும் கேடகமாகவும் இருக்கிறார் (சங்கீதம் 84:11). (8)

**வாசகர்கள் கவனத்திற்கு:**

தோப்பேத் என்பது எருசலேம் நகரத்திற்குத் தென்பகுதியில் உள்ள இடம்; இன்னோம் பள்ளத்தாக்கு என்றும் இந்த இடத்தைக் குறிப்பிடுவதுண்டு; எரிக்கப்படவேண்டிய எருசலேம் நகரத்தின் கழிவுகள் அங்கே கொட்டப்பட்டு, எரிக்கப்பட்டுச் சாம்பலாக்கப்படும்; பல சமயங்களில் அங்கே உருவ வழிபாடு செய்யப்பட்ட, விக்கிரகங்களும் உடைத்து, எரிக்கப்பட்டு, சாம்பலாக்கப்பட்ட துண்டு; கொடிய குற்றவாளிகளின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர், அவர்களது உடலை இந்த இடத்தில் எரித்துச் சாம்பலாக்குவார்கள்; மோளேகு என்ற அஞ்ஞான தெய்வத்திற்கு தங்கள் பிள்ளைகளைப் பலியிட்ட பெற்றோர்கள், பலியிட்ட பின்னர், அந்த உடல்களை இந்த இடத்தில் எரிப்பதுண்டு. (9)

கடவுளுக்கு எதிரிகளாக வாழ்ந்தவர்கள் அனைவரும் முற்றிலுமாக அழிக்கப்பட்டு, சாம்பாலாக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே (மல்கியா 4:3; ஏசாயா 30:33) தோப்பேத் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (10) ★

# 67

# புதிய பூமி!

**(மூலநூல் : The Story of Redemption, பக்கம் : 430–433)**
**திருவசன ஆதாரம் : சங்கீதம் 37:29; மத்தேயு 5:5**

“பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று” (வெளி 21:1). துன்மார்க்கர்களைப் பட்சிக்கும் அக்கினி பூமியைத் தூய்மைப்படுத்துகிறது. சாபத்தின் அடையாளங்கள் ஒவ்வொன்றும் நீக்கப்பட்டுள்ளன. நித்திய காலமாக எரிந்துகொண்டிருக்கும் நெருப்பு எதுவும் பாவத்தின் பயங்கரமான பலனாக மீட்கப்பட்டிருப்பவர்களின்முன் வைக்கப்பட்டிருக்காது. ஒரு ஞாபகச் சின்னம் மட்டுமே உள்ளது. நம் மீட்பர் அவரது சிலுவையின் அடையாளங்களை எப்பொழுதும் உடையவராக இருப்பார். பாவத்தின் கொடுமையான செயல்களின் அடையாளங்கள் காயப்படுத்தப்பட்ட இயேசுவின் சிரசின்மீதும் கரங்களின்மீதும் பாதங்களின்மீதும் மட்டுமே இருக்கும்! (1)

“மந்தையின் துருக்கமே, சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்; ராஜரிகம் எருசலேம் குமாரத்தியினிடத்தில் வரும்” (மீகா 4:8). பாவத்தின் காரணமாக தொலைந்துபோன இராஜ்யத்தைக் கிறிஸ்து திரும்பவும் சொந்தமாக்கி இருக்கிறார். அவருடன் சேர்ந்து மீட்கப்பட்டவர்களும் அதை அடைந்துகொள்ளவேண்டியவர்களாக உள்ளனர். “நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்” (சங்கீதம் 37:29). பரிசுத்தவான்களின் குடியுரிமை என்பது நடைபெறக்கூடியதா? என்னும் பயமான தோற்றம், புதியபூமி நமது வீடாக இருக்கும் என்று பார்க்கும்படி நம்மை நடத்தியிருந்த சத்தியங்களை ஆவிக்குரிய பிரகாரமாக தூரமாக்கியது. கிறிஸ்து தமது சீஷர்களுக்காக வீடுகளை ஆயத்தம் செய்வதற்குச் செல்லுவதாக அவர்களிடம் கூறியிருந்தார். தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளுபவர்கள் பரலோக வாசஸ்தலத்தைப்பற்றி முழுமையான அறிவில்லாதவர்களாக இருக்கமாட்டார்கள். அப்படியிருந்தபோதிலும், அப்போஸ்தலனாகிய பவுல்

“தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை” (1 கொரிந்தியர் 2:9) என்று அறிவிக்கிறான். நீதிமான்களுக்கு அளிக்கப்படவுள்ள பரிசைப்பற்றி வர்ணிக்க மனித மொழிகள் போதுமானவையாக இல்லை. அதைப் பார்ப்பவர்களுக்குமட்டுமே அது அறியக்கூடியதாக இருக்கும். தேவனுடைய பரதீசின் மகிமையைப்பற்றி எல்லையுள்ள மனித மனம் ஒன்றினாலும் அறிந்துகொள்ள முடியாது! (2)

வேதாகமத்தில் இரட்சிக்கப்பட்டவர்களின் சுதந்திரவீதம் ஒரு தேசம் என்று அழைக்கப்பட்டுள்ளது (எபிரெயர் 11:14–16). அங்கு மாபெரும் மேய்ப்பர் தமது மந்தையை ஜீவத்தண்ணீரினிடத்திற்கு நடத்துகிறார். ஜீவவிருட்சம் அதின் கனிகளை மாதந்தோறும் தருகிறது. அதின் இலைகள் ஜாதிகளுக்கு ஆரோக்கியம் தருவதாக உள்ளது. ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் பளிங்குபோன்ற நீரோடைகள் அங்கு உள்ளன. அதின் கரைகளில் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் நடந்துசெல்லுவதற்கென்று ஆயத்தப்படுத்தப்பட்டுள்ள பாதைகளில் அசைந்தாடும் மரங்கள் நிழல் தருகின்றன. அங்கு விசாலமாகப் பரந்துகிடக்கும் சமவெளிகள் அழகிய குன்றுகளுடன் எழுகின்றன. தேவபர்வதங்கள் அவைகளின் உயர்ந்த சிகரங்களைக் காட்டுகின்றன. ஜீவத்தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் ஓடைகளுக்கருகில் உள்ள அமைதியான சமவெளிகளில் இவ்வளவு காலமாகப் பரதேசப் பிரயாணிகளாக அலைந்துதிரிந்த தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய வீட்டைக் காண்பார்கள். (3)

## புதிய எருசலேம்!

தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம், “விலைஉயர்ந்த இரத்தினங்களைப்போலவும் பளிங்கினொளியுள்ள வச்சிரக் கல்லைப்போலவும்” அங்கு இருக்கிறது (வெளிப்படுத்தல் 21:10–11). “நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்” (ஏசாயா 65:19). “மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது; அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து, அவர்களுடைய தேவனாயிருப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமும் இல்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின” (வெளிப்படுத்தல் 21:3,4). (4)

தேவனுடைய நகரத்தில் இரவு இருக்காது. ஒருவருக்கும் இளைப்பாறுதலின் அவசியமும் விருப்பமும் இருக்காது. தேவனுடைய சித்தத்தைச் செயல்படுத்துவதிலும் அவரது நாமத்திற்குத் துதி செலுத்துவதிலும் ஒருவருக்கும் களைப்பு உண்டாகாது. காலையின் புத்துணர்வை

உடையவர்களாக நாம் எப்போதுமிருப்போம்; அதின் மகிழ்ச்சிகளுக்கு எப்பொழுதும் முடிவே இருக்காது! “அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதுமில்லை; கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார்” (வெளிப்படுத்தல் 22:5). வேதனை தராத, ஆனால் சூரியனை மேற்கொள்ளும் ஒரு பிரகாசம் அங்கு இருக்கும். அப்படியிருந்தபோதிலும், அது மத்தியானவேளையின் ஒளியைவிட அதிகமான ஒரு பிரகாசத்தை உடையதாக இருக்கும். தேவனுடைய—ஆட்டுக்குட்டியானவருடைய மகிமை அந்த நகரத்தை மங்காத ஒளி வெள்ளத்தால் நிரப்புகிறது. மீட்கப்பட்டவர்கள் சூரியனில்லாத—மகிமையின் நித்தியப் பகலில் நடக்கின்றனர்! (5)

“அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம்” (வெளி. 21:22). தேவனுடைய ஜனங்கள் பிதாவுடனும் குமாரனுடனும் நேரடியான தொடர்புகொள்ளும் சலுகையை உடையவர்களாக உள்ளனர். “இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம்” (1 கொரிந்தியர் 13:12). இயற்கையின் செயல்களிலும் மனிதர்களுடன் உள்ள இடைப்படுதல்களிலும் நாம் தேவனை நிழலாட்டமாகக் கண்ணாடியில் காண்பதுபோல் காண்கிறோம். அப்பொழுது, நமக்கும் தேவனுக்கும் இடையில் மங்கின திரை எதும் இல்லாமல், அவரை நாம் முகமுகமாகத் தரிசிப்போம். நாம் அவரது சமுகத்தில் நின்று, அவரது முகத்தின் மகிமையைப் பார்ப்போம்! சாவாமையையுடைய அவர்கள் மனங்கள் ஒருபோதும் முடிவில்லாத மகிழ்ச்சியினால், படைத்தவரின் வல்லமையின் அதிசயங்களையும், மீட்கும் அன்பின் இரகசியத்தையும் ஆராயும். தேவனை மறக்கும்படி சோதிப்பதற்கு அங்கு கொடூரமும் வஞ்சகமுள்ள விரோதி இருப்பதில்லை. மனிதனின் திறமைகள் ஒவ்வொன்றும் முன்னேற்றமடையும். ஒவ்வொரு தகுதியும் மேம்பாடடையும். அறிவை அடைந்துகொள்ளும் முயற்சி மனதைக் களைப்பூட்டவோ அல்லது சக்திகளை இல்லாமலாக்கவோ செய்யாது; அங்கு செயலாற்றும் துணிவு முன்கொண்டுசெல்லப்படும்; உன்னதமான வேட்கைகள் அடையப்பட்டிருக்கும்; மேலான நோக்கங்கள் செயலாக்கப்பட்டிருக்கும்; அப்படியிருந்தாலும் மேற்கொண்டு செல்லும்படியான புதிய அதிசயங்கள் காணப்படும். மனம், ஆத்துமா, சரீரம், ஆகியவைகளின் வல்லமைகளை மலர்ச்சிக்கின்ற புதிய நோக்கங்கள் உண்டாகும். (6)

நித்தியகால வருடங்களை நாம் கடந்துசெல்லும்போது, அவை தேவனைப்பற்றியும் கிறிஸ்துவைப்பற்றியுமுள்ள அதிகமான மகிமையையுடைய வெளிப்படுத்தல்களைக் கொண்டுவரும். அறிவு

முன்னேற்றமடைவதைப்போல, அன்பு, பக்தி, சந்தோஷம் ஆகியவைகளும் அதிகரிக்கும். மனிதர்கள் எந்த அளவிற்கு அதிகமாக தேவனை அறிந்துகொள்ளுகிறார்களோ, அந்த அளவிற்கு அவருடைய சுபாவத்தைப் போற்றுவார்கள்! மீட்பின் செல்வங்களை இயேசு அவர்கள்முன் திறக்கும்போது, சாத்தானுடனான மாபெரும் போராட்டத்தில் அடைந்த ஆச்சரியமான வெற்றியைத் திறக்கும்போது, மீட்கப்பட்டவர்களின் இருதயங்கள் பலமான பக்தியுடன் துடிக்கும். அவர்கள் தங்களது உறுதியான கரங்களினால் பொன் வீணைகளை மீட்டுகின்றனர். பலத்த துதியின் பாடலை எழுப்புவதற்குப் பத்தாயிரம் தடவை பத்தாயிரமானவர்களும் ஆயிரமானவர்களும் ஒன்று சேருகின்றனர். (7)

"அப்பொழுது, வானத்திலும் பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும் அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்" (வெளிப்படுத்தல் 5:13). பாவமும் பாவிகளும் இனி ஒருபோதும் இருப்பதில்லை! தேவனால் படைக்கப்பட்ட அண்ட சராச்சரங்கள் முழுவதும் தூய்மையாயிருக்கிறது! மாபெரும் போராட்டம் என்றைக்குமாக முடிவடைந்தது. (8) ★